பாரத சக்தி மகா காவியம்

சித்தி காண்டம்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

பாரதசக்தி மகாகாவியம்

(The Epic of Supermen)

முதலாவது

சித்தி காண்டம்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்
அருளியது

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம் :: திருச்சி ஜில்லா

முதற் பதிப்பு : 1945

விலை ரூ. 9

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை.

பதிப்புரை

இறைவன் அருளால் "பாரத சக்தி மகாகாவியம்" புதிய பதிப்பாக இன்று வெளி வருகிறது. கவியோகி **ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்**, 1919-ஆம் ஆண்டு முதன் முறையாகப் பாடிப் பிறகு இரண்டுதரம் செப்பனிட்டு, இப்போது இறுதியான தூயவடிவில் இக்காவியத்தை முடித்தளித்தார். இக் காவியக் கதைப் படலங்களும் சந்தங்களும் பொருட்செறிவுகளும் ஆசிரியரின் தியானத்தில் எழுந்தவையே. வால்மீகி, வியாசாதி முனிவருக்குப் பிறகு எழுந்த விரிவான முதநூல், **பாரத சக்தியே** என்னலாம். இப் பெருங்காப்பியத்தில், மனிதனுள் இருக்கும் குணதொந்த விகாரங்களும் தெய்வத் தன்மைகளுமே பாத்திரங்களாக விளங்குகின்றன. காவியத்தினிடையே உலக வரலாற்றிற் புகழ்பெற்ற வீரர், தீரர், தீர்க்கதரிசிகள் வரலாறுகளெல்லாம் உரிய இடத்தில் வருகின்றன; காவியம் பல இனிய சந்தங்களில் யாப்பமைதியுடன் பண்ணுறப் பாடற்கேற்றதாக அமைந்திருக்கிறது. இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் இந்நூல் அணிகலனாகும்; உலகக்கவிகளின் நயங்களும் இதில் அடங்கியுள்ளன.

இக் காவியத்தை தமிழருக்கு அறிமுகப்படுத்திய **வீரவிளக்கு, வ. வெ. சு. ஐயர்**, இதைப் பன்முறை உருகிக் கேட்டுச் சுவைத்து, சுத்தானந்தரை ஊக்கி வந்தார்; **பகவான் ரமண மஹர்ஷிகள்**, பாரத சக்திக்கதை முழுதும் ஆசிரியரால் சொல்லக்கேட்டார்; ஆங்கில மொழிபெயர்ப்பில், **ஸ்ரீ அரவிந்தர்** இதைப் பார்த்ததுண்டு. இம்மகான்களின் ஆசிபெற்ற பாரத சக்தி மகாகாவியம், தமிழர் பெருஞ் செல்வநிதியாகப் போற்றத் தகும்.

வாழ்வையே உருக்கி வார்த்து நம் கவியோகி அருளிய இம்மகா காவியத்தை, பெருமுயற்சி செய்து வெளியிட்டுள்ளோம். அச்சிடு முயற்சியில் எமக்கு நற்றுணை புரிந்த திருவாளர்கள் **காழி. சிவ. கண்ணுசாமிப் புலவருக்கும்**, புலவர்மணி **கவிராஜ பண்டித நா. கனகராஜையருக்கும்**, எமது நன்றி உரியது.

இந்நூல் பாரதசக்தி மகாகாவியத்தின் **முதலாவது சித்தி காண்டமாகும்**; மீதியுள்ள நான்கு காண்டங்களும் உலகப் போர் முடிந்தபின் விரைவில் வெளிவரும்.

தமிழும் தமிழரும் தமிழகமும் தமிழ்க்கலையும் உலகெல்லாம் நிலவ பாரதசக்தி அரிய சாதனமாக விளங்க இறைவன் அருளுக!

இராமச்சந்திரபுரம்,
1-4-1945
தாரண-க(கசா)-டுா

அன்பு நிலயத்தார்.

பொருளடக்கம்

* பக்கம் 7-12 : ஆசிரியர் வரலாறு சேர்த்திருந்தோம்; அது, தனி நூலாக வெளிவந்திருப்பதால், இக் காப்பியத்தில் அதனைச் சேர்க்கவில்லை.

பாரதசக்தி மகாகாவியம்

முதலாவது

சித்தி காண்டம்

ஆசிரியர் முகவுரை

பாரதசக்தி என் உள்ளத்தில் பல்லாண்டுகளாக ஊறிக்கிடந்த கவிதையே. சிறு வயதிலேயே, '**ஓம் சுத்த சக்தி**' யென்ற மந்திரம் என்னுள் இயல்பாய் எழுந்தது. அதுவே எனக்கு வழிகாட்டியது. அதையே பாரதசக்தியாக, பாரததேச மகான்களின் அருட்கனலாகக் கண்டபிறகு, ஒரு பெரிய காவியஞ் செய்து, அதை விளக்கவேண்டுமென்ற ஆர்வம் என்னுள் எழுந்தது. நான் காவேரிக் கரைகளில் வசித்தபோதுதான் இந்த ஆர்வம் உருக்கொண்டு, பாரத சக்திக் கதை என்னுள்ளே படலம் படலமாகத் தியானக் காட்சியில் எழுந்தது. முக்கொம்பில், உதயசூரியன்முன்பு தியானிக்கையில், அகண்ட காவேரியில் காலைக் காட்சியைப் பரவசத்துடன் அனுபவிக்கையில், "**அம்மை யப்பன் அருட்பெருஞ் சோதியான்**" என்ற அடி என்னுள் எழுந்தது. பிறகு நடந்த கதையெல்லாம் * **ஆத்ம சோதனையில்** உள்ளது. பாரதசக்தி முற்றிலுமே என் தியானத்தில் எழுந்த வாக்குத்தான்; ஆற்றோரம், மலை உச்சி, கோயில்கள், காடுகள் ஆகிய இயற்கைக் காட்சிகளின் தனிமையில் அமர்ந்தே, இக் காவியத்தை முதன்முறையாக எழுதினேன்.

இதைப் போற்றி என்னை ஊக்கிய நண்பருள் முதன்மையானவர், **வ. வெ. சு. ஐயரே.** புதுவையில் அவர் "**கம்ப நிலயம்**" நடத்தியபோதே, பாரதசக்தி, 'நாட்டுப் படல'த்தை அவருக்கனுப்பினேன்; **கவிமணி சி. சுப்பிரமணிய பாரதியாரும்** அதைப் பார்த்தார்: "மகாகாவிய நடையில், இந்த ரசனை நன்றாக அமைந்திருக்கிறது; காவியத்தைப் பூர்த்தியாக்க வேண்டும்" என்று ஐயரும், பாரதியாரும் ஊக்கினார்கள். தமிழ்க் குருகுலத்தில் ஐயருடன் வாழ்ந்த நாட்களில், அவரது ஊக்குதலாலேதான், இக்காவியம் மறுமுறை நன்றாக எழுதப் பெற்றது. ஆனால், ஐயரின் பரிதாபச் சாவால் என் மனம் ஒடிந்துபோனது. அப்படி என்னை ஊக்கிக் கவிபாடச் சொல்பவர் யாரும் இதுகாறும் இல்லை. நான் தனியனானேன்; பாரதசக்தியுடன் மற்ற நூல்கள் எல்லாவற்றையும் அன்பன் ஒருவன் வீட்டில் போட்டுவிட்டு, யோகசாதனத்திலும், பொதுஜன சேவையிலும் ஆழ்ந்தேன்; கிராமசேவை செய்துவந்த நாட்களில், பாரதசக்தியில் கண்ட உண்மைகளை நிறைவேற்றத் தொடங்கினேன்; அப்போதே அதைப் புதுக்கி யெழுதவும் மௌனவிரதம் பூண்டேன்; அந்தப் புதிய காவியத்தையும் ஓரிடத்திற் கொடுத்துவிட்டு, மீண்டும் பிடிப்பில்லாமல் நாடெல்லாம் யோக ரகசியங்களைத் தேடிச் சுற்றித்திரிந்தேன்; ஆங்காங்கே பாடிய எல்லாவற்றையும் அப்படியப்படியே நண்பரிடம் தந்து கவலைகொள்ளாது புறப்படுவது என் வழக்கம்.

---

* ஆசிரியரின் சத்திய சோதனையாகிய சுயசரிதம்.

பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளைத் தரிசிக்க ஒருநாள் அந்திநேரம் சென்றிருந்தேன். என்னை முன்பின் அறிந்தவர்போல, “**பாரதியா,........பாரதசக்தி பாடியிருக்கிறார்!**” என்று பகவான் ஆர்த்தார்! ‘இந்த மஹான் வாக்கிலிருந்து வந்த அந்தப் பெயரை மறக்கக்கூடாது; காவியத்தை எப்படியாவது முடித்து உலகிற்கு அளிக்கவே வேண்டும்’ என்ற சங்கற்பம், பகவான் சந்நிதியிலேதான் வலுத்தது. மஹர்ஷிகளுக்கே பாரதசக்திக் கதையை ஆர்வமாகச் சொன்னேன். அதைக் **கணபதி முனிவரும்** கேட்டு, ‘இந்தக் காவியத்தை அவசியம் உலகம் அறியவேண்டும்’ என்று போற்றினர். விருபாக்ஷிக் குகையில் தவம் புரிந்த நாளிலேதான், எனக்கு உண்மையான சுத்தான்மசித்தியும் அருள் வாக்கும் எழுந்தன.

பாரதசக்தியை அமைதியாக அமர்ந்து எழுதிமுடிக்க ஒரு தனியிடம் வேண்டியிருந்தது; அத்துடன் தவமும் நடக்கவேண்டும். **ஸ்ரீ அரவிந்தர்** அழைப்பு வந்தது. அவர் திருவடி நிழலில் இடம் கிடைத்தது. பாரதசக்தியின் அருளும் கிடைத்தது. மௌனமும் எனது வாழ்வைப் பற்றிக்கொண்டது. எனது நூல்கள் அதுகாறும் எங்கெங்கோ சிதறி எப்படியெப்படியோ போயின. நூல்களை வெளியிட முதலில் முன்வந்தவர் புதுச்சேரி **பாலு**தான்; அவருக்குப் ‘**பாரதசக்தி நிலயம்**’ என்ற ஒரு பிரசுராலயம் அமைத்துக் கொடுத்தேன். சில நூல்கள் வெளிவந்தன. அச்சமயம் நண்பரொருவரிடம் கொடுத்திருந்த பாரத சக்திப் பிரதியும் பாதி சிதைந்து கைக்கு வந்தது; ஸ்ரீ அரவிந்தருக்குப் படலம் படலமாக ஆங்கிலத்தில் எழுதிக் காட்டினேன். நூலிற் சில பகுதிகளே வெளியிட முடிந்தது; மறுபடியும் இக்காவியத்தைப் புதுக்கி எழுத முற்பட்டேன். யோக முதிர்ச்சியால் உள்ளனுபவமும் பழுத்தது; வாக்குத் தெளிந்தது. ஆதலால், எனது முழுக் கவனமும் கொண்டு, பாரதசக்தியை முடிவாக நகாசு செய்து, என் வாழ்வெல்லாம் உருக்கிவார்த்து, என் சாதனங்களையெல்லாம் பதித்துப் பாரத சக்தியைப் புதிய அணியாக்கிச் சுத்தசக்தி வடிவான மனித சமுதாயத்திற்கு அளித்திருக்கிறேன்; **இதுவே உண்மையான பாரதசக்தி காவியம்.**

இதில் வரும் பெயர்களெல்லாம், தத்துவப் பெயர் வடிவங்களே. சரித்திரப் பெயர்களில், ‘அவர் இருந்தாரா?’ என்ற சந்தேகம் வாசகர்களுக்கு உண்டாகும். தத்துவப் பெயர்கள் எக்காலமும் உண்மை; என்றும் உள்ளவை. சத்தியன், சுத்தன், சக்தி, அருட்கௌரி, பாரத முனிவர், இந்திரை, சித்திமான், சுமதி, விசயன் முதலியோர் தெய்வ குணங்களின் உருவங்கள். கலியன், மாவலி, வேகன், அனலன், வெள்ளி, விகற்பன், விசிதன், வக்கிரன், துன்மதி, மோகி, மாயன், சல்லியன், இருள் மாயை முதலியோர் மனிதனிடமுள்ள அசுரத்தன்மையின் உருவங்கள். தெய்வத் தன்மை மெல்ல மெல்ல உலகைப்பற்றி, பாரத சக்தியால் அசுரத்தன்மையை வென்று உலகில் தேவஜாதியையும் அருளாட்சியையும் நிலைநாட்டுவதே இக் காவியக் கருத்து.

இக் காவியத்தை இப்போது வெளியிட்ட **அன்பு நிலயத்தாருக்கு** நான் மட்டுமன்று, தமிழுலகமே பெரிதும் கடமைப்பட்டுள்ளது. என் நூல்களைக் கருத்தூன்றிச் சுத்தமாகவும், அழகாகவும் வெளியிட்டுதவிய அன்பர்கள் இவர்களேயாவர். எத்தனையோ இடர்களாலும், சோதனைகளாலும் சலித்துப் போன எனது வாழ்விற்கு, ஆறுதலாக இருப்பவர்கள் இந்த **அன்பு நிலய அன்பர்களே.** ஆதலால், இந்த நூலை அவர்கள் பாதுகாப்பில் அளித்தேன். இந்நூலை உலகவடிவாகவும் உயிர்வடிவாகவும் விளையாடும் சுத்தசக்திக்கே அர்ப் பணஞ் செய்கிறேன் !

எத்தி சையிலும் எந்தெந்த நேரத்தும்,
சித்த மூன்றிச் செயலை நடத்திடும்,
சுத்த சக்தி அருட்சுடர் என்றனை
வைத்த வாறு வளர்வதென் வாழ்க்கையே !

—சுத்தானந்த பாரதி

ஆசி மொழிகள்

வீரவிளக்கும், கலாரசிகரும், பன்மொழிப் புலவரும்,
குருகுல முனிவருமான

ஸ்ரீ வ. வெ. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் அருளியன

"உலகச் சரித்திரம் தோன்றியுள்ள நாட்களுக்கு முற்காலந் தொடங்கி நேற்றுவரையில் வீரவாழ்க்கைக்கும், கல்விக்கும், ஞானத்திற்கும் தாயகமாக இருந்து வந்திருக்கிற பாரத நாட்டின் புகழ், எல்லையில்லாத கடல். இக் கடலில் நீந்துவதற்குப் போதிய ஆற்றல் படைத்தவர் **ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்** அவர்கள் என்று நாம் இங்கு துணிந்து கூறுவோம். இவர், தமது வாழ்வையே தவத்திற்கு நிலைக்களமாக்கிய பரமயோகி. இவர், அத்யாத்ம வாழ்க்கை வாழ்ந்துகொண்டு, அத்யாத்ம ரகசியங்களைப் பரிசீலனை செய்து அனுஷ்டித்து வருகிறார்; பாரததேசத்தின் பழைய சரித்திரத்தையும் புதிய சரித்திரத்தையும் ஆர்வத்தோடு, பக்தியோடு, சிரத்தையோடு ஊன்றிப் படித்திருக்கிறார்; தமிழில் பல நூல்கள் எழுதி யுதவியிருக்கிறார். தமிழ்க் குருகுலத்திலும், பால பாரதியிலும் ஸ்தானம் வகித்துக்கொண்டு, இத்தகைய அரிய நூலை இவர் தொடர்ந்து எழுதுவதற்கு ஆற்றலும் நேரமும் படைத்திருப்பது, இவருடைய தேசு நிறைந்த பிரமச்சரியத்தினாலும், யோகவாழ்வினாலுமே யாகும். தமிழ்நாட்டு அறிஞரும், ரசிகரும், இந்நூலிற் பொதிந்துள்ள அமுதச் சுவையை நுகர்ந்துபார்த்து இன்புறவேண்டும்."


[காசிவாசி **ஸ்ரீ பா. ஆதிமூர்த்தி,** இக்காவியத்தைப் பற்றி ஐயருக்கு எழுதிக் கேட்டிருந்தார். ஐயர், அவருக்கெழுதிய பதிற் கடிதத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் :]

> "ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள், ரிஷிவாழ்வு வாழும் ஓர் அற்புதமான வரகவி; கவியோகி! அவர் வாக்கு, தவத்தினால் பழுத்துக் கனிந்ததென்றே சொல்லவேண்டும். உலக மகாகாவியங்களையும், வீரர் வரலாறுகளையும், பல நாட்டுச் சரித்திரங்களையும், (முக்கியமாக, பாரததேசச் சரித்திரத்தையும்) இவர் கருத்துடன் படித்திருக்கிறார். சிறு வயது முதலே இவருக்குக் கவிதாசக்தி வளர்ந்து வந்திருக்கிறது.

முற்கால மகாகவிகள், இராமாயணம், பாரதம், பாகவதம், இலியாது போன்ற பெரிய காவியங்களை எப்படிச் செய்தார்கள் என்பதை, நாம் சுத்தானந்தர் வாழ்வினின்று தெரிந்துகொள்ள முடிகிறது.

" அவர் சிறிதளவு இயற்கை யுணவுதான் கொள்ளுகிறார் ; " பால பாரதி " ஆசிரியர் வேலையும், மாணவருக்குப் போதிக்கும் வேலையும் வெகு எளிதாகச் செய்துவிடுகிறார் ; மீதி நேரமெல்லாம் தியானத்திலிருந்து, உள்ளே உதிக்கும் திருவாக்குகளை அவ்வப்போது எழுதிக் குவிக்கிறார். இரவில்கூட, அவர் பேனா ஆடிக்கொண்டே யிருக்கிறது ; அவர் நூல்களிலெல்லாம் மிகவும் சிரேஷ்டமானதும், அமரத்தன்மை பெற்றதும் இந்தப் பாரத சக்தியே. இது, மகாகாவிய நடையில் எழுதப்பெற்ற அற்புதமான இலக்கிய ரசனை; தமிழுக்குப் பொன்றுப் புகழைத் தருவது. ' தமிழில், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு எழுந்த முதல் நூல், உத்தம காவியம் ' என்றே, இந்தப் பாரத சக்திக் காவியத்தைச் சொல்லவேண்டும். இந்த வாக்கைப் போற்றி யெழுதியதற்காகத் தங்களுக்கு பாரதி நன்றி செலுத்துகிறார்.

" இந்தக் காலம் அறியாமற் போனாலும், பிற்காலம் இந்த மகாகாவியத்தை, உலகம் அறிந்து கொண்டாடும் என்பது உறுதி. இதில் எல்லா மதத்தினருக்கும், நாட்டினருக்கும், எல்லா ரசிகர்களுக்கும் ஒரு ஸ்வாரஸ்யம் ஏற்படும்படி, அவ்வளவு விசாலமான பொருள் அடங்கியிருக்கிறது. எனது ஆப்த நண்பர், ஸ்ரீ சுத்தானந்த பாரதிகளும், ' தமது வாழ்வையே உருக்கி, பாரதசக்தியாக வார்த்த ' தாகச் சொல்வது உண்மையே. ' இது, அவர் வாழ்வே ' என்பதை, நான் பக்கத்திலிருந்து தினந்தினம் அறிகிறேன்."



BHARATA SHAKTI

(The Inspired Voice of India's Soul)

INDIA has always seen in man a soul, a portion of the Divinity, a conscious manifestation in Nature of the universal Self and Spirit. Its national Purusha has never lost sight of man's highest object, the awakening and development of his spiritual being and has embodied it in his intellectual, aesthetic, ethical, dynamic, social, and political culture. A divine birth or spiritual self-exceeding, the growth of human ignorance into divine self-knowledge is the meaning of India's vaster form of Dharma.

Spirit proves itself the Alpha as well as the Omega, and the whole secret of existence from the beginning. All life is a secret yoga with the Divine to manifest the Divine in man. A living of man in the Divine Satchidananda and a divine living of the Spirit in humanity, a perfection of his divine nature, a self-expression of the realised Divine in man is the aim of our yoga. This brings in the need of the supramental conversion which substitutes the native action of spiritual being for the imperfect action of the superficial nature, and transfigures its mental, vital and physical parts by the spiritual ideality. It is the falsehood of the separative ego-mind which is the genesis of all that we call error, sin, discord and suffering. To live in the truth of the being is to live in knowledge, light, harmony, and joy. It is to live not for ourselves in the ego, but for God in ourselves, and for God in man and the integral harmony of the one universal spirit. A union with the Divine, unity with the universal self and the supramental life-action from this transcendent origin and through this universality but still with the individual as the natural instrument constitute the essence of the integral divine perfection of the human being.

Man must be sacred to man regardless of all distinctions of race, creed, colour, nationality, status, political or social advancement. The union of liberty and equality can be achieved by the power of human brotherhood. But brotherhood exists only in the soul and by the soul. It can exist by nothing else. Man is the pilgrim of perfection. All that is highest in him demands and tends towards a true universalised existence in the Divine. "**Bharata Shakti**" is the inspired voice of India's soul.

24 - 11 - 1933 }
Victory Day }

—Sri Aurobindo

ஸ்ரீ அரவிந்தரின் ஆசிமொழி

("பாரத சக்தி"யே, பாரதான்மாவின் அருள்வாக்கு)

பாரதவர்ஷம் மனிதனை எப்போதும் சுத்தான்மா, தெய்வாம்சம், இயற்கையுடலில் விளங்கும் அகண்ட சைதன்யம் என்றே காண்கிறது. பாரத சமுதாய புருஷன், மனித வாழ்வின் உன்னத நோக்கத்தினின்று என்றும் தவறியதில்லை. அந்நோக்கமே அவனது அத்யாத்ம ஜீவனை எழுப்பி வளர்ப்பது. இந்த அத்யாத்ம ஸத்தையே அறிவு, கலை, வீரம், சமுதாயம், அரசியல், நாகரிக வாழ்வு என பாரத வர்ஷம் உருவாக்கி யிருக்கிறது. தெய்வப் பிறப்பு, தனக்கு மேலான அத்யாத்ம வுயர்வு, மடமை யிருளினின்று மனிதன் திவ்யாத்ம ஞானமாக வளர்தல்—இதுவே பரந்து விரிந்த பாரத தருமத்தின் விசால ரூபமாகும்.

அ முதல் ன வரையில் சுத்தான்மாவே அனைத்தும்; அதுவே ஆரம்பம் முதல் வாழ்வின் இரகசியம். வாழ்வெல்லாம் மனிதனிடம் உள்ள கடவுளை விளக்குவதற்கு, கடவுட் கலப்புடன் செய்யும் இரகசியமான அரிய யோகமே. மனிதன் தெய்வ சச்சிதானந்தத்தில் வாழ்வது, மனித ஜாதியின் அத்யாத்ம ஜீவனம், தெய்வ பரிபூரணம், தெய்வானுபூதி விளக்கம்—இவையே நமது யோகத்தின் குறிப்பு. இதற்கு விஞ்ஞான ரூபாந்தரம் (அருளறிவால் மாறுதல்) அவசியமாகிறது. ஆழமற்ற அரைகுறையான கீழியற் செயலுக்குப் பதிலாக அது அத்யாத்ம ஜீவனின் நிறைவான செயலைத் தருகிறது; மன, வீரிய தூலப் பகுதிகளை அத்யாத்ம வுணர்வால், புத்துருவாக்குகிறது. தனி-யகந்தை-மனத்தின் பொய்மையே நாம் பாவம், பிழை, துன்பம், வேறுபாடு என்பவற்றின் மூலையாகும். ஆத்ம சத்தியத்தில் வாழ்வது, அறிவு, ஒளி, ஒற்றுமை, இன்பத்தில் வாழ்வதாகும், அது நமக்காக, அகந்தையில் வாழ்வதன்று; நம்முளிலங்கும் கடவுளுக்காகவும், மனித ஜாதியில் விளங்கும் கடவுளுக்காகவும், ஆன்மகோடிகளின் ஐக்கிய நிறைவிற்காகவும் வாழ்வதாகும். ஈசுவர, ஐக்கியம், விசுவாத்ம ஐக்கியம், இவற்றின் உன்னதியினின்றும், அகண்டத்வத்தினின்றும் மலரும் விஞ்ஞான ஜீவியச்செயல்கள் (இச்செயல்கள் தனித்தனி மனிதரைப் பாத்திரமாகக் கொண்டே நிகழும்)—இவையே மனிதனின் முழுமையான தெய்விக பரிபூரணம். குலம். கொள்கை, (சாதி சமயம்) நிறம், வகுப்பு, அந்தஸ்து, அரசியல் அல்லது சமூக முன்னேற்றங்களின் வேறுபாடுகளைப் பார்க்காது, மனிதன் மனிதனைப் புனிதனுக மதிக்கவேண்டும். மனித சகோதரத்வ சக்தியால் சுதந்த்ர ஸமத்வ ஐக்கியம் பெறலாம். ஆனுல், சகோதரத்வம் ஆன்மாவில், ஆன்மாவினுலேதான் வாழும்; மற்றெதனுலும் அது வாழாது. மனிதன் பூரணத்திற்கு யாத்திரை செய்பவன். அவனிடத்துள்ள உன்னத தத்துவம், ஓர் உண்மையான, அகண்டமான தெய்வ ஜீவனத்தை வேண்டி முன்னே உந்திச்செல்லுகிறது. இந்த, "பாரத சக்தி"யே பாரதான்மாவின் அருள்வாக்கு.

24 - 11 - 1933
வெற்றித் திருநாள்

—ஸ்ரீ அரவிந்தர்

உ

நூற் பயன்

வீரமும், சுத்த ஜோதி விளக்கமும், ஆத்ம ஞான
தீரமும், கல்வி செல்வத் திருக்களும் பெருகி யோங்கும்;
பூரண சித்தி யெய்திப் பொலிந்திடும் அமர வாழ்க்கை;
பாரத சக்தி தன்னைப் பயிலுக வுலக மெல்லாம்!

பாரத சக்தி மகாகாவியம்

முதலாவது

சித்தி காண்டம்

பாரத சக்தி காவிய விளக்கம்

1. திருவருளாட்சி

உலகமெல்லாம் ஒருகுலமாக வாழலாம்; வாழ்வையே பேரின்பச் சோலையாக்கலாம். அச்சம், அடிமைத்தனம், மடமை, வறுமை முதலிய இல்லாமல், எல்லாரும் சுதந்தரமாகத் தலைநிமிர்ந்து நடக்கலாம். சாதிமத நாடுநிற வேறுபாடும், கூறுபாடும், ஊறுபாடும், மாறுபாடும் இல்லாமல், எல்லாரும் சுத்தசமத்துவ சன்மார்க்கிகளாகத் தழைக்கலாம். போர், பகை, போட்டி, பொறாமை, வஞ்சம், களவு, பகற்கொள்ளை, இராக்கொள்ளை, பீரங்கிக் கொடுமை, குண்டுப்புகைகள் இல்லாமல், உலகமெல்லாம் ஒரே இனமாக, ஒரே உள்ளத்தில் ஒன்றுபட்டு வாழலாம். நாட்டை நாடு போர்வெறிகொண்டு தாக்கி மிதித்து நசுக்கி இரத்தம்பிழிந்து கைப்பற்றிக் கொடுங்கோல் செலுத்தும் தீமை யில்லாமல், எல்லாரும் அமைதியாக, அறிவோங்கி, அன்போங்கி வாழலாம். மனிதவாழ்வில் உள்ள தீமை, செருக்கு, கொடுமை, வன்மை, சூது வாதுகளையும், காமக்குரோதாதிகளையும் ஒழித்தெறிந்து, எல்லாரும் அழகும, ஐக்கியஅணியும், உள்ளின்பமும், உலகின்பமும் செழித்து வாழலாம். 'எனது, உனது, எனக்கே' என்னும் சச்சரவும், அகம்பாவமும் இல்லாமல், உலகக்கோயிலில் அவரவர் திறமைக்கேற்ற பணிசெய்து, தேவைக்கேற்றதைத் துய்த்து, சேர்த்துப்பூட்டாமலும், இல்லை என்று ஏங்காமலும் போதிய பொருட்செழிப்புடன் வாழலாம்.

இதற்குரிய மூன்று வழிகள் சுத்தி, முத்தி, சமதை ஆகியவையே: (1) எல்லாரும் ஆத்ம சுத்தி பெற்றுக் காமக்குரோதாதிகள் இல்லாமல், மாசற்று வாழவேண்டும்; உண்மை, அறிவு, யோகசாதனங்கள்—இவையெல்லாம் மனிதனைப் புனிதனாக்கி, அவனுள் விளங்கும் சுத்தான்மாவைக் கண்டுகலக்கும் வழிகளேயாம் என்பது, (2) எல்லாரும் பகை, அடிமைத்தனம், கட்டு, கவலை, பிணி துயர்களில்லாமல், ஜீவன் முக்தராக, சுதந்தரராக வாழவேண்டும் என்பது. மனத்தை வெல்லப் புலனடக்கல், ஆத்ம விசாரம், தியானமோன சமாதிகள் எல்லாம் இந்தச் சுதந்தர சாதனங்களேயாம். (3) சமத்துவம் அல்லது ஆன்ம நேயம்; அஃதாவது, போட்டி பொறாமை, சாதிமத நாடுநிறச் செருக்கு, மேல்கீழ் அகந்தை ஆகியவையில்லாமல், மனிதரெல்லாரும் சரிநிகர்சமானராக, ஒரே குலமாக வாழவேண்டும். அன்பு, அருள், உயிர்க்கருணை, ஒப்புரவு, பொதுநலம், தேசசேவை, உலகத்தொண்டு, தானம், தருமம்—எல்லாம் இந்தச் சமத்துவசேவைகளே. இந்த மூன்று சாதனங்களைச் செய்தால் மனிதன் மேலேசொன்ன பூரண வாழ்வைப்பெற்று, உடலுடன் பேரின்பநிலையில் வாழலாம். இந்த வாழ்வையே அமரவாழ்வு, பூரணயோகவாழ்வு, விண்ணரசு, தர்மராஜ்யம், ஸத்யயுகம், சுவர்க்கானந்தம், திருவருளாட்சி எனப் பெரியார் கண்டனர். அத்தகைய ஆன்ம நேய வாழ்வும், சுத்த சன்மார்க்க சாதனமும், சுத்த யோகசித்தியும் உலகளாவிப் பரந்து நிலவினால், இப்போது உலகம் படும் இரத்தக் கொடுந்துயர் ஒழிந்துபோகும்.

2. அசுரக் கொடுமை

அத்தகைய உயர்ந்த தெய்விகவாழ்வை ஏதோ ஒன்று தடுத்துக் கலைத்துவருகிறது. உலகைத் திருத்துவதாக எத்தனையோ தீர்க்கதரிசிகள் வந்திருக்கின்றனர். அவரவர் முடிந்ததைச் செய்து, உலகின் நன்றிகெட்ட கொடுமைகளைச் சிலுவையிலும், வாள்முனையிலும்

நஞ்சிலும், தீயிலும் தாங்கிச் சென்றனர். அவர்களுக்குப் பிறகு, மதக்கூச்சல்கள் கிளம்பின. ஒரு மதத்திலேயே பலகிளைகள் எழுந்தன; கிளைக்குக் கிளை சண்டை பெருகி, வேருக்கே கோடரிவைத்தன. மதங்களில் சாதிகள் வகுப்புகள் உள்வகுப்புகள் பெருகின. வெறும் வெளிவேடங்களைக்கொண்டு ஒருவருக்கொருவர் 'என்சாமி, உன்சாமி, என்உண்மை, உன்உண்மை, என்குரு, உன்குரு,' எனச் சண்டையிட்டு உலகைப் பகைக்களமாக்கி, போர்க்களமாக்கி, இரத்தகளமாக்கிவிட்டனர். கடவுளை மறந்த தனிமனித வணக்கமே மிஞ்சியது. இதனிடையே மனிதன் கருணையில்லாமல் தனது வாயில்லாச் சகோதரரான விலங்குகளுக்குச் செய்யும் கொடுமை சொல்லிமுடியாது. மனிதர் கொன்று தின்று, ஒருவரையொருவர் மடித்துக் கொள்ளையடித்து 'நானே, எனதே' என்று வாழ்கின்றனர்; இதுதான் அசுரத்தன்மை என்பது. இந்த அசுரத்தன்மையே இப்போது உலகில் தலைதூக்கி நிற்கிறது. மனிதனிடம் இறைவன் வைத்த தெய்வத்தன்மைகள், அருள், அன்பு, ஆன்ம நேயம், தன்னுயிரைப்போல மன்னுயிரை மதித்தல், இரக்கம், ஈகை, பரோபகாரம், தானம், தருமம், பொதுநலம், தியாகம், ஒற்றுமை, அஹிம்சை, சத்தியம், நேர்மை, ஆசையாணவமற்ற சத்வபுத்தி, இந்திரிய வைராக்யம், புலனடக்கம், சித்தவுறுதி, மனோஜயம், இதய சுத்தி, சுத்தாத்ம ஞானம், தவம், யோகம், ஆத்மசக்தி, சுத்தசித்தி, தைவஐக்கியம் முதலியவையாம். இவை இன்று மகான்கள் சிலரைச் சரண்புகுந்து வாழ்கின்றன. மற்றைப்படி கிழக்கே திரும்பினாலும் சரி, மேற்கே திரும்பினாலும் சரி, ஒரே குண்டுப்புகைதான்; கொலைக்கூத்துதான்; பிணக்குவைதான்! ஒருவரை யொருவர் எவ்வளவு வஞ்சனையாகக் கொன்று கொள்ளையடிக்கலாமோ, அவ்வளவு வஞ்சனையும் பட்டப்பகலில் சட்டம் போட்டுத் திட்டமாக நடக்கிறது... இதற்குமேல் வர்ணனை வேண்டியதில்லை. சுருங்கச்சொல்லின், உலகில் அசுரக் கொடுமை ஓங்குகிறது, தெய்வத்தன்மைகள் அடங்கிப்போ யுள்ளன.

மனிதசமுதாயம் இப்போது படுகொலை நரகக்கணவாயில் வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை விட்டு உயரவேண்டுமானால் தெய்வபலம் வேண்டும். ஏனெனில், அசுரபலத்திற்கு அசுரபலம் சரிக்குச் சரியாகத்தான் இருக்கும். தெய்வபலம் எழுந்தாலே அசுரபலம் அடங்கும்.

3. தெய்வாசுர யுத்தம்

உலகில் எழுந்த வேதங்க ளெல்லாமே தெய்வாசுர யுத்தத்தை வர்ணித்துள்ளன; தெய்வபலம் அசுரபலத்தை நலித்து வெற்றி பெறுவதைப் பாடியுள்ளன. நம் முனிவர் அருளிய வேதத்தின் பொருளும் அதுவே. மனிதனிடம் அருள் இருள், நன்மை தீமை, தெய்வத்தன்மை அசுரத்தன்மை, கருணை கொடுமை ஆகிய இரட்டைக் குணங்கள் குடிகொண டிருக்கின்றன. தெய்விகக் குணங்களையே வேதம் ஞான இந்திரன், சக்திக் கனல், சத்திய சூரியன், மதிப்பொளிவுள்ள பிருஹஸ்பதி, வீறுமிக்க மருத்துக்கள், திருவோங்கிய அதிதி, சாத்விகமான உஷாகல்யாணி, கருணைமிக்க கோமாதா, ஒளிவழி காட்டும் ஸாரமா, வீரக் கனல் வீசும் ஸ்கந்தன், கொடுமையை அழிக்கும் ருத்ரன் முதலிய தேவதைகளாக வர்ணிக்கிறது. மனித முன்னேற்றத்தைத் தடுத்து இருளில் ஆழ்த்திக் கொடுமைசெய்யும் அசுர பலங்களையே வேதம் தானவர், அவுணர், ராக்ஷஸர், பைசாசர், விருத்திரன், நமுசி, தஸ்யு முதலிய அரக்கர்களாக வர்ணிக்கிறது. இந்த இருளரக்கரை அருட்சோதியால் வென்று நர வாழ்வையொழித்து, பிணிதுயர் சாக்காடில்லாத அமரவாழ்வை நிலைநாட்டிச் சுத்தபரமானந்த அமுதத்தை எல்லாருக்கும் வழங்குதலே வேதத்தின் கருப்பொருளாகும். பைபிளின் கருத்

தைப் பார்த்தாலும் இதுதான் : ஆசையாணவப் பொருமைச்செருக்கனை சாத்தான் செய்யும் அக்கிரமக்கொடுமைகளை, தெய்வத் திருவருள் மைந்தரான கிறிஸ்துநாதர் வென்று, உலகில் விண்ணரசை நிலைநாட்டுவதே பைபிளின் சாரம். திருக்குரானும் இதே அருள்வாழ்வைத்தான் மனித சமுதாயத்திற்கு அளிக்கிறது. நம் இதிகாசங்களெல்லாம் தேவாசுர யுத்தவிளக்கம்; தர்மாதர்மப் போராட்ட வர்ணனை; தெய்விகதர்மம் வெற்றிபெறும் திருக்காட்சிப்படலம். அசுரர்களுக்கு ஆயுதபலம், ஆட்பலம், செல்வத்திமிர் ஆகிய எல்லாம் இருந்தும், மிக எளிய முறையில் அவர்களைத் தெய்வபலம் வீழ்த்துவதை எல்லாப் புண்ணியநூல்களும் வர்ணிக்கின்றன. இராமன் இராவணனை, கண்ணனும் விஜயனும் கௌரவாதிகளை, முருகன் சூரபத்மனை, சண்டி மகிஷாசுரனை, இந்திரன் விருத்திராசுரனை, ஏசுநாதர் சாத்தானை வீழ்த்தியதன் பொருள், மனிதனிடமுள்ள தெய்வத்தன்மை எழுந்தால், அவனைக் கெடுக்கும் அசுரத்தன்மை வீழ்ந்துபடும் என்பதேயாகும். எந்தக்கதையை யெடுத்தாலும் நல்லதை நலிக்கப் பொல்லதும், உண்மையை நலிக்கப் பொருமையும், பொய்யும், சுத்தத்தைக் கெடுக்க அசுத்தமும் கிளம்பிப் போர்புரிந்து, தோல்வியடையும் வர்ணனையாகவே யிருக்கும்.

4. மனம்

மனிதன் தன்னைப் பற்றிக்கொண்டு புல்லுருவிமாதிரித் தழைக்கும் அசுரத்தன்மையை வீழ்த்தி, தெய்வவிழிப்புப் பெற்ருல் அருட்சோதி விளங்கும், அமரநிலை எய்தும். அதுதான் முடியவில்லை. தெய்விகமுன்னேற்றத்தை ஒன்று தடுத்துச் சண்டைமூட்டிவிடுகிறது. எது? மனம். மனமே மனிதன்; மனம் எப்படி, மனிதன் அப்படி. மனத்திலேதான் இருவிகாரங்கள் குணதொந்த பந்தவினைகள் எல்லாம் அடர்ந்திருக்கின்றன. மனம் கிளம்பி, "நான், எனது" என்று ஆசைகொண்டு அகங்கரிக்கும்போதே, மனிதனிடமுள்ள சனியன், சாத்தான், அஹ்ரிமான், இஃப்ளிஸ், ராக்ஷஸன் கிளம்பி, அவனையும் கெடுக்கிருன்; உலகையும் கொன்றழித்துத் தன் வெறிக்குப் பலியாக்குகிருன். இப்போது நடக்கும் போர்வெறிகளுக்கெல்லாம் மூலம், மனித மனத்திலிருந்து கிளம்பும் ஆசையாணவப் பேய்களே. அவையே மனிதனை அசுரனுக்குகின்றன. 'செய் குண்டு, கொண்டா பீரங்கி, சேர் படை, தொடு போர், கொல்லு, சுடு, குவி பிணங்களை, அடி கொள்ளை, பற்று அந்தநாட்டை, அழி இந்தநாட்டை, இளைத்தவன் கழுத்தைத் திருகு, ஏழைகள் குடலை நடுங்கச் செய்! இரக்கம் கோழைத்தனம், தருமம் பேடித்தனம், சன்மார்க்கம் கையாலாகாதவர் பேச்சு, அமைதி சோம்பேறித்தனம்' என மனத்திலிருந்து கிளம்பும் ஆசையாணவ அரக்கனே உலகைக் கெடுத்து, மனித வாழ்வைப் பீரங்கி வாயில் வைக்கிருன். எத்தனை தீர்க்கதரிசிகள் வந்து, எவ்வளவு தர்மோபதேசங்கள் செய்தாலும், பஞ்சமாபாதகங்கள் குறையவில்லை. ஐம்பிழை, ஐயாயிரம் பிழைகளாக வட்டி போட்டு வளர்கின்றன. உலகெல்லாம் பாபக்காடா யிருக்கிறது. காளி கோயில் பலிக்களம் முதல், ரஷ்ய ஜர்மன் போர்க்களம் வரையில், மனித சரித்திரம் இரத்தப் புயலில் தத்தளிக்கும் துன்பப் படகாகவே இருக்கிறது.

5. கடவுள்

மனிதனுக்கு உய்வுண்டா? உண்டு. மனவகந்தையில் வாழ்ந்தான் மனிதன்; பொருளைப்பற்றியே திரிந்தான். இனி இருவிகார மனத்தினின்று உயர்ந்து, அருளைப்பற்றி வாழ்வதே மனிதனுக்கு உய்வு. அந்த அருள், நீண்ட சாதனத்தால் கடவுளிடமிருந்து வருவது. 'கடவுள்' என்ருல் என்ன? எங்கே யிருக்கிருர்? அவர் 'இது, அது' என்று சுட்டிக்காட்டக்கூடிய தூலவஸ்துவல்லர். ஒரு பேச்சுக்கே 'இவர், அவர், இந்த வடிவம்' என்று நாம்

சொல்வது. கடவுள் எங்கும் இருக்கிறுர். இதோ, உயிரினும் மூச்சினும் அருகே நமது உள்ளத்தில் 'தான், தான்' என்று நடம்புரிகிறுர். கடவுளை அடைய எந்தக் குருக்களும் சாதிசமயமும், காடு மலையும் தேவையில்லை. ஏனெனில், கடவுட்பொருள் எச்சாதி எம்மதத்திலும் கட்டுப்பட்டதன்று. கடவுளறிவும் அடைவும் எவர் மிராசுமல்ல; எல்லாருக்கும் பொது. ஏசுநாதரும், கண்ணனும், சங்கரரும், அப்பரும் அடைந்த அதே கடவுளே, நம்மிடமும் இருக்கிறுர். அதையே, மாசற்ற கட்டற்ற பேதமற்ற சுத்தாத்மா, சுதந்தரசோதி, சமத்துவப்பொருள் என்கிறேம். கடவுள் ஒருவரே, இருவரல்லர், மூவரல்லர், பலரல்லர். ஒரே சூரியன் கதிர்களைப் பரப்பி உலகைச் சித்திரிப்பதுபோலவே, கடவுள் தமது சக்தியைப் பரப்பி, அதனுல் ஆக்கல், அழித்தல், அளித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலையும் செய்கிறுர். சித்தாந்தம் 'சக்தியாய்ச் சிவமாகி' என்று கடவுளைப் போற்றுகிறது. கடவுளுக்குப் பல சமயங்களில் பல பெயர்கள் வழங்குகின்றன. விக்கிரக ஆராதனைக்காரர் பல வடிவங்களையும் தருகின்றனர். கடவுளை, அரு, உரு, குரு-இம்மூன்று வடிவாக அன்பர் வணங்குகின்றனர். அல்லா, பரமபிதா, அஹுரன், யஹோவா, பிரமம், பரம்பொருள், சிவம், சக்தியிறைவன், விஷ்ணு, பிரமா, முருகன், கணபதி முதலிய எத்தனையோ பெயர்கள் ஆயிரக்கணக்காக உள்ளன. ஆனுல் கடவுள் 'என் பெயர் இதுதான்' என்று எவரிடமும் மூச்சுவிடவில்லை; தமது வடிவை எழுதிக்காட்டவில்லை. கடவுள் பெயராலேதான் இப்பெயர் வடிவ பேதங்கள் உயிர்த்திருக்கின்றன. கடவுளுக்கு ஒரு பொதுவான பாவனை வேண்டுமானுல், அது சுத்தம்; அதுவே, பரமபரிசுத்தமான நிலையே, கடவுள். "சுத்தமாயிரு, கடவுளைக் காண்பாய்!" என்று எல்லா மதங்களும் உபதேசிக்கின்றன. தவயோக சாதனங்களெல்லாம் சுத்த சாதனங்களே. சுத்தன் என்ற வார்த்தை பரமன், சிவன், பிரமம், திருமால், சுப்பிரமணியன், புத்தன், அருகன், அல்லா, பரமபிதா, அஹுரன் முதலிய எல்லாக் கடவுட் பெயர்களுக்கும் பொருத்தமாகும். அன்பின் உச்சம் அறிவு; அறிவின் உச்சம் ஆனந்தம்; ஆனந்தத்தின் உச்சம் சத்தியம்; சத்தியத்தின் உச்சம் சுத்தம்; சுத்தமே அனைத்திலும் மேலான தத்துவம்! அதுவே கடவுள். அதையே சத்துப்பொருள் என்றனர் பெரியோர். சுத்தசத்தினின்று எழுந்த சித்துப்பொருளே சக்தி; அதுவே, அனைத்தையும் ஆக்கியளிக்கும் அருள்வல்லமை. அதன் ஆடலே ஆனந்தம். அதனுலேதான் கடவுளுக்கு நம் முனிவர்கள் சுத்தப்பிரமம், சுத்த சைதன்யம், சுத்தானந்தம், சுத்தசச்சிதானந்தம், தூயமெய்யறிவின்பம் என்று பெயரிட்டார்கள். சுத்தன் தனது சக்தியால் எங்கும் நிறைந்து, எல்லாம் ஆக்கி அளித்து மாற்றி விளையாடுவதே உலக லீலையாகும். இதையே 'அலகிலா விளையாட்டுடையார்' என்றுர் பெரியோர்.

6. உலகாடல்

இந்த ஆடலின் கருத்தென்ன? ஆடல் மனிதருக்குமட்டு மன்று. மண்முதல் மாந்தர் வரையில், எல்லா அண்ட சராசரங்களுக்கும் அருளாடலிற் பங்குண்டு. ஆதலால், எதையும் ஒதுக்கி இறுமாக்க இடமில்லை. சுத்தசக்திதான் ஆடலை நடத்துவது. அது மண்ணிலும் கல்லிலும் உறங்குகிறது; புல்லிலும் மரத்திலும் ஸ்பரிச உணர்ச்சிகொண்டு உயிர்க்கிறது; நண்டு நத்தை ஈ எறும்புகளில் புலன்களைக்கொண்டு உயிர்த்து, பறவை விலங்குகளில் ஐம்புலவுணர்வு பெறுகிறது. பிறகு மனிதன் வருகிறுன். மனிதனுள் சுத்தசக்தி மனேமயமாக விளங்குகிறது. மனம் ஆருவது புலனே. மனம் இருவிகாரக் காடு. அதில் தேவனும் அசுரனும், தருமனும் துரியோதனனும், கம்ஸனும் கண்ணனும் குடியிருக்கிறுர்கள். மனிதன் சித்தவிருத்தி எதைக் கிளப்பி, எவருக்கு ஆளாகிறதோ அதன்படி, அவருக்கு இணங்கி, நன்மையோ தீமையோ செய்யும். அதனுலேதான் மனேமயமானிடன் இன்னும்

அருளாட்சியும் பெறுமல், தன்னுள் உள்ள சுத்தான்மக் கடவுளையும், சுத்தசைதன்ய சக்தியையும் சுவர்க்கானந்தத்தையும், அமரவூற்றையும் அறியாமல், ஆசையாணவப் பேயிருளில் கண்கெட் டலேகிருன்.

மனிதன் உய்ய வேண்டுமாளுல், மனத்தைத் தாண்டி உயர்ந்து, சுத்தசக்தியை அடைய வேண்டும். அவ்வாறு அடைவதைத் தடுக்கும் அசுரபலங்களை அருள்வலியால் முட்டி யெறிந்து, வீர வைராக்கியத்துடன் இந்திரன்போல முன்னேற வேண்டும்.

7. பாரத சக்தி

சுத்தசக்தி யென்பது தெய்வபலம், திருவருள் வல்லமை, பிரம சைதன்யம். இந்தச் சக்தியையே சுத்தான்மசக்தி யென்றும் சொல்வர். இப்போது ஆன்மசக்தி யென்று இது வழங்குகிறது. ஆனல், மனத்தொடு பிணைந்துள்ளது ஜீவான்மா. மனக்கட்டற்று, சுயேச்சையாக சைதன்யஸ்வரூபமா யிருப்பதே சுத்தான்மா. அதுவே அவனது சொரூபம். அதன் சக்தியே சுத்தசக்தி; அதுவே அசுரத்தன்மையை ஒழித்துத் தெய்வத்தன்மை தரவல்லது. அந்தச் சுத்தசக்தியே பாரத சக்தி. பாரததேசம் என்பது இந்தியா மட்டுமன்று; பூகோளப் பிரிவுமட்டுமன்று. பாரததேசம் என்பது புண்ணிய பூமி, சுத்தசக்தி குண்டம், ஆன்மசக்தி நிலயம்! நமது புண்ணிய பூமியிலேதான் மனிதனை அமரனுக்கும் இந்தச் சுத்தபரமாத்மசக்தி அவதரித்து விளங்குகிறது. உலகெங்கும் போட்டியும் போர்களும் குண்டுபோட்டு மண்வெறி கொண்டலையும்போது, நமது பாரதபூமியே தவயோக முனிவருக்கு வணக்கம் செலுத்துகிறது. கோவணங் கட்டிய முனிவனை மகுடாதிபதிகளும் வணங்குவது நமது நாட்டில் வழக்கம். வேதரிஷிகள் முதல் ரமண அரவிந்தாதிகள் வரையில், மகான்கள் வரிசைவரிசையாக வந்து தவயோகசாதனங்களால் பரமாத்மக் கனலான சுத்தசக்தியை வளர்த்திருக்கிருர்கள். இத்தனை மகாத்மாக்கள் வேறு எந்த நாட்டிலும் இல்லை. இவ்வளவு தவயோகக் கனலைப் பெற்ற நாடும் வேறு எதுவுமில்லை. பாரதபூமி திரிகோணச்சக்கர வடிவாக அமைந்திருக்கிறது. அதன் வடமுடியில் சிவசக்தி தவம் புரிகிருள்; தெற்கே குமரித்தாய் தவம் புரிகிருள். இரண்டு தவநிலயங்களுக்கும் இடையே ஏராளமான தபோவனங்களும், கோயில்களும், ஆசிரமங்களும், வேத நிலயங்களும், அற நிலயங்களும், அன்பு நிலயங்களும் மலிந்து பொலிந்து வளர்கின்றன. நூற்றுக்கணக்கான மகாத்மாக்களின் திருவடிமலர்கள் இந்தப் புண்ணிய மண்ணில் பூத்தன. வேதரிஷிகள், ஞானஜனகர், வால்மீகி, வேதவியாசர், சுகதேவர், இராமர், கண்ணன், தருமபுத்திரர், ஹனுமான், அகஸ்தியர், பரத்வாஜர், அத்திரி, தத்தாத்ரேயர், புத்தர், மகாவீரர், கபிலர், பதஞ்சலி, சங்கரர், வள்ளுவர், திருமூலர், இராமானுஜர், மத்வர், நம்மாழ்வார், ஆண்டாள், ஔவையார், சைதன்யர், குருநானகர், வல்லபர், கபீர், துளஸிதாஸ், துக்காராம், ஏகநாதர், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், காரைக்கால் அம்மையார், நக்கீரர், மெய்கண்டார், சிவஞானர், சேக்கிழார், பரஞ்சோதி முனிவர், பட்டினத்தார், தாயுமானவர், மஸ்தான், அருட்சோதிவள்ளலார், பரமஹம்ஸர், விவேகானந்தர், இராமதீர்த்தர், இரமணமஹரிஷிகள், அரவிந்தர், இன்னும் தவயோகிகள் சிலர் ஆகியோர் அனைவரும் பாரத சக்திக் கனலான சுத்தசக்தியை வளர்த்துப் பரப்பிய மகான்களே யாவார்.

பாரதநாட்டின் ஒரே பாதுகாப்பு இந்தச் சக்திதான்! இஃதின்றேல் பாரதநாடில்லை பாரதசமுதாயத்தின் வேரும் கிளையும் இலையும் பூவும் காயும் கனியும் இந்தச் சக்திவிளக்கமேயாகும். இச் சக்திக் கனலைக் காக்கவே மகான்கள் பலர் அவதரித்தனர். ஏனெனில், இதுவே

நமக்குரிய அத்யாத்ம தருமத்தைப் பாதுகாக்கும் தெய்வம். இந்தச் சக்தியாலேதான் முனிவர் தவம் நடக்கிறது. இந்தச் சக்திபெற்ற மகான்களே நம் சமுதாய தருமசாத்திரங்களையும், கலைகளையும், காவியங்களையும், வேத நூல்களையும், நீதி நூல்களையும் செய்தனர். நமது நாட்டின் அடிப்படையே சுத்தசக்தியான பாரதசக்திதான். இதுவே வேதமுனிவர் உள்ளத்திலிருந்து ஆத்மரகசியங்களை வெளியிட்டது. இந்தச் சக்தியைக் காக்கவே க்ஷாத்ரபலம் உதித்தது. இது செழிக்கவே பயிர்த் தொழிலும் வாணிபமும் வளர்ந்தன. இதன் ஊழியத்திற்கே தொண்டர் பலர் உதித்தனர். எல்லாரும் ஒரு குலமாக வாழவேண்டுமானால், இந்த வாழ்வையே பேரின்பக் காவியமாக்கவேண்டுமானால், உலகம் பாரதசக்தியை உபாசிக்க வேண்டும்.

இந்த உபாசனைக்கும், சுத்தசக்தி சித்திக்கும் படிப்படியாக வழிகாட்டுவதற்கே **பாரத சக்தி காவியம்** எழுந்தது. மனிதசமுதாயம் அதைப் பெற்றுப் பூரணமான சுத்தமுக்த சமத்துவ வாழ்க்கை யடைந்தது ; சத்தியராஜ்யம் எங்கும் தழைத்தது ; சக்தியுகம் விளங்கியது. அஃது அசத்தியனான கலியனுக்குப் பொறுக்கவில்லை. 'நான், எனது' என்று அதர்மக் கலியன் கிளம்புகிறான். அவனை ஒழிக்கவே சத்தியனுக்குச் சுத்தன் பிறக்கிறான். சுத்தனும் சத்தியனும் சேர்ந்து கலிக்கொடியனை வீழ்த்தி மீண்டும் நாட்டில் அமைதி நாட்டுகின்றனர். ஆனால், கலிச் சனி சும்மாவிடவில்லை. அவன் தானவம் சென்று அசுரராஜனான மாவலி (மிருகபலம்) யின் துணைபெற்றுவந்து நாட்டைப் பிரிக்கிறான் ; மக்கள் மனதைக் கெடுக்கிறான் ; தருமத்தைக் குலைக்க அதருமத்தைப் பரப்புகிறான். சுத்தசத்திய அரசை அசுரமாவலியின் அரக்கர் முற்றுகை போடுகின்றனர் ; சத்தியனைச் சிறையிடுகின்றனர் ; தம்மை அழைத்துவந்த கலியனையே அடிமையாக்குகின்றனர் ; சுத்தனைக் கொல்லச் சூழ்ச்சி செய்கின்றனர். சுத்தன் தவம் புரிந்து சுத்தசக்தியை வளர்த்து, அசுரபலத்தை வெல்லத் தயாராகிறான். சத்தியன் தானவத்திலேயே சுத்தசங்கம் நாட்டி, அசுர அதர்மத்தை அடக்க முயல்கிறான். தானவரே ஆசையாணவத் திமிரால், ஒருவரை யொருவர் இயந்திரக் கருவிகளால் கொன்று குவித்து, இரத்த வெறியால் அமைதிகெட் டலைகின்றனர். அசுரரும் முடிவில் போர் சலித்து, கொடுமை புளித்து, அமைதி கெட்டுச் சத்தியனை யடைகின்றனர். இச்சமயம் சுத்தன் பாரதசக்தியைப் பரப்பி, அசுரபலத்தினின்றும் நாட்டை விடுவித்து அருளாட்சி நாட்டுகிறான். தானவம் சென்ற சத்தியனும் வெற்றியுடன் திரும்புகிறான். மாவலியும் தன் கொடுமைகளுக்கு வருந்திச் சுத்தனைச் சரணடைகிறான். அவனுடைய மகள் சக்தி, சத்தியன் அன்பில் வளர்ந்தவள், சுத்தன் அருளைப் பெற்றுச் சுத்தசங்கத்திற்கு அன்னையாக விளங்குகிறாள். போரால் உலகு நிலைகுலைகிறது. நாட்டுத் தலைவர்கள் அனைவரும் சுத்தனிடம் உலகசமாதான மகாநாடு கூட்ட வேண்டுகிறார்கள். சித்திமா நகரில், உலகமகாநாடு கூடி, சுத்தன் கட்டளைப்படி திருவருளாட்சி நாட்டத் தீர்மானிக்கிறது. அதன்படி, நாடுநிற சாதிமத பேதங்கள் ஒழிந்து, சுத்தசக்தி அருள் நிழலில் உலகெல்லாம் ஒரே அருளாட்சி, அருள்வாழ்வு, சுத்தசன்மார்க்க சாதனம் பெறுகிறது. 'எல்லா வுலகிற்கும் இறைவன் ஒருவனே, எல்லா உடலும் இறைவன் ஆலயமே' என்னும் உண்மையைச் சுத்தன் மனிதவாழ்வில் நிலைநாட்டுகிறான். எல்லாருள்ளும் அருட்சோதி யிறங்கி, விளையாடுகிறது. மனிதசாதி தேவசாதியாகிறது. மனிதசமுதாயம் தேவசங்கமாகிறது, மனிதவாழ்வு அமர வாழ்வாகிறது. உலகாட்சி விண்ணாட்சி யாகிறது. எங்கும் சுத்தம் சுதந்தரம் சமத்துவம் பொலிகின்றன ; எல்லாரும் சுத்தனை வாழ்த்துகின்றனர்.

இதுவே பாரதசக்தியின் கருத்து. இதனிடையே எத்தனையோ காட்சிப் படலங்களும், பெரியார் வரலாறுகளும் வருகின்றன. ஒவ்வொரு காண்டத்தின் கதையும் ஆங்காங்குத் தனியாக முன்னே தரப்பட்டுள்ளது.

முதலாவது

சித்தி காண்டம்

இறைவன் புதிய உலகைப் படைக்க விரும்புகிறான்; ஊழிவெள்ளத்தால் பழைய உலகை முற்றிலும் அழித்துத் தானேதானாகத் துரிய சமாதியில் விளங்குகிறான். பராசக்தி விழித்தெழுந்து, புதிய உலகையும், புதிய சாதியையும் படைக்கத் தூண்டுகிறாள். சக்தி வீணையில் இறைவன் இச்சைப்படி ஓங்காரம் முழங்குகிறது; அணுக்கள் சுழல்கின்றன; ஐம் பூதங்கள், தன்மாத்திரைகள் எல்லாம் தோன்றுகின்றன. அவை, பல சுடர்களாகவும், கோளங் களாகவும் பரவிச் சுழல்கின்றன. கதிரவன், கடல், மழை, ஆறு, காடு, பயிர், உயிர்க்குலங்கள் — இவை முறையே தோன்றுகின்றன. இறைவனும் சக்தியும் இமாலயத்தில் வீற்றிருந்து, அதற்குத் தெற்கே புண்ணிய பூமியை உண்டாக்குகின்றனர்; அதில் **மனு - மதி** என்னும் புதிய ஆணை யும் பெண்ணையும் உண்டாக்கி, அவர்கள்மூலம் மனிதமரபை வளர்க்கின்றனர். மனிதரில் அந்தக்கரணசுத்தி யுள்ளவர்கள் அமரவாழ்க்கை வாழுகின்றனர்; அஃதில்லாதவர் அசுரர்க ளாகி, இடர் செய்கின்றனர். இருதன்மையருக்கும் போர் நடக்கிறது. அசுரரை வென்று, பரதன் அருட்குலத்தைத் தோற்றுவிக்கிறான். அவன்வழி வந்த அருட்பெரியாரை அருட்குலப் படலத்திற் காண்க. இறுதியில் சத்தியராஜன் எழுந்து, சித்திமாநகரில் சத்தியராஜ்யத்தை நாட்டுகிறான். அவன் மனைவி இந்திரை, குரு பாரத முனிவர், மந்திரி சித்திமான், படைத் தலைவன் விஜயன்—எல்லாரும் தீரர்கள்; உலகநலமே போற்றி வாழ்பவர்கள்.

சத்தியராஜனுக்கு நெடுநாள் பிள்ளை யில்லாதிருந்து, தவப்பயனால் சுத்தன் என்னும் தெய்வமைந்தன் பிறக்கிறான். 'இராமன், கண்ணன், புத்தர், மகாவீரர், ஏசுநாதர், சம்பந்தர் போன்ற தெய்வாம்சம் பெற்ற மகான் அவன்' என்று பாரதமுனிவரும் பெரியாரும் கண்டு வணங்குகின்றனர். சுத்தன் குழந்தைப் பருவத்திலேயே அற்புதமான அருளாற்றலை விளக்கு கிறான். அவனுக்குப் பாரத முனிவரே தமது குருகுலத்தில் யோகம், கலை, அரசியல், போர்த் திறல், சாத்திரம் எல்லாம் பயிற்றி, அவனது அருளறிவையும் தூண்டுகிறார். கல்வி முடிந்ததும் தந்தை, சுத்தனை நாட்டைச் சுற்றிப் பார்த்து உலகானுபவம் பெற மந்திரியுடன் அனுப்பு கிறான். இருவரும் யாத்திரை செய்து, அரசர்நீதி, பெரியார்வாழ்க்கை, பொதுஜனங்களின் நிலைமை—எல்லாம் பார்க்கின்றனர். சுத்தனை மன்னரும் குடிகளும் மகிழ்வுடன் வரவேற்று, உபசரித்துப் பொருட்குவை தருகின்றனர். வந்ததை யெல்லாம் சுத்தன் கல்வி, தொழில் வளர்ச்சிக்காக வழங்குகிறான். தமிழகம், ஆந்திரம், கொங்கணம், கன்னடம், வங்கம், காசி, கோசலம், பாஞ்சாலம், சிந்து, இராஜபுதனம்—எல்லாம் பார்த்துக்கொண்டு, சுத்தன் மகா ராஷ்டிரத்தைச் சுற்றிப் பார்த்து வியக்கிறான்; இராயசிங்கக் கோட்டையில் சிவாஜி சரித் திரம் சித்திமான் சொல்லக் கேட்கிறான். அச்சமயம் கலியன் அழைப்பு வருகிறது.

கலியன், சத்தியன் தம்பிதான்; ஆனால், மகா அசத்தியன், அசுரன், பாதகன், பேரா சைப் பதர். அண்ணனுக்குப் பிறகு, தானே சித்தியைக் கைப்பற்றித் தனது கலியரசை நாடெங்கும் நாட்ட அவன் மனப்பால் குடித்தான். சுத்தன் பிறந்தான்; கலியன் எண்ணத் தில் மண் விழுந்தது. சுத்தனுக்கு அவன் கொடிய பகைவனானான்; அவனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தான்; பலிக்கவில்லை. சித்தியைக் கைப்பற்றவும் போதிய படையில்லை. துயரில் மூழ்கிய அவனை, மனைவி மோகி தேற்றினாள். மோகி, அழகான அரக்கி. அரக்கர் வாழும் இரகசியத்

திவாகிய தானவத்தை ஆளும் மாவலியின் தங்கையே அவள். அரக்கரிடம் பற்று மிகுந்த கலியன் அவளை மணந்து அவள் கைப்பாவை யானுன். "என் அண்ணன் படைகளைக் கொண்டு வந்து, சித்தியைக் கைப்பற்றுகிறேன்" என்று அவள் தானவம் சென்ருள்; அரக்கர் சிலரை அழைத்து வந்தாள். அவர்கள் கலியன் படைகளுக்கு அசுர வித்தைகளையும், புதிய கொடிய ஆயுத வித்தைகளையும் பயிற்றினுர்கள். கலியன் பெரிய படை சேர்த்துச் சித்தியைத் தாக்கத் தயாரானுன்; இதனிடையே, நாட்டைச் சுற்றும் சுத்தன்பின்னே தன் ஒற்றரையும் அனுப்பினுன். சரியான இடம் பார்த்துச் சுத்தனைக் கொல்லவே கலியன் தனது அசுரப் படையை ஏவினுன். 'சுத்தனைக் கலிநகருக்கு அழைப்பது; வரும் வழியில் தாக்கிக் கொல்வது; அல்லது, கலி நகரிலேயே தந்திரமாகச் சிறையிலிட்டுக் கொல்வது' என அவன் பலமான ஏற்பாடுகளைச் செய்தான். கலியன் சூழ்ச்சியை அறிந்த சித்திமான் அவனமைப்பிற்குத் தந்திரமாகப் பதில் அனுப்பினுன்; தன் ஒற்றரை விடுத்துக் கலிநகர் நடப்பை அறிந்து வரச் செய்தான்; சுத்தனை மிகவுங் கவனமாகக் காத்து வந்தான்.

ஸ்ரீராம நவமியன்று சுத்தனும் சித்திமானும் மாரத வீரர் வழிநடத்தப் பஞ்சவடிக்கு வருகின்றனர். அங்கே முனிவர் இருவரையும் வரவேற்றுபசரிக்கின்றனர். பஞ்சவடியின் இயற்கை யழகும், தவப் பொலிவும், முனிவரின் புனிதக் காட்சியும் சுத்தனுக்கு இன்பமளிக்கின்றன. முனிவரைப் பார்த்து ஆசி பெற்று, நல்லுரை சொல்லிக் கொண்டே இருவரும் சாந்த முனிவர் ஆசிரமத்துக்கு வருகின்றனர். முனிவர் அதிதிகளை வரவேற்று நன்மொழி கூறி, உபசரித்து, கனிவிருந் தளிக்கிருர்.

பஞ்சவடி முன்னே இராவணன் ஆண்ட இடம்; சூர்ப்பணகையும் கரதூஷணுதிகளும் இருந்த இடம். அங்கே முதலில் தனது கொடியை ஊன்றித் தவமுனிவ ரெல்லாரையும் தனது நாத்திகமதத்திற்கு மாற்றிக் கலியரசை நாட்டவேண்டு மென்பது கலியன் கருத்து. அவனுல் தாங்கள் படும் பாட்டை முனிவர் சொல்லுகிருர். சுத்தன் முனிவருக்கு எக்கேடும் வராதபடி காப்பதாக வாக்களிக்கிருன். சாந்த முனிவரின் அன்புச் செல்வி கௌரியே அதிதிகளை இனிமையாக உபசரிக்கிருள். அவளைக் கண்டதுமே சுத்தனுக்கு ஒரு புனிதக் காதல் பிறக்கிறது; அப்படியே அக் கன்னிக்கும். அன்று ஸ்ரீராமநவமி யாதலால், முனிவர் இராமாயணத்தைச் சுருக்க விளக்கமாக இனிய விருத்தங்களாகப் பாடி விரிவுரை சொல்லி, 'அசுரர்களை ஸ்ரீராமன் போல அழித்து, தருமத்தை நிலைநாட்ட வேண்டும்' என்று முடிக்கிருர். சுத்தன் இராமபக்தரான இராமதாஸ் முனிவர் சரிதமும் அருளும்படி கேட்கிருன். முனிவர் மறுநாள் சொல்லுவதாக விடை கொடுக்கிருர்.

சுத்தனும் சித்திமானும் தபோவனத்தில் உலாவி, அமைதி பெற்றுத் தமது இடத்திற்குச் சென்றதும், கலிநகர் சென்ற ஒற்றர் ஓடி வந்து, திடுக்கிடும்படியான செய்திகளைச் சொல்லுகின்றனர்:"கலியன் சுத்தனைச் சிறையிட்டுச் சேனைகொண்டு சித்தியை முற்றுகைபோடவே சூழ்ச்சி செய்கிருன். அவனிடம் புதிய பூதாகாரமான அரக்கர் சிலர் சேர்ந்து, படைகளைப் பயிற்றுகின்றனர். சிற்றரசர் சிலரும் அவன் பக்கம் சேர்ந்திருக்கின்றனர். இளவரசன் பஞ்சவடியி லிருப்பதை அறிந்து நாளையே பெரிய அசுரப் படையை இங்கே விடுத்து அட்டூழியம் செய்யப் போகிருன். இன்னும் கலிநகரில் நடக்கும் அக்கிரமங்கள் மிகப் பல"என ஒற்றர் சொல்லுகின்றனர். இளவரசன் விரைவாக உடனே சித்திநகர் செல்வதே நலம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். சித்திமான் தைரியம் சொல்லி, பக்கத்திலிருக்கும் சிற்றரசருக்கு அவசர ஓலை விட்டுச் சேனை யனுப்பச் சொல்லுகிருன். சுத்தன், "கோழை மாதிரி ஓடமாட்டேன்; வரட்டும் கலியன் படை! ஒரு கை பார்க்கிறேன்; முனிவரைக் காத்து, நாட்டின்

மானத்தையும் காத்து, கலியனுக்கும் புத்திவரச் செய்கிறேன்" என்று வீரமுடன் பேசுகிருன். இரவில் உறக்கமில்லை. கனவு, கண்ட நினைவுகள்! கலியனுல் நாட்டிற்கு வந்த கேட்டை நினைத்து வருந்துகிருன் சுத்தன்.

பொழுது விடிந்ததும், இருவரும் காலைக் கடன்களை முடித்து, தவம் புரியும் முனிவரைத் தொழுது, சாந்தாசிரமம் செல்கின்றனர். கௌரி உபசரிக்கிருள். அவள் யாழ்மீட்ட, சாந்த முனிவர் இனிய குரலால் இராமதாஸர் வரலாற்றைச் சொல்லுகிருர். கருத்துடன் கேட்டுக்கொண்டிருந்த சுத்தனுக்கு ஒரு புதிய வீரம் பிறக்கிறது. தனது மனத்திலுள்ள கவலை, ஒற்றுச் செய்தி, கலியன் பொல்லாங்கு ஆகிய எல்லாவற்றையும் முனிவரிடம் சொல்லி, சிவாஜிபோலும் இராமன்போலும் பகைவரை எதிர்த்துப் போர்புரிய முனிவர் ஆசியை வேண்டுகிருன். அரக்கரை வீழ்த்தி அறத்தை நாட்டவந்த தூயனை முனிவர் போற்றி ஆசீர்வதிக்கிருர். அச்சமயமே கலியன் அசுரப் படை பஞ்சவடியிற் புகுந்து மரங்களை ஒடித்து, பர்ணசாலைகளில் தீ வைத்து, முனிவர் பத்தினிகளைக் கெடுக்க முயன்று, முனிவரை அடித்து மிரட்டிக் கொடுமை செய்கிறது. வேகன் என்ற அசுரன் ஆசிரமங்களில் உள்ள பெண்களைத் தூக்கிச் செல்ல முயல்கிருன். முனிவர் அபயமிட் டலறுகின்றனர். அதே சமயம் சித்திமான் எதிர்பார்த்த படைகளும் வருகின்றன. சித்திமான் காட்டில் அரக்க ருடன் போர்புரியச் செல்கிருன். சுத்தன் முனிவர் ஆசிரமத்தை அணுகும் அரக்கரை வீழ்த்துகிருன்; கவனமாக முனிவரை ஒரு மலைக் குகைக்கு அனுப்புகிருன். வேகன் முதலிய அரக்கர்கள் பர்ணசாலைகளைச் சுட்டெரித்து முனிவர் சிலரைத் துரத்திப் பிடிக்கின்றனர். சுத்தன் அவர்களைப் பொருது வீழ்த்துகிருன். வேகன் பர்ணசாலையில் புகுந்து கௌரியைத் தூக்க முயல்கிருன். சுத்தன் அவனை ஒரே குத்தில் வீழ்த்துகிருன். அவன் மடியில் ஒரு கடிதம் இருந்தது. "கலியன் ஆணை; வேகன் படை வேகமாகச் செல்க! பஞ்சவடி முனி வரை யெல்லாம் சிறை பிடிக்க வேண்டும். சுத்தனையும் சித்திமானையும் கைதியாக்கி விலங்கு போட்டு இரகசியமாகக் கொண்டுவரவேண்டும். பெண்களையெல்லாம் இங்கே கொண்டு வந்து நம்மவர் அடிமைகளாக்கவேண்டும். பஞ்சவடிப் பர்ணசாலைகளை முற்றிலும் சுட்டெரித்து அங்கே நமக்கு உல்லாச மாளிகைகள் கட்டவேண்டும்; யோகவனம் போகவன மாகவேண் டும்!" என்று அக் கடிதத்தில் எழுதி யிருந்தது. கலியன் படைகளில் சிலர் தப்பி ஓடினர், பலர் மண்ணைக் கௌவி யிறந்தனர், சிலர் கைதியாயினர். போர் ஒழிந்தது. சுத்தன் வெற்றி முரசு கொட்டச் சொல்லுகிருன். குகைகளில் ஒளிந்த முனிவரும் பத்தினிகளும் வருகின்ற னர்; சுத்தனை ஆசீர்வதிக்கின்றனர். சாந்த முனிவர் இனி வரும் உலக நிலையை விளக்கிச் சுத்தனே உலகரட்சகன் எனக் காட்டுகிருர். சுத்தன் ஆவேசமொழி புகன்று அஞ்சலி யளிக்கிருன். முனிவர் இனிப் பஞ்சவடியில் இருக்க முடியாது என்கின்றனர். சுத்தன் பஞ்சவடியில் ஒரு பெரிய படையை வைத்து, சாந்தரையும் கௌரியையும் முனிவரையும் அழைத்துக்கொண்டு சித்தி நகருக்கு வருகிருன். சித்திநகரில் குதூகலமான ஊர்வலம் நடக்கிறது. சத்தியராஜன் தன் மகனை அன்புடன் வரவேற்று மகிழ்கிருன். சுத்தன் தான் கண்டவை கேட்டவை, கலிநகர் அட்டூழியங்கள் ஆகிய எல்லாவற்றையும் சொல்லி, உலகில் அதர்மம் தலை தூக்குகிறது, தருமத்தை நிலைநாட்டிப் பல தியாகங்கள் செய்யவேண்டி யிருக்கும் என்று நீண்ட சிந்தையில் ஆழ்கிருன். ஒற்றரால் கலிநகரிலும், நாட்டிலும் நடப் பதை அறிந்து, சத்தியனும் வருங்காலத்தைப் பற்றிய சிந்தனையில் ஆழ்கிருன்.

இதன் முடிவென்ன? கௌரி யார்? சுத்தனுக்கும் அவளுக்கும் அரும்பிய காதல் எப் படி முடிந்தது? சத்தியன் என்ன செய்தான்? கலியன் எச் சூழ்ச்சியால் சித்திநகரை

முற்றுகை போட்டான்? பிறகு நடந்த தென்ன? என்பனவற்றை இரண்டாவது கௌரி காண்டம் விளக்கும்.

[இந்த முதலாவது காண்டம்—மங்கல வாழ்த்துப் படலம் முதல் வரவேற்புப் படலம் ஈறுகப் பகுக்கப்பட்ட உடு படலங்களை உடையது;]

---

* க. மங்கல வாழ்த்துப் படலம்

இம் முதற் படலம், இந்த மகா காவியத்தின் தத்துவப் பொருளை விளக்கி அது வெற்றிபெற சுத்த பரமாத்மனை வணங்குகிறது:

க. **வெற்றி கொட்டுக! விம்முக பேரின்பம்!**
சுற்றி ஞானச் சுடரொளி வீசுக!
முற்ற றிவன் முதல்வன் அருளையே
பற்றி வாழப் பயின்றதிப் பாரெலாம்!

இப்பாட்டு, காவியப் பொருளை விளக்குகிறது: எல்லா உலகிற்கும் இறைவன், உயிர்களுக்கெல்லாம் முதல்வன்; அனைத்தையும் உணர்ந்த பரமஞான சொரூபன்; சுத்தன்; அவன் அருள் சுத்தசக்தி. இருளில் மதிமயங்கி, இருவிகாரப் போரில் அலையும் உலகம் சுத்தசக்தி அருளைப் பற்றி வாழ்வையே யோகசாதனமாக்குவதே இக்காவியம் குறித்த பொருளும் பயனுமாகும். அப்பயன் நிறைவேறிய காட்சியைக் கண்டு மகிழும் உள்ளம் 'வெற்றிமுரசு கொட்டுக; பேரின்பம் உள்ளந்தோறும் விம்முக; சுற்றிலும் சுத்தஞானச் சுடரொளி வீசுக; இறைவன் அருள் பொங்குக! பாரதசக்தி காவியமும், அதன் இலட்சியமும் இறைவன் அருளால் வெற்றிபெற்றுப் பொலிக' என்று பாடிக் களிக்கிறது! (க)

உ. **அம்மை யப்பன், அருட்பெருஞ் சோதியான்,**
எம்மை யாளும் இறைவன், குருபரன்;
தம்மைத் தந்தவர் தாபந் தணிப்பவன்;
செம்ம லரடி யைத்தினஞ் சேவிப்பாம்.

எம்மை ஆட்கொண்டு நடத்தும் இறைவன், எமது பரமகுரு, உலகிற்கு அன்னையும் தந்தையும் ஆவான்; ஆன்மாக்களுக்கு அறிவொளி தரும் அருட்பெருஞ்சோதி முதல்வனுவான்; தம்மையே முற்றும் அடைக்கலமாகத் தந்தவர்களுக்கு அவன் தன்னையே தந்து கவலை தீர்ப்பான். அவனது செய்ய மலரடியைத் தினந்தோறும் போற்றி வணங்குவோமாக! (உ)

ங. **எல்லை யற்றநல் லின்னுயி ருள்ளமே**
தில்லை யாகத் திருநடஞ் செய்பவன்;
இல்லை யென்பவ ருள்ளு மிருப்பவன்;
சொல்லைத் தூண்டித் துலக்குக வெற்றியே!

ஆன்மாக்கள் எல்லையற்றவை; அவற்றுள் நலமும், இனிமையும் பொருந்திய ஆன்மாக்கள் திருவருளுக்குப் பாத்திரமானவை; அவற்றின் உள்ளத்தையே தில்லையாகக் கொண்டு, இறைவன் திருநடஞ் செய்பவனுவான். 'கடவுள் இல்லை' என்பவர் உள்ளத்தும் இருப்பவன் அவனே; அவன் என் உள்ளத்தினின்று, அருள்வாக்கைத் தூண்டி, இனிய சொல்லை எழுப்பி, மேன்மேலும் இக்காவியத்தின் வெற்றி விளங்கச் செய்வானுக! (ங)

---

* இசைக் குறிப்பு: மங்கல வாழ்த்துப் பாடல்கள் கலிவிருத்தம், துள்ளலிசை; திருக்குறுந்தொகைபோல, ஆதி தாளத்தில், நாட்டை, நாதநாமக்கிரியை, பியாகு, காபி ராகங்களில் பாடலாம்; தன்ன, தன்னன தன்னன தானன—சந்தம்.

ச. இத்த லத்தொழில் எல்லா மியக்கியே,
அத்தன் ஆணையி னுல்விளை யாடுவாள்;
சுத்த சக்தி யருட்சுட ரேற்றுக—
நித்த மிக்கவி நின்று நிலவவே!

இறைவன் அத்தன், சுத்தன்; அவனுடன் இணை பிரியாதவள் சுத்தசக்தி; இறைவன் ஆணையால் அவள் இவ்வுலகை ஆக்கி, காத்து, அழித்து, மறைத்து, அருளி, எல்லாத் தொழில்களையும் நடைபெறச் செய்து விளையாடுகிருள். இக்காவியம் உலகில் சுத்த சக்தியின் அருளாடலை விளக்குகிறது. அவள் என் அறிவில் அருட்சுடரேற்றி, இக்காவியம் என்றும் உலகில் நின்று நிலவச் செய்வாளாக! (ச)

ரு. மீட்டுவாய் உயிர் வீணையைப் பண்ணுடன்;
ஊட்டுவாய் உயர் வோங்குங் கலையின்பம்,
காட்டுவாய் வழி காசினி யெங்குமே
நாட்ட வுன்னிசை நற்றமிழ் வாணியே!

நல்ல செந்தமிழ் வாணியே, எனது உயிர்யாழை உனது திருக்கரத்தால் மீட்டியருள்; அதில் இனிய பண்களுடன், அருட்புலவர் மெச்சும் உயர்ந்த இயல், இசை, நாடகக் கலையின்பங்களை ஊட்டியருள்! நான் சிறியேன்; எளியேன்; யாதும் அறியேன். நீ என்னை வழிகாட்டி, ஒளிகாட்டி, வெற்றிக்கு நடத்தவேண்டும். இஃதெல்லாம் எதற்கு? நான் பட்டம் பதவி பெயர் புகழ் பெறவா? இல்லை. இந்த உலகெலாம் உனது புகழ் பரவத்தான் என் உயிர்யாழை உன் கையில் தந்து மீட்ட வேண்டுகிறேன். (ரு)

சா. திங்கள் கண்ட திரைகடல் போலவும்,
பொங்குங் காலையிற் புள்ளிசை போலவும்,
மங்கலஞ் சொல்வ சந்தத்தைப் போலவும்,
கங்கை போலுங் கவியருள் வாணியே!

கவிவாணியே, எனக்கு இயற்கையாகக் கவிவளம் பொங்குக! நிறைமதியைக் கண்டு அகண்டாகாரமான கடல் பாடுகிறது; அதுபோல், உனது மதிமுகங்கண்டு எனது பாவுள்ளம் பொங்குக! அருணசோதி பொங்கிப் புன்னகை புரியுங்காலையில், புட்கள் இயற்கையாக இசைபாடி மகிழ்கின்றன. அவற்றிற்கு நீ அளித்த பாட்டை எனக்கும் அளி! காலை போன்ற பரம உபசாந்த உள்ளத்தில், எனது கவிப் பறவை உனது புகழைப் பாடுக! அழகான மலர்கள் மலருங் காலையில், இளவேனிற்காலத்தில் வசந்தக்காற்று உலகிற்கெல்லாம் மங்கலச்செய்தி கொண்டுவருகிறது. என்பாட்டும் வசந்தமாருதம்போலச் சுயேச்சையாகவும், இனிமையாகவும் எழுந்து, உலகிற்கெல்லாம் மங்கலச்செய்தி பரப்பி, அருளாட்சியைக் கொண்டு வருக! எனது கவி இமயமலையிலிருந்து, பொங்கிக் கர்ச்சித்துவரும் புண்ணிய கங்காநதி போன்று ஆழமாக, விசாலமாக, உலகெல்லாம் தோய்ந்து புனிதமாகும்படி புண்ணியப் பொருளும் அருளும் நிறைந்து தங்குதடையில்லாமல் பாய்ந்தோடுக! (சா)

எ. உன்னை யோதி யுருகுவ தல்லது,
பின்னை யேதும் அறிகிலன் பிள்ளையான்;
அன்னை யேயமு தேயென தாவியை,
மன்னு மங்கல மாகவி யாக்குவாய்!

சுத்தசக்தி யன்னையே, எனக்குத் தெரிந்தது ஒன்றுதான்: உன்னையே எண்ணி யெண்ணி உள்ளம் உருகுவது; உன்னையே அன்பு செய்வது; இதைத் தவிர வேறெதுவும்

நான் அறியேன். நான் சிறு பிள்ளை. அன்னையே, என் வாழ்வின் அமுதே, இன்பமே, எனது ஆவியை உன்னிடமே அடைக்கலம் வைத்துவிட்டேன். அதை உலகுள்ளமட்டும் நிலைத்து நிலவும் ஒரு மகா காவியம் ஆக்கியருள்வாய்! (எ)

அ. ஊழின் கூத்து முடிந்ததும், ஓர்பகல்,
விழும் பொய்யுடல் விழினும், உன்புகழ்
சூழும் ; சுத்த சுயங்கவி யாயென்றும்
வாழு கின்ற வரமருள் சக்தியே.

சுத்த சக்தியே, இந்த உடல் விதிவசப்பட்டு ஆடுகிறது. ஊழின் நாடகம் முடிந்ததும், இந்தப் பொய்யுடல் ஒருநாள் விழுந்தே தீரும். நிலையற்ற ஊனுடல் வீழ்ந்தாலும், உனது புகழையே சூழ்ந்து அமையும் இந்தத் தூய சுயமான முதற்கவிவடிவாக, நான் அமரத்தன்மை பெற்றுவாழும் வரந்தருவாய், தாயே! (அ)

கூ. என்பெ யரை மறக்கினும் இப்புவி,
உன்பெ யரை யுருகி நினைத்திடத்
தன்பெ யரைத் தழைக்க விளக்கிடும்,
அன்பு மாகவி யையருள் அன்னையே!

தாயே, எனது பெயரை உலகம் மறந்தாலும், உனது பெயரை உள்ளுருகி நினைத்து, உன்னையே போற்றும்படி, ஓர் அன்புநிறைந்த மகாகாவியம் அருள்புரி! அது பிறர் ஆதாரவில்லாமல், தன்பெயரைத் தானே என்றும் செழிப்பாக விளக்கும் சுவையும், பொருளும், சொல்லும், பண்ணும் நிறைந்திருக்கச் செய், தாயே! (கூ)

கo. சிலை,அ ருட்கவி சித்திரம், கூத்திசைக்
கலைகள் தெய்வக் கருத்துடன் ஆடிடும்,
மலையி னுச்சியில் என்மனம் ஆடிடத்
தலைவி யேயருள் தாரக சக்தியே!

எனது ஜீவாதாரமாய், எனக்கு உய்வருளும் தாரகமான சுத்த சக்தியே, என் வாழ்வின் இறைவியே, ஞானமலைச் சிகரத்தில், சிலை, சிற்பக்கலை, அருட்கவிக்கலை, சித்திரக்கலை, நாடகக்கலை, பரதநாட்டியக்கலை ஆகிய இவை தெய்வக்கருத்தென்னும் தோழியுடன் ஆனந்தமாக விளையாடுகின்றன. அக்கருத்தின்றி எக்கலையும் இன்புறாது, சிறப்புறாது. இக்கலைகளின் சேர்க்கை வாசனையால், நானும் தெய்வக் கலையும், கருத்தும் பெறுவேன். என்னையும் அந்த மலைச்சிகரத்தில் ஏற்றி, அவற்றுடன் விளையாடச் செய்தருள்! எனது காவியத்தில் சிற்பம், சித்திரம், அருள்பெற்ற கவிதை, இசை, நாடகம் எல்லாம், ஆழ்ந்த தெய்வக் கருத்துடன் உச்சமான ஞானச்சிகரத்தில் விளையாடட்டும்! (கo)

கக. வள்ளல் வானில், மலைவனக் காட்சியில்,
துள்ளு மாற்றினிற் சூழும் இயற்கையில்,
அள்ளி யள்ளி யளித்திடும் பாட்டையென்
உள்ளப் பொய்கையில் ஊற்றி யருளுவாய்!

அருட்சக்தியே, உலகிற்கு மழையும், ஒளியும், சூடும், காற்றும், கனலும் தந்துகாக்கும் வண்மைநிரம்பிய ஆகாசத்திலும், மாட்சி மிக்க மலைக் காட்சியிலும், மலர்கனி நிரம்பிய வனக் காட்சிகளிலும், துள்ளித்தாவிப் பாயும் அருவியிலும், என்னைச் சுற்றி விளங்கும் இன்னும்பல இயற்கைக் காட்சிகளிலும் பாட்டை யள்ளியள்ளி அளித்திருக்கிறாய். வானத்தில் எத்தனையோ சுடர்க்கோளங்களும், காற்றும், 'எலெக்ட்ரன்' அணுக்களும் 'ஓம்' எனப்பாடிச்

செல்கின்றன. மலைகளில் எத்தனையோ யோகமுனிவர் வேதகானம் செய்கின்றனர். மலர் வனங்களில் பறவைகள் பாடுகின்றன. துள்ளும் அருவி ஜயபேரிகை கொட்டிப் பாடுகிறது. இயற்கைக் காட்சிகளிலெல்லாம் பாட்டு நிறைந்திருக்கிறது. அந்தப் பாட்டை எனது உள்ள மாகிய தடாகத்தில் அள்ளியள்ளி நிரப்புவாய்! உனது திருவருளால் இயற்கையின் உள்ளத்தை நான் பாடட்டும். (கக)

கஉ. கடலைக் காற்றைக் கதிர்வளர் வானத்தை,
இடம கன்ற புவியை, யியற்கையை,
உடலை, யென்னுள் உயிரைப் படைத்தவுன்
வடிவைப் பாட வரமருள் சக்தியே!

சுத்தசக்தியே, எல்லையற்ற கார்கடல், பிராணிகளுக்கெல்லாம் உயிர்ப்பான காற்று, ஒளியும் சூடும் தரும் கதிரவன், அவன் வளரும் அகண்டவானம், விசாலமான பூமி, இன்னும் ஆறு, மலை, காடு, மலர், நட்சத்திரங்கள், மேகம், விதவிதமான பிராணிகள் ஆகிய இயற்கை. யற்புதங்களையும், இந்த உடலையும், என்னுள் உயிரையும் நீயே ஆக்கி எங்கும் நிறைந்தாய் புவனவடிவாக நிறைந்த உன்னைப் பாட அருள்வாக்கைத் தா! உனது அருளாலேதான் உன்னையும் உனது படைப்பையும் அறியவும் பாடவும் இயலும். (கஉ)

கங. பூவி லுன்னருள் பூத்த புலவர்செய்
பாவி லூறிப் பழுத்த கவிதையென்
நாவி லூறிட நல்வரந் தந்தருள்,
ஆவி போர்த்தெனுள் ஆடும் பரமனே.

எனது உயிரையே உடலாகப் போர்த்து, என்னுள் வாழ்வாக விளையாடும் பரம் பொருளே, உலகில் வேதமுனிவர், வால்மீகி, வியாசர், காளிதாசன், கம்பன், வள்ளுவர், இளங்கோ, தாயுமானவர், வள்ளலார், அப்பர், திருத்தக்கர், தாகூர், ஹோமர், கெத்தே, ராஸீன், மில்தன், ஷேக்ஸ்பியர், தாந்தே, விர்ஜில் போன்ற எத்தனையோ மகாகவிகள் உன்னருளால் கவிமலர்ச்சிபெற்று விளங்கினர். அவர்கள் வாக்கில் ஊறிப்பழுத்த வரகவி, எனது நாவில் ஊறி, இக்காவியத்தை வெற்றிபெறச் செய்ய வரந்தந்தருள்; இக்காவியம் அருட்புலவருக்கு அரிய விருந்தாகும்படி அருள்செய்! (கங)

கச. தோற்றித் தோற்றித் துகளற நாளுமே
மாற்றி மாற்றி மனிதரின் வாழ்வைமுன்
னேற்றி யேற்றி யியற்றுமுன் ஆடலைப்
போற்றி சக்தி, புகன்றரு ளென்னுளே!

பராசக்தி, நீயே உயிர்களை மேன்மேலும் தோன்றச் செய்கிறாய்; ஒவ்வொரு நாளும் அவற்றை மாற்றி மாற்றி மாசறுத்துப் பக்குவப் படுத்துகிறாய்; அவ்வாறு மாற்றி ஜீவபரிணாமத்தை இப்போது மனித நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறாய்; மனிதவாழ்க்கையை முன்னேற்றியேற்றித் தெய்வ வாழ்விற்கு உயர்த்துகிறாய். இவ்வாறு உயிர்க்குலத்தை இயக்கிப் பரிபக்குவப்படுத்தும் உனது திருவிளையாடலை என்னுள்ளே கவிதையாகப் பாடியருள் செய்வாயாக! (கச)

கரு. வித்து வான்கள் விரும்பியுன் னன்பினை
முத்து முத்தெனச் சூட்டினர் முத்தமிழ்;
புத்த லர்தொடுத் தேனுனைப் பூசிக்கப்
பித்த னேன்சிறு பிள்ளைத் துணிவினால்.

பராசக்தி, உன் அன்பையே வரமாக விரும்பி, கல்வி கேள்விகளில் தேர்ந்த எத்தனையோ வித்துவான்கள் முத்துமுத்தாக முத்தமிழ்க் கவிகளைக் கோத்து உனக் கணிந்தனர். எளியேன் உன்னடிப் பித்தன் ; கல்வி கேள்வி யறியாச் சிறுபிள்ளை ; குழந்தை தாயிடம் தன் மழலையைத் துணிந்து பேசுமன்றோ ? அந்தத் துணிவுடன் உன்னைப் பூசிக்க இன்று ஒரு புதிய கவி மலர்மாலை தொடுத்தேன். (கரு)

கசு. **வீரர் வீறது ; வித்தகர் சித்தது ;**
தீரர் யோகத் திறனது ; மானிடர்
பூர ணம்பெறும் புண்ணியத் தீயது ;
தார கம்அது பாரத சத்தியே !

இக் காவியப் பொருளான பாரதசக்தி வீரருள் வெற்றித் திறனுவது ; பேரறிஞருள் அறிவாவது ; ஆத்ம தீரருள் யோகத் திறமையாவது. மானிடர் தெய்வ நிறைவெய்தத் துணை நிற்கும் புண்ணியமான மகா குண்டலிக் கனல் அது. அதுவே உயிர்வாழ்விற்கு ஆதாரமானது ; அதுவே பிரணவப்பொருள் ; அதுவே புகல். பாரதநாட்டு முனிவர் வணங்கி வழிபட்டு அமரநிலை பெற்ற தெய்வசத்தியே பாரத சத்தியாம். (கசு)

கள. **துய்ய யோகந் துலங்கிடும் வாழ்விலே,**
வைய கத்தினில் வானர சோங்கிடும்,
தெய்வ-மானிடச் சங்கஞ் செழித்திடும்,
செய்ய பாரத சத்தியின் சித்தியால்.

பாரதசக்தி உலகிற்கு எல்லா நலமும் அளிக்கும். அஃது எழுந்து விளங்கி வெற்றி பெற்றால், சமுதாய வாழ்வெல்லாம் பரிசுத்தமான யோகமாகும் ; இவ்வுலகில் விண்ணரசு செழித்தோங்கும் ; மானிடசாதி மாசற்றுப் பூரணம்பெற்று ஒரு தெய்வ-மானிட சங்கமாகத் (Commune of God-men) தழைத் தோங்கும். (கள)

கஅ. **பொலிக பூரணம் ! பொங்குக வெற்றியே !**
பொலிக நல்ல புதுயுக வாழ்க்கையே !
பொலிக புண்ணிய பாரத பூமியே !
பொலிக மங்கலம் பூவுயிர் யாவிற்கும் !

ஆத்ம பரிபூரணம் அனைவருக்கும் பொலிக ! எடுத்த காரியங்கள் யாவற்றிலும் வெற்றியே பொங்குக ! எல்லா நலமும் ஓங்கும் புதிய சத்தியயுக வாழ்க்கையே உலகெங்கும் விளங்குக ! எல்லாப் புண்ணியங்களுக்கும் நிலைக்களனான பாரதபூமி சீரோங்கி விளங்குக ! உலகிலுள்ள ஆன்மாக்களுக்கெல்லாம் மங்கலம் பொலிக ! (கஅ)

மங்கல வாழ்த்துப் படலம்
முற்றிற்று.

உ. சிருட்டிப் படலம்*

[சிருட்டி யுண்மையை ஆராய்வோருக்கு இரண்டு தத்துவங்கள் தோன்றும்: ஒன்று அமைதி, மற்ருென்று ஆடல்; ஒன்று நிலேவு, மற்ருென்று அலேவு. அமைதியாக நிலேத் ததையே சுத்தப் பிரமம், பரம்பொருள், பரமசிவம், உயர்பொருள் என்பர்; அதனுடன் பிரியாமல் ஆடிப்பரவித் தொழில் புரியும் தத்துவத்தையே சக்தி என்பர். ஒரு மின்சாரத்தில் இணைந்த இரண்டு விதமான ஓட்டங்கள், ஆகாய அணுக்களில் சுழலும் எலக்ட்ரன் புரோடன் என்ற சக்திகள், சூரியனுடன் இணைந்த கதிர்கள் ஆகிய எல்லாம் மேற்சொன்ன இரண்டு தத்துவ விளக்கங்களே. உலகில் அவையே ஆணும் பெண்ணுமாய் விளங்குகின் றன. இந்தப் படலம், இந்த இரண்டு தத்துவங்களுக்கும் கலேயுருக் கொடுத்து, சிருட்டி யுண்மையை வர்ணிக்கிறது. இதில், சிவம், பரம் என்பது, நித்ய சுத்த சத்துப்பொருள்; பராசக்தி என்பது, அதனுடன் பிரியாமல், அதன் பெருமையை சிருட்டி விலாசமாக விளக் கும் சித்துப்பொருள்: இரண்டும் சேர்ந்த இன்பமே உலகுயிர்களாயின என்பதை இப்படலம் விளக்குகிறது.]

அன்னே அருளிய காட்சி

க. எங்கு வந்ததிப் பூவுயிர்? எப்படி? எதனுல்?
எங்குச் செல்வதிப் படைப்பணி? இதன்முடி பென்னே?
இங்கு வந்துவந் தியங்கிடும் வாழ்க்கையின் பண்பை,
நன்கெ னக்கருள் என்றுநான் சக்தியை நயந்தேன்.

'இந்த உலகில் வளரும் உயிர்க்குலங்கள் எப்படி உண்டாயின? ஏன் உண்டாயின? இவை உலகிற்கு எதற்காக வந்தன? ஆள்முதல் அணு ஈருயுள்ள இந்த உயிர்க்குலங்கள் இங்கு வந்து வாழ்ந்து நாடோறும் மறைகின்றனவே; இவை எங்கே செல்கின்றன? இவற் றிற்கு மறுபிறப்புண்டா? பரகதியுண்டா? இப்படிப் பிறந்து இறந்து, வந்து சென்று இயங் கிடும் உயிர்வாழ்க்கையின் பண்பென்ன? இயல்பென்ன? இந்தச் சிருட்டி, திதி, சம்ஹார ரகசியம் எனது சிற்றறிவிற் கெட்டவில்லேயே! ஐந்தொழில் புரியும் இறைவனின் அருட் சோதியான பராசக்தியே, நீயே எனக்கு இந்த ஐயங்களேத் தெளிவாகத் தீர்த்து அறிவிக்க வேண்டும்' என்று அன்னே மகாசக்தியை நயந்து பணிந்தேன். (க)

உ. உலகை ஓமெனு மந்திரத் தாலுயிர்ப் பித்தாள்,
அலகி லாவிளே யாட்டுடை யாள்பர சக்தி,
நிலேபெற் றென்னுளத் தேநிறைந் தருள்விழி திறந்தே
இலகு வித்தமெய்க் காட்சியை யியம்புகின் றேனுல்.

பரம்பொருளின் அருள் வல்லபையான பராசக்தி, ஓம் என்னும் மந்திரநாதத்தால் அணுக்களேச் சுழற்றி, இந்த உலகைப் பரிணமக் கிரமத்தில் உண்டாக்கி, உயிர்க்குலத்தை வளர்த்தாள்; அவளாலேதான் உலகம் உயிர்க்கிறது. அளவில்லாத பெயர் வடிவங்களேப் பூண்டு அவளே ஆருயிர்க் குலமாக, இயற்கையாக, எல்லேயற்ற திருவிளேயாடல்களேப் புரி கிருள். அன்னே, பராசக்தி, அவளேயே சதா தியானிக்கும் எனது உள்ளத்தில் நிலேகொண்

இசைக் குறிப்பு: சிருட்டி, அருட்குலப் படலங்கள், கலிநிலேத் துறையில் அமைந்தவை. ஐஞ்சீர், நான்கடிகளாய் நடப்பது கலித்துறை. இதன் சந்தம், தன்ன தானன, தானன, தன்னன தனுை. இதை மூன்றடித் தாளத்தில், பியாகு, கல்யாணி ஆகிய இராகங்களில் பாடுக!

டாள்; எனது முறையிட்டைக் கேட்டாள். ஊன்விழிகளால் அவளது அருளாடலை நான் காண முடியாது. ஆதலால், இவ்வன்பன்மீது கருணை கொண்டு நிறைவான, பூரணமான, மாசற்ற அருள் விழியை அவள் திறந்தாள். அவ்விழியால் உலகையும் உயிர்க்குலத்தையும் நோக்கினேன்! ஆ, தெய்வசக்தியின் திருவிளையாடலைக் கண்டேன்! அன்னை எனக்கு விளக்கிய காட்சியையே, இந்தக் காவியத்தில் வர்ணிக்கிறேன்: (உ)

புது யுக நினைப்பு

௩. வான மாதியைம் பொருளினம் வகுத்தவை தொகுத்தும்,
ஈன லாதியைந் தொழில்களைச் சக்தியால் இயற்றி,
மான வர்முதல் எழுவகைத் தோற்றமு மகிழ,
ஞான நாடகம் புரிபவன் ஞாலநா யகனே.

இவ்வுலகிற்கு இறைவனாகிய பரமன், தான் சாட்சியாயிருந்து, தனது இச்சா கிரியா ஞான சக்தியால், வான் காற்று தீ நீர் மண் ஆகிய ஐந்து மூலப்பொருள்களையும் சேர்த்தும் பிரித்தும், ஆக்கல் அளித்தல் நீக்கல் மறைத்தல் அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்தான்; அவற்றின் பயனாகவே, தாவரம், நீரினம், ஊர்வன, புள்ளினம், விலங்கினம், மக்கள், தேவர் ஆக ஏழு வகையாகிய 84 நூறாயிரம் பிறவிமாறுபாடுள்ள உயிர்களைத் தோற்றுவித்தான்; படிப்படியான பரிணாமக் கிரமத்தால், அவ்வுயிர்களின் அறிவை வளர்த்து, மாசறுத்து, இறுதியில் அவை தன்னை இரண்டறக் கலந்து இன்புறச் செய்தான். அதற்காகவே, அவன் ஆன்மாக்களின் உள்ளும், அவை வாழும் உலகிலும் ஞான நடனம் புரிகிறான். (௩)

௪. ஆக்கும் போதய னாகவும், ஆருல குயிரைக்
காக்கும் போதரி யாகவும், கடைவெள்ளத் தாலே
நீக்கும் போதர னாகவு நிலவுவன் அருளால்;
பூக்கும் போதுறப் புதுயுகம் புலர்கென நினைத்தான்.

இறைவன் ஒருவனே. அவன் அனந்த குணசின்மயன்; அருளால் முத்தொழிலாற்றுவோன். உலகுயிர்களை உண்டாக்கும்போது, அவனே சிருட்டித் தலைவனான பிரமனாவான். அதர்மத்தை அழித்துத் தருமத்தை நிலைநிறுத்திக் காக்கும்போது, அவனே விஷ்ணு மூர்த்தியாவான். இறுதி வெள்ளத்தால் அனைத்தையும் அழித்தொழிக்கும்போது, அவனே அரனாக விளங்குவான். இத்தனையும், அவன் செய்வது எதனால்? தனது அருட்சக்தியால். அத்தகைய இறைவன், புதுயுகம் மலரச் சரியான காலம் வந்ததும், "பழைய உலகை அழிப்போம்; யுகமும் புலரச்செய்வோம்" என்று நினைத்தான். (௪)

ஊழி வெள்ளம்

௫. கடக டத்திடத் திசையெலாங் காற்றுடன் கதிரோன்
படப டத்திட வுருத்திரன் காளியைப் பணித்தான்.
தடத டத்திடி தாவிடத் தண்கடல் பொங்கி
மடம டத்துயி ருலகினை வாரியுண் டதுவே!

இதோ ஊழி! திசைகள் கடகடவென்று நடுங்கின! ஊழிக் காற்றும் ஊழி ஞாயிறும் படபடத்தெழுந்து, புயலையும் தீயையும் உமிழ்ந்தன! உலகை அழிக்கப் புகுந்த காலருத்திரன் சம்ஹார சக்தியான மாகாளியை ஏவினான். உடனே, காளி பழைய வுலகை அழித்தாள். எப்படி? தடதட வென்று ஊழியிடிகள் தாவிப் பறந்து விழுந்து அண்டத்தை

நொறுக்கின. ஊழிக்கடல் பொங்கி யெழுந்து மடமடவென்று கர்ச்சித்து, உயிர்கள் வாழும் உலகமத்தனையும் வாரி உண்டு தீர்த்தது. (ரு)

சா. பஞ்ச பூதங்கள் பிரிந்தன; பண்டுல கனைத்தும்,
எஞ்ச லின்றியாங் கிரிந்தது; பரந்தது வெறுமை.
செஞ்செ யல்புரி திறங்களைக் கரந்துளே நீடு
துஞ்சி னன்பர மாத்மனுந் துரியமா முடிமேல்!

பிரளய காலத்தில் வான், காற்று, தீ, நீர், மண் ஆகிய பஞ்ச பூதங்களும் பிரிந்தன. அவை சேர்ந்த உயிர்களும் ஒழிந்தன. உலகனைத்தும் அணுவும் மிச்சமில்லாமல் அழிந்தது. எங்கும் வெறும்பாழ் படர்ந்தது. ஆக்கி அளிக்கும் செய்ய தொழிலைச் செய்யும் சிருட்டி திதி சக்திகளைத் தன்னுள்ளே கரந்து, பரமாத்மாவான இறைவன், புறவுணர்வே தோன்றாமல், தானேதானாய், தற்பரனாக நிற்கும் துரியவுணர்வின் உச்சத்தில் நீண்டகாலம் அறிதுயில் கொண்டான். (சா)

எ. அகம கிழ்வினால் உலகினை ஆக்குவான், காப்பான்;
உகமு டிந்திட வுருத்திர லீலைகள் புரிவான்;
இகப ரந்தனி லெவையுமா யிருப்பவன், ஒருவன்,
சுகம வன்பதந் துதிப்பதே தொழிலெனக் கொள்வாம்!

"இவ்வாறு உருத்திர ரூபங்கொண்டு பரமன் உலகை ஏன் அழித்தான்? இத்தனை உயிர்களையும் ஏன் மாய்த்தான்? இது கருணையா?" எனச் சிற்றறி மாந்தர் நினைக்கக் கூடும். ஆக்கல், அளித்தல், அழித்தல்—இவற்றின் முதல்வன் அவன். அவனுக்கே முத்தொழிலின் காரணம் தெரியும். ஆடியில் உதிர்ந்தது தையில் தளிர்க்கும். வித்தழிந்து மரமாகும். அது போன்றது சிருட்டியின் பெட்பு. இறைவன் கருணையே வடிவினன். அவன் தன்மயன், சின்மயன்; தனது அகமகிழ்வினால் (ஆனந்தத்தால்) உலகை ஆக்குவான், உயிர்களைக் காப்பான். உலகம் அவனருளாலே ஊழிகாலம் வாழும். யுகமுடிவில், அவனே புதிய உலகைத் தோற்றப் பழைய உலகை அழிப்பான். ஊழித்தீ, வெள்ளம், மழை, புயல் எல்லாம் அவனது பயங்கரமான சம்ஹார லீலையால் பொங்கி யெழுந்து உலகை அழிக்கும். தோன்றும் உலகெல்லாம் பஞ்சபூதச் சேர்க்கைதான். பூதங்கள் பிரியும். உலகம் பாழாகும். அதை ஆக்கியளித்த சக்திகள் அவனுள்ளே உறங்கும். அவன் ஒருவனே முடிவில் துரிய நிலையில் இருப்பான். இகத்திலும் பரத்திலும் யாவும் அவனே. அவன் ஒருவனே அருளால் பலவாகத் தோன்றுகிறான். அவன் பதத்தைத் துதிப்பதே ஆன்மாக்களுக்குச் சுகமாகும். யாம் அதையே தொழிலெனக் கொள்வோம். (எ)

மூலசக்தி விழித்தல்

அ. ஏழு தோற்றமாய்ப் பிறந்திறந் துலகினி லியங்கி,
வாழு மன்னுயிர்க் குலத்தினை வளர்த்திடு மிறைவி
ஆழு றக்கம்விட் டெழுந்தெலாம் அழிந்ததை யறிந்து,
பாழு றக்கம்விட் டெழுப்பினள் பரமனைப் பரிந்தே!

தாவரம், நீரினம், ஊர்வன, புள்ளினம், விலங்கினம், மக்கள், தேவர் ஆகிய ஏழு தோற்றமாக மீண்டும் மீண்டும் பிறந்து முதிர்ந்து இறந்து, உலகில் வினையுடல் சுமந்து வாழும் மன்னுயிர்க் குலத்தினை வளர்ப்பவள் இறைவன் சக்தியான இறைவி. அவளைத் தன்னுள் அடக்கியன்றோ பரமன் துயில் கொண்டான்! மீண்டும் கற்பகாலம் வந்தது; எழுந்

தாள் பரமனுள் ஆழ்ந்துறங்கிய பராசக்தி; தனது ஆடரங்கமான உலகெல்லாம் அழிந்ததை அறிந்தாள்; எல்லாம் அழிந்த பாழில், துரியத்துயில் கொண்டிருக்கும் பரமனைப் பரிவுடன் எழுப்பினள். (அ)

௯. "உள்ள வாறுதன் அறிவினுல் உலகெலாம் இன்ப
வெள்ள மாய்,உயிர்க் குயிரென விளங்கிடும் பொருளே,
விள்ள ருந்தனிக் கருணையே, விலகரும் அன்பு
வள்ள லே,என தாடலை வகுத்திடும் பரனே!

"இருந்தபடி, இயல்பு திரியாமல் (தற்பரனுகவே) இருந்து, சித்தாகிய அறிவினுல் உலகெல்லாம் இன்ப வெள்ளமாய், உயிர்களுக்கெல்லாம் உயிராய் நிறைந்து விளங்கும் பரம் பொருளே, அனுபவத்தால் அறிவதன்றி இன்னதென்று வாயாலும் மனத்தினுலும் விள்ளரிய தனிப்பெருங் கருணையே, நீங்காத அன்பு வள்ளலே, எனது உலகாடலை வகுத்துச் சாட்சியாகத் தாங்கி, அனைத்திற்கும் அப்பாலாய் விளங்கும் பரமனே, என் வேண்டுகோளைக் கேட்டருள்வாயாக! (௯)

௧0. "ஒருவ னேபல பான்மையாய் ஒளியுடன் கதிர்போல்
மருவு மென்வயின், வானுல காடலை வைத்தாய்;
அருவு மாகுவை, ஆண்பெண்ணும் அகிலத்தை யாளும்
உருவு மாகுவை யுன்னியல் பறியுமா றுளதோ?

"அண்ட சராசரங்களுக்கும் தேவருக்கும் தலைவனுன ஒப்பற்ற ஒருவனே, சூரியனுடன் கிரணங்கள் சேர்ந்தமைபோலே, சக்தியாகிய நான் உன்னைப் பிரியாது மருவியுள்ளேன். கதிர்களைப் பரப்பி இரவி உலகைச் சித்திரிப்பதே போல், என்னை ஏவி, நீ உலகைச் சித்திரிக்கிறாய். என்னால் நீ பல பான்மையாய், அநேகனுய், அனந்த சின்மயனுக விளங்குகிறாய். என்னிடம் வான், உலகம், இகம், பரம் ஆகிய திருவிளையாடல்களையும் பொறுப்பாக வைத்தாய். நீ இருந்த இடத்தில் இருந்தபடி, நிர்விகாரியாய், நிர்க்குணனுய், அருவாய் நிற்பாய். நீயே ஆண் பெண் ஆகிய இருவகையாக விளங்கிப் பெருகும் அகில உலகையும் அறங்காத்து வளர்க்கும் உருவாக, சகுணப் பிரமமாக, சிற்பரனுக, சக்தி யுக்தனுக விளங்குவாய். உனது இயல்பை, தன்மையை மனத்தால் அறியும் வழியுண்டோ? இல்லை; உன்னியல்பை உன்னருளாலேதான் அறிய வேண்டும். (௧0)

௧௧. "விதங்க ளைப்புவி யணிகளை, வியன்களை, வினையைப்
பதங்க ளைப்பரி ணுமத்தின் படிகளைப் பயனை,
இதங்க ளைப்பல மதங்களை இயல்புற வகுப்பாய்,
கதங்க ளைந்தினிப் புதுப்புவி கண்டருள் புரிவாய்!

"பொருள்களில் பல விதங்கள், உலகின் அணிகள், இயற்கை அற்புதங்கள், ஆன்மாக்களுக்கேற்ற பல கோடி வினைகள், ஒவ்வோர் உயிரின் பக்குவத்திற்கும் ஏற்ற நிலைகள், அந்த நிலைகளினின்றும் பரிணுமக்கிரமத்தில் உயிர்கள் உயர்ந்து செல்லும் வளர்ச்சிப்படிகள், அப்படிகளில் ஏறிய பயன்கள், உயிர்களுக்கு இதமான, இனிமையான தருமங்கள், அத்தருமங்களைப் போதிக்கும் பல சமயங்கள் ஆகிய இவையனைத்தையும் நீ, எதிலும் சிக்காமல், இயல்பாய் இருந்தபடியே வகுத்து நடத்துவாய். இப்போது உருத்திராகாரமாய் உலகைப் பாழாக்கி உறங்குகிறாய். உனது சினத்தை (கதத்தை), அழிக்கும் உருத்திராவேசத்தைக் களைந்து, நீக்கி, இனிமேல் புதிய உலகம் படைத் தருள்புரிவாயாக! (௧௧)

கஉ. "அளவி லாவுயி ராலயம், அருவினை யரங்கம்,
வளமி லாதுணர் வொலியுரு, சுவைமணம் வறண்டே,
தெளிவி லாதொரு சூனிய மானதே......! திகைத்தேன்.
உளவி டத்தினில் உள்ளவா றுலகெலா மாவாய்!"

"துரியாதீத நிலையில், உள்ள இடத்திலிருந்தே உலகெல்லாம், அண்ட சராசரங்களெல்லாம் நீயாகி விளங்கும் பரம்பொருளே, நீ இப்போது அழித்த உலகம் அளவில்லாத உயிர்க்குலங்கள் உன்னருளால் வளர்ந்தோங்கிய ஆலயம்; உன் முத்தொழில்களும், அரிய பல வினைகளும் நிகழும் திருவிளையாட்டரங்கம். அது வளமை யில்லாமல் சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தமாகிய தன்மாத்திரைகளை இழந்து, வறண்டு, இன்னதென்று தெளியமுடியாத சூனியப் பாழாய் இருக்கிறதே! அந்தோ, என் ஆடரங்கம் இப்படியானதைக் கண்டு திகைத்தேன். இறைவனே, உலகை மீண்டும் புதிதாக உண்டாக்குவாயாக!" (கஉ)

பரமன்

கங. "நன்கு நன்றினி துன்றிரு நயமொழி யுவந்தேன்.
மங்க ளச்சிவ சக்தியே, சின்மய வடிவே!
பொங்கு முத்தொழில் இனிப்புது வுலகினிற் பொலியும்.
எங்கு மென்மய மாகநீ கோயில்கொண் டிருப்பாய்!

பராசக்தி தூண்டி வேண்டவே, பரமன் விழித்தெழுந்து மகிழ்வுடன் கூறுவான்:—
"நீ நினைத்தது நன்கு நிறைவேறும். உன் நினைப்பு நல்லது. உன் அழகிய, நயமான மொழிகளை மனங்கொண்டு மகிழ்ந்தேன். ஆன்மாக்களுக்கு மங்களத்தைச் செய்யும் சிவசக்தியே, சிவையே, சின்மய ரூபியே, சித்ரூபியே! இனி, ஆக்கல் அளித்தல் நீக்கல் ஆகிய மூன்று தொழிலும், உன்னால் உலகில் பொலிந்து விளங்கும். நீ என்மயமாக எங்கும் கோயில் கொண்டிருந்து, ஜீவபரிணாமத்தை ஊக்குவாய்! (கங)

கச. "உன்னு டன்உறங் கியபுவி யுன்னுடன் விழிக்கும்;
என்ன லந்தரும் இச்சையை யேவினென் இதன்பால்.
மன்னு மங்கல யாழினில் ஓமிசை வழங்காய்!
பொன்னெ ளிர்புது யுகப்புவி பொலிந்திடக் காண்பாய்!

"நீ என்னுள் உறங்கினாய், உன்னுடன் உலகும் உறங்கியது, ஆக்கியளிக்கும் சக்திகளும் உறங்கின. நீ என்னுள் எழுந்தாய். இனி, அச்சக்திகள் விழித்தெழுந்து, உலகமும் விழித்தெழுந்தோங்கும். இது நிறைவேற, நலமெல்லாந்தரும் என் இச்சாசக்தியை ஏவினேன். உன் கையில் உள்ள மங்கலமான யோகயாழை மீட்டி, ஓங்காரநாதம் வழங்கு! சப்தத்தினின்றும் படிப்படியாகத் தன்மாத்திரைகளும், பூதங்களும் தோன்றிப் புதிய உலகம் பொன்போலப் பொலியக் காண்பாய்! (கச)

கரு. "ஓமெ னுந்திரு மந்திரம் உலகினை யாக்கும்;
ஓமெ னுந்திரு வொலியதே உயர்மறைப் பொருளாம்;
ஓமெ னும்பர நாதமே உண்மையின் பறிவாம்.
ஓமெ னுந்தமி ழிசையினை யுளமகிழ்ந் திசைப்பாய்!"

"இந்த ஓங்காரம் அ, உ, ம் என்னும் மூன்று ஒலிகளால் ஆனது. இதுவே அனைத்தினும் மேலான திருமந்திரம். இம்மந்திரம் அணுக்களைச் சுழற்றும். பரமாணுக்களிலும் இந்த ஓங்காரமே சுழலும். ஆகாசத்தில் இந்த ஓமொலி நிறைந்து உலகை ஆக்குகிறது. 'ஓம்' என்னும் மங்கல ஒலியே உயர்ந்த ஆத்மஞானத்தைப் போதிக்கும் வேதங்கள் கண்ட பிரம

மாகும் (ஓமிதிப்ரஹ்மம்). ‘ஓம்’ என்பது சிதாகாசத்தில் சுத்த புத்தியால் கேட்கும் பரநாதம், அருளொலி. சத்து, சித்து, ஆனந்தம் (உண்மை, அறிவு, இன்பம்) — இதுவே இறைவன், இதுவே ஓம். இவ்வளவு மகத்துவம் பொருந்திய இனிய (தமிழ்) இசையான ஓம் என்னும் மந்திரத்தை உள்ளம் மகிழ்ந்து, உன் யோகயாழில் இசைப்பாயாக!'' (கரு)

சக்தி யாழ்மீட்டல்

கசு. ‘‘நின்று சாட்சியாய்ப் பணித்தெனை யனைத்திலு நிறைவாய்,
என்று மென்செயற் கிறைவனே, ஏகநா யகனே,
நன்று மீட்டுகின் றேனிந்த நலங்கிளர் நாதம்,''
என்று மீட்டினள் ஏழிசைப் பயன்களை யிணைத்தே.

‘‘துரியாதீத நிலையில் தானே தானாக நின்று, என்னை ஏவி, உலகெல்லாம் ஆக்கி அனைத்திலும் நிறைந்திருப்பவனே, எக்காலமும் என் செயல்களுக்கெல்லாம் தலைவனே, உலகிற்கெல்லாம், தேவருக்கெல்லாம் ஒப்புயர்வற்ற ஒரு முதல்வனே, இறைவனே! நன்று. இதோ என் யாழில் எல்லா நன்மைகளையும் தரும் ஓங்கார நாதத்தை மீட்டுகிறேன்'' என்று, ச ரி க ம ப த நி ஆகிய ஏழிசைப் பயன்களும் செறிந்த பிரணவத்தை இசைத்தாள் பராசக்தி. (கசு)

கள. பாழி டத்தினிற் பரந்ததோர் பம்பர வியக்கம்;
யாழி சைதரும் அகரத்தால் அம்பரம் விழிக்க,
வாழி சைதரும் உகரத்தால் வளர்தரும் அணுக்கள்
சூழி சைதரும் மகரத்தாற் சுழன்றன விரைந்தே.

பாழாய்க் கிடந்த இடத்தில், பம்பரம் சுற்றுவதுபோல ஒரு விறுவிறுப்பான இயக்கம் பிறந்தது. யாழொலி தரும் அகரத்தால் அம்பரம் (வான்) விழித்தெழுந்தது. பரமாணுக்கள், மின்சாரம் பெற்று வாழச் செய்யும் உகரத்தால் வளர்ந்தோங்கின. சூழ்ந்து பரவும் இசையோங்கிய மகரத்தால் அந்தப் பரமாணுக்கள் சக்தியைப் பரப்பி விரைவாகச் சுழன்றன. (கள)

கஅ. நாதம் உண்டுள நாரணன் எழுந்தணு நிறைந்தான்;
வேத மார்த்தனன் விழித்தெழுந் தவன்வயின் பிரமன்.
பூத வாதிகள் பொம்மென வொலிமடுத் தெழுந்த,
சோதி பூத்தது, சுடர்மணிக் கணங்களும் பூத்த.

நாதத்தை மடுத்து, பரமனுள் அறிதுயில்கொண்ட காத்தற் கடவுளான நாராயணன் விழித்தெழுந்தான். அவனே சுழலும் அணுக்களில் நிறைந்தான். அவனது மணிபூரகத்திலிருந்து சிருஷ்டி சக்தியாகிய பிரமன் எழுந்து, ஓங்காரத்தைப் பரம்பொருள் விளக்கமான வேதமாகப் பாடினான். வேதவொலியால் பூதங்களும் தன்மாத்திரைகளும் விழித்தெழுந்து, பொம்மெனச் சுழன்றன. இத்தனைச் சுழற்சியால் சக்தி பெற்ற அணுக்கள் நெருங்கிப் பொருந்தி ஒளியுண்டானது; தீயுண்டானது. ஒளிக்கணங்களான சூரிய சந்திர நட்சத்திரங்கள் அந்தரத்தில் சோதிமலர்கள் போலப் பூத்து விளங்கின. (கஅ)

கசு. வெளி நிறைந்தது; சக்தியால் வேகமாம் அணுவிற்
களி நிறைந்தது; கதிரிடுஞ் சுடர்களிற் கனலின்
சுழி நிறைந்தது; கடலுண்டு சொரியும்வா னமுதின்
அளி நிறைந்தது; புதியநல் லழகெங்கு நிறைந்தே!

ஒரு புதிய மங்கல அழகு எங்கும் நிறைந்தது; வெறுமையாயிருந்த வெளியில், ஜீவனுள்ள அணுக்கள் நிறைந்தன. அந்த அணுக்கள் வேகமாய்ச் சுழன்று, சக்தி பெருகி, ஓர் ஆனந்தம் நிறைந்து விளங்கின. அதுவே சிருஷ்டியானந்தம். விண்ணிற் கதிரிடும் சுடர்களில் சக்திக்கனலின் சுழற்சி நிறைந்தது. அக்கனலால் கடல் ஆவியாகி, மேகமாகி, வானமுதால் செழிப்போங்கி உலகில் வளமோங்கியது. (கசு)

உ௦. வல்லி யற்கையின் வளமைகள் வளர்ந்திட நாளும்,
சொல்லொ ணுப்புதுத் தோற்றங்க ளுதித்தன தொடர்ந்தே;
கல்லெ ழுந்தது; மலைநதி கனிமரக் காடு
புல்லெ ழுந்தது புசிப்புக ளெழுந்தன செழித்தே.

பரமாணுக்களில் உள்ள மின்சார சக்தி, காந்த சக்தி, கவர்ச்சி, சூடு முதலிய திறமைகளைத் தாங்கிய (வல்) இயற்கையின் சிருட்டி வளமைகள் நாடோறும் பெருகின. வாயினுல் கணக்கிட்டுச் சொல்ல இயலாத புதிய புதிய காட்சிப் பொருள்கள் தொடர்ந்து தோன்றின. கற்கள், மலைகள், நதிகள், கனிமரக் காடுகள், நெல், தென்னை முதலிய உணவுவகைகள் எல்லாம் உலகிற் செழித் தெழுந்தன. (உ௦)

புண்ணிய பூமி தோன்றுதல்

உக. மன்ன ளாவிய மாண்பணி மகுடம்போல் எழுந்து,
விண்ண ளாவிய வெள்ளிமால் வரைமிசை யிருந்தே,
கண்ண ளாவிய தென்புறங் கவினுறக் காட்டிப்
பண்ண ளாவிய செஞ்சொலாள், பகவனுக் கிசைத்தாள்.

புதிய உலகம் இயற்கையழகு நிறைந்து மாண்புடன் விளங்கியது. அதன் மாண்பு சூடிய மகுடம்போல, விண்ணளாவிய சிகரத்துடன் பெரிய வெள்ளிமலை (இமயமலை) எழுந்து விளங்கியது. அதன்மிசை இறைவனும் சக்தியும் எழுந்தருளினர். பண்நிறைந்த செஞ்சொல்லினளாகிய பராசக்தி, அம்மலையின் தென்புறத்தை அழகுறக் (கவினுறக்) காட்டி, இவ்வாறு, பரமனிடம் இனிது சொன்னுள்: (உக)

சக்தி

உஉ. "ஆதி யேநம தரியணை யாகுமிம் மலைமுன்,
மேதி னிக்கொரு ஞானமா விளக்கென மிளிரும்
சோதி நாடொன்று தோற்றுவாய் சொக்கழ காகத்
தீதி லாத்தவம் பொலிந்திடத் தேவர்போற் றிடவே!"

"ஆதிமூர்த்தியே! இந்த இமாசலம் நமது அரியணை போன்றது, இதன் முன்னே உனது அருட்பெருஞ் சோதி பொலியும் திவ்ய தேசத்தைத் தோற்றுவிப்பாயாக! அது நீர் நிலவளங்கள், உயிர்வளங்கள் எல்லாம் நிறைந்து சொக்கழகா யிருக்கவேண்டும்; அதில் தீங்கில்லாமல், உயிர்களுக்கு மங்கலம் செய்யும் தவம் பொலியவேண்டும்; தேவர் அதைப் 'புண்ணிய பூமி' என்று போற்ற வேண்டும். இந்த உலகிற்கெல்லாம் அஃது அகண்டதொரு ஞானதீபமாக விளங்கவேண்டும்." (உஉ)

பரமன்

உங. "நன்றி சைத்தனை நலந்தரு ஞாலநா யகியே"
என்றி சைத்தருள் இறைவனும் உவகைமீ தெழுந்தே,
தன்றி ருத்தவக் கதிரினைத் தளர்வறப் பரப்பி,
வென்றி யோங்கிடும் வியன்பெறு நாட்டினைப் படைத்தான்!

'எல்லா நன்மைகளேயும் தரும் உலகிறைவியே! நன்று சொன்னுய்' என்று ஆமோதித்து, மேன்மேலும் மகிழ்வு பொங்கி, அருளிறைவன் தன் திருத்தவக் கதிர்களே இடைவிடாமல் பரப்பி, அவற்றின் பலத்தால் எந்நாளும் வெற்றிபெற்ருேங்கும் ஓர் அற்புத நாட்டைத் தன் எதிரே தோற்றினன். (உங)

உச. "பாரெ திர்பர தேவியே பச்சைவின் ணகத்தைச்
சீரெ லாம்வளர் திவ்வியச் செல்வநா டிதுவே,
பாரெ லாம்புகழ் பாரத சக்திநின் றெளிரும்
பூர ணம்பெறும் புண்ணிய பூமியென் றிசைப்போம்!

தனது புதிய சிருட்டியைக் காட்டிப் பரமன் அம்மைக்கு உரைத்தான்: "பரதேவியே! உன் எதிரே பசுமையழகு பொலியும் ஒரு பூலோக சுவர்க்கத்தைப் பார்! எல்லாச் சீர்களும் வளர்ந்தோங்கும் திவ்வியமான தெய்வசம்பத்துக்கள் நிறைந்து, அருட்செல்வமும், பொருட்செல்வமும் குலுங்கும் நாடு உலகில் இஃது ஒன்றேயாம். 'பாரதசக்தி' என்ற நமது யோகக் கனல் என்றும் நின்று நிலவி நலமளிக்கும் இந்த நாடே, எல்லாவிதத்திலும் பூரணம் பெற்றதாகும். இந்த நாட்டைப் 'புண்ணிய பூமி' என்று நாம் இசைப்போம். (உச)

உடு. "நாய கம்பெறு மிதன்மிசை நல்லன யாவுந்
தாய கம்பெறும்; தாரக மாகிய தருமம்
தோய கம்இது; துலங்குக துகளற நாளும்
வாய கங்கடந் தோங்கிடும் வாய்மையைப் போலே!"

"உலகிற்கெல்லாம் தலைமை வகிக்கும் இந்தப் புண்ணிய பூமியே எல்லா நலங்களுக்கும் தாயாகும. அந்த நலங்களே யெல்லாம் நல்கும் தாரகமாகிய அத்யாத்ம தருமம் இதிலேயே நிலைபெற்று விளங்கும். வாய்க்கும், மனத்திற்கும் எட்டாத சத்தியப்பொருளைப் போலே இந்நாடு மாசற்று நாடோறும் வெற்றி பெற்றெளிர்க!" (உடு)

உசு. ஆக்கும் ஆற்றலை முற்றிலும் காட்டினுன் அயனும்;
காக்கும் ஆற்றலைக் கண்ணெனக் கருணைமால் வகித்தான்;
பாக்கி யங்களை மிகமிகப் பரவிடப் புரிந்து,
நோக்கினுள் சிவை பரமனை நூதனந் தோன்ற.

புண்ணிய பூமியில் பிரமன் தனது சிருட்டித்திறமை முழுதையும் காட்டினுன். இப்பூமியைக் கண்போலக் காக்கும் திறமையைக் கருணைமிக்க விஷ்ணுமூர்த்தி வகித்தான். சிவசக்தி இந்நிலத்தில் மேன்மேலும் மிகுதியாகப் பல செல்வங்களைப் பரப்பி அழகுசெய்தாள்; அதன் பிறகு, மற்றொரு நூதனப் படைப்புத் தோன்ற இறைவனை நோக்கியுரைத்தாள்: (உசு)

சக்தி

உஎ. "இச்ச கத்தையென் இன்பவி டாக்கினை இறைவா;
உச்ச நல்லறி வாற்றலும், உன்னரு ளுணர்வும்,
மெச்சும் ஆத்தும சக்தியும் விளங்கு மானிடத்தைச்
சச்சி தானந்த வத்துவே. சகத்தினிற் படைப்பாய்!"

"உண்மையறி வின்பப் பரம்பொருளே! சச்சிதானந்த வஸ்துவே! இவ்வுலகை எனது விளையாட்டிற் கேற்ற இன்ப விடாக்கிய இறைவனே! ஓரறிவுமுதல் ஐயறிவான உயிர்களையெல்லாம் இப்போது படைத்தாய். இனி உச்சமான புத்தியறிவும், அந்த அறி

வினால் உண்டாகும் அற்புதத் திறமைகளும், எப்போதும் நீ உள்ளத்தில் இருப்பதை யுணரும் அருளுணர்வும், ஆத்மசக்தியும் விளங்கும் மானிடப் பிறவியை உலகில் தோற்று விப்பாயாக!'' (உஎ)

பரமன்

உஅ. ''என்னி லாண்மைநல் லறிவுடன் வீறுபெற் றெழுக!
உன்னிற் பெண்மைநல் லன்புடன் அழகுறப் பொலிக!
இன்னி தின்இரு திறங்களும் இணைந்துநீ டூழி
மன்னு மங்கல மானிட மரபெனத் திகழ்க!''

பரமன் மகிழ்ந்துரைத்தான்:—''பராசக்தியே! என் அம்சத்தில் நல்ல அறிவும், வீறும், வீரமும் பெற்ற ஆண்மை எழுந்து விளங்குக! உன் அம்சத்திலிருந்து அன்பும் அழகும் நிறைந்த பெண்மை பொலிக! ஆண்மை பெண்மை ஆகிய இந்த இரண்டு சிருட்டித் திறமைகளும் சேர்ந்து, நீடூழி உலகிற் செழித்தோங்கும் மங்கலமான மனிதமரபெனப் பேர் பெற்று விளங்கட்டும்!'' (உஅ)

உகூ. பூத யாக்கையிற் பொறிபுலன் கரணங்கள் பொருந்தி,
நாத விந்துக லாதியாம் ஆத்தும நாதன்,
போத மாகவுட் புகுந்துயிர் வாழ்வினை யியக்க
ஏதமில் திருக் கோலங்கள் இரண்டெழுந் தனவே!

உடனே குற்றமற்ற, பழுதற்ற (ஏதமில்) இரண்டு மானிடத் திருக்கோலங்கள், ஆணும் பெண்ணுமாக எழுந்து விளங்கின. அவற்றின் உடல்கள் இரண்டும் ஐம்பூதங்களால் ஆனவை; தன்மாத்திரைகளும், தசேந்திரியங்களும், நான்கு அந்தக்கரணங்களும் பொருந்ினவை. நாதம், விந்து, கலை ஆகிய சிருட்டி தத்துவங்களுக்கு ஆதியான (சர்வாத்ம நாதனான) பரமாத்மனே அந்தக்கரணத்திற் புகுந்து ஆண் பெண் ஆகிய இரண்டு மானிட வாழ்வையும் இயக்கினான். (உகூ)

சக்தி

௩௦. ''நனிதி கழ்மனு மதிஎனும் தளிரணிச் செல்வீர்,
புனித மாகிய மனையறம் பொலிவுறப் பொருந்தி,
இனித றம்பொரு ளின்பம்வீ டிசைவுறச் செழித்தே
மனித மாமர போங்கிட வாழிநீர் மாதோ!''

ஆணுக்கு 'மனு' என்றும், பெண்ணுக்கு 'மதி' என்றும் பெயரிட்டு அவர்களை அன்னை வாழ்த்தினாள்;—''மகனே, மனு! 'மதி' என்னும் தளிரணிச் செல்வீ! பரிசுத்தமான இல்லறத்தை மேற்கொண்டு அறம், பொருள், இன்பம், ஜீவன்முக்தி (வீடு) ஆகிய நான்கும் பொருந்தச் செழித்து, மனிதகுலம் ஓங்கிவளர நீவிர் நீடூழி வாழ்விராக!'' (௩௦)

௩௧. மாச கல்மனு மதிகளை வாழ்த்தி மாதேவி,
பாச மேவிய நகையுடன் சிவன்முகம் பார்த்து,
''நேச, மானிடர் நிலையினி யென்''னெனக் கேட்டாள்.
ஈச னும்பரி ணாமத்தின் இயல்பினை யுரைத்தான்:

மனுமதி தம்பதிகளை இறைவி வாழ்த்தி யனுப்பிய பிறகு, அவர்களிடம் வைத்த அன்பு நிரம்பிய நகையுடன் பரமன்முகம் பார்த்து, ''நேசனே, இனி மனிதர் மரபு விரைவில் வளர்ந்தோங்கும். இதன் வருங்கால நிலைமை எப்படி? மனிதர் பிறவித்துயர் நீங்கி மீண்டும் உன்னை யடைவ தெவ்வாறு?'' என்று கேட்டாள். அதற்குப் பரமேசன் ஜீவ பரிணாமத்தின் இயல்பை விளக்கினான்: (௩௧)

பரமன்

௩௨. "ஈசன் யார்ன்வளர் மானிடம், எனையறி யாது,
பாச முற்றிடிற் பவவினை பற்றிநீ டலையும்.
நேச மென்னிடை நிலைத்திடின், அருளுணர் வோங்கிப்
பாச நீங்கிடும் பதியினைக் கூடிடும் பசுவே.

"உனது ஆசிர்வாதத்தைப் பெற்ற பசுவாகிய மானிடம், மனமயக்கால் ஆணவமாகிய பாசம் முற்றினால், வினைபெருகிப் பிறவிநோயால் நீண்டகாலம் துன்புற்றலையும்; கீழியல்புகளை வென்று நேசத்தை என்னிடமே நிலையாக வைத்தால், அருளுணர்வோங்கிப் பாசம் நீங்கிப் பசுவானது பதியாகிய என்னைக்கூடி இன்புறும். (௩௨)

௩௩. "முக்கு ணம்பெறு மாயையின் முடிவறு வலையிற்
புக்கு மானிடர் இருவினைப் போர்களை விளைப்பார்;
பக்கு வம்பெறு ஞானிகள் பதைப்பறப் பார்த்தே
எக்கு ணத்திலுந் தோய்வுறார்; என்னிலே இருப்பார்."

"உலகம் சத்துவம், இராஜசம், தாமசம், (ஒளி, வேகம், இருள்) என்னும் மூன்று குணங்களையுடைய மாயையின் ஆட்டத்தை யுடையது. அம்மாயையின் வலையிற் புகுந்து சிக்கிய மானிடர் நலம் தீது, தெய்வ சம்பத்து அசுர சம்பத்து ஆகிய இருவிகாரங்களால் அறவினை மறவினை ஆகிய இருவினைகொண்டு போர்களை விளைப்பார். 'இவை நானில்லை, நான் உள்ளத்தில் இருக்கும் சுத்தான்மா' என்றறிந்து பக்குவமெய்திய பரமஞானிகள் எதற்கும் மனம் பதையாமல், உலகாடலைச் சாட்சியாகப் பார்த்து, இருவினைப் பயன்களைப் பாராட்டாமல், உதாசினராய், எக்குணத்திலும் சாராமல், குணாதீதராய், எதிலும் பற்றில்லாமல் நானாகிய பரமாத்மாவுடன் கலந்து அந்த உணர்விலேயே நிலைத்து சகஜநிஷ்டையிலிருப்பார்." (௩௩)

௩. அருட்குலப் படலம்

பரதன்

க. பஞ்ச பூதமும் பரிதியு மதியிளங் கதிருந்
துஞ்சி டாக்குண தொந்தமும் வளர்த்திடும் புவியில்
செஞ்செ யல்புரி மானிடத் தேவரும் செழித்தார்,
வெஞ்செ யல்புரி அரக்கரும் பெருத்தனர் விரைந்தே.

அருளிறைவனுல் ஆகிய உலகம், பரிணுமக்கிரமப்படி செடி, விலங்கு, மக்கள் இனங்களால் பெருகியது. வான், காற்று, தீ, நீர், மண் ஆகிய ஐம்பூதங்களும், கதிரவன், சந்திரன் ஆகிய இருசுடர்களும் தூலவுலகை வளர்த்தன. நலம் தீது, இன்பம் துன்பம், ஆகிய இரு விகாரங்களைக் கொண்டே பிரகிருதியின் சத்துவ, இராஜச, தாமசாதி முக்குணங்கள் மாந்தரின் மனத்தையும் புலன்களையும், வாழ்வையும் வளர்த்தன. இக்குண பேதங்களால் மாந்தர் வாழ்க்கை பலவகைப் பட்டது. சத்துவகுணமுள்ள மாந்தர் நல்ல செயல்களையே செய்து, நரதேவராக விளங்கினர். ஆசையாணவ அரக்கர் கொடுமையே செய்து உலகம் அஞ்ச விரைவாகப் பெருத்தனர். (க)

உ. கரவுந் தீமையும், கடுஞ்சினப் போர்களும் விளைக்கும்
அரவும் வேங்கையும் போன்றவெவ் வரக்கரை யெதிர்த்தே,
விரவு வீரமும் தவமுங்கொண் டெளிதினில் வென்ருன்—
பரத னென்பவன் மனுக்குலப் பரிதியாம் அவனே.

வஞ்சமும், தீமையும், கொடுமையும், பொருமையும் கொண்டு கடுஞ்சினத்தால் புரியும் போர்களுமே தொழிலாய் விளைக்கும் அரக்கர், காலகோடி விஷப் பாம்பையும், இரத்த வெறி பிடித்த வேங்கையையும் போல, உலகை அழித்தனர். அவரை எதிர்த்தான் பரதன் என்பவன். அவன் நற்குணங்கள் யாவும் பொருந்திய தீரன், அஞ்சா வீரன்; வாள்வலியுடன் தபோபலமும் நிறைந்தவன்; மாந்தர் குலத்திற்குச் சூரியன் போலே ஒளியும் சக்திக் கனலும் அளிக்கத்தக்கவன். அவனே அரக்கரை எளிதாக வென்ருன். (உ)

அருட் குலம்

௩. திருக் குணத்தினர் அரசெனத் தேர்ந்திசை கூற,
இருட் குலத்தினை இகல்கெட வென்றமெய் வீரன்,
உருக்கொண் டேயறம் ஓங்கிட மீண்டுமிவ் வுலகில்,
அருட் குலத்தினை ஆக்கினன்; அதன்புக ழிசைப்பாம்.

திவ்யகுண மகான்கள் பரதனை அரசனுகத் தேர்ந்து, புகழ்ந்து வாழ்த்தினர். இருட்குல அரக்கர் பகைகெட, வெற்றிபெற்ற சத்திய வீரனுகிய பரதன் உலகில் மீண்டும் தருமம் உருக்கொண்டு செழித்தோங்க, அருட்குலம் ஒன்றை உண்டாக்கினுன். அதன் புகழை இனிச் சொல்லுவோம்: (௩)

ச. தெய்வக் கற்பகஞ் செழுமலர் கொழுங்கனி தழைத்தே,
வைய கத்தினுக் களித்திடும் வகையினைப் போலே,
துய்ய நல்லருட் குலந்தருஞ் சுடர்பெறு மைந்தர்,
செய்ய வாழ்வினுற் செகத்தினிற் கினியன செய்தார்.

தெய்வத் தன்மை பொருந்தி, எக்காலமும் பசுமையா யிருக்கும் கற்பகம், நிறைமலர் குலுங்கி, இரசங்கொழுத்த கனிகள் செழித்து, தன் வளங்களைத் தானே அனுபவிக்காது, கருணையுடன் உலகிற்கே உதவுகிறது. அதுபோலவே பரிசுத்தமான நல்ல அருட்குலம், ஞான வீரச் சுடர்களான மைந்தரைப் பெற்றது; அவர் புண்ணிய நல்லற வாழ்க்கை வாழ்ந்தனர். அவ்வாழ்வினால் உலகிற் கெல்லாம் இனிய நலங்களைச் செய்தனர். (ச)

ரு. இனிய வாய்மையும், வீரமும், எழில்பெறுந் திருவும்,
முனிவர் போற்றிடு ஞானமு, முதற்குண வளமும்,
புனித வாழ்க்கையும், புலமையும், பொதுநலப் பணியும்,
மனித ராகிய தேவரின் மாண்பிவை யாமே!

பிறருக்குத் திமை செய்யாமல் இனிமையே செய்யும் சத்திய விரதம், தீயதைக்கடிந்து நல்லதைப் போற்றும் வீரத்திறமை, திவ்ய தேஜஸ், தருமத்தின் ஒளிவீசும் செல்வம் தூயதவ முனிவர் போற்றும் ஆத்ம ஞானம், சர்வாத்ம ஞானம், முதற்குணமான சத்துவகுணநிறைவு, அதனால் உண்டாகும் அமைதி, இன்பம், பொறுமை, அன்பு, அருள் முதலிய வளமைகள், பரிசுத்த யோக வாழ்க்கை, அருட்புலமை, தெள்ளறிவு, தம் திறமைகளைக் கொண்டு பொது ஜனங்களுக்குக் காலம் விரும்பும் சேவை செய்யும் கருணை—இவையே தெய்வத்தன்மை பெற்ற மனிதரின் பெருமைகளாகும், இத்தன்மைகள் யாவும் அருட்குல மைந்தரிடம் பொருந்தி யிருந்தன. (ரு)

சு. புலனை வென்றவர் புவிமிசை அமரராய்ப் பொலிவார்;
நிலனை வென்றவர் நீதிநன் னிருபராய்த் திகழ்வார்;
இலனை வென்றவர், மனைதரும் இன்பமோங் குவர்; தன்
னலனை வென்றவர் பொதுநல நண்பராய் வாழ்வார்.

அருட்குல் வீரர் புலன்களை அடக்கி வென்று, உலகில் எப்போதும் நித்தியமான சுத்தான்ம உணர்வில் அமரராக வாழ்வார்; நானிலத்தையும் தமது வீரத் திறனால் வென்று; நீதிச் செங்கோல் பிடித்துக் குடிகளுக்கு நன்மையே செய்யும் வேந்தராக விளங்குவார். அறிவாலும், தொழிற் புலமையாலும், வாணிபத்தாலும் வறுமையை (இலன் = இலம்) வென்று, இல்லறம் அளிக்கும் போக சுகங்களை நுகர்ந்து, இலௌகிக வாழ்விலும் சிறந்தோங்குவர்; தன்னலத்தை வென்று, பொதுநலமே புரியும் சர்வஜன நேசராய்த் தொண்டும் இசையும் ஓங்கிப் பொலிவர். (சு)

எ. நாக ரிகத்தினிற் சிறந்தனர் நறுங்கலைச் செல்வர்;
வாகை யோங்கிய வலியதிண் புயத்தினர்; நாளும்
ஈகை யின்பமும், சிவந்துலங் கிதயமும் படைத்தார்
பாகி னந்தமிழ் போன்றனர் பண்பினு லவரே.

பல நற்கலைச் செல்வரான அருட்குல வீரர் நாகரிகத்திற் சிறந்தனர்; பகைவரை வென்று வாகையோங்கி மலைபோலத் திண்ணிய தோள் படைத்த சூரரானர்; தினந்தோறும் உற்றாருக்கு இல்லையெனாது உதவும் ஈகையும், அதனால் வரும் புகழின்பமுந் துய்த்தார்; இதயத்தில் எப்போதும் இன்பமயமான சிவந்துலங்க நின்றார். பாகுபோல் இனிய இளந்தமிழ் அருட்சுவை மிக்கது, பொருட் செறிவுள்ளது, விறு பெற்றது; திட்ப நுட்பமான, சொல் வளம் மிக்கது. அதைப்போன்ற பண்புடையார் புது மனிதர். (எ)

அ. செங்கண் மாலுயிர் காத்திடச் சிறப்புடன் அயனும்,
அங்கண் மாநிலத் தாருயி ரணிகளை வகுக்க,
துங்க மாஞ்சக்தி சிவனருட் சுடரினில் வளர்ந்த
மங்க லத்திரு மரபினர் கிளையினை யறிவாம்.

பரதன் நிலைநாட்டிய அருட்குலம் செழித்தோங்கியது. அதன் அறத்தைச் செங்கண் மால் காத்தான். பிரமதேவன் இடமகன்ற உலகில் உயிர்க் குலங்களை அணிவகுத்தான். சக்தியுடன் கூடிய சிவபிரான் தனது அருட்சுடரைப் பரப்பினன். மங்கலமான அருட்குலம் பல கிளைகள் கிளைத்து வாழ்ந்தது. அவற்றை அறிவாம்: (அ)

கூ. நிலவு ருண்டையைப் போலவே நிலையிலா அரசும்,
பலகு லம்பறித் தாண்டிடும் பாக்கியப் பணயம்,
வலியர் கைவழி வழிந்துசெல் வழக்குடை யாட்சி,
பொலியு மோர்புறஞ் சகடைபோற் போகுமோர் புறமே.

மண்ணுலகம் உருண்டையானது, அது சூரியனைச் சுற்றிச் சென்றுகொண்டே யிருக்கிறது. அதனல் கால நிலையும் நாளுக்கு நாள் மாறுகிறது. அதே மாதிரி எந்த அரசாட்சியும் நிலையில்லாமல் மாறிக்கொண்டே யிருக்கும். பாக்கியம் (அதிட்டம்), அரசையும் செல்வத்தையும் பணயம் வைத்துச் சூதாடுகிறது. சூதுக்காய் எப்படி உருளுமோ அப்படி அரசும் செல்லும். அதைப் பல குலத்தினர் படைவலி கொண்டும், சூழ்ச்சிகளாலும் பறித்தாளுவர். உலகாட்சி பலவானொருவன் கைக்கு வரும். அவனைவிடப் பலவான் வந்து, அதைப் பறித்தாள்வான். வழிந்து செல்லும் தண்ணீர் மாதிரி வலியர் கைவழியே அரசாட்சி செல்லும். அஃது அரசனொருவன் அரியணையிற் பொலிவெய்தும். அவனுக்குப் பிறகு சகடக்கால்போலே மாறி இன்னொரரசனிடம் செல்லும். அந்த மாதிரியே பரதன் நாட்டிய ஆட்சியும் காலக்கிரமத்தில் மன்னர் பலர் கைமாறியது. அம்மன்னர் குலத்தை அறிவோம். (கூ)

கo. வீர மோங்கிய செந்தமிழ் விரிநில வேந்தர்,
ஆரி யர்மதி யிரவியர், அங்கியர், சிங்கர்,
மோரி யர்புத்தர் கிறித்தவர் முகம்மதி யர்கள்,
மார தர்முதல் மிகப்பலர் வழிவழி புரந்தார்.

ஒரு காலம் பரதகண்டம் முழுதும், குமரிக் கண்டமும் சேர்ந்துவிரிந்து செந்தமிழ் நிலமாயிருந்தது. அந்நிலத்தைப் புரந்த தமிழ்வேந்தர், பின்னே வந்த ஆரியர், சூரிய சந்திர வமிசத்தினர், மௌரியர், குப்தர், பௌத்த மன்னர், இஸ்லாமிய மன்னர், அக்கினி குல ராஜபுத்திரர், மகாராட்டிரர், சீக்கிய சிங்கர், கிறித்தவ மன்னர் ஆகிய மன்னர் பலர் வழிவழியாக, அவரவர் கொடியை நாட்டி இந்நாட்டை ஆண்டனர். (கo)

கக. சிங்க மோங்கிய நெஞ்சினர், செருபடைத் தலைவர்,
வங்க மோங்கிய வாணிபர், தொழில்வளத் தாலே
தங்க மோங்கிய தருகையர், தமிழ்க்கலை முழங்கும்
சங்க மோங்கிய தென்னவர் மன்னவர் தாமே.

தென்னவராகிய பாண்டியர் சிங்கம்போலத் தைரியம் மிகுந்த நெஞ்சினர்; போர்ப் படைகளை நடத்திப் பகைவரை வெல்லும் வீரத்தலைவர்; எல்லாத் துறைகளையும் தம் தேக்குக்கப்பல்களைக் கொண்டு அளக்கும் வாணிபச் செழிப்புடையார்; ஆடை, முத்து, பவளம், முதலிய பலவேறு தொழில்களாலே தங்கக்குவை ஓங்கிய தமது செல்வத்தைப் பாத்திரமறிந்து

தாராளமாகத் தரும் முகிற்கையர் ; தமிழ்க்கலைகள் முழங்கும் மூன்று சங்கம் ஓங்கிய நாட்டினர். அறம், அன்பு, கலை, வீரம், வாணிபம், தொழில், செல்வம், படை முதலிய அனைத்தும் வளம்பெற நாடாண்டமையால், அவரே மன்னுயிரைக் காக்கும் மன்னர் என்பதற்கு உதாரணமாவார். இமயப்பிடரில் மீன்கொடி பொறித்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்திற் பதினொரு வேந்தரை வென்ற இளஞ் செழியன் முதலியோர் புகழ் பெற்ற பாண்டியர். (கக)

கஉ. **தண்மை யோங்கிய குடையினர் ; தானையிற் சிறந்தார் ;**
வண்மை யோங்கிய செல்வர்கள் பொன்னிநல் வளவர்,
திண்மை யோங்கிய புயத்தினர் சேரநாட் டரசர் ;
உண்மை யோங்கிய புகழினுக் குடையவ ரிவரே.

கரிகால் வளவன், இராஜராஜன், கங்கைகொண்டான் போன்ற பொன்னிவள நாட்டரசரான சோழர், தண்ணிழல் பரப்பி அன்பும், அருளும், அமைதியும் அளிக்கும் வெண்குடைக்கீழ் குடிகளை ஆண்டனர் ; படை வலியிலும் சிறந்து, பகையரசரை வென்று பெருநிலம் புரந்தனர். அவர்கள் கப்பல் வாணிபத்தாலும், தொழிலாலும் வந்த பெருஞ் செல்வத்தைக் குடிகளின் நன்மைக்கே தாராளமாக வழங்கும் வண்மையோங்கிய தருமவான்கள். இமயவரம்பன், செங்குட்டுவன் போன்ற சேர நாட்டரசர், போரில் பகைவரை வீழ்த்தி வாகைபுனையும் திண்ணிய தோளுடையார். பாண்டியர், சோழர், சேரர் ஆகிய இத்தமிழ் நாட்டு * மூவேந்தரே உண்மையாகப் புகழுக்கு உரியவராவார். அவர்களிடம் வீரமும், அறமும், திருவும், கலையும் பொருந்தியிருந்தன. (கஉ)

கங. **அமரர் உய்ந்திட நஞ்சினை அமுதென நயந்தே,**
எமனை யெற்றி,மன் மதனையும் எரித்தவன் அடியார்,
விமல மாலடி யார்-இவர் பாடிய வேதத்
தமர மோங்கிடுந் தண்டமிழ் நாட்டினுக் கிணையோ?

பரமசிவன், தேவர் பிழைத்திருக்கக் கருணை கொண்டு ஆலகால விஷத்தை யுண்டான் ; அன்பன் மார்க்கண்டன்மேற் பாசம் வீசிய நமனைக் காலால் எற்றி யோட்டினன் ; தவராஜனாகிய தன்மேலும் பூங்கணை பாய்ச்சிய காமனை நெற்றிக்கண்ணால் எரித்தான். அத்தகைய பரமனடியரான மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர், சம்பந்தர் முதலியோர் பாடிய திருமுறைகளும், பரிசுத்தவானான விஷ்ணுவின் அடியார் பாடிய திருவாய்மொழியும் தமிழ் வேதங்களாம் ; இவை ஒலிக்கும் நமது செந்தமிழ் நாட்டினுக்கு எந்நாடே இணையாகும் ? (கங)

கச. **கடவுள் உள்ளமும், கலைகளுங், கதைகளுங், கவியும்,**
கடவு ளாடலைத் தாங்கிய கவின்பெருந் தலமும்,
கடவுட் காதலும், வீரமும், கற்புமோங் கியதாம்
கடவு ளாலய மாகிய கனிதமி ழகமே !

அருள் கனிந்தோங்கும் இத்தமிழகமே உயிர்களின் உள்ளந்தோறும் கடவுள் நடம் புரிவதைக் கண்டது. கடவுட் கலைகளான திருமுறைகளும், புண்ணியக் கதைகளும், அற்புதங்களைச் செய்த அருட்கவிகளும், திருவிளையாடல்களைக் கண்ட திருத்தலங்களும், கடவுட் காதலும், கடவுளை அடையும் வைராக்கியவீரமும், கடவுளையே நாயகனாகக் கொண்ட அடியாரின் அன்புறுதியும்,பத்தினியர் கற்பும் ஓங்கியது, தேவாலயமாக விளங்கும் புண்ணிய நிலயமான இந்தத் தமிழ்நாடேயாகும். (கச)

* மூவேந்தர் வரலாற்றை, ஆசிரியரின் "சிலம்புச் செல்வம்" என்னும் நூலிற் காண்க.

பிரகலாதன்

கரு. நஞ்சும் வேழமு நாத்திகக் கொடுமையுங் கொண்டே
அஞ்சு வெஞ்சினக் கனகன்செய் இடர்களை அஞ்சான்
தஞ்ச மென்றரி நாமமே தளர்வறப் புகன்முன்
பிஞ்சி ளம்பிரக லாதனின் பெருமையைப் புகல்வாம்.

அருட்குல மைந்தருள் ஒருவன் பிரகலாதன். அவன் பிஞ்சிளம் சிறுவன்; என்றாலும், நாராயணன் நாமத்தையே எப்போதும் சொல்லி அன்பு செய்தான். நாத்திகனாகிய தந்தை இரணியனுக்கு, அந்தப் பேரைக் கேட்டால் ஆகாது. 'சொல்லாதே!' என்றால் மகன் கேட்கவில்லை. இரணியன் சினந்தான்; நஞ்சுச் சோறூட்டினான்; மத யானையை விட்டு மிதிக்கச் செய்தான்; மலையிலிருந்து உருட்டினான்; இன்னும் தனது நாத்திகத் திமிரால் என்னென்ன கொடுமை செய்யமுடியுமோ அத்தனையும் செய்தான். பிரகலாதன் மனச் சோர்வில்லாமல் ஹரிநாமத்தையே சொல்லி, எல்லா இடர்களையும் தாண்டினான்; 'கடவுள் தூணிலும், துரும்பிலும் இருக்கிறார்' என்றான். அரக்கன் ஒரு தூணை உதைக்கவே, அதனின்று நரசிங்க வடிவாக வந்து நாராயணன் அரக்கனைப் பிளந்தான்; அன்பனைக் காத்தான். பிரகலாதன் பெருமையைப் போற்றுவோம். (கரு)

இராமபிரான்

கசு. வேத வேள்வியும், வரங்களும், வேந்தெனுஞ் செருக்கும்,
மாத ராசையால் இழந்தனன் மதியிலி யரக்கன்
பாத கத்தலை பத்தையும், ஒருகணை யாலே
தீத றக்கொய்த தீரனும் இராமனைப் பணிவாம்.

இராவணன் வேதவித்து; வேள்விகள் பல செய்தவன்; சிவனிடம் சந்திரகாச வாளும் நீண்ட ஆயுளும் வரமாகப் பெற்றவன். அவன் பெண்ணாசையால் இராமன்மனைவி சீதையைக் கவர்ந்து சிறைவைத்தான். நல்ல அறிவாளி அந்தணனாகிய இலங்கையர்கோன், மதிகெட்டான். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மச்சரம், இடம்பம், ஈர்ஷை, தர்ப்பம், அராகம் ஆகிய பத்துத் தீய குணங்களும் நிறைந்த அவன்றன் பத்துத் தலைகளையும் ஒரே கணையால் பறித்து வீழ்த்தி, அரக்கர் குலத்தையும் அழித்து, அவர்களால் உலகம் வருந்திய தீமைகளைத் தீர்த்தான் இராமபிரான். அவனை வணங்குவாம். (கசு)

இராமன், இலக்குமணன், சீதை

கஎ. யார்தம் அன்னைகை அரணியம் பணிவுடன் ஏற்றார்,
யார்த லைவனை அத்தனை அன்புறத் தொடர்ந்தார்,
யார்இ மைப்பறு பணியுடன் அண்ணலைக் காத்தார்,
யார்இ ராமனும் சீதையும், இளவலும் அனையார்?

தசரதன், மகனைக் காட்டிற்கனுப்பச் சகியாமல் மயங்கி வீழ்ந்தான். "ஐய! தந்தையின் கட்டளை இது" என்று கைகேயி சொன்னாள். "தந்தையின் கட்டளை யில்லாவிட்டாலும் தாயாகிய உன் சொல் தட்டுவேனோ?" என்று இராமன் காட்டுக்குச் சென்றான். யார் இராமனுக்கிணை? இராமனே. அரண்மனைச் சுகத்தைத் துரும்பென நினைத்துத் தானும் மரவுரி யணிந்து சீதை, கணவனுடன் காட்டிற்குப் புறப்பட்டாள்; கணவனன்பே உயிரென மதித்தாள். இராவணன் சிறைவைத்த அசோக வனத்திலும் சத்தியாக்கிரகம் புரிந்து, பதிபக்தியே செய்தாள்; கற்பைக் காத்தாள். சீதைக்கிணை யார்? அவளே. இலக்குமணன் இராமனுடன் வனஞ்சென்று, உறக்கத்தையும் வெறுத்து அண்ணல் பணியைச் செய்தான்;

போர்க்களத்தில் அண்ணனுக்குத் துணைநின்று அறம் வெற்றிபெறச் செய்தான். தம்பி இலக்குமணனுக்கு இணை யார்? அவனுக்கிணை அவனே! (கஎ)

பரதன்

கஅ. அண்ண லற்றமன் னரசினை அரசெனப் புரவான்
புண்ணியன் றிருப் பாதுகை பூமுடி யணிந்தான்
மண்ணி னின்பத்தை மதித்திலன்; வாய்மையன் பினையே
கண்ணிற் போற்றிய பரதனைக் கருத்தினி லணிவாம்.

இராமன் அரசைப் பரதன் ஆள விடுத்தான். பரதன் "எனது அண்ணலே அரசிற் குரியான். அவன் அரியணையில் நான் அரசனென்றிருந்து அயோத்தியை யாளமாட்டேன்." என்று இராமனைக் கூட்டிவரக் காட்டிற்குச் சென்றான்; புண்ணிய புருஷனாகிய இராமன் அணிந்த பாதுகையைப் பூமுடியில் சுமந்துவந்து, அதையே அரியணைமேல் வைத்து, இராமபாத சேவையாகவே அரசைப் பாதுகாத்தான்; உலகின்பத்தை இன்பமென்று மதிக்காமல், இராம னன்பையே கண்போலப் போற்றினான். அத்தகைய பரதனை நமது கருத்தில் அணிந்து, நாமும் எல்லாரிடமும் சகோதர நேயத்துடன் நடப்போமாக! (கஅ)

அனுமன்

கக. ஆசை மாக்கடல் கடந்தனன்; அச்சுதன் பணிக்கே
ஓசை மாக்கடல் கடந்தனன்; அரக்கரை யொறுக்கப்
பூசன் மாக்கடல் கடந்தனன்; பொருவரு வீரா
வேச மாக்கட லானவன் வெற்றிமா ருதியே!

அனுமான் வீராவேசக் கடல்போன்றவன்; எக்காரியத்தையும் வெல்லும் தீரன்: ஒப்பற்ற திராவிட வீரன். அவன் பிரமசரியம் காத்து, ஆசையென்னும் பெரிய கடலைத் தாண்டினான்; சீதையைத் தேடும் பணியை அச்சுதனாகிய இராமனிடம் ஏற்றான்; அப் பணியை நிறைவேற்றவே திரையெழுந் தொலிக்கும் பெரிய கடலைத் தாண்டி, இலங்கை சேர்ந்து சீதையைக் கண்டு, கணையாழி கொடுத்தான்; பிறகு, அரக்கரை எதிர்த்துப் போரா டிப் பெரிய இரத்தப் போர்க் கடலைக் கடந்தான். அவனுக்குச் சமானமான வீரரில்லை. மான் வாழ்க! (கக)

கண்ணன்

உ௦. ஊதினன் குழல் உயிர்களின் உளத்தினைக் கவர்ந்தான்;
கோதி லார்தமைக் காத்தனன்; கொடியரைக் குமைத்தான்;
ஆதி பாரத மாக்கினன்; அறம்வளர் கண்ணன்,
ஓதினன் அருட் கீதையை உலகமின் புறவே!

கிருஷ்ண பகவான் கோகுலத்தில் பூங்குழல் ஊதி, கோபிமார், பசு பட்சிகள் ஆகிய எல்லா உயிர்களின் உள்ளத்தையும் தன்பாலிழுத்துப் பேரின்பமளித்தான்! கோபாலரையும் பாண்டவரையும் போன்ற குற்றமற்ற அன்பரை, அரக்கர் கொடுமையினின்றும் காத்தான்; பூதகி, சகடன், தேனுகன், அகாசுரன், பகாசுரன், கம்ஸன், துரியோதனாதிகள் போன்ற கொடியரை நலித்தான்; ஆதி பாரதப் போரை உண்டாக்கினான்; விசயனை நிமித்தமாத் திரமாகக் கொண்டு துரியோதனக் கும்பலை வீழ்த்தி, அறத்தை நிலைநிறுத்தி வளர்த்தான்; அந்த அறத்தை விளக்கும் பகவத் கீதையை உலகிற்குத் தந்தான், இத்தகைய கிருஷ்ண பகவானுடைய அருள் திறமையைப் புகழ்ந்து போற்றுவோம். (உ௦)

பாண்டவர்

உக. சூதி னுற்புவி கவர்ந்தனன் ; சொற்கட வாத
கோதை நற்றுயில் உரிந்தனன் மதியிலாக் கொடியோன் ;
பாத கத்துயர் அனைத்தையும் பரிவினுற் பொறுத்தார்—
மாத வன்பத மலர்தொழும் பாண்டவர் வாழ்க !

பாம்புக்கொடி உயர்த்திய துரியோதனன் அறவோரான பாண்டவரை, அரக்கு மாளிகையில் வைத்து எரிக்க முயன்றுன் ; சகுனியைக் கொண்டு மாயச்சூதாடி அவர் நாட்டைப் பறித்துக்கொண்டான் ; கணவர் சொல்லைத் தாண்டாத கற்பரசியான பாஞ்சாலியைக் கூந்தல்பற்றி யிழுத்துவரச் சொல்லித் தம்பி துச்சாதனனைக்கொண்டு துயிலுரிந்தான் ; தருமராதியோரைக் காட்டிற்கு விரட்டி, அங்கும் கொடுமை செய்தான் ; ஆசை, பொருமை, மமதை என்னும் பாதகக் குணங்களால் அவன் செய்த இடர்களையெல்லாம் பாண்டவர் பொறுத்தனர். துரியோதனனை நசுக்கி யெறிய வில்லும், கதையும், வீறும் உண்டு ; என்ருலும் அவர் உள்ளம் கருணையும், பரிவும் நிறைந்தது ; 'அதருமம் வீழும், தருமம் வெல்லும்' என்று அவர் நம்பினர் ; எல்லாம் வல்ல பரந்தாமன் பதமலரையே பற்றி வணங்கினர் ; இறுதியில் வென்றனர், பாண்டவர் வாழ்க ! (உக)

விசயன்

உஉ. நல்ல றம்பொறை தாங்கிய தருமனுக் கிளையோன்,
கொல்ல றங்கிளர் கும்பலைக் குமைத்திடக் கண்ணன்
சொல்ல றத்துடன், சிவனருள் சுடர்க்கணை தாங்கும்
வில்ல றத்தினன், விசயனின் வீரத்தைப் புகழ்வாம்.

தருமன் உத்தமமான சத்திய தருமத்தையும், சாந்தப் பொறுமையையும் கடைப்பிடித்தவன். அவனுக்கு இளைய தம்பி விசயன், தனக்கொவ்வாத நல்லோரைப் படைச் செருக்கினுலும், வஞ்சகச் சூழ்ச்சிகளாலும் கொன்றழிப்பதே அறமாகக்கொண்ட சுயோதனக் கும்பலை அழிக்க, கண்ணன் சொல்லிய கீதை வழி நின்று, அத்துடன் சிவன் அருளிய தவச் சுடர்மிக்க பாசுபதாஸ்திரமும் தாங்கினுன். வில்லறத்தினுல் அறப்போர் புரிந்து அதர்மத்தை வீழ்த்திய அந்த விசயனின் வீரத்தைப் புகழ்ந்து நாமும் வீரராக விளங்குவோம். (உஉ)

பெண் சக்தி

உந. தனலும் கற்பினுற் சானகி யிலங்கையைச் சுட்டாள் ;
குணமி லார்கெடத் திரௌபதி குறுநகை புரிந்தாள் ;
அணங்கு பார்வதி, தவத்தினுல் அரனுட னமர்ந்தாள் ;
வணங்கு வோம்இவர் மலரடி 'சக்தி ஓம்' எனவே.

ஞான ஜனகன் மகளும், வீரராமன் மனைவியுமான சீதை அசோகவனத்தில் சத்தியாக்கிரகம் புரிந்தாள். அவளுடைய கற்புக்கனலே இலங்கைப் போரைத் தூண்டி, அரக்கரை அழித்தது. தரும புத்திரர் இந்திரப்பிரஸ்த மாளிகையில் இராஜஸூய யாகம் நடத்தினர். துரியோதனனும் சகுனியும் மாளிகையின் வழுவழுப்புத் தரையில் மயங்கித் தடுமாறினர். பாஞ்சாலி, 'வாழ்விலும் இப்படியே இவன் மேடு பள்ளம் தெரியாமல் நடக்கிருன்' என்று தான் சிரித்தாள். அச் சிரிப்பே சூதாட்டம், துயிலுரிதல், வனவாசம், அஞ்ஞாத வாசம், கண்ணன் தூது, பாரதப்போர், கௌரவர் நாசம், தரும புத்திரர் வெற்றி ஆகிய சம்பவங்களாக வளர்ந்தது. பார்வதி தேவியானவள் கடுந்தவம்புரிந்து சிவனையே மணுளனுகப் பெற்று அவனுடன்

ஒன்ருய் அமர்ந்தாள். சீதை கற்புக்கனல், பாஞ்சாலி வீரக் கனல், பார்வதி தவக் கனல்! இந்த மூன்று பாரத குமாரிகளையும் 'ஓம் சக்தி' யென்று நாம் வணங்குவோமாக! (உ௩)

புத்த பகவான்

உச. பேதைச் செல்வத்தைப் பிணியெனத் துறந்து,மெய்த் தவமார்
மேதைச் செல்வத்தை மேதினிக் கினிதுறத் தந்தான்,
போதிச் செல்வனும் புத்தனைச், சித்தனை, ஞானச்
சோதிச் செல்வனைத் தொழுதவர் பதங்களைத் தொழுவாம்.

தந்தை இன்ப மாளிகை அமைத்துச் சுகபோகங்களை நிரம்பத் தந்தான். "இவை யெல்லாம் அநித்தியம், அஞ்ஞானம், பேதைமை, பந்தப்பிணி தந்து துயரில் ஆழ்த்துவன" என்று அனைத்தையும் ஒரே இரவில் துறந்து வனஞ்சென்று தவம் புரிந்தான் கௌதமன்; அத் தவத்தால் விளங்கிய உயர்ந்த ஒள்ளிய விஞ்ஞானச் செல்வத்தை ஆசையாணவ மோக பாசங்களற்று, அறிவும், அமைதியும், அருளும், அன்பும்கொண்டு இனிது வாழவேண்டி உல கிற்களித்தான். அவன் போதியடியில் வீற்றிருந்து தியானித்த தவச்செல்வன். புத்தன், பூரணம் பெற்ற சித்தன்; ஞான ஜோதியாகிய அரிய செல்வத்தைப் பெற்றவன். அவன் மலரடியைத் தொழுதவர் அடிகளைத் தொழுவாம். அவன் மலரடிக்கு அவ்வளவு சிறப்புண்டு. (உச)

மகாவீர பகவான்

உடு. பற்ற றுத்தவன் பத்தறம் போற்றிய பகவன்,
முற்றும் அன்புரு வானவன், அஹிம்ஸையின் முதல்வன்,
குற்ற மற்றசற் குணநிதி, அதிமகா வீரன்
பொற்றிருப் பதம் போற்றினர் புண்ணியம் புகழ்வாம்.

மகாவீரன் தேவதைகளால் 'அதி மகாவீரன்' என்று வணங்கப்பெற்ற சித்தன்; எல்லாப் பற்றுக்களையும் நீத்தவன்; வினைகளை உதிர்த்தவன்; பொறுமை, பணிவு, நேர்மை, தூய்மை, வாய்மை, அடக்கம், தவம், தியாகம், பற்றின்மை, பிரமசரியம் ஆகிய பத்து அறங் களையும் காத்தவன்; பேரின்பச் செல்வம், ஆன்ம பரிபூரணம், வீரியம், யோகத் திரு, புகழ், ஞானம், வைராக்கியம் ஆகிய பெருமைகள் நிறைந்த பகவன்; உள்ளும் புறமும் முற்றிலும் அன்பே வடிவாய் விளங்குவோன்; அஹிம்சா தர்மத்தை உபதேசித்த முதல்வன்; தலைவன்; குரு; குற்றமற்றவன், நற்குணச் செல்வன். அத்தகைய அதிமகா வீரனுடைய அழகிய பொன்னடிகளைப் போற்றினவர் புண்ணியராவார். அவர் புண்ணியத்தை நாம் புகழ்வோம். (உடு)

அசோகன்

உசு. புத்தர் பொன்மொழி புவியெலாம் பரவிட நின்ருன்;
கத்தி யின்றிநற் கருணையால் உயிர்களைக் காத்தான்;
குப்த மூரியன் குலமணி, அசோகனைப் போலே
இந்த லத்தினிற் சனகன்பின் யாவரே யிருந்தார்?

சந்திரகுப்த மூரியன், சாணக்கியன் உதவியால் மகத ராஜ்யத்தை வென்று முறையாக நீதி செய்தான். அவன் குலமணி அசோகனுவான். அவனுக்குப் 'பிரிய தர்சனன்' என்று காரணப் பெயருண்டு. அசோகன் கலிங்கப் போரில் தான் கொன்று குவித்த வீரர் கும்பலைக் கண்டு மனமிளகி, அஹிம்சை விரதம் பூண்டான்; துறவுடன் அருளாட்சி செய்தான்; புத்தர் சொன்ன பொன்மொழியாகிய தர்மபாதத்தை அனுட்டித்தான்; இலங்கை, பர்மா, திபேத்து,

யவனம் முதலிய நாடுகளிலும் புத்தமதத்தைப் பரப்பினுன்; பொதுஜனங்கள் பார்த்து நடக்க வேண்டி, அறக் கோட்பாடுகளைத் தூண்களில் செதுக்கிவைத்தான்; கத்தி யெடுக்காமலே அமைதியாக, அன்பும் கருணையும் கொண்டு மன்னுயிர்களைத் தன்னுயிர்போலே காத்தான். அசோகனைப் போன்ற மன்னர் ஞான ஜனகனுக்குப் பின்னே யாரும் இல்லை யென்னலாம். (உசு)

புகழ்பெற்ற அரசர்

உஎ. புஷ்ய மித்திரன், சதகர்ணி, புகழ்பெறுங் கனிஷ்கன்,
விஷ்ணு வர்த்தனன், விக்கிர மாதித்தன், சிமுகன்,
ஹர்ஷன், ஆதித்தன், கிருட்டின தேவன், சுவர்ண
வர்ஷத் தாற்கவி வளர்த்தநம் போஜன்வா ழியவே!

மூரிய மரபை வீழ்த்திப் பட்டத்திற்கு வந்து அந்தண்மை விளங்க அரசாண்ட புஷ்யமித்திரன், ஆந்திர சதகர்ணி, சிமுகன், சீனத்திலும் அரசு விரித்த கனிஷ்கன், விஷ்ணு வர்த்தனன், விக்கிரமாதித்தன், தனது செல்வத்தைக் குடிகளுக்குத் தான தருமமாகத் தந்த ஹர்ஷவர்த்தனன், ஆந்திர திலகமான கிருஷ்ணதேவராயர், ஆதித்ய குப்தன், மழைபோலப் பயன் கருதாது தாராளமாகப் பொன்னை அளித்துப் புலவர் கவிப் பயிரை வளர்த்த போஜ ராஜன் ஆகிய இவர்களெல்லாம் சிறந்த மன்னர்களாவார். இவர் பெயர் வாழ்க! (உஎ)

சித்தாந்தப் பெரியார்

உஅ. "அன்பெ னும்சிவம், அன்பினுல், அன்பருக் கறிவாம்;
இன்ப மேயது தில்லையாம் இதயத்தில் வளரும்;
துன்பப் பற்றினைத் துடைத்தருட் சுடர்வழி சேர்மின்!"
என்பர் தூயசித் தாந்தத்தின் இணையறு பெரியார்.

"அன்பே சிவம்; உள்ளுருகும் அன்பினுல் அன்பருக்கு அதுவே தன்னை அறிவிக்கும்; அப்பொருளே இன்பமானது. உங்கள் உள்ளமே தில்லைவெளி, அதில் அப்பொருளே நடராஜமூர்த்தமாகத் திருநடனம் செய்கிறது. ஆடுந் திருவடியைப் பற்றுங்கள்! ஆசை ஆணவம் ஆகிய வினைப் பற்றுக்களை ஒழியுங்கள்! அதற்கு அருளே வழி. இருள்வழி செல்லாதீர்கள்! அருட்சோதி வழியே செல்லுங்கள்! சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்படிகள் ஏறித் திருவருளும் அறிவும் பெற்றுச் சிவத்தை இரண்டறக் கூடுங்கள்!" என்று சித்தாந்தப் பெரியார் உபதேசித்தனர். (உஅ)

திருவடியார்

உகூ. உப்பும் அப்பும்போற் சிவத்துடன் ஒன்றிய தூயர்,
அப்பர் சம்பந்தர் சுந்தரர் வாதவூ ரடிகள்
ஒப்பு மெய்கண்டார், மந்திரம் உரைத்தமா மூலர்,
செப்பு மின்இவர் திருப்பெயர் சென்மமுய்ந் திடவே!

உப்பும் நீரும்போலே சிவத்துடன் இரண்டற ஒன்றுபட்ட பரிசுத்த முக்தரான, அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர்; அகச்சமயம், புறச் சமயம் எல்லாம் ஒப்பும்படியான சிவஞானபோதத்தை அருளிய மெய்கண்ட மாமுனிவர்; திருமந்திரம் என்னும் அற்புத யோக நூலருளிய திருமூல முனிவர் ஆகிய இவர்கள் திருநாமத்தைச் சொல்லுங்கள்! உங்கள் மானிடப் பிறவி உய்யவேண்டுமானுல் இவர்கள் திருநாமத்தைச் சொல்லி இவர்கள் காட்டிய வழியில் நடந்துவாருங்கள்! (உகூ)

ருo. வாய்ம னங்கடந் தருள்வழி வாய்ந்திடும் பொருளே
தோய ருட்சுடர் வள்ளலார், துறவிவெண் காடர்,
தாயு மானமா முனிவர்தந் தமிழெலாம் அமிழ்தம்;
தூய காதலோ டருந்துமின் பொருந்துமின் சுகமே!

சுத்த சமரச சன்மார்க்க தேசிகரான அருட்சோதி வள்ளலார், முற்றுந் துறந்த பட்டினத்தார், சித்தாந்த வேதாந்த சமரச ஞானியான தாயுமான முனிவர் ஆகியோர், சொல்லுக்கும் நினைப்பிற்கும் எட்டாத திருவருளாலேயே கைகூடும் பேரின்பப் பொருளிலேயே தோய்ந்து, ஜீவன் முக்தர்களாய் வாழ்ந்தவர். இவர்கள் செய்த தமிழ்ப் பாடல்கள் தேவாமிருதம் போன்றவை. அவற்றைப் பரிசுத்தமான பதியன்புடன் கற்றுஅனுபவியுங்கள்! சுகம் பெறுவீர்கள்! (ருo)

ருக. 'பத்தி செய்குமின்! பதமலர் பற்றிவி டடைமின்!
முத்தி யின்முதல் வன்ஹரி முகுந்த'னென் றோதும்
மத்து வர்உடை யவர்நிமை, மாதவ னன்பர்,
நித்த மும்நம துளமிசை நிலவுக மாதோ!

மத்வாசாரியார், இராமானுஜாசாரியார், கிருஷ்ண சைதன்யர், ஆழ்வார்கள், கபீர், துளசிதாஸ், மீராபாய், இரவிதாஸ் முதலிய எண்ணிறந்த விஷ்ணு பக்தர்கள், "ஹரி, முகுந்தன், நாரணன் ஆகிய விஷ்ணுமூர்த்தி நம் பந்தங்களை நீக்கி அருள்வழி காட்டி, முத்தியளிக்கும் முதல்வனுவான். அவனையே பக்தி செய்யுங்கள்! அவன் திருவடி மலரையே அன்பினுலும், தூய ஆர்வத்தாலும், பற்றிப் பேரின்ப வீடு பெறுங்கள்!" என்று உபதேசித்தனர். இந்தத் தெய்வக் காதலர் நமது இதயத்தில் நாடோறும் விளங்கி, நமது பதியன்பைத் தூண்டுவார்களாக! (ருக)

ஆதி சங்கரர்

ருஉ. "சாதி யற்றது; சமரசச் சுடரது; தருக்க
வாத மற்றது; மோனத்தில் வளரும்சுத் தான்மா
போத மானது; பொருளது நீ"யெனப் புகலும்
ஆதி சங்கரன் அறிவினுல் ஐக்கியம் அடைவோம்.

பகவான் ஆதி சங்கரர் ஜீவப்பிரமைக்கியத்தை உபதேசித்தார்; அதை விளக்கிக் கணக்கற்ற, அற்புதமான பாடல்களையும் விரிவுரைகளையும் செய்தார்; கீதை, பிரமசூத்திரம் உபநிடதம் இம்மூன்றிற்கும் அக்கொள்கைப்படியே வியாக்கியானம் செய்தார். 'ஒன்றே பொருள், பிரமம்; அது சாதிமத பேதமற்றது; தர்க்க வாதங்களில் அடங்காதது; வாய்மனங் கடந்தது. அஃது எல்லார் இதயத்திலும் 'நான்' என விளங்கும் சமரசச் சுடரானது; மனம் அடங்கிப் புத்தியில் இலயித்து, புத்தி இதயத்தில் இலயித்த உள்மோனத்தில் விளங்குவது. அது சிற்போதமாக, அருளுணர்வாக, தானே தானுக விளங்குவது. அதுவே உண்மை; அதுவே நீ; 'தத்வமஸி' என்பதே சங்கரர் உபதேச சாரம். அவர் சொன்ன ஞான மார்க்கத்தால் 'நான் பிரமம், எல்லாம் பிரமம்,' என்னும் ஐக்யானுபூதி எய்துவோம். (ருஉ)

ஜரதுஷ்ட்ரன், கிறிஸ்து, முஹம்மது நபி

ருரு. மிக்க வுள்ளன்போ 'டிறைவனை மேவுமின்' என்ற
சொக்கத் தூயனும் ஜரதுஷ் டிரன்;சிலு வையிலே
நிக்கெ லாந்தொழுந் தியாகத்தி யெனவளர் கிறிஸ்து;
மக்க மாநகர் நபிமணி வாழிய மாதோ!

மனோவாக்குக்காய சுத்தமே ஜெந்தவஸ்தாவின் சாரம். அதைப் புகன்றவர் ஜாரதுஷ்டிரர்; சொக்கத் தங்கம் போன்ற பரிசுத்தவான். சிலுவையே கிறிஸ்துவின் தருமச் சின்னம். அஃது அகங்கார நாசத்தைக் குறிக்கும். அதில் நாற்றிசை உலகெலாம் வியந்து பயந்து வணங்க, தியாகத் தீக் கொழுந்துபோல் கிறிஸ்து பகவான் விளங்கினர். அந்த மகா தியாகத்தினாலேயே சிலுவைக் குறியுடன் அவர் இன்று கோடிக்கணக்கான அன்பர் உள்ளத்தில் வளர்கிறார். மக்கமாநகரில் விளங்கி, ஹிராக் குகையில் தியானித்து, திருவருள் பெற்றுத் திருக்குரானை அருளிய நபிகள்நாயகமாகிய முகம்மது ஸல்லம், மதினா நகரத்தில் இஸ்லாமியக் குடியரசை நாட்டினார். இந்த மூன்று சமயாசிரியர்களும் மிகவுந் தீவிரமான உள்ளார்ந்த அன்புடனும், ஆர்வமுடனும், அடைக்கலத்துடனும் இறைவனை வணங்கி, பக்தி மார்க்கத்தை உபதேசித்தனர். இவர்கள் பெருமை எந்நாளும் உலகில் வாழ்க! (௩௩)

மகான்கள்

௩௪. தீர ராகிய நானகன், கோவிந்த சிங்கன்,
வீர ராமதாஸ் விரும்புசி வாஜிராம் மோஹன்,
ஆரி யர்க்குயி ரானத யானந்தன், ஞான
வாரி யாம்குரு பரமஹம் ஸன்புகழ் வாழ்க!

'ஸத்ஸ்ரீ அகால்' என்னும் முழக்கத்தால் பாஞ்சாலத்தைத் தியாகத்திற் கெழுப்பிய மகான் குரு நானகர், சுதந்தரத்திற்கும் சுதர்மத்திற்கும் தர்மாவேசத்துடன் போர்புரிந்த தவசீலனாகிய குருகோவிந்தன், மந்திர சித்தனான சமர்த்த குரு இராமதாஸ், அவனருளால் உதித்துத் தருமத்தையும் சுதந்தரத்தையும் காத்து ஒரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்திய சத்ரபதி சிவாஜி, உடன்கட்டை, பெண்ணடிமை, மூடக்கொள்கைகள் அனைத்தையும் ஒழித்து, பிரமசமாஜம் ஏற்படுத்தி, சமயம், கல்வி, சமுதாயம், அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும் சீர்திருத்தம் செய்த இராஜாராம் மோஹன்ராய், ஆரியர்க்குச் சாதிமத பேதமில்லாமல் வேத வாழ்வை விளக்கி, ஆரிய சமாஜத்திற்கு உயிர்போல விளங்கும் தயானந்த முனிவன், சக்தியருளால் சர்வமத சமரசக் கொள்கைகளை எளிய முறையில் உபதேசித்த ஞானக்கடலும், விவேகானந்தர் குருவுமான இராமகிருஷ்ணபரமஹம்ஸர் ஆகிய ஆத்ம தீரர்களும், சிறந்த அருள்வணக்கம் செய்த தெய்வ பக்தர்களுமான மகான்களெல்லாம் நமது நாட்டிற்குப் புத்துயிரும் புதிய சக்தியும் அளித்தவர்கள். இவர்கள் புகழ் என்றும் வாழ்க! (௩௪)

சத்தியராஜன்

௩௫. இனைய வீரரும் இறைவரும் பகவரும் இலகும்
புனிதமாம் அருட் குலத்தினில் இறுதியாய்ப் பூத்தான்—
தனையொவ் வாத்திரு மிகுந்தவன் சத்தியன் என்போன்
இனிய வன்வள நாட்டினை இசைத்திடு வோமால்.

இப்படிப் பெருமைபெற்ற மகாவீரர்கள், நீதி மன்னர்கள், அருட்பெரியார்கள், தெய்வ மனிதர்கள் விளங்கிய அருட்குலம் நீண்டு செழித்தோங்கியது. அதில் கடைசியாகத் தோன்றியவன் சத்தியராஜன். அவன் ஒப்புயர்வில்லாத அருட்செல்வன், பொருட் செல்வன், அறிவுச் செல்வன். அவனே புண்ணியபூமி முழுதையும் ஒரு குடைக் கீழ் ஆண்டான். அவன் ஆண்ட புண்ணிய நாட்டின் புகழை இனிச் சொல்லுவாம். (௩௫)

அருட்குலப் படலம் முற்றிற்று.

௪. புண்ணியபூமிப் படலம்*

௧. வீரரின் அன்னை, ஞான விளக்கொளி பரவு கின்ற
பாரினுக் கன்னை, பொன்செய் பசுவளத் திருவின் ஓங்கும்
சீரினுக் கன்னை, செங்கோற் செழிப்பினுக் கன்னை, யோக
பூரணர்க் கன்னை, எங்கள் புண்ணிய பூமி வாழ்க!

சத்தியராஜன் அரசாண்ட எமது பாரத நாடாகிய புண்ணிய பூமி நீடூழி வாழ்க! அதுவே தரும வீரருக்குத் தாய்போல்வது. அதுவே, ஆத்மஞானச் சுடர் பரப்பி உலகிற்கே ஞானத்தாயாக விளங்குகிறது; மலர், கனி, தானியங்கள் ஆகிய பொன்வளம் பொலியும் பசுந்திருவால் உயிர்களை ஊட்டிவளர்க்கும் இயற்பெருமைக்குத் தாயாக விளங்குகிறது. அதுவே, உயிரினும் அறத்தையே பெரிதாகப் போற்றும் செங்கோல் ஆட்சியால், மக்களுக்கு எல்லா நலங்களும் செய்யும் செழுமைக்கு அன்னை; யோகத்தில் ஊன்றி நிலைபெற்ற பரிபூரணருக்கு அன்னை. புண்ணிய பூமாதா வாழ்க! (௧)

௨. வரையெலா முனிவர் கூட்டம்; வனமெலாங் குருகு லங்கள்;
திரையெலாம் கப்ப லோட்டம்; திசையெலாம் திருவின் காட்சி;
கரையெலாம் செல்வக் குப்பை; கவின்மலர், கனிகு லுங்குந்
தரையெலாம் அமுத வாரி தழைத்துயிர் வளர்க்கு நாடே!

இப்புண்ணிய பூமியில் மலைகளிலெல்லாம் தவமுனிவர் கூட்டம்; வனங்களில் எல்லாம் பிரமசாரிகள் கல்விபயிலும் குருகுல வித்தியாலயங்கள்; திரைகடலில் நாட்டுக் கைத்தொழிற் பொருளைக் கொண்டு சென்று பொற்குவியலுடன் வரும் கப்பல்களின் ஓட்டம்; எந்தத் திசையைப் பார்த்தாலும் இயற்கையழகின் காட்சி; கடற்கரைகளில் எல்லாம் வாணிகத்தால் வந்த செல்வத்திரள்கள்; கனியும், மலரும், பயிர்களும் அழகாகச் செழித்த தரைகளிலெல்லாம் அமுத வெள்ளம் பொங்குகிறது. இவ்வாறு தவம், குருகுலக் கல்வி, வாணிகச்செல்வம், இயற்கைவளம், தொழிற்செல்வம், நிலவளம் ஆகியவற்றால் இந்நாடு உயிர்களை ஊட்டி வளர்க்கும் அன்னைபோல விளங்குகிறது. (௨)

௩. வெய்யிலு மழையுங் காற்றும் விரும்பிய வளமை நல்கச்
செய்யவள் உலாவுஞ் சோலை; செழுமலர்த் தேனை யுண்டு
மையரி யினங்கள் ஊத, மருதயாழ் முழங்கக் கண்ணன்
கைவளர் முரளி பாடக் கலைநடம் புரியு நாடே!

நல்ல வெய்யில்; பருவக் காற்றுகளால் நல்ல மழை. இவை மாந்தர் விரும்பிய நீர்நில வளங்களைத் தருகின்றன. எங்கும் பசுஞ்சோலைகள். அவற்றின் அழகில் திருமகள் உலாவுகிறாள். அங்கே செழித்த மலர்த்தேனுண்டு கரிய வண்டினங்கள் ஓம் ஓம் என்று ஒத்தூதுகின்றன. அதற்கிசைய மருதயாழ் முழங்குகின்றது. அதற்கிசையக் கண்ணன் முரளிகானம் செய்கிறான். இக்காட்சியைக் கண்டு கலைமகள் இன்பக் கூத்தாடுகிறாள். இத்தகைய வான்வளமும், கதிர்வளமும், சோலைவளமும், அழகும், பாட்டும், திருவும், கலையும் விளங்கும் நாடு இப் புண்ணியபூமி. (௩)

---

* இப்படலம் அறுசீர் ஆசிரிய விருத்தங்களால் ஆனது. பண் இந்தோளம். சந்தம் தானன தனனதான, தனதன தனனதான. கல்யாணி, பூரிகல்யாணி, பைரவி, காம்போஜி, கேதாரகௌளம் முதலிய இராகங்களில் பாடுக; இவ்வாறே மற்றப் படலங்களில் வரும் அறுசீர் விருத்தங்களையும் பாடுக!

ச. இருதொடர் கடலோ ரத்தில் இலகுகன் னியை வணங்கப்
பருவதப் படிக ளேறப் பனிவரை வீற்றி ருந்தே,
குருசிவ சக்தி யிந்தக் குவலயக் கோயி லெங்கும்
அருளர சாட்சி செய்யும் அரியணை போன்ற நாடே!

பாரததேசம் ஓர் அரியணைபோன் றமைந்திருக்கிறது. அந்த அரியணை முனையில், இந்து மகா சமுத்திரக் கரையில், கன்னியாகுமரி நீண்ட தவம் புரிகிருள். இரண்டு புறமும் மேற்குத் தொடர்ச்சி, கிழக்குத் தொடர்ச்சி மலைகள் நீலகிரியில் சேர்ந்து கைகூப்பிக் குமரியைத் தொழுவதுபோ லிருக்கின்றன. இரண்டும் அரியணையின் கைப்பிடிச்சுவர்போ லமைந்துள்ளன. நீலகிரிமலை, விந்தியமலை, சாத்பூராமலைகள் அரியணைப்படிகள்போ லமைந்துள்ளன. இமயமலையே அரியணையின் பீடம். அதில் விமானம் எழுப்பியதுபோல் கைலையும் கௌரிசங்கரமும் விளங்கும். அவற்றில் என் பரம குருவான சிவனும் பராசக்தியான உமையும் எழுந்தருளி இந்த உலகாலயமெங்கும் அருளாட்சி செய்கிருர்கள். உலகத் தலைவனும் தலைவியுமான அவர்களுக்கு அமைந்த அரியணை போன்றது பாரததேசம். (ச)

ரு. திருநதி, விமலை க்ருஷ்ணு, பொன்னி, பெண், வைகை தாம்ர
பருணிகி ழக்கே; மேற்கே பாய்ந்திடும் சிந்து தப்தி,
நருமதை வளர்க்கும் பச்சை நல்வளத் திருவி னேங்கும்
மருதயாழ் கேட்டுக் கோக்கள் மடிசொரிந் துலாவு மன்றே!

கங்கை, கோதாவரி (விமலை), கிருஷ்ணு, மகாநதி, காவேரி, வைகை, தாமிரபருணி— இவை கிழக்கே பாய்ந்து, வங்காளக்குடாவில் விழும் நதிகள். மேற்கே சிந்து, தப்தி, நருமதை ஆகிய மூன்று நதிகள் அரபிக் கடலில் விழுவன. இந் நதிகளெல்லாம் நாட்டுயிர்களுக்கு ஆதாரமான பசும் பயிர்களை வளர்க்கின்றன. இந்த நல்வளத் திருவில் மருதயாழ் முழங்குகிறது. அந்த யாழொலி கேட்டு மகிழ்ந்த பசுக்கள், தாமே மடிசொரிந்து பால் கொடுத்து நாடெங்கும் சுயேச்சையாகத் திரிகின்றன. (ரு)

சா. ஆறணி வெளிகள்; செங்கால் அன்னங்கள் ஆடும் பொய்கை;
சோறணி பழனம், தெய்வச் சுடரணி திருத்த லங்கள்;
வீறணி பிரம சாரி விரிகலை பயிலுஞ் சாலை;
பாரணிக் கழகு செய்து பயனுற விளங்கு நாடே!

ஆறுகள் பாயும் சமவெளிகள், அன்னங்கள் ஆடும் தாமரைக் குளங்கள், ஏராளமான உணவுப் பயிர்களை அணிந்த விளைவயல்கள், தெய்வச்சோதி விளங்கும் திருத்தலங்கள், உடலும் உள்ளமும் செழித்து வீறுபெற்ற பிரமசாரிகள் காலத்திற்கேற்ற கலைகளைப் பயிலும் வித்தியாசாலைகள்! இவையெல்லாம் பொதுஜனங்களுக்குப் பலவகையிற் பயனேங்க விளங்குகின்றன. உலகம் இயற்கை யழகு பெற்றது. அந்த அழகிற்கு இவை அழகு செய்து விளங்குகின்றன. (சா)

எ. தத்தை, சிச்சிலி, குயில்கள், சாதகம், கருடன், பூவை,
முத்தமிழ் பயிலும் ஓசை; மோகனக் குழலும் யாழும்
மத்தளந் தழுவும் ஓசை; மங்களக் கருவி யோசை;
வித்தகர் அருட்பா ஓசை விண்ணெட்டப் பண்செய் நாடே!

இந்த நாட்டில் கிளி, சிச்சிலி, குயில், சாதகபட்சி, கருடன், நாகணவாய்ப்புள் ஆகிய பறவைகளெல்லாம் செவிக்கினிய முத்தமிழோசையைப் பயிலுகின்றன. இஃது இயற்கை இசையரங்கு. நெஞ்சை வசப்படுத்தும் குழல், வீணை இரண்டையும் தழுவி மத்தளம்

ஒலிக்கிறது. நாதஸ்வரமாகிய மங்கள வாத்தியம் முழங்குகிறது. அறிவும் ஒளியும் பெற்ற புலவர்கள் அருட்பாடலைப் பாடுகின்றனர். இந்த இனிய ஓசைகளெல்லாம் விண்ணெட்டப் பண் முழங்கும் நாடு இதுவே. (எ)

அ. ஓங்குறு தொழில்க ளோசை, ஓவெனும் கடைக ளோசை,
ஆங்குறு வணிகர் செல்வம் அளந்துபை கட்டும் ஓசை;
நீங்கறு வண்மை யாளர் நீடிசை பெருகும் ஓசை;
பாங்குறு விழாக்க ளோசை பரவைபோல் ஒலிக்கு நாடே!

நாடெங்கும் பல தொழில்களின் ஓசை, கடைவீதிகளில் ஓவென்னும் வியாபாரக் கூச்சல், தனவணிகர் செல்வத் திரளை 'கிண் கிண்' என்று அளந்து குவிக்கும் சத்தம், ஈகை மிக்க செல்வர் ஓயாமல் தானதருமங்களைச் செய்து, பொதுஜனங்களின் நீண்ட புகழைப் பெறும் வாழ்த் தொலிகள், சமுதாய மேன்மைக்கு இசைந்த திருவிழாக்கள் பொங்கும் இன்ப ஓசை — இவை யெல்லாம் இந்நாட்டில் கடலோசைபோல் ஒலித்துக் கொண் டிருக்கும். (அ)

கூ. பொன்னெலார் வயல்கள் ஓங்கிப் பூந்திருப் பொழில்கள் ஓங்கித்
தென்னை, மா, பனசம், வாழை, செங்கரும் போங்கி யெங்கும்
கன்னலுந் தேனும், பாலுங் கனிரச வளமு மோங்கி
அன்னம் பாலிக்கு நாட்டின் அழகெலாம் அமுத வூற்றே!

எங்கும் பொன்போன்ற நெல் விளையும் வயல்கள் ஓங்கிச் செழிக்கின்றன; அவற் றிற்குமேல் பல நிறப் பூக்கள் அழகாக மலர்ந்த வனங்கள்; அவற்றிற்குமேல் செங்கரும்பு, வாழை, பலா, மா, தென்னை முதலியன இனிது செழித்தோங்குகின்றன. இவை தேனும், சர்க்கரையும், இரசமும், பசுமையுண்டு வளர்ந்த பசுவின் பாலும் அளித்துச் செழித்தோங்கி, தாராளமாக எல்லாரும் உண்ண அன்ன மளிக்கின்றன. இந்நாட்டின் இயற்கையழகெல் லாம் உயிரை வளர்க்கும் அமுத வூற்றே. (கூ)

பாரத சமுதாயம்

கo. வேதமும் வாழ்வும் ஒன்றும்; வீரமும் அறமும் ஒன்றும்;
காதலும் கற்பும் ஒன்றும்; கண்ணுடன் கருணை யொன்றும்;
போதமும் குணமும் ஒன்றும்; புதுமையும் பண்டும் ஒன்றும்;
நீதியும் அருளும் ஒன்றும் நெறியினிற் பெரிய நாடே!

இந்நாட்டு மக்கள் நன்னெறி யொழுக்கத்தில் சிறந்தவர்கள். அவர்கள் கற்ற வேத வழியே வாழ்க்கையும் பொருந்தியிருக்கும்; அவர்கள் வீரத்துடன் அறமும் பொருந்தும். அவர்கள் அதர்மப்போர் புரியமாட்டார்கள்; அறங்காக்கவே வீரத்தைப் பயன்படுத்துவார் கள். இருபாலாரும் தூய காதல் மணம் புரிவர். அவர்கள் மணவாழ்வில் மாசற்ற கற்புறுதி இணைந்திருக்கும். அவர்கள் கண்களுடன் கருணையும் பொருந்தியிருக்கும். ஏழை யெளியவர் களுக்கு இரங்கித் தம்மாலானதை அன்புடன் அவர்கள் தருவார்கள். அவர்கள் குருவிடம் உபதேசம் கேட்பார்கள், தாமும் போதிப்பார்கள். அதன்படியே அவர்கள் நற்குணமும் சேர்ந்து விளங்கும். நன்மொழிகளை அவர்கள் தாமே முதலில் அனுஷ்டிப்பார்கள். பழைய பெரியார் கூறிய அத்யாத்ம சாதனங்களும், புதிய காலத்திற்கேற்ற தொழில், ஆராய்ச்சி முத லியனவும் அவர்களிடம் பொருந்தியிருக்கும். அவர்களிடையே நீதியுடன் கடவுள் அருளும் இணைந்து, உண்மையை விளக்கும். இவ்வாறு பாரததேசம் சுத்த சன்மார்க்கத்திற் பெரிய நாடாகும். (கo)

கக. ஊகமுங் கலையுங் கல்வி யொழுக்கமும், பரமா னந்தத்
தாகமுந் தவமும், வீரத் தனலுற முயலும் வெற்றி
வேகமு முடைய தீரர், விரிநில முதவு கின்ற
போகமுந் துய்ப்பர்; யோகப் பொருளினைப் பொருந்தி வாழ்வார்.

இந்நாட்டு மக்கள் ஞான தீரர்கள், அவர்கள் மதியூகம், பலகலைத் திறமை, நல்ல கல்வி, சீரிய ஒழுக்கம், பேரின்பத் தாகம், அதற்கேற்ற தவம், வீரக் கனலுடன் அயராமல் முயன்று உலகை வெல்லும் தீவிர வேகம் உடையவர்கள். அவர்கள் உள்ளே தியான யோகத்தால் அடையும் சுத்தான்மப் பொருளைக் கூடிப் பரம சாந்தராக வாழ்வார்கள்; ஆனால், அப்படியே யோகத்தில் இலயித்துவிட்டு, நாட்டையும் உலகையும் மறக்கமாட்டார்கள்; இடமகன்ற உலகம் தருகின்ற எல்லாப் போகங்களையும் யோக வுணர்வுகொண்டு புசிப்பார்கள். இகம், பரம், கடவுள், உலகம், யோகம், போகம், தவம், வாழ்க்கை எல்லாம் அவர்களிடம் சேர்ந்து விளங்கின. (கக)

கஉ. புலன்களில் அடக்க மிக்கார்; புந்தியிற் றெளிவு மிக்கார்;
உளங்களில் அன்பு மிக்கார்; உயிர்க் கெலாம் அருளே மிக்கார்;
வளங்களில் வண்மை மிக்கார்; வாழ்க்கையில் அழகு மிக்கார்;
நலங்களில் இறைவ னுக்கே நன்றிசெய் தொண்ட ரன்னோர்.

ஐம்புலன்களிலும் வைராக்கியமான அடக்கம் மிக்கவர்; புத்தியில் அறிவோங்கித் தெளிந்தவர்; உள்ளத்தில் ஆண்டவனுக்கும் உலகிற்கும் அன்பு மிகுந்தவர்; உயிர்களுக்கெல்லாம் கருணையே மிகச்செய்பவர். தனதானிய வளங்கள் பெருகியபோது அவற்றைத் தாராளமாக வேண்டியோருக்கு வழங்கும் ஈகை மிகுந்தவர்; வாழ்க்கையில் வெறுப்பில்லாமல் அழகைப் போற்றுபவர். அழகைப் போற்றினால் இனிமையும் தூய்மையும் மிகும்; வாழ்க்கை விரிவாகும். தமக்கு நன்மைகள் வந்தால் அவை இறைவனருளால் வந்தனவே என்று அவனுக்கே நன்றி செலுத்தும் திருத்தொண்டர் இந்நாட்டினர். (கஉ)

கங. ஈதலில் இன்பங் கண்டார்; இன்பத்திற் கடவுள் கண்டார்;
மாதரில் அன்னை கண்டார்; மண்ணிடை விண்ணைக் கண்டார்;
காதலிற் கலையைக் கண்டார்; கலையினில் வாழ்வைக் கண்டார்;
சாதலும் பிறப்பு மில்லாத் தம்மையே கண்டார் மாதோ!

பாரத சமுதாயத்தார், தியாகத்திலேயே ஈதல் இன்பங் கண்டவர்; தமது இதயக் குகையில் வளரும் தூய இன்பத்தில் இறைவனைக் கண்டவர்; பெண்டிரில் சக்தி அன்னையைக் கண்டவர்; உலகில் விண்ணரசைக் கண்டவர்; மாசற்ற இயல்பான காதலைக் கலைவிரிவாக்கினவர்; கலையின்பத்தில் வாழ்வை நாட்டினவர். "வாழ்வே கலை, கலையே வாழ்வு, இறப்பும் பிறப்பும் பஞ்சபூதச் சட்டையான உடலின் மாற்றமே. அவை, சுத்தான்மாவான தமக்கில்லை" என்பார். 'தாம் பிறப்பில்லாத சுத்தான்ம சைதன்யம்' என்று கண்டவர் இந்தப் புண்ணிய நாட்டார். (கங)

கச. வெண்மதி, மரைகள் பூத்து, வீங்கிரு கனிக ளேந்தி,
ஒண்கொடி மின்ன லேறி, மயிலென உலாய தன்னார்;
மண்ணில மோங்க வந்த மங்கலத் திருவின் மாதர்
கண்ணொளிர் தெய்வக் கற்பின் கனலினை வணங்கு வோமால்.

பெண்டிர் உலகம் உயிர்பெற்றோங்கி வளரவே உண்டான மங்கலத் திருவேயாவார். அவர் வெள்ளிய முழுமதி முகத்தினர்; அதில் கமலங்கள் பூத்ததுபோன்ற விழிகளும், செவ்

வாயும் உடையவர் ; அம்முழுமதி தனங்களாகிய இரண்டு பெரிய கனிகளைச் சுமந்து, ஒள்ளிய மின்னற்கொடியில் ஏறி, மயில்போல அழகாக உலாவுவதுபோன்ற மேனியழகும், சாயலும், தோற்றமும் உடையவர், இப் பத்தினிப் பெண்களிடம் பொலியும் தூய கற்புக் கனலை வணங்குவோம். (கச)

கடு. மலைதரு வளங்க ளீவார் ; மருதநல் வளங்கள் ஏற்பார் ;
அலைதரு வளங்க ளீவார் ; அரியகான் வளங்க ளேற்பார் ;
கலைதரு வளங்க ளீவார், காசினிப் புகழை யேற்பார் ;
நிலைதரு ஞான மொன்றி நிகரென வாழுந் தூயர்.

இந்நாட்டார் நிலையான ஆத்ம ஞானத்தில் ஒன்றுபட்டு எல்லாரும் சரிநிகர் சமானம் என்று வாழும் பரிசுத்தர் ; ஒருவருக்கொருவர் உதவியாகவே வாழ்வார். மலையில் உள்ளவர் மூங்கில், தந்தம், தேன் முதலிய வளங்களைத் தந்து மருதநிலத்தாரிடம் நெல் கரும்பு வாழை முதலிய உணவுப் பொருள்களை ஏற்பார். நெய்தல் நிலத்தில் இருப்பவர், பவளம், முத்து முதலிய கடல்வளங்களைத் தந்து, முல்லை நிலத்தாரிடம் வரகு, சோளம், முதலிய கான் வளங்களை ஏற்பார். இந்த நாட்டில் 64 கலைகள் வளரும். அக் கலைவளங்களை உலகிற்குத் தந்து இந் நாட்டினர் உலகின் புகழை ஏற்பார். (கடு)

கசு. உரிமையைப் பறிப்போ ரில்லை ; உரிமையை யிழப்போ ரில்லை ;
சிறுமைக ளிழைப்போ ரில்லை ; சீர்மையைத் துறப்போ ரில்லை ;
வறுமையை யழைப்போ ரில்லை ; தொழிலினை மறப்போ ரில்லை ;
திறமைசால் அறிவும் வீறுந் திருவுட னோங்கு நாடே.

இந்த நாட்டில் வெற்றித் திறமை பெற்ற அறிவும், வீரதீரமும், ஆற்றலும், முயற்சியும், செல்வமும் ஓங்குகின்றன. ஆதலால், மனிதருக்குரிய பிறப்புரிமையைப் பறிக்கும் கொடிய பகைவர் இங்கே இலர். அப்படி அன்னியர் உரிமையை அழிக்க வந்தால், இந் நாட்டினர் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். எதிர்த்துப் போராடிச் சுதந்தரம் பெறும் ஆற்றலுடையவர் இந்நாட்டார். சாதி மத வேறுபாடுகள் பாராட்டி யாரும் யாருக்கும் சிறுமை செய்ய முடியாது. எல்லாரும் சீர்மையும் நேர்மையுங் கொண்டு பிறரை மதித்துச் சம நோக்குடன் வாழ்வார். இந்நாட்டினில் மனத் துறவையே போற்றுவர் ; யாரும் சமுதாயத்திற்குப் பயனுள்ள தொழில்களை மறக்கமாட்டார். அதனால், இங்கே வறுமையைக் கூவி யழைக்கும் சோம்பேறிகள் யாரும் இலர். (கசு)

கஎ. இரப்பவர் இல்லை. ‘இல்லை’ என்பவ ரில்லை ; உள்ளங்
கரப்பவ ரில்லை ; பேதங் காண்பவ ரில்லை ; அன்பைத்
துறப்பவ ரில்லை. வஞ்சர் தொல்லையும் இல்லை. தன்னை
மறப்பவ ரில்லை. உண்மை மறுப்பவ ரில்லை மாதோ !

இந்நாட்டில் பிறரை இரந்து பிழைக்கும் ஏழைகள் இலர். சமயத்தில் உதவி வேண்டினல் ‘இல்லை’ யென்னும் கருமிகளும் இலர். உள்ளதை ஒளித்துப்பேசும் பொய்யர் இலர். சாதிமத பேதங் காண்பவரும் இலர். எல்லாரும் தமக்கு நிகர் எனும் அன்பைத் துறப்பவரும் இலர். நயவஞ்சகர் சூழ்ச்சியால் வரும் தொல்லை யில்லை. தம் உண்மையான சுத்தான்மாவை மறப்பவர் இல்லை ; அந்த உண்மையை மறுக்கும் நாத்திகரும் இல்லை. (கஎ)

கஅ. தருமத்தால் வெற்றி ; யோக சாதன மாகச் செய்யுங்
கருமத்தால் வெற்றி ; செஞ்சொற் கவிகளால் வெற்றி ; ஆன்ம
வொருமையால் வெற்றி ; அன்பின் உள்ளத்தால் வெற்றி ; தெய்வப்
பெருமையால் வெற்றி யோங்கிப் பிறங்கிய திந்த நாடே !

இந்த நாடு அறத்தைப் போற்றும்; வாழ்வின் கடமைகளைக் கர்மயோக சாதனமாகச் செய்யும்; செஞ்சொற் கவிகளைப் போற்றும்; ஆன்மநேய ஒருமையிற் சேர்ந்து வாழும்; உள்ளத்தில் அன்பை வளர்க்கும்; தூய வாழ்வால் தெய்வத் தன்மை பெற்றுச் சிறக்கும். அரசியல், சமூகம், சமயம், கல்வி, கலை, தொழில், வாணிகம் முதலிய எல்லாத் துறைகளி லும் இந்நாட்டினர் வெற்றிபெற் றோங்குகின்றனர். (கஅ)

கசு. *வீரரின் உயிரே, ஆன்ம வெற்றியின் விளக்கே, இந்தப்*
பாரினுக் கெல்லா ஞானப் பரிதியே, சுருதித் தாயே!
தீரர்கள் போற்றி செய்யத் தேவர்கள் வாழ்த் தெடுக்கப்
பூரண யோக சக்தி யாகநீ பொலிக மாதோ!

புண்ணிய பூமியே, வீரருக்கு உயிர்போன்றவளே, ஆத்ம சக்தியின் வெற்றிக்கு விளக்கானவளே, உலகிற்கெல்லாம் ஞானசூரியன் போன்றவளே, அருட்பாடல்களான சுருதிகளைத் தந்த தாயே, தீரர்கள் போற்றித் துதிக்க, தேவர்கள் வாழ்த்த, பரிபூரண சித்தி யைத் தரும் யோக சக்தியாக நீ என்றும் உலகில் விளங்குவாயாக! (கசு)

உ0. *காசினிக் கெல்லாந் தெய்வக் கதிரொளிக் கனலை நன்று*
வீசிநீ வாழ்க, மண்ணில் விண்ணர சிலகச் செய்வாய்.
மாசிலாத் தேவ மாந்தர் மரபினைப் பெற்ற தாயே,
ஆசிதா வுனது சீர்த்தி யணிகவி பொலிய வென்றும்!

பரிசுத்தமான தெய்வ மனிதர் குலத்தை ஈன்ற பாரதத் தாயே, உலகிற் கெல்லாம் தெய்வக் கதிர் பரப்பும் யோகக் கனலை எந்நாளும் வீசி நீ வாழ்க! இந்த மண்ணுலகில் விண் ணரசு இறங்கி விளங்கச் செய்வாயாக! உனது புகழ், உனது சீர்த்தியை அணிந்த காவியம் இஃது. இஃது உலகில் எந்நாளும் பொலிய உன் ஆசியைத் தா! (உ0)

புண்ணியபூமிப் படலம்
முற்றிற்று.

ரு. சித்திநகரப் படலம்*

ஊர்ச் சிறப்பு

க. அத்தகை நாட்டுடை அரசன், அன்பர்கோன்,
சத்தியன் விளங்கிய தரும பீடமாம்,
சித்திமா நகரணிச் சிறப்பைப் பாடிட
முத்தமிழ் வாணியை முன்னு வாமரோ!

சென்ற படலத்தில் புண்ணிய பூமியின் பெருமையை அறிந்தோம். அத்தகைய நாட்டை ஆண்ட அரசன் அன்பிற் சிறந்தவன், அன்பர் தலைவன், சத்தியன். அவன் விளங்கிய தலைநகரம் சித்திமாநகரம். அது தரும தேவதையின் இருப்பிடம் போன்றது. அந்நகரத்தின் சிறப்பை வர்ணிக்க முத்தமிழ்க் கலைவாணியைத் தியானிப்பாம். (க)

உ. மண்டல மடந்தையின் மதிமு கங்கொலோ?
விண்டலத் தேவர்கள் விளங்கும் வீடிதோ?
பண்டொடு புதுமையும் பயிலும் தாயகம்
தெண்டிரை முரசதிர் சித்தி மாநகர்!

தென் திசைக்கடலான இந்து சமுத்திரம் முரசொலித்து இந்தச் சித்திமாநகரின் புகழை உலகிற்குச் சொல்லுகிறது. இந்த நகரம் புவிமகளின் எழில்பெற்ற மதிமுகமோ? சுவர்க்க தேவதைகள் வசிக்கும் வானகமோ? பண்டைக்கால அத்யாத்ம ஞானமும், புதிதாக அறிஞர் ஆராய்ந்த இயற்கலை யறிவும் இந்த நகரத்தையே தாயகமாகக்கொண்டு வளர்கின்றன. (உ)

ங. பூமகள் வாசமோ? புகழின் வாகையோ?
நாமகள் வீணையோ? நாட்டின் உள்ளமோ!
பாமணம், பூமணம் பருகுந் தென்றலில்
ஓமொளிக் கொடிவளர்ந் தோங்கு மாநகர்.

இந்த நகரெங்கும் பாட்டு முழங்குகிறது, பூஞ்சோலைகள் பொலிகின்றன. பாமணத்தையும் பூமணத்தையும் தென்றல் அள்ளி வீசுகிறது. அந்தத் தென்றலில் நகரின் கொடி ஓங்கி வளர்ந்து விளையாடுகிறது. இக்கொடியில் சூரியனும் அதன் நடுவே ஓம் என்னும் பிரணவமும் எழுதப்பெற்று விளங்கும். இதுவே ஓம் ஒளிக்கொடி, இத்தகைய நகரம் தனது செல்வச் செழிப்பால் இலக்குமி வாசம்போலும், வீரத்தால் புகழன்னைக்கே வெற்றி மாலைபோலும், கல்வி கலைகளால் நாமகளுக்கே மங்கல வீணைபோலும், நாட்டுவாழ்விற்கே உள்ளம்போலும் விளங்குகின்றது. இதைக் கண்டவர் இவ்வாறே வியப்பர். (ங)

வளமை

ச. கவினெலாந் திரண்டிதன் காட்சி யானதோ?
தவமெலாந் திரண்டிதன் தரும மானதோ?
சிவமெலாந் திரண்டிதன் செல்வமானதோ?
புவியெலாந் திரண்டிதன் புகழைப் போற்றுமால்!

---

*இப்படலம் கலிவிருத்தங்களாலானது: துள்ளிசை. **சந்தம்:** தன்னன, தானன, தனன, தானன. இந்தி சௌபாயி போலப் பாடலாம், ஆதி தாளம். **இராகம்:** பியாகு, தோடி, கல்யாணி. வேறிடங்களில் வரும் இதேவகை விருத்தங்களையும் இவ்வாறே பாடுக!

அழகெல்லாம் சேர்ந்தே இந்த நகரத்தின் காட்சிகளாக அமைந்தவோ? இதுகாறும் மகான்கள் செய்த தவப்பயன்களெல்லாம் சேர்ந்தே இந்த நகர வாழ்விற்கு ஆதாரமான தருமம் ஆயினவோ? அறிவு, கலை, தொழில், நீதி இவற்றின் நன்மை (சிவம்) எல்லாம் கூடியே இதன் செல்வச் செழிப்பாக விளங்குகின்றனவோ? எங்கும் அழகும், தவவொளியும், அதிற் பூத்த இல்லறம் துறவறம் ஆகிய தருமமும், சிவமும், நலமும், திருவும், செல்வமும் விளங்கும் இந்த நகரத்தின் புகழை உலகமெல்லாம் கூடிப் போற்றும். (ச)

ரு. புனல்வளம், பயிர்வளம், பொங்கு பூவளம்,
இனமணித் திரள்வளம், இலகு பொன்வளம்,
மனைவளம், மாசறு மைந்த ரின்வளம்,
வினைவளங் கலைவளம் விளங்கு மாநகர்.

இப்பெரிய நகரில் நீர்வளம், பலவகைப் பயிர்வளம், பொங்கிச் செழிக்கும் நிலவளம், பலவகையான மணித்திரள்களின் பெருக்கம், நகை நாணயங்களாக விளங்கும் பொன்வளம், அன்பும் அறமும் சேர்ந்த இல்லற வளமை, அதில் மாசற்ற மக்கட் செழிப்பு, அவர்கள் செய்யும் பயனுள்ள தொழிற் செழிப்பு, அத்தொழில்களுக்குத் துணையான கலைச்செழிப்பு —இவை யெல்லாம் பெருகி யோங்கும். (ரு)

சு. சுந்தர மலர்வனஞ் சொரியுந் தேன்மழை.
சிந்துரக் கனிவளஞ் செழிக்கப் பாயுமால்;
அந்தரம் வியப்பவோர் அமுதப் பச்சைவான்
பந்தலிட் டிந்நகர் பரவு மாங்கொலோ?

இந்த நகரில் அழகான மலர்வனங்கள் உள்ளன. அவற்றில் தேன்மாரி பெய்து வழிந்தோடிக் கனிமரங்கள் செழிக்குமாறு பாயும். அம்மரங்களிற் செந்நிறக்கனிகள் இரத்தினம் போலத் தோன்றும். இவ்வாறு பூஞ்செடிகளும் கனிமரங்களும் அடர்ந்தோங்கும் காட்சி இந்த நகரத்திற்குமேல் ஒரு பச்சைவானம் பந்தலிட்டுக்கொண்டிருப்பதுபோலக் காணும். அதைக்கண்ட நீலவானம் "நமக்குக் கீழே அமுதக்கனி நிறைந்த ஒரு பசியவானம்" இருக்கிறதே என வியக்குமாம்! (சு)

எ. அம்புவி தனைவளர் அன்னை போலவே,
பம்புநல் அருவிகள் பயிர்வ ளர்த்திடும்;
நம்புமெய் யடியவர் நாளும் ஓங்கவே,
சம்புவின் அருளெனத் தழைக்கும் வான்மழை!

ஒலித்தெழுந்து பாயும் அருவிகள் உலகை வளர்க்கும் அன்னையைப்போல் பயிர்களை வளர்க்கும். தன்னை நம்பி அன்பு செய்யும் அடியார் எந்நாளும் சீர்பெற்றோங்கவே பொழியும் சிவனருள்மாதிரி வான்மழை வற்றாது வழங்கும். (எ)

அ. நதியொலி, புள்ளொலி, நல்ல பாட்டொலி,
கதிமிகு தொழிலொலி, கல்வி நல்கொலி,
விதியையும் வென்றிடும் வீரர் பாயொலி
மதிமிகு கலையொலி மல்குமெங்குமே.

இந்நகர் எங்கும் ஆற்றொலி, வாய்க்கால் ஒலி, சோலைப்புள்ளொலி, அடியார்களின் அருட்பாட்டொலி, விரைவான தொழிலோசை, ஆசிரியர்கள் மாணாக்கருக்கு நல்ல கல்வி தரும் ஒலி, விதியைக்கூட வெல்லும் வீறுபடைத்த வீரர் போர்ப்பயிற்சி செய்து பாயும் ஓசை, புலமை மிக்க கலை யோசை—இவை நிறைந்திருக்கும். (அ)

தீரர் சிறப்பு

௯. ஐந்தினை ஆளுவர் அந்தண் வீரர்கள் ;
ஐந்திணை யாளுவர் ஆண்மை வீரர்கள் ;
ஐந்தறங் காப்பரில் லறத்தின் வீரர்கள் ;
ஐந்தொழி லாளியின் அன்பு வீரரே !

ஞானமும் தவமும் வளர்க்கும் ஆன்ம வீரரான அந்தண முனிவர் ஐம்புலன்களை அடக்கி யாளுவர். ஆண்மைமிக்க போர்வீரர் மருதம், குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல் ஆகிய ஐந்து நிலங்களையும் தமது தோள்வலியால் வென்று செங்கோலாட்சி செய்து மன்னுயிரைக் காப்பர். இல்லறத்தை மேற்கொண்ட வீரக்காதலர் சுத்தான்ம சாதனம், அறிவு வளர்ச்சி, ஆருயிர்ப்பணி, மனைவிமக்களைப் பெற்றுப் போற்றி வளர்த்தல், அதற்கேற்ற பயனுள்ள தொழிலைச் செய்தல் ஆகிய ஐந்து கடமைகளையும் தமது அறமாகச் செய்வர். இவர் எல்லாருமே, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அளித்தல் என்னும் ஐந்தொழில்களையும் செய்யும் இறைவனுக்கே ஆளான அன்புவீரராவர் ; பக்திவைராக்கியம் கொண்டவராவர். (௯)

௧௦. அறமெனும் பூமியில் அன்பை நாட்டுவார் ;
உரமெனப் பொருளின்பம் ஊற்றிப் போற்றுவார் ;
குறைவறும் அருண்மலர் குலுங்க முத்திசேர்
நிறைகனி யுண்டவர் நீடு வாழ்வரே !

இந்நகர நல்லோர் வாழ்க்கைச்சோலை இவ்வாறு தழைக்கும்: அதன் நிலம் அறம் ; அதில் இறைவனிடம் வைத்த உள்ளன்பையே விதையாக நாட்டுவார் ; கல்வி செல்வம் கலையாகிய பொருளையே உரமாக இடுவார் ; அப்பொருளை நுகரும் காதலின்பத்தையே, இல்லற வாழ்வையே, நன்னீராக வார்த்து, வாழ்வுப்பயிரைக் காப்பார். அப்பயிர் வளர்ந்து, நாளடைவில் திருவருள் ஆகிய மலர் குலுங்கும். அந்த அருள் மலர்கள் நாளடைவில் நிறைவான முத்திக்கனியாகப் பழுக்கும். அக்கனிகளை இவர்கள் உண்டு ஜீவன் முத்தராக நீடூழி வாழ்வார்கள். (௧௦)

௧௧. உண்டியிற் றூயவர், ஊனைக் கள்ளினைக்,
கண்டிலர், கனவிலும் காமத் தாற்பிறர்
பெண்டிரை நயந்திலர், பெரிய நோக்கங்கள்
கொண்டவர் வண்டெனக் கூடி வாழுவார்.

இந்நாட்டு மக்கள் ஆகாரசுத்தமுடையவர்கள். ஊனையும் கள்ளையும் கனவிலும் பார்க்கக்கூட மாட்டார்கள். காமத்தால் கனவிற்கூடப் பிறமாதரை விரும்பமாட்டார்கள். தாமும் பூரணம்பெற்று, உலகையும் பூரணமாக்கும் பெரிய நோக்கங்கொண்டு வண்டுகள் போற் பாட்டும் பணியும் ஒற்றுமையுங்கொண்டு ஒரு சங்கமாகக் கூடி வாழ்வார்கள். (௧௧)

௧௨. அறந்தரும் இன்பமே யின்ப மானவர்,
திறம்பல படைத்தவர் தெய்வத் தீயினால்,
பிறர் துயர் துடைத்திடப் பிரியங் கொள்ளுவார்.
பிறர்நலந் தமதெனப் பேணும் பெட்பினர்.

இந்நாட்டவர்கள் மற்றமாந்தர் நன்றாகவாழ்வதே தாம் வாழ்வதாகும் என்று, அவர் நன்மைகளைப் போற்றும் தன்மையுடையவர்கள் ; தெய்வக்கனலான குண்டலியால் பல யோக

சக்திகளைப்பெற்ற சித்தர்கள். அவர்கள் மற்றவர் துயரை நீக்குவதில் பிரியங்கொண்ட பரோபகாரிகள். (கஉ)

கங. திண்ணிய தோளினர் ; சித்தம் வென்றவர் ;
புண்ணிய வினையினர் ; புன்மை யற்றவர் ;
மண்ணியல் வாழ்விலு மகிழ்வர் ; சாதனம்
பண்ணிய யோகத்தின் பயனு மெய்துவார்.

இந்நகரப்பெரியார் உறுதியான தோளுடையவர் ; சித்த ஜயம்பெற்ற வீரர் ; புண்ணியச்செயலினர் ; சிறுமையில்லாதவர். அவர் உலக வாழ்விலும் இன்புறுவார் ; அத்துடன் சுத்தான்மசாதனம் செய்து யோகப்பயனான சீவன்முத்தியும் பெறுவார். (கங)

பெண்டிர் பெருமை

கச. நித்தியங் கல்வியும், ஆன்ம நேயமும்,
பத்தியுங், காதலும், பணிவும் போற்றுவார் :
சத்தியின் கனலெனத் தருமந் தாங்குவார் ;
பத்தினிப் பெண்டிரின் பாதம் போற்றுவோம் !

இந்நகரில் மனையறங்காக்கும் பத்தினிப் பெண்களின் மலரடியைப் போற்றுவாம் ; அம்மலரடிகள் உலகைப் புனிதமாக்குகின்றன. உத்தமப் பெண்டிர், ஒவ்வொரு நாளும் கல்வியறிவை வளர்ப்பார் ; உடலுறவு மட்டுமன்று ; கணவனும் தானும் ஒரே ஆன்மாவின் இரண்டு தோற்றங்கள் என்னும் ஆன்மவுறவை வளர்ப்பார் ; தெய்வபக்தி, பதிபக்தி, உண்மைக்காதல் கொண்டவர் ; மகப்பேறெய்தவே கூடுவர். இவர் அன்பும் அறமும் கூடிய இல்லறத்தைத் தாங்கும் சக்திக்கனல்போல்வார், (கச)

கரு. சேயிழைக் கிம்மியும் சிறுமை நேர்ந்திடின்,
ஆயிரம் வாட்கரம் ஆர்த் தெழுந்திடும்.
நாயகர் சக்தியை நாற்பங் காக்கிடும்,
தூயவர் கற்பினைத் தொழுது போற்றுவாம் !

குலபத்தினிக்கு யாராயினும் ஒரு சிறிதும் பிழை செய்தால், பெண்டிர் நோக மரியாதைகெட்டு நடந்தால், அவரைக் காத்துக் குற்றவாளியைத் தண்டிக்க, அக்கணமே ஆயிரம் வீரர் வாள்வீசி, வீரங்கூறி, எழுந்து நிற்பர். பத்தினிப் பெண்டிர் பரிசுத்தமானவர். அவர் உறவால் அவர்தங் கணவர்சக்தி நாலு பங்கு அதிகமாகும். இப்பெண்டிரின் கற்புக் கனலை வணக்கமுடன் போற்றுவோம்! (கரு)

கசு. மற்புய வீரரின், மன்னர் நீதியின்,
சொற்பொழி புலவரின், சூழ மைச்சரின்,
பொற்புறு செல்வரின் புனித மாதரார்
கற்பெழில் அந்நிலக் காவ லாவதே.

போர்த்திறல் மிகுந்த தடம்புய வீரர் தமது தேக பலத்தால் நாட்டைப் பகைவரிடமிருந்து காப்பார். செங்கோல் மன்னர் நீதியால் மக்களைப் போற்றுவார். புலவர் நல்லுரைகளால் மாந்தர் ஒழுக்கங்களைக் காப்பார். அமைச்சர் தகுந்த மந்திராலோசனைகளால் அரசைக் காப்பார், குடிகளை மகிழ்விப்பார். திருமிகுந்த செல்வர் தமது பொருளால் உழைப்பும், பிழைப்பும் உண்டுபண்ணி நாட்டை வறுமைப் பிணியினின்றும் காப்பார். இவர்களைக் காட்டிலும் பரிசுத்தமான, கற்பிற் சிறந்த, பத்தினிப் பெண்களே உலக

வாழ்விற்கு இன்பமும், பாதுகாப்புமான சக்திகளாக விளங்கினர். ஏனெனில், அவர்கள் கற்புத்திறனல் வளரும் மனைவாழ்விலேதான் மேற்சொன்ன நலமெல்லாம் விளையும். (கசு)

அந்தணர் பெருமை

கஎ. தீரரை அமைத்திடுந் தெய்வச் சிற்பிகள்,
வீரரை யாக்கிடும் விறு கொண்டவர்,
காரினும் கதிரினுங் கருணை மிக்கவர்
பாரிலே தவவொளி பரவும் அந்தணர்.

உலகில் தமது அருந்தவச் சக்திஜோதியைப் பரப்பும் அந்தணர், பயிர்களை வளர்க்கும் கார்மேகத்தைவிட, ஒளியும் சூடும் அளித்து உயிர்களைப் போற்றும் சூரியனையும்விட, கருணையிற் சிறந்தவர்; ஏனெனில், இவற்றிற்குக் காலமுண்டு. அந்தணர் இரவும் பகலும் எக்காலமும் தம் தவத்திறனுலும், அறிவுத் தொண்டினுலும் உலகிற்குப் பல நலங்களைப் புரிவார். நாட்டைக் காக்கும் வீரரையும், மன்னரையும், கலைஞரையும் ஆக்கும் திறல்படைத்தவர் அந்தணர். அற்புதமான ஆத்ம தீரரையும், அறிஞரையும் அமைக்கும் தெய்விகச் சிற்பிகளாக அவர் விளங்கினர். (கஎ)

வீரர் சிறப்பு

கஅ. மஞ்சணை மணிக்கொடி யாடு மாளிகை,
கொஞ்சிளம் பூவையர் கோட்டி யாழுடன்,
அஞ்சலில் வீரரின் அதிச யக்கதை
பிஞ்சிளம் பிள்ளைகள் பேசப் பேசுவார்.

இந்நகரின் அரச வீதிகளில் மேகமண்டலத்தை அளாவி (மஞ்சு+அணை) உயர்ந்த மாட மாளிகைகள் காணப்படும். அவற்றின் உச்சியில் நாட்டிற்குரிய மணிக்கொடி ஆடும். உப்பரிகைகளில் கொஞ்சும் கிளிமொழிப் பாவையர், கோட்டியாழ் மீட்டி, அஞ்சாத ஆத்ம வீரர், போர்வீரர், கலாவீரர் ஆகியோர்களின் அதிசயக் கதைகளைத் தம் பிஞ்சிளம் செல்வரும், செல்விகளும் மகிழும்படி இசைப்பார்கள். பிள்ளைகள் அக்கதைகளைத் திருப்பிச் சொல்லிச் சொல்லிப் பேச்சுப்பழகுவார்கள். (கஅ)

கக. கார்வரை பொடிபடுங் கனத்த தோளினர்;
தேர், பரி, கரிசமர் தேர்ந்த சூரர்கள்,
மார்புடைத் தெண்டிசை அதிர மற்செய்வார்;
'யார்நிகர் இவர்க்'கெனப் பகைவர் அஞ்சவே!

இந்த நகரில் உள்ள போர்வீரர்கள் பலவகை இயந்திரத்தேர்கள், குதிரைகள், யானைகள் இவற்றைச் செலுத்திக் கைதேர்ந்த சூரராவார், ஒரு முண்டாக் கொடுத்தார்களானுல், கார்மலையும் பொடிப்பொடியாகும்; அப்படிப்பட்ட திண்ணிய தோளுடையவர்கள். அவர்கள் மார்புதட்டி எட்டுத்திக்கும் அதிர, காலை மாலை போர்ப்பயிற்சிகளும், குஸ்தியும் பழகுவார்கள். அதைக்கண்ட பகைவர் "இந்த வீரருக்குச் சமானமானவர்கள் உண்டோ!" என்று வியந்து பயந்து ஓட்டமெடுப்பார். (கக)

காதலர் பெருமை

உ०. வேளையும் வடிவினில் வென்ற நல்லிளங்
காளையர், கருத்துற நோக்குங் காதலால்
வாளையங் கண்ணினர் மனதை நல்குவார்;
கோளையு நாளையுங் குறிப்பர் யாவரே?

இந்நகரத்தில் சரியான வயதும், அறிவும், உடலுறுதியும், மனப்பொருத்தமும் கொண்ட சுதந்தரக் காதலர் கூடி இல்லறம் நடத்துவர். மன்மதனைக்கூட வென்ற அழகும் திருவும் கொண்ட நல்ல இளங்காளையர், தக்க வயதுடைய இளங்கன்னிகளைக் கருத்தறிந்த காதலால் நோக்குவார். அந்த நோக்கிலேயே இருவர் உள்ளமும் பேசிக்கொள்ளும், வாளை மீன்போன்ற கண்களையுடைய கன்னியர், உடனே அக்காதலருக்குத் தமது மனத்தைத் தருவார்; நட்சத்திரம் (நாள்), கிரகம் (கோள்) குறித்துச் சடங்குகள் செய்ய வேண்டுமென்று கருதார். இருவரும் நேராக இல்லற வாழ்வை மேற்கொள்வர். (உ0)

உக. கந்தனும், வள்ளியும் போன்ற காதலர்,
சந்தமும் பொருளும்போற் சார்ந்து வாழுவர்.
இந்திர போகமும், இறைவன் யோகமும்
வந்திவர் வாழ்வினில் வளர்வ தாகுமே.

கந்தனும் வள்ளியும்போல் மனம்பொருந்திய காதலர், பண்ணும் பொருளும், சொல்லும் கவியும்போல் ஒருவரை யொருவர் இணைபிரியாமல் சார்ந்து வாழ்வார்; ஒருவருக்கொருவர் ஆதாரமாவார். இவர் தனுகரண புவனபோகாதிகளை நன்றாக நுகர்வர். இந்திர போகமும், இறைவனுடன் அருளாற் கலக்கும் யோகமும் இவர் வாழ்வில் தாமே வந்து பொருந்தி இன்புற வளரும். (உக)

மாளிகைப் பெருமை

உஉ. சுந்தர மாளிகை, சுடர்பொன் முத்தணி
அந்தமில் விருந்தணி, யாவுங் கண்டிங்கே
இந்திரன் உலகமும் இலச்சை கொண்டன்றே
அந்தரத் திரையிடை அவிழ்த்த தேகொலோ ?

இந்த நகர மாளிகைகள் வெகு அழகானவை; பொன் மணி முத்து இவற்றால் அழகு செய்யப்பெற்றவை. அங்கே தேவாமிருதமான விருந்துகள் நடைபெறும். இவற்றையெல்லாம் இந்திரன் உலகம் கண்டுதான் 'நமக்கு இப்படிப்பட்ட சுகபோகவைபவங்கள் இல்லையே!' என்று நாணமுற்று, ஆகாசமாகிய திரையை அவிழ்த்துவிட்டு அதனுள் தன்னை மறைத்துக்கொண்டது போலும்! (உஉ)

விழாப் பெருமை

உங. கொடைகளு மணங்களுங் கொட்டு மேளமும்,
படைகளின் கதிகளும், பவனிக் காட்சியும்,
அடலரி வீரரின் அணிவி ழாக்களும்,
நடைகளுங் கலைகளு நல்வி ருந்தரோ !

இந்த நகரில் நன்கொடைகள், ஈகை முழக்கம், தான தருமங்கள் நடக்கும். மண வினைகள் கிளர்ச்சியாக நடக்கும். மங்கள வாத்தியங்களும் கொட்டு முழக்கங்களும் கேட்கும். படைகள் குதித்து நடக்கும். ஊர்வலங்கள் ஓயாமல் நடக்கும். அக்காட்சி கண்ணிற்கு விருந்தாகும். ஆண் சிங்கம்போன்ற அஞ்சா வீரர்கள் வீரர் திருநாள் கொண்டாடுவர். அந்த அணியழகு, காண்போர் மனத்தில் வீரக்கனல் பாய்ச்சும். நடனங்களும் (நடை), நாடகங்களும், பாட்டுக் கச்சேரிகளும் இன்னும் பல கலைவிளக்கங்களும் நடைபெறும், இவையெல்லாம் கண்ணுக்கும் செவிக்கும் கருத்திற்கும் வாழ்வின்பத்திற்கும் அரிய விருந்தாகும். (உங)

நிலயப் பெருமை

உச. அருந்தவ நிலயங்கள், அறஞ்செய் சாலைகள்,
பெருங்கலை நிலயங்கள், பெண்டிர் சங்கங்கள்,
மருந்தளி நிலயங்கள், மணஞ்செய் மாடங்கள்,
விருந்தளி நிலயங்கள் விளங்கு மெங்குமே !

இந்த நகரமெங்கும், பெரியார் புலனை யடக்கி அரிய யோகசாதனம் செய்யும் ஆசிரமங்களும், எளியவருக்கும் பாட்டாளிகளுக்கும் வேண்டிய அறவினை செய்யும் தரும சாலைகளும், பெரிய பெரிய கலாசாலைகளும், கலைக் கழகங்களும், பெண்கள் சுதந்தரமாகக் கலை பயிலும் கழகங்களும், நோயாளிகளுக்கு மருந்தளிக்கும் வைத்தியசாலைகளும், சிக்கனமாக மணவினைகளை நடத்தும் திருமண மாடங்களும், நண்பருக்கு விருந்தளிக்கும் அன்பர் சாலைகளும் விளங்கும். (உச)

தனவணிகர் பெருமை

உரு. பயிர்வளம், பசுவளம், பண்ட மாற்றுடன்
உயிர்வளம் பெருகிட வுழைக்கும் வாணிகர்,
இயல்வளம் செயல்வளம் ஏற்றிக் கப்பலில்
அயர்வறக் கடல்கடந் தம்பொன் செய்வரே !

இந்த நகரத்தில் வாழும் தனவணிகர், விவசாயத்தால் பயிர்களை வளர்ப்பர் ; பசுக்களை வளர்ப்பர் ; பண்டமாற்றுச் செய்வர் ; இவற்றால் உயிர்க்குலம் பெருகி யோங்கத் தொண்டு செய்வர் ; நாட்டிற்குக் கண்டு மிஞ்சிய இயற்கைப் பொருள்களுடன் கைத்தொழிற் பொருள்களையும் கப்பலேற்றித் திரைகடலோடித் திரவியம் சேர்த்துத் தானதருமங்களைச் செய்வார். (உரு)

ஆவணச் சிறப்பு

உசா. சிலம்பணி யிசைத்திடத் திருந டஞ்செயும்.
பொலங்கொளப் பொன்மணி கிண்கி ணென்றிடும்.
நலங்கெழு சரக்கினம் நாகம் ஊர்ந்திடும்.
கலங்கெழு கடலெனக் கனைக்கும் ஆவணம்.

கடைத்தெரு (ஆவணம்) கப்பல் நிறைந்த கடல்போல வியாபார ஓசையால் முழுங்கும்; சிலம்புகள் கலிர் கலிர் என்று ஒலிக்கச் செல்வத்திருமகள் அங்கே நடம புரிவாள். பொன்னும் மணிகளும் எண்ணிக் குவிக்கும் ஓசை 'கிண் கிண்' என்று கேட்கும். சமுதாயத்திற்கு நன்மையான பல சரக்குகள் யானையைப்போலே அத் தெருவில் நடந்தவண்ணமா யிருக்கும்: சரக்குகளை மூட்டை மூட்டையாக வாங்கி வண்டிகளிலும் வாகனங்களிலும் வைத்துச்செல்வர். (உசா)

வேளாளர் பெருமை

உஎ. மன்னுயிர்க் குயிர்தரும் பயிர் வளங்களைப்
பொன்னினும் போற்றுவர், புவியை ஊட்டுவார்.
மன்னவர் மதித்திட மாண்புற் றோங்கினர்
இன்னிய உழவரின் ஏரைப் போற்றுவாம் !

உலகுயிர்க ளெல்லாம் சோற்றால் வாழ்வன. சோற்றைத் தருவது பயிர்வளம்; அஃது உயிர்களுக்கு உயிரைத் தரும். பலவகைப் பயிர்களைப் பொன்னினும் அதிகமாக மதித்

துப் போற்றி, உலகை ஊட்டி வளர்ப்பவர் வேளாளராவார், அவர்களை மன்னனும் நன்கு மதித்தான். அவர்கள் நாட்டில் பெருமைபெற்றுச் செழித்தோங்கினர்கள் அவர்களுடைய கலப்பையைப் போற்றிப் புகழ்வாம். (உஎ)

உஅ. சாத்திரக் கூச்சலும் சமயச் சண்டையும்
கோத்திரப் பொய்களுங் கொள்வ தில்லையால்,
சூத்திரர் பிராமணர் என்னுஞ் சொல்லில;
ஆத்தும நேயத்தால் அனைத்தும் ஒன்றரோ!

இச்சமுதாயத்தில் தர்க்கவாதஞ் செய்யும் பலப்பல சாத்திரச் சந்தடியில்லை; வேறு பட்ட சமயச்சண்டைகளும், சாதிப்பூசலும் இல்லை. கோத்திரப் பெயரால் கட்டும் பொய் களும் இல்லை. 'சூத்திரர், பிராமணர்' என்ற பேச்சே இங்கே கிடையாது. எல்லாவுயிர் களும் ஒன்று. எங்கும் ஆத்ம நேயம்; பெயர்வடிவ பேதங்களெல்லாம் மேல்பூச்சுத்தான் என்று யாரும் அறிவர்; சாதிசமய சாத்திர கோத்திர பேதங்களை இங்கே ஏற்றுக் கொள்ள மாட்டார். (உஅ)

உகூ. விலகறு மெய்வழி விரும்பிச் செல்லுவார்
'வில'கென யாரையும் வெம்மை செய்திடார்.
உலகுயர் ஆலயம்; உயிரின் கூட்டமே
இலகுயர் கடவுளென் றிதயத் தெண்ணுவார்.

இந்நாட்டார் உண்மை நெறியான சுத்தசன்மார்க்கத்தில் விரும்பி, கருத்தூன்றி நடப்பர்; அதனின்றும் அணுவும் விலகமாட்டார்; ஆதலால் இவர்க்குச் சாதிமத பேதமே கிடையாது, அந்தப் பேச்சே கிடையாது. யாரையும் 'தீண்டாதே, பாராதே, விலகு, தொடாதே, ஓடிப்போ, கிட்டவராதே!' என்று இவர் கொடுமையாக நடத்தமாட்டார். தீண்டாமை இங்கே கிடையாது. உலகமெல்லாம் உயர்ந்த கோயில்; உயிர்த்தொகுதியே பரமாத்மா, ஜீவேசன் என்று தத்தமது இதயத்தில் எண்ணி அனைத்திடமும் அன்புடன் நடப்பார். (உகூ)

௩௦. இனிய நல் விசையினில் எழுத்தின் கூட்டம்போல்,
தனிவினை தாங்கியும் சங்க மாகவே
மனிதர்கள் வாழ்ந்தனர். பலா மரத்திலே
கனிவளர் பான்மையைக் கண்டுள் ளொன்றியே.

தனித்தனியான எழுத்துக்கள் பாட்டில் ஒன்று கூடுகின்றன. அதுபோலே, குணத் திற்கமைந்த தொழில்களைச் செய்து கொண்டே மனிதர் எல்லாரும் ஒருகுலம் போல வாழ்ந் தார். ஒரு பலாமரத்தில் வேர்முதல் கிளை நுனி வரையில் கனிகள் பழுக்கும். ஆனல், அவற் றின் சுவை ஒன்றே. எல்லாம் ஒருமரக் கனிகளே. அத்தன்மையைக் கண்டு உள்ளத்தில் ஒன்றுகி இந்த நாட்டார், உடலாலும் உளத்தாலும் எந்தத் தொழிலைச் செய்தாலும் எல்லாம் சமுதாயத்திற்குப் பயனாகவே செய்வார். எல்லாரும் ஒரே குலம் என்று ஒற்றுமை யாக இருப்பார். (௩௦)

௩க. கண்ணிலத் தாய்அருட் கைகள் அன்னவர்,
எண்ணறு தொழிலினர், இதயம் ஒன்றுளார்.
புண்ணியர் கண்ணியர்; பொருமை நோயிலார்.
திண்ணியர் ஆத்தும தீர ராவரே.

இந்த நாட்டவர்கள் சமுதாயப் பணிகளை மனமூன்றிச் செய்வார்கள். ஒவ்வொருவரும் உலக மாதாவுக்கு அருட்கரம்போன்றவர் ; திருவருள் தூண்டிய பணிகளை மமதையில்லாமல் செய்பவர் ; கணக்கில்லாத் தொழில்களைச் செய்தாலும் உள்ளத்தில் எல்லாம் உலகக் கோயிலுக்குச் செய்யும் வழிபாடென்றே உணர்வார். கைகள்பல ; செயல்கள் பல ; எனினும் அனைவருக்கும் உள்ளம் ஒன்று ; அதிலுள்ள அன்பும் ஒன்று. இந்நாட்டினர் புண்ணியர், பெருந்தன்மை வாய்ந்தவர்; ஒருவன் முன்னேறினுல் பொருமை கொண்டு அவனைக் குறைசொல்லிக் கெடுக்கும் கொடிய பொருமை நோய் அவரிடம் கிடையாது. எல்லாரும் உடலுறுதியும், மனவுறுதியும் பெற்ற அத்யாத்ம தீரராவார். (௩௧)

௩௨. பழரசந் தேனுடன் கலந்த பான்மையோ !
குழலுடன் வீணையும் குலவும் இன்பமோ !
அழகிளம் பெண்மையும், அறிவின் ஆண்மையும்
பழகிடும் பண்பினைப் பகர லாகுமோ ?

அழகிற் சிறந்த பெண்மையும், அறிவிற்சிறந்த ஆண்மையுங் கூடி இல்லற வாழ்வில் பழகும் பண்பினை வாயால் வர்ணிக்க முடியாது. அது சுவையான கனிரசத்துடன் தேன்கலந் ததுபோலும் ; புல்லாங்குழலுடன் வீணையும் சேர்ந்து வாசிப்பது போலும் ; அந்த ஆனந் தத்தை அனுபவித்தே அறியவேண்டும். (௩௨)

௩௩. மண்ணக மிலையிது விண்ணை மானுமால்;
விண்ணிலை விண்ணையும் வென்ற வாழ்க்கையால்.
புண்ணிய நதியணி பொன்ன கரிதைக்
கண்ணெனக் காத்தவன் அரசைக் காண்பமால்.

இது விண்ணகம் போல் அமுத போகமுடன் விளங்குகிறது ; ஆதலால், இதைத் துன்பம் நிறைந்த மண்ணகம் என்று சொல்லமுடியாது. யோகமும் போகமும் ஒன்றுகிய பூரணர் வாழும் இந்நகரம் விண்ணுலக வாழ்வையும் வென்று விளங்குகிறது. ஆதலால் இதை அத்துடன் ஒப்பிட முடியாது. தேவர்களிடையேகூட வேறுபாடுகளும், ஆணவமும், போர்களும் உண்டு ; இங்கே அவையில்லை. இந்த நகரம் புண்ணிய நதியை மாலையாகப் பூண்டது. இது பொன்னகர், செல்வத்திருநகர், விண்ணகர். இதைக் கண்போல் காத்த சத்திய ராஜனுடைய ஆட்சித்திறமையை இனிக் காண்போம். (௩௩)

சித்திநகரப் படலம்

முற்றிற்று.

---

௯. சத்தியன் அரசியற் படலம்

௧. *ஆதி மன்னர் அமர்ந்த அரியணை
சோதி சுந்தரி யிந்திரை தன்னுடன்
பாதி தாங்கிடப் பாருயிர் தன்னதாய்
நீதி தாங்கி நிலவினன் சத்தியன்.

தொன்றுதொட்டு ஆண்ட பழைய மன்னர்கள் அமர்ந்த அரியணையில் அமர்ந்து, சத்தியராஜன் மன்னறந் தாங்கினுன் ; கற்புச் சுடர் துலங்கும் அழகி, அரசி இந்திரை, கணவனுடன் அரியணையிற் பாதி வகித்தாள். மன்னன் உலகுயிர்களைத் தன் உயிர்போல் எண்ணினுன் ; அதனுல் புகழ்பெற்று நிலவினுன், (௧)

௨. †செங்கதிர் முகத்தான் ; ஞானத் தீக்கனல் விழியான் ; கோடி
சிங்கத்தை வென்ற வீரத் திண்ணிய புயத்தான் ; ஈகை
தங்குநீள் கரத்தான் ; சாலத் தயைமிகும் உளத்தான் ; வெற்றி
பொங்குயர் புகழான் ; மக்கள் போற்றிடு மன்னன் மாதோ !

மக்களெல்லாம் 'இவனே மன்னன்' என்று போற்றும் சத்தியன், உதிக்கும் செங்கதிர் போன்ற முகத்தினன் ; தியானத்தால் ஞானத்தீ எழுந்து கனலும் மலர்க்கண்ணுன் ; கோடிக்கணக்கான சிங்கக் கூட்டம் போன்று பகைவரை எதிர்த்து வென்ற வீரமுடைய திண்ணிய தோளுடையான் ; முகம் பார்த்து அளிக்கும் ஈகை நிலைத்த கைகளை யுடையவன் ; எல்லாரிடமும் வற்றுத ஈரமான, அன்புள்ள, தயைமிக்க உள்ளங் கொண்டவன் ; வெற்றி மேல் வெற்றி பொங்கும் புகழையுடையான். (௨)

௩. அன்பரி யணையாய், ஓங்கும் அறமதே செங்கோ லாக,
மன்பதை யுள்ளம் போற்று மாட்சியே மகுட மாக
நண்பருட் குடையாய், நாட்டு நன்மையே நாட்ட மாகப்
பண்புடன் அரசு செய்தான் பழுதிலா வாய்மை யானேன்.

அன்பே அரியணை, ஓங்கிவளரும் அறமே செங்கோல், குடிகளின் உள்ளம் எதுவோ அதன்படி ஆதரவாக நீதிசெலுத்தும் பெருமையே மகுடம், எல்லாரிடமும் நட்பும் உயிர்களிடம் அருளும் கொண்ட கருணையே குடை, நாட்டிற்கு நன்மை செய்வதே சட்டதிட்டங்களின் குறிப்பு—இவ்வாறு நல்ல இயல்புடன் உண்மையே வடிவான சத்தியராஜன் அரசு புரிந்தான். (௩)

௪. பொறையிலே தருமன் ; வீரப் போரிலே விசயன் ; ஞான
நிறைவிலே சனகன் ; செய்ய நெறியிலே அசோகன் ; ஆட்சி
முறையிலே பொற்கை ; நல்ல முயற்சியில் வளவன் அன்னுன் ;
இறைமைசேர் திறமை தன்னில் இந்திரன் போன்றுன் மாதோ !

அத்தகைய சத்தியராஜன் பொறுமையில் தருமன் ; வீரப்போரில் விஜயன் ; ஞான நிறைவில் ஜனகன் ; நன்னெறி யொழுக்கத்தில் அசோகன் ; குடிகளின் குறைகளைக் கேட்டு முறை செய்வதில் பொற்கைப் பாண்டியன் ; நாடு செல்வமும் கல்வியும் தழைக்கும் நல்ல

---

*கலி விருத்தம் :—கல்யாணி ராகம்—ஆதி தாளம் : சந்தம் : தான தன்ன—தனந்த—தனதன,
†அறுசீர் விருத்தம்—கல்யாணி ராகம் ;—சந்தம் : தன்னன தனன தான தான்ன தவன தான.

முயற்சிகளில் திருமாவளவன்; தலைமைவகித்து எல்லாரையும் திறமையாக ஆளும் பெருமையில் இந்திரன் போன்று விளங்குகிருன். (ச)

ரு. கல்வியிற் பெரியான்; பொங்குங் கருணையில் வானைப் போன்ருன்;
செல்வியின் இருக்கை யாவான்; சீர்த்தியில் இராமன் போன்ருன்!
அல்லலிற் கைகொ டுக்கும் அன்பினில் அன்னை போன்ருன்;
பல்லுயிர் உலகம் வாழ விளங்கிடும் பரிதி யன்னுன்!

பல உயிர்க்குலங்களெல்லாம் ஒளியும், கனலும், மழையும் பெற்று வாழவே நிலவும் சூரியனைப் போன்றவன் சத்தியராஜன். அவன் கல்வியில் மிகப் பெரியவன்; மேன்மேலும் பொங்கிப் பலருக்குப் பயனுக வளரும் கருணையில் வான்மழைபோன்றவன்; அருட்செல்வம் பொருட்செல்வம் இரண்டிற்கும் இருப்பிடமானவன்; அரக்கரை வீழ்த்தி அறத்தைக் காத்து, அரசாளும் மாண்பில் இராமனைப் போன்றவன். துன்பம் வந்தபோது கைகொடுத்து உயிர்களைக் காக்கும் அன்பில் அன்னையே போன்றவன். (ரு)

சு. குடிகளிற் குடியே யாவான்; கோக்களிற் கோவே யாவான்;
அடியவர்க் கடியா னுவான்; அற்றவர்க் கரும்பொன் னுவான்;
கொடியவர் கால னுவான்; குவலயத் தோழ னுவான்;
முடிவிலா வுயிரின் உள்ளம், உளத்துடிப் பானுன் மாதோ!

எல்லையற்ற மன்னுயிரின் உள்ளமே, விருப்பமே தனது உள்ளத் துடிப்பானுன் சத்தியராஜன்; மன்னுயிர் மனத்தைத் தனது உளத்துடிப்பைப்போல் அறிந்து, முறை செய்தான்: அவன் குடிகளுள் தானும் ஒரு பிரஜை என்று கருதித் தாழ்மையுடன் நடப்பான்; மன்னர்களுள் மகா சக்ரவர்த்தியாக விளங்குவான்; கடவுளடியாருக்குத் தொண்டனுவான்; கையிழைத்த வறிஞருக்கு அரும்பொன்போல் செல்வத்துணை செய்வான்; அதர்மக் கொடியரைக் காலன்போல் அடித்து வீழ்த்துவான்; உலகிற்கெல்லாம் சிறந்த பொதுநலத் தோழனுவான். (சு)

எ. அன்னவன் காதல் அன்னம், அமுதவாய்க் குமுதச் செங்கண்,
மின்னிடை, அருணச் சோதி மிளிர் தரும், அழகுத் தெய்வம்,
மன்னறத் துணைவி, நல்ல மனையறத் துணைவி, 'எங்கள்
அன்னை'யென் றுலகம் போற்றும் அருங்குணச் செல்வி மாதோ!

சத்தியராஜன் காதலித்து அரசியாகக்கொண்ட இந்திரை, அன்னம்போன்ற நடையாள்; அமுதம்போன்ற இனியமொழி பேசும் வாயாள்; குமுதம் போன்ற செங்கணுள்; மின்னலைப் போன்ற நுண்ணிடையாள்; அருணவான் போன்று கற்பொளி நிலவும் தூய மங்கலமான அழகுத் தெய்வம். அறிவு, அன்பு, அடக்கம், அமைதி, விரதம் முதலிய தெய்விகக் குணங்கள் வாய்ந்தவள்; இல்லறத்தை ஒழுங்காகக் கடைப்பிடிக்கவும், நாடாளும் அரசறத்தைப் போற்றவும் மன்னனுக்கு உற்ற துணையான தரும பத்தினி. 'இவளே எங்கள் அன்னை' என்று உலகோர் அன்புடன் கொண்டாடும் அரிய நற்குணச் செல்வி. (எ)

அ. பாலுடன் தேன்க லந்த பான்மையர், வாய்மை யாளர்
நாலுடன் ஐந்தும் போற்றி, நல்லன செய்தார்; அன்னோர்,
வேலுடன் வெல்லும் வெற்றி யதனினும், விரும்பி அன்புக்
கோலுடன் கொண்ட வெற்றி குடிகளுக் கினிய தன்றே,

சத்தியராஜனும் தேவி இந்திரையும், பாலும் தேனும் கலந்ததுபோலே கூடி இல்லறங் காத்தனர். வாய்மையே வடிவமான இவர் அறம் பொருள் இன்பம் வீடு என்னும்

நாற்பொருள்களையும், குறிஞ்சி முல்லை நெய்தல் பாலை மருதம் ஆகிய ஐந்நிலங்களையும் போற்றினர்; மந்திரி, ஆசான், தூதன், ஒற்றன், படைத்தலைவன் ஆகிய ஐம்பெருங் குழுவையும் போற்றினர்; குடிகளுக்கு நன்மையான காரியங்களையே செய்தனர். இவர் அரசியல் வாழ்வில் பகைவரை வேலினல் வென்று வெற்றிபெற்றனர், ஆனுல், இவர்தம் அன்புமிக்க செங்கோலால் மனம் விரும்பி இனிது செய்து, அதனுல் பெற்ற வெற்றி குடிகளுக்கெல்லாம் மிகவும் இனிதானது. வேலைவிடச் செங்கோலினுலேயே இவர் வெற்றி சிறந்து வாழ்ந்தனர். (அ)

கூ. கற்றறி புலவர், காலங் கணக்கிடங் கருவி, செய்கை
முற்றறிந் தொற்ற றிந்து முடிபுரை சூழ்ச்சி யாளர்,
விற்றறி யார்தம் வாழ்வை, வீணுரை யறிகிலாதார்,
சுற்றுல கியல்பறிந்து தொண்டுசெய் யமைச்சர் மாதோ!

சத்தியராஜனுக்கு அமைந்த அமைச்சர், சாத்திரங்களைக் கற்றறிந்த புலவர்; உரிய காலம், கணக்கு, இடம், அதற்கேற்ற கருவிகள், செய்திறமை - இவையெல்லாம் நன்ருக அறிவார்; ஒற்றரை ஏவி உண்மையைத் தெளிவாகத் தெளிவார்; பிறகே, சரியான முடிவுக்கு வந்து அரசனுக்கு 'இன்னது செய்தால் நலம்' என்று சூழ்ச்சி சொல்வார்; தமது வாழ்வைப் பணத்திற்கு விற்கமாட்டார்; கைக்கூலி விரும்பி உண்மையை ஒளியார்; கடமை வழுவார்; வீண்வார்த்தை பேசார்; தன்னைத்தானேயும் சூரியனையும் சுற்றிக் காலச் சுழலிற் செல்லும் உலகின் இயல்பை நன்ருக அறிவார்; உலக நிகழ்ச்சிகளை ஆராய்வார்; அதன் பிறகு, அரசனுக்கும், குடிகளுக்கும் நலமாகத் தொண்டுகளைச் செய்வார். (கூ)

க0. வடுவறு காட்சி யாளர், மனத்தினைக் கரவார், நல்ல
விடுதலை வீரர், நாளும் பொதுநல விரதம் பூண்டார்,
கெடுதலைச் செய்யார், யாரும் கீழென நினையார்; உண்மை
நடுநிலை யாளர்; வேந்து நம்பிய தொண்டர் மாதோ!

நாட்டை நிர்வகிக்க அரசன் நம்பிய ஊழியர், அனைவரும் குற்றமற்ற அறிவாளர், நல்ல காட்சியாளர், தங்கள் மனத்தை ஒளிக்கமாட்டார், மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடப்பார், நல்ல சுதந்தரவீரர், அடிமைத்தனத்தை வெறுப்பவர், நாள்தோறும் பொதுநலம் செய்வதே விரதமாகக் கொண்டவர், நாட்டிற்குக் கெடுதலானதைச் செய்யவேமாட்டார். கீழானவர் என்று எவரையும் கருதி அமுல் செலுத்தாமல், அனைவரையும் சரிநிகர்சமானராகப் போற்றுவார், உண்மையான நடுநிலையாளர், ஓரகமில்லார், நீதியாளர். (க0)

கக. முந்தர சேத்தும் ஆசான் பாரத முனிவ னுவான்.
மந்திரத் தலைவன் வாய்மை வடிவெனும் சித்தி மானும்.
வெந்திறற் சேனை முற்றும் விஜயனே நடத்தி வென்ருன்.
தந்தனன் சுமதி கல்வி. சதுரனுந் தொழில் வளர்த்தான்.

சத்தியராஜன் முதலில் வைத்துப் போற்றி வணங்கும் குரு பாரத முனிவன் ஆவான். அவனுடைய மந்திரிகளுக்குத் தலைவன் உண்மையே உருவெடுத்த சித்திமான்; காரியசித்தி கைவந்தவன். பகைவரை வீழ்த்தும் வெய்ய திறமைகொண்ட படையணி முழுதையும் விஜயன் நடத்தி வெற்றிகள் பல பெற்ருன். சுமதி நல்ல கல்வியளித்தான். சதுரன் தொழில்களை வளர்த்தான். (கக)

கஉ. வங்கர்,கோ சலர்,பாஞ் சாலர், மாரதர், அரச புத்ரர்,
அங்கர்,கூர்ச் சரர், கலிங்கர், ஆந்திரர், தமிழர், சேரர்,
சிங்கர், கன் னடர்,நேப் பாளர், சிந்தியர், சோளர், சீனர்,
தங்கிடத் தனது நீழல் சத்தியன் அரசு செய்தான்.

வங்காளிகள், மகாகோசலர், பஞ்சாப்பியர், மஹாராஷ்ட்ரர், இராஜபுத்திரர், அங்கர் (காசிநாட்டார்), குஜராத்தியர், கலிங்கர், ஆந்திரர், தமிழர், மலையாளிகள், சிங்களர், கன்னடர், நேப்பாளர், கூர்க்கர், சிந்து நாட்டார், துருக்கர், பர்மியர், மலேயர், சீனர் முதலிய பல நாட்டினர் மகிழ்வுடன் தனது குடைநிழலில் நிலைத்து வாழ, சத்தியன் அரசு புரிந்தான். (கஉ)

கந. பலகிளை யாகி யாறு பயிர்களை வளர்ப்பதே போல்,
உலகுயிர் வளர்க்கும் அன்னோன் ஓங்கிய செங்கோ லாட்சி.
இலகிடும் இரவி தன்னிற் கதிர்க்கணம் இணைந்த தொப்ப
நிலமொழி யாளர் நீதி நிருபனைப் பொருந்தி வாழ்ந்தார்.

ஓர் ஆறு பல கிளைகளாகப் பிரிந்து பயிர்களை வளர்க்கிறது, அதைப்போன்றே சத்திய ராஜனது செங்கோ லாட்சிமுறை பல கிளைகளாகப் பிரிந்து, நல்ல சேவகர் பலர் மூலம் உலகுயிர்களைப் போற்றி வளர்த்தது. சூரியனிடம் கதிர்க்கணங்கள் இணைந்திருக்கின்றமை போலவே, தத்தமது மாகாணத்திற்குரிய மொழிகளைப் பேசுவோரெல்லாரும், நீதி மன்னனை சத்தியராஜனுடன் மனம்பொருந்தி வாழ்ந்தார். அவரவர் தாய்மொழிப்படியே நாடு வகுக்கப் பெற்றது. (கந)

கச. ஒன்னலர், கள்வர், மாக்கள் ஒருதுயர் இழைத்தி டாமல்,
இன்னிய பரிச னத்தார் இதமுடன் பணிகள் செய்ய,
தன்னுயிர் பெருக்கி, மாந்தர் தம்முயிர்க் குயிராய் வைத்து,
மன்னனுந் தொண்ட னாக மன்னுயிர்ப் பணிகள் செய்தான்.

புறப்பகைவர், உட்பகைவர், திருடர், வழிபறிக்காரர், தீய விலங்குகள் ஆகியோரால் ஒரு சிறுதுயர் கூட நேராமல், மன்னனுடைய பரிசனத்தாரான நாட்டூழியர் இதமாகப் பணிகள் செய்தனர். தகுந்த சேனைபலத்தால் மன்னன் தீமையைத் தகர்த்தான். அவன் தனது உயிரையே அகண்டமாகப் பெருக்கி, மன்னுயிர்களுக்கு உயிராய் வைத்தான். மன்னுயிர்களெல்லாம் அவனையே தம் உயிருக்கு உயிராகக் கருதின. மன்னுயிரை அவன் தன் உயிராகவே மதித்தான். தானும் ஒரு பொதுநலத் தொண்டன் எனக் கருதியே அரசன் ஊழியருடன் பணிசெய்தான். (கச)

கரு. பூவினுக் கமுத மீயப் புயல்அலை முகப்ப தேபோல்,
தேவையி னளவு செல்வர் திறைகளை யேற்றுப் போற்றிக்
காவலும், சுகமும், சீரும், கல்வியும், தொழிலும் ஓங்க
மேவுயிர் உடலைப் போலே வேந்தனும் வேந்து செய்தான்.

அலைகடலை மேகம் முகந்து உலகிற்கே வானமுதாக வழங்குகிறது. அதுபோலே மன்னன் பொருள்மிகுந்த செல்வர் தரும் வரியை ஏற்றுக் காப்பாற்றி, நாட்டைப் பாதுகாக்கும் படைகளும், சுகாதாரமும், வாணிபச் செல்லமும், சீரும், சிறப்பும், அழகும், கல்வியும், கலையும், தொழிலும் ஓங்கச் செய்தான்; உடலை அதில் உள்ள உயிர் போற்றுவது போலே மக்களை ஆண்டான். (கரு)

கசு. கற்றவர் சொல்லைக் கேட்டுக் கடன்முறை செய்யு மன்னன்,
ஒற்றரால் அறிந்துந் தானே உருக்கரந் தேகிக் கண்டும்,
குற்றமுங் குணமுந் தேர்ந்தே குறைகளை யுடனே போக்கி
உற்றவர்க் குதவி செய்தான் உலகினுக் கினிய னுனன்.

சத்தியராஜன் கற்றறிந்த பெரியார் சொற்கேட்டுத் தனது அரசியற் கடமை செய்வான்; ஒற்றரையனுப்பியும், மாறுவேடம்போட்டு நேரே சென்றும், மக்கள் குணத்தையும், குற்றத்தையும் 'அறிவான், காண்பான்; உடனே விரைவாக அவர் குறைகளைத் தீர்ப்பான்; தன்னிடம் வந்தவர்க்கு வேண்டிய நல்லுதவி செய்வான். உலகிற்கே அவன் இனியனுகப் புகழ் பெற்றுன். (கசு)

கஎ. குருகுலக் குமரர் கல்வி, கொற்றமெய் வீரர் வீரம்,
திருவுடை அந்த ணாளர் செம்மை, நன் மாதர் கற்பு,
பெருகுவே ளாளர் சேமம், வணிகரின் செல்வம் ஓங்கத்
தருமமே பொருள்கொடுக்கத் தழைத்தது மன்னன் செங்கோல்.

தெய்வத்திரு பொலியும் அந்தண்மை மிக்க பெரியார் தமது செய்ய ஒழுக்கத்தைக் காத்தனர். நல்ல இல்லறம் வகித்த மாதர் கற்பைக் காத்தனர். குருகுலத்தில் பயிலும் பிரமசாரிகள் தமது கல்வியறிவை வளர்த்தனர். பகைவரை வென்று புகழ் பெற்ற ஜயவீரர்கள் தமது வீரத்தை வளர்த்தனர். பயிர்த்தொழிலால் பெருகிடும் வேளாளர் சேமமாக வாழ்ந்தனர். தனவணிகர் பல தொழில் செய்து செல்வச்செழிப்புற்றனர். எல்லாரும் இப்படிச் செழிப்புற்றேங்கியது எதனுல்? மன்னவன் செங்கோலால். அச்செங்கோல் தழைக்கத் தருமதேவதையே பொருள் கொடுத்தாள். அறவழியில் வந்த பொருளாலேதான் மேற்சொன்ன இன்பங்களெல்லாம் நாட்டில் நிறைந்தன. (கஎ)

கஅ. ஆவியும், உடலும், உள்ளும், அறம், பொருள், இன்பமாகத்
தேவியல் வாழ்வை நோக்கிச் செழித்திடும் சமுதா யத்தைக்
கோவியல் வழுவா தாண்ட கொற்றவன் கதையைச் சொல்ல
நாவினி லிருந்து வாணி நல்குக கவிதை வெள்ளம்.

சத்தியன் ஆண்ட பாரத சமுதாயத்திற்கு அறமே உயிர், பொருளே உடல்; இகபர சுகமே உள்ளம். அது நாள்தோறும் தெய்வ வாழ்வை நோக்கி முன்னேறிச் செழித்தது. அத்தகைய சமுதாயத்தை அரச தருமம் வழுவாமல் நீதியாக ஆண்ட சத்தியராஜனது வரலாற்றைச் சொல்ல, எனது நாவிலிருந்து கலைவாணி நல்ல கவிதையை வெள்ளம்போலத் தந்தருளுக! (கஅ)

சத்தியன் அரசியற் படலம்
முற்றிற்று.

எ. தியானக் காட்சிப் படலம்

சத்தியன்

க. தேவி சக்தியின் அருளினுற் சிந்தையி லுதித்து,
நாவி லோடிய நற்கவி வெள்ளம்போற் செழித்த,
காவி லோடிய வோடையிற் கனிநகை புரிந்தான்
பூவி லாருயிர் வளர்த்திடும் புண்ணியக் கதிரோன்!

தேவி பராசக்தியின் அருள்பெற்ற புலவர் சிந்தையில் உதித்து, அவர் நாவில் வெள்ளம்போலத் தவழ்ந்தோடும் நல்ல கவிகள்போலே, மலரும் கனியும் செழித்த சத்தியராஜனது சோலையில், தெள்ளிய அருவி ஓடியது. ஒளி, வெப்பம், நிறம், மழை எல்லாந் தந்து, உலகில் ஆருயிர்களை வளர்த்திடும் புண்ணியனுகிய கதிரவன் எழுந்து, அந்த ஓடையில் கனிந்த சாந்த நகை விசினன். கதிரொளி நீர்த்தடத்திற் பொன்னகை வீசியது. (க)

உ. ஞால சுந்தரி நாண்மல ரணியுடன் பொலிந்தாள்.
கோல மாதவன் குழலெனக் கொஞ்சிட வசந்தம்,
காலை பூத்தது; கமலங்கள் பூத்தன; மன்னன்
வேலை பூத்தது; விழித்தது வினையுடல் வாழ்வே!

உலகமாகிய அழகி, பலவகையான புதிய மலர்களை அணிந்து விளங்கினள். மந்தமாருதம் அழகிய கண்ணனது குழலோசைபோலப் பாட்டொலியாற் கொஞ்சிற்று, காலை பளிச்சென மலர்ந்தது. தாமரைகள் பூத்தன. வினையினல் ஆகிய உடல்வாழ்க்கை விழித்தெழுந்தது. உலகமாந்தர் தத்தமக்குரிய வினைகளைச் செய்யத் தொடங்கினர். அவர்களுக்கு முன்பே மன்னன் எழுந்து, தன் அனுஷ்டானங்களைச் செய்தான். அவனது வேலையும் தொடங்கியது, (உ)

ங. புனித மாதவர் உளமெனத் தெளிபுன லாடி,
இனிய புத்தணி யணிந்துநல் லியற்கையின் வனப்பில்,
பனிம லர்நகும் பசுங்குடி லமர்ந்துநங் கோமான்
கனிம னங்கசிந் துருகிடக் கடவுளை நினைத்தான்:

பரிசுத்தமான தவசிகளின் உள்ளம் அருளறிவால் தெளிந்திருக்கும். அதுபோலத் தெளிந்த நீரோடையில், நம் அரசர் பெருமான் காலை நீராடி, தனது நிலைக்கேற்ற இனிய புதிய ஆடையாபரணங்களைப் பூண்டு, கண்ணுக்கும் கருத்திற்கும் நன்மையைச் செய்யும் இயற்கை வனப்பில், பனி தோய்ந்த புதிய மலர்நகை குலுங்கும் ஒரு பச்சைக்குடிலில் அமர்ந்தான்; அன்பு பழுத்த மனம் ஆர்வத்தால் கசிந்துருகக் கடவுளைத் தியானித்தான்: (ங)

ச. "வான கத்தில் வளர்ந்திடுஞ் சோதிநீ!
தேன ளாவு மலரிற் சிரிப்புநீ,
நானெனென் றுள்ள நடு, மழை மின்னென
மோன மாக நடஞ்செயு மூர்த்தியே!

"எனது உள்ள நடுவே, கார்மேகத்தில் பளிச்சிட்டாடும் மின்னலைப்போலே, மோனமாக எழுந்து 'நான் நான்' என்று ஞானநடம் புரியும் சுத்த மூர்த்தியே! ஆகாசத்தில் என்

ணில்லா நட்சத்திரங்களாகவும் சூரிய சந்திரராகவும் வளர்ந்திடும் சோதி நீயே; உலகில் தேன்மலர்களில் புன்னகை புரியும் அழகும் திருவும் நீயே! (ச)

ரு. "மலைய ருவிவ ளர்வதுன் மாமறை ;
கலைய ருவிவ ளர்வதுன் கற்பனை ;
அலையி லாடுவ துன்பர மானந்தம் ;
தலைவ னேயருள் பாலிக்குந் தந்தையே!

"என்னுயிர்த் தலைவனே, அன்பருக்கு அருள்புரியும் உலகத் தந்தையே! மலையினின்று கம்பீரமாகப் பொழிந்துவரும் அருவியில் உனது வேதகானம் வளர்வதைக் காண்கின்றேன். மனித ஆயுள் இப்படி அருவிபோல ஓடுகிறது. 'இறைவன் பெயரை முறையிட்டு வாழ்வாறு ஓடுக!' என்று அருவி உபதேசிக்கிறது. அருவிபோல் உலகிற் பெருகி முன்னேறும் அறுபத்து நான்கு கலைகளையும் ஆராய்ந்தேன். அவற்றில் வளரும் அறிவு, இன்பம் எல்லாம் உனது சொரூபத்தின் கற்பனையேயாகும். கலைகள் தமது கற்பனையான அழகால் உன்னைத் தேட முயலுகின்றன. நீ கலாதீதனாயிருக்கிறாய். கடல் பொங்கி வீசும் அலைகளிலெல்லாம் உனது பரமானந்த நடனத்தையே காண்கின்றேன். உலக வாழ்க்கையும், தோற்றமும் இந்த அலைகள் போன்றே எழும், விழும். அலைகளுக்கு ஆதாரமானது கடல். வாழ்வுக்கெல்லாம் ஆதாரம் அருளிறைவன். 'அவனையே கலந்து வாழ்க!' என்று அலைகள் பாடியாடுகின்றன. (ரு)

சா. "உலக மெல்லாம் ஒருகுல மாகவே
கலக மின்றி யுனைக்கலந் தோங்குக!
நலிக தீவினை ; நல்லன யாவுமே
பொலிக வுன்னருள் போற்றி, இறைவனே!"

"இறைவனே! நீயே உலகமாக விரிந்தாய். இந்த உலகமெல்லாம் தந்தையாகிய உன்னடியில் ஒரு குலமாகச் சேர்ந்து, கலகமில்லாமல் உன்னை இரண்டறக் கலந்து, உன் இன்பத்தில் ஓங்கி வளரட்டும்! உலகைக் கெடுத்து உயிர்வாழ்வை நரகமாக்கும் பொய், கொலை, களவு, கள், சூது, விபசாரம், கொடுங்கோல் ஆகிய தீயசெயல்கள் நலிந்தொழிக! வாய்மை, தூய்மை, அருள், இரக்கம், பொதுநலம், அறிவுவளர்ச்சி, தானம், தவம் ஆகிய நல்ல செயல்கள் மேன்மேலும் ஓங்கிப் பொலிக! இவ்வுலகம் நலம்பெற உனது தண்ணருளைப் போற்றி செய்கிறேன்." (சா)

இந்திரை

எ. இன்ன வாறிறைஞ் சும்புவி வேந்தனை,
மன்ன ரசிவ ணங்கிட மங்கலப்
புன்ன கைபொலி யப்புனி தத்திரு
மின்ன மின்ன மிளிர்ந்து நெருங்கினள்.

இவ்வாறு தியானித்துத் தொழும் பார்வேந்தனாகிய தன் கணவனை வணங்கி ஆசி பெற, அவன் அரசி இந்திரை அருகே வந்தாள். அவள் முகத்தில் மங்களப் புன்னகை பொலிந்தது. கற்பும் வாய்மையும் சேர்ந்த அவளது பரிசுத்தமான அழகில் ஒரு தெய்வ தேஜஸ் மின்னி மின்னி ஒளிர்ந்தது. அவள் நடப்பதே கற்பின் சுடரொளி மின்னி வருவதுபோலிருந்தது. (எ)

அ. மயில்க ளாடின ; மாங்கனி வாயிளங்
குயில்கள் பாடின ; கொஞ்சின கிள்ளைகள்.
பயிலும் பூவைகள் பாய்ந்தன ; பச்சிளம்
வெயிலு கந்து விலங்கினந் துள்ளின.

அச்சமயம் மாங்கனிகளை உண்டு அக்கனிபோற் சிவந்த வாயுடைய குயில்கள் பாடின. மயில்கள் தோகைவிரித் தாடின. கிளிகள் அரசியின் பெயரைச்சொல்லிக் கொஞ்சிப்பேசின. பூவைகள் இங்குமங்கும் பாய்ந்து விளையாடின. இளம்வெயிலை நுகர்ந்து, மான் பசு முதலிய பல விலங்கினங்கள் துள்ளிக் குதித்தன. (அ)

கூ. அன்னக் கூட்டம் அணிநடை கற்றுற,
வன்ன மானினம் வாட்கண் வியந்திட,
பொன்வண் டுதிடப் பூமுகங் கண்டதும்,
மென்கை தொட்டதும் பன்மலர் மேவிட

அன்னக் கூட்டங்கள் அவளிடம் அலங்காரநடை கற்றுப் பின்னே வருகின்றன அழகான மான்களின் கூட்டம் வாள் போன்ற அவள் விழிகளைக் கண்டு வியந்து நிற்கின்றன. அவளது தாமரை முகத்தைக்கண்டு, 'ஆ இதிலன்றோ தேன் பருக வேண்டும்!' என்று பொன் வண்டுகள் களிப்புடன் ரீங்காரம் செய்கின்றன. அவளது மெல்லிய கை தொட்டதும் பலநிறப் பூக்கள் 'இப்படிப்பட்ட கைமலரிலன்றோ சேரவேண்டும்!' என்று தாமே அவள் கையில் மேவுகின்றன. (கூ)

இந்திரை, சத்தியன்

க0. கொடிக ளோடிக் குளிர்பசும் பந்தலில்,
அடிகள் வைத்தனள் அன்புடன் இந்திரை ;
"படியை யாளும் பராசக்தி யன்னையின்
வடிவமே" யென மன்னவன் போற்றினன்.

இவ்வாறு சிறப்புற நடந்து, கொடிகள் அடர்ந்து குளிர்ச்சியாயிருக்கும் அந்தப் பசும்பந்தலில் அன்னை இந்திரை அன்புடன் தளிரடிகளை வைத்து உள்ளே புகுந்தாள். சத்தியன் தியானத்திலிருந்து எழுந்து, "உலகை ஆளும் பராசக்தியின் வடிவான அரசியே, வருக!" என்று வரவேற்று இந்திரையை உபசரித்தான். (க0)

கக. அருமை யாகும் உயிரதி னின்னிய
வுரிமை நாதனை யொண்சுடர்க் கற்பினள்,
ஒருமை யன்புடன் போற்றி யுளமிசை,
திருவ டியில் அருச்சனை செய்தனள்.

எல்லாருக்கும் அருமையான பொருள் தத்தம் உயிரேயாம். அதனினும், ஒரு பெண்ணுக்கு இனிய பொருள் தனக்குரிய கணவனேயாவான். இந்திரை சுடரோங்கும் கற்பரசி. அவள் ஏகாக்கிர மனத்துடன், வைராக்கியமாக, அன்புடன் கணவனைத் தன் உள்ளக்கோயிலில் போற்றினள். உள்ளே தொழுததுமட்டுமின்றி, புறத்தே கணவனது பதமலரிலும் மலர்தூவிப் பணிந்தாள் ; கணவனே கடவுளென நம்பினள். (கக)

கஉ. காதல் வாழ்விற் கடவுளைக் கண்டிடும்,
ஓத ரியவு யர்தவ யோகத்தின்
சாத கர்சிவ சக்தியென் றோரணை
மீத மர்ந்து தியானத்தின் மேவினர்.

சத்தியனும் இந்திரையும் ஆகமதாந்திர ரகசியங்களை அறிந்தவர்; தாராயோகம் என்னும் அரிய சக்திசாதனத்தைக் கற்றவர்; தமது காதல்வாழ்வில் கடவுளைக் காண்பவர்; அஃதாவது, ஆண் சிவம், பெண் சக்தி என்று மதித்தொழுகும் பண்பினர். சந்ததி வேண்டிய போதே கூடி, மற்ற நாட்களில் இருவரும் தியானயோக சாதனங்களே செய்வர். இன்று அவர் சிவனும் சக்தியும்போல ஒரே பீடத்தில் அமர்ந்து, தியானத்தில் ஆழ்ந்தனர். (கஉ)

கங. பத்தி யோங்கிடப் பார்வையுள் ளோங்கிடச்
சித்த மூன்றித் தியானம் நிலைத்திடச்
சுத்த சக்திச் சுடரைவ ணங்கினர்
நித்த நித்த நினைத்தது கூடவே.

பக்திமேலிட்டு, பார்வை முற்றிலும் உள்ளாகி, சித்தம் நிலைத்துச் சிவத்தில் தியானம் உறுதியானதும், சுத்தசக்திச் சுடரைத் தாம் தினந்தோறும் நினைத்து வேண்டிய வரம் கை கூட வணங்கினர். (கங)

கச. இதய மொன்றினர்: இன்னுயிர் ஒன்றினர்;
மதியு மொன்றினர் உச்சி மரைமிசை,
பதியை யொன்றினர் பாய்கடல் வெள்ளத்தை
நதிக ளொன்றிய நன்மையைப் போலவே.

சத்தியனும் இந்திரையும் இதயத்தில் ஒன்றுபட்டனர்; உயிரிற் கலந்தனர். அவர் மதி உச்சித் தாமரையான சஹஸ்ராரத்தில் ஒன்றுபட்டது. அங்கே அமர்ந்த பசுபதியான இறைவனை அவர் கலந்தனர். அக்கலப்பு கடல்வெள்ளத்தை இரண்டு நதிகள் ஒன்றியதைப் போன்றது, (கச)

கரு. அந்த வேளை யிறைவனிவ் வன்பரின்
சிந்தை யாகுந் திருக்குறிப் பீந்தனன்;
இந்தி ரையுள் இலங்குமக் காட்சியை
முந்து வேந்து முகத்தினிற் கண்டனன்.

தியானசாதனத்தால் அந்தர்யாமியான பரமாத்மனைக் கூடி, ஒரு வரம் வேண்டினல் அது கட்டாயம் பலிக்கும். அந்த வரத்திலேயே உயிர் மனம் மதி எல்லாம் ஒன்றுபட்டிருந் தால், அது பலிக்கும் அறிகுறியான காட்சிகள் தியானத்தில் யோகிகளுக்கு அவசியம் தோன்றும். இஃது அனுபவ உண்மை. யோகசம்யமத்தால் மகான்கள் எக்காரியத்தையும் சாதிப்பார்கள். சத்தியனும் இந்திரையும் நெடுநாள் தங்கள் மனக்குறையை இறைவனிடம் முறையிட்டுத் தியானித்து வந்தனர். உள்ளிருக்கும் இறைவன் இன்றே அவர் குறைதீர்க்க ஒரு காட்சி யளித்தான். அக்காட்சி இந்திரையின் உள்ளத்தில் தோன்றியது. தியானம் ஆனதும், மன்னன் பத்தினியின் முகத்தைப் பார்த்தான். அதில் ஒரு புதிய ஒளி வீசியது. உடனே, நடந்ததை வினவினன். (கரு)

கசா. "என்னுயிர்க் கமுதே, கற்பின் எழில்பெறும் அழகே, இன்றுன்
பொன்முகம் பூரிக் கின்ற பொருளுரை!" யென்ன வேந்தன்,
"மன்னவா! மனத்தி னுள்ளே மங்கலக் காட்சி கண்டேன்;
உன்னரும் உவகை யாலே யுதித்ததப் பூரிப்" பென்ருள்.

"என் உயிருக்கு அமுதம்போல் இன்பமானவளே, கற்பின் ஒளிவீசும் அழகியே, இன்று உனது பொன்முகம் புதிய பூரிப்பை அடைந்திருக்கிறதே, அதன் பொருள் என்ன?"

என்று மன்னவன் ஆவலாகக் கேட்டான். "என் மன்னவா! எனது மனத்தினுள்ளே ஒரு மங்கலமான காட்சியைக் கண்டேன். அந்தத் தியானக்காட்சி எண்ணரிய களிப்பைத் தந்தது. அந்தக் களிப்பாலே உள்ளம் பூரித்தது. அதனல் முகமும் பொலிவுற்றது" என்ருள் இந்திரை. (கசு)

கஎ. "பங்கய முகமும், அன்பு பாய்ந்தொளிர் மனமும் பூத்த
மங்கலக் காட்சி யென்ன வென்"னென வினவ மன்னன்,
செங்கதிர் முகத்தை நோக்கித் தேன்மொழி தேர்ந்து, நெஞ்சிற்
பொங்கிய மகிழ்வின் ஊற்று வாய்வழி பொழியச் சொன்னுள் :

"உனது தாமரை போன்ற முகமும், அன்பருவி எழுந்து பாய்ந்து அருளொளி விளங்கும் மனமும், இவ்வளவு மலர்ச்சி பெற்றதே! அதன் காரணமான மங்கலக் காட்சி என்ன, என்ன?" என்று மன்னன் வினவினன். கணவனது செங்கதிர் முகத்தை நோக்கி, தேன் போன்று இனிய மொழிகளைத் தேர்ந்து, உள்ளத்தில் பொங்கிய இன்ப ஊற்று வாய் வழியாகப் பொழியத் தனது தியானக் காட்சியை இந்திரை சொன்னுள் : (கஎ)

கஅ. "நானெனும் உணர் வொடுங்கி, நாதமும் ஒடுங்கி, யாழ்ந்த
மோனத்தி லெனுட் புகுந்த முச்சுடர்ப் பொலிவென் சொல்வேன்!
ஞானத்தி னெல்லை கண்டேன் : ஞாலத்தி லெங்கு மின்ப
வானத்தின் அரசைக் கண்டேன்; மகிழ்வினுக் கெல்லை காணேன்!

"நான் என்னும் தனியுணர் வொடுங்கி, சப்தாதி தன்மாத்திரைகளும் ஒடுங்கி, மனம் உள்ளத்தில் ஆழ்ந்த மோனத்தில் மூழ்கினேன். அப்போது, நான் என்னும் உணர்ச்சி 'எல்லாம் அவன்' என்னும் கடவுளுணர்வில் ஒடுங்கியது. சத்தம் அடங்கியது. உள் மோனம் பிறந்தது. அந்த மோனத்தில் யான் ஆழ்ந்தேன். அப்போது என்னுள் மூன்று சிகையுள்ள அருட்சுடர் புகுந்தது. ஆ, அதன் பிரகாசத்தை எப்படி வர்ணிப்பேன்! அந்த அருளொளி என்னுட் புகுந்ததும் எல்லா அறிவுக்கும் எல்லையான பரமாத்மனைக் கண்டேன்; உலகெங்கும் அவனது இன்ப விண்ணரசு நிலவக் கண்டேன்; என் மகிழ்ச்சிக்கு எல்லை காணேன்; பெருமகிழ்ச்சி கொண்டேன். (கஅ)

கசு. "பொம்மென வுலக மெல்லாம் போரிருள் படரக் கண்டேன்;
வெம்மன வரக்கர் கூட்டம் வீரிட்டுப் பொருதக் கண்டேன்;
செம்மையாந் தருமத் தாயின் சிந்தனை முகத்தைக் கண்டேன்;
'அம்ம'வென் றஞ்சி நின்றேன். அகன்றதக் கொடிய காட்சி!

"திடீரென்று உலகையெல்லாம் போர் இருள் கவர்ந்தது. பிறருக்குத் தீமையே செய்யும் மனங்கொண்ட கோர இராக்ஷஸர் கூட்டம், "ஹா ஹா" என்று கூச்சலிட்டு, வீராப்புப் பேசி, பலவகைக் கருவிகள் கொண்டு கடும்போர் புரிந்து, உலகை இரத்தக்களமாக்கக் கண்டேன். நேர்மையான தருமத்தாய் இந்தக் கொடுங்காட்சியைத் தாங்காமல் விசனித்து நின்ருள். அவளது துயர்முகத்தைக் கண்டேன்; "அம்மா, இஃதென்ன தீய காலம்!" என்று அஞ்சி நடுங்கினேன்; திகைத்து நின்றேன். அச்சமயம் திடீரென்று அந்தக் கொடிய அசுரக்காட்சி மறைந்தது! (கசு)

உ0. "மலர்தலைக் காலை சாந்த மகிழ்வுறக் கதிர்கள் வீசிப்
புலர்சுட ரொன்று கண்டேன்; புதுயுகம் பிறக்கக் கண்டேன்.
பலர்தவம் புரிந்த நல்ல பயனிதென் றுளத்திற் கொண்டேன்.
உலகைக்கண் விழித்துக் கண்டேன், உம்முகத் துவகை கண்டேன்.

"மலர்களால் மணந்து பொலியும் காலைக்குச் சாந்தக் கதிர்களை வீசி ஒரு புதிய சூரியன் உதித்தொளிரக் கண்டேன்; அஃதுடன் புதிய யுகம் பிறக்கக் கண்டேன்; முனிவர் பலர் தவப்பயனுலேதான் இந்தப் புதிய கதிரவனும் புதுயுகமும் தோன்றின என்று உள்ளத்தில் கருதினேன். தியானங் கலைந்தது. கண்விழித்து உலகைக் கண்டேன்; உமது முகத்தைக் கண்டேன்; அதில் புதிய மகிழ்ச்சி விளங்கக் கண்டேன். (௨௦)

உக. "ஈதென தருமைக் காட்சி" யென்னுமுன், மன்ன னுங்கே,
"காதலின் கனியைக் கண்டேன்; கடவுளின் கருணை கண்டேன்;
பூதலம் வாழக் கண்டேன்; புதல்வனை யினிது கண்டேன்;
ஆதலி னருளால் இன்றென் அகக்குறை யகன்ற" தென்ருன்.

இந்திரை "நாதா, இதுவே எனது அருமையான தியானக்காட்சி" என்னு முன்பே, சத்தியன் பெருமகிழ் வெய்தி, "இஃது எனக்கு மிகவும் அனுகூலமான காட்சி. உன்னுடன் நான் கொண்ட காதல்வாழ்வின் கனியைக் கண்டேன்; எனக்கொரு புதல்வன், தெய்வப் புதல்வன், பிறக்கக் கண்டேன். அவனுல் உலகெல்லாம் புதியவாழ்வடையக் கண்டேன்; இறைவன் கருணையை இன்றே கண்டேன். நாம் புத்திரனுக்காகச் செய்த தவம் நிறைவேறியது, ஆகையால் திருவருளாலே எனது மனக்குறை இன்றுடன் தீர்ந்தது" என்ருன் மன்னன். (௨௧)

௨௨. "மாசிலா மணியே, சித்தி மரபினை வாழ வைத்த
தேசுலாங் கொடியே, கற்புத் தெய்வமே, திருவே, வாடா
வாசநாண் மலரே, யுன்றன் மங்கலக் காட்சி யாலே
காசினிக் கமுத மாகுங் கனியொன்று பழுத்த" தென்ருன்.

"மாசற்ற அன்பு மணியே, சித்திவம்சத்தை வாழவைத்த தேஜஸ் வளரும் பெண் கொடியே, கற்புத்தெய்வமே, என் மனையின் இலக்குமியே, வாடாத நன்மணங் கமழும் நாண் மலர் போன்ற அழகுள்ளவளே! உனது மங்கலக்காட்சியின் பெருமையை என்சொல்வேன்! அதனுல் உலகிற்கு அமுதம் போன்று இனிமையாகும் ஒரு தெய்வக்கனி பழுத்தது. ஒரு தெய்வ மைந்தனை நீ பெறப்போகிருய்!" என்ருன். (௨௨)

தியானக்காட்சிப் படலம்
முற்றிற்று.

அ. முனியுரைப் படலம்

பாரத முனிவர்

க. இமயமுஞ் சிறிய தென்றே யேறிடப் புயங்கள் விம்மிக்
கமலக்கண் ணிரண்டு மின்பக் கதிர்களால் விரிய, உள்ளம்
விமலனை யெண்ணி யெண்ணி வியந்திடும் அந்த வேளை,
சமதம சித்தி பெற்ற தவமுனி வரனும் வந்தான்.

மேற் படலத்திற் சொன்ன தியானக் காட்சியால் சத்தியன் புயங்கள் ‘இமயமலை கூடச் சிறிது!’ என்னும்படி விம்மி உயர்ந்தன; இன்பக் கதிர்களால் கமலக் கண்கள் விரிந்தன. அவன் உள்ளம் பரம பரிசுத்தனுன இறைவனை எண்ணி யெண்ணி, அவன் அருள் திறமையை வியந்துநின்றது. அந்தச் சமயம், சமம் தமம் திதிட்சை (பொறி புல னடக்கம்) எல்லாவற்றிலும் சித்திபெற்ற தவமுனிவரிற் சிறந்த பாரத முனிவர் தோன்றினுர்.* (க)

உ. மலையின் மாண்பினன், மடங்கலின் மொய்ம்பினன்; ஆன்மக்
கலையின் ஆழியான்; ஞானமாக் கனல்விரி கண்ணுன்;
நிலவு செங்கதிர் மேனியான்; நீளுயர் மின்னல்
உலவு கின்றதை யொத்தனன், உத்தம முனிவன்.

உத்தம குணங்கள் நிறைந்த பாரத முனிவர், மலைபோன்று கம்பீரமானவர்; சிங்கத்தைப் போன்ற பலசாலி; அத்யாத்மக் கலைகளுக்கு ஒரு கடலைப் போன்றவர்; ஞானக் கனல் பரவும் விழிகளைக் கொண்டவர்; காலைச் செங்கதிரைப் போன்ற தேசு பொலியும் மேனியுடையவர்; நீண்டுயர்ந்த மின்னல் தரையில் உலாவுவதைப் போன்று அருட்சுடர் வடிவாகப் பொலிந்தார். (உ)

ங. சிறக டித்தன; தீங்குர லார்த்தன; மீது
நறும லர்களை யுதிர்த்தன நளிர்வனப் புட்கள்.
‘உறுக’ வென்றன கன்றுகள் உயர்வுறத் துள்ளி,
நிறைத வத்தினர் உயிர்க்கெலா நேயரே யன்ருே!

பாரத முனிவரின் வரவைக் கண்டு மகிழ்ந்து, புட்கள் சிறகுகளை அடித்து, இனிய குரலாற் பாடின. நளிர்வன மரங்கள் பூக்களை அவர்மேல் உதிர்த்தன. மான் கன்றுகளும், பசுங்கன்றுகளும் வானுயரத் துள்ளி ‘வருக’ என்று வரவேற்றன. நிறைந்த தவசித்தி பெற்ற தூயோர், எல்லா வுயிர்களையும் தம்முள்ளும், தம்முயிரை எல்லா வுயிர்களுள்ளும் காண்பர். அவர் எல்லா வுயிர்களுக்கும் நண்பர். ஆதலால், எல்லாம் அவரை வரவேற்றன. (ங)

ச. அருமுனி வரவு கண்டாங் கரசனும் அரசி யாரும்
வருகவென் றுவகை கூறி, மணித்தவி சிருத்தி, வாசத்
திருமலர் தூவிப் போற்றிச் சேவடி பணிந்து நின்ருர்;
குருமுனி மனங்கு ளிர்ந்து நன்மொழி கூறி னுனல்;

அரிய மாதவ முனிவர் வரவைக் கண்டனர் சத்தியனும் இந்திரையும்; எதிர்கொண்டு ‘வருக’ என்று ஏற்று, ஒரு மணிப் பீடத்தில் அமர்த்தினர்; வாசனையுள்ள அழகிய மலர்களால் அருச்சித்துத் தோத்திரம் சொல்லி, அவர் சேவடி வணங்கி நின்றனர். அன்பர்மேல் மனங்குளிர்ந்து முனிவர் மங்கல வாசகம் சொன்னுர்: (ச)

---

* காலை தியானம் ஆனதும் முனிவர் வந்து அரசனை வாழ்த்திச் சில உபதேசங்கள் செய்வது வழக்கம்.

முனிவர்

ரு. "ஆன்றநல் லறமுஞ் சீரும் அருளொடு பொருளு மோங்கி,
வான்றகு புகழ் சிறக்க, வையகம் புரந்து வாழ்வீர் !
கோன்றகு முறைசெய் யுங்கள் குலமுட னுலகும் வாழத்
தோன்றலைப் பெறுவீர் இன்பத் தூயனின் கருணை யாலே !"

"மனித வாழ்விற்கு மாண்பளிக்கும் விசாலமான தருமமும், அதனுல் வரும் எல்லா நன்மையும், இறைவன் அருளும், கல்வி கேள்வி, செல்வம் படைவலி, வெற்றி முதலான பொருளும் ஓங்கி, வானுலகிற்கே தகும்படியான (வானேங்கிய) புகழ் சிறக்க உலகையாண்டு நீடூழி வாழ்வீராக! அரசனெருவனுக்குரிய (கோன் தகு) நீதிமுறையை உங்கள் மரபு பழுதறக்காத்து விளங்குகிறது. அக்குலமும் உலகமும் எல்லா நன்மைகளும் செழித்து வாழ ஒரு தெய்விக மைந்தனை நீங்கள் இன்பமும் சுத்தமுமே வடிவான இறைவனருளாலே பெறுவீர்களாக!" (ரு)

சத்தியன், இந்திரை

சு. "எனைத்தும் உன் அருளால்" என்றே இந்திரை கண்ட காட்சி
அனைத்தையும் அரசன் சொல்லி அதன்பொருள் இயம்பக் கேட்டான்.
இனித்தமென் முறுவல் பூத்து, மனங்குவிந் திருந்து சற்றே,
தனித்தவக் கொழுந்திவ் வாறு சாற்றினுன் சாந்த மாக :—

"எமது குலம்பெறும் நன்மை எதுவும் குலகுருவான தங்கள் அருளாலேதான்" என்று உபசாரம் சொல்லி, இந்திரை அன்று கண்ட தியானக் காட்சியை அரசன் கூறி, அதன் பொருளை விளக்கும்படி முனிவரை வேண்டினுன். முனிவர் இனிய மெல்லிய முறுவல் பூத்தார்; சற்றே மனங்குவிந்து தியானத்தில் அமர்ந்தார்; பிறகு சாந்தமாக தியானக் காட்சிப்பயனை இவ்வாறு சொல்லலானுர் ;— (சு)

முனிவர்

எ. "நல்லதுந் தீயதும் நட்பும் வெம்பகைத்
தொல்லையும் தொடர்ந்துறுந் தொல்பெ ரும்புவி ;
அல்லல்செய் அரக்கரிங்(கு) அமரத் தன்மையைக்
கொல்படை கொண்டினிக் கொடுமை செய்வரால்.

"இந்த உலகம் இருவிகாரக் களன். அதில் நல்லதும் தீயதும், நட்பும் வெய்ய தொல்லை செய்யும் பகையும் தொடர்ந்து வரும். இதுகாறும் உலகில் உனது ஆட்சியில் அறம் விளங்கியது ; தெய்வத்தன்மை விளங்கியது. இனிக் காலம் மாறும். இடர்களைச் செய்து உலகை அழித்தலே தொழிலான அகம்பாவம்பிடித்த அசுரர்கள், கொலைப்படைகளைக் கொண்டு, தெய்வ குணத்தொடு பொருது கொடுமைசெய்வர். (எ)

அ. வீரியச் செருக்கினுல் வெய்ய செய்திடும்
போரியல் அரக்கராம் பொய்யிருள் கெடச்
சூரியன் போலருட் சோதி மைந்தனுன்
பேரியற் குலத்தினிற் பிறங்கு வானரோ !

"போரே தமது இயல்பாகக் கொண்ட அரக்கர், தமது வீரியபலச் செருக்கினுல் கொலை, கொள்ளை, கற்பழிவு முதலிய கொடுமைகளைச் செய்வார். அவர் பொய்யும் அஞ்ஞான அந்தகாரமும் நிறைந்த பதிதர் ; வெய்யர். அவரது பொய்யிருள் கெட ஒரு தெய்வ

வொளி வேண்டும். அசுரபலத்தைத் தெய்வ பலமே வெல்லும். உனது பெருமைதங்கிய குலத்தில் சூரியன் போன்று அருட்சோதியாக விளங்கும் ஒரு திருமைந்தன் தோன்றுவான். அவனே அரக்க இருளை நீக்கி உலகிற்கு இன்பவொளி தருவான். (அ)

கூ. மாற்றுவன் பழையன; மற்று நூதனந்
தோற்றுவன்; புதுயுகந் துலக்கி யாளுவான்;
வேற்றுமைச் சமர்களை வேரொ டெற்றுவான்;
போற்றுவன் புண்ணிய பூமியின் புகழ்!

"பழைய பழக்கங்களில் காலத்திற்கும் முன்னேற்றத்திற்கும் ஒவ்வாதவற்றை யெல்லாம் மாற்றுவான்; மாந்தர் மாசற்று, பகை பொருமையில்லாமல், ஒருகுலமாக வாழக் கூடிய புதிய உண்மைகளைத் தோற்றுவான்; உலகில் புதுய்கம் விளக்கி அந்த யுகத்திற்குத் தானே தலைவனுக ஆளுவான்; சாதிசமய சாத்திரகோத்திர வேற்றுமைகளால் வரும் சண்டைகளை வேருடன் எற்றி எறிவான். நமது புண்ணிய பூமியின் தெய்விகப் புகழை அவனே போற்றி விளக்குவான். (கூ)

க0. "இதுபொரு ளிந்திரை காட்சிக் கா"மெனப்
பொதுமறை முனிவரன் புகலக் கேட்டதும்,
புதுமகிழ் வெய்தினர்; போற்றி செய்தனர்;
முதுதவன் பதமலர் வணங்கி முன்னின்ருர்.

"இந்திரை கண்ட காட்சியின் பொருள் இதுவே!" என்று எல்லாருக்கும் பொதுவான வேதத்தை அறிந்த முனியரசர் புகலக்கேட்டனர், இந்திரையும், சத்தியராஜனும்; புதிய மகிழ்வெய்தினர்; முனிவரைப் போற்றிப் புகழ்ந்தனர்; தவத்தான் முதிர்ந்த அம்முனிவரர் பாதத்தை வணங்கி அவர்முன் நின்றனர். (க0)

சத்தியன், இந்திரை

கக. "முனிவனே போற்றி, ஜீவன் முத்தனே, யுலகிற் கெல்லாம்
இனியனே போற்றி, யெங்கள் இறைவனே போற்றி" யென்று
பனிமலர் சொரிந்து பாதம் பணிந்தவுள் ளன்ப ருக்குப்
புனிதநல் லாசி கூறிப் போயினன் புரையி லாதான்.

அன்பர் இருவரும் "முனிவனே, சிவன் முக்தனே, உலகிற் கெல்லாம் இனியனே, எங்கள் இறைவனே போற்றி!" என்று பனிமலர் தூவி மீண்டும் அடிபணிந்தனர். அவர்களுக்கு மாசற்ற தவமுனிவர் புண்ணிய ஆசிர்வாத மளித்துத் தமது தவச்சாலைக்குச் சென்ருர். (கக)

கஉ. என்னுடை மரபும் இந்த வுலகமும் இனிது வாழப்
பொன்னெளிர் புனித மைந்தன் பொலிவனென் றுவகை பூத்து,
மன்னவன் அறங்கள் செய்தான்; மகிழ்ந்தனர் குடிகளெல்லாம்.
தன்னிக ரற்ருேன் வந்த கதையினிச் சாற்று வோமால்.

"எனது குலம் மட்டுமன்று, இவ்வுலக முழுதுமே இனிது வாழ, பொன்போல் மாசற்ருெளிரும் தூயமைந்தன் எனது மனையிற் பிறந்து விளங்குவான்!" என்று மன்னன் பெருமகிழ்வடைந்தான்; தானதருமங்களைச் செய்தான். குடிகளெல்லாம் மகிழ்ச்சி யுற்றனர், தன்னிகரற்ற அந்தத் தெய்விக மைந்தன் பிறந்த கதையை இனிச் சொல்வாம்: (கஉ)

முனியுரைப் படலம்
முற்றிற்று.

௯. சுத்த ஜனனப் படலம்

௧. *இலங்கு செய்யவள் போன்றநல் லிந்திரை,
விளங்கு வெண்கலை வாணியை யொத்தனள்
பளிங்குக் கூட்டிற் பகலவன் போலொளி
துலங்கு சேயைச் சுமந்த திருவினல்.

இந்திரை மகாலக்ஷ்மி போன்ற செந்நிறவழகி. அவள் கருவுற்ருள், பளிங்குக கூட்டில் சூரியன் புகுந்து விளங்குவதைப்போன்று, அவள் வயிற்றில் தெய்விகக் குழந்தை தோன்றினன். அவனைச் சுமந்த, அவளது திருவுடல் கலைவாணியைப்போல் வெளுத்தது. (௧)

௨. மூன்று காலமு முற்ற வுணர்ந்தனள் ;
ஆன்ற வேதப் பொருளறிந் தோதினள்—
சான்ற மாதவர் சாற்றிடும் பூரணத்
தோன்றல் வந்து துலங்கிய மாண்பினல்.

கல்வி கேள்விகளிலும், தவசாதனங்களிலும் மிக்க பெரியோர்கள் "இவனே பூரணன்!" என்று போற்றும் தெய்விகக் குழந்தை தனது கருவிற் புகுந்து வளர்வதால், இந்திரை முக்கால நிகழ்ச்சிகளையும் நிறைவாக அறிந்து உணர்ந்து சொன்னள் ; பழமையான ரிஷிவாக்குகளாகிய வேதத்தின் அதிரகசியப் பொருள்களையும் அறிந்து எல்லாருக்கும் தெரியக் கூறினள். அவளுக்குப் பல சித்திகள் கூடின. (௨)

௩. மூல சக்தியின் முத்து முகமெனக்
காலை வானகை காட்டி யெழுந்தது.
சோலை மாருதஞ் சோதி யுதயத்தை
ஞால மெங்கு நவின்றதந் நாளிலே.

தெய்வக்குழந்தை பிறக்கும் நாளிலே, உலகையாளும் 'மூல சக்தியின் அழகான அருள் நகை இப்படித்தான் இருக்கும்' என்று காட்டுவதுபோல் இன்பக்காலை எழுந்தது. பசுஞ்சோலைகளில் உலாவும் மந்தமாருதம் "ஜோதி மயமான அருட் குழந்தை உதிக்கப் போகிறது!" என்று உலகமெல்லாம் மங்கலச் செய்தி சொன்னது. (௩)

௪. முழவும், பாடலும், வீரர் முரசமும்,
குழலும் வீணையுங் கொஞ்சிளஞ் சேய்களின்
மழலையும் சுப மங்கல வேதமும்,
எழுமி னென்றிசை பொங்கின வெங்குமே.

"உலகெங்கும் எழுந்திருங்கள்! தெய்வச்சேய் பிறக்கிருன். இனி நலமாகும்" என்ற இசையொலிகள் பொங்கின. மத்தளங்களுடன் பாட்டுகள் ஒலித்தன. வீரர் வெற்றி முரசார்த்தனர். குழல்கள் ஊதின, வீணைகள் இசைத்தன. இளஞ் சேய்கள் தாய்மார் இன்புற மழலைகள் பேசின. கடவுளன்பர் சுபமங்கள வேதகானங்கள் செய்தனர். இவ்வாறு இயற்கையும், உலக மாந்தரும் தெய்வச்சேயை எதிர்பார்த்து இன்புற்றிருந்தனர். (௪)

---

*கலி விருத்தம்-துள்ளலிசை ; சந்தம் : தனன தானன தான்ன தானன ;
சாப்பு தாளம் ; பிலகரி, தன்யாசி அசாவேரி ராகங்கள்.

ரு. பூக்கள் ளுண்டு புலம்பின வண்டினம் ;
பாக்க ளுண்டு பறந்தன புள்ளினம் ;
கோக்கள் பொங்குங் குடமுலே கொட்டின ;
மாக்க ளெல்லாம் புதுமகிழ் வெய்தின.

பூந்தே னுண்டு வண்டுகள் ஓங்காரம் பாடின. உலகெங்கும் பரந்த பாட்டொலி கேட்டுத் தாமும் பாடிக் கொண்டே பலவகைப் பறவைகள் வானிற் பறந்தன. பசும் புற்களை யுண்டு ஆக்கள் குடம்போன்ற முலேயிற் பொங்கும் பாலேச் சொரிந்தன. விலங்குகளெல்லாம் பகையை மறந்து புதிய மகிழ்வெய்தின. (ரு)

சு. பத்தி ஞானம் பரிவரு ளீகையால்
ஒத்தி யல்பினில் ஒன்றினர் மாந்தர்கள் ;
சத்திய யுகம் வந்ததென் ருத்துமச்
சித்தர் செப்பினர் சேம வுரைகளே.

மாந்தர் மனமொழி மெய்களில் தெய்வ பக்தியும், ஆத்ம ஞானமும், இரக்கமும் அருளும், ஈகையும், தியாகமும் வளர்ந்தன. இவற்ருல் இயல்பாகவே அவர்கள், ஒன்றுபட்டு ஓர் அருட்குலம் போல் அன்புடன் வாழ்ந்தனர். ஆத்ம சித்தர்கள், இந்நிலேயைப் பார்த்து "உலகில் சத்திய யுகம் வந்துவிட்டது!" என்று எங்கும் க்ஷேமசமாசாரம் செப்பினர். சத்திய யுகத்தின் குறிகளெல்லாம் அந்த நாளில் பொலிந்தன. (சு)

எ. வெற்பி னூற்றிற் படிந்திள வேனிலின்
பொற்ப ணிந்த புதுமலர் கொய்துடன்,
கற்ப ரசிக ணவனேக் கண்டுபின்
இற்பு குந்ததும் இன்பமொன் றெய்தினுள்.

கற்பிற் கரசியாகிய இந்திரை, மலேயருவியிற் குளித்தாள் ; இளவேனிலின் அழகை அணிந்த புதிய மலர்களைக் கொய்தாள். உடனே, தன் கணவனைத் தரிசித்து வணங்கினுள் ; பிறகு தனது மாளிகைக்குச் சென்ருள் ; அங்கே ஒரு புதிய இன்பச் சிலிர்ப்பெய்தினுள். (எ)

அ. பொன்னின் காலேயிற் பூத்த பரிதிபோல்,
உன்னு முள்ளத் தொளிர்தவத் தீயைப்போல்,
அன்னே தாங்கும் அருட்சுடர்ச் சோதியான்,
மின்ன லென்ன மிளிர்ந்து பிறந்தனன்.

பசும்பொன் போன்ருெளிரும் காலேவானிற் பூத்த கதிரவன் போலவும், தியானிக்கும் உள்ளத்தில் எழுந்து விளங்கும் தவக்கனலாகிய சிற்சக்தியைப் போலவும், அன்னே இந்திரை தன் வயிற்றில் சுமந்த அருட்சுடர் வீசும் சோதி மைந்தன், மின்னலேப்போன்று விரைவாக ஒரு திவ்யப் பிரகாசம் வீசி உலகில் வந்து பிறந்தான். (அ)

கூ. பாடி னூர்திருப் பாவையர் பாசுரம் ;
ஆடி னூர்பர மானந்தங் கொண்டவர் ;
ஓடினுர் உரைத் தார்அர சன்வரக்
கூடி னூர் ;சுப வேலேகொண் டாடினுர்.

அருகிலிருந்த பெண்கள் கடவுளே வழுத்தித் திருப்பாசுரங்கள் பாடினுர்கள் ; அவருட் சிலர் பரவசங்கொண்டு பரமானந்தக் கூத்தாடினர். சிலர் ஓடிப்போய் அரசனுக்குச் செய்தி சொன்னுர்கள். அரசன் மகிழ்ந்தோடி வந்தான். எல்லாரும் கூடி அந்தச் சுபலக்கி னத்தைக் கொண்டாடினுர்கள். (கூ)

சத்தியன்

கo. * விரைந்துதன் குலமொளிர் விளக்கை வேந்தனுங்
கரந்தனி லேந்தினன் ; களிபி றந்தனன்,
சிரந்தனை மோந்தனன் ; செல்வ முத்திட்டான் ;
கரந்தனைக் கொஞ்சினன் ; காதல் விம்மினன்.

சத்தியராஜன் தனது குலம் விளங்கும் நித்திய தீபம் போன்ற குழந்தையை விரைவாகக் கையில் ஏந்தினன்; களிப்பாற் பொங்கினன்; உச்சி மோந்து செல்வ முத்த மிட்டான்; பிஞ்சுக் கைகளைக் கொஞ்சினன்; அன்பினல் பூரித்தான். (கo)

கக. "பொங்குக பூவினிற் புனித னட்சியே ;
மங்குக தீவினை, மறைக வெம்பகை ;
தங்குக சத்திய தரும" மென்றுவான்
மங்கல துந்துமி வழங்கிற் றெங்குமே.

"சுத்தமே வடிவான புண்ணியன் அருளாட்சி உலகில் ஓங்கட்டும்; தீவினைகள் (பாபங்கள்) ஒழியட்டும்; மனிதனிடமுள்ள அசுரத்தன்மையால் வரும் கொடிய பகைகள் ஒழியட்டும்; சத்திய தருமமே எங்கும் நின்று நிலவட்டும்!" என்று விண்ணெட்ட மங்கள துந்துமி முழங்கி, அவ்வொலி எங்கும் பரவிற்று. (கக)

கஉ. வசையறு வரதனும் வந்த வாசகம்
திசைதிசை பரவலுஞ் செய்ய நல்லவர்
விசைபெற வந்தனர், வேந்தைக் கண்டனர்
இசைகளைப் பொழிந்தனர் இறைவன் வாழ்கென.

அஞ்சலி யளிக்கும் அபயவரதனுகிய புனிதன் இந்த உலகிற் பிறந்த நல்ல செய்தி எட்டுத் திசையிலும் பரவியது. அதைக்கேட்ட உத்தம நல்லோர் விரைவாகச் சித்திமா நகருக்கு வந்தனர்; சத்தியராஜனைக் கண்டு, தமது மகிழ்வை ஓதினர்; பிறகு உலகிற் கெல்லாம் இறைவனுக விளங்கும் புண்ணியச் சேயைப் பார்த்து "நீடூழி வாழ்க!" என்று இசைகளைப் பொழிந்தனர். (கஉ)

பாரத முனிவர்

கங. மலர்விழி, மலர்முகம் மலர்ந்த புன்னகை,
மலர்க்கரம் மலர்ப்பதம் மலரின் மேனியால்
இலகிடும் புனிதனைப் பரத மாமுனி
உலகள வுவகையி னுவந்து போற்றினன்.

பாரத மாமுனிவர் வந்து குழந்தையைக் கண்டார்; குவளை மலர்போன்ற விழிகள், தாமரைபோன்ற முகம், மலர்ந்த மல்லிகைபோன்ற புன்னகை, மலர்ந்த அல்லிபோன்ற கரங்கள், அனிச்சமலர்கள் போன்ற மெல்லிய திருவடிகள், ரோஜாமலர்போன்ற அழகிய திருமேனி ஆகியவற்றைக் கொண்டு விளங்கிய புனிதனுகிய அரசிளமைந்தனை, தமது ஆசியால் உதித்த புண்ணியனை, உலகவ்வளவு மகிழ்ச்சி பொங்கி வாழ்த்தி, குழந்தையின் பெருமையைப் போற்றினர். (கங)

கச. "கண்ணினில் அறிவொளி கனலும் கண்ணனை,
எண்ணரு மாதவர் ஏத்துந் தீரனை,
மண்ணக வாழ்வினில் வாய்க்கப் பெற்றவர்
புண்ணியம் புண்ணிய" மென்று போற்றினன்.

---

* சௌபாயி போல்; ஆதி தாளம்; பியாகு, நாட்டைக்குறிஞ்சிராகங்கள்; சந்தம்: தன்னன, தானன, தனன, தானனு.

“இக்குழந்தையின் கண்களில் திவ்வியஞானஜோதி கனல்கின்றது. இது தெய்வப் பிறப்பு! கணக்கற்ற மகாதபஸ்விகள் இக்குழந்தையை வாழ்த்தி வணங்கப்போகிறார்கள். இவன் அத்தகைய தீரனாக விளங்குவான்! இத்தகைய தெய்வச் சேயை, இந்த உலக வாழ்விலேயே வந்து வாய்க்கப்பெற்ற தாய்தந்தையர் செய்த புண்ணியமே புண்ணியம்!” என்று பாரத முனிவர் மீண்டும் போற்றினர். (கச)

கடு. ஓடினர், உரைத்தனர்; உரைத்த யாவர்க்கும்
சூடினர் மாலைகள்; சுகந்தம் பூசினர்;
கூடினர்; அரியநன் கொடைக ளீந்தனர்;
நாடிய பொருளெலா நயந்த தென்றனர்.

இச்செய்தி கேட்ட நல்லோர்கள் நகரமெங்கும் ஓடிச் சென்று முனிவர் வாக்கை அனைவருக்கும் சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்களுக்கு ஜனங்கள் நறுமணமாலைகளைச் சூடினர்; நல்ல மணமுள்ள சந்தனம் பூசினர்; தமது மகிழ்வைத் தெரிவிக்கச் சபை கூடினர்; அரிய பயனுள்ள நன்கொடைகள் ஈந்தனர்; தாம் விரும்பிய பொருள்களெல்லாம் கைகூடியதுபோலக் களித்தனர். (கடு)

கசு. பாலொடு, நெய்தயிர், பாய சங்களும்,
கூலமுங் கனிகளுங் கொம்புத் தேன்களும்,
ஏலுநர் ஈபவர் இருவர் கைகளுஞ்
சாலவுந் தழைத்திடத் தருமஞ் செய்தனர்.

நகரெல்லாம் அறநிலயமானது. பால், தயிர், பாயசங்கள், பானங்கள், பதினெண் வகைத் தானியங்கள் (கூலம்) பலவகைக் கனிகள், கொம்புத் தேன்புட்டிகள்-எல்லாம் அள்ளி யள்ளிக் கொடுத்தனர். அப்படிக் கொடுப்பவர் கைகளும் வற்றாது நிறைந்திருந்தன. வாங்கின வர் கைகளும் செழித்தோங்கின. அப்படி வரையாது தான தருமங்கள் நடந்தன. (கசு)

கஎ. கேட்டவர் கேட்டவர் கிளர்ச்சி கொண்டு,தம்
வீட்டிலே மகக்கனி விளைந் தாமெனக்
காட்டின ரானந்தக் கண்ண ருவியே
பாட்டுடன் அணிபெறப் பவனி வந்தனர்.

சுபசமாசாரம் கேட்டவர்களெல்லாரும் மனங்கிளர்ந்து, இன்பம் பொங்கினர். தமது வீட்டிலே அப்படிப்பட்ட அரிய பிள்ளைக்கனி விளைந்தால் எப்படி மகிழ்வரோ அப்படி மகிழ்ந்து, தம் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர், எல்லாரும் அணியணியாகச் சேர்ந்து மேளதாளங்களுடன் பாடி ஊர்வலம் வந்தனர். (கஎ)

கஅ. “மங்கல மாகுக மாந்தர் வாழ்வெலாம்!
பொங்குக பொன்மழை! புலமை யோங்குக!
நங்குறை தீர்த்தநாள்!” என்று மன்னவன்,
எங்கணுந் தானங்கள் இனிது செய்தனன்.

“பிள்ளையில்லாது நேற்றுவரை வருந்தினோம்; இன்று நமது மனக்குறை தீர்ந்தது. தெய்வமைந்தன் பிறந்தான்” என்று சத்தியராஜன் மகிழ்ந்தான். “நாட்டில் இடர்துயர் ஒழிந்து, மக்கள் வாழ்க்கை மங்களமாகுக; எல்லா விதத்திலும் என் குடிகள் சுகமெய்துக; கல்வி கலை தொழில் வாணிபம் தவம் வீரம் எல்லாம் நாட்டிற் செழிக்கப் பொன்மாரி பெய்க! அந்தப் பொன்மாரி புலவர்களை ஆதரித்துப் புலமையை வளர்க்கட்டும்” என்று நாடெங்கும் ஒவ்வோர் ஊரிலும் தன் பெயரால் ஏராளமான தானதருமங்களைச் செய்தான். (கஅ)

சுத்த ஜனனப் படலம் முற்றிற்று

கO. திருநாமப் படலம்

க. * செய்கடன் செய்முறை செய்து மன்னனுந்
துய்யநற் பெயரினைச் சூட்ட வேண்டியே,
பொய்யறு புலவர்கள் பொருந்தும் ஆலயம்
தெய்வநற் சந்நிதி திகழ நின்றனன்.

குழந்தைக்குச் செய்யவேண்டிய புண்ணியக் கடன்களை முனிவர் வகுத்தமுறையே மன்னவன் செய்தான். பிறகு, பிள்ளைக்கொரு பரிசுத்தமான பெயர் சூட்டக் கருதி, பொய்யில்லாத சத்திய வித்தகப் புலவர் கூடி, பக்தி ஞானசாதனம் செய்யும் கோயிலுட் சென்று, திவ்வியமான தெய்வ சந்நிதிமுன்னே ஒளிவிளங்க நின்றான். (க)

உ. பொன்னிடை யரதனம் பூத்த தென்னவே,
அன்னைகை விளங்கிடும் அமுதச் சேயினை,
உன்னத முனிவரும், உலகு போற்றிடும்
மன்னரும், வீரரும் வாழ்த்தி நின்றனர்.

பொன் அணியில் இரத்தினம் பூத்துப் பொலிந்தால் எவ்வளவு அழகாயிருக்கும்! அதுபோலவே அன்னை இந்திரை கையில் அமுதக் குழந்தை விளங்கினான். உன்னதமான யோகசித்தி பெற்ற முனிவர்களும், உலகம் கொண்டாடும் வேந்தரும், ஜயவீரர்களும் அச்சேயைப் பார்த்து மகிழ்ந்து வாழ்த்துகள் பாடிநின்றனர். (உ)

ங. இம்பரும் உம்பரும் இனிது வாழவே
அம்பல நடஞ்செயும் அருளி றைவனை,
என்புநெக் குருகிடும் இதயக் காதலால்,
அன்பர்நன் மலர்சொரிந் தடிப ணிந்தனர்.

கோயில் சந்நிதியில் விளங்கும் மூர்த்தி அம்பலவாணன்—நடராஜன். அவன் இந்த உலகும், விண்ணுலகும் இன்பமாக வாழவே, ஞானவெளியான பொன்னம்பலத்தில் நடம்புரிகிறான். அவன் உயிர்களுக்கெல்லாம் இகபர சுகங்களை அருளும் இறைவன். அவன் சந்நிதியில் இருந்த அன்பர்கள் எல்லாரும், என்பு நைந்துருகும் உள்ளக் காதலால், ஆர்வத்தால், அப்பெருமானைத் துதித்து, அழகும் மணமும் பொலியும் நல்ல மலர்களைத் தூவி அடி பணிந்தனர். (ங)

அன்பர்

ச. "வானெனப், புவியென, வடிவு கொண்டுலாம்
ஊனென, வுயிரென, வுயிரு ளேவளர்
நானென நடுநிலை நின்ற சாட்சியே,
தானென நிலவிடுந் தனி முதல்வனே!

"இறைவனே, நீயே வானகை விரிந்தாய். அதில் காணும் எண்ணில்லா நட்சத்திரங்களும், கிரகங்களும் ஆனாய். அக்கிரகங்களில் ஒன்றாகிய இப்பூமியும் நீயே! இச்சிறு புவியில் எண்பத்துநான்கு கோடி ஊனுடல்களைக் கொண்டு உலாவும் ஜீவராசிகளின் உயிர் நீயே! அந்த உயிருக்குள்ளே வளரும் 'நான்' என்னும் தத்துவம், ஆன்ம தத்துவம், நீயே! எதிலும் பற்றில்லாமல், அனைத்திற்கும் நடுவாகி, 'தான்' என்று நிலவிடும் சாட்சி புருஷனும் நீயே! ஒப்புயர்வற்ற தனிமுதல்வனே, தலைவனே!" (ச)

---

* ஆதி தாளம், சுருட்டி ராகம்.

ரு. " ஊட்டியும், உறக்கியும், உலக நாடகம்
ஆட்டியும், பிறவியின் அனலிற் பொன்னென
வாட்டியும், உயிரினை மாச றுத்தொளி
காட்டியும் அருளுவை கருணை வள்ளலே!

" கருணை வள்ளலே! நீ உயிர்களைப் பல பரிணமைப்படிகளில் ஏற்றி மாசறுத்து அருள் புரிந்து ஆட்கொள்ளுகிறாய்; உயிர்களை ஊட்டுகிறாய்; இரவில் உறக்குகிறாய்; உலகமாகிய அரங்கத்தில் வகை வகையாக நாடகம் ஆடவைக்கிறாய், உயிர்கள் ஆணவம், மாயை, கன்மம் என்னும் மாசுபடிந்து அசுத்தமாயிருக்கின்றன; ஆகவே அவற்றைப் பிறவிக்கனலில் போட்டு, தனு கரண புவன போகாதிகளைத் தந்து, அனுபவத்தால் பற்றறவாட்டி வாட்டி மாசறுக்கிறாய் அது பொற்கொல்லன் பொன்னைத் துரிசு நீக்கி மாற்றேற நெருப்பில் வாட்டுவதே போலும் அவ்வாறு மாசற்ற உயிர்களுக்கு, நீ உனது பரஞ்சோதியைக் காட்டுகிறாய். (ரு)

சத்தியன்

சா. " உனதரு ளிச்சையே உலகக் கோயிலில்
இனி துற வுயிர்க்கெலாம் இன்ப மோங்கவே,
எனதருஞ் சேயினை யேற்றுப் போற்"றெனப்
பனிமலர் தூவினன் பாரின் மன்னனே.

" இறைவனே! இந்த உலகெல்லாம் உனது திருவருள் விளங்கி விளையாடும் கோயிலாகும். இக்கோயிலில் உனது அருளிச்சையே இறங்கி நிறைவேறவேண்டும்; உனதருளாட்சி வரவேண்டும். இருளரக்கர் ஆட்சி ஒழியவேண்டும். எல்லா வுயிர்களுக்கும் இன்பமே ஓங்க வேண்டும்; துன்பம் நீங்க வேண்டும். இந்தப் பணிக்காகவே என் அருமைச் சேயான, என் குலவிளக்கான, இவனை ஏற்று, நடத்திக் காத்துப் பயன் படுத்திக் கொள்வாயாக!" என்று உலக மன்னனாகிய சத்தியன் இறைவனை நாண்மலர் தூவிப் பணிந்தான். (சா)

முனிவர்

எ. கருத்திலுங் கண்ணிலுங் களிது லங்கிடத்
திருத்தகு சேயினைச் செங்கை யேந்தியே,
நிருத்தங்க ளாடிடு நிமலன் பாதத்தில்
இருத்தினன் முனிவரன் இசைமு ழங்கவே.

பிறகு, குலகுருவாகிய பாரத முனிவர் கருத்திலும் கண்ணிலும் இன்பம் பொங்க, திருமிகுந்த தெய்விகக் குழந்தையைத் தமது புண்ணியச் செங்கையால் அன்புடன் ஏந்தி, ஆன்மாக்களைக் காக்கவே திருநடனம் செய்யும் நடராஜப் பெருமான் குஞ்சிதபாதத்தின்கீழ் இருக்கும்படி வைத்தார். அப்போது அன்பர் நல்லிசை முழக்கினர். (எ)

சத்தியன்

அ. " அயர்வறு தவக்கனல் அருளும் யோகியே,
உயர்குல விளக்கினுக் குவந்த சீர்பெறும்
பெயரினை யிருவெனப் பேசி யாள் கென"
வியனுறு முனிவனை வேந்து நோக்கினன்.

யோகசித்தியால் அற்புதங்கள் செய்யும் அதிசய முனிவரை அரசன் வணக்கமுடன் பார்த்து, இவ்வாறு வேண்டினன் :—" தளராமல் அரிய தவசாதனங்களைச் செய்து சித்தி பெற்று, அன்பருக்கு எப்போதும் தவக்கனலை அருளும் பரமயோகியே! இச்சேய் உயர்வான

எனது சித்தி குலத்தின் விளக்காவான். இவனாலேதான் எனது குலம் விளங்கவேண்டும். இவனுக்குத் தகுந்த சீரோங்கிய உத்தமப்பெயர் 'இதுதான்' என்று உமது ஞானதிருஷ்டியிற் கண்டு மொழிவீராக!" (அ)

முனிவர்

௯. "சித்தியின் மரபொளி, திருவி னோங்கிடும்
சத்தியன்-இந்திரை தந்த நல்லொளி,
அத்தனின் அருளொளி, ஆத்ம சோதிபோல்,
'சுத்த'னென் றுலகெலாம் துலங்கி வாழ்கவே.

முனிவர் அருளினார்: "இந்தக் குழந்தை சித்தி குலத்தைப் புகழோங்க விளக்கும் அறவொளியாகும். மன்னர்க்குரிய எல்லாத் திருக்களும் பெற்றோங்கும் சத்தியனும் கற்பரசியான இந்திரையும் பெற்ற சுபமங்கல விளக்கு. அத்தனாகிய இறைவன் தனது இச்சையை உலகில் நிறைவேற்றி அறங்காக்கவே அனுப்பிய அருள்விளக்கு. இத்தெய்வப் புதல்வன், சுத்தன் என்ற பெயருடன் நித்தியமான ஆத்மஜோதிபோல், உலகெலாம் புகழ் விளங்கி நீடூழி வாழ்க!" (௯)

௧௦. "சுத்தமே கடவுளின் சொரூபம்; ஆத்தும
சுத்தமே கடவுளைத் துலக்குஞ் சோதியாம்;
சுத்தமே சுகமெனச் சொல்வர்; ஆதலால்
* சுத்தனே யிவனெனச் சொல்லு வாமரோ!"

"கடவுளின் சொரூபம், இயல்வடிவம் சுத்தமே. கடவுள் சுத்தப்பிரமம். சிவன், விஷ்ணு முதலிய எல்லா மூர்த்திகளுக்கும் சுத்தன் என்ற பெயர் பொருந்தும். ஒவ்வொருவர் உள்ளத்திலும் கடவுள் உண்டு. அதைத் துலக்கும் சோதிவிளக்கு ஆத்ம சுத்தமேயாகும். சுத்தமான இறைவனைச் சுத்தமே துலக்கும். ஆன்றோர்கள் காமம் வெகுளி மயக்கம் அற்ற சித்த சுத்தமே இன்பம் என்றனர். ஆதலால், அத்தகைய இறைவன் பெயரால் இச்சேயைச் 'சுத்தன்' என்றே சொல்லுவாம். தூய தெய்வப் பொலிவும், ஆத்ம சக்தியும், சுத்தியும், அமரானந்தமும் பெற்று இக்குழந்தை நீடூழி வாழ்க!" (௧௦)

௧௧. எல்லையில் அருந்தவன் ஈதி யம்பலும்,
பல்லிய முழங்கின, பரந்த தீம்புகை;
மல்லிகை சண்பக மாரி பெய்தன;
நல்லிசை முழங்கின ஞால மெங்குமே!

எல்லையில்லாத அரிய தவம்புரிந்த பாரத முனிவர் இவ்வாறு சொல்லக் கேட்டதும், மேளதாளம், மத்தளம், குழல், வீணை, பாண்டில் முதலிய பல வாத்தியங்கள் (பல் இயம்) வாழ்த்தொலி முழங்கின. வாசனை தரும் அகில், சூடன் முதலிய புகைகள் எங்கும் பரவின. கடவுளுக்குத் தீபதூபம் காட்டினர். பரிசுத்தத்திற்கு அறிகுறியான மல்லிகை மலரையும், அன்பிற்கு அறிகுறியான சண்பக மலர்களையும் எல்லாரும் அள்ளிக் கடவுள் பாதத்தில் தூவினர். அன்பர் மங்கலகானம் செய்தனர்...உலகமெல்லாம் இச்செய்தி உடனே பரவியதால் எங்குமே இவ்வாறு நடந்தது. (௧௧)

---

* சிவன், முருகன், நடராஜன், நாராயணன் முதலிய தெய்வப் பெயர்களை மனிதருக்கிட் டழைப்பது உலக வழக்கம். அதனால் திருநாமங்களைச் சொல்லி மனிதர் நலம் பெறுவர். அதுபோலவே சக்தி இறைவனான சுத்த மூர்த்தியின் பெயரைச் சத்திய மைந்தனுக்கு முனிவர் இட்டார். இக்காவியத்தில் வரும் சுத்தன் கட்வுளன்று; கடவுளுக்குச் சமானமாக எதையும் சொல்லலாகாது. சுத்தன் கடவுள் அருள் பெற்ற யோகதீரனே. அவனும் சுத்தமூர்த்தி உபாசகனே.

அன்பர்

கஉ. மன்னவன் மகிழ்வுற மக்கள் யாவரும்,
" தன்னிக ரற்றதோர் தருமக் காவலா,
உன்குல மொன்றல ; வுலகில் வாழ்ந்திடும்
இன்னுயிர்க் கின்பமே இவ "னென் றேதினர்.

சத்தியராஜன் சுத்தனைக்கண்டு பெருமகிழ் வெய்தினன். மக்கள் அனைவரும் வாழ்த்துகள் கூறி இவ்வாறு மொழிந்தனர் :—"சத்தியராஜனே, உனக்கு நிகர் யாருமில்லை. நீயே இன்று ஒப்புயர்வற்ற தர்மரக்ஷகனாக விளங்குகிறாய். உனது தெய்வச்சேய் உனது குலத்தை மட்டும் புகழ்பெற விளக்கவந்தவனல்லன். இவன் உலகாசான். உலகில் வாழும் எல்லா ஜீவராசிகளும் வேண்டும் இன்பமே இவன் வடிவாக அவதரித்துள்ளது!" இதைக் கேட்ட மன்னன் பெருமகிழ் வெய்தினன். (கஉ)

தவ முனிவர்கள்

கங. " வானர சாட்சியிம் மாநி லம்பெறும் ;
ஈனவெவ் விருட்பகை யின்மை யாகிடும் ;
ஞானமா ஞாயிறு போலும் இன்னவன்,
வான்புகழ் வாழ் "கென முனிவர் வாழ்த்தினர்.

" ஞானசூரியன் போல் இக்குழந்தை அவதரித்தது. இவனால் உலகில் அரக்கர் அடங்குவர். அவரது ஈனமான வெய்ய இருட்பகை இல்லாமல் மறையும். ஒளிமுன் இருள் நிற்காது. இவனால் உலகில் அமரத்தன்மை விளங்கும். இத்தெய்வ மைந்தனின் நீண்ட புகழ் வாழ்க!" என்று தவமுனிவர் ஆசிகூறினர். (கங)

கச. வாழிய சத்தியன்! வாழி யிந்திரை !
வாழிய வையகம் வாழ வந்தசேய் !
வீழிய தானவர் ; விளங்கு நல்லருள்
சூழிய வுலகெலாம் சுத்த மங்களம் !

சத்தியன் வாழ்க! அன்னை இந்திரை வாழ்க! உலகம் வாழ அவதரித்த தெய்வப் புதல்வன் வாழ்க! அரக்கர் வீழ்க! உலகமெல்லாம் நன்மைதரும் அருளாட்சி சூழ்க! சுத்தமங்களம் விளங்குக! (கச)

சோதிடர்

கரு. நாளொடு கோளையு நன்கு பார்த்தவர்,
" வாளொடு வென்றவர் வெற்றி வெற்றியோ ?
நாளொடு மூறிடுந் தவத்தின் சக்தியால்
ஆளுவன் உலகெலாம் அமரச் சே "யென்றார்.

குழந்தை பிறந்த நாள் நட்சத்திரம் இலக்கினம் கிரகராசி முதலியவற்றைக் கணித்து நன்கறிந்த சோதிடர், பின்வருமாறு வியந்துரைத்தனர் : " இவன் தெய்வக் குழந்தை. இவன் பெரிய தவசக்தியின் ஊற்று. அந்த ஊற்று இவன் உடலெங்கும் நிறைந்துள்ளது. இவன் தாளில் அச்சக்தி ஊறிப் பொசியும். இவனது தாளைத் தொட்டமாத்திரத்தில் அச்சக்தி தொட்டவருள்ளே பாயும்; அவரை வசப்படுத்தும். அவ்வாறு இவன் உலகையெல்லாம் தனது தவசக்தியால் வசப்படுத்தி ஆளுவான். அந்த வெற்றியின் முன், பிற மன்னர் வாளால் வெல்லும் மிருகபல வெற்றியும் ஒரு வெற்றியாமோ? இவன் ஆத்ம சக்தியே வடிவான அமரச்சேய்!" (கரு

கசுசு. " பொன்னினும் அரியது புதனென் றோதுவார் ;
மின்னிய மீன்களில் மூலம் மேலென்பார்
கன்னிகை மேலென்பர் கணித்த ராசியில்
இன்னவன் பிறவியின் ஏற்ற மென்சொல்வோம் !

" 'பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது' என்பர் மேலோர். ஆண்மூலம் அரசாளும். விண்ணில் மின்னும் மீன்களில் மூலமே மேலென்பர். இராசிகளில் கன்னியா ராசியே சக்திக்கனல் அளித்து மேலாக விளங்கும் என்பர். புதன், மூலம், கன்னியா ராசியிற் பிறந்த இவனது பிறவியின் உயர்வை என்னென்றுரைப்போம்! (கசுசு)

கஎ. " ஆவணி மூலத்தில் அவத ரித்தவன்
பூவணி யாகவே பொலிவன் ; புண்ணியர்
நாவணி யெனத்திரு நாம மோதுவார் ;
பாவணி புலவர்கள் இவ்வனைப் பாடுவார்."

" ஆவணி மூலத்தில் அவதரித்த இக்குழந்தை உலகிற்கே தெய்வத் திருவணியாக திவ்விய தேஜஸைப் பரப்பி விளங்குவான். புண்ணியப் பெரியார்! இவனது திருநாமத்தையே தம் நாவுக்கு அணியாக வைத்து ஜபிப்பர். நாவில் கவிதா சக்தியை அணிந்த அருட்புலவர்கள் இவனைப் பாடிக் கொண்டாடுவார்கள்." (கஎ)

சத்தியன்

கஅ. பெரியவர் இனையவை பேசக் கேட்டலும்,
அரியபே ரின்பம்வந் தடைந்த தாமென,
வரையறப் பொன்மழை வழங்கித் தானங்கள்
புரிந்தனன் உலகினைப் புரக்குந் தந்தையே.

தன் செல்வனை மகான்கள் இவ்வாறு புகழக்கேட்ட சத்தியராஜனின் தந்தையுள்ளம் தளிர்த்தது. "யாருக்கும் கிடைத்தற்கரிய பேரின்பம் நம்மை வந்து அடைந்தது" எனக் களிப்புற்று, கணக்கில்லாமல் பொன்னை மழைபோல வாரிச் சொரிந்து, தானதருமங்களைச் செய்தான் உலகையாளும் சுத்தன் தந்தை. (கஅ)

ககூ. கவிதையுங் கல்வியுங் கலையும் வீரமும்,
நவையறு தொழில்களு நாளு மோங்கவே,
அவரவர்க் கேற்றவை யள்ளி யீந்தனன்
தவம்பெறு மைந்தனைத் தந்த தந்தையே.

நீண்டகாலம் தவஞ்செய்த பயனால் வரத்தக்க மைந்தன் சுத்தன். அவனைப் பெற்ற தந்தை, தனது நாட்டில் கவிதையும், கல்வியும், கலைகளும், வீரமும், குற்றமற்ற தொழில்களும் நாடோறும் செழித்தோங்க, அவ்வத் தொழிலாளருக் கேற்ற பொருள்களை அள்ளித் தந்தான். (ககூ)

திருநாமப் படலம் முற்றிற்று

கக. குழந்தைப் படலம்

க. * கண்ணே, மணியே, கனகக் கிளியே, கனியே, செம்
பொன்னே, புகழின் பொலிவே, புனிதத் தவமீன்ற,
விண்ணே, யமுதின் விளைவே, யழகே, யிசையாழின்
பண்ணே, யருளின் பயனே, வியனே, பகவானே !

தெய்வக் குழந்தையாகிய சுத்தன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தான். தாயாரும் சேடியரும் இக்குழந்தையைப் பாராட்டிச் சீராட்டினர். அதைக் கண்டதுமே, வாரியெடுத்து முத்தமிட்டு, "எனது கண்ணே, கண்ணுக்குப் பார்வையளிக்கும் மணியே, எங்கள் வீட்டில் வளரும் கனகக் கிளியே, அன்புக் கனியே, செய்ய பொன்னே, எமது சித்திமரபு பெற்ற புகழின் சுடரே, ஜோதிமயமே, பரிசுத்தமான தவத்தினால் வரும் விண்ணின்பமே, வானோர் உண்ணும் அமுதில் விளைந்த சுகமே, அழகனே, நல்ல குரலுடன் இசைக்கும் யாழில் எழுந்த பாட்டைப்போல் மழலைச் சொற்களால் இன்பமளிப்பவனே, இறைவன் திருவருளின் பயனாகப் பிறந்தவனே, உலகெல்லாம் வியக்கத்தக்க அற்புத மகாத்மனே...பகவானே...!" என்று கொஞ்சினர். (க)

உ. சக்திக் கனியே, சாந்தக் கனியே தவமோங்கும்
சித்திக் கனியே, செல்வக் கனியே, செகசீவன்
முத்திக் கனியே, முருகார் திருவே, ஒருமுத்தம் !
சுத்தக் கனியே, சோதிக் கனியே, சுகவாழ்வே !

"பராசக்தி யருளிற் கனிந்த சத்திக் கனியே, பரமசாந்தக் கனியே, தவத்தினால் ஓங்கி வளரும் பூரண சித்திபெற்ற ஞானக் கனியே, சித்திமரபாகிய கற்பகத்தின் செல்வக் கனியே, உலகுபோற்றும் ஜீவன்முக்திபெற்ற யோகக்கனியே, என்றும் இளமை (முருகு) பொலியும் திருவாளனே! உனக்கொரு முத்தங் கொடுக்கிறேன், மாசற்ற சுத்தக் கனியே, பரஞ்சோதிக் கனியே, சுகவாழ்வுடையவனே !" என்பர் பெண்டிர். (உ)

ங. இன்னன தீஞ்சொல் ஏந்தி யிளஞ்சேய் இனிதான
புன்னகை பொங்கும் போதுள மெல்லாம் புளகிக்கும் ;
அன்னை 'கை விசம் மா'வென விசும் அழகாக ;
தன்னிணை யில்லா இன்பம் வளர்சேய் தருமின்பம் !

மேற்சொன்னவாறு கொஞ்சும் தாயாரிடம் மதுரமான பிரியமான சொற்களைப் பெற்று, அச்சொற்களை அறிந்து, இளஞ்சேயான சுத்தன் புன்னகை பொங்குவான். அப்போது தாய்தந்தையர் சுற்றத்தார் தோழியர் நண்பர் உள்ளமெல்லாம் உவகை பொங்கிச் சிலிர்க்கும். அன்னை "கைவிசம்மா, கைவிசு !" என்று சொன்னவுடன் குழந்தை அழகாக மலர்க்கையை விசி விளையாடுவான். ஆ! நன்றாகச் செழித்து வளரும் குழந்தை தரும் இன்பம் உலகில் இணையற்ற இன்பமாகும்! (ங)

ச. அம்புலி கூவும் ; அம்மையப் பாவென் றழகாகப்
பம்பி நடக்கும் ; பைங்கிளி போலத் தமிழ்பேசும் ;
பொன்பொலி காலை பூத்து வசந்தம் அசைபூவின்
கொம்பொடு கொஞ்சும் ; கன்றுகள் பின்னே குதித்தோடும்.

* கலிநிலைத்துறை. சந்தம்: தன்னத் தனனா தனனத் தனனா தனதானா; அல்லது தன்னன தானா தந்தன தானா தனதானா. ஆதி தாளம்; நாட்டை, மோகனம் ராகங்கள்.

இளஞ்சேயான சுத்தன் கைகளை நீட்டி "அம்புலிமானே வா வா!" என்று தாய் மடியிலிருந்து கூவி யழைப்பான். "அம்மம்ம, அப்பப்ப அம்மையப்பா" என்று அழகாகத் தாவி (பம்பி) நடப்பான். பழகிய பசுங்கிளிபோல் இன்பமொழி (தமிழ்) பேசுவான். பொன் நிறம் பொலியும் காலையில் பூத்து மந்தமாருதம் அசைக்கும் பூங்கொம்பில் அவனுக்கு ஆனந்தம். அந்தக் கொம்பை முகர்வான், கொஞ்சுவான்; பாலையுண்டு துள்ளும் இளங்கன்றுகள் பின்னே தாவிக் குதிப்பான், (ச)

ரு. பன்மணி மாலை மின்னொளி பாயப் பரியாடும்;
கிண்கிணி கொஞ்சப் பந்தை யுருட்டும்; கிளர்புள்ளின்
பண்க ளிசைக்கும்; பச்சை மயில்போல் நடமாடும்;
கண்மணி நோக்கிக் "கண்ணனிதோ பார்" எனப்பொங்கும்.

குழந்தைக்குப் பல பொன்மணி மாலை சூட்டுவர். அவை மின்னலைப்போல ஒளி வீசும்படி குதிரை விளையாட்டு விளையாடுவான் சுத்தன்; மெல்லிய பாதத்தில் அணிந்த கிண்கிணிச் சலங்கை 'கலீர்' என்று கொஞ்சப் பந்தையுருட்டிக்கொண்டே ஓடுவான்; காலையில் கிளர்ந்தெழுந்து பாடிப் பறக்கும் புட்களைப்போல மழலைச் சொல்லாற் பாட்டுகள் பாடுவான்; தோகை விரித்தாடும் பச்சைமயில் போலப் பாட்டிற்கேற்றபடி நடன மாடுவான்; தாய் தந்தையரின் கண்மணிகளை உற்றுப் பார்ப்பான்; தாயாரின் கருவிழிகளைப் பார்த்து, "அம்மா! உனக்குள் கண்ணன் ஒளிந்திருக்கிறான், பார்!" என்று பொங்கி மகிழ்வான். (ரு)

சூ. செங்கதிர் காணப் பொங்கி நகைத்துச் செயவென்னும்;
திங்களை யன்புத் தீங்கனி யென்னுந்; திசையெட்டுந்
தங்க வியற்கைத் தாயெழில் காணும்; தனிநின்றே
"எங்குமென் அன்னை எங்குமென் அப்பன்" எனஓதும்.

காலைச் செங்கதிர் உதிப்பதைக் கண்டதும், ஞானோதயமானதுபோலப் பொங்கிப் பூரித்து இன்பநகை செய்வான்; "ஜயஜய ஜோதி" என்று ஆர்ப்பான் (செயவென்னும்); பூரண சந்திரோதயத்தைக் கண்டதும், "அதோ, அன்புக்கனி வானில் பழுத்தது!" என்று மகிழ்வான்; எட்டுத்திக்கும் மலை, கான், ஆறு, சோலை, மலர்களாக விளங்கும் பொன்போல் அழகிய இயற்கைத் தாயின் பொலிவைக் காண்பான்; தனியே யிருந்து சுற்றிப் பார்த்து "எங்கும் எனது அப்பன் இருக்கிறான்; எங்கும் அவன் சக்தியான அன்னை இருக்கிறாள்" என்று சொல்வான். (சூ)

எ. இந்திரை சொல்லும் இன்கதை கேட்கும்; இருகையால்
மந்தர மென்ன மத்தை யலைக்கும்; மறுராமச்
சந்திரன் என்ன வில்லை வளைக்கும்; சகசாம
சுந்தர னென்னப் பூங்குழ லூதுந் துவர்வாயால்.

தாய் இந்திரை சொல்லும் இராமயண பாரத பாகவத பெரிய புராணக் கதைகளைக் கேட்பான் குழந்தை; கதையில் கேட்டதைத் தோழருடன் கூடி நடிப்பான்; மந்தரகிரி என்று ஒரு மத்தை நட்டு இரண்டு பிஞ்சுக் கையாலும் அதை யலைத்துப் பாற்கடல் கடைவான்; தானும் இன்னோர் இராமச்சந்திரன் என்றெண்ணிக் கோதண்டத்தை வளைத்து விளையாடுவான்; உலகம்போற்றும் சியாமசுந்தரனாகிய கண்ணன்போல் பவளவாயால் பூங்குழல் ஊதுவான். (எ)

அ. பூமியை நீவும் ; பூங்குடி லாக்கும் ; பொதுவான
சாமியை நாட்டும் ; தண்மலர் தூவும் ; ‘ சிவசக்தி
ஓ’மென வோதும் ; உற்ற துணைவர் மகிழ்வெய்தத்
தேமது ரச்செஞ் சொற்கதை சொல்லுந் திருவோங்கும் !

சுத்தன் பிள்ளைப் பருவத்தில் அரண்மனைத் தோட்டத்தின் தரையைச் சுத்தம் செய்வான் ; அங்கே ஒரு குடிலமைப்பான் ; அதை மலர்களாலும் தோரணங்களாலும் அலங்கரிப்பான் ; எல்லாருக்கும் பொதுவான, இன்பப் பொருளான கடவுளுருவை அதில் நாட்டுவான் ; பனிமலர் பறித்து வந்து பூசிப்பான் ; “சிவசக்தி ஓம்” என்று மந்திரம் ஓதுவான் ; தன்னுடன் விளையாடும் தோழர்கள் மகிழும்படி, இனிய மதுரமான செவ்விய சொற்களால், நல்ல கதைகளைச் சொல்லுவான். இவ்வண்ணம் அவன் வடிவழகிலும் அருளழகிலும் ஓங்கி வந்தான். (அ)

கூ. தேரணி யாக்கித் தோழரோ டாடுந் திருநாளால்
ஊரணி யாக்கும், கொட்டு முழக்கும், உலகாளுந்
தோரணை காட்டும் ; துட்ட ரடங்க நலமெல்லாம்
பூரண மாகப் போற்று மிளஞ்சேய் புகழோங்க !

இளஞ் சுத்தன் தோழருடன் தேர் கட்டுவான் ; அதற்கு அலங்காரம் செய்வான் ; சாமிவைத்துத் திருவிழா நடத்துவான். அவன் செய்யும் குட்டித் திருவிழாக்கள் அந்தச் சித்திமாபுரிக்கே ஓர் அணியாக விளங்கும். தோழருடன் திவ்விய நாமங்களைச் சொல்லி அவன் மேளங் கொட்டுவான் ; தோழர்களைக் குடிகள்போலும் மந்திரிகள்போலும் வைத்துத் தான் செங்கோல் ஏந்தி நாட்டை ஆட்சிபுரியும் தோரணைகளைக் காட்டுவான் ; துஷ்டர்களை அடக்குவான் ; நன்மைகளையெல்லாம் பரிபூரணமாகப் போற்றுவான். இவை அவனது புகழை ஓங்கச் செய்யும். அவன் ஆடலைக் கண்டவர்கள், “பிற்காலம் இவன் அரிய பெரிய நீதி மன்னனாவான்” என்பர். (கூ)

க0. வீரன் இருந்தான், வீரன் எழுந்தான், கரம்வீசி
வீரன் விரைந்தான், வீரன் மொழிந்தான், விறலோங்கும்
வீரன் வளர்ந்தான், வீரன் உயர்ந்தான் ; இனியெய்தும்
வீரன் பொலிந்தான் வீரமணிச் சேய் விளையாட்டில்.

இந்த வீரமணிக் குழந்தை, தனது விளையாட்டிலேயே இனிவரும் மகா வீரனை விளக்கினான் : அவன் உட்காருவதும், வீரன் போலவே ; எழுந்திருக்கும்போதும் வீரனே ; கை வீசி விரைவாக நடக்கும்போதும் வீரனே ; அவன் பேசும்போதும் வீரவுரைகளே பேசினான் ! அவன் வளர்ச்சியைக் கண்டாலே “இவன் சக்தி பெற்ற வீரனாவான்” என்பர். அவன் வீரத் தன்மையில் உயர்ந்தான். இவ்வாறு சுத்தன் எப்படிப் பார்த்தாலும் என்ன செய்தாலும் வீரத் திறனுடன் விளங்கினான். (க0)

வேறு

கக. * பாரினுக் காருயிர் போன்றநம் பாலனைச்
சீரிளஞ் செல்வனைச் செஞ்சுடர் வண்ணனை
நேரினிற் கண்டவர் நெஞ்சமின் புற்றனர்
காரினைப் பைம்பயிர் கண்டதைப் போலவே.

உலகிற்கே அருமையான உயிர்போன்றவன் சுத்தன். அவனாலேதான் உலகில் அறம் நிலைக்கவேண்டும். நமது அருமைக் குழந்தை செஞ்சுடர்போன்ற அத்தகைய

* கலிவிருத்தம். சந்தம் : தானன, தானன, தன்னன, தானன. ஆதி தாளம். காபி. செஞ்சுருட்டி, கமாஸ் இராகங்கள்.

தேஜஸ்வி. அவனை நேரே கண்டவர்கள் மழை மேகத்தைக் கண்ட பசும் பயிர் போன்று உள்ளத்தில் இன்பமுற்றனர். (கக)

கஉ. "முத்து தா, மொஞ்சியுண், மோகனக் கண்ணனே,
சித்தனே, சித்தியின் செல்வனே, செம்மலே,
எத்தனை இன்ப"மென் றேந்திழை மாதரார்
மெத்தெனக் கொஞ்சுவார் மென்முலை விம்மவே.

அணிமணிகளை ஏந்தும் அழகிய மாதர்கள் சுத்தனை மார்போடணைத்து "எல்லாம் வல்ல சித்தனே, சித்திமரபின் செல்வனே, வீரச் செம்மலே, உன்னைக் காண்பதும் அணைப்பதும் எவ்வளவு இன்பமா யிருக்கிறது! ஒரு முத்தந் தா; இதோ பால் (மொஞ்சி) குடி! எங்கள் மனத்தைக் கவர்ந்த மோகனக் கண்ணனே!" என்று மெத்தெனக் கொஞ்சுவர். அச்சமயம் அவர் முலை பால்பெருகி விம்மும். அவ்வளவு பேரன்புடன் பெண்கள் அவனை நேசித்தனர். (கஉ)

கங. புண்ணியப் போதனைப் போற்றிடாப் போதெலாம்
விண்ணவர் வாழுரு வெற்றுநா ளென்பரால்;
கண்மணிப் பிள்ளையைக் காதலாற் கண்டவன்
எண்ணமே யாயினர் இந்நிலத் தோரெலாம்.

புண்ணிய சீலனாகிய இந்த ஞானச்சேயை, உலக குருவாய் விளங்கப்போகும் இந்தத் தெய்வக் குழந்தையைப் போற்றிப் புகழாத நாளெல்லாம் தாம் வாழாத வெறுமையான, வீணான நாள் என்று தேவர் நினைத்தனர்; ஏனெனில், இந்தக் குழந்தையாலேதான் உலகைப் பிடித்த நாத்திக அசுரக்கொடுமை யொழிந்து தெய்வ வாழ்க்கை சிறக்கவேண்டும். கண்மணி போன்ற திருக்குமாரனை இந்த நிலத்தில் வாழும் மக்களெல்லாம் உள்ளன்புடன் பார்த்து மகிழ்ந்து அவன் எண்ணமே ஆனார்கள்; இந்தக் குழந்தையே பிற்காலம் தம்மைக் காக்கும் உலகக்காவலன் என்றுணர்ந்து அவனையே தியானித்தனர். (கங)

கச. மூன்றுகா லந்தனை முற்றவுங் கற்றநல்
ஆன்றவர் போற்றிடும் அற்புதச் சுத்தனை
வான்றருஞ் சோதியை வையகத் தாருயிர்
போன்றுநே சித்துளம் பொங்கினர்...விந்தையென்?

அற்புதக் குழந்தையான சுத்தனை மூன்று காலமும் நன்றாகக் கற்றறிந்த திர்க்க தரிசிகளான ஆன்றோர்கள் போற்றிப் புகழ்ந்தனர். அத்தகைய குழந்தையை, தேவருலகி லிருந்து அவதரித்த அருட்சோதியான அக்குழந்தையை, எல்லாரும் உலகிற்கே உயிர்போல் நேசித்தனர்; வானம் அருளும் சூரிய ஜோதியைக் கண்டு மன்னுயிர்கள் மகிழ்வதுபோலவே, உலகிற்கெல்லாம் ஞானவொளியான சுத்தனைக் கண்டு உள்ளம் பொங்கினர். அதில் விந்தையென்ன? சுத்தன் தெய்வக் குழந்தையன்றோ? (கச)

கரு. அணிகளைச் சூட்டுவார்; அன்புபா ராட்டுவார்,
பணிகளைக் காட்டுவார்; 'பார்புகழ் வீரமா
மணிகளைப் போலநீ வாழ்'கெனப் பேசுவார்;
துணிவருள் சூரனைச் சுத்தனிற் காணுவார்.

பெற்றோர்கள் சுத்தனுக்கு அணிமணிகளை அருமையாகச் சூட்டி அழகு பார்ப்பார்; 'கண்ணே, முத்தே' என்று பிரியமாகப் பேசி அன்பு பாராட்டுவார்; அவன் பிற்காலம் செய்யப்போகும் அருட்பணிகள் இன்னவை, தேசத்திற்கும், தெய்வத்திற்கும் செய்யவேண்டி

யன இன்னவை என்று குறித்துக் காட்டுவார்; "ஐய, நீ உலகம் புகழும் இராமன் விஜயன் போன்ற பெரிய வீரசிகாமணியாக வாழ்க!" என்று வாழ்த்துரைப்பார்; சுத்தனைப் பார்த்த வுடன் "இவனுள் எங்கள் அச்சமொழித்து அபயமளிக்கும் சூரன் இருக்கிறான்" என்பதைக் கண்டு போற்றுவார். (கரு)

கசா. அரியசெஞ் சொல்லுடன் ஆடலும் பாடலும்,
உரியநற் செய்கையும் ஓங்குயர் தன்மையும்,
பெரியனைப் பேசிடும் பிள்ளையுங் கற்றிடத்
தெரிவுயர் குருகுலஞ் சேர்ந்ததைச் செப்புவாம்.

அவனுடைய அரிய செய்ய மாசற்றசொல்லும் ஆடலும், பாடலும், இயல்பிற்குரிய செய்கையும், நாளும் ஓங்கி வளரும் சான்றாண்மையும், உயர்ந்த குணமும் "இவனே பெரிய வன், மகாத்மா" என்று பேசும். அத்தகைய பிள்ளையும் கல்விப் பயிற்சி பெறக் குருகுலத் திற் சேர்ந்தான். அது முனிவர் குருகுலம்; அறிவளிப்பதில் (தெரிவு) மிகவும் சிறந் தோங்கியது. சுத்தனின் குருகுலவாசத்தை இனிச் சொல்வாம். (கசா)

குழந்தைப் படலம்
முற்றிற்று

கஉ. குருகுலப் படலம்

க. அளந்தநல் ஆயுளும், அறமும், ஆற்றலும்,
தெளிந்தநல் லறிவுடன் சீர்பெற் றோங்கவும்,
உளந்தனைப் பயிற்றவும், உயிரைப் போற்றவும்
இளந்திரு வயதினிற் கல்வி யீதலே.

உலகில் மானிடராகப் பிறந்தவர்க்கு ஆயுள் இவ்வளவு என்று அளந்து வைத்திருக்கிறது. அந்தக் காலத்தில் ஆயுளை நல்ல வழியில் செலவிட வேண்டும். உலகின் இருவிகாரப் போரை எதிர்த்து வெல்லும் ஆற்றல் வேண்டும். வாழ்வின் அடிப்படையில் அறம் நிலவ வேண்டும். தெளிந்த அறிவு வேண்டும். இவையெல்லாம் சிறப்பாக நல்ல வளர்ச்சி பெற வேண்டும். அறிவு ஆற்றலுடன் உள்ளமும் தகுந்த வளர்ச்சி பெறவேண்டும், அதற்குரிய உட்பயிற்சிகளைச் செய்யவேண்டும். தன் உயிரையும், அதற்கு ஆதாரமான உடலையும் போற்றும் வழிகள் தெரியவேண்டும். பகைவரிடமிருந்தும், பிணி துயர்களிடமிருந்தும் உயிரைக் காக்கத் தெரியவேண்டும். இவற்றிற்காகவே இளந்திரு வயதில் குழந்தைகளுக்குக் கல்வி தருதல் எந்நாட்டிலும் வழக்கமா யிருக்கிறது. (க)

சத்தியன்

உ. உன்னதப் புலமையோ டுதித்த தெய்வச்சேய்
துன்னறி வொளியினைத் தூண்டி வேண்டிய,
மன்னறம் பயின்றிட வாய்மை வேந்தனுந்
தன்னிக ரற்றமெய்த் தவனை நோக்கினன்.

சுத்தன் உன்னதமான அருட்புலமையுடன் பிறந்த தெய்வச்சேய்; அவனுள் இயல்பாகவே அனைத்தையும் அறியும் நிறையறிவு துலங்குகிறது. அந்த அறிவைத் தூண்ட வேண்டும். அவன் தனக்குப் பிறகு உலகாளவேண்டு மாதலால், அரசருக்குரிய அறத்தைப் பயிலவேண்டும். அதற்காக அரசன் தன்னிகரற்ற, உண்மைத் தவசித்தராகிய பாரத முனிவரை எதிர்பார்த்தான். (உ)

ங. "கற்பது கற்றுநின் றறத்தைக் காத்திடப்
பொற்புறு குருகுலம் பொருந்தி வாழ்" கென்றே
அற்புத மைந்தனை யளிக்க, மாதவன்
"கற்பகங் கனி"கெனக் களிப்போ டேற்றனன்.

"மகனே, நீ கற்கவேண்டிய கலைகள் பல. அவற்றைக் கற்று, கற்றவழி நின்று, உனக்குரிய உடலறம், உயிரறம், உள்ளறம், இல்லறம், நாட்டறம், அரசறம் ஆகிய அனைத்தையும் காக்கவேண்டும். அதற்கு, பாரத முனிவர் குருகுலத்தில் நீ சேர்ந்து கற்பாயாக!— முனிவரே என் மகனை நல்லமுறையில் பயிற்றியருள்க!" என்று சத்தியன் சுத்தனை முனிவர் கையில் கொடுத்தான். "மரங்களில் கற்பகம் மாண்புற்றது. மாந்தரில் சுத்தன் தெய்வப் பொலிவுள்ளவன். அவன் கற்பகம்போல் தெய்வஞானக்கனி பழுத்தோங்கி, உலகிற்கெல்லாம் தன் குடையின் கீழ் உரிமையும் உணவும் அறிவும் அருளுக!" என்று முனிவர் சுத்தனைத் தமது பாதுகாப்பில் ஏற்றார். (ங)

இந்திரை

ச. "செழுந்தவச் செல்வனே தீர னாகிநீ,
எழுஞ்சுடர் வனப்புடன் இலகு ஞானமும்,
பொழிந்திடு வானெனப் புகழும், ஈகையும்,
தழைந்தினி தோங்"கெனத் தாய்மொ ழிந்தனள்.

அன்பு மிகுந்த தாய் இந்திரை, தனது குலக்கொழுந்தை இவ்வாறு ஆசீர்வதித்தாள்: "எங்கள் செழுந்தவத்தால் வந்த செல்வனே, நீ தீரனாக வாழ்வாயாக! எழும் கதிரவன் போன்று உனது வனப்பு (தேஜஸ்) பொலிக! உனது கலையறிவும் கடவுளறிவும் இலகுக! உலகில் உயிரும் பயிரும் தழைக்கப் பொழிந்திடும் மேகம்போல, நீ புகழும் ஈகையும் செழித்து இனிது வளர்வாயாக!" (ச)

சத்தியன்

ரு. "அறிவுடன் ஆண்மையும், அருளும் இன்பமும்,
அறம்பொருட் செழிப்புடன், ஆத்ம ஞானமும்,
பொறிபுல னடக்கமும், புனித வாழ்க்கையும்
திறமுடன் பெறுகநீ, தெய்வ மைந்தனே!

"தெய்வத்தன்மை பொருந்திய என் மைந்தனே! நீ குருகுலத்தில் நல்ல கலையறிவும், ஆட்சிக்கேற்ற ஆண்மையும், வீரமும், கடவுளருளும், ஆருயிர்களிடம் அன்பும், உள்ளின்பமும், பொறிபுலன்களைத் தீயவழியிற் செல்லாது காத்தடக்கும் வைராக்கியமும், பரிசுத்தமான வாழ்க்கையும் நிறைவாகத் திறமையுடன் பெற்று வாழ்வாயாக! (ரு)

சா. "குருவர னேமுது குரவர் போன்றவன்;
குருமனை யேயினிக் கொற்ற மாளிகை;
குருவடி யேநலங் கொடுக்குங் கற்பகம்
குருவருள் பெறுகநங் குலம் விளங்கவே!

"பரிசுத்தமான செல்வனே! மாணவருக்குக் குருவே தெய்வம். அவரே முதுகுரவரான தாயும் தந்தையும். அவரது குருகுலமே இனி உனக்கு அரசமாளிகை போலாம். குருவின் திருவடி நிழலே உனக்கு எல்லா நலங்களையும் தரும் கற்பகம் போலாகும். நீ குருவின் திருவருளைப் பெறுவாயாக! அதனால் நமது சித்திகுலம் நீடூழி வாழும். (சா)

எ. "உத்தமக் குருவடி யுள்ளங் கொண்டுநீ
பத்தியும் பணிகளும் பரிந்து போற்றியே,
வித்தக னாகியென் குலவி ளக்கென
நித்திய மோங்குக நிமலச் செல்வனே!

"பாரத முனிவர் உத்தமமான சத்குரு. அவர்தம் திருவடிகளை உள்ளத்தில் கொண்டு, குருவரனையே தெய்வமெனக் கருதிப் பக்திசெய்! அவர் பணிகளை மனமூன்றிச் செய்! அதனால் அவரருள் கிடைக்கும். நீ வித்தகனாவாய், சிறந்த கலைஞானியாவாய், எனது குலவிளக்காக நித்தியம் வாழ்வாய்! (எ)

அ. "கண்ணெனுங் கல்வியைக் காக்கும் மாணவர்,
உண்ணலும் உறங்கலும் உடை யணிதலும்,
எண்ணலும் இயற்றலும் இயம்பல் யாவினும்,
உண்மையும் தூய்மையும் ஒளிர வாழ்வரே!

"கல்வி மாந்தருக்குக் கண்போன்றது. அதைக் கண்போலக் கவனமாகப் போற்ற வேண்டும். பிரமசரிய விரதம் பூண்டு கல்வி கற்கும் மாணவர், குருவின் கட்டளைப்படியே பரிசுத்தமான எளிய உணவை அளவாகக் கொள்ளவேண்டும்; தீய சிந்தனைகள் இல்லாமல் தனியே பரிசுத்தமான இடத்தில் உறங்கவேண்டும்; தமது கையால் நூற்று எளிய ஆடையணியவேண்டும். இடம்பம் கூடாது. எண்ணத்திலும், செய்கையிலும் சொல்லிலும் உண்மையும், பரிசுத்தமான ஒழுக்கமும் பேணவேண்டும். இவ்வாறு வாய்மையும் தூய்மையும் நிலவ வாழ்வதே பிரமசாரிகள் கடமையாகும். (அ)

கூ. "சீரிய முனிவரன் செய்யு நன்மையால்,
வீரமும் சக்தியும், வேந்தர்க் காகிய
காரிய வெற்றியும் கல்வி கேள்வியும்
பூரண வாழ்க்கையும் பொலிக, செல்வனே!"

"தவயோகங்களால் பெருமைபெற்ற முனியரசர் உனக்கு எல்லையற்ற நன்மை செய்வார். நன்மாணவனு யிருந்து அந்த நன்மையை நீ பெற்று உலகில் நிகரற்ற வீரனுகி, அறங் காப்பாயாக! அதற்கேற்ற யோகசக்தியும் தேகசக்தியும் உனக்கெய்துக! ஆத்ம சக்தியும் ஆயுதபலமும் நீ பெறுக! நீ அரசர் குலத்தில் பிறந்தவன். எனக்குப்பின் உலகாளுவோன், உனக்குரிய மன்னறத்திற் சிறந்து அரசியற் காரியங்களில் வெற்றி பெறுவாயாக! அதற்கேற்ற அறம் பொருளின்ப அறிவையும் பயிற்சியையும் நீ பெறுக! கல்வி கேள்விகளில் நீ ஒப்புயர்வற்று விளங்குக! இவ்வாறு எல்லாவிதத்திலும் புலமை பெற்று, இகமும் பரமும், யோகமும் போகமும், அறமும் ஆட்சியும் பொருந்திய பூரண வாழ்வுடன் பொலிவாயாக, என்செல்வனே!" (கூ)

சுத்தன்

கய. இன்னன விளம்பித் தாதை இனிதுற மகனை நோக்கச்
சென்னியிற் கரங் குவித்துச் சேவடி தொழுது மைந்தன்,
"சொன்னநன் மதியைப் போற்றித் துகளறக் கல்வி கற்றுப்
பன்னிரண் டாண்டென் ஆசான் பணித்திறம் பயில்வ"னென்முன்.

இவ்வாறு நன்மொழி கூறித் தந்தை சத்தியன் இனிய புன்னகையுடன் மகனை அன்பாகப் பார்த்தான். மகன் வணக்கமுடன் தலைமேல் கைகுவித்து, தாய்தந்தையரின் சேவடியைத் தொழுது, "தாங்கள் சொன்ன புத்திமதியைக் கடைப்பிடித்து, குற்றமில்லாமல் நிறைவாகக் கல்விகற்றுப் பன்னிரண்டு ஆண்டுகள் என் குருவாகிய பாரதமுனிவர் பணிகளையே சாதனமாகத் திறமையுடன் செய்துவருகிறேன்' என்று சொன்னுன். (கய)

கக. "தருதிர் நல் லாசி" யென்று தாள்பணி சேயைப் பெற்ருேர்
"வரதநீ வாழ்க" வென்று வளர்த்தகை யால் அணைத்தே,
குருபர னிடங் கொடுத்தார்; குணநிதி முனிவ னுங்கே
"பெருகு மானந்த" மென்னப் பிள்ளையை நடத்திச் சென்ருன்.

"உங்கள் ஆசியைத் தருவீர்களாக!" என்று மீண்டும் சுத்தன் தாள்பணிந்து நின்ருன். பெற்ருேர் அன்புபொங்கி, வளர்த்த கையினுல் மகனை அணைத்து, 'வரத நீ வாழ்க!' என்று ஆசியளித்துப் பரமகுருவான பாரதமுனிவரிடம் ஒப்புவித்தார்கள். குணநிதியான முனிவர் "இனி, இந்தப் பிள்ளை எனது குருகுலத்தில் கற்பதால் எனக்கும் உங்களுக்கும் உலகிற்கும் எல்லா உயிர்களுக்கும் இன்பம் பெருகும்" என்று மகிழ்ந்து, மாணவனை நல்ல வேளையில் குருகுலத்திற்கு அழைத்துச் சென்ருர். (கக)

கஉ. வாத்தியம் பல முழங்க, வாழ்த்துகள் ஒலிக்க, வேத
சாத்திரம் பல முழங்க, தமிழ்மறை முழங்கத் தெய்வத்
தீத்திகழ் முனிவன் கோயில் சிறப்புறச் சென்றெல் லாரும்
"பூத்தருள் பொலிக !" வென்று புதல்வனை விடுத்து வந்தார்.

எல்லாரும் பவனியாகச் சென்றனர், மங்கள வாத்தியங்கள் பல முழங்கின. பெரியார் வாழ்த்துகள் ஒலித்தன. வேதசாத்திரங்களை வித்தகர் முழக்கினர். செந்தமிழ் மறைகளான தேவார திருவாசக திருவாய்மொழி அருட்பாக்கள் முழங்கின. தெய்வக்கனலும், ஓமத்தீயும் விளங்கும் பாரத முனிவர் கலைக்கோயிலுக்கு அனைவரும் சென்றனர். 'குருவின் அருள்பூத்து நீ ஞானத்தில் ஓங்கிப் பொலிக!' என்று வாழ்த்திப் பெற்றோர் மற்றோர் அனைவரும் குருவிடம் குழந்தையை விடுத்து வந்தனர், (கஉ)

கங. அன்புந் தெய்வமும், அருளுடன் அழகணி யறிவும்
நன்புங் கொண்டொளிர் நவையறு குருகுல மதனில்
இன்ப மாகுநல் இயற்கையின் மடிமிசை வளர்ந்தான்
மன்ப தைகளைக் காத்திடும் மங்கலப் புதல்வன்.

பாரதமுனிவர் குருகுலம் அன்பும், தெய்வப் பொலிவும், திருவருள் விளக்கமும் மலரும் கனியும் பசுமையும், ஆறும் மலையும் கொண்ட அழகும் அணியும் நல்ல அறிவும் ஒன்றையொன்று கூடி நட்பாடுவதுபோல் விளங்கும் சுகமான இடம். அதில் இன்பமான இயற்கையின் மடியில் மன்னுயிரைக் காக்கவே அவதரித்த மங்கலப் புதல்வனாகிய சுத்தன் வளர்ந்தான். (கங)

கச. திருந்து செந்தமிழ், ஆரியம், ஆங்கிலம், இந்தி
பெருந் தொகையினர் பேசிடும் பிறசில மொழிகள்,
வருந்திக் கற்றனன் வாணியின் வரம்பெறு புலவர்
விருந்தெனப் புகழ் வியன்கவிக் கலையிலுந் தேர்ந்தான்.

உலகில் நன்றாக, திருத்தமாக இலக்கண வரம்புடன் அமைந்த செந்தமிழ், ஆரியம், ஆங்கிலம், ஹிந்துஸ்தானி, இன்னும் பெருந்தொகையினர் பேசும் வங்காளி, மராதி, குஜராத்தி, தெலுங்கு, பிரெஞ்சு முதலிய பாஷைகளைச் சுத்தன் பாடுபட்டுக் கருத்தூன்றிக் கற்றான். மகாசரஸ்வதியின் வரம்பெற்ற அருட்புலவரும் விருந்தாக மதித்துப் புகழும்படி, அற்புதமான கவிதைக் கலையிலும் அவன் தேர்ச்சி பெற்றான்; இலக்கிய இலக்கணங்கள் படித்ததுடன் கவிகளும் புனைந்தான். (கச)

கரு. வேந்தர்க் காகிடும் வீரமும் போருடன் பொருளும்,
சாந்தர்க் காகிடும் யோகமுந் தருமமும் தவமும்,
தேர்ந்த நீதிசெய் முறைமையுந் திருவுறப் பயின்றான்—
வாய்ந்த சுத்தசன் மார்க்கத்தின் வாய்மையே யானோன்.

சுத்தன் எல்லாருக்கும் பொதுவான சமரஸசன்மார்க்கத்தின் உண்மையே உருவானவன். அவன் அரசருக்குரிய வீரக்கலை, போர்க்கலை, பொருள்நூல், பெரியார் தேர்ந்தெடுத்த வழிப்படி நீதிச்செங்கோல் செலுத்தும் வகை, பரமசாந்தர்களான மகான்களுக்குரிய யதி தருமங்கள், தவயோக சாதனங்கள், ஹடராஜயோகங்கள் அனைத்தையும் திருவோங்கப் பயின்றான். (கரு)

கசா. கவியுங் கானமும் கணக்குடன் அறிவு நூல் வகையும்,
புவியில் அற்புதம் புரிந்திடும் பொறிகளின் அமைப்பும்,
செவியுங் கண்களுஞ் சிந்தையுந் திருந்திடக் கற்ருன்
தவமுங் கல்வியுந் தந்தநன் முனிவரன் அருளால்.

சுத்தனுக்குப் பாரத முனிவர் தவசாதனங்களுடன் கல்வியும் அளித்தார். அவரருளால் அவன் கவிப்புலமை, இசைப்புலமை, எண், எழுத்து, கோட்டுக் கணிதங்கள், உடல் நூல், வைத்தியம், சோதிடம், பூதநூல், வேதிநூல், ஒளிநூல், தாவரம், உயிர் நூல், மதிநூல், மானிடநூல், தரைநூல், உலகில் அற்புதங்கள் செய்து நாகரிகத்தையும், மனித வாழ்க்கையையும் முன்னேற்றும் புகைவண்டி, கப்பல், பறவைக் கப்பல், மின்சாரம், ரேடியோ போன்ற பொறிகளின் நுட்பம், அமைப்பு முதலியவற்றையும் கற்ருன். தன் காதுகளால் ஆசிரியன் சொல்வதைக் கேட்டு, சிந்தித்து, கண்களால் நேராகக் கண்டே சுத்தன் அனைத்தையும் திருந்தக் கற்ருன். (கசா)

கஎ. வையம் ஓங்கிட வந்தவன் வளர்பிறை போலே
தெய்வ ஞானமும் உலகியல் அறிவுடன் சிறக்க,
துய்ய சாதன வாழ்க்கையுஞ் சுருதியும் அளித்த
செய்ய மாதவன் சேவையே சேவையிற் சிறப்பாம்.

உலகம் ஓங்கி வளர வந்தவர்கள் குழந்தைகள். அவர்களுள்ளும் தெய்வாம்சம் பெற்று உலகரட்சகை வந்தவன் சுத்தன். அவன் வளர்பிறைபோல ஆத்மஞானமும், உலகியல் அறிவும் பெற்றுச் சிறக்கத்தக்க யோகசாதனங்களையும் கலைப்பயிற்சிகளையும் கொண்ட வாழ்க்கையை வகுத்து, அவனுக்கு வேதங்களையும் அருள் நூல்களையும் நல்ல முறையில் அளித்த செய்ய மாமுனிவன் சேவையே எல்லாத் தொண்டுகளினும் சிறந்து விளங்குவதாம். கல்வி கற்பித்துக் குழந்தைகளை ஆளாக்குவதினும் அரிய பெரிய சேவை பிறிதில்லை. அதிலும் சுத்தனைப்போன்ற குழந்தைகளைப் பயிற்றுவதினும் பெருமை வேறில்லை. (கஎ)

கஅ. ஓங்கு மாமலை ஓமெனும் அருவியும், அன்னம்
தூங்கு தாமரை வாவியும், தோகையுங் குயிலும்
நீங்கு ருப்பசுஞ் சோலையும், நீலவான் பொலிவும்,
ஊங்கு யர்கலை தூண்டின வுத்தம னுளத்தே.

உத்தம மாணவனுகிய சுத்தன் குருகுலத்திலிருந்து நூல்களைமட்டும் படிக்கவில்லை. இயற்கையை ஆராய்ந்து பல கலையறிவுகளை அவன் பெற்ருன். உயர்ந்த மலைகளினின்றும் ஓங்காரத்துடன் தாவிவரும் அருவி, அன்னங்கள் தூங்கும் அகன்ற தாமரைக்குளங்கள், மயிலும் குயிலும் நீங்காத பசுஞ் சோலைகள், மேலே விரிந்த நீலவானில் பொலியும் சூரிய சந்திர நட்சத்திரங்கள்—இவையெல்லாம் அவனுக்கு இயற்கையாகக் கலையறிவையும் கடவுளறிவையும் உயர்ந்த ஞானத்தையும் புகட்டின. (கஅ)

கக. சோதி மாதவன் சுடர்பெறும் அறிவினைத் தூண்ட,
நீதி மந்திரி யினிவரும் நிருபனை யமைக்க,
ஆதி சக்தியின் அருளொளி யாகிய மைந்தன்
மேதினிக் கொரு வரமணி விளக்கென மிளிர்ந்தான்.

அருட்சோதி மாதவனுகிய பாரதமுனிவர் தெய்வச் சுடர்பெறும் உன்னத சுத்தான்ம ஞானத்தைத் தூண்டினர். நீதிமந்திரியான சித்திமான், அரசியல் முறையைப் பயிற்றி

இனிவரும் அரசனை ஆக்கினன். ஆதிசக்தியின் அருளொளியேயான இந்தத் தெய்வச்சேய் உலகிற்கே ஒரு வரம்பெற்ற மணிவிளக்குப்போல், நித்திய ஞானதீபம்போல், பொலிந் தான். (கசு)

உ௦. அன்பர் வாழ்த்தி''யிவ் வதிசய மைந்தனு லுலகம்
இன்ப மாகு''மென் றிசைத்தனர் ; இன்னெரு புறத்தில்,
வன்பகை செய்யும் வலியவன் ஒருவனும் எழுந்தான் ;
துன்பமே வடி வாமவன் சூழ்ச்சியை யறிவாம்.

"இந்த அற்புதப் பிள்ளையால் உலகெல்லாம் இன்பமயமாகும்" என்று அன்பர் ஒருபுறம் வாழ்த்திப் போற்றினர்! மற்றெருரு புறத்தில், இவனுக்கு என்றும் கொடிய பகை செய்யும் வலிய அசுரன் ஒருவனும் எழுந்தான்; துன்பமே அவன் வடிவம். அப்பகைவனையும் அவன் செய்த சூழ்ச்சிகளையும் அறிவோம். (உ௦)

குருகுலப் படலம்
முற்றிற்று

கங. பொருமைப் படலம்

க. நன்மையுந் தீமையு நட்புஞ் சண்டையும்,
புன்மையும் பெருமையும், புகழும் வீழ்ச்சியும்,
இன்மையும் உண்மையும் இருவ கைமனத்
தன்மையின் பரிசெனச் சாற்று வாமரோ!

உலக வாழ்வில் நன்மை தீமை, நட்பு பகையால் விளையும் போர், அற்பத்தனம், பெருந்தன்மை, புகழ், நிலைகெட்டு வீழ்ச்சியடைதல், சொத்து சுகமில்லாத வறுமை, வேண்டிய தெல்லாம் உளவாகும் செல்வச் செழிப்பு—இவையெல்லாம் அவரவர் மனத்தின் இயல்பைப் பொறுத்து வருவன. மனம், நலம் தீது ஆகிய இரண்டு வகையானது. ஆதலால், உலகில் மாந்தர்நிலையிலும் நன்மையும் தீமையும் கலந்து வருகின்றன. மனம்போல மங்கலம். மனமே மனிதன். மனத்தால் எது நினைத்தோமோ அது செயலாகும். நம் வாழ்வும் தாழ்வும் நமது மனமே நமக்குத் தரும் பரிசு, நமது நினைப்பின் பலன். இந்த உண்மையை உலகிற்குச் சொல்லுவோம். (க)

உ. நல்லது நினைத்திடின் நன்மை யாகிடும்;
அல்லது நினைத்திடின் அல்ல லாகிடும்;
இல்லதும் உள்ளதும், இம்மை யம்மையும்,
செல்வதும் வருவதும் நினைப்பின் செய்கையே.

மனத்திலிருந்து நினைப்பு (சங்கற்பம்) உண்டாகிறது. நல்லது நினைத்தால் நமக்கும் பிறருக்கும் நன்மை விளைகிறது. தீமை நினைத்தால், அந்த நினைப்புச் சுழல் சுற்றிலும் பரவித் தீமை விளைக்கிறது; அல்லல் செய்கிறது. உலகில் நினைப்பினுலேதான் உள்ளவை உள்ளன; மற்றவை நீங்குகின்றன. நினைப்பினுலேதான் இகபர சுக துக்கங்கள் உண்டாகின்றன. நினைப்பே விண், மண், பந்தம், விடுதலை, சுவர்க்கம், நரகம்—எல்லாம். நினைப்பினுலே தான் ஜீவன் பிறப்பிற்கும் இறப்பிற்கும் போக்குவரவு செய்கிறது. உலகத்தில் உண்டான கலை யற்புதங்களெல்லாம் நினைப்பின் செயலே. உயிர்கள் வளரும் காதல் சக்தியும் நினைப்பின் செயலே. (உ)

கலியன்

ங. பழிப்பறு புகழ்பெறும் பரத நாட்டிலே,
செழிப்புறு சித்தியின் சீர்த்தி யாவையும்
அழிப்பனென் றெழுந்தனன் அகந்தை கொண்டொரு
முழுப்பதர் கலியனும் மோகி கேள்வனே.

பாரதநாடு பழிப்பற்ற புண்ணிய பூமி. அதில் செழிக்கும் சித்தி மரபு செங்கோலால் எங்கும் புகழ்பெற்றது. அதன் சீர்த்தியெல்லாம் அடியோடு அழிக்க ஒருவன் எழுந்தான். அவன் நினைப்பெல்லாம் 'யான், எனது' என்னும் அகங்காரம் நிறைந்தன. அவன் சுத்தப் பதர்; பெயர் கலியன்; மோகியென்னும் அரக்கியின் கணவன். (ங)

ச. விடந்தரு நோயென, வேந்தன் சத்தியன்
உடன்பிறந் தானவ னுடன்பொ ருமையும்
இடர்செயுந் தீமையும் இகலும் வெம்மையும்
படர்ந்தன புதருடன் பாம்பு மென்னவே,

நஞ்சாகிய நோய் நமது உடலிலிருந்தே நம்மைக் கொல்லுகிறது. அதுபோலவே இந்தப் பதர் கலியன், சத்திய ராஜனுக்குத் தம்பியாகப் பிறந்தான். பொருமை, பிறருக்குக் கெடுதலே செய்யும் தியகுணங்கள், நல்லோரை வெறுக்கும் பகை, இரக்கமற்ற கொடுமை முதலியனவும், புதருடன் பாம்புபோல், அவனது பொல்லா மனத்தில் அடர்ந்தன. (ச)

ரு. வாளெனப் பாய்வது ; வஞ்சந் தீர்த்திட
நீளெரி புகுந்தென நெஞ்சில் வேவது ;
கோளினு லுயிர்ப்பது ; கொடுமை செய்துபின்,
ஆளினை யுண்பது பொருமை யாகுமே.

பொருமை ஒரு தீய நோய். அது பிறர் நலத்தைக் கண்டு பொறுக்காது. அஃது ஆசை யாணவம் கொதிக்கும் நெஞ்சில் வாள்போலப் பாயும்; எதிரியைக் கெடுத்து, வஞ்சந் தீர்க்க நீண்ட காலாக்கினிபோல் புகுந்து, நெஞ்சில் வேகும் தன்மையுடையது. குண்டுணிகள் சொல்லும் கோள்களால் அது பெருகி உயிர்த்திருப்பது; பல சூழ்ச்சிகளால் எதிரிக்குக் கொடுமைகள் செய்து, முடிவில் ஆளையே உண்டுவிடும். அப்படிப்பட்ட தீமை பொருமை யாகும். (ரு)

சு. திசைதொறும் அண்ணலின் சீர்த்தி கேட்டுளம்
பிசைதுயர் கொண்டவன், பிள்ளை சுத்தனின்
இசையினைக் கேட்டதும் எரி மிகுந்தனன் ;
விசையினில் இவர்களை வீழ்த்த வெண்ணினன்.

எட்டுத் திசையிலும் அவனுடைய தமையன் சத்தியன் புகழ் பரவியிருந்தது. அதைக் கேட்கக்கேட்க, அவன் தனது நெஞ்சைப் பிசைந்துகொண்டு பெருந்துய ரெய்துவான். அண்ணன் வாழக்கண்டால் தம்பிக்கு உள்ளத்தை முறுக்கிப் பிழிவதுபோல் இருக்கும், அதனுடன் சத்தியன் மரபு விளங்க ஒரு சுத்தன் பிள்ளையாகப் பிறந்தான். அவனே சாமானியப் பிள்ளை யல்லன். எங்கும் தன் தெய்வ வீரத்தால், அறிவாற்றல்களால், இசைபெற்ற பிள்ளை. அதைக் கேட்டதும் "ஐயோ, நமது எண்ணம் மண்ணானதே !" என்று எரிச்சல் அதிகமாகி, விரைவாக இந்த இருவரையும் வீழ்த்தி நாட்டைக் கைப்பற்ற எண்ணினன். (சு)

எ. வலிகொளும் சித்தியின் மரபைக் கண்டதும்
கிலிகொளு நெஞ்சினன், கேடு சூழவே
புலிகொளும் புதரெனப் பொல்லர் வாழ்ந்திடும்
கலிநகர் கண்டனன் காலன் அஞ்சவே.

சுத்தன் பிறந்ததால், சித்திமா மரபு பலமாக வேரூன்றி வலிமை பெற்றது. அதைக் கண்டு கலியன் நெஞ்சிற் கிலி பிறந்தது. சுத்தனை நினைக்கும்போதே அவன் உள்ளம் அஞ்சி நடுங்கியது. அவனுக்குக் கேடு சூழவே அவன் கொடிய படை சேர்த்தான் ; கலிநகர் என் ஞெரு பெரிய நகரத்தை அமைத்தான். அந்த நகரம் ஒரு சூழ்ச்சிப் புதர் போன்றது. அதில் பொல்லாத கொடியர் புலிபோலப் புகுந்து அவனுடன் வசித்தனர். அந்த நகரையும், கலியனை யும், அவன் படைகளையும் கண்டு எமன்கூட அஞ்சினன். (எ)

அ. இந்திர சாலங்கள் இருட்பொய் வித்தைகள்,
மந்திர மாயங்கள் மாறு பாடுசெய்
தந்திரச் சூதெலாந் தரும நீதியைத்
தொந்தரை செய்தன ; துணிந்து வீழ்ந்தவே.

கலியன் மந்திரவாதிகள், சூனியக்காரர்கள், கொலையாளிகள் முதலியோரை ஏவி, சுத்தனையும் சத்தியனையும் கெடுக்கப் பார்த்தான். இவர்கள் செய்த இந்திர சாலங்கள், காசு பறிக்கும் பொய்யான குப்த வித்தைகள், அஞ்ஞானத்தால் செய்யும் சூனிய வித்தைகள், மந்திரம்போட்டுப் புத்தியை மயக்க முயன்ற மாயங்கள், காரியங்களுக்கு எதிர்செய்யும் தந்திரமான சூழ்ச்சிகள்—இவை யனைத்தும், தரும நீதியே அவதாரமான சுத்தனையும், சத்தியனையும் தொந்தரைசெய்தன; ஆனால், அவற்றின் பாய்ச்சல் பலிக்கவில்லை. எல்லா மாயங்களும் துணிவுடன் எழுந்து, துணிந்து, முறிந்து வீழ்ச்சி யடைந்தன. (அ)

கூ. இணைகரும் பூனையின் எரி விழிகளும்,
பணியுடன் காகமும், பச்சை யோந்தியும்
பிணங்களின் மூளையும் பெண்க ருக்களும்,
புணைகரு மைசெயப் புகுந்துந் தோற்றனன்.

சத்தியனையும் சுத்தனையும் வசப்படுத்திக் கொள்வதற்காக, கலியன் பில்லி சூனியம் வைத்தான்; வசிய மைகள் செய்தான். அந்த மைகளில் இரவில் தீபம்போலக் காந்தும் கரிய ஜோடிப் பூனைகளின் விழிகள், ஜோடிப் பாம்பின் வீரியம், அண்டங்காக்காய்த் தலைகள், பச்சையோந்தி, பிணங்களின் மூளைகள், இறந்த பெண்களின் கருக்கள் ஆகிய எல்லாம் சேர்ந்தன. இப்படி எல்லாம் இடுமருந்துகள் செய்தும், ஏவல் விட்டும் அவனது சூழ்ச்சி பலிக்காமல் தோற்றான். (கூ)

கம. "கருவினைக் கலைத்திடக் கருவினை செய்தேன்;
உருவினைக் குலைத்திட, வுளத்தை மாற்றிடப்
பெருநினைப் பேய்களை ஏவினே னந்த
ஒருவனைச் சிறுவனை உம்ப ரேற்றவே.

"அந்த ஒருவன் சிறுவன் சுத்தன்-அவன் என் கண்களில் உறுத்துகிறான். அவனை ஒழித்து மேலுலகிற்கு அனுப்ப எவ்வளவோ சூழ்ச்சி செய்தேன்; இந்திரையின் கருவைக் கலைக்க மருந்து வைத்தேன், சூனியஞ் செய்தேன். பிள்ளை பிறந்ததும் அதன் உருவைக் குலைக்க முயன்றேன்; பையன் சுத்தனின் உள்ளத்தைக் கெடுத்துப் புத்தியைக் கலக்கிப் பித்தனாக்க முயன்றேன்; பேய்களை உபாசித்தேன்; அவற்றிற்கு ஏராளமான மதுமாமிசங்களைத் தந்தேன், ஏவினேன்; ஐயோ ஒன்றும் அந்தச் சிறுவனைத் தாக்கவில்லையே!" (கம)

கக. "ஆளத்தான் உலகினை அண்ண லுக்குப்பின்
நீளத்தான் கருதிய நெஞ்சம் புண்ணுற்றேன்;
மூலத்தான் வந்தனன், மூன்று லோகமும்
வாழத்தான் வாழ்ந்தனன்; வயிறு வேகுதே!

"'என் அண்ணன் சத்தியனுக்குப் பிள்ளை யில்லை; வயதாயிற்று, இனி, இந்திரைக்கு மகப்பே றுண்டாகாது. இவருக்குப் பிறகு நானே சித்தி யரசை ஆளுவேன்' என்று நீண்ட காலம் நீண்ட கனவு கண்டெண்ணினேன். அப்படி யெண்ணிய நெஞ்சம் புண்ணானது. சுத்தன் மூலநட்சத்திரத்தில் பிறந்தான். 'ஆண்மூலம் அரசாளும்' என்பர். அவன் இவ்வுலகு, நடுவுலகு, விண்ணுலகு ஆகிய மூன்றும் சேமமாக வாழவே வந்து வாழ்கிறான். இதைக் கண்டு எனது வயிறு எரிகிறதே...!" பொருமை, பொருமை! (கக)

கஉ. "தேனெனப் பேசிய தீய சூனியர்,
ஊன்மது வுண்டவன் உயிரை உண்கிலார்;
யானினி யென்செய்வேன்; அடவிப் பேய்க்குலம்
ஏனெனை யேளனம் செய்த! வஞ்சமே!"

"கொடிய சூனியக்காரர்களுக்கு ஏராளமான பணம் கொடுத்தேன். அவர்கள் எல்லாரும் 'தங்கள் விருப்பப்படியே செய்கிறோம' என்று தேன்போல இனிமையாகப் பேசினர்கள்; என்னிடம் புலாலும் கள்ளும் ஏராளமாக வாங்கி யுண்டார்கள். அந்த ஒருவனது உயிரைப் போக்க அவர்களால் முடியவில்லையே! நான் சுடுகாட்டுப் பேய்களை யெல்லாம் உபாசித்தேன்; அவற்றை மந்திரவாதிகள் மூலம் ஏவினேன். அவை சுத்தனை ஒன்றுமே செய்யவில்லை. 'அட பைத்தியக்காரா, அவனிடம் உனது சூழ்ச்சி பலியாது!' என்று என்னையே ஏளனம் செய்தன.ஆ! வஞ்சம்......இனி நான் என்ன செய்வேன்!" (கஉ)

மோகி

கங. புயலெழு மனத்தினன் புன்வ லைப்படுங்
கயலெனத் துடித்தனைக் கண்டு, நீள்விழி
மயலெழ விசித்தன் மாய வித்தையாற்
செயம்பெறு மோகியும் சிரித்து வந்தனள்.

கலியன் மனத்தில் புயல் வீசுகிறது. அப்புயலில் ஒரு வஞ்சச் சிறுவலை வீசப் பெற்றது. அதில் அகப்பட்ட மீன்போல் அவன் உயிர் துடித்தது. அதைக் கண்டாள் அவன் மனைவி மோகி. அவள் மகா மாயக்காரி. அவளுடைய நீண்ட வாள்விழிகள் மையலை வீசும். அவளிடம் பல மாய வித்தைகள் உண்டு. அவற்றால் அவள் தனது காரியத்தில் வெற்றி பெறுவாள். அவள் சிரித்துக்கொண்டே கணவனிடம் வந்தாள். (கங)

கச. கொஞ்சுமென் மொழிசொலிக் குமுதக் கைகளால்,
துஞ்சறு விழிகளைத் துடைத்து நோக்கிடும்,
அஞ்சன விழியளை யணைத்துத் தன்மனம்
சஞ்சலக் கலியனுஞ் சாற்றி னுன்கொலோ.

மோகி, கொஞ்சும் கிளிமொழிகளால் ஆறுதல் கூறி, நீர் பெருகும் நாதன் விழிகளைத் தன் குமுதம் போன்ற மென் கைகளால் துடைத்து, அவனை அன்புடன் பார்த்தாள். அஞ்சனம்போன்ற விழிகளுடைய அவளை மார்புறத் தழுவிக்கொண்டு, சதா சஞ்சலப் பட்டுக் கொண்டிருக்கும் கலியன், தனது மனத்தைத் திறந்து கூறினுன்: (கச)

கலியன்

கடு. "அரியணை யிருந்துநான் சித்தி யாண்டிடும்
உரிமையை யிழந்தனன் ஒருவன் வந்ததால்;
பெரியசிந் தனையெலாம் பேச வாயிலேன்......!
பரிந்தெனக் கிதமொழி பகர வல்லையோ?"

"கண்ணே, மோகி! நான் எனது அண்ணனுக்குப் பிறகு அவனது அரியணையை வகித்துச் சித்தியை ஆள நினைத்தேன், எனக்குச் சத்துருவாக வந்தான் மகன் சுத்தன். அவனுல் எனது உரிமையை இழந்தேன். அவனை ஒழித்து, அவன் அப்பனையும் ஒழித்து, ஆளப் பெரிய பெரிய சூழ்ச்சிகளை யெல்லாம் செய்தேன்; சிந்தித்தேன். அவற்றைக் குறித்து இனிப் பேசவும் வாயில்லேன்; படுதோல்வி யடைந்தேன். இந்த நிலையில் எனக்கு நீ ஆறுதலாகும் இதமான வார்த்தை சொல்ல முடியுமா?" என்றான் கலியன். (கடு)

மோகி

கசு. நோயுறு கலியிவை நுவல, மோகியும்
"ஓயுக கவலைகள்; உலகை வென்றிடப்
பாயுறும் அரக்கரின் படையைத் தூண்டுவேன்;
ஏயெனு முன்னுன திச்சை யா"மென்ருள்.

மன வேதனைப்பட்ட கலியன் சொன்னதைக் கேட்டவுடனே மோகி ஆவேசமுற்றெழுந்தாள். "உன் கவலைகள் ஒயட்டும்! இதோ செல்கிறேன். உலகையே வெல்லக் கூடிய அரக்கர் படையைத் தூண்டிக் கொண்டுவருவேன். அவை 'ஏய்' என்று பாய்ந்து தாக்குமுன், சத்தியன் படை நொறுங்கிப்போகும். உடனே உனது விருப்பம் நிறைவேறும்" என்றாள். (கசுா)

கஎ. "ஏனினி யோசனை; யெவனை யஞ்சினை
யானவன் அழியவென் அண்ணல் மாவலி
சேனையைத் தூண்டிடச் செல்கின்றே னின்றே
தானவத் தீ"வெனச் சபதஞ் சாற்றினள்.

"இனி யென்ன சிந்தனை? நீ யாரைக்கண்டு அஞ்சினையோ அந்தச் சித்தி மன்னனை நான் அழிப்பேன். தானவம் என்னும் அரக்கர் தீவிருக்கிறது. அதன் அரசன் மாவலி. அவன் என் அண்ணன். அவனது சேனைக்கு வெறியேற்றித் தூண்ட நானே இதோ தானவம் செல்கிறேன்" என்று சபதமிட்டுக் கூறினாள். (கஎ)

கலியன்

கஅ. "கவலையும் ஒழிந்தது; கனவு மெய்த்தது;
புவனமுங் கிடைத்ததுன் பொன்சொ லால்; இனி
எவருமென் னிகரிலை" என்று விம்மினன்
அவஞ்செயும் தீயருக் கரச னாயினன்.

நாட்டிற்குத் துன்பம் செய்யும் துஷ்டர்களுக்கு அரசனான கலியன், "கண்ணே மோகி, உன் பொன் மொழியால் எனது கவலை யொழிந்தது. கனவு மெய்யானது. உலகமும் எனது கைக்குக் கிடைத்தது. இனி எவரும் எனக்குச் சமானரிலர்" என்று செருக்கால் விம்மிதமுற்றான். (கஅ

மோகி

கசு. "வருகுது சித்தியை வீழ்த்தும் வன்படை!
பெருகுதுன் புக"ழெனப் பெரிய பாதகி,
வெருவுறு மரக்கரை விளைத்த தானவம்
இருமுழு மதியுடன் ஏகி னாள்கொலோ.

"சித்தியை வீழ்த்தி வெல்லும் வலிய தானவர் படைவருகிறது பார்; உனது புகழ் பெருகுவதைப் பார்!" என்று பெரிய பாதகியான மோகி, இரண்டு பூரண சந்திரனுடன், அதாவது இரண்டு மாதத்தில், அரக்கரை உண்டாக்கிய தானவத் தீவிற்குச் சென்றாள். (கசு)

கலியன்

உ0. நகையினை யுதட்டிலு, நஞ்சை நெஞ்சிலும்,
பகையினைச் செயலிலும், பரிவை நாவிலும்,
வகையுறக் கலியனும் வைத்து, நாட்டிலே
மிகையுறு பிரிவினை விரைவிற் செய்தனன்.

இங்கே கலியன் சும்மா இருக்கவில்லை; சத்தியன் சந்தேகப்படாமல் வெளிக்கு அன்பு காட்டினான்; உதட்டில் புன்னகை காட்டி, உள்ளத்தில் நஞ்சுபோன்ற பொறாமையை வளர்த்தான்; நாவினால் மிகப் பரிவாகப் பேசினான்; செயலில் கடும்பகையைக் காட்டினான்; தன் தந்திரங்களையும் பாசாங்குகளையும் எந்தெந்த வகையாகக் காட்டவேண்டுமோ அந்தந்த

வகையாகக் காட்டினன். சத்தியராஜன் ஆளும் புண்ணிய பூமியிலே சிற்றரசர்கள் பலர் அவன் கீழ் இருந்தனர், அவர்களிடையே கலியன் விரைவாகப் பிரிவினை செய்தான். அந்தப் பிரிவினைகள் நாளுக்கு நாள் மிகுந்தன. (உ0)

உக. பதரெனும் பதகனின் பழியி னுல்வினை
அதர்மங்க ளனைத்தையும் அறியு முன்னரே,
கதிர்மணி போல்வளர் கடவுட் சுத்தனின்
புதியநல் வாழ்வினைப் புகலு வாமரோ.

கலியன் மனிதப் பதர்; பாதகன். அவன் செய்த பழிகளால் நாட்டில் அதர்மம் பரவியது. அதை நாம் பிறகு அறிவோம். அதற்கு முன்பே கதிர்மணிபோல் ஒளிபெற்று வளரும் தெய்வப் புதல்வனுகிய சுத்தன், புதுப்புது வனப்புடன் கூடிய நல்வாழ்க்கையுடன் பொலிந்தான். அவனைப்பற்றி இனிச் சொல்வாம். (உக)

பொறுமைப் படலம்
முற்றிற்று.

கச. புறப்பாட்டுப் படலம்

க. மூன்று காலமு முற்றறி சித்தன்
ஆன்ற ஞானம் அனைத்தையுங் கற்றபின்
சான்ற வர்சொலச் சத்திய சுத்தனும்
தோன்று லகை யறிந்திடத் துன்னினுன்.

திரிகால ஞானசித்தனை பாரத முனிவரிடம் கற்கவேண்டிய விசாலமான கல்வி கேள்விகளை யெல்லாம் கற்றுத் தேர்ந்தபிறகு, அனுபவ ஞானம் பெறவேண்டும். சித்தி நகரில் உள்ள பெரியார்களும், "அரசையும், உலகையும் இளவல் சுற்றிப் பார்ப்பது நலமாகும்" என்றனர். ஆதலால், சத்தியனின் இளவரசனை சுத்தனும் தன் முன்னே தோன்றும் உலகைச் சுற்றிப்பார்த்து, மக்கள் நிலையை அறிய விரும்பினுன். (க)

உ. ஏட்டிலே யிசை யெத்தனை கற்கினும்,
பாட்டி லாதவர், பண்செய் கருவியில்
மீட்டி லாதவர் வித்துவ ராவரோ?
ஆட்டி லாதவர் ஆடுந ராவரோ?

குரலும் விரலும் கூடிய இசைக் கலையை நூலில் எவ்வளவு படித்தபோதிலும் பயனில்லை. குரலைப் பழக்கிப் பாடவேண்டும்; விரலைப் பழக்கி வாத்தியங்களில் மீட்டவேண்டும்; அப்போதே வித்வான்களாகலாம். பரத நாட்டியத்தைப் பற்றி எவ்வளவு கற்றாலும் என்ன? ஆடிப் பழகினுல்தான் நடன வித்துவான் ஆகலாம். அதுபோலவே புத்தகப் படிப்புடன் அனுபவஞானமும் பெற்றாலே புலவனுகலாம். (உ)

ந. சுற்று ணர்ந்திரு தோற்ற வுலகினை
முற்று ணர்ந்ததன் முக்குண நாடகம்
இற்றெ னத்தெளிந் தார்இயல் பாகவே
கற்று ணர்ந்த கலைக்கட லாவரே.

வெறும் புத்தகப் படிப்பு மட்டுமே படிப்பாகாது. படிக்கவேண்டும், பார்க்கவேண்டும்; சுற்றிலும் உள்ள மாந்தர் இயல்பை அறியவேண்டும். உலகம் நன்மை தீமை, இன்பம் துன்பம், அறம் பாவம் என்னும் இருவகைத் தோற்றங் கொண்டது. அதை முற்றிலும் பார்த்து ஆராய வேண்டும். உலகம் சத்வ ராஜஸ தாமதமாகிய மூன்று குணங்களைக் கொண்டு பல காட்சிப் படலங்களை ஜோடித்து நடக்கும் எல்லையற்ற நவரச நாடகமாகும். அந்த நாடகத்தைப் படிப்பதனுல் மட்டுமே அறிய முடியாது. நேரே பார்த்து அஃது இன்னதென்று தெளிந்து கொள்ள வேண்டும். அப்படி உலகைப் பார்க்கப் பார்க்க இயற்கையான அனுபவ ஞானம் ஏற்படும். "சரி, உலகம் இவ்வளவுதான். அதற்குமேல் உள்ள உண்மை இன்னது. அந்த உண்மையே நான். சுற்றி நடப்பது நாடகம்" என்று அறிவாளி அனுபவ ஞானம் பெறுவான். படிப்புடன் இந்த இயற்கை யறிவும் பெற்றவரே, கற்று உணர்ந்து கண்டு நின்ற கலைக்கடலாவார். (ந)

சத்தியன்

ச. ஆத லால் "என் அரசிளஞ் செல்வனும்
ஓத லால்வரு ஞானம் உரம்பெற
நீதி யாட்சி நிலவுநன் னடெலாம்
போத" லென்று புகன்றனன் சத்தியன்.

"ஆகையால் எனது அரசை ஆளும் உரிமையுடைய இளஞ் செல்வன், கற்றுத் தேர்ந்த தனது அறிவு உறுதியாகி அனுபவம் பெறவும், தனது அரசை எப்படி யாள வேண்டும் என்றறியவும், நீதியாக விளங்கும் நாடுகளுக் கெல்லாம் சென்றுவருவானாக!" என்று மன்னனுன சத்தியன் புகன்றான். (௪)

௫. "புத்தி மான்,புவி யாளுங் கலையினில்
எத்தி சையும்இ சைபெற்ற மந்திரி
சித்தி மானுடன் செல்வகை செல்"கெனச்
சத்தி யனுந் தனயனை யேவினன்.

சித்தி மரபு இவ்வளவு பெருமை பெற்றதற்கு அதன் அமைச்சனாகிய சித்திமானே காரணம், அவன் மகா புத்திசாலி; உலகையாளும் அரசியற் கலையில் இணையற்றவன்; எட்டுத்திசையும் புகழ் பெற்றவன். எல்லா நாடுகளும் அவனை அறியும், மதிக்கும். "இளவரசனொருவன் எந்தச் சிறபபுடன் செல்ல வேண்டுமோ அந்தச் சிறப்புடன் சித்தி மானைத் துணையாகக் கொண்டு சென்று வருக!" என்று சத்திய ராஜன் தனது மகனுக்குக் கட்டளை யிட்டான். (௫)

௬. அன்ன செய்தி யறிந்து மகிழ்ந்துடன்
முன்னர் தூது விடுத்து மகிபரும்,
மன்னர் மன்னனின் மன்னிளஞ் செல்வனை
இன்ன நாள்வர வேற்பமென் றோதினர்.

நீதிகாக்கும் முடிமன்னர்கள், இந்தச் செய்தி யறிந்து பெருமகிழ் வெய்தினர்; உடனே தங்கள் தூதர்மூலம் ஓலை யனுப்பி, "நாங்கள் இன்ன நாளில் எங்கள் சக்கரவர்த்தித் திரு மகனை வரவேற்க விரும்பி எல்லா ஏற்பாடுகளும் செய்கிறோம்; தயவுசெய்து அந்நாளில் எழுந்தருளச் செய்யவேண்டும்," என்று வணக்கமுடன் வேண்டினர். (௬)

௭. பூக்கும் காலைப் புதுமலர் தூவியே,
காக்கும் அன்புக் கடவுளை யேத்தியே
வாக்கு மிக்க வரமுனி வாழ்த்துகள்
ஊக்க வுள்ள முவந்தனன் கோமகன்.

அரசன் புதல்வனான சுத்தன், குறித்த நன்னாளில் காலை பூத்ததும், நாண்மலர் கொய்து, தன்னைக் காக்கும் அன்புக் கடவுளான சுத்த சக்திக்கு அர்ச்சனை செய்து வணங்கினான். பிறகு, வேதவாக்கு மிக்க வரம்பெற்ற முனிவர் "க்ஷேமமாகச் சென்று உலகப் புகழ் பெற்று வா!" என்று வாழ்த்தினர். அதனால், அவன் உள்ளம் உற்சாக மெய்தி மகிழ்ந்தான். (௭)

௮. ஆனை, தேர்,கு திரையணி சேரவே,
சேனை வீரர் 'செயசெய' வென்னவே,
வானை யெட்டக் கொடிகள் வளரவே,
மோனை முத்தமிழ் போன்முர சார்த்தவே.

இளவரசனை வழியனுப்ப யானைப்படைகளும், குதிரைப் படைகளும், தேர்ப்படைகளும், காலாட்படைகளும் அணி யணியாகக் கூடி ஒழுங்காக நின்றன. அவற்றிலிருந்த போர் வீரர்கள் "ஜய ஜய! இளவரசர் நீடு வாழ்க!" என்று ஆர்த்தனர். சித்தி மரபிற்குரிய சூரியக் கொடிகள் ஏந்தி, மக்கள் கூடினர். அக்கொடிகள் வானுயர நீண்டு பரந்து வளர்ந்

தன. அக்கொடிகளின் புகழை மோனை முத்தமிழால் போற்றுவது போல முரசுகள் ஆர்த்தன. (அ)

கூ. படையின் மின்னலும் பார்விழி மின்னலும்,
உடையின் மின்னலும், ஊர்தியின் மின்னலும்,
குடைசெய் வானங் குலாவிடு மின்னென
நடையின் மின்னலு நல்லணி மின்னலே.

அந்தப் பெரிய கூட்டத்தில் பல மின்னல்கள் பாய்ந்தன. படைகள் வாளும் ஈட்டியும் துப்பாக்கியும் பிடித்துப் பளிச்சிட்டன. அரசிளங் கோமகனைக் கோடி விழிகள் மின்வீச்செனப் பார்த்துப் பார்த்துக் களித்தன. ஆண்களும் பெண்களும் அணிந்த ஆடையாபரணங்கள் பளிச்சிட்டன. அவர்கள் ஏறிவரும் வாகனங்கள் அலங்காரம் சொக்கிப் பொலிந்தன. பிரம்மாண்டமான குடை விரித்தது போன்ற மேகவானத்தில் பளிச்சிடும் மின்னோட்டங்கள் போல அங்கிருப்பவர் நடை குலுங்கிற்று. எல்லாம் கண்ணுக்கினிய அழகுபெற்ற அணிகளால் பொலியும் மின்னல்களே! (கூ)

க0. முக மலர்களு, முல்லை விரிந்தென
நகை மலர்களு, நற்கரந் தூவுபல்
வகை மலர்களும் வானத்து நாண்மலர்,
தொகை மிகுத்திங்கு தோன்றுவ போன்றவே.

அங்கே கூடிய அன்பர்களின் முகம் அரசிளங் கோமகனைக் கண்டு மலர்ந்து, தாமரைக் காடாக விளங்கின. அவர் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் புன்னகை விண்ட முல்லைகளைப்போல விளங்குகின்றன. அவர்கள் திருக்கைகளால் ஆசிகூறித் தூவிய பலவகை மலர்கள் மழை போலப் பெய்தன. இவையெல்லாம் ஆகாயத்தில் மின்னும் நட்சத்திர மலர்கள் தொகையில் அதிகரித்து உலகில் வந்து மின்னுவதைப் போன்றிருந்தன. (க0)

கக. மார் நெருங்கின ; மார்பணி நன்மணி
தார் நெருங்கின ; தண்மலர்க் கூந்தலாங்
கார் நெருங்கின ; காலு நெருங்கின ;
ஊர் நெருங்கின ஒருட லாகவே.

சுத்தன் புறப்படுவதைப் பார்க்க அந்த ஊர் முழுதும் ஓர் உடல்போலக் கூடி நெருங்கியது. அந்தக் கூட்டத்தில் ஒருவர் மார்புடன் ஒருவர் மார்பு நெருங்கிப் புல்லியது. அந்த மார்பில் அணிந்த நல்ல மணிமாலைகள் நெருங்கிப் பின்னின. குளிர்ந்த மலர்கள் முடித்த பெண்களின் கார்நிறக் கூந்தல்கள் நெருங்கிக் கூடின. கால்களும் விரைவாக நெருங்கின. (கக)

கஉ. பாண்டி னோசையும், பாவலர் பாடும்பல்
லாண்டி னோசையும், ஆசிக ளோசையும்,
தூண்டு மாமதி தோன்றக் கடல்மிசை
நீண்ட வோசையைப் போல நிகழ்ந்தவே.

பூரண சந்திரனிடம் அனைத்தையும் மகிழ்வுறத் தூண்டும் ஒரு சக்தியுள்ளது. அது வந்ததும் அகண்ட சமுத்திரம் பொங்கிப் பூரித்து அலைக்கரங்களை வீசி ஆனந்தகானம் செய்கிறது. அதுபோலவே, சுத்தன் தேர் ஏற வந்ததும், 'பாண்டு' வாத்தியங்கள் முழங்கின. அருட்பாவலர் பல்லாண்டு பாடினர். மேளதாளங்களுடன் ஜனங்கள் ஆசிப்பாட்டு முழக்கினர். உயிர்க் கடலோசை பொங்கியது. (கஉ)

கங. கிரணம் வீசிக் கிளர்ந்தெழும் சூரியன்
அருணத் தேரில் அமர்ந்தது போலவே,
திருவ ணிந்தபொற் றேர்மிசை ஏறியே
கருணை மாமுகங் காட்டினன் கண்ணனே.

நாட்டிற்கே கண்ணனைய சுத்தன் அழகுந் திருவும் அணிந்து பொலியும் பொற்றேரில் அமர்ந்து, தனது கருணை பொங்கும் புண்ணிய முகத்தை அனைவரும் காணச் சுற்றிலும் பார்த்தான். அத்தோற்றம் பால சூரியன் கதிர்களை வீசி மகிழ்வுடன் எழுந்து, அருணோதய மென்னும் தேரில் ஏறி விளங்குவதுபோல் இருந்தது. (கங)

கச. விழிகண் டார்அருள் விண்ணொளி கண்டனர் ;
பொழிமு றுவலைக் கண்டவர் பொன்கண்டார் ;
செழிமு கத்தைக்கண் டார்திரு வேகண்டார்
அழகை முற்றும் அளந்தவர் யாவரே !

அந்தக் கூட்டத்தில் இருந்த ஒவ்வொரு கண்ணும் சுத்தனையே நோக்கிற்று. ஒவ்வொருவரும் அவன் விழிகளையே பார்த்து நின்றனர் ; "இவை அருளாகிய சுவர்க்க தீபங்களே !" என்று வியந்தனர். அவனது வாயினின்றும் பொழியும் புன்னகை யமுதைப் பருகினவர் பொன்விளங்கும் மங்களானந்தம் பெற்றனர். கருணைசெழித்த முகத்தைக் கண்டவர் எல்லாத்திருக்களையும் நேரிற் கண்டதுபோலக் களித்தார். அவனது அழகைக் கண்ணால் யாரும் முற்றிலும் அளக்க முடியவில்லை. (கச)

கரு. பொது விழியினுற் புண்ணியர் எங்குமே
அதுவென் றேயுணர் ஆதிப் பிரமத்தை,
மத விழியர் மதிப்பது போலவே,
'இதுவி துவழ' கென்றனர் மாந்தரே.

பொதுவாக, அனைத்தையும் சமமாகப் பார்க்கும் உள்விழிபெற்ற புண்ணியர்கள் ஆதிப் பிரமமாகிய பரம்பொருளை எங்கும், எம்மதத்திலும், எப்புனித நூலிலும், எந்த உடலிலும், அணுவிலும் அதுவே என்று காண்பர். அவர்களுக்குப் பேதபுத்தி யிராது. 'எனதே மதம்' என்று ஒருசார்பான சமய விழிகளால் காண்பவர், பரம்பொருளின் ஏகதேசமான குணத்தையே பற்றி 'இதுவே கடவுள்' என்பர். உதாரணமாக, பரம்பொருளின் காக்குந் தன்மையே பற்றி அதைக் கொண்ட கடவுளே முதல்வன் என்பர் சிலர் ; நீக்கும் கடவுள் அல்லன் என்பர். அதுபோலவே சர்வ சௌந்தர்யனை சுத்தனின் தனித்தனி அங்கங்களையே வைத்த கண் எடுக்காமல் பார்த்துத் தாம் பார்த்த அங்கமே அழகியது என்றனர் மக்கள். (கரு)

கசு. கந்தன், கோகுலக் கண்ண னிவனென்றார்,
இந்தி ரனும் இணையிலை யென்றனர்.
சிந்தை யெப்படி யப்படிச் சித்திரம்
தந்த தந்தத் திருவுருத் தன்மையே.

" இவனே கந்தன், இவனே கோகுலக் கண்ணன், இவனே அசுரரை வீழ்த்தி அமரரைக் காக்கத் தகும் இந்திரன் " என்று மாந்தர் பலவாறு போற்றினர். சுத்தனது அழகிய திருவடிவின் இயற்கை அப்படி ! அஃது, அவரவர் பாவனை, சிந்தனை எப்படியோ அதற்கேற்ற சித்திரக் காட்சியைத் தந்தது. (கசு)

கஎ. உடைநெகிழ்தலும், உள்ளம் வெதும்பலும்,
கடையர் காமக் குறிகளும் இன்றியே,
நடையுயர்சுத்த ஞாயிறைக் கண்டவர்
மடமை நீங்கி மதிப்பொலி வெய்தினர்.

இப்படிப்பட்ட அழகனைக் கண்ட மின்னார் காம விகாரத்தால் தளர்ந்து மெலிந்து சோர்ந்துஆடை நெகிழ்ந்து, மனம் காமத்தீயால் எரிந்து வெந்து நொந்து போனதாகப் பழங் கவிகள் வர்ணிப்பர். அவைபோன்ற கடையருக்குரிய காமவிகாரங்கள் இங்கில்லை. ஒழுக்கத்தில் உயர்ந்த சுத்தனாகிய சூரியனைக் கண்டதும், அங்நகர மாதர் மடவிருள் நீங்கிப் பேரின்பமாக்கும் மதிப்பொலி வெய்தினர். இருள் நீங்கி அவர் மனம் ஒளி பெற்றது. (கஎ)

கஅ. ஆசை மாமல ராமெனக் கண்டவர்
பூசை மாமல ரேபொலி யக்கண்டார்.
வேசை நெஞ்சும் விலைமயக் கற்றது ;
தேசை விசிடுந் தெய்விகக் காட்சியால்.

"என் ஆசைக்கேற்ற காதல் மலர் இது" என்று சுத்தனைக் காமப்பார்வை பார்த்தவரும் "சீ, அது பிசகு ; இது பூசைக்கேற்ற புண்ணிய மலர்" என்று பொலியக் கண்டனர். அவனைப் பார்த்த வேசையருக்குக் கூட விலைவாழ்வு வாழும் காமமயக்கம் ஒழிந்து, கற்புடன் வாழவேண்டும் என்று தோன்றியது. தேஜஸ் பொலியும் அவனது தெய்வக் காட்சி அப்படிப் பட்டது. (கஅ)

கக. 'சென்ற தேசங்க ளில்வர வேற்றிடும்
வென்றி வேந்தர் புதல்வியர் யாரிவன்
மன்றல் மாலை யணிந்து மகிழ்வரோ!'
என்று மட்டும் இயம்பினர் மாதரே.

ஆனால் மாதர் ஊகம் நிற்குமா? எத்தனையோ தேசங்களுக்கு இந்தப் பேரழகன் செல்வான். எத்தனையோ வெற்றிமன்னர் இவனை வரவேற்பர். அவர் செல்வியர் இவனது அழகில் மயங்கிக் காதலிப்பர். அவருள் "இவனது மணமாலையை எவள் பெற்று மகிழ்வாளோ, அவளே பாக்கியவதி!" என்று மட்டும் பெண்கள் பேசிக் கொண்டனர். (கக)

உ0. நோக்கும் ஒற்றர்முன் னேக்கிட, நுண்ணறி
வாக்கு வல்ல புலவர் உடன்வரக்
காக்கும் வீரக் கனற்படை சூழத்தேர்
ஊக்க மாகமுன் ஊர்ந்தது காலம்போல்.

அரசிளங்குமரன் போவதால் கலியன்போன்ற சதியாளர் தந்திரமாகத் தீங்கு செய்யக் கூடும். அவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க ஒற்றர் கவனமாக முன்சென்று சுற்றிப் பார்த்தனர். ஒற்றர் 'வழி அபாயமில்லை' என்ற பின் பயணம் மேற் செல்லும். அந்தந்த நாடுகளில் உள்ள அதிசயங்களைக் காட்டவும், புதிய அறிவைப் புகட்டவும், தனது நாட்டுப் பெருமையை எடுத்துச் சொல்லவும், அவ்வந்நாட்டிலுள்ள புலவருடன் சரிசமனாகப் பேசவும் வல்ல நுண்ணறிவாளரான வாக்குவன்மை மிக்க புலவர் சுத்தனுடன் வந்தனர். தோட்டத்திற்கு வேலியும் காவலும்போலே அரசனுக்கும் வீரப்படை வேண்டும். எதிர்க்கும் பகைவரை நொறுக்கி யெறியும் வீரக்கனல் ஏறிய சூரப்படை யொன்று இளவரசனைச் சுற்றிக் காவல்

காத்தது. அரசனுடன் செல்லும் உணவு, ஆடை, பண்டாரம், பரிவாரம் எல்லாம் அப்படையின் பாதுகாப்பில் சென்றன. இவ்வளவு பரிவாரங்களுடன் சுத்தன் ஏறிய தேர் ஊக்கமாக முன்சென்றது. அதன் வேகம் காலத்தின் வேகம் போன்றிருந்தது. (உ0)

உக. புதனும் பூரணச் சந்திர னும்என
மதிய மைச்சுடன் மன்மக னுஞ்செலும்
பதிக ளைப்பலர் பேசினர் ; நாமுமக்
கதியைப் பின்பற்றிக் காண்பன காண்பமால் !

அறிவுக் கோளமான புதனுடன் உலகிற்கு இன்ப நிலா பொழியும் பூரணச் சந்திரன் போல் மதிமிக்க அமைச்சனுடன் தெய்வப் பொலிவுள்ள சுத்தன் சென்றான். ஜனங்கள் கண் கொட்டாமல் அவர்களையே பார்த்தனர். இவர்கள் இங்கிருந்து இன்னின்ன திருப்பதிகளுக்கு இன்னின்ன நாடுகளுக்குச் செல்வார்கள் என்று பலர் பேசிக்கொண்டனர். ஆனால், நாம் பேச்சுடன் நிற்கக் கூடாது. அரசிளங் குமரன் போன வழியைப் பின்பற்றி, அவன் செல்லும் பதிகளில் காணவேண்டிய அதிசயங்களை யெல்லாம் கண்டு வருவோம். (உக)

புறப்பாட்டுப் படலம்

முற்றிற்று

கரு. யாத்திரைப் படலம்

வரவேற்புகளின் வருணனை

க. *கொட்டு வார் முர சிளங் குதி கடலைப் போலவே,
எட்டுத் திக்கும் வெற்றி வெற்றி யென்றி சைமு ழங்கவே,
திட்ட மாகச் சிற்ற ரசர் தேர்கரி பரியு டன்,
வட்ட வெண் குடை நிழற்ற வாழி பாடி வந்தனர்.

சந்திரனைக் கண்டு பொங்கிக் குதித்தாடும் அலைகடல் போலவே, கொட்டும் வார்முர சங்கள், 'இளவரசனுக்கு வெற்றி, வெற்றி' என்று எட்டுத் திசைகளும் அதிர முழங்குகின்றன. அவரவர் திட்டப்படி, முறைப்படி, சிற்றரசர்கள், தேர் குதிரை யானைப் படைகளுடன் சந்திரவட்டக்குடைகள் நிழல் செய்ய, வாழ்த்துகள் பாடி, இளவரசனை வரவேற்க வந்தனர். (க)

உ. "வருக மன்னர் கோ மகன், வருக சித்தி மந்திரி,
வருக சக்தி மாம ரபின் வான்சுடர் மணி யெனுஅ,
உருகு காத லோடு மன் னுயிர்க ளுள்ளம் பொங்கியே
பெருகு மன்பு டன்வ ரும், பி ரானை முன்சென் றேற்றனர்.

தலைவன், பிரான், சுத்தன் தன் குடிகளைக் காணப் பெருகிய அன்புடன் வருகிறான். மன்னுயிர்கள், இளகிய காதலுடன், உள்ளம் களிபொங்கி, "மன்னர் மன்னனான சத்திய ராஜன் மைந்தன் வருக! சித்தியரசியலை வெற்றிபெற நடத்தும் மந்திரி சித்திமான் வருக; மாண்புமிக்க சக்திகுலத்தின் தெய்வச் சுடர்மணி வருக!" என்று ஆர்வமுடன் கூறி வரவேற்றனர். (உ)

ங. மண்ணில் வான மீனினம் வயங்கு கின்ற வாறு போல்,
எண்ணி லாம ணித்தி ரள், இருள் பருகி வில்விட,
விண் ணு லாங்க திர்க் கொடி பிடித்த வேந்தன் மைந்தனைப்
பண் ணு லாஞ் சிறப்பு டன்ப வனி செய்து பார்த்தனர்.

இரவில் ஊர்வலம் நடக்கிறது: வானத்தில் ஒளிரும் நட்சத்திர ராசிகள் எல்லாம் மண்ணிலத்திற்குவந்து ஒளிர்வதே போன்று, மன்னரும் செல்வரும் பூண்ட மணித்திரள்களும், (அவர்கள் சுத்தனுக்குச் சூட்டிய அணிமணித் திரளும்) இருளைக் குடித்து, இரவைப் பகல் செய்து, பல நிறங்களுடன் ஒளி வீசுகின்றன (வில்விடுகின்றன). பலவகைப் பண்கள் பரவி யொலிக்கின்றன. விண்ணில் உலாவி உலகிற்கெல்லாம் ஒளிவீசும் சூரியனையுடைய கொடியைப் பிடித்தாளும் சத்தியன்மைந்தனுக்கு, அனைவரும் சிறப்பாகப் பவனிகள் செய்து கண் குளிரப் பார்த்தனர். (ங)

ச. மாட மாளி கைமிசை, மணிக் கொடிகள் 'வா' வெனும்
ஏட விழ்இ னமலர் இடை விடாது கொட்டிடும்.
கூடச் சாள ரத்திலே கொழு மதிகள் பூத்தி டும்,
தேட ரிய செல்வனுந் தெருவில் வந்த போதி லே.

---

*இசைக் குறிப்பு:— எழுசீர் ஆசிரிய விருத்தம், குதிரைபோலத் தாவிசை. நம் பொருள், நம் மக்கள் என்னும் தேவாரப் பண்ணில் பாடலாம். செஞ்சுருட்டி ராகம். சந்தம்.—தான தான தான தான தான தான தானனு.

உலகம் தேடிச்சென்று பார்ப்பதற்கு அருமையான அரசிளஞ் செல்வன் தமது தெருவில் பவனி வரும் போது, மாடமாளிகைகளின் மேல் பறக்கும் மணிக்கொடிகள் 'அரசே வா வா!' என்றழைக்கும். மாடிகளிலிருந்து மக்கள் வாழ்த்தொலியுடன் இடைவிடாமல், இதழ் (ஏடு) விரிந்து மணக்கும் பல வகை மலர்களை (இளமலர்) மழைபோலக் கொட்டுவர். கூடங்களில் உள்ள சன்னல்கள் வழியே, மனை மாதர் பவனிபார்ப்பர். அம்மாதர் முகம் செழுமையான, குளிர்ச்சிபொருந்திய (கொழு) திங்கட் கூட்டம் பூத்தெழுந்து அங்கே விளங்குவதுபோ லிருக்கும். (ச)

டு. நாடினர் குமுத வாய் நகை குலுங்கு மாத ரார்;
கூடினர் மயி லெனக் குயி லெனக் குழ லெனப்
பாடினர் பல் லாண்டுகள், பரத நூன் முறைப் படி
ஆடினர் அணி யிழை யரம் பையும் வியக்க வே.

குமுதவாயில் புன்னகை குலுங்கும் மாதர், இளவரசனைப் பார்க்க ஆவலாக விரும்பி வந்து, மயில்கள் போலக் கூடினர், சிலர் குயில்போலும், குழல்போலும் இனிய குரலுடன் "சுத்தன் பல்லாண்டுகள் வாழ்க" என்று பாடினர். சிலர் அழகிய பூண்களைத்தரித்த தெய்வ லோக ரம்பைகளும் வியக்கும்படி, பரதசாத்திர விதி நியமம் பற்றி நாட்டியமாடினர். (டு)

சு. தோர ணக்க லையெலாந் துலங்கு கின்ற வாயி லில்,
வார ணங்கள், வாத்தி யங்கள் வாழ்த்த ஓமொ லியுடன்,
பூர ணக்க லச மேந்திப் பூவை யர்முன் செல்லவே,
ஆரணங்க ளோதிச் செல்வர் ஆண்ட கையை யேற்றனர்.

ஆங்காங்கே, வேதகானங்களுடன் அன்புச் செல்வர் வந்து, ஆண்மையிற் சிறந்த சுத்தனைத் தமது மாளிகையில் வரவேற்றனர். மகரதோரணக் கலையில், அழகுக் கலையில், அணிக் கலையில் எத்தனை வகையுண்டோ அத்தனையும் அவர் வாயில்களில் விளங்குகின்றன; அங்கே யானைகள் 'ஓம்' என்று களிகூறுகின்றன; வாத்தியங்கள் அந்த ஓமொலியுடன் முழங்குகின்றன; இளமென்மாதர் பூரண கலசங்களைத் தாங்கி முன்னே செல்லுகின்றனர். (சு)

எ. "ஞான ஞாயி றேயருள் நடம் புரியும் ஆழி யே,
வான முதம் போலு யிர்க்கு வாழ்வ ளிக்கும் வள்ளலே,
ஈனர் செல்வ மே!"யெனத் திரு வுடைய மன்ன வர்,
கோன ருள்கு மரனைத்தங் கோயி லுட்கொண் டேகி னர்.

"ஞான சூரியனே! அருள்நடம்புரியும் கருணைக்கடலே! வான் பொழியும் மழைய முதம்போல மன்னுயிர்களுக்கு வாழ்வைத்தரும் அன்பு வள்ளலே! ஏழைகளின் செல்வமே!" என்று போற்றி, திருமிகுந்த மன்னர், சித்தியர்கோனுன சத்தியன் பெற்ற இளங்குமரனைத் தமது அரண்மனைக்குள் (கோயில்) அழைத்துச் சென்றனர். (எ)

அ. அரிய ணையில் ஏற்றி னர்,அ ரசியற் சிறப் பெலாம்
வரிசை யாகக் கூறினர், வழங்கி னர்ப ரிசுகள்.
விரிக டல்ப ருகந் தாழும் வென்மு கிலைப் போலவே,
வரத னும்ப ணிந்து வாங்கி மன் னுயிர்க் குதவி னன்.

சிற்றரசர், தம் சக்கரவர்த்தித் திருமகனை அரியணையேற்றி வணங்கினர்; சித்தியின் குடைநிழலில், தாம் நடத்திவரும் அரசியற் சிறப்புகளை வரிசையாக, துறை துறையாகக் கூறி விளக்கினர்; அருமையாக விலையுயர்ந்த பரிசுகள் வழங்கினர்; அன்புக் காணிக்கையாக

நன்கொடைகள் ஈந்தனர். வெள்ளைமேகம் தாழ்ந்து, கடலைக் குடித்துக் கார்மேகமாகி, உலகிற்கு மழை பொழிகிறது. அதுபோல், சுத்தனும் அரசர் கொடுத்த கொடைகளை வணக்கமுடன் ஏற்று, அவற்றைத் தன் குடிகளுக்கே பயனுகும்படி அளித்தான். (அ)

கூ. தேனும் பாலுந் தீஞ்சுவைக் கனிகளும் பலவகை
யானநல் லடிசிலும், அமுதனுர் அளித்த னர்.
தீனர், செல்வர் யாவரும் செறிந்துடன் அருந்திடத்
தானு மவ்விருந் தருந்தினுன் சமரசச் சுடர்.

அமுதம்போன்ற மாதர், தேனும், பாலும், இன்சுவைக் கனிகளும், பலவகையான நல்ல உணவுகளும் அன்புடன் அளித்தனர். சர்வசமரசச் சுடரான சுத்தன், ஏழைகள், பணக்காரர், அரசர், குடிகள் அனைவரையும் தன்னுடன் சேர்ந்து அமர்ந்து உண்ணச்செய்து, தானும் அவர்களிடையே அந்த விருந்துண்டு மகிழ்ந்தான். (கூ)

க0. இளங் கதிர் முகத்தனை, யிருமலர் விழியனை,
உளங்கவர் குணத்தனை, உயர்வரைப் புயத்தனைக்
களங்க மற்ற கல்வியிற் கரையிலாக் கடலனை,
விளங்கருட் புலவனை விளம்புவா யினிக்குமே.

அவனுடன் விருந்துண்ட வாய் மட்டும் இனிப்பதன்று; சுத்தன் இளஞ்சூரியன் போன்ற முகத்தையுடையவன்; இரண்டு தாமரைகள் போன்ற அழகான, விசாலமான கருணைக் கண்களை உடையவன். பிறர் உள்ளத்தை வசீகரிக்கும் நல்ல குணமுடைய பெரியோன்; மலைபோல் உயர்ந்த தோளுடைய வீரன்; மாசற்ற கல்வியில் கரையில்லாத கடல்போன்றவன் (கல்விக் கடல்); கற்ற கல்விமட்டு மன்று; அருட்புலமையும் நிரம்பிய அறிஞன்! அவனைப் புகழும் வாயெல்லாம் இனிக்கும். (க0)

கக. காணுங் கண்கள் இன்னு மின்னுங் கண்டுகண் டுவக்கவே,
ஆணும் பெண்மை வேட்குநல் லழகனை நினைத்ததும்,
பூணி லங்குங் கொங்கை மாதர் பொங்கு காதல் வெள்ளத்தால்,
நாண வேலி போக்கினுர், நவில்வ தென்ன விந்தையே?

நல்ல இளம் அழகனுன சுத்தனைக் காணும் கண்கள், 'இன்னும், இன்னும்' என்று, சலியாது கண்டு மகிழும். அக் காட்சியின்பங் கண்ட ஆண்பிள்ளையும், 'அடாடா, நான் பெண்ணுய்ப் பிறந்து இந்த அழகனை அடைய வேண்டுமே!' என்று ஆசைகொள்வான். ஆண்களே அப்படியென்றால், இளம்பெண்கள், இந்த அரசிளங் குமரனிடம் காதல் கொண்டதில் வியப்பென்ன? நகை குலுங்கும் மார்புடைய இளமாதர்கள், அவனை நினைத்ததுமே நாணமென்னும் வேலியைவிட்டுக் காண ஓடிவந்தனர். (கக)

கஉ. கொண்டை நாண் மலர்சொரியக் கொங்கை விம்மிப் போர்செயத்
தொண்டை வாய்க் கிளியனுர் துடியிடை துவளவே,
தண்டை யஞ்சி லம்பொ லிக்கத் தாவி வந்து சுத்தனைக்
கண்டது மியம்பொணுக் கனவுலகி லாழ்ந்தனர்.

தொண்டைப் பழம்போலச் சிவந்த வாயும், கிளிமொழியுங்கொண்ட பெண்கள், கொண்டையில் தொடுத்த புதிய மலர்கள் அவிழ்ந்து சிந்த, தனங்கள் விம்மி நெருங்கிக் காதற்போர் செய்ய, நுண்ணிய இடை துவள, அழகிய தண்டை சிலம்புகள் கலீர் என்று ஒலிக்க, ஓடிவந்து சுத்தனைக் கண்டதும், இன்னதென்று சொல்லமுடியாத நீண்டதொரு கனவுலகில் ஆழ்ந்தனர். (கஉ)

கங. தேர்ந்தெடுத்த சிற்பிகள் செதுக்கிய சிலையனார்,
கூர்ந்தவாள் விழிகளாற் குரிசிலைப் பருகியே,
பேர்ந்திடாது நின்றனர் ; பிராணெருவ னேயுடல்
சோர்ந்திடா வுயிரெனத் துடித்தன னவருளே.

கலைப் பரீட்சை வைத்துத் தேர்ந்தெடுத்த சிற்பிகள், தமது திறமையெல்லாங் காட்டிச் செதுக்கிய சலவைக் கற்சிலைபோன்ற அழகிய மாதர், வீரக் குரிசிலை வாள்போன்ற தம் கூரிய விழிகளால் அள்ளிப் பருகுவதுபோல் ஆர்வமுடன் நோக்கினர் ; நோக்கநோக்க அவர் உள்ளம் அவனிடமே இலயித்துப்போனது. சித்திரப்பாவைபோல நின்ற அவர் உடல் சோராமல் தாங்கியவன் எவன்? உடலுட் புகுந்து சுத்தனே உயிர்த்துடிப்பாகித் தாங்கினான். அனைவரும் உடல் ; அவனே உயிரானான். (கங)

கச. வான், கடல், மலை, நதி, யியற்கையின் வனப்புகள்,
மேனியா யமைந்த தன்ன வீரனைமுன் கண்டதும்,
கான்மலர், தளிர், கனி மதி கலந்த பொற்பினார்,
ஊன் கலந்த வுள்ளுயிர் இவன்ஒருவ னென்றனர்.

வானைப்போன்ற விசாலஞானம், கடலைப்போன்ற கருணை, மலையைப்போன்ற மாண்பு, திண்மை, ஆற்றைப்போன்ற வண்மை, இயற்கை வனப்புகள் போன்ற மாசற்ற அழகு—இவையே சேர்ந்து உடலாக அமைந்தமைபோன்ற வீரத்திருவாளனான சுத்தனை மாதர் பார்த்தனர் ; கான்மலர் போன்ற கண்கள், மங்கல வனப்பு, தளிர்போன்ற இளம் மேனி, கோவ்வைக்கனி போன்ற மூரல்வாய், மதிபோன்ற முகப்பொலிவு—இவை சேர்ந்து அழகிற் சிறந்து விளங்கிய அம் மாதர், 'எமது ஊனிற் கலந்த அந்தராத்மா, உள்ளுயிர், இவனே ; இவன் ஒருவனே' என்று உணர்ந்து சொன்னார்கள். சுத்தன் அவர்கள் உயிருடன் கலந்து உளத்துடிப்பானான். (கச)

கடு. நோகை, கோகி லங்கிளி தொகுத்த சுந்த ராங்கிகள்,
தாக மாகப் பார்த்திருந்த சக்தி மைந்தன் வந்ததும்,
மேக மார்பினைப் பிளக்கும் வேகமின்ன லென்னவே,
மோகமார்பி னின்றெளிர் முறுவ லள்ளி வீசினார்.

மயில்போலச் சாயல், குயில்போலக் குரல், கிளிபோலப் பேச்சு ஆகிய எல்லாம் சேர்ந்த வேறுசில சுந்தராங்கிகள், சக்திமைந்தனான சுத்தன் வரவைத் தாகமுடன் எதிர் பார்த்திருந்தனர். அவன் வந்ததும், அவர்களுக்கு உள்ளம் குளிர்ந்தது ; மனம் பூரித்தது. மேகத்தின் மார்பைப் பிளந்தொளிரும் வேகமான மின்னலைப்போல, மோகங்கொண்ட தமது மார்பிலிருந்து இன்பமுறுவலை அள்ளியள்ளி வீசினர் ; சுத்தனைக்கண்டதும் உளம்பூரித்துப் புன்னகை பொழிந்தனர். (கடு)

கசு. அல்லி மார்பைக் கொஞ்சிடும் அமுதவெண் ணிலாவினைப்
புல்லி யாடுந் தென்றலைப் பொருமை கொண்டு நோக்குவார் ;
மல்லிகையில் ஊதுகின்ற வண்டைத்தூ தனுப்புவார்,
மெல்லிதழ் குவிந்தபூ விழித்திருக்க வேண்டுவார்.

சுத்தனைக் கண்டதும், காதல் பொங்கிய மாதர் சிலர் வருந்துகின்றனர் ; இரவில் அல்லிமலர்களின் மார்பை வெண்ணிலா கொஞ்சுகிறது: அதைத் தென்றல் புல்லிப்புல்லி விளையாடுகிறது. அக் காட்சியைக் கண்டு, 'இந்தக் கூடலின்பம் நமக்குக் கிடைக்கவில்லையே' என்று பெண்கள் சிலர் பொருமை கொள்வர். சிலர் மல்லிகையைச் சங்காக ஊதும் வண்டைத் தாம் காதலித்தவனிடம் தூதுசெல்ல அனுப்புவார். சிலர் இதழ் குவிந்த

தாமரையை, "ஏ தாமரையே, விழித்திரு! நீ விழித்தால் பகலாகும். இரவின் துயரைத் தப்புவோம்" என்று வேண்டுவர். (கசு)

கஎ. வில்லினைக் குனித் திரண்டு வேல்விழிகள் விசியே,
சொல்லிலாது மாந்தரைத்தம் சொக்கிலே பிடித்திடும்,
மெல்லியர் வலைகளில் விழா தடக்கி, ஐந்தினை
வெல்லு மாண்மை கொண்டவீர தீரன்வாழ்க வாழ்கவே!

எத்தனையோ அரசிளங்குமரிகள் சுத்தனைக் காதலித்தனர். ஆனால், அவன் மனத்தை எவரும் கவரவில்லை. புருவ வில்லை வளைத்து, இரண்டு வேல்விழிப் பார்வைகளையும் வீசி, வாயால் பேசாது, குறிப்பால், அழகால், நகையால், மினுக்கால் மாந்தரைத் தமது சொக்கில் (மயக்கில்) பற்றிச் சிக்கவைக்கும் மெல்லிள மாதர் வலைகளில் விழாமல், ஐம்புலன்களையும் அடக்கி வெல்லும் ஆண்மைகொண்ட வீரன், தீரன் சுத்தன். அப்படிப்பட்ட தூயவீரன் வாழ்க, வாழ்க! (கஎ)

கஅ. பன்மணி யணிக ளெங்கும் பத்தி பத்தி யாகவே,
மின்ன விட்டுக் கண்பறிக்கும் வேந்தர் மாளி கைகளின்
பொன்னு யிர்த்த போகபோக்கி யத்திற் புந்தி விட்டிடான்;
இன்னொரு புறத்திலேதன் எண்ண மூன்றிப் பார்த்தனன்.

வேந்தர் அரண்மனைகளில், பலநிற மணிகள் பத்திபத்தியாகப் பதித்த அணிகளும் அலங்காரங்களும் கண்ணைப் பறித்தொளிரும். பொன்வளமையால் உயிர்க்கும் சுகபோகங்களும் அதற்கு வேண்டிய பொருள்களும் ஏராளமா யிருக்கும். ஆனால், சுத்தன் இந்தப் போகமினுக்கில் புத்தியை விட்டு மயங்கவில்லை. இது வாழ்வின் பகட்டான இடம்பப் பக்கம். மற்றொரு பக்கம் ஏழை யெளியவர்கள் வறுமையால் வருந்துகின்றனர்; வாழ்வைச் சுமக்க முடியாது கண்ணீர் விடுகின்றனர். அந்த மற்றொரு பக்கத்திலேதான் அவன் தனது எண்ணத்தை ஊன்றி உலகியல்பை அறிந்தான். (கஅ)

கக. பொன்னரசர் கோயிலையும் போக வாழ்வை வேண்டிலன்.
மன்னர்தங் குமரிகள் வருந்து வேட்கை தீர்க்கிலன்.
கன்னி யர்கள் வீசு கின்ற கண்வலையுங் காண்கிலன்,
மன்னுயிர்த் துடிப்பையே மனத்துடிப்பி லேந்தினன்.

பொன்வளம் செழித்த அரசர் அரண்மனை தரும் சுகபோக வாழ்வை அவன் விரும்பவில்லை. மன்னர் பெற்ற குமரிகள் அவனிடம் காதல் கொண்டு வருந்தினர். அந்த வருத்தத்தைத் தீர்க்கவும் அவன் இணங்கவில்லை. மன்னர் தம் குமாரிகளை அவனுக்கு மணம் புரிவதாக முன்வந்தனர்—அவன் மணவினையை விரும்பவில்லை. கன்னியர் அவன் மேல் ஆசை கொண்டு கண்வலை வீசினர். அவர் முகத்தையும் அவன் பார்க்கவில்லை. மன்னுயிர் மக்களின் மனத்துடிப்பையே தனது மனத்துடிப்பில் கொண்டு, அவர்கள் படும் பல துன்பங்களை உணர்ந்தான். சுத்தன்மனம் அரசரிடம் செல்லாது, பொது ஜனங்களிடமே சென்றது. (கக)

உ௦. கொற்ற வாழ்வி னுச்சியிற் குலாவுமின்பம் வேண்டிலான்,
நெற்றி வேர்வை சொட்டச் சொட்ட நீடுழைக்கும் ஏழைகள்
வற்றிக் கஞ்சி யின்றி வாடும் வன்கொடிய காட்சியைச்
சுற்றி யெங்குங் கண்டவர் துயர் கெட வுதவினன்.

சுத்தன் அரச வாழ்வின் சிகரத்தில் அடையும் உலகின்பங்களை வேண்டிலன்; நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டச் சொட்ட நீண்ட நேரம் பாடுபடும் ஏழைகள் குடிக்கக் கஞ்சி

யின்றி, உடல் வற்றி வாடும் வலிய கொடிய காட்சியைச் சுற்றிலும் கண்டான்; அவர்கள் துயரம் தீரத் தன்னால் ஆனதை உதவினன். (உ0)

உக. செல்வர் தந்த செல்வ மெல்லாந் தேச தேச மாகவே,
கல்வியுந் தொழிலு மோங்கக் கை நிரம்ப நல்கினன்.
நல்ல தொண்டர் செய்பொது நலம்வளர வூக்கினன்,
எல்லை யில்லாத் துன்ப மிந்த நாட்டி லே'னென் றெண்ணுவான்.

"இந்தப் புண்ணிய பூமியில் வறுமை மடமைத் துன்பங்கள் ஏன் வந்தன?" என்று சுத்தன் ஆராய்வான். செல்வர் தனக்குத் தந்த செல்வத்திரளைக் கைநிரம்ப வாரி வாரி ஒவ்வொரு நாட்டிலும் கல்வியும் கைத்தொழிலும் செழித்தோங்க வழங்கினன். நல்ல திருத்தொண்டர் செய்யும் பொதுநலப் பணிகளுக்கு வேண்டிய ஆதரவளித்து ஊக்கினன். (உக)

உஉ. வண்மையும் வளமையும் வளரு கின்ற நாட்டிலே,
உண்மையும்உள் ளன்புமெங்கு மோங்கு யர்பொன் னாட்டிலே,
கண்ணினீர் பெருகிடுங் கவலைமேக மேனென்பான்
புண்ணிய வமைச்சுடனிப் பூவியல்பை நோக்குவான்.

புண்ணியனான அமைச்சன் சித்திமானே இந்த நாட்டில் அரசியலைத் தாங்குகிறான். அவனுடன் உலகியல்பைக் கண்ட சுத்தன், 'நமது புண்ணியபூமி ஏராளமான நீர் நிலவளமும், தாராளமான ஈகையும் வளரும் நாடன்றோ? மக்கள் வாக்கில் உண்மையும், உள்ளத்தில் அன்பும் கொண்டு செழித்தோங்கும் பொன்னாடன்றோ? இதில் கண்ணீர் பெருகும் கவலை மேகம் படர்ந்ததேன்? முன் இருந்த இன்பச் செழிப் பில்லையே? வறுமை நோய் தலை காட்டுவதேன்?' என்று சிந்திப்பான். மந்திரியும் அதன் காரணத்தை ஆராய்வான். (உஉ)

உங. ஆதி மன்னர் வாழ்வுமின் றரியணை யிருந்திடும்
நீதிமன்னர் மாட்சியும், நிகரிலாச் செயல்களும்,
நீதிநினைத் தகர்த்தவர் செருக்களஞ் செயித்ததும்,
ஓதினன் உளங்கைநெல்லி போலுணர்ந்த சித்திமான்.

"நாட்டில் அறமே தழைக்கிறது. இன்னும் அதர்மம் தலைகாட்டவில்லை. நாம் இப்போதிருப்பது இன்ன நாடு. இந்த நாட்டின் ஆதிமன்னர் வாழ்க்கை, இன்று அரியணை வகித்தாளும் நீதிமன்னர் பெருமை, அவர் தம் இணையற்ற நற்செயல்கள், வீரச் செயல்கள் இவை, இன்னின்னவர் தீமையை அழித்து அறப்போரில் வெற்றி பெற்றனர்" என உள் ளங்கை நெல்லிபோல் நாட்டுவரலாறுணர்ந்த சித்திமான் சொன்னன். (உங)

உச. செல்வச் சேயை மார்பிலூட்டுந் தெய்வத்தாயைப் போலவே,
பல்வளந் தழுவிப்பாய்ந்து பாரை யூட்டும் ஆறுகள்,
சொல்லரசர் பாடியன்புத் தொண்டுசெய் திருத்தலம்,
தொல்வளஞ் சுமந்தமா மலைக டோறுஞ் சென்றனர்.

செல்லக் குழந்தையை மார்பிலணைத்துப் பாலூட்டி வளர்க்கும் புனிதத் தாயைப் போலவே, பல நிலவளங்களைத் தழுவிப் பாய்ந்தோடிப் பயிர்களை வளர்த்து, உயிர்களை ஊட்டும் புண்ணிய நதிகள், சொல்லரசர்களான அருட்கவிகள் பாடி அன்புப்பணி புரிந்த திருத்தலங்கள், தொல்வளமைகளைத் தாங்கி, முனிவர் உலாவும் உன்னதமலைகள் ஆகிய வற்றிற்கெல்லாம் சுத்தனும் மந்திரியும் சென்றனர். (உச)

உரு. செஞ்சி, சென்னை, தஞ்சை,மா மதுரை, கேரளம், முனை,
கஞ்சி, காசி, கல்கத்தா, கயா, அயோத்தி, சீநகர்,
பஞ்சவடி, ஹம்பி, பம்பை, பாலை விரர் பட்டினம்,
எஞ்சுபல் லிடங்களு மிருந் திருந்து சென்றனர்.

இருவரும் நாடெங்கும் பல நல்லூர்களைக் கண்டனர். செஞ்சி, சென்னை, தஞ்சாவூர், மதுரை, மலையாளம், குமரிமுனை, காஞ்சிபுரம், காசி, கயா, கல்கத்தா, அயோத்தி, ஸ்ரீநகர், பஞ்சவடி, ஹம்பி, பம்பாய், பாலைவனமாகிய இராஜபுதனத்தின் புகழ்பெற்ற பட்டினங்கள் முதலிய இடங்களுக்குச் சென்றனர்; ஆங்காங்கு முதல்வர்களும் ஜனங்களும் செய்யும் உபசாரங்களை ஏற்றுத் தங்கித் தங்கிச் சென்றனர். (உரு)

உசூ. சென்ற சென்ற வூர்களிற் சிறந்த காட்சிச் சாலைகள்,
குன்றிடா தறிவினைக் கொடுக்குங் கல்விச் சாலைகள்,
வென்றமா முனிவர் தீரர் வீரர் தம்மைக் கண்டனர்,
தொன்று தொட்ட வாழ்க்கையும் துளக்கு றக்கண் டேங்கினர்.

இருவரும் சென்று வரவேற்கப்பெற்று இருந்த ஊர்களிலெல்லாம் மேலான கண் காட்சிகள், குறைவில்லாமல் அறிவையும் கலையையும் கொடுக்கும் கலாசாலைகள், கழகங்கள் முதலியவற்றையும், ஐம்புலனையும் வென்ற தவமுனிவர், அறிவும் அறமும் பொருந்திய தீரர், புகழ்பெற்ற வீரர் முதலியோரையும் கண்டு மகிழ்ந்தனர்; ஆனால், அதே சமயத்தில், ஆங்காங்கே தொன்றுதொட்டுவந்த பழைய நாகரிகவாழ்க்கை ஆட்டங்கொடுத்துச் சிதையத் தொடங்கியதையும் குறிப்பாகக் கண்டு மனம் வருந்தினர். (உசூ)

உஎ. கல்வளர் குறிஞ்சியும், கடிய பாலையும்,
புல்வளர் முல்லையும், பொங்கு நல்வளம்
மல்கிய மருதமும், வங்கக் கூட்டங்கள்
பல்கிய நெய்தலும் பார்த்துச் சென்றனர்.

குன்றுகள் வளரும் குறிஞ்சி நிலம், கடுமையான வெயிலெரிக்கும் பாலைநிலம், புல்லும் காடும் மேவி ஆக்கள் மேயும் முல்லை நிலம்; நல்ல கனி, கிழங்கு, தானியங்கள், தேன், பால் வளங்கள் பொங்கிப் பெருகிய மருதநிலம், கப்பல்கள் கூட்டங் கூட்டமாகப் பலவாறு போக்கு வரத்துச் செய்யும் நெய்தல் துறைமுகங்கள் ஆகிய ஐந்து நிலங்களையும் இருவரும் பார்த்துச் சென்றனர். இனி, அவர்கள் கண்ட சில மாகாணங்களைச் சொல்வாம்: (உஎ)

தமிழ் நாடு

உஅ. முத்திறை தென்றிரை முத்த மிட்டிடும்;
சித்தரின் மலைதருந் தேனி னருவிகள்;
பத்தரின் பாடலைப் பறவை பாடிடும்
முத்தமிழ் நாட்டினை முந்து கண்டனர்.

முத்துக்களை வாரியிறைத்திடும் தென்கடலான இந்துசமுத்திரம் முத்தமிடுகிறது; சித்தர் வாழும் மலைகள் தேனருவி தருகின்றன. இறைவனருளால் பாடும் அன்பர் பாசுரங் களைப் பறவைகளும் பாடுகின்றன—இத்தகைய இயல்வளமும் கலைவளமும் பெருகிய இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழ் வளரும் தென்னாட்டை இருவரும் முதலிற் கண்டனர். (உஅ)

உகூ. "வருகநங் கோமகன்! வருக சித்திமான்!
வருகநல் வர"வென வரிசை கொண்டெதிர்,
தருகைநீள் செம்மலாந் தமிழர் நாடனும்,
முருகிள மன்புடன் முன்வந் தேற்றனன்.

பாவலர்க்கும், இரவலர்க்கும், தொழிலாளருக்கும் வரையாது முகம்பார்த்துத் தரும் ஈகைக்கரம் வாய்ந்த, ஆண்மையிற் சிறந்த அரசன் (செம்மல்) ஆகிய தமிழர்கோமான், ஏராளமான சீர்களையும் பரிசுகளையும் கொண்டு எதிரே சென்று, "நம் கோமகன் வருக, சித்திமான் வருக வருக, நல்வரவாகுக!" என்று மகிழ்வுடன் வரவேற்றான். (௨௯)

சுத்தன் தமிழ்நாட்டைப் புகழ்கிறன்

௩௦. "எந்தையின் கண்ணெனு மினிய நாடிதே,
செந்தமிழ் இசைமலி தெய்வ நாடிதே;
சொந்தநம் வீடிது; சுதந்த ரத்துடன்
வந்தனம், உவந்தனம், வரம்பி லின்பமே.

தமிழரசன் வரவேற்பைச் சுத்தனும் சத்தியனும் ஏற்றனர். சுத்தன் தமிழகத்தைப் புகழ்ந்தான்: "இஃது இனிய நாடு. என் தந்தைக்கு ஞானக்கண் போன்ற அருள்நாடு. செந்தமிழில் அருட்பாடல்கள் முழங்கும் தெய்விகநாடு. இஃது எங்களுக்குச் சொந்தவீடே போன்றது. ஆதலால், சுதந்தரத்துடன் வந்தோம், மகிழ்ந்தோம், வரம்பில்லாத இன்பமடைந்தோம். (௩௦)

௩௧. "வள்ளுவர் பொதுமறை, கம்பன் வான்கவி,
ஒள்ளிய யோகியர் உரைத்த வாசகம்,
தெள்ளிய திருமுறை, திருவ ருட்கவி,
உள்ளத்திற் கமுதென வூறு நாடிதே.

"இத் தமிழகம் தெய்வவொளி பெற்ற யோகமுனிவர் உரைத்த அருள்வாக்குகளை நிரம்பவுடையது—திருவள்ளுவர் அருளிய பொதுமறையான திருக்குறள், கம்பன் பாடிய தெய்வ காவியம் (வான்கவி), தெய்வப் பொருளைத் தெளிவாக விளக்கும் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், பெரியபுராணம் முதலிய திருமுறை நூல்கள், தாயுமானவர், பட்டினத்தார், அருட்பா போன்று திருவருளால் எழுந்த கவிகள்—இவை இரசிகர் உள்ளத்திற்கு அமுதம் போல் இத்தமிழகத்தில் ஊறிப் பொங்குகின்றன. (௩௧)

௩௨. "குரைகடல் உண்டதோர் குமரிக் கண்டத்தின்
கரையறு கலைத்திரள் கரைந்த பின்னரும்,
அரியநல் லறிஞர்செய் யருங்க லைத்திரள்
வரையெனக் குவிந்திசை வளரு நாடிதே!

"அலைவிம்மி யொலிக்கும் தென்கடல், முன்னே தமிழகமா யிருந்த குமரிக்கண்டத்தை உண்டது. அத்துடன் எத்தனையோ கலைநூற் கும்பல் கரைந்து மறைந்தது. அதன் பிறகும், அரிய நல்ல அறிவாளர் செய்த அருமையான கலைநூல்கள், மலைபோலக் குவிந்து புகழ் வளரும் நாடு இத் தமிழகம். (௩௨)

௩௩. கடற்படை நிலப்படை கணக்கி லாதது;
மடைதிறந் ததுவென வாணி பத்திரு
வுடையது; வண்மையி லுயர்ந்த சீர்த்தியே
இடைவிடா திதன்புகழ் இயம்பு மாமரோ!

"இந்தத் தமிழ்நாடு கடற்படை, தரைப்படை கணக்கில்லாமல் உடையது. பல கடல் - நிலப் போர்களை வென்ற வீரர்களை யுடையது. கப்பல் வாணிபத்திலும் தரை வாணிபத்திலும் பெருகிய செல்வம் உடையது. இந்நாடு வருபவர்க்கு அள்ளியள்ளிக் கொடுக்கும் தாராள ஈகையில் மிக உயர்ந்த புகழ்பெற்றது. பல வள்ளல்களைக் கொண்டது. இந்த வண்மையே இதன் புகழை இடைவிடாமல் சொல்லும். (௩௩)

௩௪. "உலகெலாம் ஒருகுல மாகு மன்பொளி
நிலவிடுஞ் சமரச நிலைய மிந்நிலம்.
நலமுயர் அருட்பெருஞ் சோதி நாதர்கள்,
இலகிடுந் தவக்கனல் ஏறு நாடிதே.

"இத்தமிழகம் உலகமெல்லாம் ஒரு குலமாகவாழ அன்பொளி வீசும் சுத்த சமரச சன்மார்க்கத்தின் இருக்கையாகும். வள்ளுவர், இளங்கோ, திருத்தக்கர், கம்பர், அப்பர், திருமூலர், மாணிக்கவாசகர், ஔவையார், ஆண்டாள், காரைக்கால் அம்மையார், சம்பந்தர், சுந்தரர், நம்மாழ்வார், நந்தனர், தாயுமானவர், இராமலிங்கர், குணங்குடி மஸ்தான், வீரமா முனிவர், உமறு புலவர் போன்ற எத்தனையோ அருட்சோதி சித்தர்கள், நாதாக்கள் விளங்கித் தவக்கனல் மேன்மேலும் ஓங்கும் நாடிது. இன்றும் இரமண முனிவர், அரவிந்தர் போன்ற தவயோகிகள் இங்கே விளங்குகின்றனர். (௩௪)

௩௫. "கன்னிய மாகவென் றந்தை காத்திடும்,
புண்ணிய பூமியின் புனிதச் சோலையாம்;
எண்ணினும் இயம்பினும் இதயம் இன்புறப்
பண்ணிடுந் தமிழகப் பண்பு வாழ்கவே."

"என்தந்தை மிகவும் கௌரவமாகக் காக்கும் புண்ணிய பூமியான பாரத நாட்டின் புனிதமான தவச்சோலை போன்றது இது. எண்ணினாலும், வாயாரப் பேசினாலும், உள்ளம் இன்புறச் செய்யும் இத்தமிழகத்தின் நாகரிகப் பெருமை (பண்பு) நீடுவாழ்க!" (௩௫)

௩௬. இவ்வகை போற்றிடும் இளவல் சுத்தனைச்
செவ்விய செந்தமிழ்ச் செல்வர் கோமகன்,
திவ்விய விருந்துகள் செய்து கோயிலில்,
ஒவ்விய சிறப்புடன் உபச ரித்தனன்.

இவ்வாறு தன் நாட்டையும் நாகரிகத்தையும் புகழ்ந்து போற்றிய இளவரசனை சுத்தனை, செம்மையான செந்தமிழ்ச் செல்வருக்கு இறைவன், திவ்வியமான செவிவிருந்து, கண்விருந்து, நாவிருந்து, பாவிருந்துகள் செய்து, தனது கோயிலில், தகுந்த சிறப்புடன் உபசரித்தான். (௩௬)

௩௭. உயிர்களுக் குயிரென வுலவும் ஒன்றைப்போற்
பயிர்களுக் குயிரெனப் பாயுங் காவிரி
வயல்வளம், வருணிநல் வைகைப் பொன்வளம்,
உயர்மலை வளங்களும் உபச ரித்தன.

எங்கும் உயிர்களுக்கு உயிராய் உலாவுவது ஒரு பரம்பொருட் சக்தி. அதைப் போலவே பயிர்களுக்கு உயிராகப் பாய்ந்துலாவுவன காவிரி, வைகை, தாமிரவருணியாகிய ஆறுகள்; பொன்னும் பசுமையுங் குலுங்கும் இவற்றின் வயல்வளமும், உயர்ந்த பொதிகை மலை, யானைமலைகளின் குறிஞ்சி வளங்களும் இளவரசனை உபசரித்தன. இந்நதிக் கரைகளிலும், மலைகளிலுமிருந்த மக்கள் இளவரசனை ஏற்றுப் பல பரிசுகள் ஈந்து உபசரித்தனர். (௩௭)

கேரளம்

௩௮. ஆர்த்தெழும் அருவிகள், அடர்ந்த தென்னைகள்
கூர்த்தெழுங் கார்வரை குலவுங் கேரளம்;
வேர்த்திட வுழைத்திடும் வீரர் சேரமான்
சீர்த்திகள் கண்டனன் சித்திச் செல்வனே.

சப்தித்தெழுந்து பாயும் பல அருவிகள், நெருங்கிய தென்னந் தோப்புகள், கூர்ந் தெழுந்து மேகமுடி சூடிய மலைக்காட்சிகளைக் கொண்ட இயற்கையழகு மிக்க நாடு கேரளம். அதில் உள்ள மக்கள் போர்வீரர்; அத்துடன் வியர்க்க வியர்க்கப் பாடுபட்டு முன்னேறும் கர்மவீரர்; அவர்களுக்கு அரசன் சேரமான். சேரமான் மரபு பெரும்புகழ் பெற்றது. சேரன் செங்குட்டுவன், குலசேகரன், மார்த்தாண்டவர்மன் முதலிய மன்னர் அரிய செயல்களைச் செய்தனர். சேர மன்னனுடைய பேரிசைகளைக் கண்ணுரக் கண்டு மகிழ்ந்து, சித்தியின் செல்வனை சுத்தன் மேலேசென்றுன். (௩அ)

கன்னடம்

௩௯. பொன்னியின் மாலையைப் பூண்ட பொன்னிலம் ;
இன்னிற மலர்கனி யிலகு மின்பவின் ;
பன்னலத் தொழில்வளம் பரவி யோங்கிடுங்
கன்னடங் காட்டிய கனிவிற் பூரித்தான்.

கன்னடதேசம், காவிரி (பொன்னி)யாற்றை மாலையாகப் பூண்டு, தங்க வயல்கள் நிறைந்த பொன்னுடு. கண்ணுக்கினிய பலநிற மலர்த் தோட்டங்களையும் கனிக்காடுகளையும் கொண்டு விளங்கும் இன்பமான விண்ணகம்; இந்திரலோகம் போன்று அழகுமிக்கது. பல நன்மைகளை உலகிற்குத் தரும் பௌதிக ரசாயனத் தொழிற்சாலைகளும் மின்சாரத் தொழிற் சாலைகளும் பரவிச் செல்வம் பெருகியது. அத்தகைய கன்னடதேசம் காட்டிய அன்பைக் கண்டு சுத்தன் உள்ளம் பூரித்தான். (௩௯)

ஆந்திரம்

௪௦. மானத்தை யுயிரினு மதிக்கு மல்லர்கள்,
நானென, நாடென நன்மை தேடுவார்.
தேனிசை தவழ்ந்திடுந் தெலுங்கு பேசுவார்,
கோனிசை கேட்டுளங் குளிர்ந்து சென்றனன்.

தேன்போன்று தித்திக்கும் சங்கீதச் சுவை தவழும் தெலுங்கு பாஷை பேசும் ஆந்திரர் 'நான், எனது நாடு, என்னவர், என்மொழி, என்னுரிமை' என்ற உணர்ச்சி மிக்கவர்; தமக்கும் நாட்டிற்கும் எல்லா நன்மைகளும் தேடுவார்; தமது மானத்தை உயிரினும் பெரிதாகக் காக்கும் மல்லர், வீரர். அவர்களுடைய மன்னன் புகழைக் கேட்டு, சுத்தன் உள்ளங்குளிர்ந்து சென்றுன். (௪௦)

வங்கநாடு

௪௧. கங்கையாழ் இசைப்பது ; கலைசி றந்தது ;
பொங்கிய ஞானமும் புகழு மிக்கது ;
மங்கலப் புதுயுக வசந்தச் சோலையாம்,
வங்கத்தின் வரையறு வரங்கள் கண்டனன்.

வங்காடு உலகெல்லாம் சீர்பரவியது. அதன் பெருமையைக் கங்கா நதியான வீணை பாடிச் செல்கிறது. அது காவியம், ஓவியம், பாட்டு, நடனம் முதலிய கலைகளிற் சிறந்தது; ஞானவெள்ளம் பொங்கியது; வீரப்புகழ் ஓங்கியது; மங்கலமான புதுயுகத்திற்கு வசந்தச்சோலை போன்றது; சைதன்யர், இராம்மோஹன், தேவேந்திரர், இரவீந்திரர், அரவிந்தர் போன்ற புதுயுகச் சுடர்களைத் தந்தது. வங்காளம் எல்லையற்ற கல்வி, கலை, பக்தி, ஞானம், ஆடல், பாடல் புதிய முயற்சிகள், தேச பக்தி, தெய்வ பக்தி, யோகம் ஆகிய எல்லா வரங்களையும் பெற்றது. அவற்றைக்கண்டு சுத்தன் வியந்தான். (௪௧)

காசிநாடு

சஉ. பாசவெவ் வலைகளைப் பறித் தெறிந்திடும்
மாசறு புலவர்கள், வடமொழிக் கலை
பேசிடும் புலவர்கள் பெருமை செய்திடுங்
காசியிற் சங்கரன் கழல் பணிந்தனன்.

காசிமாநகர் புண்ணியத் தலம்; ஆசாபாசமாகிய தீய வலைகளைப் பறித்து அறுத்து எறிந்து, மாசற்ற துறவறத்தில் வாழும் தெய்வப் புலவர்கள், வடமொழிக் கலைகளில் வேதம் உபநிடதம் புராணம் முதலியவற்றைத் தெளிவாகப் பயின்று உபதேசிக்கும் (பேசிடும்) வித்துவான்கள் பெருமை செய்யும் ஞானநிலயம். அதில் விளங்கும் விசுவநாதனை, சிவசங்கரனைச் சுத்தன் அடிபணிந்து சென்றான். (சஉ)

கோசலநாடு

சங. ஓம்என ஓதிடும் வேதத் தென்றலில்,
பூம்பயி ராடிடும் புனிதக் கோசலம்,
தீம்பழச் சுவையெனுந் தெய்வ நூல்களை
ஓம்பிடுந் திறமைகண் டுள்ளம் பூரித்தான்.

மகாகோசலம் ஸ்ரீராமர் அவதரித்த நாடு; பல முனிவரும் சித்தரும் தவம்புரிந்த நாடு; வேதக் கலை விளங்கும் நாடு. அதன் தென்றல் 'ஓம் ஓம்' என்று வேதவொலி செய்யும். அதில் கங்கா நதியின் ஓமொலியும் கலக்கும். அந்த ஓமொலியில் இளம் பயிர்கள் களிப்புடன் அசையும். இப்புனிதமான மகாகோசலம் இனிய கனிச்சுவை போன்ற இராமாயணம், பாரதம், பாகவதம், உபநிடதம், கீதை போன்ற தெய்விக நூல்களைப் பயின்று பாடஞ்சொல்லிப் பரப்பிப் பரம்பரையாகக் காப்பாற்றும் ஆற்றலையும், கருத்தையும் கண்டு, சுத்தன் உள்ளம் பொங்கி மகிழ்ந்தான். (சங)

பாஞ்சாலநாடு

சச. திண்ணிய வுடலினர், சிங்க நெஞ்சினர்,
எண்ணிய வினைகளை யியற்றும் வீரர்கள்,
புண்ணியச் சிந்துவின் புனலுண் டோங்கிடுங்
கண்ணிய மைந்தரைக் கண்ணிற் கண்டனன்.

புண்ணிய நதியாகிய சிந்து, தன் ஐந்து உபநதிகளுடன் பஞ்சாப், சிந்து ஆகிய இரண்டு மாகாணங்களையும் செழிக்கச் செய்கிறது. அதன் தீம்புனலையுண்ட மைந்தர், மிகவும் கௌரவமான தீரர்; நீண்டுரத்து உறுதியான உடலைக் கொண்டவர்கள்; குருகோவிந்த சிங்கன் போன்ற அஞ்சா நெஞ்சினர்; தாம் கருதிய காரியத்தை நிறைவேற்றும் வீரர். அவர்களைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தான் சுத்தன். (சச)

இராஜபுதனம்

சரு. சிங்கத்தைக் குகையினிற் செருக்கும் வீரர்கள்,
அங்கியின் குலத்தினர், அரச புத்திரர்,
பொங்கிய போர்ப்புகழ் புகலக் கேட்டனன்—
செங்கதிர்க் கொடியுயர் சித்தி வீரனே.

சிங்கத்தை, அது வசிக்கும் குகையிலேயே எதிர்த்துக் கொல்லக்கூடிய தைரியமும் பராக்கிரமும் கொண்ட வீரர்கள் அக்கினிகுலத்தவராகிய இராஜபுத்திரர். அவர்களுடைய

ஆண்மையோங்கிய (பொங்கிய) போர்ப்புகழையும், வெற்றிகளையும் பாடவும் சொல்லவும் கேட்டான், சூரியக்கொடி உயர்த்திய சித்தி வீரனான சுத்தன். (௬௫)

மகாராஷ்டிரம்

௬௬. இவ்வகை நாடெலாம் இனிது கண்டபின்,
செவ்விய கேள்வியின் செல்வன் சித்திமான்,
ஒவ்வரும் புகழுடை யுலக வீரனும்
திவ்விய சிவாஜியின் தேச மீதென்றான்.

இவ்வாறு பல நாடுகளிலும் இனிது சுற்றிப் பார்க்கவேண்டியவெல்லாம் பார்த்த பிறகு, இருவரும் மகாராஷ்டிர தேசத்திற்கு வந்தனர். செம்மையாக விஷயங்களைக் கேட்டறிந்த அனுபவச் செல்வனான மந்திரி சித்திமான், "ஒப்புயர்வில்லாத உலக மாவீரனான தெய்வத்தன்மை பொருந்திய சிவாஜியின் தேசம் இது" என்று சுத்தனிடம் சொன்னான். (௬௬)

௬௭. அத்தகை வீரனின் அற்புதக் கதை
எத்தகை யுளத்திற்கும் இனிமை யாகிடும்,
சித்தியின் அமைச்சனே செப்பிக் கேட்டிட
மெத்தவும் விரும்பினன் வீரக் காளையே.

அப்படிப்பட்ட வீர சிவாஜியின் சரித்திரம், எப்படிப்பட்ட உள்ளத்திற்கும் இன்பமாகும். அதைச் சித்தியமைச்சனான தீரன் சித்திமானே சொல்லிக் கேட்கவேண்டும் என்று சுத்தன் விரும்பினான். (௬௭)

௬௮. மாரத நகர்களை வலம்வந் தானபின்,
தாரணி வீரனின் சடலந் துஞ்சிய
ஊரினுக் குற்றதும், உரைக்க லுற்றனன்
தீரனும் சித்திமான் சிவாஜி காதையே.

மாரததேசத்தின் முதன்மையான நகர்களாகிய, பம்பாய், பூனா, பரோடா, இந்தூர், கோகுலம் முதலிய இடங்களை வலம்வந்து பார்த்தபிறகு, இருவரும் தாரணிபுகழும் வீரனான சிவாஜியின் உடல் அடங்கிய இராயமாபுரம் வந்தனர். அங்கே அமர்ந்து, தீரனாகிய சித்திமான், சிவாஜி சரித்திரத்தை விரிவாகச் சொல்லத் தொடங்கினான். (௬௮)

யாத்திரைப் படலம்

முற்றிற்று

கசஎ. வீர சிவாஜிப் படலம்

க. வீரர் போற்றிடும் வீர சிகாமணி
பார தத்தின் பழுதறு காவலன் ;
மார தக்குல மன்னன் சிவாஜியின்
சார மான சரித்திரங் கேட்டியால் :

சூத்தனே, மாரதர் குலத்தின் மன்னன் சிவாஜி, வீரர்கள் புகழும் வீரர் முடிமணி ; பாரதநாட்டையும் அதன் தருமத்தையும் காத்த காவலன்; அவனுடைய சாரமான சுவையுள்ள வரலாற்றைக் கேட்பாயாக : (க)

உ. வீர சக்தியின் மார்பென விளங்கும ராட்டின்*
ஆர மானது ; பழம்புகழ் அணிந்தது ; தூய
பார தத்திருத் தாய்புனை பதக்கமே போன்ற
ஊர தன்பெயர் பூநகர் உரைப்பதற் கினிதே.

வீரசக்தியின் மார்புபோல் விளங்குவது மகாராஷ்டிர நாடு. அந்த மார்பில் விளங்கும் வெற்றிமாலைபோன்ற ஊர் ஒன்றுள்ளது. அதன் பெயர் 'பூநகர்', பூனா. அது, பழைய வீரர் செயல்களால் பெரும்புகழ் அணிந்தது; பரிசுத்தமான பாரதத் திருத்தாயின் பதக்கம் போன்றது. அது சொல்வதற்கும் பாடுவதற்கும் இனியது. (உ)

ங. இந்த வூரினில் ஷஹஜியென் றியம்பிடும் அமைச்சன்
சிந்தை தூய † ஜீஜாவுடன் சிவநெறி வாழ்ந்தான் ;
அந்த வந்தணர் அருந்தவக் கனிபழுத் ததுபோல்,
வந்து தோன்றினன் வரம்பெறு வீரசி வாஜி.

இந்தப் பூநகரில் ஷஹஜி என்னும் பெயருடைய உத்தமன், பீஜபூர் மந்திரி, தூய சிந்தையுடைய ஜீஜாபாயுடன் சிவநெறி காத்து வாழ்ந்தான். இருவரும் அந்தணர்; இச் சதிபதிகள் நீண்டகாலம் சிவபக்தி செய்தனர். இவர்கள் செய்த அரிய தவம்பழுத்த கனிபோல வந்து தோன்றினவனே வரம்பெற்ற பாரத வீரனான சிவாஜி. (ங)

ச. நாரி யர்க்கணி யாகிய நன்னலத் தாயும்
ஆரி யச்சுட ராகிய தன்மக னுணர
வீரர் வீரமுஞ் சோற்றுடன் மிசைந்திட வூட்டித்
'தீர னுயிரு' வென்றனள் ; சிவாஜியு மிருந்தான்.

பெண்களுக்கு அணிபோன்ற, நலமோங்கிய தாய் ஜீஜாபாய், ஆரிய நாட்டின் ஜோதியான தன் இளங்குமரன் உணர்ந்தறியவே, தான் ஊட்டும் ஆரமுதுடன், பாரதம் இராமாயணம் முதலிய இதிகாசவீரர் கதைகளையும் ஊட்டினாள் ; "மைந்த, நீ தீரனாயிரு" என்று அடிக்கடி சொன்னாள். சிவாஜியும் அப்படியே இதிகாசவீரர்போல் தீரனாயிருந்தான். (ச)

ரு. காண்ட தேவெனும் காட்சியான் காதலால் அமைந்தே,
வேண்டு போர்க்கலை வீரமாக் குரிசிலுக் கீந்தே,
தூண்டி யுட்சுடர், துகளறு சிற்பியைப் போலே,
ஆண்ட கைதனை யற்புதப் பொலிவுட னமைத்தான்.

* மராட்டின்—மகாராஷ்ட்ர தேசத்தின்.

† 'ஜீஜா' என்றால் தாய் — நம்மவர், 'தாயாரம்மாள்' என்பதே மராட்டியில் 'ஜீஜாபாய்' எனப்படுகிறது.

காண்டதேவன் என்னும் புகழ்பெற்ற அறிவாளி, சிவாஜியின் பெருமையை அறிந்து, அன்புடன் ஆசிரியனாக அமைந்தான்; பெரிய வீரக்குரிசிலான சிவாஜிக்கு வேண்டிய போர்க்கலை பயிற்றினான்; அவனுட் கனலும் வீரச்சுடரைத் தூண்டினான்; மாசற்ற, தேர்ச்சிபெற்ற சிற்பப் புலவன் சிலை வடிப்பதுபோல, ஆண்மையிற் சிறந்த சிவாஜியை அற்புதமான திரப்பொலிவுடன் அமைத்தான்! (ரு)

சூ. அந்த நாளினில், அறமிழந் தாற்றலு மிழந்தே,
பந்த முற்றிடர் நவித்தனள் பாரத தேவி;
சொந்த நாட்டினிற் சுதந்தரம் நாட்டுவ னென்றே,
சிந்தை கொண்டிளஞ் சிங்கம்போ லெழுந்தனன் சிவாஜி.

எல்லாரும் உலகில் இன்புறவே இயற்கைக்கடவுள் வகுத்த அறம் அந்தக் காலத்தில் குலைந்தது; சாதிமதச் சண்டைகளால் தாழ்ந்தது. அறம் இழந்த மாந்தர், ஒற்றுமையாக வாழும் ஆற்றலும் இழந்தனர். ஒற்றுமைகெட்டதும் அன்னிய பலங்கள் வந்து, அவர்களை அடிமைகொண்டன. அவர்கள் பிழையால் பாரததேவி பந்தப்பட்டு வருந்தினாள். 'சொந்த நாட்டில் மீண்டும் சுதந்தரம் நிலைநாட்டி, எனது தாயின் தளையை நீக்குவேன்' என்று நெஞ்சுறுதிகொண்டு, இளஞ் சிங்கம்போல எழுந்தான் சிவாஜி. (சூ)

எ. உலகம் யாவையுந் தாங்கிடும் ஒருபரம் பொருளை,
நலமெ லாந்தரும் அருட்பெருஞ் சோதியை நம்பார்;
பலம தஞ்சொலி யொருவர்மற் றொருவரைப் பகைத்தே,
கலகக் காடெனச் செய்தனர் கண்ணிலா ருலகை.

ஒரே ஒரு பரம்பொருளே தனது சக்தியால் உலகையெல்லாம் ஆக்கிக் காக்கிறது. அதுவே எல்லா நன்மைகளையும் எல்லாருக்கும் பொதுவாகத் தருகிறது. அஃது அருள் நிறைந்த அகண்ட பரஞ்சோதி. சூரியவொளி சாதிமத பேதமில்லாமல் எல்லாருக்கும் ஆவதேபோல, அதன் அருளும் எல்லாருக்கும் பொதுவாகும். இந்த உண்மையை நம்பாமல், தமக்குமேல் உள்ள ஒரு பரம்பொருளை உணராமல், பலபல மதபேதங்களை மன விகாரத்தால் ஏற்படுத்திக்கொண்டு, 'உஞ்சாமி, எஞ்சாமி, எஞ்சாமியே கதிமோட்சம், உஞ்சாமியை நம்பினால் நரகமே கதி' என்று சமரசஞானக் கண்ணில்லாதவர்கள் ஒருவரை யொருவர் பகைத்து, உலகைக் கலகக் காடாக்கி, மனிதவாழ்வைப் போர்க்களமாக்கி விட்டனர். (எ)

அ. ஒத்த மானிடர், ஒளிவளி நீர்நில வளமை
ஒத்த மைந்தவர், ஒருயிர்ச் சக்தியால் உயிர்ப்பார்,
ஒத்து வாழ்ந்திடும் உணர்விலார், உண்மையொன் றறியார்;
சத்த மாமதச் சந்தையிற் றலைதிரிந் தலைவார்.

மானிடர் அனைவரும் பிறப்பினால் சரிநிகர் சமானர், ஒத்தவர். ஆகாசம், ஒளி, தீ, காற்று, மண் ஆகிய பஞ்சபூதங்களின் சேர்க்கையால் எல்லாரும் அமைந்தனர். எல்லாரும் பஞ்சபூதக் கூட்டில் வாழும் சுத்தான்மாக்களே; எல்லாரும் பஞ்சபூதங்களால் உண்டாகும் நிலவளம் உண்டு பிழைப்பவர்களே. எல்லாரும் ஒரே பிராணசக்தியால் உயிர்ப்பவர்களே. எல்லாருள்ளும் இருப்பது ஒரு சுத்தான்மாவே. இந்த ஒரு மகத்தான உண்மையை, சுத்த சமரச சத்திய சன்மார்க்கத்தை, அறியாமல், மானிடர் சத்தம்வலுத்த சமயச் சந்தையில், ஒழுங்கில்லாமல், கண்டபடி வாதாடி, காலத்தைச் சூதாடிச் சண்டையிட்டலைவர்; நாடு நிறம், சாதி, சமயம் வகுப்பு எல்லாம் பேதபுத்தி யென்னும் சனியனால் வந்தவையே. (அ)

கூ. என்ன தேயெனக் கேயெனும் ஆணவத் தாலே
சொன்ன தேசொலிச் சுத்தசத் தியப்பொரு ளறியார் ;
மன்னு ஞாலத்தில் அருட்பெரு மங்கல வாழ்வை
இன்ன நீயவர் தடுப்பரே இன்னமும் அந்தோ !

"என்னதே பெரியது, உண்மை; உன்னது திமை: எனக்கே உலகம், மோட்சம்; உனக்கு நகரம்" என்கிற ஆணவமாயத்தினுல், தக்கவர் பொதுவுண்மையைச் சொன்னுலும் கொள்ளாமல், தாம் சொன்னதையே சொல்லிக்கொண்டு, தமது மதத்தையே தம்பட்ட மடித்துப் பிறரைக் கலக்கும் சமயவாதிகள் உலகிற் பெருத்தனர். இவர்கள் அனைத்தினும் மேலான சுத்தசத்தியப் பரம்பொருளை யறியார்; தமது குறுகிய மதிகொண்ட பெயர் வடிவங்களையே பிரமாதப்படுத்துவர். இவர்களே இன்னும் உலகில் அருட்பெருஞ்சோதி மங்கலவாழ்வு வராமல் தடுக்கின்றனர். (கூ)

கO. இத்த கைமத வெறிகளும் இடர்களுங் காமப்
பித்த லைத்திடும் பிழைகளும், பேயர்வெங் கொலையும்,
சத்து ருக்களின் சங்கடத் தீமையுங் கண்டே,
உத்தமர் உளங் கொதித்தனர் உய்வகை யறியார்.

இப்படி நாட்டில் மதவெறிகளால் வந்த தொல்லைகள், மனமடங்காமல் காமப் பித்தேறிக் கற்பழிக்கும் பிழைகள், பேய்போன்ற கொடியர் இரத்தவெறிகொண்டு செய்த கொலைகள், பகைவரின் சங்கடமான இன்னல்கள், பஞ்சமாபாதகங்கள் ஆகிய இவற்றைக் கண்ட உத்தமப் பெரியார், 'இனி இந்த நாட்டில் நல்லோர் இருக்க இடமில்லையோ, ஐயோ, இஃதென்ன பயங்கரம்!' என்று மனங்கொதித்துப் பிழைக்கும் வழி காணுமல் திகைத்தனர். (கO)

கக. பயமு றுத்திடும் பாதக வெறியெழுந் தெறியும் ;
புயலி லேயிருட் சுழியிலே, புகலது காணுர்,
இயம்பொ ணுதிடர்க் கடலினில் எளியவர் தவித்தார்.
செயப் படாங்கொளும் வங்கம்போல் வந்தனன் சிவாஜி !

உயிரை நடுக்கும் பஞ்சமாபாதகமாகிய வெறியலைகள் எழுந்து விம்மி மோதின; அந்தப் புயலில், எங்கும் மடமையிருள் அடர்ந்தது. இந்த நாட்டு மக்கள் வழியறியாமல், போர்ச் சுழலில் அகப்பட்டுக் கதிகாணுமல் தவித்தனர்; வாயால் சொல்ல முடியாத எத்தனையோ இன்னல்களை அவர்கள் துயர்க்கடலில் அகப்பட்டு அனுபவித்தனர். அவர்களைக் கரையேற்ற ஒரு வெற்றிக்கொடி யேந்திய (செயப்படாம்) கப்பல் போல வந்தான் தீரன் சிவாஜி. (கக)

கஉ. உண்ணும் ஊணினை, உயிர்த்திடும் உயிர்ப்பினை, உரையை,
எண்ணும் எண்ணத்தை, இயற்றிடும் பணிகளை யெல்லாம்,
கண்ணி னும்அரி தாகிய கற்பக நாட்டின்
புண்ணி யப்பயன் வாழவே பூசனை புரிந்தான்.

தான் உண்ணும் உணவு, உயிர்க்கும் மூச்சு, பேசும் பேச்சு, எண்ணும் நினைப்பு, செய்யும் செயல், அனைத்தையும் கண்ணைவிட அருமையாகிய இந்தக் கற்பக நாட்டின் புண்ணியப் பயன்கள், தருமங்கள் வாழவேண்டுமென்றே வழிபாடாக அர்ப்பணம் செய்தான். சிவாஜி நாட்டுக்காகவே உண்டான், உயிர்த்தான், அதன் நன்மையே நினைத்தான்; செய்வதெல்லாம் தேச சேவையாகச் செய்தான்; வாழ்வையே பாரத சக்திக்கு வழிபாடாக்கினுன், (கஉ)

கங. ' இச்சை யால்உல காடலை யியற்றிடும் பரமா,
நச்சி ருட்பகை நலித்திட, நரகினுங் கொடிய
கொச்சை வாழ்விந்த நாட்டினிற் குலவிட லாமோ?
அச்ச மற்றநல் லமரவாழ் வருள்புரி ' யென்பான்.

" இச்சா சக்தியால் உலக விளையாட்டை நடத்திடும் பரம்பொருளே ! நச்சும் மடமை யிருளான பகை, மனித வுரிமையை நலிக்கிறது. அதனால் வறுமை, கொள்ளை, கற்பழிவு, கொலைகள் பெருகி, நரக வேதனையைவிடக் கொடிய துயர் பெருகி, மனிதத்தன்மையே அழிந்தது, சிறுமை படர்ந்தது. இந்தக் கொச்சை வாழ்வு, கேவலமான நிலைமை, இந்த நாட்டிற்கு வரலாகுமா ? சக்திக்கடவுளே, எங்கள் அச்சத்தை ஒழி ; நல்ல அமரவாழ்வைத் தந்தருள் ; நரகவாழ் வொழித்துத் தேவஜீவனம் அருள் !" என்று வேண்டுவான் சிவாஜி. (கங)

கச. "பாரில் யாவரும் பரம்பொருட் பங்கெனப் பகரும்,
பார தாத்தும தருமமே பரவிட வேண்டும்,
போரி டர்களைப் போரினால் ஒழித்திட வேண்டும்,
வீரத் தீயெனக் கருளுவாய் வெற்றிநா யகனே !"

"அன்பருக்கு வெற்றி யளிக்கும் முதற்பொருளே, உலகில் யாரும் யாருக்கும் அடிமை யின்றி, எல்லாரும் ஒரு பரம்பொருளின் பங்கு (தெய்வாம்சம்), என்கிற பாரதநாட்டின் சுத் தாத்ம தருமமே பரவிட வேண்டும். அதனால் மனிதஜாதி ஒரு குலமாக வாழலாம். இன்று படைகொண்டு தருமத்தைத் தாக்கி, அதர்மப் போர் செய்யும் சத்துருக்களின் தொல்லைகளைப் படைகொண்டு போர் செய்தே அடக்கி யொழிக்க வேண்டும். அதற்கு எனக்கு வீரசக்திக் கனல் அருளுவாயாக !" (கச)

கரு. சொல்லுஞ் சொல்லினைச் செயலினிற் காட்டிடத் துணிந்தே,
மல்லர் சேனையைப் பயிற்றினன் மாரநச் சிங்கம் ;
பொல்ல வர்தமைப் பூண்டுடன் போக்கிடக் கருதி,
நல்ல வர்தமை நாடொறுங் காத்திட நயந்தே.

தான் சொல்லிய வீரச்சொல்லை, அபயவாக்கைச் செயலிற்காட்டத் துணிந்தான் மராடியச் சிங்கமான சிவாஜி ; அதற்காக நாட்டில் உள்ள போர்வீரரைத் திரட்டினன், பழக்கினன், படைகூட்டினன். எதற்கு? அவனுக்கு இரண்டு நோக்கங்கள் இருந்தன : (1)பொதுஜனங்களுக்குத் தீமையே செய்யும் மகாபாவிகளைப் பூண்டோடு ஒழித்தல். (2)அற வழி நடக்கும் நல்லவர்களை, பத்தினிகளை, அந்தணாளரை, முனிவரை, சாதுக்களை, பசுக்களை நாள்தோறும் பகைவரிடமிருந்து காத்தல். இந்த இரண்டு காரியங்களையும் நிறைவேற்ற விரும்பி, அவன் படை சேர்த்தான். (கரு)

கசு. மாரன்போல் அழகி னனை, மடங்கல்போல் நெஞ்சினனை,
கார்வரைப் புயத்தி னனைக் காலனும் வெருவுகின்ற
வீரவாட் கரத்தி னனை, வெற்றிக்கு வெற்றிசெல்லுந்
தீரனைக் கண்ட பேர்கள் சிவக்கன லுருவே கண்டார்.

சிவாஜி மன்மதனைப் போல் அழகன், ஆண்சிங்கம் போல நெஞ்சத் துணிவுடையவன், மேகம்படர்ந்த உயர் மலைபோலத் திண்ணிய தோளுடையான், எமன்கூடப் பயப்படும் வீர வாளைக் கையில் ஏந்திய சூரன். தனது படையுடன் போர்க்களத்தில் வெற்றிக்குவெற்றி முன் னேறும் இத் தீரனைப் பார்த்தவர்கள், சிவசக்திக் கனல்வடிவையே பார்த்தனர். (கசு)

கள. கல்லுடைத் தோளைக் கண்டார் கலங்கறு வீர ராஞர்.
சொல்லுடைத் திறத்தைக் கேட்டார் சொல்லறப் பணிந்து நின்ருர்.
வில்லுடைத் திறத்தைக் கண்டார் வில்லரா யெழுந்து வந்தார்;
மல்லுடைத் திறத்தைக் கண்டார் மல்லராய் முன்சென் ருரே!

சிவாஜியின் தோற்றத்தைப் பார்த்தாலே வீரம் பிறக்கும். அவனுடைய கல்லைப் போன்ற திண்மையுடைய தோளைக் கண்டவர் 'இவன் நம்மைக் காப்பான்' என்று அச்சமற்ற வீரராஞர். அவனது உள்ளார்ந்த வீறுடைய சொல்லைக் கேட்டவர், பதில் சொல்லாமல் அவன் சொற்படி வணங்கி நின்ருர்; அவன் சொல்லியதைச் செய்தார். வில்லின் திறமையைக் கண்டவர், தாமும் திறமையுள்ள வில்லராக எழுந்து வந்தார். அவனது போர்த்திறனைக் கண்டவர்களோ தாமும் போர்வீரராகி அவனுடன் போர்க்களத்திற்கு முன்னேதாவிச் சென்ருர்கள். (கள)

கஅ. கண்டவர் கருத்தை முற்றுங் காந்தம்போற் கவரும் வீரன்,
கொண்டதே கொள்கை யென்ருர், குறித்ததே கடமை யென்ருர்,
பண்டறம் பிழைக்க, ஞான பாரதம் பிழைக்க வின்ஞேன்
விண்டதே வேத மென்ருர்...'' வெல்கநீ! வாழ்க'' வென்ருர்.

வீரசிவாஜி, கண்டவர் கருத்தை இரும்பைக் கவரும் காந்தம்போல முற்றிலும் வசீகரித்தான். அவன்வசப்பட்ட வீரர், 'பழைய தருமம் பிழைக்கவும் ஞானபூமியான பாரத நாடு வாழவும், அவன் கொண்டதே உயர்ந்த கொள்கை, அவன் குறித்ததே நல்ல கடமை, அவன் வாய்விட்டுச் சொன்னதே வேதம்!' என்றனர்; 'எம் தலைவ, நீ வெல்க, நீடு வாழ்க!' என்று மனதாரக் கூறினர். (கஅ)

கக. அலையெறி கடலைப் போலே, ஆர்த்தெழும் படையி ருந்தென்?
மலையெனப் பொருளும் வேண்டும். வயிறன்ருே உயிரைத் தாங்கும்?
'' நிலைபெறத் தரும மிங்கே, நீணிதி யரு''ளென் றன்பன்
தலைவிப வானி யன்னைத் தாள்பணிந் திறைஞ்சி ஞனே :—

அலைவீசும் கடலைப்போல வீரகர்ச்சனை செய்யும் படையணி யிருந்து மென்ன பயன்? அதை ஊட்டிப் போற்றி நடத்த மலைபோலப் பொருட் குவியலும் இருந்தாலன்ருே காரியம் நடக்கும்? படை வயிற்றின்மேல் நடக்கிறது. வயிற்றுக்குப் போட்டாலே உயிர் நடக்கும், உடல் வேலைசெய்யும். உயிரைத் தாங்குவது வயிறு. ஆதலால் ''இந்நாட்டில் தருமம் நிலைபெற வேண்டி நீண்ட நிதித்திரள் தந்தருள்புரிவாயாக!'' என்று பக்தன் சிவாஜி இறைவி பவானிதேவியை அடிபணிந்து வேண்டிக்கொண்டான். (கக)

உ௦. '' ஒன்னலர் கொடுமை போக்கி, ஒற்றுமை யாக நாடு,
தன்னறம் போற்றி வாழத் தருமவீ ரரைநீ தந்தாய்.
அன்னவர் உண்டு டுத்தே, ஆண்டகைப் பணிகள் செய்யப்
பொன்னருள் புரிவாய் தாயே, போற்றியுன் சரணம் பூண்டேன்.

'' தாயே போற்றி; அன்பன் உன்னைச் சரணடைந்தேன். பகைவர் கொடுமையை ஒழித்து, நாடு ஒற்றுமையாக, தனக்குரிய சுத்தான்ம தருமத்தைப் போற்றி வாழத் தரும வீரர் சேனையைத் தந்தாய். வீரர் உண்டு உடுத்தி ஆண்மையான வீரப்பணிகள் செய்ய ஏராளமான பொருள்வேண்டும். ஆதலால் எனக்குப் பொற்குவை தந்தருள் புரி தாயே! (உ௦)

உக. " சத்திய சீலர் வாழச் சநாதன தருமம் வாழ,
பத்தினிப் பெண்டிர் வாழப் பசுவளம் வாழ வேண்டி,
இத்தினம் எழுந்து நின்றேன் ; இறைவியுன் னருளி னாலே ;
உத்தமர்க் குணவு தாராய், உலகினை யூட்டுந் தாயே !"

" உலகை யெல்லாம் ஊட்டி வளர்க்கும் பராசக்தி யன்னையே, உண்மை யொழுக்கம் பூண்ட மேலோர் வாழவும், பழமையான (சநாதன) சுத்தசன்மார்க்க தருமம் வாழவும், கற்புள்ள பெண்கள் அமைதியாக வாழவும், ஊனுண்பவரின் வாளுக்குத் தப்பிப் பசுக்கள் வளம்பெற வாழவும், உன்னருளால், இன்று நான் எழுந்து கச்சைகட்டி நின்றேன். இறைவியே, உத்தம நல்லோருக்கு உணவு தந்து, உலகப்பணி செய்விப்பாயாக! அவர்களை ஊட்டிப் போற்றப் பொற்குவை தருவாயாக!" (உக)

உஉ. பூரண சக்தி யன்னை புதல்வனுக் கருள் புரிந்தாள் :
தாரணிக் கோட்டைக் குள்ளே தங்கமாப் புதையல் கண்டான்.
" பாரணி யருளே, யுன்றன் பரிவினாற் பிழைத்தே " னென்று,
போரணி வகுக்க நின்றான் புவியெலாம் புகழும் வீரன்.

பூரண சக்திவடிவான உலகன்னை தன் செல்வனுக்கு அருள் புரிந்தாள் : தாரணிக் கோட்டையில், உள்ளே தோண்டியபொழுது, ஏராளமான தங்கப்புதையல் கிடைத்தது. அதைக் கண்டான் உலகெல்லாம் புகழும் உத்தம வீரன். " உலகையே அணியாகப் பூண்டு விளையாடும் திருவருட் சக்தியே, உனது கருணையால் நான் உய்ந்தேன். வேண்டியதைப் பெற்றேன்." என்று நன்றி செலுத்தி, உடனே செல்வத்திரளை வாரிவிட்டுப் போருக்குச் சேனைகளை அணிவகுத்தான். (உஉ)

உங. ஆவியும் உடலும் போலே யாட்களும் பொன்னும் வந்து
மேவிய வுடனே வீரன், மேவலர் அணுக வொண்ணுக்
காவல்க ளமைத்தான் ; கல்லாற் கட்டினான் அரண்கள் ; சக்திக்
கோவில்கள் அமைத்தான் ; வீரப் பயிற்சிகள் கொடுத்தான் மாதோ !

போருக்கு உயிரைப்போன்றது ஆட்படை; உடலைப்போன்றது அதை ஊட்டும் பொற்குவை. இரண்டும் கைக்குவந்து சேர்ந்ததுமே, வீரன் பகைவர் (மேவலர்) நெருங்க முடியாதபடி சரியான பாதுகாப்புகளை அமைத்தான்; மலைகள் மேல் கல்லினால் கோட்டைகள் எழுப்பினான்; நீர் அரண், நிலத்தரண், காட்டரண், மதிலரண் எல்லாம் அமைத்தான். புரந்தரக்கோட்டை, தாரணிக்கோட்டை, இராஜ சிங்கக்கோட்டை-இவை அவற்றுள் முதன்மையானவை. ஒவ்வொரு கோட்டைக்குள்ளும் அவன் வீரசக்தியான பவானிக்குக் கோயில் கட்டினான் ; அங்கே மல்லரைக்கூட்டிப் போர்ப்பயிற்சி தந்தான். (உங)

உச. கூட்டினான் சேனை ராஜ சிங்கமாக் கோட்டைக் குள்ளே ;
காட்டினான் காலம் வேண்டுங் கடமையும் இடமும் ; வாளை
நீட்டினான் ; " பவானி, சண்டி, பைரவி போற்றி " யென்றே
பாட்டுகள் முழங்கச் செய்தான் ; பயனுரை கூறினானே.

எல்லாம் தயார் : ஒருநாள் தனது சேனையை விசாலமான இராஜசிங்கக் கோட்டைக் குள்ளே கூட்டினான் ; அக்காலம் வேண்டும் போர்க்கடமை இன்னது, இன்ன இடங்களில் போர் புரியவேண்டும், இன்ன காரியத்தை இன்னார் இப்படிச் செய்யவேண்டும் எனக் குறித்தான் ; பிறகு வாளை உயர நீட்டினான் ; ஆவேசமாக " ஓம் பவானி " என்றான் ; " பவானி, சண்டி, பைரவி போற்றி " என்று வீரகானங்கள் முழங்கச் செய்தான். பிறகு சேனைக்குப் பயனுள்ள சில மொழிகள் பேசினான் :— (உச)

உரு. " இறைவியின் அருளினுல், எழுந்த வீரர்காள்,
பொறைகெட வருந்திடும் புண்ணி யத்தினைக்
குறையறக் காத்திடக் கொண்ட கொள்கையை
நிறைவுறப் போற்றிட நேரம் வந்ததால்.

"இறைவி பவானியின் அருளால் எழுந்த தரும வீரர்காள், இந்த உலகில் பொறுமையிழந்து (பொறைகெட) தவித்திடும் புண்ணியத்தைக் குறையில்லாமல் காக்க நாம் விரதம் கொண்டோம். அதை நிறைவுறச் செய்யும் நேரம் இதோ வந்துவிட்டது! (உரு)

உசா. " வேங்கைபோல் அதருமம், வேதத் தேனுவைத்
தீங்குறு கைகளாற் செகுக்கக் கண்டுமே,
ஓங்கிய மாமலை யொத்த தோளினர்
தூங்கினுர் என்ற சொல்லைக் கேட்பமோ?

"வேங்கைப் புலி போன்ற அதர்மம் வேத தருமமான காமதேனுவைத் தனது பாவக் (தீங்குறு) கைகளால் பிளந்து தின்கின்றது. இதைக்கண்டும், இச்சமயம், 'நீண்ட மலைபோன்ற புயங்களையுடைய இந்த வீரர் சுகமாக உண்டுறங்கினர். இவர்கள் என்ன மனிதர்கள்!' என்று உலகம் சொல்வதைக் கேட்போமோ? (உசா)

உஎ. " கோவில்கள் யாவையுங் கொள்ளை போகையில்,
ஆவினம் படுகொலை யாகும் போதினில்,
பூவையர் மானமும் புண்பட் டேங்கையில்,
பாவியர் தீமையைப் பார்த்தி ருப்பதோ?

" நம் கோயில்களெல்லாம் கொள்ளைபோகின்றன; பசுக்கள் படுகொலையாகின்றன; பெண்களின் மானம், கற்பழிவால் புண்பட்டு வருந்துகிறது. மகாபாவிகள் செய்யும் இத்தீமைகளை நாம் பார்த்துக்கொண்டு சும்மா இருப்போமா? (உஎ)

உஅ. " செல்லுமின், அதர்மத்தைச் செகுமின், வெம்மையைக்
கொல்லுமின், அறத்தினைக் குலவ நாட்டுமின்,
சொல்லுமின் " சுதந்தர சக்தி ஓம் "என்றே,
வெல்லுமின் பகைவரை வீர ராமன்போல்...!"

" செல்லுங்கள் எட்டுத் திசையும்; கொலை, கொள்ளை, கற்பழிவு, கொடுங்கோல் வஞ்சம் ஆகிய அதர்மங்களைச் சிதைத்து வீழ்த்துங்கள்; தருமத்தை எங்கும் விளங்க நிலை நாட்டுங்கள்! "சுதந்தர சக்தி பவானி ஓம்" என்ற மந்திரத்தைச் சொல்லுங்கள், பகைவரை வீரராமன்போல் பொருது வெல்லுங்கள்!." (உஅ)

உகூ. சூரன் இன்னவை சொல்லி நடத்தலும்,
" பாரின் சக்தி பவானிக்கு ஜே " யென்றே,
மாரதப் பெரு மல்லர்கள் பீஜபூர்
ஊர்களிற் கொடி யூன்றினர் வெற்றியால்.

பரசுராமன சிவாஜி இப்படிச் சொல்லித் தனது சேனையை நடத்தினுன். "உலகின் இரட்சக சக்தியான பவானிக்கு ஜே!" என்று ஆர்த்து, மராடிய நாட்டின் பெரிய மல்வீரர்

கள் புறப்பட்டனர்; தலைவனுடன் பீஜபூர் அரசைத் தாக்கினர்; அதன் ஊர்களைப் பற்றினர்; தம்மை யெதிர்த்த பகைவரை வென்றனர்; வெற்றிக் கொடி நாட்டினர். (உகூ)

சுல்தான்

௩௦. அந்த வூர்களை யாளுஞ்சுல் தானுக்குத்
தந்தை ஷாஜி தகவுடை மந்திரி.
சொந்த மைந்தனைச் சொல்லி யடக்கென,
மந்தி ரியைப் பணித்தனன் மன்னனே.

பீஜபூர் சுல்தான் அதில்ஷா சிவாஜி பற்றிய ஊர்களை ஆளும் அரசன். சிவாஜியின் தந்தை ஷாஜியே அவனுக்கு அறிவுமிக்க நல்லமைச்சன். அவன் தன் எஜமானனிடம் நன்றி மிக்கவன். பிள்ளையோ நேர் எதிரிடை. அவன் செயலால் இருவருக்கும் தொல்லை. சுல்தான் படுகோபங்கொண்டு, "உன் மகனைப் புத்தி சொல்லி அடக்கு!" என்று தன் மந்திரிக்குக் கட்டளையிட்டான். (௩௦)

தந்தை

௩௧. "நான் அமைச்சு நடத்திடும் பீஜபூர்,
கோனுக் கேபல குற்ற மிழைத்தனை!
ஏன் எனக்கு மகனென வந்தனை?
மானம் போனதுன் மர்க்கடச் சேட்டையால்.

ஷாஜி மகனுக்குப் புத்தி சொல்லலானான்: "நீ ஏன் எனக்கு மகனாகப் பிறந்தாய்? பீஜபூர் சுல்தான் என் எஜமானன். நானே அந்த சமஸ்தான மந்திரி. என் அரசனுக்குப் பல குற்றங்கள் செய்தாய். இலங்கையிற் புகுந்த குரங்குபோல ஊர்களை அழித்தாய். உனது குரங்குச் சேட்டையால், எனது மானம் போய்விட்டது. (௩௧)

௩௨. "நஞ்சர் என்னினு நாட்டினை யாளுவோர்
தஞ்ச மென்றடி தாழ்ந்தவர் கட்டளை,
செஞ்சொல் வேத மெனச்செய லேமதி!
அஞ்சத் தக்கதை யஞ்சிடத் தக்கதே!

"நஞ்சுடைய கொடியரே எனினும், காலத்திற் கேற்றபடி நாட்டையாளும் அரசரைத் தஞ்சம் புகவேண்டும். அவர் அடிபணிந்து இட்ட கட்டளையைச் செம்மையான வேத வாக்காக நிறைவேற்ற வேண்டும். அதுவே நன்மதியாகும். மகனே, உலகில் எதற்கு அஞ்ச வேண்டுமோ அதற்கு அஞ்சுதல் தகுந்ததே. அதுவே வாழும் வகை. (௩௨)

௩௩. "வரம்பை மீறினை வாலிபத் தெம்பினால்,
நிரம்ப வுஞ்செருக் குற்று நிமிர்ந்தனை;
பரம்ப ரையர சைப்பதம் பார்த்தனை!
வரம்பெற் றோர்க்கும் வணக்கம் அழகன்றோ?

"மகனே, நீ உன் வயதிற்கேற்றபடி நடக்கவில்லை. வாலிபத் திமிரால், வரம்புமீறி நடந்தாய்; எவருக்கும் வணங்காமல், மிகவும் செருக்கேறித் தலை நிமிர்ந்தாய்; பரம்பரை

யாக நாட்டையாளும் அரசை உனது வாளால்பதம் பார்த்தாய்! வரம்பெற்ற வீரரானாலும் சரி, வணக்கமாக அடங்கி ஒடுங்கி நடத்தல், அவர்களுக்கே அழகாகும் அன்றோ? (௩௩)

௩௪. "பழிப்பு றுஞ்செயல் செய்தனை மைந்தவென்
பிழைப்பி னுக்குப் பெருந்துய ராயினை;
அழைப்பன் மன்னன்; அடக்கமாய்ப் பே"செனப்
பழுத்த தந்தை பயலை வெருட்டினன்.

"மகனே, நீ உலகம் பழிக்கத்தக்க துஷ்டச் செயல்களைச் செய்தாய். எனது பிழைப்பிற்கே பெரிய துன்பமானாய். (என் பிழைப்பில் மண்ணள்ளிப் போட்டாய்.) நாளை மன்னன் உன்னை அழைத்து விசாரிப்பான். வணக்கமாக வா; அடக்கவொடுக்கமாகப் பேசு; மன்னிப்புக் கேள்; இனி ஒழுங்காக நட!" என்று வயதிலும், அரசியல் அனுபவத்திலும் பழுத்த தகப்பன் பயல் சிவாஜியை வெருட்டினன். (௩௪)

சிவாஜி

௩௫. "மாதரைக் கெடுத்திட் டேனோ? மன்னறம் பிழைத்திட் டேனோ?
பாதகக் கள்ளுண் டேனோ? பசுக்களைக் கொலைசெய் தேனோ?
கோதறு முனிவர் வாழுங் கோயிலைக் கொளுத்தி னேனோ?
யாதிடர் செய்தேன் ஐய யா"னென மைந்தன் சொல்வான்.

"ஐய, ஏன் கோபம்? நான் மாதர் கற்பை யழித்தேனா? நிலையான தருமத்திற்குப் பிழை செய்தேனா? மகா பஞ்சமா பாதகத்தைத் தூண்டும் கள்ளைக் குடித்தேனா? பசுக்களைக் கொன்றேனா? குற்றமற்ற (கோதறு) முனிவர்கள் தவம்புரியும் தெய்வாலயங்களைத் தீயிட்டழித்தேனா? நான் தருமத்திற்கு விரோதமாக என்ன இடர் செய்தேன்?" என்று மகன் கேட்டான். (௩௫)

௩௬. "இந்தநம் புனித நாட்டின் இரத்தத்தை வடித்த வர்க்கும்,
விந்தையாய்ப் பரிந்து பேசி, விடுதலை செத்து, நீசெய்
மந்திரி வேலை யன்றோ மானத்தைக் குலைப்ப தையா...!
தந்திர வேசைக் காளாய்த் தாயினை மறப்ப துண்டோ?

"ஐயாவே, இது நமது புனிதநாடு, இதன் இரத்தத்தைப் பிழிந்து சிந்தியவர்களுக்கு நீர் விந்தையாகப் பரிந்து பேசுகிறீர்! பேச்சுடன் நிற்காமல் சுதந்தர உணர்ச்சியே செத்துப் போய், அடிமைவேலையும் செய்கிறீர்! நான் செய்யும் வீரக்கடமையன்று; நீர் செய்யும் மந்திரிவேலைதான் எனது மானத்தை, எனது தாயின்மானத்தைப் பிடுங்குகிறது...ஆளைமயக்கிக்கெடுக்கும் வேசைக்கு அடிமையாகித் தனது தாயைப் பட்டினிபோட்டு மறப்பது மனிதத் தன்மை யாகுமோ? (௩௬)

௩௭. "வருந்திய தனது தாயை வருத்திடும் இரத்தக் கையால்
விருந்தினை யுண்டு, நாளை விற்பதும் ஆண்மை யாமோ?
திருந்திட வேண்டும் நீயே, தீரர்முன் நல்நெறி மிர்ந்தே
இருந்திட வேண்டின் என்போல் இருந்திட வேண்டு"மென்றான்.

"பல இடும்பைகளால் வருந்திய தன் அன்னையை மேலும் வருத்தி இரத்தம் பிழியும் ஒரு கொடியன் விருந்தளிக்கிறான். அதை நன்றியுள்ள மகன் உண்டு, தனது வாழ்நாளையும்

பணத்திற்கு விற்பது வீரமாகுமா? தந்தையே, திருந்தவேண்டியது நானல்லன், நீரே! நேர்மையான கடமைகாக்கும் தீரர்கள் முன்னே நீர் தலைநிமிர்ந்து மானமுடன் வாழ்ந்திருக்க வேண்டுமானால், என்னைப்போல் பொதுஜன நன்மைக்கே, நாட்டுக்கே உயிர்வைத்திருக்க வேண்டும்" என்றான் வீரன். (௩எ)

௩அ. "தந்தைசொல் எனது தாய்க்குத் தருவது பெருமையாயின்,
மந்திர மென்னக் கொள்வேன்...மற்றது சிறுமை யாயின்,
பந்தனை தருவதாயின், பதரெனத் தள்ளி, வீரச்
சிந்தனை செயலிற் காட்டிச் செயக்கொடி பிடிப்பே''னென்றான்.

"தந்தையின் சொல் என் தாயாருக்குப் பெருமைதரவேண்டும். அப்படியாயின் அதை மந்திரமாகக்கொண்டு நடப்பேன். அஃதின்றி, தந்தைசொல் (மற்றது) எனது தாயைச் சிறுமைப்படுத்தினால், அவளுக்குப் பந்தனை யளித்தால், அதைப் பதர்போல் ஒதுக்கித்தள்ளி, எனது வீரச்சிந்தனையைச் செயலிற்காட்டுவேன், வெல்வேன், வெற்றிக்கொடி பிடித்து ஆளுவேன்!" என்றான். (௩அ)

௩௯. "உடலைநீ தந்த துண்மை. உடலினுள் எரியும் வீரச்
சுடரைநான் பெற்றேன், அன்னை சுத்தப வானி தந்தாள்;
இடர்தரு மிகலை விட்டி யினிதறம் போற்றி யெங்கும்
படர்துடைத் தாளு வேனிப் பாரத நாட்டை'' யென்றான்.

"தந்தையே, நீர் இந்த உடலை நான் பெற ஈன்றது உண்மை. ஆனால், அதில் ஒளிரும் வீரச்சுடரை நீர் தரவில்லை. அதை நானே பெற்றேன். சுத்த பரமான்ம சக்தி, பவானி தேவியே அதை எனக்கு வரமாகத் தந்தாள். அந்த வரத்தால் இடர்தரும் பகைவரை வீழ்த்தி, இனிய தருமத்தைக் காத்து, இன்று எங்கும் அடர்ந்த துன்பப்படரை நீக்கி இந்தப் பாரத நாட்டை நான் ஆளுவேன்" என்றான். (௩௯)

௪௦. "அறத்தினைக் காத்த ராமன் அவதரித் திருந்த நாட்டில்,
கரத்தினைக் கட்டி வாழேன், கருமவீ ரத்திற் கென்றே,
வரத்தினைப் பெற்ற வீர மாருதி போல வெற்றிச்
சிரத்தினை யுயர்த்தி யேநான் சிங்கம்போல் நடப்பே'' னென்றான்.

"அதர்ம அரக்கரை அழித்துத் தருமத்தைக் காத்த ஸ்ரீ ராமன் அவதரித்த இந்த நாட்டில், நான் பிறருக்குக் கைகட்டித் தொத்தடிமையாக வாழேன். கருமவீரத்திற்கென்றே வரம்பெற்று வந்த ஸ்ரீ வீரஹனுமான் போன்று, தருமப்போர்புரிந்து ஜயம்பெற்றுத் தலைநிமிர்ந்து சிங்கம் போலக் கம்பீரமாகவே நடப்பேன்" என்றான். (௪௦)

௪௧. "நானுரை மொழியில் உண்மை நன்மையொன் றுள்ள தாயின்,
ஏனெனும் எதிர்ப்பில் லாமல், இதயத்தில் உனக்கு நாட்டின்
மானமே துடிப்ப தாயின், மந்திரி வேலை விட்டென்
சேனைசெய் தேச சேவை செய்வதே கடமை!'' யென்றான்.

"நான் சொல்லும் வார்த்தையில் உண்மையிருந்தால், அந்த உண்மையால் ஜனங்களுக்கு நன்மையிருந்தால், உமது உள்ளத்திலும் 'நமதுதேசம், அதன் மானத்தை நாம்

காக்கவேண்டும்' என்ற உணர்ச்சி துடித்தால், 'ஏன்? எதற்கு?' என்று எதிர்த்துக் கேள்வி போடாமல், உடனே இந்த மந்திரிவேலையை விட்டு, எனது சேனையில் சேரவேண்டும். எனது சேனை அதர்மசேனையன்று. அஃது அந்தணர், பசு, கோயில்கள், வேதம், தருமம், மனிதத் தன்மை, சுதந்தரம்—இவற்றைக் காக்கவே போர்புரிகிறது. அது செய்யும் தேசசேவையையே நீரும் செய்யவேண்டும். இதுவே உமக்கு இன்று உண்மையான கடமை!" என்ருன் மகன். (சக)

சஉ. கட்டறு வீர மைந்தன் கருத்தினை யறிந்த தந்தை,
விட்டவன் போக்கிற் சென்ருன்...விடுதலை மனத்தி னுக்கும்
வட்டவான் மழையி னுக்கும், மதிவளர் அலைக ளுக்கும்
சட்ட திட்டங்கள் செய்வார் சகத்தினி லில்லை யன்ருே?

அடிமைப்பேச்சிற் கட்டுப்படாத தன் வீர மகனது உள்ளக்கருத்தை நன்ருக அறிந்த தந்தை, அவனை அவன்போக்கிலேயே விட்டுச் சென்ருன். சுதந்தரம் பெற்ற மனத்தினுக்கும், வட்டமான வானம் வழங்கும் மழைவெள்ளத்திற்கும், சந்திர கிரணங்கள் வளர்க்கும் கடல் அலைப் பெருக்கத்திற்கும், "இப்படித்தான், இவ்வளவுதான்" என்று சட்ட திட்டங்கள் செய்பவர் உலகில் இல்லை அன்ருே? (சஉ)

சங. தூண்டு வீரத் துடிப்பை யடக்கிலான்,
மீண்டும் ஊர்களை வென்றுதன் சேனையால்,
ஆண்டு தன்கொடி யாடிடச் செய்தனன்,
ஈண்டு சுல்தா னெரிசின மேறவே!

சிவாஜி தனது வீரத்துடிப்பை அடக்கவில்லை. அது மேன்மேலும் வளர்ந்தது. மறுபடியும் தனது சேனையால் இன்னும் பல ஊர்களை வென்று, ஆண்டான்; அங்கே தனது கொடியே ஆடச் செய்தான். இதைக்கண்ட சுல்தானுக்குக் கோபத்தீ கொழுந்தேறிப் பொங்கியது. (சங)

சச. மல்லரால் இந்த மல்லனை வெல்வலி
யில்ல னுகி, யிணங்கவும் இல்லனுய்,
தில்லி மன்னன் செவியுறச் செய்தனன்,
தொல்லை செய்யத் துணிந்தவன் மாற்றமே.

தன் போர்வீரரைக்கொண்டு, இந்த அற்புதப் போர்வீரனை எதிர்த்துப் பார்த்தான் பீஜபூரான். அவனை எதிர்த்து விழ்த்த பலமில்லை. உடனே, இவ்வளவு தொந்தரவு செய்யத்துணிந்த சிவாஜியின் பகைமையைப் பற்றி (மாற்றம்) தில்லி பாதுஷாவான ஔரங்கஜீபு கேட்க நீண்ட புகார் செய்தான்: (சச)

சரு. "கள்ள மாகக் கரந்து மலைகளில்,
மெள்ள வந்து மிடற்றினைப் பற்றுவான்,
கொள்ளைக் காரன், கொலைசெயுங் கூற்றிவன்!
சள்ளை சொல்லிற் சரித்திர மாகுமே!

"மலைக்கணவாய்களில் பதுங்கி, மறைந்திருந்து, மெள்ளப் புலிபோல வந்து எங்கள் கழுத்தைப் (மிடறு) பிடித்துத் திருகுவான். இவன் படுகொள்ளைக்காரன், ஆட்களைக்

கொலைசெய்யும் சாவு, எமன்! இவன் செய்யும் சள்ளைகளைச் சொன்னால் ஒரு பெரிய சரித்திர மாய்விடும்! (௬௫)

௬௬. "ஒடுக்க வேண்டு முடனிவன் கொட்டத்தை;
தொடுக்க வேண்டுஞ் சமர்" எனச் சொல்லவே,
திடுக்கெனச் சினந் தேதில்லி மன்னவன்
கொடுத்த னன்ஒரு கோபக் கனற்படை.

"இந்தத்துட்டனைப் பிடித்து உடனே இவன் கொட்டத்தை ஒடுக்கவேண்டும்; உடனே போர் தொடுக்கவேண்டும்," என்று பிஜபூரான் சொன்னதும், தில்லிமன்னன் அவன் உதவிக்குக் கடுங்கோபக் கனல் பொரியும் ஒரு வெய்ய படையை அனுப்பிக்கொடுத்தான். (௬௬)

௬௭. அறமும் ஆண்மையும் அன்பும் பொருந்திய
திறமை கொண்ட திருவினன் ஓர்பகல்,
இறைவி தன்னை யிறைஞ்சிடும் போதினிற்,
பறை முழக்கொலி பாய்ந்தது காதிலே.

அறமும், ஆற்றலும், ஆண்மையும், தெய்வபக்தியும், நாட்டன்பும் ஒருங்கே இசைந்த சக்தி பெற்ற விரத்திருவாளனான சிவாஜி, ஒரு நாள் பிரதாபதுர்க்கத்தில், தேவி பவானி கோயிலில், சக்தியை உருக்கமாகப் பாடி வழிபட்டுக்கொண்டிருந்தான். அப்போது போர்ப் பறை முழக்கம் அவன் காதில் வந்து பாய்ந்தது. அபாயத்திற்கு அஃது அறிகுறி! (௬௭)

ஒற்றன்

௬௮. "எந்தை யேஅஃப்சுல் கானெனும் வெய்யவன்
வந்த னன்வழி யெங்கும் இரத்தமே
சிந்தி னன்; உமைச் சிக்கெனப் பற்றிட
முந்தி னான்" என ஒற்றன் மொழிந்தனன்.

உடனே ஒற்றன் ஒருவன் ஓடிவந்து, "எந்தையே, அரசே, பிஜபூரான் ஏவிய அஃப்சுல்கான் என்னும் வெய்யவன் (உம்மை வெல்லும் விருப்பமுற்றவன்), வழியெங்கும் ஜனங்களின் இரத்தமும் பசுக்களின் இரத்தமும் சிந்திவந்தான். உம்மைத் தந்திரமாக அழைத்துத் திடீரென்று பற்றிக் கட்டிக்கொண்டுபோகவே இதோ முந்துகிறான்" என்று சொன்னான். (௬௮)

௬௯. கொல்ல வந்தவன் குட்டறி ஒற்றரும்,
புல்லை விற்பவர் போல்உள வாய்ந்தனர்.
வெல்ல வோர்வழி கண்டுநம் வீரனும்
மல்ல ராங்கு மறைக வென் றேவினான்.

அதே மாலையில், சிவாஜியின் ஒற்றர் அவனைக் கொல்லவந்த பகைவருடைய குதிரைகளுக்குப் புல்லுக்கட்டு விற்பவர்போலச் சென்று அங்கிருக்கும் உளவுகளெல்லாம் நன்றாக ஆராய்ந்துவந்து சொன்னார்கள். பகைவன் இன்னது செய்வான், அவனை வெல்லும் வழி இதுவே, என்று கண்டுகொண்ட சிவாஜியும், தன் மல்லர்களை அந்த இடத்தைச் சுற்றிலும் மறைந்திருக்கும்படி ஏவினான். (௬௯)

௫௦. மாசி லாத மராதிய மாமணி,
வீசி வாளை விரைந்திடும் போதிலே,
'நேச மாய்நினை நேரினிற் கண்டிடும்
ஆசை யேன்'என் றழைத்தனன் அஃப்சுலே!

பகைவரை எதிர்க்க மாசில்லாத மராதிய மாமணி, வாளைவீசி விரைந்தபோது, ஒரு தூதனை யனுப்பி, "நான் போர்செய்ய வரவில்லை; நேசமாக அன்புடன், உன்னை நேரிலே கண்டு பேசவே ஆசையுடையேன்; வருக!" என்று அஃப்சுல்கானே வலுவில் ஆசை காட்டி அழைத்தான். (௫௦)

௫௧. எப்ப டையுமில் லாமல் எதிர்ந்திடும்,
அஃப்சுல் கானை யறிந்த நம், வீரனும்
'குப்பெ னப்பற் றிக் கொன் றிடும் சூழ்ச்சியைத்
தப்ப நானுந் தயார்'எனச் சென்றனன்.

எந்தப்படையும் இல்லாமல் தனியே சந்திப்பதாக அஃப்சுல் உடன்பட்டான். ஆனால், அவன் குப்பென்று பிடித்துக் கொல்லப்போகும் சூழ்ச்சியை ஒற்றர் நன்றாக அறிந்து சொன்னதும், "அதைத் தப்ப நானும் தயார்" என்று சிவாஜி சென்றான். (௫௧)

௫௨. எடுத்தனன் இரத்தக் கூர்வாள், இடுக்கினன் புலி நகத்தை,
அடுத்தனன் குறித்த சூழல், அன்பிலான் மோசங் கண்டே,
பிடித்தனன் வயிற்றைக் கீறிப் பிளந்தனன், பகையை முற்றும்
முடித்தனன், பொருளை வாரி முதல்விக்கு நிவேதித் தானே.

சிவாஜி பகைவர் இரத்தத்தைக் குடிக்கும் கூரியவாளை எடுத்துக்கொண்டான்; அதனோடு ஒரு புலிநகத்தையும் மறைவாக இடுக்கிக்கொண்டான்; அஃப்சுல்கான் குறித்த இடத்தைச் சேர்ந்தான். அவனுடன் பேசும்போதே ஆத்திரம் எழுந்தது. அன்பில்லாத எதிரி தன்னைப் பிடிக்கப்போவதை யறிந்து, சிவாஜி அவனைப்பற்றி அடிவயிற்றைப் புலிநகத்தாற் கீறிப் பிளந்து கொன்றான்; பகைவர் சேனையை முற்றிலும் முடித்தான்; அவர் பொருள்களை யெல்லாம் வாரிச்சென்று தேவிபவானிக்கு நிவேதித்தான். (௫௨)

௫௩. "ஒன்னலர் வஞ்சத் தீமை ஒழிந்தது, முதற்போர் வென்றோம்!
உன்னடிக் கொப்ப ளித்தோம் உதவிய பொருளை முற்றும்.
மன்னறம் வாழ, நாடு மங்கலம் பொலிந்து வாழ
அன்னையே வீரசக்திக் கனலெமக் கருளு வாயே!"

"தாயே பவானிதேவி, பகைவர் (ஒன்னலர்) செய்த தீமை நீங்கியது. இன்று முதல்போரை வென்றோம். நீ இன்று தந்த பொருளையெல்லாம் உனது திருவடிக்கே அர்ப்பணம் செய்தோம். தாயே, நிலையான தருமம் வாழவும், எமதுநாடு பகைவர் தொல்லை யில்லாமலும் வறுமைப்பிணி யில்லாமலும் மங்களமான வளங்கள் பெருகி விளங்கவும் நாங்கள் போர்புரிகிறோம். எங்களுக்கு வீரசக்திக் கனலை மேன்மேலும் தந்தருள்வாயாக!" (௫௩)

௫௪. "பேச வந்த பெரும்படை யாளனை
மோச மாக முடித்தவன் சேனையை
நாச மாக்குவம் நா"மென ஷா, பிடி
மீசையை மிடுக் காக முறுக்கினன்.

அதில்ஷாவுக்குப் பெருஞ்சினம் வந்தது. "சமாதனமாகப் பேச வந்த பெரிய படைத் தலைவனை மோசமாகப் பற்றிக் கொன்றவனை (முடித்தவன்) சிவாஜியின் படைகளை நாம் நாசமாக்குவோம்" என்று பிடிப் பிடியாயிருக்கும் தன் இரண்டு மீசையிலும் (பிடி மீசை) கைபோட்டு மிகவும் மிடுக்குடன் திருகிவிட்டு எழுந்தான். (ருச)

ருரு. கொள்ளி போலக் கொதித்திட வெஞ்சினம்,
வெள்ள மாப்படை கொண்டு விரைந்தனன்.
துள்ளி வந்த துருக்கர் படையினை
அள்ளி வீசி யழித்தனன் வீரனே !

கொள்ளிபோலக் கடுங்கோபம் கொதிக்க அதில்ஷா பெரிய வெள்ளம்போன்ற படைகொண்டு சிவாஜியை அடக்கப் புறப்பட்டான். செருக்குடன் துள்ளி வந்தது துருக்கர் படை.; அதை அப்படியே அள்ளி வீசி யடித்து அழித்தான் வீரசிவாஜி! (ருரு)

ருசா. " சூரிய னையெச் சூறை யணைத்திடும்!
வீரிய னிவன், வெல்லற் கரியவன் ;
போரி லாதன்பு பூண்பது நன்"றெனக்
கோரி னன்அதில் ஷாகுண மாகவே.

"வீரபலம் மிகுந்த இவன் படைத்திறனால் வெல்ல முடியாதவன். சூரியனை எந்தச் சூறாவளி அணைக்க முடியும்! இவனையும் யாரும் அழிக்க முடியாது. ஆதலால், சண்டையில்லாமல் அன்புகொண்டு சமாதானமாகப் போவதே நல்ல"தென்று அதில்ஷா குணந் திரும்பி வேண்டினான். (ருசா)

ருஎ. "தேசத் திற்கும் அறத்திற்குந் தீமைசெய்
நாச காலர் நலிந்திட வேயிவன்
ஆசை கொண்டவன், அன்றி யிஸ்லாமியர்
நேசங் கொண்டவன்; நேர்மை தவறிலான்.

"சுதேசத்திற்கும், அதன் இயற்கை யறத்திற்கும் தீங்குசெய்யும் (நாசஞ்செய்யும்) பகைவரை அழிக்கவே இந்த வீரன் விருப்பங்கொண்டு போர் புரிகிறான். மற்றைப்படி இவன் நம் இஸ்லாமியருக்கு நேசனே; இஸ்லாமிடம் இவன் ஓரகமற்ற அன்புகொண்டவனே; இவன் உள்ளதை உள்ளபடி சொல்லி, செயலிற்காட்டும் நேர்மையன், நீதிமான்" என்று பிஜபூர் சுல்தான் அறிந்தான். (ருஎ)

ருஅ. " இவன் படையில் இஸ்லாமியர் உள்ளனர்,
அவர்க ளுக்குக் குரானும் அளிக்கிறான் !
தவறி வந்த தனியிள மாதரை
அவர வர்க்குரி யாரிடஞ் சேர்க்கிறான் ! *

"இவன் படையில் பாரதபுத்திரருடன் இஸ்லாமியரும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இவன் திருக்குரானும் தந்து படிக்கச்செய்கிறான். போர்க்களத்தில் இளம்பெண்கள் தவறித் தன் கையிற் சிக்கினால், அவர்களை இவன் மிகவும் மரியாதையாக நடத்தி, அவர்களுக்கு உரிய உறவினர், கணவர் இன்னவர் என்றறிந்து அவரிடம் கவனமாகச் சேர்க்கிறான். (ருஅ)

* ஒரு போரில், இளம் இஸ்லாமியப்பெண் ஒருத்தி சிவாஜியிடம் சிறைப்பட்டாள். சிவாஜி அவளைத் "தாயே, உன் கணவனிடம் சேர்க்கிறேன். அவனுடன் கூடி மகாராசியாக வாழ்!" என்று மரியாதையாக அப்பெண்ணைக் கொண்டு உரியவனிடம் சேர்த்தான். இப்படிப் பல சம்பவங்களுண்டு. சிவாஜி பிற மாதரைத் தீண்டுவதில்லை.

ருகூ. "இத்த கையவன்" என்றுதன் ஒற்றர்கள்
ஒத்தி யம்பினர் உண்மை யறிந்ததும்,
வைத்த வெம்பகை மாறி அதிலனும்
உத்த மனுக் குறுதுணை யாயினன்.

"சிவாஜி இப்படிப்பட்ட வீரன், நாட்டன்பன், சமரஸன், எந்த மதத்தையும் வெறுப்பவனல்லன், தர்ம விரோதிகளையே வீழ்த்துவோன், பெண்களைத் தாயென மதிப்பவன்" என்று தன் ஒற்றர் அறிந்து சொல்லவே, அதில்ஷா (அதிலன்) தான் கொண்டிருந்த கொடிய பகைமை மாறினன்; அந்த உத்தம வீரனுடன் நட்புரிமை பூண்டு, அவனுக்குத் தக்க துணைவனுன். (ருகூ)

கூ0. தந்தை யுள்ளந் தழைத்துத் தழுவினன்;
முந்து கொண்ட முனிவை முனிந்தனன்.
சிந்தை பூத்து"நற் செல்வநீ வாழ்"கெனத்
தந்த னன்மன தாரத்தன் ஆசியை.

தகப்பன் ஷாஜி மகனுடைய புகழையும் வீரத்தையும் கண்டு உள்ளம் செழித்தனன்; சிந்தை களித்தனன்; முன்னே தான் கொண்டிருந்த சினத்தைச் சினந்து "ஏன், இப்படிப்பட்ட பிள்ளையை அப்படிக் கடுகடுத்தோம்?" என்று வருந்தினன்; "நல்வீரனே, என் செல்வனே, நீ நீடுவாழ்க!" என்று மனதாரத் தனது ஆசியைக் கூறி மார்புறத் தழுவிக் கொண்டான். (கூ0)

கூக. தந்தை யுந்தந்தை யாக மொழிந்தனன்;
மைந்த னும்மைந்த னுக வணங்கினன்;
"நிந்தை யற்ற நெறியி லொழுகுமுன்
சந்த திக்கினிச் சாவிலை" என்றனன்.

தந்தை ஷாஜி இன்றுதான் வீரனெருவனுடைய தந்தை போலப் பேசினன். வீர மைந்தனும் இன்றே மைந்தன் செய்யும் வணக்கத்தைச் செய்தான். "உம் சந்ததியான நான் பெரியார் நிந்திக்காத நல்வழியிலேதான் பெருமையுடன் நடந்தேன். உம் சந்ததிக்குச் சாவில்லை. அதை இந்த நாடு எக்காலமும் புகழ்ந்து சொல்லும்." என்ருன் மைந்தன். (கூக)

தில்லி பாதுஷா

கூஉ. சுற்றி யெங்குந் துணிந்தமர் செய்தவன்
சிற்ற ரசரைச் சேவகங் கொண்டொரு
முற்ற ரசை முடிவற நாட்டினன்;
வெற்றி கண்டு வெருவினன் பாதுஷா!

சிவாஜி படைகளைக்கொண்டு, இன்னும் சுற்றிச் சமர்செய்து, சிற்றரசர்களைத் தன் சேவகராக்கிக்கொண்டு, ஒரு நிறைவான சாம்ராஜ்யத்தை அஃது இறுதியின்றி (முடிவற) மேன்மேலும் வளரும்படி நிலைநாட்டினன். அப்படி நாட்டிய சிவாஜியின் வெற்றியைக் கண்டு, தில்லி பாதுஷா அஞ்சித் திடுக்கிட்டான். (கூஉ)

௬௩. அடங்கி லான்அர சாட்சியிந் நாட்டிலே
இடம் விரிந்து பரவிய தெங்குமே;
உடனித் தீநை யொடுக்குவ தேமுதற்
கடன்மை யென்னக் கருதினன் பாதுஷா......

"இவன் யாருக்கும் அடங்காத சூரன். இவனது அரசாட்சி எனது நாட்டிலேயே, எங்கும் இடம்பரவி, விசாலமாகப் பெருகி வருகிறது; இவன் செல்வாக்கும் வளர்ந்து வருகிறது. உடனே, இவனை ஒடுக்கவேண்டும். எனது அரசு நிலைக்க இதுவே நான் செய்ய வேண்டிய முதற் கடமை." என்று தில்லி சுல்தான் நினைத்து, அதற்கு வேண்டி யதைச் செய்தான். (௬௩)

௬௪. சொற்ற வாயுஞ் சுடும்; அவன் பேரிசை
கற்ற நெஞ்சுங் கனலென வெந்திடும்;
மற்று ரைப்பதென்? மாரதச் சிங்கத்தால்
அற்று றக்கம் அமைதி யிழந்தனன்!

சிவாஜியிடம் பாதுஷா பயமும் கோபமும் கொண்டான். அவன் பெயரைச் சொன்னாலே, இவன் வாய் வேகும். அவன் பெற்ற பெரும் புகழை ஒற்றர் சொல்ல அறிந்து இவன் மனம் தீப்போலக் கொதிக்கும். இன்னும் சொல்வானேன்? மராடியச் சிங்கத்தை நினைத்து நினைத்து, பாதுஷா தூக்கங்கூடக் கெட்டு அமைதி யிழந்தான்! (௬௪)

௬௫. "பரவை போலப் படைத்திரள் கொண்டென்றன்
அரசைத் தான்பற்றி யாளத் துணிந்தவன்,
சிரசைக் கொய்"யெனச் சேட்டனை யேவினன்;
முரசு விம்ம முடுக்கினன் சேனையை......

"கடலைப்போல (பரவை) ஏராளமான சேனையைக்கொண்டு எனது அரசாங்கத்தைக் கைப்பற்றித் தானே ஆளத் துணிந்த இந்த மராடியன் தலையை வெட்டித் தள்ளு!" என்று தன் தளகர்த்தனான சேட்டாகானை பாதுஷா ஏவினன். உடனே, அவன் ஒரு பெரிய படையை, முரசு அதிர வேகமாக நடத்திப் புறப்பட்டான். (௬௫)

௬௬. இறைவன் கட்டளை யேந்திய வெம்படை
கறைகொள் மேகங் கழித்தெழு மின்னெனப்
பறை முழக்கிப் பறந்தது; பூநகர்,
சிறை பிடித்துச் செகுத்திடச் செம்மலை......

ஆண்டகையான சிவாஜியைச் சிறைப்பிடித்துச் செல்லவே, சக்கரவர்த்தி பாதுஷாவின் கட்டளையைத் தாங்கிய கொடிய சேட்டாகான் படை, போர்ப்பறை கொட்டி, வானில் அடர்ந்து தங்கும் கார்மேகத்தைக் கிழித்து, உறுமிக்கொண்டு, எழுந்து வீசும் கம்பி மின்னலைப்போல வெகு வேகமாகப் பூனாவிற்குச் சென்றது. (௬௬)

சேட்டாகானை வெல்லல்

௬௭. சினங்கொதி புலியி னம்போற் சேட்டன்பூ நகர் புகுந்து
கனம்பெறு போர் முறுக்கக் கரந்துள சூழல் கண்டே,
மனந்திடங் கொண்டெ ழுந்த மாரதச் சிங்கம் அந்நாள்,
புனைந்தொரு புதிய வேடம், பூனைபோற் புலியை வென்றான்.

கோபங் கொதிக்கும் புலிக்கூட்டம் போல, சேட்டாகான் பூநகரிற் புகுந்து, சமயம் பார்த்துப் பாய்ந்து கடுமையான போர் செய்ய ஒரு வீட்டில் ஒளிந்திருந்தான். அந்த இடத்தைக் கண்டான் மராடியச்சிங்கம் சிவாஜி. அதேநாள் நள்ளிரவில் ஒரு புதிய வேடம்போட்டுப் பூனைபோலச் சென்று, தில்லிப்புலியை வென்று விரட்டியடித்தான். (கூஎ)

கூஅ. கூற்றுலாம் பகைவன் சூழல், குறட்டைவிட் டுறங்கும் போது,
நீற்றுருப் பூனை போல நெருங்கியோர் சாதுக் கூட்டம்,
காற்றெனப் புகுந்த துள்ளே ... கனலெனச் சீறிக் கொல்ல,
வேற்றவர் குடல் கலங்கி வெருட்சி கொண் டோடி னுரே!

சேட்டாகான் சேனை எமபடர்களைப்போன்றது! அதனருகே நெருங்கினுல் உயிர் தப்பாது. எமனே உலாவுவது போன்றது அவன் இறங்கிய இடம். நள்ளிரவில் அங்கே எல்லாரும் குறட்டைவிட்டுத் தூங்கினர். அப்போது திருநீற்றைப் பூசி வஞ்சகமாக உலாவிய பூனைபோல், ஒரு சாதுக்கூட்டம், அந்தப்பக்கம் ஊர்வலமாக "ஹரஹர மஹாதேவா" போட்டுக்கொண்டு நெருங்கி உள்ளே புகுந்தது; தீப்போலச் சீறி, சேட்டாகான் படையைக்கொன்றது. "ஐயோ" என்று அலறிக் குடல் நடுங்கிக் கலங்கி, விரோதிகள் இருளில் விழுந்தடித்து, தட்டுத்தடுமாறி இங்குமங்கும் ஓடினுர்கள். (கூஅ)

கூகூ. சேட்டனுஞ் சென்னலேறித் திடுமெனக் குதித்த போது,
போட்டதோர் வலிய வெவ்வாள்; பொருக்கென வுயிரை யேந்தி,
வீட்டினின்''றையோ''வென்றே விரல் இழந் திவன் எடுத்த
ஓட்டம்போய் தில்லி சுல்தான் உலைந்திட நின்ற தன்றே...

சேட்டாகானும் உயிர்தப்பியோட, ஜன்னல்மேல் ஏறிக் குதித்தான். அப்போது ஒரு பலமான கொடிய வாள்பூசை விழுந்தது. நல்ல வேளையாக அஃது அவன் விரலைமட்டும் துண்டித்தது. ஆள் 'ஐயோ' என்றலறி, உயிரைப் பிடித்துக்கொண்டு, 'தப்பினேன் பிழைத்தேன்!' என்று அந்த வீட்டினின்று விருட்டென்று ஓட்டம் பிடித்தான். விரலையிழந்து அவன் பிடித்த ஓட்டம், தில்லியில் சுல்தான் முன்னேதான் நின்றது. நிகழ்ந்ததைக் கேட்ட பாதுஷா மனங்கலங்கி வருந்தினுன். (கூகூ)

ஆக்க்ராச்சிறை தப்பல்

எ௦. வெல்லுஞ் சேனையை வென்று முடித்தனன்,
கொல்லுஞ் சூழ்ச்சியைக் கொன்று முடித்தனன்.
இல்லை சாந்த மில்லாவழி யென்றந்தத்
தில்லிபன் அழைத் தான்சிவன் சென்றனன்.

"எப்படிப்பட்ட பகைவரையும் வெல்லக்கூடிய சேனையை யனுப்பினேம். அதை வென்று பகை முடித்தான். அவனைக் கொல்லச் சூழ்ச்சிகள் செய்தோம்; சதிகாரரை யனுப்பினேம். சூழ்ச்சியாளரைக் கொன்று அவன் உயிர் தப்பினுன். இனி, அவனை மடக்கச் சாந்தம் இல்லாது வேறு வழியில்லை." என்று அந்த தில்லியை ஆளும் மன்னன் (தில்லிபன்) சமாதானமாக சிவாஜியை அழைத்தான். சிவனும் நேர்மையாக நம்பிக்கையுடன் சென்றுன். (மகன் சம்பாஜியும் உடன் சென்றுன்.) (எ௦)

எக. அஞ்சறு வீரன் கண்டான் அரசனை ஆக்கிராவில் ;
துஞ்சறு சமயப் பற்றுந் துகளறும் எளிய வாழ்வும்,
மிஞ்சிய பாது ஷாவை வியந்தனன். பாதுஷாவும்,
நெஞ்சுரங் கொண்டான் செய்கை நேர்மையென் றுணர்ந்தான் மன்னே!

அஞ்சாத வீரசிவாஜி ஆக்கிராவில் தில்லியரசனைக் கண்டுபேசினுன் ; பாதுஷா ஔரங்கசிபின், தளராத (துஞ்சறும்) சமயப் பற்றும், குரான் எழுதி, குல்லாமுடைந்து, பொதுநிதி தொடாது தானே வேலைசெய்துண்ணும் எளிய வாழ்வும் கண்டு வியந்தான். பாதுஷாவும் நெஞ்சில் வீரவுறுதி கொண்ட சிவாஜியின் செய்கையெல்லாம் நேர்மையானவை, என்று உணர்ந்துகொண்டான். (எக)

எஉ. நிறையுடன் இரண்டு பேரு நேசமா யிருக்கு நாளில்,
இறைவனும் வஞ்சர் சொல்லை யேற்றுநம் வீரர்ஏற்றைச்
சிறையிட்டான் ; சிவாஜி வீட்டிற் 'சிவசக்தி காக்க'வென்றே
முறையிட்டான் மோசஞ் செய்த மோசரைத் தப்பவேண்டி......

அவரவருக்குரிய அளவில் மரியாதையாக இருவரும் நேசமாயிருந்தார்கள். பாதுஷா சிவாஜிக்கு ஒரு பெரிய மாளிகை தந்து, சேவகர் வைத்து, வேண்டிய சௌகரியஞ் செய்தான். மராடியத்தொண்டர் ஏராளமாக அவனுடன் இருந்தனர். மகன் சம்பாஜியும் உடனிருந்தான். அச்சமயம் வஞ்சகர் சிலர் பேச்சைக்கேட்டு பாதுஷா, சிவாஜியை அதே மாளிகையிற் காவல் வைத்து, வெளியேற முடியாதபடி அடைத்தான். இந்த மோசக்காரர் செய்த மோசத்தைத் தப்பி ஊர்செல்ல ஒரு சூழ்ச்சியை எண்ணி, சிவாஜி "சிவ சக்தியான பவானியே, என்னைக் காப்பாற்று!" என்று முறையிட்டான். (எஉ)

எ௩. "தருமத்தை நிலை நிறுத்தத் தாரக மாக முன்னோர்
நிருமித்த வழி நடந்தேன் ; நிறைவுநா னின்னுங் காணேன்.
கருமத்தை முடிக்க வேயிக் கட்டினை யுதறிச் செல்லும்
மருமத்தை விளக்கிக் காவாய், மாசிவ சக்தி தாயே!"

"உலகில் தூய அறத்தை நிலைநிறுத்த ஆதாரமாக (தாரகம்) இராம கிருஷ்ணுதிகள் நிலை நாட்டிய பராக்கிரம வழியே சென்று தர்மயுத்தம் செய்தேன்; சில நாடுகளை வென்றேன். ஆனுல், இன்னும் எனது காரியம் பூரணமாக நிறைவேறவில்லை. அதற்குள் நான் கூண்டுக் கிளிபோல் பகைவன் காவலில் சிக்கியது பரிதாபம். இந்தக் கட்டை விட்டு உடனே விடுதலையாக வேண்டும். எதற்கு? நான் கொண்ட கருமத்தை நிறைவேற்றவே. அதற்கு வேண்டிய இரகசிய வழிகளை எனக்கு விளக்கி யருள்வாயாக! தாயே சிவசக்தி, வணக்கம்!" (எ௩)

எ௪. ஆயிரம் மின்னல் போலே அன்னைவந் தபய மீந்தாள்!
போயது துயரம்! சூழ்ச்சி பொலிந்ததும், அறிந்த வீரன்,
நோயெனப் படுக்க, நண்பர் நூறுபேர் சிகிச்சை செய்தார்......
வாயிலுந் திறந்தார் தந்தை மகனுெடுந் தப்பு தற்கே......

தேவி பவானி ஆயிரம் மின்னல்போல் சிவாஜி யுள்ளத்திற் கிளர்ந்தெழுந்து, "அன்பா, அஞ்சாதே; இதோ நீ தப்பிச் செல்வாய்" என்று அபயமளித்தாள். உடனே, அவனது துயரம் மறைந்தது. ஒரு சூழ்ச்சி பளிச்சென விளங்கியது. காலதேசவர்த்த

மானங்களை நன்றாய் அறிந்த வீரன், தனக்கு நோய் என்று படுத்தான். கடுமையான காய்ச்சல்! ஔரங்கசிபு "தங்களுக்கு வேண்டிய வைத்தியரைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்ளுங்கள்" என்று எல்லாச் சௌகரியங்களும் தந்தான். நூறு மராடிய நண்பர், அன்பர் (தேர்ந்த ஒற்றர்), பலவகைத் தொண்டுகள் செய்தனர். அவர்கள் கவனம் சூழ்ச்சியி லிருந்தது. தந்தை சிவாஜியும், மகன் சாம்பாஜியும் தப்பிச் செல்லவே அவர்கள் வாசல் திறந்தனர்; வழி துலக்கினர். அவருட் சிலர் ஆடல்பாடல் கற்று ஆக்கிரா வீரர்களை வசிகரித்தனர். இவற்றின் பயனென்ன? (எச)

எரு. விட்டது நோயென் றார்கள். வீரனைத் தில்லி மன்னன்
மட்டறு மகிழ்ச்சி காட்டிப் பார்த்தனன்; மராட வீரன்,
"இட்டமித் திருக் கெல்லாம் விருந்துகள் இடுவேன்" என்றான்...
கட்டளை யேற்ற தோழர் கனவிருந் தாக்கி னாரே...

வைத்தியர் 'சிவாஜிக்கு நோய் நீங்கியது' என்றனர். தில்லி பாதுஷா "அப்படியா, சந்தோஷம்!" என்று அளவற்ற மகிழ்ச்சியைக் காட்டி வீரனை வந்து பார்த்தான். மராடிய வீரன், "எனது நோய் தீர்ந்த சந்தோஷத்திற்காக விருப்பமுள்ள நண்பருக்கெல்லாம் பலமான விருந்து வைக்கவேண்டும்" என்றான். பாதுஷா "ஆகா" என்று விருந்திற்கு உத்தரவிந்தான். ஏராளமான சாமான்களும் வந்தன. மராடியத்தோழர் தலைவன் ஆணையை ஏற்று, அதன்படி அவரவர் இடத்திலிருந்து பலமான, பெரிய விருந்திற்கு வேண்டிய தெல்லாம் தயாராக்கினார்கள். கூடைகூடையாகப் பட்சணங்கள்! ஆடல் பாடல் அமளிகளெல்லாம் தயாராகின்றன. (எரு)

எசு. நேசர்க்குப் பண்ட மென்றே நெடியபல் கூடை சென்ற!
வேசையர் நடனக் கூத்தில் வெறிகொண்டார் காவலாட்கள்!
வாசலைக் கடந்து சென்ற வலியதோர் கூடை யென்னே!
தோசையென் றிருந்தார் மற்றோர்; சூரனும் விடுபட் டானே!

நண்பருக்குப் பணிகாரங்கள் என்று பெரிய பெரிய கூடைகள் அந்த மாளிகையை விட்டுச் சென்றன. அச் சமயம் வேசைகளின் ஆடல் பாடல்கள் அமளியாயிருந்தன. மேலிருந்து மராடிய ஒற்றர் கண்சாடையால் வேசைக்கும், கூடை தூக்கிய ஒற்றருக்கும் வழிகாட்டினர். காவலரும் முகலாய வீரரும் கூத்து மயக்கத்தில் உலகையே மறந்துபோனார்கள். அச்சமயம் ஒரு வலிய கூடை வாசலைக் கடந்து சென்றது. அக்கூடையில் என்ன, என்ன? அதில் தோசை அப்ப வகை பணிகாரம் இருப்பதாகவே பிறர் நினைத்துச் சும்மா இருந்தனர். கூடை! ஆக்கிராக்கோட்டையைத் தாண்டியதும், திறந்தது. சிவாஜியும் மகனும் வெளிவந்தனர். அங்கே குதிரை தயாராயிருந்தது. அதில் ஏறித் தாவினான் சிவாஜி. அவன் பல மைல்கள் போகுமட்டும் சதிர்க்கச்சேரி பலமாயிருந்தது. மோசக்காரர் மோசம் போனார். சூரன் விடுதலை பெற்றான். (எசு)

எஎ. மூக்கினில் விரலை வைத்தான் முகலவர் கோனும்; வாயிற்
காக்குநர் தமையொறுத்தான்; காற்றினும் வேக மாக,
ஊக்கினன் ஒற்றர் தம்மை; ஒருலட்சம் வராக னென்று
வாக்களித் தானவ் வீரன் சிரத்துடன் வருவா ருக்கே!......

முகலாயர் கோமான் "அரே, என்ன மோசம்!" என்று மூக்கில் விரலை வைத்து வியந்தான். மாளிகைவாசலைக் காக்கும் காவலாளிகளை முனிந்தான், தண்டித்தான்; காற்றைவிட வேகமாக எட்டுத் திசையிலும் ஒற்றரைக் குதிரைப்பட்டாளத்துடன் அனுப்பினான். "அந்த மராடிய வீரன் தலையை வெட்டிக்கொண்டு வருவோருக்கு ஒரு லட்சம் வராகன் தருவேன்" என்று வாக்களித்து விளம்பரம் செய்தான். (எஎ)

எஅ. * வாசியி லேறிய வன்றிறல் வீரன்,
ஓசனை நான்குற ஓர்வனம் புக்குப்
பாச மறுத்த பரங்களைக் கூடிக்
காசி யடைந்தனன் காவி யுடுத்தே.

ஆக்கிராக் கோட்டைக்கு வெளியே குதிரையில் தாவி ஏறிய பலம் மிகுந்த (வன்றிறல்) வீரன் சிவாஜி, தன்மகனுடன், நான்கு யோசனைகள் தாண்டியதும், குதிரையைத் தன் ஒற்றரிடம் கொடுத்து, அடர்ந்ததொரு காட்டிற் புகுந்தான். அங்கே உலகப் பாசத்தை அறுத்த பரதேசிக் கூட்டம் ஒன்று இருந்தது. சிவாஜி முன்பே மொட்டை யடித்துக்கொண்டுதான் கிளம்பினான்; இப்போது, தயாராயிருந்த காஷாயத்தை அணிந்தான். வழிநெடுகத் தன் ஒற்றரும் அன்பருமே துறவிகள்போலவும், குடியானவர்கள் போலவும், சாப்பாட்டுக் கடை வைப்பவர் போலவும் இருந்தமையால், சிவாஜி தடையில்லாமல் விரைந்து காசி நகரத்தை யடைந்தான்; மைந்தனைக் காசி பாண்டே என்னும் அன்பனிடம் விடுத்தான். (எஅ)

எகூ. ஐம்பொறி வென்ற வருண்முனி போலே,
கைம்மலர் தன்னிலோர் கப்பறை தாங்கி,
பொம்மக தேவ வென் றையம் புகுந்தே,
செம்மல் சிவாஜி திரிந்தனன் சுற்றி.

ஆண்டகை சிவாஜி ஐந்து பொறிகளையும் அடக்கி வென்ற அருள் முனிவன்போல, பரிவ்ராஜகன்போல, கைமலரில் கப்பறை யேந்தி, "பொம் மகாதேவ" என்று பரதேசிகளுடன் பிச்சையெடுத்துண்டு நாடெல்லாம் திரிந்தான். (எகூ)

அ௦. அறிந்தவர் போற்றி யறிந்தது சொல்லார்,
துறந்தவ னென்று பகைவர் துறப்பார்,
செறிந்து பிடிக்க வருஞ்சில தெவ்வர்
மறைந்தவன் போகிற மாய மறியார்.

காடுகளிலும் ஊர்களிலும் ஆங்காங்கு இரகசியமாக மராடியர் சாப்பாட்டுக்கடை வைத்திருந்தனர். சிவாஜி வருவது இந்த நாள் என்று அவர்களுக்குத் தகவல் எட்டும். ஒரு துறவிக் கூட்டம் வரும். அவருள் சிவாஜியிருப்பான். அதை அந்த மராடியன் அறிவான்; தன் அரசனுக்கு மட்டும் இரகசிய உபசாரங்கள் நடத்திப் பிறகு கூட்டத்துடன் போக விடுப்பான்; தான் அவனை அறிந்து உபசரித்ததை வெளியே சொல்லான். ஒருநாள் ஏழை மராடியன் ஒருவனுடைய உணவுக்கடையில் சிவாஜி புகுந்தான். தில்லி யரசன் சிவாஜியைப் பிடித்துக்கொடுப்பவருக்கு ஏராளமான பொன் தருவதாகச் சொல்லி. விளம்பரம் செய்திருந்தது அவனுக்குத் தெரியும். சிவாஜி அந்த ஏழையை நோக்கி, 'உன் அரசன் இந்தக்

---

* கலி விருத்தம் : மோகன ராகம்; ஆதி தாளம்.

காட்டில் திரிகிறான். இருவரும் அவனைப் பிடித்துக்கொடுத்து இனாம் பெறுவோமே' என்றான். ஏழைக்குக் கடுங்கோபம் வந்தது. 'எனது தலையை வெட்டினாலும் எங்கள் அரசனைக் காட்டிக் கொடுக்க மாட்டேன். நீ யார் இப்படிக் கேட்பவன்? கவனம்!' என்று வெகுண்டான். 'நானே சிவாஜி' என்றதும் ஏழை பணிந்து போற்றினான். பிற்காலம் இத்தகைய நன்றியுள்ள ஏழைகளுக்கு சிவாஜி ஏராளமான பொன்னுதவினான். அவனைப் பகைவர் பின்தொடர்வர். அச்சமயம் தியானமும், ஜபமும் பலமாயிருக்கும். சாமியார் சமாதியில் ஆழ்ந்திருப்பார். கடுந்துறவி யென்று ஒற்றர் செல்வர். சிலர் இந்தச் சாமியாரைச் சும்மா விடக்கூடாதென்று துரத்தினர். சிவாஜி ஒரு குளத்தங்கரை அரசமர நிழலில் பரதேசிகளுடன் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். பகைவரின் ஒற்றர் குதிரையேறிக் குளத்தங் கரைக்கு வந்தனர். சிவாஜியைக் குறிப்பறிந்து இதோ பிடிக்கப்போகின்றனர். வீரன் திடீரென்று குளத்தில் ஒரு பெரிய கல்லை அலை கிளம்பத் தள்ளினான். பகைவர் 'அரே, இவன் குளத்தில் குதித்துவிட்டான்!' என்று இறங்கித் துழாவினர். அச்சமயம் சிவாஜி அவர் குதிரை ஒன்றில் ஏறிச் சவாரி விட்டான். பகைவர் ஏமாறித் திகைத்தனர். இப்படிப் பல இடங்களில் அவன் * மாயமாய் மறைந்தான். (அ0)

அக. தான்வரத் தானம் வழங்கு மனைவி,
தான்வரக் கண்டு தழைத்தன ளின்பம்,
கோன்வரக் கண்டு குளிர்ந்தது நாடு,
பூநகர் மீண்டு புரந்தனன் வீரன்.

சிவாஜியின் மனைவி தன் கணவன் வந்துசேர, விரதம் பூண்டு தானதருமங்கள் செய்தாள். அதுவும் மந்திரிகள் தந்திரமே. பரதேசிகளுக்கு அன்னமிடும்போது, அவருள் இருந்த சிவாஜியும் கப்பறையேந்தினான். அச் சமயம் மனைவி குறிப்பறிந்தாள். சிவாஜி அரண்மனைக்குட் சென்று காஷாயத்தை எடுத்துவிட்டு, அரசுடை யணிந்தான். கணவன் இம் மட்டும் க்ஷேமமாக வரக்கண்ட மனைவி இன்பஞ் செழித்தாள். அரசன் வந்ததைக்கண்டு நாடெல்லாம் மனங்குளிர்ந்தது. வீரன் எல்லா இடர்களையுந் தாண்டி, பூநகரை மீண்டும் அரசாண்டிருந்தான். (அக)

அஉ. வெருவிய பாதுஷாவும், வீரனை வெல்லொ ணாமல்,
உருவிய சூழ்ச்சி வாளை உறையிலிட் டுண்மையான
பெருமைகள் பேசி, மன்னர் பிரானெனும் பட்டஞ் சூட்டித்
திருவுடன் சுதேசங் காக்கச் செய்தனன் சேம மாக...

முன்னே சிவாஜி யென்றால் பாதுஷா பயப்பட்டான்; அவனைக் கொல்ல நயம் பயம் பலாத்காரங்களால் முயன்றான். எல்லாம் வீணாகவே, உருவிய சதிவாளை உறையில்போட்டுக் கட்டி வைத்துவிட்டு, சிவாஜியின் உண்மையான சிறப்புக்களைப் புகழ்ந்தான் மன்னர்பிரான்; சத்திரபதி என்ற பட்டம் சூட்டி, எல்லாத் திருக்களுடனும் கூடி, அவன் வென்ற சுதேசங் களைச் சேமமாகக் காத்து வாழச்செய்தான். (அஉ)

---

* சிவாஜி இரவில் காசிக்குச் சென்று அதிகாலையிலேயே விசுவநாதர் தரிசனம்செய்து, ஓர் இளம் பண்டாவைக்கொண்டு செய்யவேண்டிய கடன்முறைகளெல்லாம் செய்தான். சூரியோதயமானபோது துருக்க ஒற்றர் வரக்கண்டு மாயமாய் மறைந்தான்; தனக்கு உதவிய பண்டாவுக்குப் பொன்னும் மணியும் அளித்தான்.

அங. செருவினி லனுமான் வாழ்க, தீமையைச் செற்ருேன் வாழ்க,
அருமருந் தனைய நண்பன், அரனருட் சக்தி மைந்தன்,
தருமத்தைக் காத்த தீரன், சத்திர பதிவாழ் கென்றே
திருமுடி சூட்டினுர்சு தேசத்தார் கேச ரிக்கே.

'அறப் போரில் அனுமான் போன்ற வீரன் வாழ்க; தீமையை வீழ்த்திய நல்லோன் வாழ்க; சமயத்திற்கு உதவும் அரிய மருந்துபோன்ற நண்பன் வாழ்க; சிவனது அருட் சக்தியான பவானிதேவியின் அன்புச் செல்வன் வாழ்க; தேச தருமத்தைக் காத்த தீரன் வாழ்க; சத்திரபதி சிவாஜி வாழ்க!' என்று ஆர்கலித்து, நாட்டினர் அனைவரும் ஒருங்குகூடி, நமது வீரகேசரிக்குப் பட்டாபிஷேகம் செய்து திருமுடி சூட்டினர். (அங)

அச. கடமைக்குயிர் தருசேனையுங் கலங்காமன வுரனும்
திடபக்தியுஞ் செயல்வெற்றியுந் திருவோங்கிய புகழும்,
இடமேவிய வரசும்மிக வினிதாகிய குணமும்,
உடையான்உல கெக்காலமும் ஓதும்அதி மனிதன்.

உலகம் எந்தக் காலமும் இசைக்கும் அதிமனிதன் (Superman) ஆகிய சிவாஜி, கடமைக்கே உயிரைத் தியாக பலியாகத் தரும் படைவீரரையுடையவன்; எந்த இடுக்கண் வந்தாலும் கலங்காத மனவுறுதியும், வைராக்கியமான தெய்வபக்தியும், காரிய சித்தியும் எல்லாத்திருக்களும் செழித்த கீர்த்தியும், இடமகன்ற சாம்ராஜ்யமும், மிகவும் இனிய குணதிசயமும் உடையவன். (அச)

அடு. அடிமைத்துய ரிருள்போக்கிடும் ஆண்மைச்சுட ரானுன்.
இடருக்கெதிர் இடர்செய்துபே ரிடர்தீர்த்தினி தீந்தோன்,
வடநாட்டிலுந் தென்னுட்டிலும் கொடிநாட்டிய மன்னன்
இடிமின்புய லுடன்மாமழை யெனவேவினை புரிந்தோன்.

சிவாஜி சிறந்த கருமவீரன். இடி, புயல், மின்னல் ஆகிய பயங்கரங்களுடன் உலகு செழிக்கும் மழையும் வருகிறது; பலனையோ, பிறரையோ கருதாமல் இயல்பாக அது தன் கடமை செய்து செல்கின்றது. அதைப்போலவே, சிவாஜி இடிமுரசங் கொட்டி, புயல் போலக்கிளம்பி, மின்னல்போல் வாளைவீசிப் போர்செய்து, தருமமேகம்போலப் பொழிந்து, தனது கடமையை, பிறவிவினையை, இயல்பாகச்செய்து வெற்றிபெற்ருன். அவன் வடநாட்டிலும் தென்னுட்டிலும் பல இடங்களில் தனது கொடி நாட்டி ஆண்டான். அவன் இடர் செய்யும் பகைவர்களுக்கு எதிர்நின்று, தானும் அவர்களுக்கு வாளால் இடர்செய்து, நாடு படும் துன்பங்களைத் தீர்த்தான். அடிமையாகிய துன்ப இருளை ஒழிக்க ஆண்மையாகிய சூரியனுகத் தோன்றினுன் சிவாஜி மன்னன். (அடு)

அசு. மக்களுக் கினிய தந்தை, மன்னவர் மன்னன், உள்ளப்
பக்குவ ஞானிகட்குப் பண்புள தொண்ட னுனன்,
அக்கிர மங்கள் செய்யும் அரக்கனின் கால னுனன்,
சக்கர நெறி நின்ருர்க்குத் தருமமே யானுன் மாதோ!

ஜனங்களுக்கு சிவாஜி தந்தைபோல் ஆனுன்; அவர்களுக்குக் கல்வி தொழில் தந்து காத்தான்; உள்ளம் பழுத்த ஆத்மஞானிகளுக்கு பண்புள்ள அடியானுகப் பணிசெய்தான்;

அக்கிரமங்கள் செய்யும் அதர்ம அரக்கருக்கு எமன்போலானுன்; அவர்களைப் புடைத்தழித்தான். தனது ஆணைச் சக்கரத்தின் வழியே நின்றெழுகியவர்களுக்கு, அறமே போல நல்ல துணை செய்தான். (அகூ)

அஎ. தாயினுக் கினிய பிள்ளை, தந்தைக்குப் புகழைத் தந்தோன்,
நேயருக் கினிய நேயன், நிகரிலா வுலக வீரன்,
தூயனி ராம தாஸன் சொல்மொழி கேட்கு மன்பன்,
ஆயுளை யெல்லாந் தேச சேவைக்கே யளித்தான் மாதோ!

தன்னை வீரனுக வளர்த்த தாய்க்கு இனிய பிள்ளையானுன்; தந்தைக்குப் புகழைத் தந்தான்; நண்பருக்கு இனிய நண்பனுனுன்; பரிசுத்த முனிவனுன இராமதாஸ் உபதேசப் படி நடந்து, சிறந்த தெய்வபக்தனுகவும், ஒப்பற்ற உலக வீரனுகவும் ஆனுன். தன் வாணுட்களையெல்லாம் நாட்டுப் பணிக்கே அள்ளியளித்தான் தியாகி சிவாஜி. (அஎ)

அஅ. "இனையசி வாஜி மன்னன் வணங்கிய இராம தாசின்,
புனிதமாக் கதைசொல்"லென்று புனிதனுங் கேட்க, நல்லோன்
"இனிதினி துனது கேள்வி; ஏகுவோம் ஐந்தால் ஆங்கே
முனிவரின் வாக்கி னுலே முனிவரைக் கேட்போ" மென்றுன்...

"இப்படிப்பட்ட பாரதவீரனுகிய சிவாஜி மன்னன் வணங்கிப் பயன்பெற்ற இராம தாஸ் முனிவரது புண்ணியக்கதையை எனக்குச் சொல்லென்று சுத்தன் சித்திமானைக் கேட்டான். அந்த நல்லோன், "சுத்தா, உனது கேள்வி மிக இனிது. நீ அவசியம் இராமதாஸ் போன்ற மகான்களின் வரலாற்றை அறியவேண்டும். இதோ நாம் ஐந்தால் (பஞ்சவடி) செல்கிறேம். அங்கே அரிய தவமுனிவர் இருக்கின்றனர். இராமதாஸ் மடமும் உள்ளது. அங்கே அந்த முனிவன் பெருமையுடன் இன்னும் சில முனிவர் பெருமைகளையும் முனிவர் வாக்கினுலேயே கேட்போம்" என்றுன் (அஅ)

அகூ. வாளினில் வீரன், போரில் வாகைகள் அணிந்த வீரன்,
தோளினில் அறஞ்சு மந்த துகளறு வீரன்; பூமி
ஆளுறு வீரன், யோக பலத்தினுல் அடக்கித் தம்மை
ஆளுறும் வீர ருக்கே அன்புறு வீர னுனன்...

சிவாஜி வாளின் வீரன். எத்தனையோ போர்களில் பகைவரை வென்று வாகை மாலைகள் (வெற்றிமாலைகள்) அணிந்த வீரன்; தோள்வலியால் தருமத்தைத் தாங்கிய மாசற்ற தருமவீரன்; உலகை ஆளும் நீதி வீரன்; இத்தகைய வீரமணி, யோகசத்தியால் தம்மை அடக்கியாளும், மகான்களான தவ வீரருக்கே அன்புரிமை பூண்டு அடித்தொண்டாற்றிய வீரனுனன். (அகூ)

கூ0. அத்தகை சிவாஜி யாக்கை அடங்கிய ராயக்கோட்டை
இத்தநி காணப்பெற்றேம் இதயத்தில் வீர மூற,
சத்திய தருமத்திற்கே தம்முயிர் வழங்கு கின்ற
உத்தம வீர ரிந்த வுலகுள மட்டும் வாழ்க!

அப்படிப்பட்ட சிவாஜியின் உடல் இதே இராயக்கோட்டையிலேதான் அடங்கியது. அக்கோட்டையை உள்ளத்தில் வீரக்கனல் ஊறக் காண்கிறேம். அதைக் காணும்போதே

வீரம் ஊறுகிறது. சத்திய தருமத்திற்கே தமது ஆவியைத் தந்த உத்தமமான தியாகவீரர் இந்த உலகுள்ளமட்டும் புகழுடலில் வாழ்வாராக ! (௬௦)

௬௧. மாசறு விரன் வாழ்வை மனமுறப் பருகிச் சுத்தன்
"பேசரும் பெருமைபெற்ற பிரான்கதை செவியிற் கொண்டேன் ;
காசினி யனைத்து மிந்தக் கதையினுல் வீரசக்தி
ஆசியைப் பெற்று வெற்றி யடைந்திடு முண்மை" யென்ருன்.

மாசற்ற வீரசிவாஜி வாழ்வைக் கருத்துடன் மனதாரப் பருகிய சுத்தன், "பேசுதற்கரிய மாண்புடைய வீரர்பிரான் சரிதை கேட்டுப் பெருமகிழ் வெய்தினேன். உலகமெல்லாம் இந்தக் கதையைக் கேட்பதால் வீரசக்தியின் ஆசிர்வாதத்தையும், எடுத்த காரியத்தில் வெற்றியையும் அடைவது உண்மை" என்ருன். (௬௧)

௬௨. இன்ன சொல்லி முடித்திடு மெல்லையில்,
"என்ன கர்க்கண் இளமன் வரு"கெனக்
கன்ம னக்கலி யன்கடி தந்தந்தே
முன்னின் ருன்முக மூடிய தூதனே...

சத்தியன் இவ்வாறு சொல்லி முடித்ததும், முகமூடியணிந்த ஒரு தூதன் வந்து, கல்நெஞ்சனுன கலியன் கடிதத்தைத் தந்து, இருவர் முன்னும் பதிலுக்காக நின்ருன். அக்கடிதத்தில் "இளவரசன் (இளமன்) எனது கலிநகருக்கு இனிது வருக!" என்ற அழைப்பிருந்தது. (௬௨)

௬௩. இடமு நாளும் இசைந்திடின் உன்னகர்
உடன் வருவ துறுதியென் றன்புடன்
விடை யெழுதி விடுத்ததும், சித்திமான்
கடிநின் ஒற்றரைக் காண்மினென் றேவினுன்.

கலியன் வஞ்சனை சித்திமானுக்குத் தெரியும் ; கலியன் ஒற்றர் பின்னுலேயே மாறு வேடத்துடன் தொடர்வதும் தெரியும். ஆதலால், "நாங்கள் பிரயாணமாகி நாளாயிற்று. இடமும் நேரமும் ஒத்திருந்தால் உடனே நாங்கள் வருவது உறுதி" என்று பதில் எழுதித் தூதனை அனுப்பிவிட்டு, தன் ஒற்றரை "கலி நகரில் நடப்பதெல்லாம் கண்டுவந்து சொல்லுங்கள் !" என்று ஏவினுன். (௬௩)

வீர சிவாஜிப் படலம் முற்றிற்று.

கஎ. பஞ்சவடிப் படலம்

க. வேதங்கள் அனைத்தும் ஒன்ருய் விளம்பிடும் உண்மை யான
ஆதிசுத் தான்மன் யானென் றறிந்திடத் தியான மோனச்
சாதனஞ் செய்து, முற்றிச் சகசநிட் டையில் விளங்கு
மாதவர் வாழும் பஞ்ச வடியினைப் புனிதன் கண்டான்.

எல்லா வேதங்களும் ஒருங்கே விளம்பும் உண்மைப் பொருள் ஒன்றே. அதுவே அனைத்திற்கும் ஆதியான, மூலகாரணமான சுத்தான்மா. அதை மனமடங்கிய தியானத்தாலும், சித்தத்திரைகள் அடங்கி உள்ளத்தில் நிலைத்த மோனத்தாலும், பக்தி, ஞானம், நிஷ்காம்ய கர்மம் முதலிய சாதனங்களாலும் அறியலாம். இவ்வாறு சாதனங்கள் முற்றி, சித்தி பெற்று, என்றும் தம்முள் இயற்கையான சகசநிட்டையில் இலயித்திருக்கும் மாதவர் வாழும் தலம் பஞ்சவடி. அதைச் சுத்தன் கண்டான். பஞ்சவடி என்ருல் ஐந்து ஆலமரங்கள் சேர்ந்த இடம் எனப் பொருளாம். (க)

உ. உரையினுக் கரிய ஞானி யுளமென மலையும், ஆர்வக்
கரைபுரன் டோடுந் தெய்வக் கவியென விமலை யாறும்.
விரைமலர், கனியுங் காயும் விளைபசு வனப்பு மோங்கி
வரையறு தவத்திற் கேற்ற தண்டக வனமுங் கண்டான்.

தண்டகவனம் எல்லையில்லாத (வரையறு) தவயோக சாதனங்களுக்குத் தகுந்த இடம். அதில் சொல்லுக்கரிய பரமஞானிகளின் திண்மையான உள்ளம்போன்று வானோங்கிய மலைகள் மாண்புறக் காணும். அருளார்வம் மிக்க தெய்வப் புலவர் இயற்கையாகப் பாடும் தெள்ளிய கவியைப்போலக் கட்டற்றுக் கரைபுரண்டோடும் கோதாவரி நதி, அவ்வனத்தை வளமுறுத்துகிறது. அவ்வனம் உணவுக்கேற்ற நல்ல கனிமரங்களும், மலர்களும், காய்களும் நெருங்கி நிறைந்து, நீண்ட பசுமையான அழகு பொலிகிறது. பஞ்சவடியைப் பார்த்ததும் இத்தகைய தண்டகாரண்யத்தையும் சுத்தன் மந்திரியுடன் கண்டான். (உ)

ங. வானமு மலையும் ஊட்டி வளர்த்திட, வளர்ந்து சென்றே,
நானிலப் பயிர்கள் ஓங்க, நல்லுயிர்க் குலஞ் செழிக்கத்
தானமாய்த் தன்னை நல்கித் தரத்தரத் தழைத்துப் பொங்குந்
தேனினு மினிய கோதா வரியெனுந் தெய்வ யாறே,

கோதாவரியென்னும் தெய்விக நதி, தேன்போன்ற இனிய புனலை யளிக்கும். அதை அத்தகைய புனலூட்டி வளர்ப்பன வான்மழையும், மலையூற்றும். அந்நதி மேன்மேலும் வெள்ளம் பெருகித் தவழ்ந்து, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலங்களிலும் பயிர்களும், நல்ல உயிர்க்குலங்களும் செழித்தோங்கத் தன்னையே தானமாக வழங்கும். அப்படித் தன்னைத் தரத்தர, அந்தத் தியாகபலத்தால், அது மேன்மேலும் தழைத்தோங்கும். (ங)

ச. அரன்பொது மன்றில் ஆடும் ஆனந்தக் கூத்தைப் போலும்,
பரமனைப் பரவு கின்ற பக்தர்பா மாலை போலும்,
துரியரின் *வீணைதண்டந் தொனிக்குமோங் காரம் போலும்,
விரியலைக் கரங்கள் வீசி விரைந்தது விமலை யாறே.

---

* வீணைதண்டம் என்பது முதுகெலும்பு, முள்ளந்தண்டு. அது வீணைபோன்றது. அதிலேதான் பலசக்திகள் அடங்கிய ஆதார சக்கரங்கள் உள்ளன. மனமடங்கிய துரியஞானிகளுக்கு அங்கே எப்போதும் 'ஓம், ஓம்' என்று யாழொலி கேட்கும். இதன் விளக்கம் யோகசித்தி யோகவியலிற் காண்க.

கோதாவரி நதி பரந்த அலைகளாகிய கைகளை ஓசையெழ விசி வேகமாகச் சென்றது அந்த அலைகளின் குதிப்பு பொதுமன்றமான சிற்சபையில் ஸ்ரீ நடராஜப்பெருமான் ஆடும் திருக்கூத்தைப் போன்றும், அவற்றின் சலசலப்பு பரம்பொருளைப் பாடும் அருளன்பர் பாசுரமாலை (தேவாரம்) போன்றும், ஆற்றின் ஓசை சுத்தான்ம நிலையிற் சலனமற்றிருக்கும் துரியயோகிகளின் வீணாதண்டத்தில் உதிக்கும் ஓங்கார நாதம்போன்றும், கண்டவருக்குப் பேரின்பமளிப்பதாயிருந்தன. (௪)

௫. தாய்முலைப் பாலைப் போன்ற தளிரிளம் பயிரை யூட்டிக்
காய்கனி தானி யங்கள் கணக்கற விளைத்து நல்கித்
தேயத்தின் பசியை நீக்கித் திருவருண் முனிவருக்குத்
தூயநல் லுதவி செய்யுஞ் சுதந்தர வள்ள லாறே.

கோதாவரி எவ்விதமான தடையுமின்றிச் சுதந்தரமாகத் தனது பொருளை வாரி வழங்கும் வண்மைகொண்ட நதியாகும். மேற்குத் தொடர்மலை தாய்மார்புபோன்றது. அதன் பாலைப்போன்று அன்பு கசிந்து, பொங்கி வருவது இந்த ஆறு. இது தன் அன்புப் பாலால், தளிர்க்கும் இளம்பயிர்களான குழந்தைகளை ஊட்டி வளர்க்கிறது. அக்குழந்தைகள்மூலம் காய்கனி தானியங்கள் கணக்கில்லாமல் விளைகின்றன. அவ்விளைவுகளையெல்லாம் ஆறு தனக்கெனக் கொள்வதில்லை; உயிரினங்களுக்கே அள்ளித்தந்து தேசத்தின் பசிப்பிணியைத் தீர்க்கிறது. வனத்தில் தெய்வத்திருவருளைத் தேடித் தவம்புரியும் முனிவருக்கு, ஆறு காய்கனி கிழங்குகள் தந்து, குடிக்க, குளிக்க, சுத்தக் கிரியைகள் செய்ய உதவுகிறது. (௫)

௬. தீங்கனி ரசமும், வாச மலர்வனஞ் செழித்த தேனும்
தாங்கிடும் அமுத வெள்ளம், தங்கமும் பசிய சீரும்
ஓங்கிடு மிதன் பரப்பில் உலவிடு மனத்தி னுக்கு
நீங்கிடுங் கவலை, சாந்த விடுதலை நிலவு மம்மா!

கோதாவரியின் வெள்ளம் வனமலர்களில் செழித்துப் பொழியும் தேனும் கனிரசங்களும் கலந்து தேவாமிருதம்போலச் சுவைக்கும். இந்நதி பாயும் பாசனங்களில் பொன்னும் பசுமையுங் குலுங்கும்; தாவரச் செல்வம் மல்கும். இதன் பரந்த கரைகளில் உலாவும் மாந்தர் மனக்கவலை நீங்கும். அவர் உள்ளத்தில் பரமசாந்தமான, கட்டற்ற சுதந்தரவுணர்ச்சி பிறக்கும். (௬)

எ. பாருயிர் அறஞ்செழிக்கப் பாய்ந்திடும் விமலை யாறு,
கார்வரைக் கல்லு ருட்டிக் கான்மரம் பறித்து மோதிப்
போரலை விம்மப் போந்து பொருகடல் கலக்கு நீரால்,
வார்சிலை இராம னேவும் வானரப் படையை மானும்.

கோதாவரி நதி, உலகுயிர்கள் உடலறமும், உள்ளறமும் போற்றிச் செழிக்கப் பயிர்களை வளர்த்து, நீர்வளஞ் செழித்துப் பாய்கிறது. அது கார்மலைகளிலிருந்து கற்களை உருட்டி வருகிறது; காடுகளிலிருந்து மரங்களை வேர்பெயர்த்து வந்து கரைகளில் மோதுகிறது; எழுந்து விழுந்து முட்டி மோதிப் போராடும் அலைகள் விம்ம ஓடி, திரை எழுந்து புயல்விசிப் போராடும் கடலிற் கலக்கிறது. இதே மாதிரிதான், நீண்ட (வார்) வில்லைத் தாங்கிய ஸ்ரீ ராமன் அதருமத்தை அழித்து, தருமத்தைக் காக்க இலங்கைப் போருக்கு வானரசேனைகளை நடத்தினன். அவையும் மலைப்பாறைகளையும் காட்டுமரங்களையும் உருட்டிப் பறித்துச் சேதுபந்தனம் செய்தன, பகைவர்மேல் மோதின; போர்வீரம் விம்மிக் கடல்நோக்கிச்

சென்று, இலங்கையில் நடந்த இரணக்கடலிற் கலந்தன. இத்தன்மையால் கோதாவரி யாறும் வானரசேனைக்கு உவமையாகும். (எ)

அ. வரைகளிற் பொருளின் மாண்பும், வனங்களிற் கலையின் மாண்பும்,
திரையெழுந் தோடும் ஆற்றிற் செவ்விய சொல்லின் மாண்பும்,
கரையிலா வுயிரின் போக்கிற் கலந்திடும் பண்புங் கொண்டே
உரைமிகும் ஐந்தால் வேத வுருவென விளங்கிற் றம்மா!

பெரியோர்களால் அடிக்கடி சிறப்பித்துச் சொல்லப்படும் (உரைமிகும்) பஞ்சவடி (ஐந்தால்) வேதவடிவாக விளங்கியது: அதன் அருகே சூழும் மலைகளில் வேதத்தின் பொருளான அசலாத்மா விளங்கியது. அதன் மலர்வனங்கள் பலவகை அழகும் அருள் மணமும் கொண்டு, வேதத்தின் விரிவான கலைகளைப் போன்றன. ஆவேசத்திரைகள் எழுந்து தங்கு தடையில்லாமல் ஓடும் ஆற்றில், அருளெழுச்சியால் பொங்கிப் பொசிந்தோடும் செம்மையான கவிவாக்கின் பெருமை நிலவியது. ஆறு எல்லையற்ற உயிர்களின் இயல்பிற் கலந்துள்ளது. அதன் இயற்கைக்காட்சி எத்தனையோ ஆன்மாக்களுக்குச் சாந்தமளித்திருக்கிறது. வேதவாக்கும் மாந்தர் இயல்பிற் கலந்து வாழ்வை இயக்குகிறது. ஆதலால் பஞ்சவடியும் வேதவடிவேபோலும். வேதக்கலைகளின் பிறப்பிடமும் இத்தகைய சாந்தமான கானகமேயாகும். (அ)

கூ. போட்டிபொ ருமை கோபம் போர் செருக்கோங்கி நெஞ்சை
வாட்டிடும் உலகை நீத்து வஞ்சமில் நதியும், புள்ளும்,
பாட்டிசை வனத்திற் பாலும் பழங்களுந் துய்த்து மேலோர்,
நாட்டிசை யோங்க நல்ல கலைகளை நல்கி னரே!

அரசியல் உலகம் போட்டி, பொருமை, கோபம், போர், செருக்கு - இவை மிகுந்து அமைதியைக் கெடுத்து, மனிதர் நெஞ்சை வாட்டும். அதைத் துறந்து, வஞ்சமில்லாத ஆறும், பறவையும் பாட்டுப்பாடும் தபோவனங்களில், பசுவின் பாலும், இயற்கையளிக்கும் கனிகளும் மிசைந்து, யோகம்புரிந்த பெரியோர்களே, நமது நாட்டின் புகழோங்கும் உயர்ந்த, நன்மையான வேதம், சாத்திரம், அருங்கலைகள் எல்லாம் அருளினர். (கூ)

கo. திருவுறு மாந்த ருக்குச் செந்நெறி யிலகக் காட்டிப்
பருவநன் மழையைப் போலப் பயன்மிக விளைத்து, நாளுந்
தருமமுங் கலையுந் தந்த தபோவன முனிவ ருள்ளம்
உருவுகொண் டொழுக்க முள்ள வுலகென விரிந்த தம்மா!

தபோவனத்தில் யோகஞ்செய்து இயற்கைவாழ்வும், சுத்தான்மசித்தியும் பெற்ற மூனிவர் உள்ளம், எண்ணரிய அறநூல்களையும், கலைநூல்களையும் அளித்தது. அந்த உள்ளமே, அன்புத்திருவுடைய மனிதருக்குச் செம்மையான சுத்த சன்மார்க்கத்தைத் தெளிவாகக் காட்டியது. அதுவே, தகுந்தபருவத்தில் பெய்த பெருமழையைப்போல, மாந்தர் வாழ்வில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பயன்களையும் விளைவேற்றியது. அதுவே, எந்நாளும் நாட்டிற்குச் சத்திய தருமத்தையும், ஆன்மிக இலௌகிகக் கலைகளையும் தந்தது. அதுவே, நல்லொழுக்கங்கொண்ட உலகாக உருக்கொண்டு விரிந்து விளங்குகிறது. (கo)

கக. இத்தகை வனத்தி னூடே, யியற்கையின் அழகிற் சொக்கி,
சித்திமான் அரிய காட்சி திசைதொறு மினிது காட்ட,
சத்திய மைந்த னுக்குச் சாதுக்கள் வரவு கூற,
சுத்தனும் வணக்க மாக முனிவரைத் தொழுது சென்ருன்.

பஞ்சவடி வனங்கத்தக்க புண்ணிய முனிவர் வனம். அதன் இயற்கையழகில் சுத்தனுள்ளம் சொக்கி இலயித்தது. சித்திமான் எத்திசையிலும் இலகும் அரிய கண்காட்சிகளையும், முனிவர் ஆசிரமங்களையும் இனிமையாக வருணித்துக் காட்டினுன். பர்ணசாலை கட்டி வாழும் சாதுக்கள், சத்தியராஜன் மைந்தனை மகிழ்வுடன் நல்வரவு கூறி, ஏற்றுப் போற்றினர். சுத்தன் வணங்கத்தக்கவரையும் கோயில்களையும் வணங்கி, பயபக்தியுடன் பஞ்சவடியினூடு சென்ருன். (கக)

கஉ. எழிலுறும் இயற்கை யன்னை, யினமலர் நகை குலுங்க,
கழிபெரும் உவகை தூண்டக் கானமா வரவு கூற,
பொழிலுறு கனியு திர்த்துப் புள்ளினந் தென்ற லோடும்
வழிநடைப் பாட்டொ லிக்க வரதனும் வழிந டந்தான்.

சோபையுள்ள இயற்கையன்னை (பிரகிருதி தேவி) பலவகையான, பலநிறமான மலர்கள் மூலம் புன்னகை பூரித்தாள். காட்டிலுள்ள மான், மாடு, யானை முதலிய விலங்கினங்கள், 'நமது நாட் டிளவரசன் வந்தான்' என்று மிக்க பெருமகிழ்வால் (கழிபெரும் உவகை) தூண்டப்பெற்றுத் துள்ளிவந்து வரவேற்றன! பறவையினங்கள் சோலைக் கனிகளை உதிர்த்தளித்து, தென்றலைச் சுருதியாகக் கொண்டு வழிநடைப் பாட்டு (Marching Song) பாடின. இந்த இயற்கையான வரவேற்புகளை மகிழ்ந்தேற்று, சுத்தன் காட்டுவழியே நடந்தான், (கஉ)

கங. மாரத வீரர் முன்னே வழியினைத் துலக்கிச் செல்லத்
தேர்பரி கரிகள் சூழத் திருநெறி முனிவர் கூடி
ஆரணங் கூறி வாழ்த்தி, யமைதியாங் குடிலில் ஏற்கப்
பாரணங் கீன்ற தூய பாக்கியன் இனிது சென்ருன்.

அது மகாராஷ்டிர தேசமாகையால், மகராஷ்டிர மன்னன் தன் வீரரைப் பாதுகாவலுக்காக அனுப்பினுன். அவர்கள் முன்னே வழிதுலக்கிச் சென்றனர். (அவ்விடங்களில் கலியன் ஒற்றரும், கொலையாளிகளும் உலாவியமையால் தகுந்த படைக்காவலுடன் சுத்தன் சென்ருன்.) தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படைகள் சுற்றிலும் சூழ்ந்து பகைவர் வராமற் பாதுகாத்துச் சென்றன. ஆங்காங்கே முனிவரின் சாந்தமான பர்ணசாலைகள் இருந்தன. அவற்றில் தெய்வக்கனலான மகாகுண்டலி எழுந்து பொலிய, சுடச்சுடரோற்ற தவச்சுடர்கள் விளங்கினர். அவர்கள் வேதகானத்துடன் வாழ்த்தி, சுத்தனை வரவேற்றுத் தம் சாந்தக்குடில்களில் உபசரித்தனர். இவ்வாறு புவிமகள்பெற்ற பரிசுத்தமான, (*அஷ்டைசுவரியங்களும் பொருந்திய) செல்வன் (பாக்கியன்) இனிது முன் சென்ருன். (கங)

சாந்த முனிவர் ஆசிரமம்

கச. கலகலப் பாகப் புட்கள் கனிவிருந் துண்டு பாடிக்
குலம்வளர் குஞ்சைக் கொஞ்சிக் கூடுகள் கட்டி வாழும்;
கலையினங் கட்டி லாத கன்றினத் துடனே யாடும்,
இலையினக் குடில்கள் காணும் சோலையொன் றெதிரே கண்டான்.

---

* அஷ்டைசுவரியமாவன: அரசு, மக்கள், சுற்றம், பொன், மணி, தானியம், வாகனம், தொண்டர்,

சுத்தன், முனிவர் ஆசிரமங்களைப் பார்த்துச் செல்லும்போது, அழகான ஒரு சோலை எதிரே விளங்கக் கண்டான். அதன் மரங்களில் புட்கள் கூடுகட்டி, குஞ்சுபொரித்து, குஞ்சுகளை இனிது கொஞ்சி, மரங்கள் தரும் கனிவிருந்துண்டு, இறைவனைப் பாடி எல்லாம் கலகலப்பாகச் சேர்ந்து வாழ்ந்தன. அங்கே பசுங்கன்றுகள் கட்டப்படவில்லை; எதற்கும் கட்டில்லை. கன்றுகள் தாய்ப்பாலை வேண்டுமட்டும் குடித்துச் சுயேச்சையாக விளையாடின. அவற்றுடன் கலைமான்களும் துள்ளிக்குதித்து விளையாடின. இக்காட்சிகளுக்கிடையே புல், ஓலை முதலிய பலவகை இலைகளால் அமைந்த பர்ணசாலைகள் விளங்கின. (கச)

கரு. ஆலுடன் வேம்பும் கூடி யாக்கிய நிழலிற் காணும்
வேலுடன் அமைந்த கூரை வீட்டினுள் வீற்றி ருக்கும்,
சால்புடை அந்த ணாளன் சாந்தமா முனிவன்; அன்னோன்
கால்படு துசி யாமோ கணக்கிலா நூற்கு மாமே!

இந்தச் சோலையில் பல வகை மரங்கள் உள்ளன. அவற்றுள் அதோ ஆலமரமும் வேப்பமரமும் கூடியமைந்த நிழலில், மூங்கிலாலும் (வேல்) கீற்றுகளாலும் அமைந்த கூரை வீடு காண்கிறது, அதனுள் அந்தணமாதவ ரொருவர் வீற்றிருக்கிறார். அவரே சாந்தமா முனிவர். அவர் கால்தூசி பட்டதும் சுத்தான்மஞான உதிக்கும். உலகிலுள்ள எண்ணில்லாத புத்தக அடுக்குகளெல்லாம் அதற்குச் சமான மாகா. (கரு)

கசு. உளங்குளிர் காட்சி யாளன், ஒருமையி லூன்றி நாளும்,
வளங்கொளுந் தவத்தின் மிக்கோன், வாய்மையே வடிவ மானோன்,
விளம்பர மெதுவு மின்றி வியன்செயல் பலவுஞ் செய்தோன்,
இளம்பொலி வுடைய மூத்தோன் இருடிகட் கிறைவ னவான்.

சாந்தமாமுனிவர் காண்போர் உள்ளத்தைக் கவரும் இனிய காட்சியாளர். உள்ள மடங்கி ஏகாக்கிரத்தில் (ஒருமையில்) நிலைத்து ஒவ்வொருநாளும், ஸ்வரூபதியானத்திலேயே இலயித்து வளர்க்கும் தவசக்திக்கனலில் பெரியவர். அவர் கண்டதும் சத்துப்பொருளான உண்மை; விண்டதும் அதுவே. அவர் சத்தியமே உருவான யோகி. இவ்வளவு பெருமை யிருந்தும், அவர் மிகமிக அடக்கமானவர். தம் பெயர் பரவக்கூட நினைக்காமல், எத்தகைய விளம்பரமும் வெளிப்படுத்தமில்லாமல், அவர் உலகிற்கு உபகாரமான பல அதிசயங்களைச் செய்திருக்கிறார். வயதில் மிகவும் மூத்தவர்; எனினும், இன்னும் இளம்பொலிவுடையவர்; காயசித்தி பெற்றவர். அவரே இந்தப் பஞ்சவடியில் தவம்புரியும் ரிஷிகணங்களுக்குத் தலைவர். (கசு)

கஎ. முன்ரகு ராமன் பின்னே இராமதா சனைய சித்தர்,
மன்னிநின் றரிய துய மாதவம் புரிந்த சூழல்.
இன்னவன் வாழு மிந்த நிலயமே யென்னின் வேறு
பன்னுவ தென்னே யென்று பழுதிலார் பரிந்து சொன்னார்.

முற்காலம் இரகுவம்சச்சுடரான ஸ்ரீ ராமன் வசித்ததும், பிற்காலம் சமர்த்த குரு இராமதாஸ் போன்ற முனிவர் நிலைத்திருந்து செய்தற்கரிய தூய தவம் புரிந்ததும், இதோ இந்தச் சாந்தமுனிவர் உறையும் இதே நிலயந்தான் என்றால், இனி, இதன்பெருமையை அதிகம் சொல்ல வேண்டா, என்று மாசற்ற தண்டகாரண்ய முனிவர்கள் அன்புடன் சொன்னார்கள். (கஎ)

கஅ. '' பாக்கியம் பழுத்த '' தென்னப் பகரவும் புனித னுங்கே,
ஊக்கிய வுவகை யோடும், உத்தமச் சீடர் ஏற்ருர்.
நோக்குயர் முனிவன் முன்னே, நுவலரு மின்ப வெள்ளந்
தேக்குறத் தொழுது நின்ருன், சித்தரி னுள்ளந் தேர்ந்தான்.

'இத்தகைய முனிவர் ஆசிரமத்தைக்காண என்ன தவம் செய்தேனே! என் பாக்கியம் இன்றேபேரின்பம் பழுத்தது' என்று சுத்தன் வியந்து மகிழ்ந்தான். அச் சமயம் சுத்தன் வரவை முனிவர் அறிந்து, சீடரை யனுப்பினர். உத்தமகுணங்கள் நிரம்பிய அச்சீடர், பெருமகிழ்வு தூண்ட (ஊக்க) ஓடிவந்து, சுத்தனையும் மந்திரியையும் வரவேற்று, உள்ளே நடத்திச்சென்று, முனிவர் சந்நிதானத்தில் நிறுத்தினர். சாந்தமுனிவரைக் கண்டான் சுத்தன்; சித்த புருஷர்களின் உள்ளத்தை நன்ருக அறிந்தவன் ஆதலால், உயர்ந்த தெய்விக நோக்கங்கொண்டு வாழும் அந்த முனிவர் முன்னே, சொல்லரிய பேரின்ப வெள்ளம் பொங்கி நிறைய (தேக்குற) வணங்கி, பயபக்தியுடன் நின்ருன். (கஅ)

சுத்தன்

கசு. '' உலகெலாங் கோயி லாகி, உயிரெலா மேனியாகிப்
பலபல தோற்ற மெல்லாந் தன்னருட் பான்மை யாகி,
அலைமனம் அடங்கி நிற்கும், அமைதியில் ஒருமை யாகி,
நிலைபெய ராத வுண்மை நேயனே போற்றி போற்றி!

சுத்தன் *இவ்வாறு தோத்திரம் பாடினன்: "உண்மைப் பொருள் ஒன்று. அது தன்னிலையினின்றும் பெயராமல், இயல்பு திரியாமல், இருந்தபடி யிருக்கிறது. கண்டபடி அலையும் மனம் அடங்கி உள்ளே நிலைநிற்கும் சமாதியில் அவ்வுண்மைப் பொருள் ஒருமை யாகி, ஏகரசமாகி நம்முள் நாமாயிருக்கிறது. உலகமெல்லாம் அது நிறைந்த கோயிலே. எல்லா உயிர்த்தொகுதியும் அதன் யாக்கையே. உலகிற் காணும் நாஞபாவனைகளும், காட்சி களும் அதன் அருள் ஒன்றே பலவாகக் காணும் தோற்றங்களே. அப்படிப்பட்ட சுத்த சத்தியப்பொருளையே நேசிக்கும் சித்தரே உமது பெருமையைப் போற்றி செய்கிறேன். (கசு)

உ௦. " ஆய்வுறுங் கலைக ளெல்லாம் அருக்கன்முன் மீன்கள் என்னத்
தேய்வுறச் சுடரும் ஞானச் செங்கதிர்ப் பிழம்பே! என்றன்
வாய்மனங் கடந்த மோன வானமே! தானே தானய்த்
தோய்வற வுலகில் ஐந்து தொழில்புரி யருளே போற்றி!''

உலகில் பல மொழியினர் ஆராய்ந்து செய்த புத்தகக் கலைகளெல்லாம் சூரியன் வந்த பிறகு நட்சத்திரக்கூட்டம் தேய்ந்து மங்கி மறைவதுபோலவே, உமது திருமுன் வாயடங்கி மறையும். அத்தகைய ஞானச்செங்கதிர் பரப்பும் சூரியஜோதியே, எனது வாய்மனம் கடந்த, (சொல்லுக்கும் நினைப்பிற்கும் எட்டா) பரமமௌன துரியாகாசமே, தானேதானக, எதிலும் பற்றில்லாமல் (தோய்வற) உலகில் ஐந்து தொழில்களையும் புரியும் திருவருளே போற்றி!" (உ௦)

சாந்த முனிவன்

உக. மாசிலான் போற்றிட மகிழ்ந்து மாமுனி
"காசினிக் கருட்சுடர் காட்ட வந்தனை,
தேசுற வாழ்கநீ தெய்வ மைந்த'' வென்
ருசிகள் கூறினன், அன்பு பொங்கியே!

---

* முதலில் பொருளையும், பின்பு அருளையும் முனிவடிவாக வணங்குகிருன்.

சுத்தன் மேற்சொன்னவாறு போற்றிப் பணிய, மனமுவந்தேற்ற சாந்தமுனிவர், "தெய்வ மைந்தனே. நீ இந்த உலகிற்கே அருட்சோதியை விளக்கி உயிர்களை உய்விக்க வந்தாய். நீ வெற்றியும் புகழும் பொலிந்து வாழ்க !" என்று ஆசிர்வாதங்கள் செய்தார். (உக)

உஉ. " வந்தனை தசரத ராமன் வந்தநாள் ;
சிந்தனைக் கினிய நீ ; செகத்தின் மிக்கநீ,
முந்தவன் கார்முகம் முடித்த செய்கையை
இந்தநாள் யோகத்தால் இயற்றுவாய் " என்றான்.

"சுத்த, இன்று தசரதராமன் பிறந்தநாள், ஸ்ரீ ராமஜயந்தீ, சுபதினம் ! நீயும் வந்தாய். நீ நினைப்பதற்கு இனியவன், உலகிலும் பெரியவன். முன்னே அந்த இராமன் கோதண்டம் இலங்கை யரக்கரை முடித்தது. இந்தநாள் மீண்டும் அரக்கர்கள் எழுந்து அக்கிரமம் செய்கிறார்கள். அவர்களை நீ யோகபலத்தால் அடக்குவாய். முன்னே இராமன் வில்லாற் செய்ததை நீ யோகசித்தியாலே செய்வாய்" என்றார் முனிவர். (உஉ)

உங. " கலியனென் றொருபெருங் காதகப் பதர்,
அலசுறும் அரக்கரை அதர்ம வீரரைப்
புலிநரிக் கூட்டம்போற் புகுத்தி யிங்குமே
கலகங்கள் செய்வதைக் காணுவா " யென்றான்.

"இந்தக் காலத்திலும் அசுரர்கள் கிளம்பி யிருக்கிறார்கள். கலியன் என்னும் ஒரு பெரிய பாதகன், உனது மரபில் தோன்றிய பதர், அளவில்லாத தானவரை, அதர்மமே புரிவதில் விருதுபெற்ற கொடியரை, புலிநரிக் கூட்டம்போல, இந்தத் தவவனத்திலும் புகுத்தி, ஓயாக் கலகங்கள் செய்கிறான். அதை நீயே காணுவாய்" என்றார். (உங)

உச. " செருக்குடன் பீரங்கித் திமிரும் கொண்டவன்,
உருக்கினால் உலகினை வெல்லும் உள்ளத்தான் ;
கறுக்கொண்டு மாந்தரைக் கருவ றுத்திட
உருக்கொண்ட மாவலிக் குடந்தை யானவன்.

" இக்கலியன் தானவத்தீவில் அசுரராஜ்யத்தை நாட்டிய மாவலிராட்சஸனுக்கு உடந்தை, கூட்டு, கையாள் ! அந்த மாவலி தான் என்னும் செருக்கு மிக்கவன் ; பீரங்கிப் படைகள் உள்ளமையால், தனக்குச் சமானமில்லை என்னும் திமிர்பிடித்தவன் ; உருக்கினாலான வாள், துப்பாக்கி, பீரங்கி, குண்டு, நாசகாரிகள் முதலிய போர்க்கருவிகளால் உலகை வெல்லும் உள்ளங்கொண்டவன் ; முன்னே இரணியன், இராவணன், கம்ஸன், துரியோதனன் முதலிய அரக்கரை அழித்த மனிதர்மரபையே கறுக்கொண்டு கருவுடன், வேருடன் அழிக்க உருவெடுத்தவன். (உச)

உரு. " இன்றுநீ யிலகிடு மிவ்வி டத்திலே,
அன்றிருந் தரக்கரை யழித்த ராகவன்,
ஒன்றியுன் னுளத்தினில் ஊன்றி நல்லறம்,
வென்றிட வருள் " கென விரதன் கூறினன்.

" சுத்தனே, இன்று நீ விளங்கும் இதே நிலத்திலேதான் அன்று ஸ்ரீராமன் இருந்து கரதூஷணாதி இராட்சஸரை யழித்தான். அவன் உன் உள்ளத்தில் ஒன்றி, ஐக்கியப்பட்டு நிலைத்திருந்து, உலகில் நலத்திற்குக் காரணமான அறம் வெற்றிபெற, அருள்புரியட்டும் !" என்று சாந்தமுனிவர் ஆசிகூறினார். (உரு)

சுத்தன்

உசு. முனியுரை வாசகம் முற்றுங் கேட்டு, நம்
இனியனும் இனிவரும் வினையை யெண்ணியே
" கனிதவ முற்றிய கரும வீரனைப்
புனிதவுன் னாசியாற் பொலிவன் " என்றனன்,

இனிமையான குணங்களையுடைய நம் சுத்தன், சாந்தமுனிவர் வார்த்தைகளை முற்றிலும் கேட்டு, இனி வருங்காலத்தில் நடக்கும் சம்பவங்கள், அவற்றைச் சமாளிக்கத் தான் செய்யப்போகும் காரியம் எல்லாம் சிந்தித்து, "பரிசுத்தமான முனிவரே, உமது ஆசியால், பக்குவமான தவசித்திபெற்று, உலகில் தவமும், தருமமும் வாழவும் அதருமம் அழியவும் எல்லையற்ற அருட்பணிகளைச் செய்யும் கருமவீரனகப் பொலிவேன்; என்முன். (உசு)

உஎ. " தூண்டிய கருமமுந் துணிந்த தைச்செய
வேண்டிய தருமமும் விளங்க வூக்கிடும்
மாண்டகு ராமனின் மாண மெய்க்கதை
ஈண்டெனக் கிசைத்திடின் இனிய தா "மென்றான்.

"முனிவ, மாண்புமிக்க வீரனை ஸ்ரீராமனின் பெருமைபொருந்திய புண்ணியக் கதையை, இங்கே எனக்கு உமது திருவாக்கினலேயே இசைத்தால், மிகவுல் நல்ல பலனளிக்கும். அது நான் உலகில் வரத் தூண்டிய கருமத்தையும், அதைத் துணிந்து நிறைவேற்ற வேண்டிய தருமபலத்தையும் நன்கு விளக்கி என்னை ஊக்கிடும், உற்சாகப்படுத்தும்" என்றான். (உஎ)

சாந்த முனிவர்

உஅ. " அன்னதே யின்றெனக் கமைந்த பாக்கியம்;
மன்னனும் அமைச்சனு மனமு வந்துடன்
என்னுடை யெளியநல் விருந்தை யேற் "கெனும்
முன்னரே யொருதிரு முகம்வந் தேற்றதால்.

சாந்தமுனிவர் மகிழ்வுடன், "இராமர் வரலாறு சொல்வதே இன்று எனக்கு ஏற்பட்ட நல்ல பேறு. முன்னே, அரிய விருந்தினராகிய மன்னனும் மந்திரியும் உடனே மனமகிழ்ந்து, என்னுடைய எளிய விருந்தை அங்கீகரிக்கவேண்டும்." என்று முனிவன் சொல்லுமுன்பே, விருந்தெல்லாம் தயாராக்கி, அங்கே ஒரு திருமுகச் செல்வி வந்து அவர்களை ஏற்று உபசரித்தாள். (உஅ)

உகூ. மங்கலப் புன்னகை மலர்ந்த பொன்முகம்,
பங்கய வேல்விழி, பவள மூரல்வாய்,
பொங்கிள மயில், குயில், அன்னம் போன்றவள்
புங்கவன் அருளினிற் பொலியுங் கௌரியே.

அத் திருமகள், மங்கலமான புன்னகை மலர்ந்து விளங்கும் பொன்போன்ற அழகிய முகத்தினள்; தாமரைபோன்ற விசாலமும் வேல்போன்ற கூரியபார்வையுமுடைய கண்ணினள்; பவளத்தில் முத்துப் பதித்ததுபோன்ற புன்னகைச் செவ்வாயுடையாள்; இன்பம் பொங்கி ஆடும் மயில்போன்ற சாயலாள்; குயில்போன்ற குரலாள்; அன்னம்போன்ற

டையாள். அவளே இந்த முனிபுங்கவன் அருளால் எல்லாக் கலைகளும் தேர்ந்து சாதனங்கள் முற்றி யோகக்கனலாற் பொலியும் அன்புத் திருமகள்; கௌரி என்னும் பெயருடையாள். (௨௯)

௩௦. நீண்டநாள் அறிந்தவன் போல நின்மலன்
காண்டலுங் கருத்தினைக் கவர்ந்த கண்ணினுள்,
ஈண்டிய வுவகையள், இனிய தேனுபோல்
வேண்டிய வேண்டுமுன் விரும்பி யீந்தனள்.

சுத்தன் இப்புனிதவதியை நீண்டநாள் பழகியறிந்தவன்போற் பார்த்தான். அப்பார்வையை அவளும் அறிந்து அவனைப் பார்த்தாள். அவள் கண்பார்வை சுத்தன் கருத்தைக் கவர்ந்தது. அச்செல்வி நெருங்கிய (ஈண்டிய) மனத்துடன் மனம் கூடிய மகிழ்வு கொண்டனள்; இனிமையாக, காமதேனு (தேனு)போல், விருந்தினர் *வேண்டிய பண்டங்களை, அவர்கள் வேண்டுமுன்பே குறிப்பறிந்து விருப்பமுடன் தந்தாள். (௩௦)

௩௧. முக்கனி யமுதினை, முதிர்ப ருப்பினைப்
பக்குவ மாக்கிய பச்சி லைகளை
அக்கணங் கறந்தநல் லாவின் பாலினை
இக்குவின் சாற்றுடன் இனிது தந்தனள்.

அத்திருமகள், விருந்தினருக்கு வாழை, மா, பலா ஆகிய முக்கனிகளால் ஆன அமிர்தம், நன்ருக வளர்ந்த கடலை தேங்காய் முதலிய பருப்பு வகைகள், அப்போதே கறந்த நல்ல பசுவின் பால், பக்குவமாக்கிய யோக மூலிகைகள், கரும்பின் சாறு (இக்கு)-இவற்றை இனிதுபடைத்தாள். (௩௧)

௩௨. அமுதளி யமுதினை அமுது செய்தவர்,
குமுதநாண் மலர்நகை கொண்டு சென்றதும்,
அமைதியாய் அவரவர் அலுவல் ஆனபின்
சமரச முனிவனைச் சார்ந்து கேட்டனர்.

அமுதம்போன்ற அச்செல்வி, தன் அமுதக் கரத்தால் அளித்த அமுதமான விருந்தை உட்கொண்டு, சுத்தன், மந்திரி, முனிவர், சீடர் அனைவரும், அவளது நாணம் நிறைந்த குமுதவாய் முத்துநகையை ஏற்றுச் சென்று, அவரவர் இடத்தில் அமைதியாக அமர்ந்து, தத்தமக்குரிய காரியங்களைக் கவனித்தனர்; பிறகு எல்லாச் சமயங்களுக்கும் சமரசச்சுடர் போன்ற முனிவரையடைந்து, பணிந்து, இராமனது கதையைக்கேட்டனர். (௩௨)

பஞ்சவடிப் படலம் முற்றிற்று.

---

* சுத்தன் வேண்டியது அவள் உள்ளன்பே...அதை அவன் வேண்டுமுன்பே விரும்பித் தந்தாள். இருவர் உள்ளமும் கண்டதும் ஒன்றுபட்டன.

கஅ. இராமாயணப் படலம்

க. கதைதரு முனிவன், செஞ்சொற் கவிக்கலை தந்த கம்பன்,
விதவித நீதி சொல்லும் வித்தகத் துளசி தாசன்,
மதிமிகு புலவர், நாட்டு மக்களெல் லாரும் போற்றித்
துதிமிகும் இராம நாமம் சொல்லுவார் வெல்லு வாரே.

உலகிற்குச் சிறந்த கதையைத் தந்த வான்மீகி முனிவர், செவ்விய கவிதைக்கலை யளித்த கம்பமுனிவர், விதவிதமான நீதிகளைப் புகட்டும் இந்திப்புலவனான துளசிதாசர் ஆகிய அறிவாராய்ச்சியிற் சிறந்த இம்மூன்று மதிவாணரானவித்துவான்கள், நமதுதேசத்தின் பொதுஜனங்கள் ஆகிய அனைவரும் இராமன் புகழைப் போற்றுகின்றனர். வான்மீகி, கம்பர், துளசிதாசர் ஆகிய மூன்று மகாகவிகளும் இராமனுக்கே தமது கலைமுடியைச் சூட்டினர். அதனால் இராமன் எங்கும் துதிக்கப் பெற்றான். இராமநாமத்தைச் சொல்பவர் தம் காரியங்களில் வெற்றிபெறுவார்கள். (க)

உ. நிலமகள் இயற்றி வந்த நீண்டபுண் ணியங்க ளெல்லாம்,
நலமுறு மிராம னென்னு நாமத்தால் அவதரித்து,
கலகமுங் காமநோயுங் கடுந்தவச் செருக்கும் பூண்டார்
பலமதை நலித் தறத்தைப் பாலித்த சரிதை கேளீர்!

பூமாதேவி நீண்டகாலம் செய்துவந்த புண்ணியங்களெல்லாம், நன்மையே வடிவான இராமன் என்னும் நாமத்தைத் தாங்கி, அவதரித்தது; கடுந்தவம் செய்து பெற்ற வரங்களால் செருக்குற்று, சாதுக்களைத் துன்புறுத்தி உலகில் போரும், தொல்லையும், காமநோயால் கற்பழிவும், பலாத்காரமும் செய்துவந்த கொடிய அரக்கரின் அதரும பலத்தை அது நலித்து, அறத்தைக் காத்த கதையைக் கேளுங்கள் : (உ)

இராவணன்

ங. செவ்விய கேள்வியாளன், சிவனிடம் வரங்கள் பெற்றோன்,
ஒவ்வருந் தவத்தின் மிக்கான், உயர்மலை பெயர்க்க வல்லான்,
அவ்வியம் காமங் கோபம் அகந்தையின் வடிவ மானோன்,
இவ்வுல கதிரவைத்த இராவணன், இலங்கைக் கோமான்.

இந்த உலகெல்லாம் அஞ்சிநடுங்கி அதிரச்செய்யவே அசுர பலங்கொண்டு, இராவணன் என்பான் இலங்காபுரியை அரசாண்டான். அவன் வேதங்கள் கற்றவன்; கேட்கத்தக்க வித்தைகளெல்லாம் கேட்டுத் தேர்ந்தவன்; ஒப்பில்லாத கடுந்தவம் புரிந்தவன்; உயர்ந்த மலையையும் பெயர்க்கும் பலசாலி, பரமசிவ பக்தன்; சிவனிடம் நீண்ட ஆயுளும் நிகரில்லாத ஆயுதமும் பெற்றவன். ஆனால், அவன் மனம் தீமையின் கொள்கலம். அவன் பொறாமை, காமம், கோபம், அகங்காரம்—இவற்றின் வடிவமானோன். இத்தீமைகள் அவன் பெற்ற வரங்களையெல்லாம் கெடுத்தன. (ங)

ச. கைகசி விச்சிர வசுவைக் காமுற
எய்திய மூத்தவன், இவன்பின் வந்தவர்—
மெய்ம்மனக் கும்பகன், விரகச் சூர்ப்பனை
செய்யவி பிடணன் சிறந்த சிந்தையான்.

சுமாலியின் மகள் கைகசி, விச்ரவசுமுனிவரை அந்தியிற் கூடியதால் அசுரமைந்தர் பிறந்தனர். அவருள் மூத்தவனே இராவணன். அவனுக்குத் தம்பி கும்பகர்ணன் (கும்பகன்). இவன் அண்ணனுக்கு உண்மையாயிருந்தவன்; ஆனல். அவன் செய்த பிழைகளையும் உண்மையாகக் கண்டிப்பவன். அவன் தங்கை காமநோய்மிக்க சூர்ப்பணகை, (சூர்ப்பணை). அவள் தம்பி செய்ய ஒழுக்கமும் சிந்தையில் சுத்தமும் மிக்க விபீஷணன் ஆவான். (சு)

ரு. குணத்திலுந் தவத்திலுங் கொடிய கொள்கையர்,
நிணத்திமிர் பிடித்தவர் நிருத ராயினர்
இணக்கமும் வணக்கமு மெய்தி, யிந்நிலந்
துணுக்குறக் கிளர்ந்தனன் சூழ்ச்சி மிக்கவன்.

பிறரை மடக்கி யாளும் சூழ்ச்சியிற் சிறந்த இராவணன், தம்பியருடனே, அரக்கர் படைகளையும் கூட்டினன். அரக்கர் குணத்தில் கொடியர், பிறரைத் துன்புறுத்தும் கொள்கையிற் கொடியர்; தவத்திலும் கொடியர்; கடுந்தவங்களால் வரங்கள் பெற்றவர்; சதைக் கொழுப்பேறிய விலங்குவலியர்; அதர்மமே புரியும் அசுரர், நிருதர். அவர்களுடைய இணக்கத்தையும் பணிவையும் பெற்றே இராவணன் இந்த உலகம் பயப்படும்படி (துணுக்குற), கிளர்ந்தெழுந்து திக்விஜயம் செய்தான். (ரு)

சா. கலைமிகக் கற்றவன், சாம கானமும்;
தலையினைத் தந்தும்வெந் தவமி யற்றினேன்;
மலையினைச் சிலைசெய்த மங்கை பாகன்பால்,
அலைவறு மாயுளும் வாளும் ஆர்ந்தனன்.

இராவணன் வேதக்கலைகளை நன்ருகக் கற்றவன்; சாம வேதத்தை யாழுடன் கானம் செய்வதில் சமர்த்தனுவான்; தனது தலையை அறுத்து, நாடிகளையிணைத்து வீணையாக்கி, சாமகானம் செய்தவன்; அப்படி அகோரமான தவம் செய்து, மேருவை வில்லாக வளைத்த பார்வதிபாகனை பரம சிவனிடம், நீண்ட ஆயுளும், வெற்றி மிக்க சந்திர வாளும் பெற்ருன் (ஆர்ந்தனன்). (சா)

எ. தேவரு மாந்தருஞ் செய்ய தூயரும்,
யாவரும் வெருவிடத் திக்கின் யானையும்,
சோவுறத் துன்பமே துணிந்து செய்தனன்,
தாவுறு மனத்தினைத் தடுக்க லாற்றிலான்.

முக்குணப் போர்களிலும், காமக்குரோதாதிகளிலும் துள்ளித்திரியும் மனத்தை அடக்க முடியாத இராவணன், மண்வெறியும் அதிகாரத்திமிரும் பற்றி, தேவரும், மனிதரும், நல்லொழுக்கம் மிக்க தூய முனிவரும், மற்றும் யாவரும் பயப்படும்படியாகவும், திசையானைகளும் மயங்கிச் சோரும்படியாகவும் துன்பமே துணிந்து செய்தான். (எ)

அ. வன்பகை விளைப்பதும், ஒருவன் வாழுவே
மன்பதை பதைத்திட வதைகள் செய்வதும்,
அன்பதை யறிந்தர சாள வேண்டிலார்
புன்பகை நெஞ்சினிற் போந்த போரன்ரே?

உலகில் ஒருவன் தலைவனாக வாழவே ஏராளமான படைகளைத் திரட்டி, அயலாருடன் வலிய பகை விளைப்பதும், மனிதசமுதாயம் பதைபதைத்து நடுங்கப் படுகொலைகள் செய்வதும் எதனால்? உலகம் அமைதியாக, சச்சரவில்லாமல் நடக்க ஒரேவழி அன்புதான். அந்த அன்பினை அறிந்து ஜனங்களை வசப்படுத்தி இனிமையாக அரசாள விரும்பாத, முடியாத கொடுங்கோல் அரக்கரின் புல்லிய பகைநெஞ்சில் புகுந்து கிளர்ந்த, போர்வெறியாலேதான் உலகில் இரத்தவெள்ளம் பெருகுகிறது. மனப்போரே இனப்போர்! அகப் போரே சகப் போர்! (அ)

கூ. நீதியும் இரக்கமும் நேர்மை யும்இலா,
வேதியன், வேதத்தை விளம்பக் கற்றவன்,
பூதல மெங்குமே புகழ்கண் டின்புற
வாதனை யாகிய வழியைப் பற்றினன்.

இராவணன் வேதியனே. ஆனால், அவன் வேதத்தை மொந்தையுருப்போட்டுச் சொல்லவே கற்றான். அதன் பொருளறிந்து சாதனம் செய்தாலே பலனுண்டு. ஆசையாணவத்தை ஒழித்து, தானாகிய சுத்தான்மாவில் நிலைகொள்வதே வேதசாரம். அதையறியாமல், உலகமெல்லாம் தனது புகழை நிலைநாட்டி இன்புறவே, அன்புவழியை விட்டு எல்லாருக்கும் துன்பந்தரும் பலாத்காரவழியைப் பின்பற்றினான். (கூ)

கoo. கடக்கரும் இலங்கையைப் பாது காத்தபின்,
வடக்குறு தண்டக வனம் வரைக்குந்நன்
அடக்குறு முறைகளுக் கடிமை செய்தனன்,
விடக்கரும் பாம்பெனும் வெய்யர் சேனையால்.

இராவணன் சேர்த்த அசுரசேனைகள் விஷங்கக்கி உயிர்களைக்கொல்லும் கரும்பாம்பு போன்றவை. அவற்றைக்கொண்டு எவரும் தாண்டமுடியாத கடல்சூழும் இலங்கையை அவன் நன்றாகப் பாதுகாத்தான்; பிறகு, வடக்கே சென்று விந்தியமலைக்குக் கீழேயுள்ள தென்னாடுமுழுதையும், தண்டகாரண்யம் வரைக்கும், தனது கடுமையான அடக்குமுறை ஆட்சிக்கு அடிமை செய்தான். (க)

கக. காற்றிற்குங் கடலுக்குங் ககன ராசிக்குங்
கூற்றிற்குங் கட்டளை குறிக்க முன்னின்றான்,
நாற்றிசை மனிதரை நரரென் றெள்ளினான்,
போற்றிய பொருவலி யரக்கர் போற்றவே.

அவன் போற்றிய கொடியர் எப்போதும் போராடும் பலத்தைப் பெருக்கிச் சண்டைக்குக் கத்திதீட்டும் அரக்கரே. அவர்கள் போற்றிப் புகழும்படி, இராவணன் கட்டற்ற காற்றிற்கும், கடலுக்கும், வானத்தில் உலாவும் நட்சத்திரராசிகளுக்கும், எவரும் வெல்ல முடியாத எமனுக்குங்கூடக் கட்டளையிட்டுத் தன் இச்சைப்படி நடக்க விரும்பி முன்னின்றான். அப்படிப்பட்டவன் மானிடரை மதிப்பானா? "சை, துச்ச நரமனிதர்!" என்று நாலுதிசையிலும் வாழும் மனிதரை இகழ்ந்தான். (கக)

கஉ. கோபத்தைப் பெருக்கிய கொடிய வாழ்வினால்,
ஆபத்தைப் பெருக்கினன்; ஆன்ற சான்றவர்
சாபத்தைப் பெருக்கினன்; சதைச் செருக்கினாற்
பாபத்தைப் பெருக்கினான், பகை பெருக்கினான்.

சதைப்பலத்தால், மிருகபலத்தால். கருவமேறி, இராவணுசுரன் அட்டூழியங்கள் செய்து, பாபத்தைப் பெருக்கினுன் ; உலகெங்கும் பகைவரைப் பெருக்கினுன் ; முனிவரின் கோபத்தைப் பெருக்கினுன் ; கொடிய அடக்குமுறை வாழ்வால், தனக்கே ஆபத்தைப் பெருக்கினுன் ; மேலான பெரியோரின் சாபத்தைப் பெருக்கினுன். (கஉ)

கங. அதஞ்செயும் அரக்கனை யடக்கி வீழ்த்திட
நிதந்தவ முனிவரும் நிகரில் வீரரும்,
சுதந்தர வெழுந்தனர் ; கனலைப் போல்வளர்
சுதந்தர வுணர்ச்சியுந் தோல்வி காணுமோ ?

இவ்வாறு படைத்திமிரால் மக்களை அதஞ்செய்து, கொலையேதொழிலாக வாழும் இராவணுசுரனை அடக்கி வீழ்த்திடவே, தினமும் தவமுனிவர் முயன்றனர் ; இறைவனை வேண்டினர். நிகரில்லாத தென்னுட்டு வீரரும் சினங்கொண் டெழுந்தனர். மாந்தர் உள்ளத்தில் இயற்கையாகவே தீக்கொழுந்துபோல வளரும் சுதந்தர வுணர்ச்சி தோல்வியடைவதுண்டோ ? அது பொறுமையாக வென்றேதீரும். (கங)

கச. இடருறு முலகெலாம் "இனிச்செ யலிலோம்
கடவுளே வந்தெமைக் காப்ப துன்பரம்,
விடுதலை விடுதலை" என்று வீரிட்ட
கடுமையே கார்முகங் காட்டி வந்ததால்.

இவ்வாறு அசுரபயத்தால் துன்புறும் உலகம் எவ்வளவு முயன்றும் உய்திபெருமல் முடிவில், "இறைவனே, இனிச் செயலிலோம், மனிதமுயற்சியால் ஆனதெல்லாம் செய்தோம் இனி, நீயே அவதரித்து எம்மைக் காக்கவேண்டும். அஃது உன் பாரம், கடமை, பொறுப்பு. கடவுளே, அரக்கருக்கு அடிமையாக வாழோம், விடுதலை தா, விடுதலை தா!" என்று சுதந்தர தாகங்கொண்டு செய்த முறையீட்டின் தீவிரமே, ஆர்வமே (கடுமை)வில்லைத் (கார்முகம்) தாங்கி நீலமேகம்போன்ற முகத்தைக்காட்டிய இராமனுக அவதரித்து, அபயமளிக்க வந்தது ; கருணைபொழியும் கார்மேகம்போல வந்து மாந்தர் இன்புறச்செய்தது. (கார்முகம்-வில்; மேகம்போன்ற முகம், மேகம்போன்ற கருணைபொழியும் முகம்.) (கச)

இராமன் இளமை

கரு. மன்னுயிர் நன்மையே மகுடந் தாங்கிடுந்
தன்னுயிர் நலமெனுந் தசரதப் பெயர்
மன்னவன் மரபொளிர் மைந்தர் நால்வருள்,
முன்னவன் இராமனக் கருணை மூர்த்தியாம்.

மேற்சொன்ன கார்முகங் காட்டிவந்த கருணைமூர்த்தி யார் ? அவனே இராமன். மன்னுயிர்களின் நன்மையே, சேமமே, திருமுடிபுனைந்து அரசாளும் வாழ்வின் பயன் என்று நினைத்து நீதிசெலுத்தினுன் தசரதமன்னவன், இரகுவம்சன். அவன் வம்சம் வாழ நான்கு மணிப்பிள்ளைகள் பிறந்தனர். அவருள் மூத்தவனே (முன்னவன்) இராமன். (கரு)

கசு. ஈன்றனள் இராமனை யினிய கோசலை ;
ஈன்றனள் பரதனை யிளமென் கைகசி ;
ஈன்றனள் சுமித்திரை இலக்கு வனுடன்
சான்றவர் போற்றிடச் சத்து ருக்னனை.

அறிவுசான்ற முனிவர் போற்றிப்புகழ, இனிய குணாதிசயங்களுடைய தசரதனுடைய மூத்த மனைவியான கோசலையே இராமனைப் பெற்றாள். இளந்திருவுடைய மெல்லியள் கைகேசி பரதனைப் பெற்றாள். சுமித்திரை இலக்குமணன், சத்துருக்னன் ஆகிய இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். (கசு)

கஎ. குவலயம் வருந்திய கொடிய துன்பங்கள்,
கவலைகள் யாவையும் கதிர்முன் வெண்பனித்
திவலைக ளாயின. சேம மேயினி
நவிலுவ மென்றனர் நல்ல வீரரே.

இராமனும் அவன் தம்பியரும் பிறந்தமை நாடெங்கும் ஒரு புதிய நம்பிக்கையை உண்டாக்கியது. நன்மையே புரியும் ஞானவீரரும் கர்மவீரரும், "உலகம் பட்ட கொடிய துன்பங்களும், மனக்கவலைகளும், சூரிய கிரணங்களின்முன் வெண்பனித் திவலைகள்போல முற்றிலும் மறைந்தொழியும்; இனி நாம் உலகிற்கெல்லாம் சேமசமாசாரமே சொல்வோம்; அரக்கர் அழிவர், அறவோர் வாழ்வார்" என்றனர். (கஎ)

கஅ. வன்றவன் வரமுனி வன்பு லன்களை
வென்றவன், ஆத்தும வீரன், யோகத்தில்
ஒன்றிய வசிட்டனே, உயர்ந்த கல்வியை
நன்றிளஞ் சிறுவர்க்கு நல்கி னானரோ.

தசரதனுடைய குலகுரு வசிட்டன்; நீண்டகாலம் கடுந்தவம் புரிந்தவன்; வரம் பெற்ற முனிவன்; மெய்வாய்கண்மூக்குசெவி ஆகிய ஐந்து புலன்களையும் அடக்கி வென்றவன்; ஆன்மபலம் மிக்க ஞானவீரன்; எப்போதும் இதயான்மாவுடன் யோகத்தில் ஒன்றுபட்டு உட்குவிந்து வாழ்பவன். அத்தகைய வசிட்டமுனிவனே க்ஷத்திரியருக்குரிய வேதக் கல்வியும், கலையும், போர்க்கல்வியும் உயர்ந்தமுறையில் நன்றாக இளஞ்சிறுவருக்கு நல்கினான்; எனின், அவர்கள் பெற்ற திறமையைச் சொல்லவேண்டுவதில்லை. (கஅ)

கக. அன்றிளம் இராமன்கை அம்பும் வில்லுமாய்
நின்றனைக் கண்டவர், "நிருதர் யாவரும்
பொன்றினர்......பூமகள் புண்ணி யங்களே
வென்றன" என்றனர், "வென்றி வீரனால்."

வசிட்டனிடம் இராமன் வில்வித்தை கற்றான். அன்று பாலராமன் வில்லைப்பிடித்து அம்புவிட நின்ற மாதிரியைக் கண்டதுமே, அனைவரும், "இந்த வெற்றி வீரனால் அரக்கர் ஒழிந்தனர்; உலகன்னையின் புண்ணியங்களே வென்றன!" என்று ஆரவாரஞ் செய்தனர். (கக)

முனிவன் வேள்வி நிறைவேற்றல்

உ௦. அருங்கலை யகலமும், அறிவின் ஆழமும்,
ஒருங்குயர் ஒழுக்கமும், ஓங்கு மைந்தரைப்
பெருங்களிப் பெழுந்திடப் பேணுந் தந்தைபால்
வரந்தரு கௌசிகன் வந்து நின்றனன்.

இராமலக்ஷ்மண பரதசத்ருக்னர், வசிட்டரிடம் கல்விமுற்றி, அரிய அறுபத்துநான்கு கலைகளின் அகலமும், விரிவும், ஆன்மஞானத்தின் ஆழமும், ஒருங்கே உயர்ந்த நல்லொழுக்கமும் கொண்டு, ஒவ்வொருநாளும் பொலிவுற் றோங்கினர். தந்தை தசரதன் உள்ளத்தில்

அவர்களைக் கண்டதும் பெருங்களிப்பெழுந்தது. அவர்களை மிக்க மகிழ்வுடன் போற்றி வளர்த்து உயிரென நேசித்தான். அச்சமயம் அவ்விடம், வரங்கள் தரவல்ல விசுவாமித்திர முனிவன் வந்து நின்றான். (௨0)

முனிவன்

௨க. "அன்புடன் மக்களை யாளுங் காவலா,
வன்பகை யரக்கரென் மகங்கலைக் கின்றார்.
உன்முதற் செல்வனை யுதவு வாயுடன்,
என்வினை வென்றிடும்" என்று சாற்றினன்.

"உள்ளன்புடன் குடிகளை அரசாளும் காவலனே, காட்டில் தவம்புரியும் எங்களை நீ காப்பது கடமை. நான் செய்யும் வேள்வியை (மகம்) வலிய பகைகொண்ட அரக்கர் வந்து அடிக்கடி தொல்லைசெய்து கலைக்கிறார்கள். எனக்குத் துணையாக அரக்கரைப் பொருது வீழ்த்த உன் முதன்மையான செல்வ மைந்தன், இராமனை உடனே உதவு; என்னுடன் அனுப்பு! அவனாலே தான் நான்கொண்ட வேள்விவினை வெற்றிபெறும்" என்று சொன்னான், விசுவாமித்திரன். (௨க)

தசரதன்

௨௨. "கண்ணினும் உயிரினும் காதல் செய்மணி
வண்ணனை யொருகணம் பிரிந்து வாழ்கிலேன்.
எண்ணிய கருமத்தை இயற்ற நானுளேன்,
திண்ணமி தென்றனன்" திகைத்த தந்தையே.

கௌசிகன் வேண்டுகோளைக் கேட்டுத் திகைத்துப்போனான் தந்தை தசரதன். "முனிவ, நீலமணிவண்ணனான இராமனை என் கண்ணையும், உயிரையும்விடக் காதலுடன் பாசமுடன் அன்புடன் பிரியமாக நேசிக்கிறேன். அவனை என்கண்ணால் ஒருநொடி காணா விட்டால், அவன் ஒருகணம் பிரிந்திருந்தால், உயிர்வாழ மாட்டேன். இதோ நான் இருக் கிறேன். அரக்கரைக் கொன்று, நீ கருதிய வேள்வி வினையை வெற்றியுடன் முடிக்கிறேன்; இது திண்ணம்" என்றான். (௨௨)

௨௩. கேட்டதே கேட்டிடக் கேடில் மாமுனி,
வாட்டத்தைத் தவிர்த்திட வசிட்டன் மெய்யுரை,
கோட்டமில் மனத்தனைக் கொண்டல் வண்ணனைக்
காட்டக முனிவனின் காப்பி லீந்தனன்.

தவப்பெருமையால் அழியாவுறுதியுடைய கௌசிகமுனிவன் தான் முதலிற்கேட்ட இராமனையே மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டான். அப்படிக் கேட்பதன் பயனை அறிந்தவன் வசிட்டனே. அவன் தசரதன் மனக்கலக்கத்தைத் தீர்த்து "இது, நல்ல காரியம்; முனிவர் உன் சிறுவனுக்கு அரிய திறமைகளைத் தருவார்" என்று உண்மையைச் சொன்னான். உடனே தசரதன் மனக்கலக்கம் தீர்ந்தது. மேகவர்ணனான இராமனைக் காட்டில் வசிக்கும் முனிவன் பாதுகாப்பில் ஒப்பித்துவிட்டான். (௨௩)

தாடகை

௨௪. பிரிவறு தம்பியும் பின்றொ டர்ந்திட,
நரிபுலிக் காட்டிடை நடக்கு மெல்லையில்,
கரிபொரு தாடகை, கண்ட மூவரை
எரிபசிக் கடைப்பனென் றெதிர்ந்து சீறினள்.

இராமனைப்பிரியாத இளந்தம்பி இலக்குமனனும் பின்னே வந்தான். இராம லக்ஷ்மணர், விசுவாமித்திர முனிவனுடன் அயோத்தியைவிட்டு நரியும் புலியும் உலாவும் காட்டிடையே சென்றனர். அப்போது யானையைப்போன்று உரத்துப் பெருத்த கரிய இராட்சசி, இந்த மூவரையும் கனலும் பசிக்கு அள்ளியடைப்பேன், (தனது மனத்தில் எப் போதும் எரியும் பகைப்பசிக்கு இரையாக்குவேன்) என்று எதிரே வந்து சீறினள். (உச)

உடு. "கொல்" எனக் குருமுனி, கொடியள் மார்பிலே
சொல்என இராமனின் சுடுசரம் புக,
நல்லருள் கூடிட நலியுந் தீமைபோல்,
பொல்லவள் விழ்ந்தனள் புழுதி மண்ணிலே.

குருமுனி கௌசிகன் "இவள் பெண்ணல்லள்; படுகொலைப் பேய்; இவளைக் கொல் இராமா!" என்று கட்டளையிட்டான். உடனே இராமன் அந்தக் கொடிய அரக்கி மார்பில் சொல்லைப்போல வேகமாகக் கணைவிட்டான். அது புகுந்தவுடனே, நல்ல தெய்வத்திருவருள் கூடியதும், அன்பரின் தீவினை நலிந்து விழ்வதேபோல, பொல்லாத அரக்கி, புழுதிமண்ணில் விழுந்து மடிந்தாள். (உடு)

உசா. "பின்னுறும் பேரிசை பெருகுஞ் செய்கையை
முன்னுற விளக்கினை, சூரி வில்லனே,
என்னுடை யாசிகள் ஏற்"கென் றேமுனி
நன்னுடை மந்திரக் கணையுந் தந்தனன்.

"பலமும் பெருமையுங்கொண்ட வில்லாளனுன இராமா, பின்னல் இராவணை சங்காரஞ்செய்து, உனக்குப் பெரிய கீர்த்தியை வளர்க்கும் மகத்தான செயலின் குறிப்பை இன்று என் கண்முன்பு, முன்னமேயே விளக்கிவிட்டாய். அன்ப, வீர, என் ஆசிர்வாதங் களை ஏற்றுக்கொள்!" என்று கௌசிகமுனிவன், ஆசியுடன் மந்திரசக்திபெற்ற தன் அம்பு களைத் தந்தான். (உசா)

உஎ. வீழ்ந்திச்சு பாகுவை விரிக டலிலே,
ஆழ்த்திமா ரீசனை அம்பின் வேகத்தால்,
காத்தனர் இருவருங் கண்ணி மையென
வாழ்த்திடு முனிவரன் வளர்த்த வேள்வியை.

இராமலக்ஷ்மணர் இருவரும் தம்மை வாழ்த்தும் கௌசிகமுனிவன் வளர்த்த வேள் வியை, கண்ணை இரண்டு இமைகள் காப்பனபோல் கருத்துடன் காத்தனர். அச்சமயம் சுபாகு, மாரீசன், என்னும் இரண்டு அரக்கர் வந்து தொல்லை செய்தனர். இராமன் தனது அம்பின் வேகத்தால் சுபாகுவைக் கொன்று வீழ்த்தினன்; மாரீசாசுரனைக் கடலில் ஆழ்த் தினன். (உஎ)

உஅ. மகத்தினை முடித்தபின், மனதிற் பற்றறச்
சகத்தினைத் தாங்கிடுஞ் சனகன், "என்னகர்
அகத்தியம் வருக" வென் றழைக்க, மாமுனி
உகப்புடன் செல்வரை யுடன்கொண் டேகினன்.

விசுவாமித்திரன் தான் தொடங்கிய வேள்வியை இராமன் உதவியால் முடித்த பிறகு, மிதிலையில்ஆண்ட சனகன் ஓலை வந்தது. அவன் மனத்திற் பற்றில்லாத தூயஞான நிலையிலிருந்தே உலகரசின் பாரத்தைத் தாங்கும் கர்மயோகி. அவன் "எனது மிதிலாபுரிக்கு

அவசியம் (அகத்தியம்) வருக" என்று கௌசிகமுனிவனை அழைத்தான். மாமுனிவன், மிக்க மகிழ்வுடன் இராமன் இலக்ஷ்மணன் ஆகிய இரண்டு செல்வரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு மிதிலையை நோக்கினன். (உஅ)

அகலிகை சாபந்தீர்த்தல்

உகூ. செல்வழி, செம்மலின் சேவடித் திறன்
கல்லினின் றகலிகை யுயிர்க்கக் கண்டதால்......
தொல்முனி சாபத்தைத் துடைத்த தேவனை
நல்லணங் கிவ்வகை நவின்று போற்றினள் :

மூவரும் மிதிலையை நோக்கிச் செல்லும் வழியில், வீரப்பெருமை பெற்ற இராமனின் செம்மலர்ப் பாதம் ஒரு கல்லிற் பட்டது. அச்சேவடியின் சக்தியால், அக்கல்லில் இருந்து அகலிகை என்ற பெண்மணி உயிர்த்தெழுந்தாள். அவள், தன் கணவனான முனிவன் சாபத்தால் முன்னே இப்படிக் கல்லானாள். அச்சாபத்தை நீக்கிய இராமதேவனை நற்குணமுடைய அப்பெண்மணி இவ்வாறு சொல்லிப் போற்றி செய்தாள்: (உகூ)

அகலிகை

ஙு௦. "விண்ணர சிந்திரன் வேட்கை கொண்டதால்,
பெண்ணறம் பிழைத்தனன். பேதை செய்கையைக்
கண்ணுறு கௌதமக் கணவன் சாபத்தால்
மண்ணினிற் கல்லென மாறி நின்றனன்.

"விண்ணுலகை அரசாளும் இந்திரன், என்மேல் வேட்கைகொண்டு என்னைக் கெடுத்தான். நானும் மதிமயங்கி, பெண்ணுக்குரிய பதிவிரதா தருமத்தை யிழந்து குற்றம் செய்தேன். இப்பேதையின் செயலைக் கண்ணுரக் கண்ட கௌதமமுனிவன் இட்ட சாபத்தால் இப்படிப் புழுதிமண்ணில் கல்வடிவாகி நீண்டகாலம் உணர்வற்றுக்கிடந்தேன். (ஙு௦)

ஙுக. "கார்மணி வண்ணனே, கருணைக் கண்ணனே,
பார்தொழும் வள்ளலே, பதும பாதத்தின்
ஓர்துகள் பட்டிட வுயிர்த் தெழுந்தனன்
தீர்வதென் பாபமும் ; திருந்தி வாழ்கின்றேன்..."

"கார்மணி நிறத்தனே, கருணை நிரம்பிய கண்ணனே, உலகம் வணங்கும் வீரவள்ளலே, உனது மலரடியின் ஒரு தூசி பட்டமாத்திரத்தில், நான் கல்லினின்றும் உயிர்பெற்றெழுந்தேன் ; எனது பாபமும் தீர்ந்தது ; நான் திருந்தினேன். கற்புடன் என் கணவனைக் கூடிவாழ்வேன்." (ஙுக)

ஙுஉ. இல்லறத் திருவினை யில்லஞ் சேர்த்தும்,
செல்வரும் தவமுனி செப்புங் காதையால்,
ஒல்லையிற் றொலைகடந் துயர்மணிக் கொடி
நல்வர வேற்றிடு மிதிலை நண்ணினர்.

இல்லத்தில் வாழும் திருமகளான அகலிகையை கௌதமன் வீட்டில் சேர்த்து, இளஞ்செல்வர், தவமுனி விசுவாமித்திரன் சொல்லிய இனிய கதைகளால் விரைவில் எளிதாகத் தூரத்தைக் கடந்து, உயர்ந்த மணிக்கொடிகள் "வருக, வருக" என்று வரவேற்பதுபோல் ஆடிடும் மிதிலாபுரியை யடைந்தனர். (ஙுஉ)

சீதாராமர் திருமணம்

௩௩. சகத்தினை யறிந்தவன் ; சகச ஞானமாம்
சுகத்தினை யறிந்தவன் ; சுடரும் பேரின்பம்
இகத்தினில் அரியணை யிருந்த தன்னவன் ;
மகத்தினிற் பெரியவன் சனக மன்னனே.

மிதிலையை ஆளும் சனகராஜன் உலகியல்பை முற்றிலும் அறிந்தவன் ; தனது ஆன்ம சொரூபத்திலேயே ஊன்றி, சகசஞானத்தின் சுகத்தை அறிந்தவன் ; ஒளியோங்கும் பேரின்பமே இவ்வுலகில் இறங்கிவந்து அரியணை வகித்து, ஞானச்செங்கோல் செலுத்துவது போன்றவன் ; ஞானத்தீயில் புலன்களை ஆகுதியாக வார்த்த வேள்வியிற் பெரியவன். (௩௩)

௩௪. ஆயவன் முகமலர் அன்பு கூறிடத்
தூயனைக் குமரரைத் துதிகள் சொல்லியே
ஏயநன் முறையினில் ஏற்று, நட்பினல்
நாயமா யறிவன நன்ற றிந்தனன்.

அப்படிப்பட்ட ஞானசனகன், முகமலர் அன்பு பொங்க, "வாருங்கள், நல்வரவு" என்று தூய முனிவனையும். அரசபுத்திரரான இராமலக்ஷ்மணரையும் தகுந்த முறையில் வரவேற்று, நட்புரிமையால் அவர்களிடம் அறியவேண்டிய வரலாறெல்லாம் அறிந்தான் ; இராமன் பெருமை குலமுறைஎல்லாம் தெளிவாயறிந்தான். (௩௪)

௩௫. "நல்லறம் பெருகிடும், ஞால மின்புறும்
இல்லறம் பெருகுமென் இளமென் சீதைக்கும்
வல்லநீள் வில்லொன்றை வளைக்க வல்லையேல்,
தொல்பெரும் அயோத்தியின் சோதி மைந்தனே !

"பழம்பெருமையிற் சிறந்த (இரகுவம்சர் ஆளும்) அயோத்தியின் சோதிமைந்தனை இராமனே, என்னிடம் நீண்டகாலமாயிருக்கும் ஒரு வலிய பெரிய வில்லை வளைக்க முடிந்தால், இளமையும் எழிலும் மென்மையும்கொண்ட என் அன்புச்செல்வி சீதைக்கும் கன்னிப் பருவம் நீங்கி இல்லறவாழ்க்கை ஓங்கும்; இருவர் இல்லறத்தால் எல்லா நல்லறங்களும் பெருகும்; உலகெல்லாம் இன்புறும். (௩௫)

௩௬. இட்டமி" தென்றிடச் சனகன், ஏறுபோல்
சட்டெனத் தாவியி ராமன் வில்லினைப்
பொட்டென வளைத்தனன் ; கணையைப் பூட்டுமுன்
பட்டென முறிந்ததப் பண்டை வில்லுமே !

"இதுவே எனது விருப்பம்" என்று சனகன் சொன்னதுதான் தாமதம். முனிவன் கட்டளையைத் தாங்கி, இராமன் சட்டென்று பாய்ந்து சென்று வில்லைப் பூமாலைபோல் எளிதாக எடுத்து, விரைவில் வளைத்தான். அவன் கணைபூட்டுமுன்பே அப்பண்டைக்கால வில் பட்டென்று நடுவில் முறிந்தது......வியப்பு ! (௩௬)

௩௭. வீரரும் வேந்தரும் வியந்து போற்றியித்
தீரனே யமைந்தவன் சீதைக் கென்றனர்.
வார்முர சியம்பின ; மணவி ழாவணி
ஊரெங்கும் விளங்கின ; உளங்கள் பூரித்த.

எவரும் எடுக்க முடியாத வில்லை எளிதில் வளைத்துமுறித்த இந்தத் தீரனே சீதைக் கேற்ற மணவாளன் என்று அங்கிருந்த வீரரும், வேந்தரும் சனகனும் வியந்துகொண்டாடினர். எல்லார் உள்ளங்களும் இச்சுப செய்திகேட்டுப் பூரித்தன. திருமணப் பறைகள் முழங்கின. ஊரெல்லாம் அலங்கரித்து எங்கும் திருமணக்கோலங்களே விளங்கின. (௩௭)

௩௮. கேட்டதுந் தசரதன் கிளர்ந்து பொங்கிக்கொன்
டாட்டமும் பாட்டமும் அணியுஞ் சூழ்ந்திட
நாட்டுடன் மிதிலையை நண்ணிச் சீதையை
வேட்டிடும் வீரனை "மெய்ய, வாழ்"'கென்றான்.

தன் மகன் வில்லை வளைத்துச் சனகன் மகளை அடைந்த செய்திகேட்டதும், தசரதன் துள்ளிக்குதித்தெழுந்து உள்ளம் பொங்கி, சந்தோஷமான விருந்தும் கொண்டாட்டமும், ஆடல் பாடலும், அழகும் அலங்காரமும் பொலிய, தன் இஷ்டமித்திரபந்து ஜனங்களுடன் நாட்டிலுள்ள முதன்மையானவர்களையெல்லாம் கூட்டிக்கொண்டு, மிதிலாபுரியை அடைந்தான். சீதாபிராட்டியைக் காதலித்து மணக்கும் வீரனை இராமனைக்கண்டு பூரித்து, எனது "மெய்ய, உண்மை மைந்த, வீரத்திருநிறைந்த குமர, நீ நீடூழிவாழ்க !" என்று ஆசிகூறினான். (௩௮)

௩௯. ஆரமு கனைத்துங்கூட்டி அருளமு துடனே *வேதா
வாரிசத் திருவின்மிக்க வடிவினை யமைத்த தன்னாள்,
பூரணமதியு, மானும், பொன்னிள மயிலும் போன்றாள்,
தீரனுக் கேற்ற கற்புத் தீபமே யனையாள் சீதை.

சீதாபிராட்டியின் அழகை எப்படி வர்ணிப்பது ! மண்ணிலும் விண்ணிலும் விளங்கும் (ஆர்) அழகுகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, அருட்பொலிவாகிய அமுதினைக்கூட்டி, இனிய தன்மைகளையெல்லாம் சேர்த்து, தாமரையில் விளங்கும் மகாலக்ஷ்மியே கைதேர்ந்த தெய்விக வடிவமைத்தால் எப்படியிருக்கும்? அப்படிப்பட்ட அழகும், திருவும், அருட்பொலிவும் மிக்கவள் சீதை. அவள் முகம் மங்கலமான நிறைமதியம் போன்றது; விழிகள் மானைப் போன்றன ; சாயல் பொன்னால்செய்த இளம் மயிலைப் போன்றது. அவளே மகாதீரனை ஸ்ரீராமபிரானுக்குத் தகுந்த கற்புச் சோதி! அவன் புகழைக் காலமுள்ளளவும் அமரத் தன்மைபெற்று விளங்கச்செய்த தூயவிளக்கைப்போன்றவள் சீதை. (௩௯)

௪௦. வாய்மையுந் திருவும், வீர வடிவுகொண் டறத்தைக் காக்கத்
தாயுளம் பூண்டு வந்த தசரத ராமன், அன்பர்
நேயன், அதருமக் காட்டை நீறுசெய் கனலே யன்னான்,
மாயிரு ஞாலம் தெய்வ மணியென வணங்குந் தீரன்.

சொல்லைக்காக்கும் வாய்மை, நற்குணத்திரு, ஜயவீரம்—இவையே தருமத்தைக் காக்கத் தாய்போன்ற கருணையுள்ளம்பூண்டு வந்தமை போன்றவன் தசரதன் மகனான ஸ்ரீ ராமன். அவன் அன்பர்களுக்கு உண்மைநண்பன்; அதர்மக் காட்டைச் சாம்பலாக எரிக்கும் நெருப்பைப் போன்றவன்; இப்பெரிய விரியுலகம் (மா இருஞாலம்) தெய்வ மணியென வணங்கும் தீரன். (௪௦)

௪௧. கண்களாற் கண்டபோதே காதலாற் கருத்தொன் றான,
பெண்சக்திவீர ராமன் இருவரும் பிரியா தொன்றிப்
புண்ணிய யோகம் போகம் பொருந்திய காட்சி போன்றார்
மண்ணுல கெல்லாம் வாழ்த்தி மங்களங் கூற மாதோ !

---

* பிரமன்.

கண்களால் கண்டபோதே, காதல் பொங்கிக் கருத்தில் ஒன்றுபட்ட பெண்சக்தியாக சீதாபிராட்டியும், ஜயவீரனான இராமபிரானும் எக்காலும் பிரிவற்ற சதிபதிகளாகச் சேர்ந்தனர்; புண்ணியந்தரும் பூரணயோகமும், இன்பமளிக்கும் சுத்த போகமும் பொருந்தி விளங்கியமை போன்ற காட்சியளித்தனர். அவர்களை நிலவுலகெல்லாம் மகிழ்ந்து வாழ்த்தி, மங்களங்கூறி ஆசிர்வதித்தது. (சக)

சஉ. இவ்வணந் நம்பி மாரும் இல்லற மேற்ற பின்பு
திவ்வியக் கோலங் கொண்டு திரும்புழி, பரசுராமர்
வெவ்விய செருக்கை ராமன் வீழ்த்திட வெற்றியோங்கிச்
செவ்விய நகரஞ் சேர்ந்து சேமமாய் வசித்தார் சின்னாள்.

மேற்சொன்னதுபோலவே பரதன் இலக்குமணன் சத்துருக்னன் ஆகிய மூவரும், திருமணம்புரிந்து இல்லற வாழ்வை ஏற்றனர். பிறகு தசரதனுடன் நான்கு மைந்தரும் பரிவாரங்கள் சூழ அழகான மணக்கோலத்துடனே, அயோத்திக்குத் திரும்பினார்கள். வழியில் பரசுராமன் வந்தான். அவன் வீரமுனிவன்; மகாபலசாலி, க்ஷத்திரியரை அழிப்பவன். அவன் தனது வில்லை வளைக்கச்சொல்லவே, இராமன் வளைத்து, அம்புபூட்டி அவனையே குறிவைத்தான். பரசுராமன் பணிந்து தனது தபோபலத்தையெல்லாம் தந்து, கேரளத்திற்குச் சென்றான். இவ்வாறு பரசுராமன் செருக்கை வீழ்த்தி. அற்புதமான ஊர்கோலத்துடன் இராமன் செவ்விய தருமம் நிலவும் அயோத்திமா நகரடைந்து சேமமாக இல்லறத்தில் வசித்தான். (சஉ)

இராமன் துறவு

சங. யாக்கையும் அதனைச் சுற்றும் யாவையும் குமுறுங் காலத்
தீக்கிரை யாகுமென்று தெரிந்தறம் புரிந்த தந்தை,
வாக்குயர் அமைச்சர் ஒப்ப மணிமுடி மகனுக் கீந்து,
நோக்குயர் யோகஞ் செய்ய நோக்கினன் பிறவி தீர.

இதுகாறும் அயோத்தியில் அறத்தை நாட்டி அரசாட்சிசெய்த (அறம்புரிந்த) தந்தை தசரதன், இந்த உடலும் அதைச் சுற்றிய அரசு சுகபோகங்கள் எல்லாமும் உலகை அள்ளிவிழுங்கக் குமுறிக்கொண்டிருக்கும் காலாக்னிக்கு இரையாகும் என்று அறிந்தான். "இதுகாறும் உலகாட்சியில் ஈடுபட்டு, இருவினை சுமந்ததுபோதும்; இனி மூத்தமகன் இராமனுக்கு அமைச்சர்கள் சம்மதத்தின்மேல் மணிமுடியைத் தந்து, பட்டங்கட்டி, பிறவிப் பிணிதீர, உயர்ந்த நோக்கத்தைக்கொண்டு தவயோக சாதனங்களைச் செய்வோம்" என உளம்பற்றினான். (சங)

சச. நீடுலாம் அரச நீதி நெறியினை வசிட்டன் சொல்ல,
நாடெலாம் இராம னாளு நாளெதிர் பார்த்து வந்து,
வீடெலாம் விருந்து செய்ய, வீதிகள் அலங்க ரிக்க
கேடெலாங் கொண்டு வந்தாள் கெடுமனக் கூனியந்தோ!

வசிஷ்டபகவான் இராமருக்கு, நீண்டகாலம் நிலவியோங்கும் அரசநீதியை உபதேசித்தார். நாட்டிலுள்ள மக்களெல்லாரும், இராமபிரான் முடிபுனைந்து அரசாளும் நாளை எதிர்பார்த்தனர்; வீடுகளிலெல்லாம் உற்சாகமாக விருந்துகொண்டாடினர்; வீதிகளை அலங்கரித்தனர். ஆனால், இந்தச் சுபகாரியத்தைக் கெடுக்கக் கேடெல்லாம் திரண்ட கிழவியான பொறுமைக்கூனி வந்து சேர்ந்தாள். (சச)

சரு. வாட்டிய பொருமைத் தீயைக் கைகசி மனத்தில் மெல்ல
மூட்டி "நீ தசரதன் பால் முன்னிரு வரங்கள் பெற்ருய் ;
நாட்டையுன் மகனே யாள நம்பியும் பதினுன் காண்டு
காட்டினை யாளச் செய்வாய் கணவனைத் தூண்டி" என்ருள்.

அவள் மனத்தில் இராமனிடம் பொருமைத்தீ வளர்ந்தது. அந்தத் தீயை மெல்ல கைகேசி மனத்தில் பற்றவைத்தாள். "அடி கைகேசி, இராமன் அரசாண்டால் நீயும் உன் பரதனும் அடிமைபோ லிருக்கவேண்டியதுதான். முன்னே சம்பராசுர யுத்தத்தில் வீரத் துணைசெய்து தசரதனிடம் நீ இரண்டு வரங்கள் பெற்ருய். கேள் அந்த வரங்களை இப்போது! உன் மகன் பரதனே மகுடந்தரித்து நாட்டையாளவும், நம்பி இராமன் பதினுன் காண்டுகள் காட்டையாளவும் வரந்தரவேண்டும் என உன் கணவனைத் தூண்டு" என்ருள். (சரு)

சசு. சாகசத் தாலே யன்புத் தலைவனை வசப்ப டுத்திக்
கேகயி வரத்தைப் பெற்ருள் ; இராமனுங் கேட்கச் சொன்னுள் ;
சோகமுற் றயர்ந்த தந்தை சொற்படி காடு செல்லத்
தாகமுற் றெழுந்தான் வீரத் நம்பியுஞ் சினந் தெழுந்தான்.

தன் சாகசங்களையெல்லாம் காட்டிக் கணவனை மயக்கித் தன்வசப்படுத்திக் கைகேசி தனக்குரிய இரண்டுவரங்களையும் மேற்சொன்னபடியே பெற்ருள். தசரதன் "ஹா ராமா!" என்று மயங்கிச் சோர்ந்துவிழுந்தான். கைகேசி "தந்தையின் கட்டளை இது, இதை நீ கேட்கவேண்டும்" என்று இராமனிடம் தெரிவித்தாள். இராமன் தந்தையின் சொற்படியே காட்டிற்குச் செல்ல ஆசைகொண்டு தாகமுடன் எழுந்தான்; தான் நாட்டைத்துறந்து காடு செல்வதனுலேதான் தனது வாழ்வின் நோக்கம் நிறைவேறும் என்றுணர்ந்தே அடி வைத்தான். அச்சமயம் வீரத்தம்பி இலக்குமணன் சீறியெழுந்தான். (சசு)

இலக்குமனன்

சஎ. "பெண்மொழி கேட்டுத் தந்தை பிதற்றினுன். எதிர்த்து நிற்கும்
விண்ணையும் வீழ்த்தி யுன்னை வேந்தனுய்க் காண்பல் யானே ;
அண்ணனீ யாளவேண்டும். அரணியம் செல்ல வொட்டேன்.
என்ன நீ மாற்றி" டென்ருன் இலக்குவன் அலக்க ணுற்றே.

இலக்ஷ்மணன் மனங்கலங்கிக் கோபத்தாற் கண்சிவந்து, "ஒரு பெண்ணின் பேச்சைக் கேட்டு மதிமயங்கித் தந்தை ஏதோ பிதற்றினுன்! என்னை எதிர்க்கும் விண்ணுலகையும் எதிர்த்து வென்று வீழ்த்தி, உனக்கே பட்டங் கட்டி, உன்னை நாடாளும் வேந்தனுகக் காண்பேன். அண்ணு, நீயே அரசாளவேண்டும். நீ காட்டிற்குச் செல்லவிட மாட்டேன். உன் எண்ணத்தை மாற்று!" என்று வீறிட்டான். (சஎ)

இராமன்

சஅ. "நல்லதே சொன்னுன் எந்தை. நல்லதே செய்தாள் எந்தாய்.
நல்லதே விளையு மின்று நாடிகந் தடவி சென்ருல்
அல்லலைப் போக்குந் தூய தவப்பய னுகும் ; இந்த
வில்லிற்கு மினிதே தம்பி ! வெகுளலை" யென்ருன் வீரன்.

"தம்பி, கோபப்படாதே (வெகுளலை!) என் தந்தை தனது வாக்கால் நல்லதுதான் சொன்னுன். எனது தாய் கைகேயியும் எனக்கு நல்லதுதான் செய்தாள். இன்று நாட்டை விட்டுவிலகி (இகந்து) காட்டிற்குச் சென்ருல் அதனுல் நல்லதுதான் விளையும். நான் செய்ய

வேண்டிய கடமை நிறைவேறும். காட்டில் நான் பல தவமுனிவரைக்கண்டு ஆசிபெறுவேன். அல்லல் போக்கும் தூய தவப்பயன் எய்தும். தபஸ்விகளைக்கண்டு நானும் தவம்புரிவதால் உலகின் அல்லலைப்போக்கும் பயனும் உண்டாகும். அதனோடு இந்த வில்லிற்கும் இனிய வேலைகிடைக்கும். அரக்கரை இந்த வில்லால் அழித்து, உலகிற்கு இதம் உண்டாக்கலாம்.'' என்று வீரனாகிய இராமன் சொன்னான். (௪௮)

௪௯. 'நானுனைப் பிரியே' னென்று நடந்தனன் இளவல் பின்னே,
'நானுடல் உயிர்நீ' யென்றே நடந்தனள் சீதை முன்னே;
எனையோர் மனதை யாற்றி இடர்க்கண்ணீ ராற்றைத் தாண்டி,
மோனஓங் காரம் போலே மூவருங் கானஞ் சென்றார்.

"அப்படியானால் நான் உன்னைப் பிரியேன். உனது சேவையே எனது வாழ்வு." என்று தம்பி இலக்குமணன் இராமர் பின்னே நடந்து சென்றான். சீதையோ "நான் உடல், நீர் உயிர்; உயிரின்றி உடல் வாழாது" என்று நாயகனுக்கு முன்னே நடந்தாள். இராமன் தாய் உறவினர் முதலிய மற்றவர் மனத்துயர் தீர்த்தான். அயோத்தி மாநகரம் இந்தப் பிரிவுத் துயரைத் (இடர்) தாங்காது வடித்த கண்ணீர் வெள்ளத்தைத் தாண்டி, மூன்று பேரும் மௌனமாகக் காட்டிற்குச் சென்றனர். அந்தக் காட்சி யோகிகள் மோனத்திற்கேட்கும் ஓங்கார நாதமே உருவெடுத்ததுபோ லிருந்தது. அ, உ, ம் ஆகிய மூன்றெழுத்துடன் கூடியது ஓம். அகரம் போன்று அனைத்திற்கும் முதன்மையானவர் இராமர். மகரம்போன்று சக்தியளிப்பவள் சீதை. உகரம்போன்று இருவருக்கும் துணைநின்றவன் இலக்குமணன். மூன்றெழுத்தும் சேர்ந்தே ஓங்காரமாகி, எல்லையற்ற மொழிகளாயின. இந்த மூவரும் சேர்ந்தே அரக்கர் அழியக் காரணமாகி, உலகில் எல்லையற்ற பெருமைகொண்ட இராமாயண மகா காவியத்திற்கும் தலைவரானார்கள். (௪௯)

௫௦. இழந்தனர் மக்க ளின்பம், இழந்த தயோத்தி சாந்தம்,
இழந்தனன் துடிக்குமாவி தசரதன்; பரதன் வந்தே,
இழந்தனன் பொறுமை; அண்ணல் ஏகிய வழியே சென்றான்.
இழந்தனள் இடர்கட் கெல்லாம் இறைவிகை கேசி யெல்லாம்.

அயோத்தி மக்கள் இராமனைப் பிரிந்து இன்பமிழந்தனர்; துன்பக்கண்ணீர் விட்டனர். அயோத்தி நகரம் மக்கள் அழுகுரலால் அமைதியிழந்தது. தந்தை தசரதன் மகன் காட்டிற்குச் சென்றதைக் கேட்டதுமே துடிதுடிக்கும் உயிர் பிரிந்து சடலத்தை உதறிச் சென்றான். மாமனார்வீட்டுக்குப் போன பரதன் திரும்பி வந்து செய்தி கேட்டதுமே பொறுமையிழந்து தாயை முனிந்தான். "அண்ணன் இருக்க நான் ஆளேன். இதோ அவனை அழைத்துவருவேன்" என்று இராமன் சென்ற வனத்தின் வழியே காட்டிற்குச் சென்றான். இந்த இடர்களுக்கும் இழவுகளுக்கும் தலைவியான கைகேசி தன் கனவு, ஆசை, அரசு, கணவன், பரதன் அன்பு, தேசமக்கள் அன்பு அனைத்தையும் இழந்து துயரில் ஆழ்ந்தாள். (௫௦)

பரதன் விரதம்

௫௧. பத்தியும் பணிவு மிக்க குகன்விடும் படகிலேறி,
முத்திறை கங்கை தாண்டி, மூவரும் வனம் புகுந்தே,
சித்திர கூடந்தன்னிற் சிந்தையற் றிருக்கும் போது,
சத்தியப் பரதன் வந்து சரண்புகுந் நிவைய சொன்னான்:—

சீதாராமலக்ஷ்மணர், பக்தியும் பணியும் மிகுந்த குகன் ஓட்டிய படகில், முத்துப் போன்ற திவலைகளை வாரியிறைத்துச்செல்லும் கங்கையைத் தாண்டி நீண்ட காட்டிற் புகுந்தனர். அங்கே சித்திரகூடத்தில், பர்ணசாலையமைத்து மூவரும் கவலையற்று, வசித்தனர். அச்சமயமே சத்தியவிரதம் கொண்ட பரதன் ஓடிவந்து இராமபிரானைச் சரண்புகுந்து இவ்வாறு முறையிட்டுச் சொன்னான் : (ருக)

ருஉ. " அன்னையென் றென்னைப் பெற்றாள், அறிவிலி யாசைப் பேயே ;
என்னுயிர்க் கின்னல் செய்தாள் ; என்னுயிர் தன்னின் மிக்க
உன்னுயிர்க் கின்னல் செய்தாள் ; உன்னிடை யுயிராந் தந்தை
தன்னுயிர் பிரித்தாள் ; இன்று தருமமும் கலங்கு மண்ணா !

" தாய் என்று என்னைப் பெற்றவள் அறிவுகெட்ட பேராசைப் பேயே ; அவள் எனது உயிர்வாழ்விற்கு உன்னைப் பிரிந்திருக்கும் துன்பத்தை விளைத்தாள். எனது உயிரினும் மிக்க உனது உயிர் வாழ்விற்கும் கெடுதலைச் செய்து, உன்னை நாட்டைவிட்டுக் காட்டிற் கோட்டினாள். உன்னிடம் உயிர் வைத்திருந்த தந்தை நீ காடுசென்றதும் " ஹா, ராமா " என்று அழுது இறந்தார். அவர் உயிர்பிரிந்ததும் இவளாலேதான். இன்று தரும தேவதையே கண்கலங்கி, மனங்கலங்கித் தவிக்கிறது....ஐய ! (ருஉ)

ருங. அரசினை யாளவாராய் அண்ணலே காட்டி லேயுன்
மரவுரிக் கோலங் காணேன். மனதுசற் றிளகா யாகில்,
விரதம்பூண் டிளவ லோடுன் பணிசெய விருப்ப " மென்னும்
பரதனைத் தேற்றி நம்பி பரிவுட னினைய சொன்னான்.

அண்ணலே, உனக்கே உரிய அரசை ஆள வருவாயாக! இந்தக் காட்டில் உனது மரவுரிக்கோலமும் துறவுங் காணச்சகியேன். உன்மனம் இளகாவிட்டால் நானும் தவ விரதம் கொண்டு, தம்பி இலக்குமணனுடன் உனது சேவை செய்துகொண்டு இந்தக் காட்டிலேயே யிருக்க விரும்புகிறேன்." என்று முறையிடும் பரதனைத் தேற்றி, மிகவும் பரிவுடன், புருஷோத்தமனான இராமன் இம்மொழிகளைச் சொன்னான் : (ருங)

ருச. " கோதிலாய், தந்தை சென்றார், கொடியனேன் பெயரைக் கூவி ;
மாதவஞ் செய்தோர் சொல்லை மறுவறக் கடைப் பிடித்தே
போதரு வேன யோத்தி; புரிதிநீ யரசெ"ன் றீந்த
பாதுகை சிரத்தி லேந்திப் பரதனுந் திரும்பி னானே.

"குற்றமற்றவனே (கோதிலாய்)! நம் தந்தை கொடியனான எனது பெயரைச் சொல்லிக் காலஞ்சென்றார். ஹா, நானோ அவர் சொல்லைக் குற்றமின்றி நிறைவாக்கக் கடைப்பிடித்து, மாதவம் புரிந்து, மற்றும் செய்வன செய்தே அயோத்திக்கு வருவேன் ; அதுகாறும் நாட்டைக் கவனமாகக் காக்கவேண்டும் ; நீயே எனது இடத்திலிருந்து அரசாள வேண்டும்" என்றான். பரதன், "அப்படியானால் பாதுகையைத்தரவும்!" என்றான். இராமன் கொடுத்த பாதரட்சையைத் தலையில் ஏந்திப் பரதன் திரும்பிவந்தான். (ருச)

ருரு. அண்ணலின் பாத ரட்சை யரியணை வகிக்க நாளும்,
கண்ணுகு நீரி னாலே கழுவிநான் மலர்சொரிந்தே,
புண்ணியப் பரதன் நந்தி கிராமத்தில் விரதம் பூண்டு,
மண்ணறங் காத்து மன்னன் வரவினைப் பார்த்தி ருந்தான்,

புண்ணியவானுகிய பரதன், நந்திகிராமத்தில் தவவிரதம் பூண்டு, இராமன் பாதுகையே அரியணை வகிக்க, அதைத் தினம் தனது கண்ணீரால் கழுவி, மலர்சொரிந்து பூசித்து, உலகறங் காத்து நாட்டிற்குரிய மன்னனுன இராமன் வரும் நாளைஎதிர் பார்த்திருந்தான். (ருரு)

பஞ்சவடி செல்லல்

ருசு. வற்கலை யணிந்த தூயர், வனம்வனந் திரிந்து, யோக
நற்கலை யணிந்த சித்தர் நல்வர வேற்றுப் போற்ற,
முற்கலைத் தமிழளித்த முனி, மொழி யுடனே தந்த
பற்பல பகழி தாங்கிப் பஞ்சமா வடிய மர்ந்தார்.

மரவுரி தரித்த பரிசுத்தமான சீதாராமலக்ஷ்மணர், சித்திரகூடத்திலிருந்தால் உறவினர் அடிக்கடி வருவார்களென்று, வனத்திற்கு வனம் சுற்றித்திரிந்தனர். யோகமாகிய நல்ல தெய்விகக்கலை யணிந்த அத்திரி, சரபங்கர் போன்ற தவசித்தர் அவர்களை வரவேற்று உபசரித்தனர். முன்னே கலையிற் சிறந்த தமிழைப் புதுக்கி யளித்த அகத்திய முனிவர் மந்திர மொழிகளுடன் தந்த பலவகையான அஸ்திரசஸ்திரங்களைத் தாங்கி பஞ்சவடியில் வந்து, அம்மூவர்களும் தங்கியிருந்தார்கள். (ருசு)

முனிவருக்கு அபயமளித்தல்

ருஎ. பூரண யோகஞ் செய்யும் புண்ணிய முனிவர் கூடிப்
"பூரியர், அரக்கர் செய்யுங் கொடுமையைப் பொறேம்யாம் ஐயா,
கார்நிகர் கருணை வள்ளால் காப்பதுன் பாரம்" என்ன,
வீரனும் வில்லுயர்த்தி விளம்பினன் அபய வாக்கே!

தம்மைப் பூரணப்படுத்திக்கொள்ள யோகம் புரியும் தண்டகாரண்யவாசிகளான புண்ணிய முனிவர்களெல்லாருங்கூடி, இராமனைச் சேவித்து, "ஐய, பயங்கரமான அரக்கர் எங்களுக்குப் பல கொடுமைகள் செய்கிறுர்கள். இனித் தாங்க மாட்டோம். எங்கள் தவம் கெடுகிறது. கார்மேகம்போன்ற கருணை வள்ளலே, எம்மைக் காப்பது உம் பொறுப்பு" என்று முறையிட்டனர். தருமவீரனுன இராமன், தனது கோதண்டத்தை உயர்த்தி, "பயப்படாதிர்கள்" என்று இவ்வாறு அபயங்கூறினுன்: (ருஎ)

ருஅ. "நின்புய மீதி லாணை, தேவிமே லாணை, யிந்த
விண்வளர் புவிமே லாணை, வில்லின்மே லாணை; நல்லோர்
புண்ணியம் வாழத் தீமை பூண்டுடன் அழியப் போரில்
எண்ணினேன்; எண்ணியாங்கே யியற்றியும் இன்னல் தீர்ப்பேன்.

"முனிவர்காள், எனது உரம்பெற்ற தோள்வலிமேல், எனது பத்தினி சானகிமேல், மழையும் ஒளியும் தந்து வானம் வளர்க்கும் பூமிமேல் ஆணை; இந்த வில்லின்மேல் ஆணை. நல்ல சாதுக்களின் புண்ணியச் செயல்கள் வாழ, அசுரத்தீமை பூண்டுடன் அழியவே நான் போர் புரிவேன். அதில் கருதியபடியே காரியம் செய்து உங்கள் இடர்களைத் தீர்ப்பேன்." [சானகிமேல் ஆணையிட்டது அவளாலேதான் இலங்கைப் போர்மூண்டு அரக்கர் அழியப்போவதைக் குறிக்கிறது. தோள், வில் இரண்டின்மேல் ஆணையிட்டது மிருகபல அசுரரை பலத்தினுலே தான் வெல்லக் கருதியதாகக் குறிக்கிறது.] (ருஅ)

ருகூ. " வேதத்தைப் படித்தோ ரேனும், வேள்விகள் செய்தோ ரேனும்,
பூதலம் வென்ருே ரேனும், புகழ்பல படைத்தோ ரேனும்,
நீதியுங் கற்பு மில்லா நீசரை நீறு செய்தும்
வேதனை தீர்ப்பேன் இந்த விரதமென் சரித" மென்ருன்,

"வேதத்தை உருப்போட்டுப் படித்தவர்களானுலும் சரி, பல வினைவேள்விகள் செய்தோரானுலுஞ் சரி, வாள்வலியாலும் தோள்வலியாலும் உலகையெல்லாம் வென்ருேராயினுஞ் சரி, வியன்செயல்களால், உலகெல்லாம் புகழ்பெற்றவரானுலுஞ் சரி, தருமநீதி தவறி நடந்தால், குலப்பெண்களைக் கற்பழித்தால், அக் கீழ்மக்களை, எனது சுடுகணையால் கொன்று சாம்பலாக்குவேன்; நீங்கள் படும் இடர்களைத் தீர்ப்பேன்; இந்த அறங்காக்கும் விரதந்தான் எனது வரலாறு" என்ருன் இராமன். (ருகூ)

சுo. எண்டிசை யெதிரொலிக்க வியம்பிய சபதங் கேட்ட
தண்டக வனத்திலுள்ள தவமுனி வோர்க ளெல்லாம்,
" பண்டறங் காக்க வந்த பகவன்நீ வாழ்க! வீரக்
கொண்டலே வாழ்க! உன்ஞற் குறையிலோம்" என்று சொன்ஞர்.

எட்டுத் திசைகளும் எதிரொலிக்கும்படி, இராமன் செய்த சபதத்தைக் கேட்ட தண்டகாரண்யத்திலுள்ள தவமுனிவர்களெல்லாரும், பழமையான தருமத்தைக் காக்கவந்த பகவானே, நீ வாழ்க! பொல்லாரையழிக்க வில்லேந்திய வீரக்கொண்டலே, கார்வண்ணனே நீ வாழ்க! உன்ஞல் நாங்கள் குறை தீர்ந்தோம்" என்று சொன்ஞர்கள். (சுo)

சூர்ப்பணகை

சுக. கன்னிலாக் காம நோயே காதகக் குல மழிக்கப்
பெண்ணுருத் தாங்கிச் சூர்ப்ப ணகையெனும் பெயரும் பூண்டு,
மண்ணிடைப் பிறருக் கான மாதரை யன்னை யென்றே
யெண்ணுறு மிராமன் முன்னே யிளநகை புரிந்த தம்மா!

மனிதர்களைக் கொலைசெய்யும் கொடிய அசுர குலத்தை யழிக்க, கண்ணிழந்த வெறி பிடித்த காம நோயே, பெண்வடிவாகி, சூர்ப்பணகை யென்னும் பெயரும் கொண்டது. இராமன் இந்த உலகில் பிற மாதரைத் தாய்க்குச் சமமாகக் கருதும் கற்புடையவன். அவன் முன்னே அக்காம ராட்சசி சூர்ப்பணகை வந்து, இளநகை புரிந்து மாயவலை வீசிநின்ருள். (சுக)

சுஉ. காவியப் புலவர் செய்யுங் கற்பனை கடந்த தீரன்,
ஓவியப் புலவர் காணு வுட்புற வழகன் மேலே,
ஆவலாய் வந்தாள். ஆசை அவலமாய்ப் போகச் சீதா
தேவியைப் பொருமை கக்குந் தீவிழி பார்த்து நின்ருள்.

கவிதைக் கலையிற் சிறந்த புலவர்கள் செய்யும் கற்பனைகளுக்கு எட்டாத தீரன் இராமன்; சித்திரப் புலவர்கள் காணமுடியாத உள்ளழகும் மேலழகும் பொலியும் அருளழகன். அவனைக் கூட ஆவலாய் வந்த அரக்கி சூர்ப்பணகையின் ஆசையெல்லாம் அவலமானது. அவள் எவ்வளவு கெஞ்சியும் இராமன் மறுத்தான். 'இந்தச் சீதை யிருப்பதாலன்ருே நமது வேண்டுகோளை இவன் மறுக்கிருன்' என்று நினைத்து, சூர்ப்பணகை பொருமை கக்கும் நெருப்பு விழிகளால் தேவியைப் பார்த்துச் சினந்து நின்ருள். (சுஉ)

சுங. வம்புசெய் யரக்கி மாயம் வார்த்தையால் அடங்கா தென்றே
தம்பி,மூக் கறுத்தே யோட்டித் தமயனின் மானங் காத்தான் ;
வெம்பிய மூளி மீண்டும் வெங்கர தூட ணாதி
கும்பலைத் தூண்டி விட்டாள் ; கோதண்ட விருந்திற் கம்மா !

மீண்டும் வம்புசெய்யும் அரக்கியின் மாயவலைகள் வெறும் வார்த்தையால் அடங்கா தென்று கண்ட தம்பி இலக்குமணன், அவளுடைய மூக்கையறுத்தோட்டி, அண்ணன் மானத்தைக் காத்தான். இன்றேல், அவள் சீதையைக் கொன்றுவது இராமனைப் பலாத்காரம் செய்திருப்பாள். மூக்கறுந்து சினங்கொண்ட மூளி சூர்ப்பணகை, மறுபடியும் தீமை செய்யத் துணிந்து, தனக்குப் பாதுகாவலான கரன் தூஷணன் ஆகிய அரக்கர் கூட்டத்தைத் தூண்டிவிட்டாள். அரக்கர் சீறிச்சினந்து போர்முறுக்கி வந்தனர். எதற்கு? எல்லாம் இராமன் கொண்ட கோதண்டத்திற்கு விருந்தாகவே! (சுங)

சுச. பொம்மெனப் பொருத தீயர் பொடிபட முடித்தான் வீரன்,
இம்மெனச் சினந்த ரக்கி யிலங்கைசென் றண்ணன் முன்னே,
விம்மினள் ;விளைந்த தெல்லாம் விளம்பினள் ; " அந்த வீரச்
செம்மலென் கணவனாகச் சீதையைக் கொள்வா "யென்றாள்.

'அரக்கர் பொம்மென்றிரைந்து கும்பல் கும்பலாக வந்து பொருதினர். வீரராமன் அக்கொடியவர் பொடிப்பொடியாய் வீழப் போர்முடித்தான். கண்டாள் அரக்கி; " ஊம் இருக்கட்டும்" என்று சினந்து இலங்கைக்கு விரைந்தாள் ; தன் அண்ணன் இராவணன் முன் தனது மூக்கறுந்த கதையை விவரமாகச் சொன்னாள். முடிவில், "அண்ணா எப்படியாவது அந்த வீரச்செம்மலான இராமன் எனக்குக் கணவனாக வேண்டும். அதற்குத் தடையாயிருப்பவள் அவன் இளமனைவியான சீதைதான். அவளை எடுத்துவந்து நீ மனைவியாகக்கொள் !" என்று தூண்டிவிட்டாள். (சுச)

சுரு. " பூநலம் போற்றுகின்ற பூவையர் திருக்க ளெல்லாம்
சீதையாய்ப் போந்த தந்தச் சித்திரத் தெழுத வொண்ணா
மாதினைக் கொணர்ந்தா யாகில், வாழ்ந்துபோம் இலங்கை"யென்று
போதனை புரிந்தாள் ; அண்ணன் புத்தியுங் கெட்ட தம்மா !

"இந்த உலகம் கொண்டாடும் உத்தம மாதர் இலக்கணங்களெல்லாம், அழகு, கற்பு முதலிய குணங்களெல்லாம் சீதையாக உருவெடுத்து வந்தன. சித்திரத்தில் எழுதமுடியாத அந்தக் கட்டழகியைக் கொண்டுவந்தாயாகில், உனது இலங்கையே வாழ்ந்துபோகும்" என்று சூர்ப்பணகை துர்ப்போதனை செய்தாள். அதைக் கேட்ட அண்ணன் இராவணன் புத்தியும் அடியோடு கெட்டது. (சுரு)

சுசா. " மலைபெயர் வீரன், யானம் மாதினைப் பெயர்க்க வல்லேன் ;
கலைதெளி புலவன், அன்னாள் காதலைப் பெறவும் வல்லேன் ;
இலையொரு தடையிங் கென்னை யெதிர்ப்பவ ரில்லை"யென்றே
தலைகிறு கிறுக்குங்காமத் தணலெழ விரைந்து சென்றான்.

"நான் கயிலைமலையைப் பெயர்த்த வீரனன்றோ? அந்தப் பெண்ணை வீட்டுடன் பெயர்த்துக்கொண்டு வருவேன். அஃது எனக்கு எளிது. நான் எல்லாக் கலைகளையும் கற்ற புலவன், தந்திரக் கலையால் அவள் காதலையும் பெறவல்லேன். இதில் அங்கே ஒரு தடை

யும் இல்லை. இங்கும், இந்த உலகிலும் என்னை எதிர்ப்பவரில்லை" என்றான் இராவணன். காமத்தணலேறி அவன் தலை கிறுகிறுத்தது; விரைந்து சென்றான். (௬௬)

மாய மான்

௬௭, பிறகுறும் போரை யெண்ணான், பெண்மையின் சிறப்பை யெண்ணான்,
உறவுள தங்கை நாசி யுரைத்திடும் கருத்தை யெண்ணான்,
அறமறு காம நோயால், அறிவிழந் தரக்க னுள்ளம்
பிறமனை புகுந்த போதே பிடித்தது சனிய னம்மா!

சொந்தத் தங்கை யிழந்த மூக்கே, "இங்கே போனால் நீயும் மூக்கறுந்து வருவாய், அழிவாய், அவமானப்படுவாய்" என்று சொல்லும் அக்கருத்தை, எச்சரிக்கையை இராவணன் அறியான். அங்கிருப்பது கற்பிற் சிறந்த பெண்மை, அதைத் தீண்டினால் அழிவது உறுதி என்பதையும் எண்ணான். அப்படி அவளை அபகரித்தாலும் அதன் பிறகு வரும் போராட்டத்தையும் கருதான். தனக்கு மனைவி மண்டோதரியிருக்க, தருமமில்லாத காம நோயால் அறிவு கெட்டு அரக்கன் உள்ளம் பிறருக்குரிய மனைவியிடம் சென்றபோதே, அவனுக்குச் சனியன் பிடித்தது.........அதில் ஆச்சரியமில்லை. (௬௭)

௬௮. மானத்தை யுதறி,ஓர் விமானத்தி லேகி, மாய
மானைவிட் டதைத்து ரத்தி, மான்விழி மணாளன் ஏகத்
தானொரு துறவி வேடந் தரித்தொரு நொடியி லிங்கே
சானகி தனைக் கொணர்ந்து, சாந்தமா யிருக்கச் சென்றான்.

தான் ஓர் அரசன், வேதியன், தவம்புரிந்து வரம் பெற்றவன் என்ற பெருமைகளையெல்லாம் உதறி, மானங்கெட்டு ஒரு விமானத்தில் சென்றான். 'மாரீசனாகிய மாயமானை முன்னே விட்டுச் சீதையை மயக்குவது; அதை இராமன் துரத்திச் சென்றதும், தான் துறவி வேடம் போட்டுத் தனியேயிருக்கும் சீதையைத் தந்திரமாக ஒரு நொடியில் அள்ளிக் கொண்டு வந்து இங்கே இலங்கையில் அமைதியாக வைத்துச் சுகமாயிருப்பது' என்ற நினைப்புடன் இராவணன் பஞ்சவடிக்குச் சென்றான். (௬௮)

௬௯. வந்தது, சீதை நெஞ்சைக் கவர்ந்தது மாய மானும்;
பிந்துறு சூழ்ச்சி நோக்காள், "பிடித்ததைத் தருக" வென்றாள்.
தந்திர மானுந் தாவித் தாவிமுன் னோட, ராமன்
பந்தெனத் தாவிச் சென்று பாணம்விட் டதனைக் கொன்றான்.

மாய மாரீசமான் வந்தது; சீதையுள்ளத்தைக் கவர்ந்தது. அதற்குப் பிறகே மறைந்திருக்கும் அரக்கன் சூழ்ச்சியைப் பேதை அறியவில்லை. "எனக்கந்த மானைப் பிடித்துத் தாருங்கள்!" என்று நாதனை வேண்டினாள். மான் தந்திரமாக முன்னே முன்னே தாவியோடியது. இராமனும் பந்துபோன்ற லாகவத்துடன் தாவித் துரத்தி அம்புவிட்டு அதைக் கொன்றான். (௬௯)

௭௦. நெடுநெறி யிழுத்துச் சென்றே, யிளவலை நீளக் கூவிச்
சடுதியி லிறந்த மானின் சத்தத்தைக் கேட்டாள் சீதை;
"கெடுதலொன் றுற்ற தென்றன் கேள்வனின் குரலே" என்று
கடுகிடக் கொழுந்த னுரைக் கட்டளை யிட்டாள் மன்னோ.

மாயமான் இராமனை நெடுந்தொலை யிழுத்துச்சென்று "ஹா இலக்ஷ்மணா" என்று தம்பி பெயரைக் கூவி உடனே இறந்தது. அதன் சாங்குரலைக் கேட்டாள் சீதை; "எனது நாதனுக்கு ஏதோ ஒரு கெடுதல் வந்துவிட்டது. அதனாலேதான் அப்படிக் கூவினார். விரைவாகச் சென்று பாரும்!" என்று தன் கொழுந்தனை இலக்குமணனுக்குக் கட்டளையிட்டாள். அவனும் சென்றான். (எ0)

இராவண சந்நியாசி

எக. சினமுங் காமமும் சேர்ந்து கலகஞ்செய்
மனமறைத் தொரு மாயத் துறவியும்,
தனிமை கண்டு, சானகியை யண்மிமுன்
இனிமை பேசி யிராவணங் காட்டினான்.

சானகி தனிமையா யிருந்தாள். அதைக் கண்டான் ஒரு போலி மாயத் துறவி. அவன் மனதில் இராமன்மேல் சினமும், சீதைமேற் காமமும் சேர்ந்து கலகம் செய்கின்றன. அதைக் காஷாய வேஷத்தில் மறைத்துச் சானகியை யணுகி, உபசரிக்கப்பெற்று, முதலில் இனிமையான வார்த்தை பேசிப் பிறகு, தனது இராவணாகாரத்தை, இராட்சச குணத்தைக் காட்டினான். (எக)

எஉ. சாமி யென்றுப சாரஞ்செய் தாயினைக்
காம ராட்சசன் கையுடன் அள்ளியே
பூமி யஞ்சிடப் பூவை புரண்டழ,
நாம வேலை யிலங்கையை நாடினான்.

'சாமி வாருங்கள், இருங்கள்' என்று கனிவிருந்திட்டு உபசரித்த தாயை, சீதையை, அந்தக் காமராட்சசன் கையோடு அள்ளி விமானத்தில் வைத்து, பயங்கரமான கடல் சூழ்ந்த (பயங்கரத் தொழில் கொண்ட) அரக்கர் நிரம்பிய இலங்கையை நோக்கிச் சென்றான். திருமகள் நடுங்கிப் புரண்டழுதாள். அதைக்கேட்டு உலகமே அஞ்சியது. (எஉ)

ஜடாயு

எங. வீர நண்பன் சடாயு 'விடேன்' எனப்
பார்ம களைவிடுவிக்கப் பாய்ந்தனன்;
ஓர் துளி ரத்தம் உளமட்டும் வெய்ய
போர் கொடுத்துயிர் போக விழுந்தனன்.

இராமலக்ஷ்மணரின் நண்பன், சடாயு. அவன் வீரன்; பஞ்சவடியைக் காத்தவன். இராவணன் செயலைக்கண்டு, "எமது அன்னையை இக்கொடியன் தொடவிடேன்" என்று அவளை விடுவிக்கப் பாய்ந்தான்; ஒரு துளி இரத்தம் இருக்குமட்டும் அரக்கனுடன் தனியே நின்று போர் தந்து, அவன் செருக்கை யடக்கினான்; முடிவில் அவனது சந்திரகாச வாளால் சிறகிழந்து, கீழே குற்றுயிராக விழுந்தான். இச்செய்தியை இராமருக்கு அறிவித்து இறக்கவே அவன் உயிர் துடித்துக்கொண்டிருந்தது. (எங)

இராமன் சோகம்

எச. தாவு மான் விழத் தம்பியும் வந்ததும்,
தீவி னையெனச் சீதை மறைதலும்,
காவ லற்ற குடிலைக் கடுகினான்.
"ஆவி போயதந் தோ!" வென் றலறினான்.

முன்னே தாவிச்சென்ற மான் இலக்குமணன் பெயரைக்கூவி யிறந்ததும், உடனே தம்பி வந்ததும், ஏதோ மகத்தான தீச்செயலுக்கு அறிகுறியென்பதை சீதை மணாளனை இராமனும் அறிந்தான்; உடனே அதிவிரைவாக, தம்பியுடன் தனது பர்ணசாலைக்கு வந்தான். சீதையைக் காணவில்லை. "அந்தோ, என்னுயிரான தேவி, எங்கோ மறைந்து போனாளே!" என்று அலறினான். (எச)

எரு. கானின மரங்காள், செய்ய கனியுண்டு பாடும் புட்காள்,
மானிளம் பிணைகாள், மஞ்ஞை வளர்மலை யருவியீரே,
வான்சுடர் மணிகாள், உங்கள் வனப்பினும் வனப்பு மிக்க
தேன்மலர்த் திருவென் சீதை சேர்திசை யறிகிலீரோ?

இராமன் அத் தனிவனத்தில் தன்னைச் சூழ்ந்த இயற்கைப் பொருள்களையெல்லாம் வினவுகிறான்: "காட்டு மரவகைகாள், செங்கனியுண்டு பாடும் பறவைக் கூட்டங்காள், மான் இனங்காள், மயில்காள், மலையில் வளர்ந்துவரும் அருவி நீர்காள், வானத்தில் ஒளிரும் நட்சத்திர மணிகாள், உங்கள் வனப்பைவிட வனப்பு மிக்கவள் எனது சீதை; தேமலர் போன்று பொலியும் அழகி, திருமகள்! அவர் சேர்ந்துறையும் திசையினைச் சொல்லமாட்டீர்களா?" [சீதை மலர் குலுங்கும் மரங்கள்போல அழகானவள்; பறவைகள்போல சுயேச்சையான இன்பமுள்ளவள், இனிய குரலுடையவள்; மான் விழியாள், மயிலைப்போலச் சாயலுடையாள்; அருவி நீர்போலத் தெளிந்த உள்ளமுடையவள்; வான் சுடர்களைப்போல மாசற்ற கற்பொளி மிக்கவள்.] (எரு)

எசு. ஓடினான், அங்கு மிங்கும் உயிரனை யாளைக் கூவித்
தேடினான்; உயிரொ டுங்குஞ் சடாயுவாற் செய்தி கேட்டு,
வாடினான்; அள்ள வந்த கவந்தனை மடித்தான்; அன்பு
கூடிய சபரி காட்ட வானரர் குன்றஞ் சேர்ந்தான்.

இராமன் மேற்சொன்னவாறு உயிரைப்போன்ற சீதையைக் கூவி, அங்குமிங்கும் தம்பியுடன் அலைந்து தேடினான்; அப்போது, வழியில் சடாயுவை உயிர் ஒடுங்கும் தருணத்திற் கண்டான். சடாயு, "இராவணனே சீதையைத்தூக்கிச் சென்றான்" என்று சொல்ல அறிந்து, மேற்கொண்டு தேடிச்சென்றான். வழியில், கபந்தாசுரன் நீண்ட கைகளை நீட்டி இராமலக்ஷ்மணரைக் கொல்லப் பார்த்தான். அவனைக்கொன்று, இருவரும் சபரியாச்ரமம் சேர்ந்தனர். சபரி கனியுணவளித்து உபசரித்து, கிஷ்கிந்தைக்குப் பாதை காட்டினாள். இருவரும் அந்தக் குன்றைச் சேர்ந்தனர். (எசு)

வானர வீரர்

எஎ. மலைவளர் மல்லர், வீர வானரர்; சுயேச்சை மிக்கார்;
கொலைவளர் கொடுங்கோ லுக்குக் கூற்றனார்; அரக்கர் வாழும்
அலைவளர் இலங்கைக் கோமான் அஞ்சிடும் ஆண்மை யாளர்,
நிலையறம் வாழத் தொண்டு நெறியினிற் சிறந்தார் மன்னோ!

அந்தக் கிஷ்கிந்தாபுரி மலையில் வாழும் வானரர், சிறந்த வீரர்; போரில் தேர்ந்த மல்லர், சுதந்தரவுணர்ச்சி மிக்கவர்; கொலையே வளர்த்து உலகிற்குத் தீமைசெய்யும் கொடுங்கோல் மன்னரை எமன்போலப் பொருது வீழ்த்துவர். அரக்கர் வாழும் இலங்கைக்கு அரசனான இராவணன் அஞ்சும் ஆண்மையாளர். நின்று நிலைக்கும் தருமம் வாழவே, அருட்பணி வழியில், கருமமார்க்கத்திற் சிறந்து விளங்கினர். (எஎ)

சுக்கிரீவனுக்கு முடிசூட்டல்

எஅ. மதிமிகு பலவான் வீர மாருதி யெம்பிரானைத்
துதியுடன் வணங்கி, "யெங்கோன் சுக்கிரீ வனுக்கு மூத்தோன் ;
கொதிமன வாலி, செய்யுங் கொடுமைகள் தாங்கோ" மென்றான் ;
கதிதரும் வள்ளல் "அன்பீர், சுதந்தரங் காண்பீர்" என்றான்.

வானரருள் அறிவு மிக்க பலசாலியான வீர அனுமான் எம்பிரான் இராமனைத் துதி செய்து வணங்கி, "ஐய, எம் அரசன் சுக்கிரீவன். அவனுக்கு மூத்தவன் வாலி. அவன் மனம் பகைத்தியால் கொதித்துக்கொண்டே யிருக்கிறது. அவன் செய்யும் கொடுமைகளைத் தாங்கமாட்டோம்" என்றான். வருந்துவோருக்கு வழிகாட்டும் வள்ளலாகிய இராமபிரான், "அன்பர்காள், வாலியின் கொடுங்கோலிலிருந்து விடுபட்டுச்சுதந்தரம் காண்பீர்கள், உறுதி!" என்று அபயமளித்தான். (எஅ)

எகூ. தாரத்தைக் கவர்ந்து, தம்பி தலையையுங் குறிவைத் தேயாங்
காரத்தைக் காட்டிப் போர்செய் கடுமன வாலி தன்னை,
வீரத்தைத் திட்டி, யம்பால் வீழ்த்திச்சுக் கிரீவ னுக்கே
காரொத்த கருணை வள்ளல் கனமுடி சூட்டி னானே.

வாலி, தன் தம்பி சுக்கிரீவனுடைய மனைவி தாரயைக் கவர்ந்துகொண்டான்; அவன் தலையையும் குறிவைத்து உருட்டிக் கொல்ல ஆங்காரங் காட்டிக் கொடிய போர் செய்தான். இராமன் மழை மேகத்தைப்போலக் கருணை நிரம்பிய வீரவள்ளல். வாலியும் சுக்கிரீவனும் போர் செய்யும்போது தனது வீரத்தைத் திட்டி, ஓர் அம்புவிட்டு வாலியைக் கொன்று, சுக்கிரீவனுக்கே பெருமையான பொன்முடி (கனமுடி) சூட்டினான். (எகூ)

அ௦. நன்றியும் நடையு மிக்க நண்பனும் சுக்கி ரீவன்,
வென்றிசெய் யிராம னாணை விருப்புடன் சிரமே லேற்று,
வன்றிறல் கொண்ட வீர வானரப் படையை விட்டான் ;
தென்றிசை அனுமான் சென்றான் சீதையைத் தேட மாதோ !

சுக்கிரீவன் நன்றியும், நன்னடையொழுக்கமும் மிக்கவன், இராமனுக்கு அரிய நண்பனானவன். இராமனுக்குச் செய்யவேண்டிய கடமை, சீதாதேவியைத் தேடிக்கண்டுபிடிப்பதே. அதற்காக, இராமன் கட்டளையைச் சிரத்தில் ஏந்தி, சுக்கிரீவன் நாற்புறமும் போர்வலி மிக்க வீரரான வானரர் சேனையை ஏவிவிட்டான். தென்றிசையில் அனுமான் சென்றான், (அ௦)

இராம தூதன்

அக. ஆழியான் ஆழி பெற்றே ஆழியை யனுமன் றாண்டி
ஊழ்வினை சூழி லங்கை யூரெலாந் தேடித் தேடி,
பாழ்மன வரக்கன் சோலை பத்தினித் தெய்வங் கண்டு,
"வாழியி ராம" னென்றோர் மரத்திடை மறைந்தி ருந்தான்.

ஆக்ஞா சக்கரத்தையுடைய அரசனான (ஆழியான்) இராமனிடம், அனுமான் அடையாளமாகக் கணையாழி (ஆழி) பெற்றான்; தெற்கே படைகளுடன் வந்தான். சீதையை இராவணன் இலங்கையில் காவல் வைத்திருப்பதைச் சம்பாதியால் அறிந்தான். உடனே கடலைத் (ஆழி) தாண்டிச் சென்றான். அதரும வாழ்வால் தீய ஊழ்வினை சுற்றிய இலங்கை யூரெல்லாம் தேடித்தேடி, முடிவில் பாழடைந்த மனதுடைய அரக்கனான

இராவணனுடைய அசோக வனத்திற்குச் சென்ருன் ; அங்கே பத்தினித் தெய்வமான சீதையைக் கண்டான். "இராமன் வாழ்க" என்று மகிழ்ந்து, ஒரு மரத்தின் கொம்புகளிடையே மறைந்து அங்கே நடப்பதைப் பார்த்திருந்தான். (அக)

துரும்பே !

அஉ. பாவியர் பயமுறுத்தப் பதியினையெண்ணி யெண்ணி,
ஆவிசோர்ந் துடலி ளைத்தே யங்கணீர் பெருகி வாடுந்
தேவியை யந்த வேளைத் திருவிலி யரக்கன் பார்த்தே
நாவினு லிரந்து, பின்னே நடந்ததை யனுமன் கண்டான்.

சீதாதேவி அசோகவனத்தில் சிறை காத்தாள். சுற்றிலும் படுபாவிகளான அரக்கிகள் காவல் செய்து, "எங்கள் மன்னனுக்கு இணங்குகிருயா, என்ன ?" என்று பயமுறுத்தினர். சீதை தனது நாயகனை நினைத்து நினைத்து, உயிர் தளர்ந்து, உடல் மெலிந்து, கண்ணீர் பெருகி, வாடித் தவித்தாள். அச்சமயம் அறத்திருவற்ற அரக்கனுன இராவணன் அவளை அணுகிக் கண்டான் ; தனது தாபத்தையெல்லாம் நாவால் உரைத்தான். சீதை அவனை முகமெடுத்தும் பார்க்கவில்லை. இராவணன் வந்தவழி நடந்தான். அங்கே நடந்ததெல்லாம் அனுமான் கண்ணுரக் கண்டான். (அஉ)

அ௩. "வெள்ளிமா மலை யெடுத்தேன், வேழங்க ளெட்டும் வென்றேன்,
தெள்ளிய மறைகள் கற்றேன், தேவரை யேவல் கொண்டேன் ;
வெள்ளநீ ருலகை யாளும் வேந்தன்யான் ; எனைக்கண் பாராய் !
அள்ளியென் சிரத்தே வைத்துன் அழகினுக் கடிமை செய்வேன்."

"பெண்ணே, நான் சாமானியனன்று : நான் வெள்ளி மலையை எடுத்த வீரன் ; எட்டுத்திசைகளையும் காக்கும் எட்டு யானைகளையும் முட்டிப்பொருதி வென்ற சூரன் ; தெளிவான அறிவைச் சொல்லும் எல்லா வேதங்களையும் கற்றவன் ; தேவர்களைக்கூட என் சேவகராகக்கொண்டு வேலை யேவுகிறேன். நான் கடல்சூழ்ந்த இந்த உலகிற்கு வேந்தன். என்னை ஒரு கடைக்கண் பார் ! உன்னை அள்ளி என் தலைமேல் வைத்து, உன் கட்டழகிற்கு அடிமை செய்வேன்." (அ௩)

அச. விண்ணெட்டப் புகழ்ந்து தன்னை வேட்கைகொண் டிறைஞ்சு வோனைக்
கண்ணெட்டக் காணுள் ; பின்னே கதுமெனத் திரும்பிக் கையால்
மண்ணெட்டுந் துரும்பெடுத்து வீசித்தன் மனத்தில் வேகும்
புண்ணெட்டும் சொல்லைச் சொல்லிப் "போ"வென்ருள் புனித சக்தி.

தன்னை வானெட்டப் பிரமாதமாகப் புகழ்ந்து ஆசை மீறிக் கெஞ்சி நிற்கும் இராவணனைச் சீதை கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. பின்னுல் சட்டென்று திரும்பி, கையால் மண்ஒட்டிய ஒரு துரும்பை யெடுத்து அவனைப் பாராது முன்னுல் வீசினுள். ['அடா, உன் உடல் மண், உன் புகழெல்லாம் துரும்புக்குச் சமானம்' என்பது அதன் கருத்து.] பிறகு மனத்தில் தணலும் புண்பட்ட சொற்களைச் சொல்லி, "இங்கே நில்லாதே ; உன் எண்ணம் பலிக்காது, போ போ!" என்ருள் புண்ணிய சக்தியான சீதை. (அச)

அடு. "சீதையே சித்தம் வைப்பாய்" என்றினுந் தீயன் காமப்
போதையி லுளறி நின்ருன். பூமகள் துரும்பைப் பார்த்தே,
"சீதையை யன்றுன் சீரும் தேசமும் சாம்ப ராகும்
தீதனைத் திருடி வந்தாய், திருவிலி போபோ"வென்ருள்.

தீய இராவணன், காமவெறி பிடித்து மீண்டும், "சீதையே, என்மேல் சித்தம் வைத்திரங்கு!" என்று உளறி நின்றான். "அட திருவிலி மூடா, போ போ, வேதத்தைக் கரைகண்டதாகப் பிதற்றும் நீ, பரதாரத்தைத் திருடி வந்தாய். நீ சீதையைத் திருடவில்லை; உன் சீரும், செருக்கும், நாடும் வெந்து சாம்பலாகும் தீயையே திருடிவந்தாய்—நானே உனக்கு நெருப்பு" என்றாள். (அரு)

அசு. "புண்ணியன் அற்றம் பார்த்துப் பொய்த்துற வேந்தி யென்னை
மண்ணுடன் பெயர்த்து வந்து மார்தட்டிப் பேசுகின்றாய்.
விண்கதிர் மலர்த்தும் பூவை மின்மினி மலர்த்த லுண்டோ ?
பெண்மையின் பெருமை காண்பாய், ஆண்மையின் பிடி மூந்தாய்..."

"ஆண்மைக்குரிய வீரப்பெருமையை இழந்தவனே, இனி நீ பெண்மைக்குரிய கற்பின் பெருமையைக் காண்பாய். புண்ணியனாகிய என் கணவன் இல்லாத சமயத்தில் தனியளான என்முன் போலித் துறவியாக வந்து, பாசாங்கு செய்து என்னை முரட்டுத்தனமாக மண்ணுடன் அள்ளி வந்தாய். என் நாயகனுக்குப் பயந்தே அப்படிச் செய்தாய். இங்கே ஆதரவற்ற ஒரு பெண்முன், மார்தட்டிச் சம்பமடிக்கிறாய். உன்னை நான் கண்ணெடுத்தும் காணேன். சூரியனைக்கண்டு மலரும் தாமரை மின்மினியைக் கண்டு மலருமா ?" (அசு)

அஎ. பத்தினி யினைய சொல்லப் பதகனும் "திங்க ளொன்றில்
சித்தம்வைத் திலையேல், உன்னைச் செறுவ"னென் றுருவி நீண்ட
கத்தியைக் காட்டிச் சென்றான். கலங்கிய கற்புத் தெய்வம்,
அத்தறி இராம நாமம் கேட்டனள்! அனுமன் வந்தான்!

பத்தினியான சீதாதேவி இத்தகைய வார்த்தைகள் இடித்துச் சொன்னதும் ஆத்திரம் வந்துவிட்டது. "இன்னும் ஒரு திங்கள் பொறுப்பேன். நீ மனம் வைத்து எனக்கு இணங்காவிட்டால், உன்னைக் கொல்வேன்!" என்று நீண்ட வாளை உருவிக்காட்டி மிரட்டிச் சென்றான் இராவணன். கற்புத் தெய்வமாகிய சீதை மனங்கலங்கி உயிர் துடித்தாள்; அச்சமயம் இராமநாமத்தைக் கேட்டாள்! மரத்தில் ஒளிந்திருந்த அனுமானும் அவள்முன் வந்து நின்றான்! (அஎ)

ஆழிகண்ட தேவி!

அஅ. "அன்னையே இராம தூதன், அனுமன்யான், காண வந்தேன்;
உன்னையே யெண்ணி யெம்மான் உளந்துடித் துருகு கின்றான்;
அன்னவன் ஆழி கொள்வாய். அறிந்ததும் உனது சூழல்,
அன்னரே யரக்கர் வீழ்ந்துன் அருந்தவம் பலிக்கும்" என்றான்.

"அன்னையே நான் ஸ்ரீ ராமதூதன் என் பெயர் அனுமான். உன்னைக் காணவே கடல் தாண்டி வந்தேன். எம்பெருமான் ஸ்ரீராமன் உன்னையே எண்ணி உளந்துடித்து உருகுகின்றான். அடையாளத்துக்காக அவன் அனுப்பிய கணையாழி இது. பெற்றுக்கொள்வாயாக! நீ இருக்குமிடம் இத்துணை நாள் அறியாததால் இலங்கையரக்கர் உயிருடன் இருக்கின்றனர். உன்னை இராவணன் சிறையிட்ட இந்த இடத்தை அறியவேண்டியதுதான் தாமதம், உடனே வானர சேனையுடன் இராமபிரான் புறப்பட்டுப் போர் தொடுப்பான்; அரக்கர் குலத்துடன் வீழ்வார். உனது அரிய கற்புத் தவமும் பலிக்கும்" என்று அனுமான் சொன்னான். (அஅ)

அகூ. ஆழியைக் கண்ட தேவி, அங்கணில், அகத்தில் ஒற்றி
"வாழியெம் பெருமான்! வீர மாருதி வாழ்க!" வென்றாள்.
ழூழ்கிய கவலை யற்று, நகை மலர் முகத்தைக் காட்டி,
ஆழியான் செய்தி கேட்டுத் தன்னிலை யறியச் சொன்னாள்.

கணையாழியைக் கண்ட சீதாதேவி அதை வாங்கி ஆவலாகக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்; (தன் நாதனைக் கண்ணாரக் கண்ட வுணர்ச்சி கொண்டாள்.); பிறகு மார் பகத்தில் ஒற்றிக்கொண்டாள். (அங்கே இராமனுக்கே இடம், அவனையே உள்ளக் கோயிலில் வைத்து வணங்குவதற்கடையாளமாக அப்படிச் செய்தாள்.) பிறகு "எம்பெரு மானே நீ வாழி!" என்று நாதனை வாழ்த்தினாள். தனக்கு நல்ல செய்தியும், அடையாளமும் கொண்டு வந்த தூதனை "வீர ஹனும, நீ வாழ்க!" எனப் போற்றினாள். பிறகு தன் மனம் மூழ்கியிருந்த கவலைக்கடலை விட்டு விலகி, மலர்போல நகைக்கும் திருமுகங்காட்டி, ஆக்ஞா சக்கரத்தைக் கொண்ட ஸ்ரீராமமூர்த்தியின் (ஆழியான்) செய்தி, தான் வந்தபிறகு நடந்த வரலாறு எல்லாம் கேட்டுத் தனது நிலையையும் சொன்னாள். (அகூ)

கூ0. நாதனை வாழ்த்திச் சூளா மணியினை நல்கி, யின்னும்
மாதமொன் றுயிர் வகிப்பேன் வருகையை நோக்கி, உண்மை
ஓதுதி" யென்று சொன்னாள்; "உணர்ந்தனன் உரைப்பே" னென்று,
சீதையை வணங்கி யந்தத் தீரனும் விடைபெற்றானே.

தன் பிராணநாதனது கருணையை வாழ்த்தித் தன் சேலையில் முடித்த சூளா மணியை யவிழ்த்து, அடையாளமாகக் கொடுத்து, "அன்பா, எம்பிரான் வருகையை எதிர் பார்த்தே இன்னும் ஒரே மாதம் உயிர் வைத்திருப்பேன்; நாதனிடம் சொல் இதை!" என்று விடை கொடுத்தாள். "அன்னையே, தங்கள் நிலையையும் விருப்பத்தையும் உணர்ந்தேன்; திருவுளத்தை அங்கே தெரிவிப்பேன்" என்று சீதையை வணங்கி அந்தத்தீரனான அனுமான் விடை பெற்றான். (கூ0)

இராவணா!

கூக. வருகின்ற போரின் வெம்மை வஞ்சகர் அறிய...வீரன்,
அருநிழற் பொழி லழித்தான்; அடுமரக் கரைய ழித்தான்.
வெருவு நாக பாசம் வீசிமா ருதியைக் கட்டிச்
செருவலி யரக்கன் முன்னே யிந்திர சித்தன் சென்றான்.

நாளை வரும் இராவண யுத்தத்தின் சுவையை இன்றே வஞ்ச அரக்கர் உணர வேண்டுமென்று நினைத்தான் அனுமான். உடனே மரங்களைப் பறித்து வீசி, அசோக வனத்தை அழித்தான்; தன்னைக் கொல்லவந்த அரக்கர் படையை அடித்து வீழ்த்தி அழித் தான். அரக்கர் பலர் அழிந்தபிறகு, இந்திரசித்தன் போர்புரிந்தான். அவன் மாருதியை நாக பாசத்தைவீசிக் கட்டி போர்வலி மிக்க இராவணாசுரன் முன்னே இழுத்துச்சென்றான். (அடுதல்-கொல்லல்.) (கூக)

கூஉ. எரிவிழி யாலே நோக்கி, இடியெனச் சிரித்த ரக்கன்
வரிசையாய்த் தனது சீரும் வலிமையும் வரமுஞ் சொல்லி,
"அரியகா வழித்தாய்; என்றன் அரக்கரைச் செற்றாய்; நீயார்?
தெரிவுறச் சொல்வா" யென்னத் தீரனுங் "கேளாய்!" என்றான்.

இராவணுசுரன் அனுமானைச் சினம் எரியும் கண்ணால் பார்த்து, இடிபோன்ற குரலையுயர்த்தி, தனது சீர், செல்வம், புகழ், மூவுலகாளும் பலம், படைவலி, தான் சிவனிடம் பெற்ற வரங்கள் எல்லாம் ஒன்றுவிடாமல் வரிசையாகச் சொல்லி "இப்படிப்பட்ட எனது அரிய சோலையை அழித்தாய்; அரக்கப் படையைக் கொன்றாய்; நீ யார்? எல்லாம் விபரமாகச் சொல்" என்றான். தீரனான அனுமான் "அதற்குத்தானே வந்தேன். சொல்லுகிறேன், கேள்!" என்று தொடங்கினான். (கூஉ)

கூ௩. "வெய்யமா தவம் புரிந்தும், வேதவேள் விகளைச் செய்தும்,
கையினால் மலை பெயர்த்தும், கண்ணுதல் வரங்கள் பெற்றும்,
வையமும் வானு மஞ்ச வன்கொடுங் கோல் பிடித்தும்,
ஐயநீ காமத் தாலே யனைத்தையுந் தோற்றொ ழிந்தாய்.

"ஐய, இராவணா, நீ கொடிய தவஞ்செய்தாய்; வேதத்திற் சொல்லிய வேள்விகளைச் செய்தாய்; கைலைமலை பெயர்த்தாய்; சிவன் மகிழ்ந்தளித்த வரங்கள் பெற்றாய்; வானும் பூவும் அஞ்ச வலிய கொடுங்கோல் பிடித்தாய். என்றாலும் உனது அடங்காக் காமத்தால் எல்லாப் பெருமையும் இழந்து, வாழ்வில் படுதோல்வியடைந்து ஒழிந்துபோனாய், (கூ௩)

கூச. "வன்றவம் புரிந்துங் கெட்டாய், வாழ்ந்திட விருப்ப மென்னில்,
இன்றுநீ தேவி தன்னை யிராமன்முன் சேர்த் திரந்து,
நன்றவன் சரண்பு குந்து, நாரியர் ஆசை விட்டு
வென்றகங் காரந் தன்னை வேதிய னாவா" யென்றான்.

"இராவணா, நீ அந்தணனாகப் பிறந்தும், வன்றவம் புரிந்தும், இப்படி மதிகெட்டுப் போனாயே! இனி வாழ விரும்பினால், இன்றே சீதாதேவியை, நீ இராமன்முன் சேர்த்து' மன்னிப்புக் கேட்டு, நன்றாக மனமார அவனை அடைக்கலம் புகுந்து, பெண்ணாசையை விட்டு, அகங்காரத்தை வென்று, உன் பெருமைகளைச் சம்பமடிக்காமல், ஒழுக்கமுள்ள வேதியனாக (வேதம் அறிந்து நிற்கும் அந்தணனாக) வாழ்வாயாக!" என்றான் அனுமான். (கூச)

கூரு. "ஆரடா புத்தி சொன்னாய், அறிவிலிக் குரங்கே!" யென்று
பேரிடி முழக்கஞ் செய்து, "பின்புறந் தீக்கொ ளுத்தி,
ஊரைவிட் டிவனை முன்னே ஓட்டுமின்! வருக ஓர்கை
போரினிற் காண்பேன் இன்னோன் புகழ்மனி தனையும்" என்றான்.

இராவணன், "யாரடா எனக்குப் புத்திசொல்ல வந்தாய்? அறிவில்லாத குரங்கு போன்றாய்" என்று பெரிய இடிமுழக்கஞ் செய்தான். தன் கிங்கரர்களை அழைத்து "இவன் பின்புறத்தில் தீயைக்கொளுத்தி ஊரைவிட்டு விரட்டுங்கள்!" என்று ஆணையிட்டான். "வரட்டும்போர்; இவன் புகழும் அந்த மகாமனிசனை, இராமனைப் போரில் ஒரு கை பார்த்துவிடுகிறேன்" என்று உறுமினான். (கூரு)

கண்டேன்! கண்டேன்!

கூசா. கொளுத்திய தீயால் ஊரைக் கொளுத்திவந் துலக மெல்லாம்
களித்திடக் "கண்டேன் கண்டேன் கற்பினுக் கனியை!" யென்றே
துளித்தருட் கண்ணீர் பெய்து, தூயமெய் வீரத் தூதன்,
ஒளிப்பணி தந்தி ராமன் உயிர்சிலிர்த் திடமுன் னின்றான்.

அரக்கர் கொளுத்திய தியால், உண்மையான சுத்த வீரன், அனுமான், இராவணன் ஊரையே கொளுத்திவிட்டுத் திரும்பிவந்து உலகமெல்லாம் உள்ளங்களிக்க, "கண்டேன் கண்டேன், கற்பினுக்கணியான சீதையைக் கண்டேன்!" என்று மனந்துளிர்த்து, அருட் கண்ணீர் ஊற்றி, ஒளி வீசும் சிந்தாமணியையும் பணிதந்து, அடிபணிந்து, இராமன் உயிர் சிலிர்த்து மகிழ முன்னே நின்ருன். (கூசு)

கூஎ. சீதையின் றவமுஞ் சொல்லுந் தெளிவுறச் சொல்லி, யின்னும்
"மாதமொன் றதனில் அந்த மமதைகொள் அரக்கர் வீழப்
பூதலத் தறமுங் கற்பும் வீரமும் பொலியச் செய்வோம்;
ஆதலின் எழுக சேனை" யென்றனன் அன்பு வீரன்.

அன்பு வீரனை அனுமான், சீதையின் சத்தியாக்கிரக விரதத்தையும், நிலையையும் அவள் சொன்ன செய்தியையும் சொல்லி, "இன்னும் ஒரு மாதத்தில் அந்த அகங்காரம்பிடித்த அரக்கர் வீழப் போர் வென்று, ஜயக்கொடி நாட்டி, உலகில் அறமும், கற்பும், வீரமும் விளங்கச் செய்வோம்; எழுக வானர சேனை!" என்று கர்ச்சித்தான்......சேனை எழுந்தது! ( )

இலங்கைப் போர்

கூஅ. ஆண்டகை யனுமன், சாம்பன், அங்கதன், சுக்கி ரீவன்;
ஈண்டிய சேனை வெள்ளம் இரைகடல் அணையொன் றிட்டுத்
தாண்டிடச் சீதை நாதன் தம்பியோ டிலங்கை சேர்ந்தான்,
மூண்டது கொடிய வெம்போர்; முடிந்தது, தீயர் கூட்டம்.

ஆண்மைமிக்க புகழ்பெற்ற அனுமான், அனுபவம் மிக்க ஜாம்புவான், வீரம் மிக்க அங்கதன், அரசன் சுக்கிரீவன் - இவர்கள் கூடிய வானர சேனைவெள்ளம், ஆர்கலிக்கும் தென்கடலைப் பாலங்கட்டித் தாண்டி அக்கரை சேர, இவர்களை நடத்திச் சீதை மணாளன் இராமன், தம்பி இலக்குவனுடன், இலங்கையை அடைந்தான். உடனே கொடிய வெய்ய இராம ராவண யுத்தம் மூண்டது. தீமை செய்த அதர்மக்கூட்டம் ஒழிந்தது. (கூஅ)

கூகூ. மந்திரத் தலைவர் தம்மைத் தன்மன வழி நடத்துந்
தந்திர மன்றி, வேறு தருமமொன் றறிகி லாதான்;
முந்துகும் பகர்ணன் சொன்ன முதுமொழி கொள்ளான்; பின்னே
சிந்தனை தூய தம்பி வீடணன் செஞ்சொல் ஏலான்.

இராவணன், மந்திரிகள் சொல்லைக்கேளான்; வணங்காமுடி மன்னன்; தனது மனம் போன போக்கிலேதான் அவர்களைத் தந்திரமாக இழுத்துச் செல்வான். உலகிற்கிதமான தருமத்தை அவன் அறியான். அவனுக்கு முன்னே தம்பி கும்பகர்ணன் "சீதையை விட்டு விடு!" என்று உபதேசித்துப் பல முதிய நீதிகளைச் சொன்னுன்; கேட்கவில்லை. (பிறகு தானும் அண்ணனுடனிருந்தே போர் புரிவதெனத் தீர்மானித்தான்.) தூய சிந்தனை கொண்ட விபீஷணன், பின்பு செய்ய நன்மொழி கூறி "சீதையை இராமனிடம் ஒப்பித்து மன்னிப்புக் கேள்!" என்று சொன்னுன். 'நீ யாரடா எனக்குப் புத்தி சொல்வது?" என்று அதையும் இராவணன் ஏற்கவில்லை. (கூகூ)

க00. அறமனை யானைத் தேடி, வீடணன் அடைந் தரக்கர்
மறவினை யெல்லாஞ் சொன்னுன். மாண்புறு வீர வள்ளல்,
திறமுள தூதுவிட்டுந் தேர்கிலான் அரக்கன்; காம
மறலியாட் கொண்ட பின்பு மந்திரம் பலிப்ப துண்டோ?

விபீஷணன் தருமமேபோன்ற இராமனைத் தேடிச் சரண் புகுந்தான். அவனே அரக்கரின் போர்வினை அல்லது அதருமச் செயல்களையும் சூழ்ச்சிகளையும் முற்றிலும் இராமனுக்குச் சொன்னான். இராவணனைக் கொல்ல இராமனுக்கு வழி தெரியும். இருந்தாலும், பெருந்தன்மையுள்ள தருமவீரவள்ளலான ஸ்ரீராமன், சொல்லுறுதிமிக்க அங்கதனைத் தூதனுப்பி மறுபடியும் சமாதானமாகப் போகச் சொன்னான். அதையும் அரக்கன் அறியவில்லை. காமமே எமனாகவந்து, விஷம் தலைக்கேறியபிறகு, மந்திரமும் புத்திமதியும் பலிக்குமா? (௧௦௦)

௧௦௧. எழுந்தது ராம சேனை. எறிதிரைக் கடலைப் போலே,
எழுந்தது போர் முழக்கி இராவணன் அசுரச் சேனை......
கொழுந்தெரி கணைகள் பாய்ந்து கொன்றன கூற்றைப் போலே.
விழுந்தனர் அரக்கர். "நீதி வெல்"லெனத் தருமம் ஆர்க்க!

பிறகே இராமசேனை முரசுகொட்டி யெழுந்தது. அதை எதிர்க்க அலை எற்றி மோதும் புயற்கடல்போலப் போர்முழக்கத்துடன் இராவணனுடைய அசுரசேனை எழுந்தது, இரண்டு சேனைகளுக்கும் பலமான போர் நடந்தது. தீக்கொழுந்தெரியும் அம்புகள் பாய்ந்து இரண்டுபக்க வீரரையும் கூற்றைப்போலக் கொன்றன. ஆனால் அரக்கரே தோற்று வீழ்ச்சி யடைந்தனர். "நீதி வெல்க!" என்று தருமதேவதையே ஆர்த்தாள். (௧௦௧)

௧௦௨. பட்டனர் தலைமை வீரர், பட்டனன் கும்ப கர்ணன்.
பட்டனன் அதிகாயன்பின் பட்டனன் பாசன், அந்தோ,
பட்டனன் பெரும்போர் செய்து படைமிகு மேகநாதன்.
பட்டது மூல சேனை; பட்டினும் உணரான் வெய்யோன்.

படைத்தலைவர்கள் போர்செய்து விழுந்திறந்தனர். கும்பகர்ணன் இறந்தான். அதிகாயன், பின்பு பாசன் ஆதியோர் பலமாகப் போர்செய்து பட்டனர். பெரும்போர் கொடுத்து, படைவலி மிக்க இந்திரசித்தும் இறந்தான். இவ்வளவு நஷ்டப்பட்டும் கொடிய இராவணன் நியாயத்தை உணரவில்லை. அந்தோ! (௧௦௨)

௧௦௩. "தொடுத்தபோர் நிறுத்தேன்; அந்தத் தோகையுஞ் சிரிப்பாள்" என்றே
எடுத்தனன் சக்தி பெற்ற படைக்கலம்; "இராமன் விழப்
படுத்ததும், எனதே யந்தப் பத்தினி"யென்று சொல்லி
விடுத்தனன் அம்பு மாரி; விதியுடன் போர்பு ரிந்தான்.

"நான் தொடுத்த சண்டையை நிறுத்தமாட்டேன். நிறுத்தி எதிரிக்கு இணங்கினால், நான் காதலிக்கும் அந்தப்பெண், 'இவ்வளவுதானா மலையைப் பெயர்த்த உன் சமர்த்து! என்று சிரிப்பாள்!' என்று இராவணன். சக்திபெற்ற சந்திரகாசம் முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, எஞ்சியுள்ள சேனாபலத்துடன் புறப்பட்டான். அப்போதும், "இராமன் போரில் விழ, அவனை நான் கொல்வேன். உடனே அவனது தரும பத்தினி எனக்குத்தான்" என்று சொல்லியே கணைமாரி விடுத்தான். ஆம்; அவன் தலைவிதியுடனேதான் இறுதிப் போர் செய்தான். (௧௦௩)

௧௦௪. கைகளின் குப்பை, மேலே கால்களின் குப்பை, விண்ட
மெய்களின் குப்பை, வீரன் வெட்டிய தலையின் குப்பை;
வெய்யவெங் கணையின் குப்பை, மீதொரு குப்பை யாகப்
பொய்யுடல் விழக் காற்றுப் போனது, வீணன் ஆவி!

போர்க்களத்தில் கைகள், அவற்றின்மேல் கால்கள், விண்டு குவிந்த உடல்கள், வீரனான இராமன் வெட்டிய தலைகள், கொடிய தீக்கணைகள்—எல்லாம் குப்பையாகக் குவிந்தன. அக்குப்பைமேல் குப்பையாக இராவணனது பொய்யுடல் தொப்பென்று வீழ்ந்தது. அதில் வீணாக உலகிற்குப் பாரமாக வாழ்ந்த உயிர், காற்றைப்போல் மறைந்துபோனது. ( )

வெற்றி முழக்கம்!

கரு௫. ஆர்த்தன வெற்றிச்சங்கம்! ஆர்ந்தனர் தேவர் கூடி!
ஆர்த்ததிவ் வுலக மெல்லாம், ஆயிரம் புகழியம்பி!
ஆர்த்தனர் "ஜயராம்" என்றே வானரர்; அனுமான் சென்றே
போர்த்தொழில் வென்ற செய்தி தாயிடம் புகன்றான் அன்றே.

வெற்றிச் சங்குகள் முழங்கின. தேவர்கள் கூடி ஜயகோஷம் செய்தனர். இவ்வுலகமெல்லாம் அசுரபயம் நீங்கியதென்று ஆர்த்தது. ஸ்ரீ ராமபிரானின் புகழை ஆயிரம் வகையாகச் சொல்லி, வானர வீரர் "ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம்" என்று ஆர்த்தனர். அனுமான் முதலில் அன்னை சீதாபிராட்டியிடம் சென்று, "போர்வினை இராமனுக்கே வெற்றியாக முடிந்தது!" என்று சுபசமாசாரஞ் சொன்னான். (கரு௫)

சோபனம்

கரு௬. "வென்றது ராம னம்புன் விரதத்தீ சுட்ட வெய்யோர்
பொன்றினர், புக ழுனக்கே, பூமக ளேயுன் கற்பு
நின்றது; தரும மிங்கு நிலைத்தது; நல்ல காலம்
துன்றிய துலகுக் கெல்லாம்: சோபனஞ் சொல்ல வந்தேன்.

"அன்னையே, இராமபாணம் வென்றது. உன் பதிவிரதாக்கினி சுட்ட கொடியர் இறந்தனர். இந்தப் புகழ் உனக்கே. உன்னாலேதான் அசுரஸம்ஹாரம் நடந்தது. பூமகளே, உனது கற்பு நிலைத்தது. இங்கே அறமும் நின்று நிலைத்தது. உலகுக்கெல்லாம் நல்ல காலம் வந்தது (துன்றியது). இச்சுப செய்தி சொல்லவே நான் இராமனாணையால் வந்தேன். (கரு௬)

கரு௭. "நிலமகள் கண்ணீர் சோர, நிறைதவர் புண்ணீர் சோரக்
கலைமகள் வெட்கக் காமன் கணையினாற் கண்ணி ழந்தே,
குலமகள் உனைக்க வர்ந்தான், கொத்துடன் குலம ழிந்தான்.
நலமிலாக் கொடுமை செய்தார், யாவரே நன்று வாழ்ந்தார்?

"இராவணாசுரன், பூமாதேவி பாபச்சுமை தாங்காது கண்ணீர் வடிக்க, நிறைந்த தவயோகியர் 'அசுரரால் தவம் பாழாகிறதே! என்று இரத்தக்கண்ணீர் விட்டழ, வேதக் கலைமகள் 'நம்மை உபாசித்த இவனே இப்படிச்செய்தான்!' என்று வெட்கப்பட, காமபாணத்தால் அறிவுக்கண் கெட்டு குலமகளாகிய உன்னைக் கவர்ந்தான். அக்கொடியன் கொத்தோடு குலம் முழுதும் அழிந்தொழிந்தான். நலமில்லாத, புண்ணியமில்லாத கொடுமைகளைச் செய்தவர் எவரே உலகில் நன்றாக வாழ்ந்தார்? (கரு௭)

கரு௮. "மூக்கினை யிழந்த மூளி மூட்டிய காம வெந்தீ
தாக்கிய தலையு நெஞ்சுந் தரையினில் உருண்ட காட்சி
நோக்கிடாய், கணவனன்றி நோக்குவே றில்லாத் தாயே!
வாக்கினால் இராமன் சொன்ன வாய்மையும் பலித்ததம்மா.

"மூக்கையிழந்த மூளியான சூர்ப்பணகை வந்து மூட்டிய காமத்தீ, இராவணன் தலையையும் நெஞ்சையுந் தாக்கியது. இரண்டும் மண்ணில் உருண்டுகிடக்கும் காட்சியைப் பார்! கணவனையன்றி மற்றெதையும் பற்றுதலுடன் காணுக் கற்பரசியே. இராமபிரான் முனிவருக்கு வாக்களித்த சத்தியவசனம் (அபயவாக்கு) இன்று பலித்தது! (௧0அ)

௧0௯. " சுதந்தரும் அரக்க ராலே கவலைகொள் மாந்தர்க் கெல்லாம்
சுதந்தரம் அளிக்க வில்லுஞ் சொல்லுங்கொண் டவதரித்தான் ;
மதந்தரும் அரக்கன் மார்பை மண்புழு வுண்ணச் செய்தான் ;
இதந்தரும் தரும மன்னன் இராகவன் வாழ்க மாதோ !

"கோபங் கொதிக்கும் அரக்கர் கொடுமையால் உலகிலுள்ள மாந்தரெல்லாருமே கவலை கொண்டிருந்தார்கள். அவர்களுக்குச் சுதந்தரம் அளித்து பயமின்றி வாழச்செய்யவே, ஐயன் கோதண்டமும், அபயவாக்கும் கொண்டு அவதரித்தான். அவனே மமதையேறிய இராவணாசுரன் மார்பை மண்புழுக்கள் அரித்துத் தின்னும்படி செய்தான். அவன் எல்லாருக்கும் சுபந்தரும் தருமமே போன்றான். அத்தகைய இராகவன் வாழ்க!" (௧0௯)

விரதம் பலித்தது

௧௧0. பத்தினித் தெய்வங் கேட்டுப் பரமவா னந்த மெய்திச்
" சத்திய விரன் எம்மான் சரத்தினல், உலக மஞ்சுந்
தொத்துநோய் ஒழிந்த தென்றன் சோகமோ டசோகின் கீழே,
மெய்த்தவம் புரிந்த தாலே பெண்மையும் விளங்கிற் றென்றாள்.

அனுமான் கொண்டுவந்த சுபசெய்தியைக் கேட்டாள் பத்தினித் தெய்வமான சீதாதேவி; பரமானந்தங் கொண்டாள். " சத்தியவீரனான என் முதல்வன் இராமன், தனது கணையால், உலகெல்லாம் அஞ்சி நடுங்கும் அசுரரான தொத்துநோய் ஒழிந்தது. எனது சோகமும் அத்துடன் ஒழிந்தது. இந்த அசோக மரத்தின்கீழே நான் புரிந்த உண்மைத் தவம், சத்தியாக்கிரக விரதம், பெரிய பலனைத் தந்தது. அதனால் பெண்மையின் பெருமை உலகிற்கெல்லாம் விளங்கியது. (௧௧0)

௧௧௧. " சிந்தையிற் பெரியை ; வீரச் செய்கையிற் பெரியை ; ஓங்கும்
புந்தியிற் பெரியை ; கற்ற புலவரிற் பெரியை ; ஈங்கு
வந்தனை கடலைத் தாண்டி வரதனின் ஆழி கொண்டு
தந்தனை ; தந்த போதே தருமமும் வென்ற தென்றாள்.

"அனும, நீ சிந்தனையில் உயர்ந்தவன்; வீரச்செயல்களில் பெரியவன்; ஓங்கி வளரும் புத்தியிற் பெரியவன்; கல்விகற்ற புலவரிற் பெரியவன்! கடலைத் தாண்டி இறைவனின் கணையாழியைக் கொண்டுவந்து எனக்குத் தந்தாய். தந்தபோதே தருமமும் வெற்றிபெற்றுவிட்டது என்றாள் சீதை. (௧௧௧)

௧௧௨. " உண்மையே வயிர வாளாய், உறுதியும் அன்புங் கொண்ட
திண்மையே திரண்ட தோளாய்த் தீரமே படையாய்ச் செய்ய
வண்மையே நெஞ்சாய், நல்ல தருமமே வாளியாகிக்
கண்ணிலங் காத்த கண்ணன் கண்மணி போன்றாய் வாழி !

கருணைக்கண்ணனான இராமபிரான் இந்த இடமகன்ற உலகைக்காத்தான். அவனுக்கு உண்மைதான் உறுதியான வயிரவாள்; வைராக்கியமும் அன்புங்கொண்ட

திண்மையே திரண்ட தோள் ; திரமே படை ; வண்மையே உள்ளம் ; நல்ல தருமமே அம்பு. அத்தகைய இராமபிரானுக்குக் கண்மணி போன்ற வீரமணியே நீ வாழ்க ! (கக௨)

கக௩. "துயர் படர் காட்டை யெல்லாந் தூருடன் சுட்டெ ரித்தே
உயர்நல மோங்க வள்ளல் உயர்த்திய கொடிபி டித்தாய்.
அயர்வற இராம நாம மாகிடும் அமுதால் இன்பப்
பயிரினை வளர்த்தாய் ; தூய பண்பநீ வாழி" யென்றாள்.

"உலகில் துன்பம் படரும் அசுரக்காட்டைத் தூருடன் சுட்டெரித்து, கருணைவள்ள லான இராமன் உயர்த்திய உயர்ந்த நன்மைதரும் அறக்கொடியை, நீயே தைரியமாகத் தாங்கினாய்; ஓயாமல் இராம நாமமாகிய அமிர்தத்தைப் பெய்து, இன்பப் பயிரை வளர்த் தாய். பரிசுத்தமான நண்பனே, நீ நீடூழி வாழ்க!" (கக௩)

இராம பட்டாபிஷேகம்

கக௪. தீயினுந் தூய ளென்றே தெரிந்திட விளக்கி, அன்பர்
நாயகன் கற்பின் மிக்க நாயகி தன்னை யேற்றான் ;
பாய்கடல் இலங்கை யாட்சி வீடணன் பங்கென் றீந்து,
தாய்நகர் அயோத்தி சார மானத்திற் றாவிச் சென்றான்.

அன்பர் தலைவனான இராமன், 'சீதை நெருப்பைவிடத் தூயவள்' என்று உலகிற்கு விளக்கினான் ; பிறகு மனைவியை ஏற்றான் ; அலைமோதும் இலங்கையாட்சியை விபீஷண னுக்கே சேரும் பங்கென்று தந்தான். அத்துடன் பதினான்காண்டு வனவாசமும் முடிந்தது. தாய்நகரான அயோத்தியைச் சேர, விபீஷணன் கொடுத்த புஷ்பவிமானத்தில் (மானம்) தாவிச் சென்றான். (கக௪)

கக௫. பாதுகை வணங்கி யண்ணல் வரவினைப் பார்த்தி ருக்கும்
சாதுவாம் பரதன் வந்து, தழுவினன் ! கண்ணீர் சோர்ந்தான் ;
ஓதரு முவகை பொங்கி, ஊரினர் ஒன்று கூடி,
"மூதுல காள வாராய் முடிபுனைந்" தென்று சொன்னார்.

பாதுகையை அரியணையேற்றி, வணங்கி இராமனை எதிர்பார்த்து அறங்காக்கும் சாது பரதன், 'அண்ணா வந்தாயா' என்று தழுவிக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டான். அயோத்திமாநகரத்தார் ஒன்றுகூடி, சொல்லரிய மகிழ்வு பொங்கி, "இராமபிரானே, இனி திருமுடி சூடி மூன்றுலகையும் ஆளவாராய் !" என்று வேண்டினர். (கக௫)

கக௬. ஊரணி செய்து மக்கள் உளமகிழ் வெய்த நன்னாள்,
ஆரண முழங்க, ராமன் அரியணை யேறி, யோக
பூரணன் வசிட்டன் சூட்டும் பொன்முடி தாங்கி யிந்தத்
தாரணி வாழத் தூய தருமத்தைப் போற்றி னானே.

அயோத்தி மக்களெல்லாரும் நகரை நன்றாக அலங்கரித்துப் பட்டாபிஷேகங் காண மகிழ்வுடன் வந்தனர். நல்ல நாளில், வேதங்கள் முழங்க, இராமன் அரியணையேறி, யோகத்தில் பூரணம் பெற்ற வசிட்டன் சூட்டிய பொன்மகுடந் தாங்கி, இவ்வுலகெல்லாம் பரிசுத்தமான தருமத்தைப் போற்றி வளர்த்தான். (கக௬)

கசுஎ. வாழிய இராமன் வீரம், வாழிய சீதை கற்பு,
வாழிய இளவல் சேவை, வாழிய பரதன் அன்பு,
வாழிய அனுமன் ஆற்றல், வாழிய குகன் வணக்கம்,
வாழிய உலக மெல்லாம் அறநெறி வாழ்க மாதோ !

இராமபிரான் வீரம், சீதையின் கற்பு, இலக்குவன் சேவை, பரதன் அன்பு, அனுமானுடைய பலம், வீரச்செயல், குகனுடைய பணிவு—இவை வாழ்க ! இத்தன்மைகள் ஓங்கி, கடல்சூழ்ந்த உலகமெல்லாம் சுத்த தருமமார்க்கமே பரவி வாழ்க ! (கசுஎ)

இராமாயணப் படலம் முற்றிற்று.

கக. ஒற்றுக்கேள்விப் படலம்

க. அருவியுங் குருவியும் அந்தி மாமலர்
மருவிய வசந்தமு மகர வீணையும்,
சுருதியிற் கலந்திடத் தூய காதையைப்
பருகினர் அமுதெனப் பக்தர் யாவரும்.

அருவியின் ஓங்காரம், குருவிகளின் பாட்டு, அந்தியில் பூத்த மலர்களைக் கொஞ்சி வரும் தென்றலின் குழலோசை, கௌரி மீட்டும் மகர வீணை—இவை சுருதியுடன் கலந்து லயிக்க, முனிவன் பரிசுத்தமளிக்கும் இராமகாதையைச் சொன்னான். அதை அமிர்த தாரை போல அன்பர் அள்ளிப் பருகினர். (க)

உ. பொய்ப்பொருண் மயக்கினைப் போக்கி, யிவ்வகை
மெய்ப்பொரு ளுணர்முனி வேந்தர் ஞானத்தைத்
துய்த்தினி திருந்திடத் தூயன் வேண்டினான்.
அத்தகை அமைதியை அளித்த தக்கதை.

சாந்த முனிவர் ஆசிரமும், துறவிகள் உறவும், சுத்தன் மனத்தில் பெரிய மாறுதலை உண்டாக்கின. நிலையற்ற பொய்ப்பொருளில் மயங்கி வீணாகும் மனச்சேட்டையைப் போக்கி, மெய்ப்பொருளான சுத்தான்மாவை உணர்ந்த முனிராஜரின் பரம ஞானமிருதத்தை "அள்ளிப்பருகிப் பாவனமடைந்து, இந்த வனத்திலேயே இருக்க விரும்பினான் சுத்தன். அந்த இராமகதை அவ்வளவு சாந்தத்தை அவனுக்களித்தது. (உ)

ங. பண்புடை முனிவனைப் பணிந்து தூயவன்,
"இன்பத்தி லின்பமாம் இராம நாமத்தில்
அன்புடைத் தாஸரின் அரிய மாக்கதை
உன்புது வாக்கினால் உரைத்தி" யென்றனன்.

சுத்தன், நற்குணமுடைய முனிவன் திருவடியைப் பணிந்து, "எல்லா இன்பங்களினும் மிக்க இன்பமளிக்கும் இராமநாமத்தில் அன்புகொண்ட இராமதாஸரின் அரிய சரித்திரத்தை உனது புதுமை பெற்ற அற்புத வாக்கினால் உரைத்தருள வேண்டும்" என்று கேட்டான். (ங)

ச. "காலையிற் கடன்முறை கழிந்தபின், அதே
வேலை"யென் றருளவும் விரத மாமுனி
மாலையின் கடன்முறை செய்து மன்னவன்,
சோலையில் அமைச்சுடன் சுற்றி வந்தனன்.

"காலையில் சந்திஜபம் ஆகிய கடன்முறைகள் சரியாக நடந்து முடிந்தபிறகு, அதே வேலை" என்று விரதமிகு முனிவன் அருளினான். சுத்தன் சித்திமானுடன் மாலைக் கடன்களைச் செய்து, கனியுணவருந்தி, அந்தத் தபோவனத்தில் அங்குமிங்கும் சுற்றித் தனது பர்ண சாலைக்கு வந்தான். (ச)

ஒற்றுரை

ரு. அத்தநி கலிநகர் அடைந்த ஒற்றர்கள்,
"இத்தநி யமைச்சனும், இளைய மன்னனும்
சித்திமா நகருக்குந் திரும்பிச் செல்வதே
உத்தமம்" என்றுரைத் துயிர்ப்பு விங்கினர்!

அச்சமயம், கலிநகரம் சென்று, அங்கு நடப்பதெல்லாம் உளவு பார்த்துவந்த சித்தி ஒற்றர்கள் "இப்போது, உடனே மந்திரியும், சுத்தனும் சித்திமாநகருக்குத் திரும்பச் செல்வதே மிக நல்லது" என்று சொல்லிப் பெருமூச் செறிந்தனர். (ரு)

சா. எய்திய ஒற்றரை யிருத்திச் சித்திமான்,
செய்தியை முற்றிலுந் தெரியக் கேட்டனன்;
கைதவக் கலிநகர் கண்ட காட்சியைப்
பொய்தவிர் ஒற்றரும் புகன்று நின்றனர்.

வந்த உளவாளிகளை அமர்த்தி, சித்திமான் அவர்கள் கொணர்ந்த செய்தியை முற்றிலும் தெளிவாகக் கேட்டான். வஞ்சகக் (கைதவம்) கலிநகரில் தாங்கள் கண்டறிந்த காட்சிகளை யெல்லாம், பொய்யைவிட்டு உண்மையே பேசும் அந்த ஒற்றர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். (சா)

எ. சத்தியன் ஆட்சிக்குந் தரும வாழ்விற்கும்,
சுத்தனின் உயிருக்குந் துகளில் விரர்வாழ்
சித்தியின் பெருமைக்கும் தேச நன்மைக்குங்
கத்தியைத் திட்டினன் கலிய ரக்கனே.

கலியன் ஆகிய அரக்கன், சத்தியராஜன் அரசாங்கம், அவன் நிலைநாட்டிய அற வாழ்வு, அவன் குலக்கொழுந்தான சுத்தன் உயிர், பழஞ்சிறப்புள்ள சித்திநகரின் பெருமை, தேசநன்மை முதலிய அனைத்தையும் வீழ்த்தி நலிக்கக் கத்தி தீட்டினன். (எ)

அ. நாவினுல் அழைத்தந்த நஞ்ச நெஞ்சினன்,
கோவிளங் குமரனைக் கொடுமைக் கோட்டத்திற்
காவல்வைத் திடநெடுங் கனவு கண்டனன்,
ஆவினை வாவெனும் அரியைப் போன்றவன்.

நாக்கினுல் "வருக வருக" என்று நயமாக அழைத்து வரவேற்று, நம் இளவரசனைக் கடுஞ்சிறையில் காவல் வைத்துத் தனது காரியத்தை முடிக்க நீண்ட கனவு காண்கிறான், நஞ்சே நெஞ்சமான கலியன். பசுவை "எனது குகைக்கு வரவேண்டும்" என்று அழைக்கும் சிங்கத்தைப் போன்றவன் அவன். (அ)

கூ. குடியரும், பதகரும், கொலையும் அஞ்சிடும்
கொடியரும், குலங்கெடு காமக் கூத்தரும்,
நடியருந் திருடருஞ் சண்டைப் பூதத்தின்
அடியருங் கூடினுல் அமைதி நிற்குமோ?

மிடாக்குடியரும், பஞ்சமா பாதகரும், கொலைகூட அஞ்சும் படுகொலைக்கொடியரும், குலமாதரைக் கற்பழிக்கும் காமக் கூத்தாடிகளும், வறட்டுத் தடியரும், பக்காத் திருடரும், போர்ப்பூதத்தின் அடியார்களும் கூடினால் உலகில் அமைதி தங்குமா? இவர்கள் உலகின் அமைதிகெடப் போர் வெறிகொண்டு தீமை செய்வதே உறுதி. (கூ)

கo. திருந்திய மனமிலாச் சிறுமை வேந்தரும்
பொருந்தினர் சிலர்அந்தப் பொய்யன் பக்கமே,
பெரும்படை கூடிய பேயர், இப்புவி
வருந்திட வெறிகொண்டு வாழ்கின் றுரையா!

நன்னெறிகளால் திருந்தாமல், கண்டபடி திரியும் பொல்லா மனதுடைய சிற்றரசர் சிலரும், அந்தப் பொய்யன், கலியன், பக்கம்போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். பெரிய படையாகத் திரண்ட இந்த அதருமப் பேய்கள், இந்த உலகம் வருந்தவே போர்வெறிகொண்டு வாழ்கின்றார்கள், ஐயா... (கo)

கக. வலிகொளும் படைக்கல வரிசை கண்டதுங்
கிலிகொளுந் தருமமும்; கேடு சூழ்ந்திடுங்
கலிகொளும் அந்நகர் கயவர் கூடிய
புலிகொளும் புதரெனப் புகுந்து பார்த்துற்றேம்.

கலியன் உலகிற்கே கேடு சூழ்கிறான். அவன் தனதாகக்கொண்டு ஆளும் கலிநகரில் புகுந்து, அங்கே நடப்பதெல்லாம் பார்த்தறிந்தே வந்தோம். அங்கே வரிசை வரிசையாக விதவிதமான போர்க்கருவிகளைக் கண்டோம். தருமதேவதைகூட அவற்றைக்கண்டு கிலி கொள்வாள், நடுங்குவாள். இரக்கமற்ற கயவர்கூடிய அந்தக் கலிநகர், புலிவாழும் புதரையே போன்றது. (கக)

கஉ. அணிமணி யாடைகள் சுற்றி விற்றிடும்
வணிகரைப் போலவும், வரும்பொ ருள்சொலும்
கணிகளைப் போலவும், கலிந கரெலாந்
துணிவுடன் கண்டனந் துரித மாகவே.

நாங்கள் அணிகளும், மணிகளும், ஆடைகளும் விற்கும் வியாபாரிகள் போலவும், இனி வரும்பொருளை அவ்வூரார் மகிழச்சொல்லும் ஜோதிடர் போலவும் துணிந்து சென்று, தெருத்தெருவாகச் சுற்றி, வீடுகளில் விரைவாக நுழைந்து பார்த்து, மாந்தரும் மந்திரிகளும் பேசுவதைக்கேட்டு, அங்குள்ள நிலைமையை விரைவாகவும் தெளிவாகவும் கண்டு வந்தோம். (கஉ)

கங. கரியெனப் பெருத்தவர், கண்கள் சேந்தவர்
எரிகொளு நெஞ்சினர், எமனைப் போன்றவர்,
நரியினும் வஞ்சகர்—எந்த நாட்டினர்
தெரிகிலம்—அங்கவர் திரியக் கண்டனம்.

நாங்கள் புதியவர்களைக் கண்டோம். அவர்கள் யானைபோலப் பெருத்தவர்கள், இரத்தம் கக்கும் கண்களையுடையவர்கள், சினத்தீ மிக்கநெஞ்சினர்கள், பார்த்தால் எமன்போலிருப்பவர்கள், பயங்கரமானவர்கள்; நரியைக்காட்டிலும் வஞ்சகர்கள்; (அவர்கள் இன்ன நாட்டிலிருந்து வந்தார்கள் என்று தெரியவில்லை) அங்கே தெருத்தெருவாகப் போர்க் கோலத்துடன் திரிகிறார்கள். (கங)

கச. கழுகெனப் புலியெனக் கரிய பாம்பெனக்
கொழுவன விலங்கெனக் கூடி மாந்தரை
விழுங்கிடும் போர்வெறி விம்முந் தியரால்
அழுங்குரல் கேட்டனம் அன்டை நாடெலாம்.

பிணங்கொத்திக் கழுகு, இரத்தப் பசிகொண்ட புலி, நஞ்சு கக்கும் கருநாகம் போன்றும், கொழுத்தடர்ந்த காட்டு விலங்குகள் போன்றும் கூடி, மனிதரைக் கொன்றுவிழுங்கும் போர்வெறி விம்மிய இத்தியரால். இவர்கள் செய்யும் அட்டூழியங்களால், அருகே யிருக்கும் மற்ற நாடுகளிலெல்லாம் அழுகைக்குரல் கேட்டோம். (கச)

கரு. தருமமுந் தெய்வமுந் தவமும் தூயநற்
கருமமும் பத்தியும், கருணையும், பர
குருவடி சேவையும், குவிந்த யோகியின்
ஒருமையும் பேடிகள் உளறும் பொய்''யென்பார்.

அந்தத் தியர், ''நமது நாட்டிற்கு ஆற்றலும் பொலிவுந்தரும் அறமும், தெய்வசக்தியும், தவமும், பரிசுத்தமான பொது நலஞ்செய்யும் நிஷ்காம்ய கருமமும், பக்தியும், உயிர்க் கருணையும், பரமகுரு சேவையும், உள்ளங்குவிந்த யோகியின் ஒருமைப்பாடும், ஏகாக்கிரமும், கையாலாகாத பேடிகள் உளறும் பொய்; இவற்றால் ஒருபயனும் இல்லை'' என்று சொல்லிப் பிரசாரஞ் செய்கிறார்கள். (கரு)

கசா. இளவர சிவ்வன மிருக்குஞ் செய்தியும்
உளவினு லறிந்தனர். ஊறு செய்குவார்.
களவியற் பாதகர் கண்ப டாமலே
வளநகர் செல்வது மாண்பென் றேதினர்.

அவர்களுடைய ஒற்றர் நம்பின்னே வருகின்றனர்; எங்கும் இருக்கின்றனர். நம் இளவரசன் இந்தப் பஞ்சவடியில் இருப்பதை அவர்கள் ஒற்றரால் (உளவு) அறிவார்கள். இங்கே வந்து தீமை செய்வார்கள்; உயிருக்கே ஆபத்து! திருட்டே இயற்கையான அந்தப் பஞ்சமாபாதகர் கண்ணிற் படாமலே, வளமையுள்ள சித்திநகருக்குத் திரும்பிச் செல்வது சாலச் சிறந்தது'' என்று ஒற்றர் கூறினர். (கசா)

சுத்தன் கவலை

கஎ. சேர்ந்த வாழ்வுஞ் சிறந்த வலிமையுந்
தேர்ந்த பாரத தேசத்தி லேகலி
சார்ந்து செய்திடுஞ் சங்கட வெவ்வினை
ஓர்ந்து சுத்தனும் உள்ளங் கலங்கினன்.

ஒற்றுமையான வாழ்க்கையும், சிறந்த ஆத்மபலமும், தருமபலமும் ஓங்கிய பாரத தேசத்தில், இந்தக் கலியொருவன் வந்துசேர்ந்து செய்யும், இடர்தரும் கொடுஞ் செயல்களை நினைத்து, சுத்தன் உள்ளங்கலங்கினன். (கஎ)

கஅ. வாயில் வாய்மையும், வாழ்வினில் மெய்ம்மையும்,
நேய வுள்ளத்தில் உண்மையு நின்றிடுந்
தேயத்தில், அன்புத் தெய்வம் உலாவிடுங்
கோயிலிற் பகை கொட்ட மடிப்பதோ?

வாய்மொழியில் வாய்மை, உடல்வாழ்வில் மெய்ம்மை, எவ்வுயிருக்கும் நேயங் கொண்ட உள்ளத்தில் உண்மை நின்று நிலவும் தேசம் இது. இஃது அன்புத்தெய்வம் உலாவி ஆடல் செய்யும் அருட்கோயில். இதில் பொய், கொடுமை, பாபம், பொருமை, நாத்திகம், அசுத்தம் ஆகிய தீமைகளுடன் கூடிய பகைவன் சேட்டை செய்வதோ ? (கஅ)

கசு. தீரர் எத்தனை, தேவர்கள் எத்தனை,
வீரர் எத்தனை, வேந்தர்கள் எத்தனை,
வாரம் வைத்து வளர்த்த தருமத்தைக்
கோர ராட்சச மாயை குலைப்பதோ ?

எத்தனையோ ஞானதீரர், தெய்வத்தன்மை பெற்ற பெரியார்கள், ஜயவீரர்கள், நீதிவேந்தர்கள் மிகவும் பிரியம் (வாரம்) வைத்து, கருத்தூன்றி வளர்த்த நமது தருமத்தை இன்று கொடிய அசுர மாயை குலைப்பதோ ? (கசு)

சித்திமான் துணிவு

உ௦. கன்னக் கையுடன் கண்குவித் " தின்றினி
என்ன செய்வ"மென் றேங்கி யிளஞ்சிங்கம்,
தன்னுள் ஆழ்ந்த சமயம் அமைச்சனும்
" இன்னலை யெதிர்ப் போ"மென் றெழுந்தனன்.

இளஞ்சிங்கம் சுத்தன், கன்னத்தில் கைவைத்து, கண்மூடி, " இன்று, இனி, நாம் என்ன செய்வோம்" என்று ஏங்கித் தன்னுள் ஆழ்ந்து சிந்திக்கும் சமயம், சித்திமான், " இனிவரும் இன்னலை எதிர்த்தே போராடுவோம்" என்று தைரியமாக எழுந்து நின்றான். (உ௦)

உக. " ஒற்றர் ஏகுமின், ஒல்லையிற் சொல்லியே
சுற்றி யெங்கணுஞ் சூழ்ந்தறங் காத்திடுஞ்
சிற்ற ரசரின் சேனையை நாளையே
உற்றிடுஞ் சமர்க் குற்றிடச் செய்குமின்.

" ஒற்றர்கள் செல்லுங்கள். சித்தி தொலைவிலுள்ளது; நமக்கு அவசரமாகச் சேனைகள் வேண்டும். ஆதலால் சுற்றிலும் உள்ள நாடுகளில் அறங்காக்கும் நம் சிற்றரசர் சேனையை இங்கே நாளையே சம்பவிக்கும் போருக்குத் தயாராக வரச் சொல்லுங்கள் ! (உக)

உஉ. " வருக தீமன வஞ்சகர் ; வந்து போர்
தருக ; நல்ல தபோதனர் அஞ்சவே
அருகு செல்க ; அழிக அவர்தலை
திருகுவோ " மெனச் செப்பினன் சித்திமான் !

" அக்கொடிய வஞ்சகரான கலிஞன் ஆட்கள் வரட்டும் ; வந்து போர் தரட்டும் ; சாதுக்களான தபோதனர் அருகே செல்லட்டும் ; உடனே கும்பலுடன் அழியட்டும் ; அவர்கள் தலைகளை நாம் திருகுவோம்" என்று சித்திமான் சொன்னான். (உஉ)

சுத்தன் துணிவு

உங. ஈன்ற தாயின் இசைவளர் சுத்தனும்,
" ஆன்ற மாதவர் ஆசிகள் பூத்திட,
தோன்றும் போரிலத் துட்டரை மாருதி
போன்று நொய்யப் புடைப்ப"மென் றார்த்தனன்.

தன்னைப்பெற்ற பாரதமாதாவின் புகழை வளர்க்கும் சுத்தனும் தைரியமுற்று, "இவ்வனத்தில் உள்ள மகா தபஸ்விகளின் ஆசிர்வாதங்கள் நம்மைச் சூழ்ந்து பொலிய, நாளை இங்கே தோன்றும் போரில் அந்தத் துஷ்டர்களை, வீர அனுமான்போல நன்றாக அடித்து நொறுக்குவோம்" என்று ஆத்திரமாகக் கூவினன். (உ௩)

உ௪. வீரங் கூறி விழிப்புந் துயிலுமாய்க்
காரி ராவைக் கழித்திரு சீலரும்
நீரி லாடி, நியமங்கள் செய்ததும்,
பூரணன் வளர் பூம்பொழி லேகினர்.

இவ்வாறு மனத்திலெழுந்த வீரத்தை வாய்விட்டுக் கூறி, சீலமுள்ள அவ்விருவரும் அக்கரிய இரவை விழித்தும், சற்றுறங்கியும் கவலையுடன் கழித்தனர். காலையில் ஆற்று நீராடி, தமக்குரிய வழிபாடுகளைச் செய்தவுடன், பூரணயோகியான சாந்தமுனிவன் சோலைக்குச் சென்றனர். (உ௪)

உ௫. காலைக் கோர்புதுக் காந்த மளித்திடும்,
சீல மாதவர் செங்கதி ரின்றொடர்
போல மர்ந்துளப் பூசை புரிந்தனர்;
ஞாலந் தெய்வ நலம்பெற நாளுமே.

சாந்தாசிரமத்தைச் சுற்றிலும்காலையழகிற்கு ஒரு புதிய காந்தசக்தி யளிக்கும் சீலமுள்ள, ஒழுக்கமோங்கிய மகா தபஸ்விகள், செவ்வர்ணமுள்ள உதயசூரியர் பலர் தொடர்ந்ததுபோல அமர்ந்து, உள்வழிபாடான தியானம் செய்தனர். எதற்கு? தாம் அடைந்த அருளை உலகும் அடைந்து தெய்வநலம் நாடோறும் ஓங்கவே. (உ௫)

உ௬. ஊது வண்டுடன் ஓது மறைகளும்
போதென நகை பூத்த முகங்களும்
காதுங் கண்ணுங் களிக்க விளங்கிடும்,
சாது சங்கத்தைக் கண்டனன் சுத்தனே.

மலர்த்தேனுண்டு வண்டுகள் பாடுகின்றன. அவற்றின் ரீங்காரத்துடன் எல்லா வேதங்களும் முழங்குகின்றன. காலைப் பூப்போல (போது) புன்னகை பூத்த வசீகரமான முகங்கள் விளங்குகின்றன. அத்தகைய சாதுசங்கத்தைச் சுத்தன் தரிசித்தான். (உ௬)

உ௭. காணக் காணக் கடவுட் பெரியரை
மாண மாண்புறு மானிட வாழ்க்கையே!
பூணப் பூணப் புனிதர் மலரடி,
ஆணவங் குறை யும்அரு ளோங்குமே.

பரிசுத்தமான தவயோகிகளின் மலரடியைச் சிரத்தில் பூணப் பூண, அவர்களை வணங்க வணங்க நமது ஆணவம் குறையும்; திருவருட்பொலி வோங்கும். தெய்வத்தன்மை பெற்ற பெரியார்களைக் காணக்காண, மானிட வாழ்க்கையானது மிகச்சிறப்படைந்து தெய்வ ஜீவனமாகப் பழுக்கும். (உ௭)

உஅ. சித்தர் கூட்டத்தைச் சேவித்துச் சேவித்துத்
தத்துவப் பொருள் சாற்றிடக் கொண்டுளம்,
சித்திமானுடன் சுத்தனுஞ் சேர்ந்தனர்
முத்தி வேந்தன் விளங்கிய முன்றிலே.

சித்திமானும் சுத்தனும் வழியிலிருந்த யோகசித்தர் கூட்டத்தைச் சேவித்துச் சேவித்து, தத்துவப்பொருளை அவர்கள் உபதேசிக்க உள்ளத்திற் கொண்டு, முக்திக்கரசனை சாந்த முனிவன் விளங்கிய பர்ணசாலை முற்றத்திற்கு வந்துசேர்ந்தனர். (உஅ)

உகூ. புகையுஞ் சாந்துடன் பூவு மணந்திட,
பகவன் மேலருட் பாட்டு முழங்கிட,
மகர யாழுடன் கௌரி வயங்கிடச்
சுகமு னிவன் கதையைத் தொடங்கினன்.

சாந்த முனிவன் சந்நிதியில் நறுப்புகை, சந்தனம், நாண்மலர்கள் மணக்கின்றன. கௌரி, மகர யாழுடன் விளங்குகிருள். பக்தர் பகவான்மேல் அருட்பாடல்களைப் பாடுகின்றனர். இம்முழக்கத்திற்கிடையே ஆத்ம சுகத்தை அனுபவிக்கும் முனிவன், இராமதாஸ் சரித்திரம் சொல்லத் தொடங்கினன். (உகூ)

௩௦. வணங்கிப் புன்னகை மாமலர் பெற்றதும்,
குணங்க ளோங்கிடுங் குன்றனை யான்முன்னே,
இணங்கி நெஞ்சம் இருவருங் கேட்டனர்.
உணர்வு தூண்டிடும் உத்தமன் காதையே.

சித்திமான் சுத்தன் ஆகிய இருவரும், சாந்த முனிவனை வணங்கிப் புன்னகை மலரைப் பெற்று, எல்லா நற்குணங்களும் ஓங்கிய மலைபோன்ற அம்முனிவன் முன்னே அடக்கமாக அமர்ந்தனர்; புலன்கள் அலையாமல் கவலையின்றி, மனம் இணங்கி, கடவுளுணர்ச்சியும், வீர வுணர்ச்சியும் தூண்டும் உத்தமனை இராமதாஸன் சரித்திரத்தைக் கேட்டனர். (௩௦)

ஒற்றுக் கேள்விப் படலம் முற்றிற்று.

உ0. இராமதாஸ் படலம்

க. தெள்ளிய ஞானமுந் தெய்வ பக்தியும்,
ஒள்ளிய ஒழுக்கமும், ஓங்குந் தூயவர்
விள்ளரும் பெருமையை விளம்பப் பேரின்ப
வள்ளலின் கருணையை வழுத்து வாமரோ!

தெளிந்த தன்னறிவும், கடவுளன்பும், அருளொளிபெற்ற சன்மார்க்க நடையும் சிறந்த தூயமுனிவரின் பெருமை சொல்லற்கரியது. அதைச் சொல்ல, பேரின்ப வள்ளலான பரம்பொருளின் கருணையைப் போற்றி, நல்ல வாக்கும் சக்தியும் பெறுவோமாக! (க)

உ. நல்லன கூடிடும்; ஞான மோங்கிடும்;
அல்லன விலகிடும்; அறங்கள் ஓங்குமே;
இல்லதும் உள்ளதும், இனிது தேர்தவச்
செல்வரின் சேவைகள் செய்யும் அன்பர்க்கே!

உள்ளது அல்லது, (சத்து, அசத்து) இன்னதென்று தெளிந்து, நித்தியமான இறைவனருளையே வேண்டிச் சாதனஞ்செய்யும் பெரிய தபஸ்விகளுக்குத் தொண்டு செய்யும் அன்பருக்கு, நன்மையெல்லாம் கூடும்; ஆத்மஞான மோங்கும்; தீயன விலகும்; பாபம் போகும்; அறவினைகள் செழிக்கும்; புண்ணியங்கள் பெருகும்! (உ)

ங. பொன்னுடன் பொன்னிறப் பொலிவு போலவும்,
விண்ணுடன் விரவிய மேகம் போலவும்,
கண்ணுடன் கதிர்தருங் காட்சி போலவும்,
புண்ணிய ருடனருட் பொலிவும் பொங்குமே.

தங்கத்துடன் தங்கநிறமான பளபளப்பும் சேர்ந்து பரவும். எங்கும் விரிந்த வானுடன், நீலநிறமும் சேர்ந்திருக்கும். கண்ணுடன் கதிரொளிதரும் காட்சி சேர்ந்திருக்கும். அதுபோல், புண்ணிய முனிவருடன் தெய்வத் திருவருட் பொலிவும் சேர்ந்து பரவும்! அத்திருவருட் பொலிவினால், அவர் பொன்னைப்போல மாசற்றவர்களாக விளங்குவர்; ஆகாயம்போல் சுயேச்சையாக, எல்லையற்ற அறிவில் உலாவுவர்; காட்சியுலகுடன் பற்றறாமல், காணும் கண்போலும், காட்டும் கதிர்போலும், இறைவனுடன் கலந்து, எதையும் சாட்சியாகப் பார்த்துத் தாக்கற்றிருப்பர். (ங)

ச. பன்னருங் கேள்வியின் பயனைக் காட்டிலும்,
தன்னுடல் வெறுத்திடுந் தவத்தைக் காட்டிலும்,
என்னதி யானெனும் இயைபில் மாதவர்
முன்னிலை யிருப்பது முத்தி யாகுமே.

சொல்லரிய கல்வி கேள்விகளின் பயனான கலைத் திறனைக் காட்டிலும், தன்னுடலை வெறுத்து, வைராக்கியமாக காயக்லேசம் செய்யும் தவங்களைக் காட்டிலும், 'எனது, யான்' என்ற செருக்கில்லாத அருண்முனிவர் சந்நிதியில் பணிந்திருந்தால், அதுவே பந்ததொந்தங்களிலிருந்து ஒருவன் விடுதலைபெற வழியாகும். (ச)

ரு. பொய்ம்மன வேற்றுமைப் போரி னுற்கெடும்
வையக மாந்தர்க்கு வழியை•நாட்டியும்,
வெய்யவர் வெம்மையை வென்றும், உண்மையாற்
செய்வன செய்தவர் செய்ய சிலரே!

பொருள்களை இரு விகாரத்துடன் பார்க்கும் பொய்ம்மன வேறுபாடுகளால், பொருமை, போட்டி, சாதிமத வேறுபாடுகள் இவற்றால் உண்டாகும் சண்டை பெருகி இவ்வுலகம் அழிகிறது. இந்த உலக மாந்தருக்கு அன்பு, அறம், அருள், அறிவு, வாய்மை, தூய்மை, சுத்தான்ம ஞானம், தானம், தவம் சமரஸம்—இவற்றுடன்கூடிய சன்மார்க்கத்தை விளக்கினவர் முனிவரே. தீயர் இழைக்கும் கொடுமைகளையும் அவர்கள் தமது சத்திய பராக்கிரமத்தால் வென்று, செய்யவேண்டிய நன்மைகளைச் செய்தனர்; அவர்களே நல்லொழுக்கமுள்ள சாதுக்கள். (ரு)

சா. சாதுக்கள் சங்கமே சாந்த மீந்திடும்;
சாதுக்கள் வாசகம் சகல ஞானமாம்;
சாதுக்கள் சந்நிதி சக்தி யீந்திடும்;
சாதுக்கள் வாழிய, தரும தீபம்போல்!

சாது முனிவர் கூட்டமே மனிதருக்கு உபசாந்தம் தரும்; அவர்கள் திருவாய்மொழியே எல்லா ஞானமும் அருளும்; சாதுக்கள் சந்நிதியே ஆத்ம சக்தியளிக்கும். சாதுக்கள் உலகில் இருளை விலக்கி அருளைத் துலக்கும் அறவிளக்குப்போல வாழ்க! (சா)

எ. புண்ணிய பாரத பூமி யெங்குமே,
பண்ணவர், மாசறு பக்தர் சங்கமே!
திண்மக ராட்டிரஞ் செழித்த பக்தரை
எண்ணிநம் கதையினை யினிது சொல்லுவாம்:

பாரததேசம் புண்ணிய பூமி; அதன் பரப்பெல்லாம் தவம்பண்ணும் முனிவரும், மனமாசற்ற இறைவனடியாரும் வாழும் சாது சங்கமேயாகும். நாம் இன்று திண்மையுள்ள வீரர் பொலியும் மஹாராஷ்டிர தேசத்தில் செழித்த பக்தரைத் தியானித்து, நமது கதையைச் சொல்லுவோம்: (எ)

அ. புரந்தர விடலனின் புனித பக்தராம்,
நிரந்தர ஞானியும், நிவிர்த்தி தேவரும்,
அறந்தரும் ஏகரும், அன்பு நாமரும்,
மறைந்தபின் இருசுடர் மணிகள் வந்தனர்!

ஆளந்தி விட்டல்பந்த் என்பவர் மனைவிக்குத் தெரியாமல் காசிக்குச் சென்று, இராமானந்தரிடம் சந்நியாசம் பெற்றார். இராமானந்தர் யாத்திரையாக ஆளந்திக்கு வந்தபோது, விட்டல் மனைவி ருக்மாபாயின் நிலையைக்கண்டு மனமிரங்கி, மாணவனை மீண்டும் இல்லறம் புகச்செய்தார். விட்டல்பந்த், தெய்வபக்தியுடன் இல்லறங் காத்தார். அவருக்கு நான்கு மணிப்பிள்ளைகள் பிறந்தனர்.—நிவிர்த்தி, ஞானதேவர், சோபானர், முக்தாபாய். நான்கு குழந்தைகளும் ஞானம் பழுத்து, புரந்தரவிடலரான திருமாலுக்கே ஆளாகி, பரமபக்தராக விளங்கினர். இவர்களைச் சாதியந்தணர் தள்ளிவைத்துத் துன்புறுத்தினர். தெய்வபலத்தால் இவர்கள் இடர்களைத் தாண்டினர். ஞானதேவர் பகவத்கீதைக்கு அரிய உரை செய்தார். அது,

" ஞானேச்வரி " என்ற பெயரால் வழங்குகிறது. அவர் பக்தி மார்க்கத்தை நாடெங்கும் பரப்பி இருபத்தோராம் வயதில் சமாதியில் அடங்கினுர். நிவிர்த்தி முதலியோரும் ஞானதேவர் அடங்கிய ஓராண்டில் இறைவனடி சேர்ந்தனர்.

நாமதேவர் (கி. பி. 1270 - 1350) தையல் வேலைசெய்து பிழைத்து, இறைவனை அன்பு செய்தார்; அவரைச் சாதிப்பித்தரும், பண்டிதர்களும் எள்ளியிகழ்ந்தனர். அவர், உலகோர் இகழ்ச்சி புகழ்ச்சிகளைப் பாராட்டாமல், அன்பு செய்து, இறைவனருளைப்பெற்று, நாடெங்கும் பக்திமார்க்கத்தை உபதேசித்தார். அவர் ஞானதேவருடன் நீண்ட யாத்திரை செய்தார். பஞ்சாபில் அவர் பாடல்களும் புகழும் பரவின. குருநானகரின் " கிரந்த ஸாஹெ "பில் நாமதேவர் வரலாறும், 60 கீர்த்தனங்களும் உள்ளன. நாமசங்கீர்த்தனமும், ஜபமுமே அவர் காட்டிய வழி. ஏகநாதர் (1533—1599) தெய்வபக்தியும் குருபக்தியும் நிறைந்தவர்; வேதவித்து; சாதிபேதமில்லாமல் எல்லாரிடமும் அன்பு கொண்டவர். " இராமகிருஷ்ண ஹரி " என்ற மந்திரத்தை எங்கும் பரப்பியவர்; வேசைகளைக்கூடத் திருத்தியவர், பாகவதம், இராமாயணம், ஞானேச்வரி ஆகிய இம்மூன்றையும் இவர் பாராயணம் பண்ணி, உபதேசித்து வந்தார். இவர்களுக்குப் பிறகு சிவாஜி காலத்தில் விளங்கிய இரண்டு மகான்கள் துக்காராமரும், சமர்த்தகுரு இராமதாஸரும் ஆவார். (அ)

கூ. " சாதியும் வேடமுந் தருக்க வாதமும்,
பேதமும் பொய்ம்மனப் பிழையு மின்றியே,
ஓதுமின் அரியை"யென் றுரைத்த ராமனின்
கீதங்க ளீவது கேடி லின்பமே.

துக்காராமின் அபங்கங்கள் வடநாடெங்கும் பரவியுள்ளன. அவர் இந்திராயணி நதிக்கரையில் உள்ள தேஹு என்னும் கிராமத்தில் பரம ஏழையாகப் பிறந்தவர். குழந்தைப் பருவத்திலேயே பெற்றோரை யிழந்து வருந்தியவர். கடை வியாபாரத்தால் பிழைத்தவர். 1629-ஆம் ஆண்டு கடும்பஞ்சம் வந்தது. அவர் மனைவி ரகுமாயி, புதல்வன் சிவாஜி. இருவரும் பட்டினியால் இறந்தனர். உலகநிலையை அறிந்த ஏழைத் துக்காராமின் மனம் துக்க நிவிர்த்திக்காக இறைவனைச் சரண் புகுந்து, அவனடியார் கூட்டத்தையே நாடியது. வறுமையும் இல்லறத் தொல்லையும் துக்காராமருக்கு உலகியல்பை நன்ருகக் காட்டின. அவர் விட்டல் பக்தியிலேயே தம்மை மறந்து, தினந்தோறும் அபங்கமாலை சூட்டி அன்பு செய்து வந்தார். அவர் சுமார் 6000 அபங்கங்கள் பாடியிருக்கிருர். அவர் பாடல்கள் வீர சிவாஜிக்குப் பெரிய ஆறுதலளித்தன. வெளிவேடமில்லாமல், சமநோக்குடன் நடந்து, சித்தத்தை இறைவனிடம் வைத்து வாழ்ந்தார் துக்காராம். " சாதிமத பேதங்களின்றி, வெளிப்பகட்டின்றி, பொய் மயக்கங்கொண்ட மனப்பிழைகளான துராசை, அகம்பாவம், காமக்குரோதாதி தீமைகளின்றி, ஹரிபக்தி செய்யுங்கள்!" என்று அவர் நாடெங்கும் உபதேசித்தார். அவர் கீதங்கள் கேட்பவருக்கு அழிவற்ற ஆத்மானந்தந் தரும். (கூ)

க௦. பக்தது காவருட் பாடல் கேட்டதும்,
சத்திர பதிக்குப சாந்தம் வந்தது;
முத்தனி ராமதாஸ் முனிவன் காட்சியால்
சக்தியும் வீரமும் தழைத்த தென்னுவாம்.

பக்தன் துகாராம் அருளிய பாசுரங்களைக் கேட்டு, சத்திரபதி சிவாஜிக்கு மனச் சாந்தம் வந்தது. ஜீவன்முக்தனை இராமதாஸ் முனிவன் தரிசனத்தால், அவனுக்கு அளவற்ற வீரமும், ஜயசக்தியும் செழித்தன என்போம். (க௦)

கக. தேசமுந் தருமமுஞ் செழிக்க வீரத்தீ
வீசிய சிவாஜியின் விமல சற்குரு,
மாசறு மாதவன் இராம தாஸனின்
ஆசறு கதையினை யன்பிற் கேண்மினே !

நமது பாரத தேசமும், அதன் வேத தருமமும் செழிக்கவே, வீரக்கனல் வீசி, எதிரிகளை வென்று, புகழோங்கிய சிவாஜியின் பரிசுத்தமான சற்குரு, தீமைகளை நீக்கிய இராமதாஸ்; அம்மகாமுனிவன் கதை, மனத்திலுள்ள குற்றங்களை ஆசு போக்கவல்லது. அன்பீர், கேளுங்கள்: (கக)

கஉ. பம்புகோ தாவரி பாயு நாட்டிலே,
சம்பகம் எனப்பெயர் சாற்றும் ஊரிலே,
நம்பனைப் போற்றிடு நவமி நாளிலே,
அன்பன்இ ராமதாஸ் அவத ரித்ததே.

பரமபக்தனான இராமதாஸ், அவதரித்தது சம்பகம் என்னும் ஊரில். அது, கோதாவரி தாவிப்பாயும் நாட்டில் உள்ளது; கோதாவரி தீரத்தில் உள்ளது. அங்கே பக்தர்கள் திருமாலான (நம்பன்) ஸ்ரீராமனுக்கு நவமி உற்சவம் கொண்டாடும்போது, இராமதாஸ் பிறந்தார். (கஉ)

கங. ஆரணம் ஓதிடும் அந்தண் செல்வர்கள்,
சூரிய ரேணுகர் தூய பெற்றவர் ;
நாரண னெனப்பெயர் நல்கி, நம்பியைப்
பூரணக் கலைபெறப் போற்றி வந்தனர்.

இராமதாஸின் பெற்றோர், வேதம் ஓதும் அந்தணச் செல்வர். தந்தை சூரியாஜி, தாய் ரேணுகாபாய். இருவரும், "நாராயணன்" என்ற திருநாமமிட்டு, நமது செம்மலை, பூரணமான வேதக்கலையில் சிறக்கும்படியாக, கல்வியளித்துப் போற்றி வளர்த்துவந்தனர்.( )

கச. சூரிய வணக்கத் தாலே, தூயசிந் தனையி னாலே,
ஆரிய வேதத் தாலே, அனுமனின் அருளி னாலே,
தாரக ஜபத்தால், இராம தாஸெனும் பெயரும் பெற்ற
தீரனுக் கீன்றோர் நல்ல திருமணஞ் செய்யாநின்றார்.

நாராயணன், தினம் 200 சூரிய நமஸ்காரம் செய்து, உடலுறுதி பெற்றான். பரிசுத்தமான சிந்தனையால் பிரமசரியம் காத்தான். ஆரியவேதங்களைக் கற்றதால், அறிவில் முதிர்ந்தான். அனுமானை உபாசித்து, அவனருளால் இராம ஜபம்பெற்று இராமதாஸ் என்ற நாமமும் அடைந்தான். இத்தகைய ஞானதீரனுக்கு, பெற்றோர் நல்ல இடத்தில் பெண்ணெடுத்துத் திருமணம் நடத்துகிறார்கள். (கச)

கரு. கானமுங் களிப்பு மோங்கும் கடிமண முடிக்கச் "சாவ
தான"மென் றுசான் சொல்லத் "தப்பினேன் பிழைத்தே" னென்றோர்
ஞானவி றெழுந்து தாவி, நதியினை நீந்திச் சென்று,
மோனியாய்த் தவங்கள் செய்து, முத்தியை அன்பன் கண்டான்.

திருமணக் கோலத்துடன் வதூவரர் மணப்பந்தலில் அமர்ந்திருக்கின்றனர். இருவருக்கும் இடையே திரையிட்டுள்ளது. திரை நீங்கி, இருவரும் பார்த்துக்கொள்ளப் போகிறார்கள், மங்களவாத்தியம் முழங்குகிறது. பெண்கள் சுபகானம் செய்கின்றனர். எல்லாரும் மகிழ்ச்சி பொங்குகின்றனர். புரோகிதர் இதோ சடங்கை முடிக்கப்போகிறார். திரை நீக்குமுன் "ஸுலக்னே ஸாவதான" (இது நல்லவேளை, உஷாராயிரு!) என்ற மந்திரம் சொன்னதும், "இதோ நான் இச்சம்சார பந்தத்திற் சிக்காமல் உஷாராகத்தான் இருக்கிறேன். தப்பினேன், பிழைத்தேன்" என்று இராமதாஸ் ஒரு ஞான வைராக்கியமெழுந்து, தாவியோடி, கோதாவரியை நீந்தி, அக்கரை சென்று, பஞ்சவடியைச் சேர்ந்து அங்கே மோனியாகத் தவங்கள் செய்து ஜீவன்முக்திபெற்றான். (கரு)

கசு. கனிகிழங் குண்டு, வேறு கவலைக ளனைத்தும் போக்கித்
தனிமலைக் குகை யிருந்து, சபதப தியானஞ் செய்து,
மனதினை யடக்கி வென்று, மமதையை வேரின் மாய்த்து
புனிதசுத் தான்ம சித்தி பொருந்திய மகான்கள் வாழ்க.

சுத்தான்மசித்தி மகா பரிசுத்தமான தெய்வநிலை தரத்தக்கது. அத்தகைய சித்தி பெற வேறு கவலைகளையெல்லாம் விட்டுவிடவேண்டும். ஏகாந்தம் வேண்டும். இயற்கையின் அமைதியில் வசிக்கவேண்டும். இயற்கை தரும் காய்கனி கிழங்கு பால் முதலிய சாத்விக உணவுகளே சாதனத்திற்கேற்ற உணவுகள். அவற்றால் பசிப்பிணியைப் போக்கி, தனியாக மலைக்குகைகளில் ஜபதப தியான மோன சாதனங்கள் செய்து, அலையும் மனத்தை அடக்கி வென்று, நான் என்று கிளம்பி பந்ததொந்த விகாரங்களைத் தரும் அகங்காரத்தை வேருடன் அறுத்தால், மனிதன் புனிதனாகி, சுத்தான்மசித்தி பெறலாம். அப்படிப் பூரணம் பெற்ற மகான்களை வாழ்த்துவோம். அம்மகான்களில் இராமதாஸர் ஒருவர். (கசு)

கஎ. சமநிலை கண்ட சித்தன் சகத்தினை வெறுத்திடாமல்,
தமநிலை நீங்கி யின்பந் தழைத்திடக் கருணை பூத்தான்;
அமங்கலி அன்ன பூர்ணை அன்பனுக் காவி நல்கி
சுமங்கலி யாக நல்ல சுதருடன் வாழச் செய்தான்!

இராமதாஸ் இருவிகாரமற்ற சமரசநிலை கண்ட மந்திரசித்தனானார்: அவர் உலகை வெறுக்கவில்லை. தனது சித்தியால், உலகில் தாமச இருள்நிலை விலகி இன்பமோங்கக் கருணை வைத்தார்; வருந்துவோருக்கு உதவினார். ஒருநாள் அன்னபூரணா பாய் என்பவளின் கணவன் கிரிதரபந்த் இறந்துபோனான். அன்னபூர்ணா உடன்கட்டையேறுமுன், இராமதாஸரை வந்து பணிந்தாள். முனிவர், "எட்டு மைந்தரைப்பெற்று, தீர்க்க சுமங்கிலியாக வாழ்!" என்று ஆசீர்வதித்தார்! "சுவாமி நான் எப்படித் தீர்க்க சுமங்கலியாவேன். இதோ, என் கணவர் இறந்து போனாரே" என்று தனது துக்கத்தைச் சொல்லிப் பெண்மணி அழுதாள். இராமதாஸ், அவள் கணவன் உடலில் "இராம நாமம்" சொல்லி மந்திர நீர் தெளித்தார். கணவன் உயிர் பெற்றெழுந்தான். தாஸர், தம்பதிகளை ஆசீர்வதித்து, "பத்துப் பிள்ளைகளைப் பெறுவீராக!" என்று வரங்கொடுத்தனுப்பினார். அவ்வாறே தம்பதிகளுக்குப் பிள்ளைகள் பிறந்தனர். மூத்த பிள்ளையை அவர்கள் இராமதாஸருக்கே அர்ப்பணஞ் செய்தார்கள். உத்தம கோஸ்வாமி என்னும் பெயரால் அப்பிள்ளை மகா பக்த சிரோன்மணியாக விளங்கினான். (கஎ)

கஅ. மூர்த்தியுந் தலமுங் கண்டு முறையுறப் பரத நாட்டைப்
பார்த்துநாற் றிசையும் பக்தி பரவசக் கனல் பரப்பி,
வார்த்தைசொல் குருவைத் தேடும் மாணவர்க் குபதே சித்துத்
தீர்த்தனும் கிருஷ்ணு பாயு மகூலியிற் சென்றி ருந்தான்.

திருவருளாணைப்படி இராமதாஸ் பன்னிரண்டாண்டுகள் நமது பாரத நாட்டைச் சுற்றிப்பார்த்து, மூர்த்தி, தலம், தீர்த்தம் எல்லாம் முறையாகத் தரிசித்தார்; நாலாபக்கமும் இராம நாமத்தையும் அனுமத் உபாசனையையும் பரப்பி, பக்திபரவசக் கனலைத் தூண்டினர். "அனுமானைப்போல வீரதீரராயிருக்க வேண்டும்; இந்து தருமத்தைக் காக்கவேண்டும்" என்று ஜனங்களுக்கு உபதேசித்தார்; தஞ்சாவூரில் சில நாட்கள் இருந்து, பக்திப்பிரசாரம் செய்தார்; அங்கேதான் இராம சீதா அனுமார் விக்கிரகங்களைச் செய்து ஸஜ்ஜன கட்டத்தில் நாட்டினர். மந்திரோபதேசத்திற்காக (வார்த்தை) குருவைத் தேடும் சீடர்களுக்கு இராமதாஸ் சமயசஞ்சீவிபோலத் தோன்றி, "ஸ்ரீராம், ஜயராம், ஜயஜயராம்" என்ற மந்திரத்தை உபதேசித்தார். முடிவில் தன் தாயாரைப் பார்த்துவந்து, கிருஷ்ணு நதிக்கரையிலுள்ள மகூலி என்னும் கிராமத்தில் தங்கினர். அங்கே பல சாதுக்கள் அவரைத் தரிசிக்க வந்தனர், (கஅ)

ககூ. இல்லற ஞானி யாகி, இசைதரு புலவ னுகி,
நல்லறத் தொண்டனுகி நாரண னருளைப் பாடும்,
சொல்லர சான துக்கா ராமனுந் தொழுது போற்றி
எல்லையி லின்பமேயி ராமதா செனப்பு கழ்ந்தான்.

துக்காராம் இல்லறத்திலிருந்தே, அதன் சுகதுக்கங்களைப் பொறுத்துக்கொண்டே ஸ்ரீ நாராயணன்மேல் சித்தம் வைத்து, அவனருளையே பாடிய இசைப்புலவன், சொல்லரசன், அருட்கவி, நன்மை தரும் தருமத்தைப் பரப்பும் திருத்தொண்டன்; அவன் வந்து தொழுது போற்றி, "எல்லையில்லாத பரமானந்தமே இராமதாஸாக உருவெடுத்தது" என்று புகழ்ந்தான். (ககூ)

சிவாஜி வருதல்

உ௦. பத்தியு ஞானமும் பழுத்த தூயவன்,
அத்தினம் அருந்தவ மளித்த திவ்விய
சத்தியைப் பொழிந்தொரு தரும வீரனுள்,
சத்திய வாழ்வினைத் தாங்க முன்வந்தான்.

அக்காலம் சத்தியம் கெட்டு, தருமம் அழிந்து நாடு வருந்தியது. தெய்வபக்தியும், ஆத்மஞானமும், கனிந்த பரிசுத்த சித்தனை இராமதாஸ் முனிவன், தனது அரிய தவத்தால் எய்திய யோக சக்திக்கனலை ஒரு தரும வீரனுள் பொழிந்து, அவனைச் சக்திமானுக்கி, பாரத தேசத்தில் சத்தியமான தூய வாழ்வை ஆதரித்துப் பரப்ப முன்வந்தான். (உ௦)

உக. வருந்திடும் அன்னையின் வருத்தந் தீர்க்கவே,
மருந்தென விளங்கிய மராட வீரனும்,
அருந்தவன் புகழினை அறிந்து நாடினுன்;
இரும்பினைக் காந்தம்போல் இதய மீர்க்கவே!

இதோ முனிவர் எதிர்பார்த்த தருமவீரன்! பல துயர்களால் வருந்தும் பாரதமாதாவுக்குச் சஞ்சீவிபோல், சமயத்திற்கேற்ற மருந்துபோல் வந்து அறங்காத்து விளங்கிய மராடிய மணியான வீர சிவாஜி, அருந்தவ முனிவனான இராமதாஸனைப்பற்றிப் சாதுக்கள் பலர் சொல்ல அறிந்து, தரிசிக்க நாடினான். இரும்பைக் காந்தம் இழுப்பதுபோலவே அவன் உள்ளத்தை இராமதாஸின் தவசக்தி இழுத்தது. (உக)

உஉ. "எனதுடல் பொருளுயிர் எவையும் உன்னதே;
உனதருளேயென துலகும் வாழ்க்கையும்;
மனதுறு பசியினை மாற்ற மாதவக்
கனியென வந்தனை, கடவுளேசரண்.

"எனது மனத்தைப்பற்றிய பேரின்பப் பசியைத் தீர்க்கவே அற்புதமான தவக்கனியாக வந்தாய். கடவுளே, குருதேவனே, என் உடல் பொருள் உயிர் எல்லாம் உன்னதே? உனது திருவருளே இனி எனக்கு அரசும் வாழ்வும்; நீயே சரண்! (உஉ)

உங. "தன்னலந் துறந்தனை; தவத்தின் மேன்மையால்
இன்னுயிர்க் கருளினை இன்ப மெங்குமே!
உன்னிகர் குருவினை யுடைய பேறுடை
என்னிகர் யா"ரென இறைவன் ஏத்தினன்!

"சுயநலத்தை முற்றிலுந் துறந்தாய். உனது தவத்தால் வந்த சக்திப்பெருமையைக்கொண்டு நீயே இன்புறாமல், நாடெங்கும் சுற்றி இனிய மன்னுயிர்களுக்கு அன்பு வழிகாட்டி இன்பமருளினாய். உன்னைப்போன்ற குருவையடைந்த பாக்கியசாலியான எனக்கு இணை யார்?" என்று வீர சிவாஜி இராமதாஸை வணங்கித் துதித்தான். (உங)

உச. ஆவலாய் வந்துதன் அடி வணங்கிய
கோவினைக் கோமுனி குளிர நோக்கியே,
"மேவினை யென்பணி வென்ற" தென்றவன்
ஆவியிற் பெய்தனன் அருளி னாற்றலே.

ஆவலாக, வந்து தன் அடிபணிந்த சிவாஜி மன்னனை முனியரசன் கண்குளிரப் பார்த்தான். "அன்ப, உனக்கே காத்திருந்தேன். வந்தாய், இனி நான் நிறைவேற்றக் கருதிய காரியம் வென்றது!" என்று அவனது வீர ஜீவனில் தவத்தாற் கிடைத்த திருவருட் சக்தியைப் பொழிந்தான். (உச)

உரு. ஏகுமின் னுடன்கலந் திணைந்து கூடிடும்
ஆகுமின் போன்றநல் லருந்த வக்கனல்
வேகமாய்ப் பாய்ந்துநம் வீர வேந்தனுக்
காகிய சக்திக ளனைத்து மீந்ததால்.

ஒரு மின்பொறியில் ஏகுமின் ஆகுமின் (Negative and Positive Currents) இரண்டும் இணைந்து கலந்து, புல்லி இரண்டறக்கூடியே சக்தியாகப் பரவி அற்புதங்களைச் செய்கின்றன. அதுபோல வீரசிவாஜியின் தேசபக்தியுடன் இராமதாஸின் அருந்தவத்திலுதித்த தெய்வக்கனலும் சேர்ந்து, அவனுக்கினியதான ஜயசக்திகள் எல்லாம் தந்தது. (உரு)

உசா. கொடியபொன் னுசையைக் குமைத்த மாமுனி,
அடியவன் அன்புடன் அளித்த பொற்குவை,
தொடவிலை ; துயர்கெடச் சுற்றும் வாழ்ந்தனன் ;
இடையருக் கீந்தனன், அருளின் ஈகையான் !

தன் அடியானுகிய சிவாஜி குரு தட்சிணையாகப் பெரும் பொற்குவை தந்தான். கொலை களவு விபசாரக் குற்றங்களைத் தூண்டும் கொடிய பொன்னுசையை அழித்தொழித்த மகா முனிவரனுன இராமதாஸன், அதைத் தொடவில்லை: தன்னைச் சுற்றிலும் இருந்த இடையர்கள் வறுமையால் துன்புற்றனர்; அவர்களுக்கே தந்தான், தெய்வத் திருவருளை மாந்தருக்குத் தாராளமாகத் தரும் கருணை வள்ளல்! (உசா)

உஎ. " அன்னையின் அன்புடை யண்ண லே, யென்றன்
பொன்னகர் புண்ணியம் பொலிய வாழ்" கென
மன்னவன் அழைத்திட, மாதவச் சுடர்,
" என்னிலை யேயெனக் கின்ப " மென்றனன் !

மன்னன் சிவாஜி குருதேவனைத் தனது அருகே வைத்துப் பணிவிடை செய்ய விரும்பினுன். "அன்னையைவிட அன்பு மிக்க பெரியோய், தாங்கள் எனது செல்வநகரில் வந்து வாழவேண்டும். அந்நகரும் தங்கள் இருக்கையால் புண்ணியத் திருவிளங்கும்; வருக!" என்றுன். மாதவ ஜோதியான தாஸர், 'பொன்னகரும், அரண்மனை வாழ்வும் உனக்கு இன்பம்; துறவியாகிய எனக்கு இந்த ஏகாந்த வாழ்வே இன்பம்; தன்னுள் தானுயிருக்கும் எனது நிலையே எனக்குப் பேரின்பம்!" என்று பதிலளித்தார். (உஎ)

உஅ. " குருதுணை, குருதுணை, குருதுணை" யென,
இருமலர்ப் பாதத்தை இறைஞ்சி வீரனும்,
மருவினன் வளநகர், மறுவிலான் பொழி
அருளினுல் வெற்றிகள் அடைந்து பூரித்தான் !

"குருவே துணை, என் இகபர சுகத்திற்குக் குருபக்தியே துணை, நான் அறத்தை நிலை நாட்டி அரசாள குருநாதர் ஆசியே துணை" என்று முனிவரின் இரண்டு மலர்ப்பாதங்களையும் வணங்கி, வீரசிவாஜி தனது வளமை பொங்கும் தலைநகரான பூனு சென்றுன். மாசற்ற முனிவன் செய்த அருளால் அவன் பல வெற்றிகள் அடைந்து, பகைவரை அடக்கி, அறச் செங்கோல் நாட்டி, அரசாண்டு நிறைவான இன்பம் பெற்றுன். (உஅ)

உகூ. ஆர்வமுற் றரசன் ஓர்நாள் அருட்பெருங் குருவைத் தேடிக்
கார்வனக் குகையில் நோயாற் கலக்கமுற் றிருக்கக் கண்டான்.
" ஓர்மருந் துண்டு ; வேங்கைப் பாலென்ன வுரைக்கக் கேட்டு,
வீரவா ளெடுத்து மின்போல் விரைந்தனன் அடவிக்குள்ளே.

சிவாஜி அடிக்கடி இராமதாஸைக் காண விருப்பமுடன் சென்று வந்தான். ஒருநாள் ஆவலாகக் குருதரிசனம் செய்யச்சென்றுன். குரு அந்த இடத்தில் இல்லை; காடுகாடாகத் தேடினுன். முடிவில் ஒரு காட்டில் மலைக்குகையில் இராமதாஸ் நோயால் வாடி உயிர் கலங்கக் கண்டான். "குருவே, இதற்கு மருந்தென்ன?' என்று கேட்டான். "புலிப்பால் ஒன்றே மருந்து" என்றுர் குரு. அதைக் கேட்டதும் வீரவாளை எடுத்துக்கொண்டு சிவாஜி காட்டிற்குள் மின்னல்போல விரைவாகச் சென்றுன். (உகூ)

௩௦. சேய்களைப் பிடித்தான், சிங்கம் ; நீயெழ வுருமிப் பாய்ந்த
தாய்ப்புலி தனையடக்கித் தடையறப் பால்கொண் டிந்து,
நோயினைத் துடைத்தான் ; அந்த நுவலரும் அன்பைப் போற்றித்
தூயவன் "வாய்மை வீரத் தொண்டநீ வாழ்க" வென்றான்.

வீரச்சிங்கமான சிவாஜி, காடெங்குந் தேடிச் சில புலிக்குட்டிகளைக் கண்டான்; அவற்றைப் பிடித்து வைத்துக்கொண்டு குகையில் அமர்ந்திருந்தான். வந்தது தாய்ப்புலி; விழிகள் திகைக்க, நகத்தை நீட்டி உருமி, தன் குட்டிகளைப்பற்றிய வீரன்மேல் பாய்ந்தது. சிவாஜி அப்புலியை வென்று அடக்கித் தடையில்லாமல் பாலைக்கறந்து, விரைந்து வந்து குருவிற்கீந்து, அவரது நோயைத் தீர்த்தான் ! வார்த்தையால் வர்ணிக்க முடியாத அந்தப் பரிசுத்தமான பக்தியைக்கண்டு, குரு இராமதாஸ் பூரித்தார் ; "உண்மையான வீரத் தொண்டனே, நீ நீடு வாழ்க !" என்று போற்றிப் புகழ்ந்தார் ! (௩௦)

௩௧. குருவினைப் பணிந்து வேண்டிக் கொற்றவன் பரலி தன்னில்,
திருமடங் கோயில் கட்டிச் செய்யநல் லடியா ரோடும்
அருகினில் இருத்தி, நாளும் அவனடி தொழுது வந்தான் ;
பொருளுடன் அருளு மோங்கும் புண்ணியப் பொலிவு பெற்றான் !

அச்சமயம், இராமதாஸைப் பணிந்து, சிவாஜி மன்னன் "தயவு செய்து குருநாதர் எனது நகருக்கருகே யிருந்து சேவை தரவேண்டும்" என்று வேண்டினான். குரு சம்மதித்ததும், பரலியில் ஒரு அழகான மடமும், மாருதி கோயிலும் கட்டி, குருவை அங்கே அடியாருடன் இருக்கச் செய்தான் ; ஒவ்வொரு நாளும் அவர் திருவடி சேவை செய்தான். அதனால் அரசு, ஆட்சியாகிய பொருட்செல்வத்துடன் தெய்வத் திருவருட்செல்வமும் பெற்று, இகபர சுகங்களால் தழைத்து இன்புற்று விளங்கினான். (௩௧)

௩௨. இலகிடத் தருமமெங்கும், இகற்படை செய்யுந் தீய
கொலைகள வொழிய நல்ல குலமகள் கற்பு வாழ,
நிலைபெறு வீர நீதி நெறியினை யிலகக் காட்டிப்
பலவகை யுதவி செய்தான் பரிவுள குருவு மாங்கே.

ஸஜ்ஜனகடம் என்னும் அந்தப் பரலியில் ஊன்றிக்கொண்டு, ஜனங்களிடம் இரக்கமுள்ள சமர்த்தகுரு இராமதாஸன், சிவாஜிக்குப் பலவகையில் உதவி செய்தான். அதனால் நாட்டில் அதருமம் ஒழிந்து தருமம் விளங்கவும், பகைவர் சேனை செய்யும் பொல்லாக் கொலைகளவுகள் ஒழியவும், கற்புள்ள தூயகுலப் பெண்களின் கற்பு வாழவும் இடமானது. இவற்றிற்கு வேண்டிய வீரம் பொருந்திய நீதி நெறிகளைக் குருநாதன், சொல்லால் விளக்கிச் செயலைத் தூண்டினான். (௩௨)

௩௩. அலைமனம் அடக்கி யாளும் அருந்தவ யோகி போன்றே
நலிபகை அடக்கி யாண்டு, நானில புகழை நாட்டி
மலையெனச் சிறந்த வீரன், மாண்புறு சந்தா ராவில்
நிலைபெறு நாளிற் கண்ட நிகழ்ச்சியை விளம்புவோமே.

புலன்கள் வழியே அலையும் மனத்தை அடக்கித் தன்னை ஆளும் யோகிபோல, நாட்டின் அமைதியைக் கெடுக்கும் பகைவரை அடக்கி, சிவாஜி நானிலத்திலும் புகழ் நாட்டி,

மலைபோலக் கம்பீரமாகச் சிறந்து விளங்கினான். அந்த வீரன் சத்தாராவில் நிலைபெற்றுத் தனது அரசை நடத்திய நாளில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைச் சொல்வோம் :

௩௪. மாதவச் செல்வன் ஊரில் *மதுகரி பிச்சை யேற்று,
மேதகு வேந்தன் கோயில் மேவலும், பரம பக்தன்
பாதமா மலரில் வீழ்ந்து, "பகவானே அரசு முற்றும்,
ஏதெனக் குரிய தெல்லாம் உனதெ"ன எழுதிப் போட்டான்!

மாதவச் செல்வனான இராமதாஸ் சதாராநகரில் உஞ்சவிருத்தி யெடுத்துக் கொண்டே, மேன்மையான தனது மாணவன் வாழும் அரண்மனைமுன் வந்தான். பரமபக்த சிகாமணியான சிவாஜி மன்னன் ஓடிவந்து, இரண்டு பதமலர்களையும் தொட்டு வணங்கி, "பகவானே, இந்த அரசு முற்றிலும், இன்னும் எனக்கு எதெது உரியதோ அதெல்லாம் உம்மதே" என்று ஒரு சீட்டெழுதி, குருவின் தொடையில் போட்டான். (௩௪)

[மதுகரி=இல்லறத்தார் துறவிகளுக்கிடும் தூய உணவு; நிவேதனம்.]

௩௫. "உய்வித்தாய் என்னை; யென்றன் உடல் பொருள் உயி ருனக்கே
ஐயநீ ஐய மேற்றல் அழகில்லை; அரச னாகி
வையகம் புரப்பாய்" என்று வணங்கிய வேந்தன் சொல்ல,
"மெய்யதுன் அரசை யாள மேற்கொண்டேன்" என்றான் ஞானி.

"ஐய, என்னை வழிகாட்டி அருளீந்து காத்தாய்! என் உடல் பொருள் ஆவியெல்லாம் உனக்கே! நீ பிச்சையெடுத்தல் நன்றாயில்லை; அரசனாயிருந்து எனது உலகை ஆண்டருள்!" என்று சிவாஜி மன்னன் சொல்லவே, "அது உண்மை; உன் அரசை ஆள இதோ பொறுப்பேற்றேன்" என்று ஞானாசிரியன் சொன்னான். (௩௫)

௩௬. "விட்டது பார" மென்று விடுதலை வீர னாங்கே,
பட்டணத் தெருக்கள் சுற்றிப் பகவனோ டிரந்து வந்தான்;
இட்டசோ றுண்டு, பின்னர், "இறைவநீ யாள்க; யானுன்
கட்டளை செய்யுந் தொண்டன்; கட்டற வாழ்வே" னென்றான்!

"அரசின் சுமைவிட்டது" என்று அச்சுதந்தர வீரன், வைராக்கியக் கோலத்துடன், சதாராநகரத் தெருவெல்லாம் சுற்றி, பகவான் இராமதாஸருடன் மதுகரி பிக்ஷையெடுத்து வந்தான். ஊரார் இட்ட உணவை குருவுடன் சிவாஜியும் உண்டான். பிறகு "என் இறைவா, தலைவா, இனி நீ அரசாள். நான் உனது ஆணையைச் செய்யும் சேவனாகி, உனது திருவடி போற்றி, வேறு உலக பந்தமில்லாமல் துறவியாக வாழ்வேன்!" என்றான். (௩௬)

௩௭. போற்றிமெய்த் துறவை, யாசான் புன்னகை பூத்து, "நீயே
நாற்றிசை யுலகை நன்று நடத்திடத் தகுவை; நீடு
நோற்றனன் உனக்கே; நாட்டு நோவினைத் தீர்க்க, வாளின்
ஆற்றலைப் பெற்றாய், என்றன் அன்ப நீ அரசாள்" என்றான்!

குருராமதாஸ் புன்னகை பூத்து, தியாக வீரனான சிவாஜியின் உண்மைத் துறவைப் புகழ்ந்தான். பிறகு, "அன்பா, நாற்றிசையும் விரிந்த இந்நாட்டைத் தலைமை வகித்து நடத்த நீயே தகுந்தவன்; நீ இவ்வாறு எழுந்து அறங்காக்க வேண்டுமென்றே நீண்ட தவம்

புரிந்தேன்: இந்த நாடு வருந்தும் புண்ணைத் தீர்க்கும் வாள் திறமை, க்ஷத்திரிய பலம், பெற்றவன் நீயே. ஆதலால் அன்ப நீ, அரசை ஆண்டுவா!'' என்றருளினன்! (௩௭)

௩௮. சாதுவின் மொழியைக் கேட்டுச் சரண்புகு சீடன், அன்னோன்
பாதுகை பீடமேற்றிப் பறந்திடக் காவிச் சண்டா,
மூதுரை போற்றி, யாள முனைந்தனன்; அவனுக் கின்னும்
கோதறு போதந் தன்னைக் குறித்தனன் குரவனுங்கே!

சாது இராமதாஸன் சொல்லைக் கேட்டு, அவனைச் சரண்புந்த சீடன் சிவாஜி, அவனுடைய பாதரட்சையை உயர்ந்த பீடத்தில், அரியணையில் ஏற்றி, அவன் ஆணைப்படியே காஷாயக்கொடி பறக்கவிட்டு, அவன் சொல்லும் முதிய உபதேசங்களைப் போற்றி அரசாள முனைந்தான். தன் கட்டளைப்படி ஆளும் அவனுக்கு, பெரியோனான இராமதாஸன், நாட்டில் உள்ள குற்றங்களையும் இடர்களையும் களைந்து, வெற்றிபெற ஆளும் வழிகளை, மீண்டும் போதித்தான்: (௩௮)

இராமதாஸ் போதம்

௩௯. மாரதச் சுடரே, பாரத மணியே,
வீரருக் கரசே, பாரினுக் கொளியே,
சாது சங்கம் சாந்தமாய் வாழ,
வேத தருமம் விளங்கிட நாட்டில்,

௫. அறந்தாங் கிடவே பிறந்தாய் நீயே!
துறந்தாய் நன்னலம்; சிறந்தாய் பொதுநலம்;
போற்றுய் உலகை ஆற்றல் மிகுந்தாய்.
நோற்ற சக்தியை ஊற்றினே னுன்னுள்;
ஊழ்வலி யாலே யுலைந்தநா டுய்யத்

௧௦. தோள்வலி வேண்டும்; வாள்வலி வேண்டும்.
மருத்துவன் போலே, மாநில வுயிரை
வருத்தும் புண்களை அறுத்தெறி வீரா!
பேடிகள் போலே ஓடி யொளியும்
பீடைப் பழக்கம் பிறகிட் டொழிக;

௧௫. போர்முர சார்த்தும் புயங்கள் விம்ம
வீரவா ளேந்தி விடுதலை முழக்குக!
சிங்கம் போலே, தீயிற் சுட்ட
தங்கம் போலே தியாகிகள் வேண்டும்,
புலியெனக் கேட்டதும் கிலிபிடித் தோடும்

௨௦. அலிப்படர் வேண்டோம், ஆண்மை வளர்கவே!
சத்திய யுகத்திற் சாந்தம் பலிக்கும்,
இத்தறி கலியெமன் இடர்செயுங் காலை,
அறச்சமர் புரியும் ஆட்பலம் வேண்டும்.
திறமை வேண்டும் தீமை தீரவே.

பெண்டிர் கற்பும், பெரியார் தவமும்,
தொண்டர் நலமும், தூயநல் லறமும்,
ஆக்களும், சேய்களும், அமைதியாய் வாழக்
கோக்கள் புயவலி விக்குதல் கடனே.
மெத்தப் பயந்து வீரங் குன்றிச்

செத்தநாட் டிற்குச் சீவ னளிப்பாய்.
குனிதலை நிமிர்ந்து, கொடுங்கோல் குமைய
மனிதர் மனிதராய் வாழ்ந்திடச் செய்வாய் !
கருத்தில் வீரக் கனலைத் தூண்டாய்,
திருத்திக் கோழையைத் தீர னாக்குவாய்!

கரிபரி யிரதம் காலாட் படையுடன்
உரிமையைக் காக்கப் பெருமையோ டெழுவாய்!
தோல்வி யென்பது துணிந்தவர்க் கில்லை.
சால்புடை யோர்க்குத் தளர்வு மில்லை.
கடற்படை தன்னைக் கண்ணெனக் காப்பாய்.

உடற்கமை பயிற்சியை உயிரெனப் போற்றுவாய்.
சோனியுஞ் சொத்தையுஞ் சொள்ளையும் வேண்டோம் !
மானங் காக்கும் மாண்புளோர் வருக !
அருச்சுனன் பீமன் அனுமான் போலவே
திருத்தகு வீர தீரரை வேண்டுவோம் ;

சிக்கனம் போற்றித் தேசம் வாழவே
பக்குவ மான பணிகள் புரிவோம்;
இணங்கும் பிறரை இணங்கி யேற்போம்.
குணங்கும் மாந்தர் கோணலை நிமிர்த்துவோம்!
அறவோர் அனைவரும் உறவோ ராவர்,

அறிஞர் அனைவரும் ஆதரம் பெறுவார் ;
புல்லியல் அதர்மப் புதர்களை நீக்கி
நல்லியற் சோலை நாட்டுதல் கடனே.
மறத்திமிர் கொண்டு மாந்தரை வருத்தும்
அறப்பகை யாளரே ஆவர்நம் பகைவர்.

நேர்மையும் பண்பும், சீர்மையும் போற்றுங்
கூர்மதி யாளர்நங் கூடப் பிறந்தோர்.
அருளும் பொருளும், அன்பும், கல்வித்
திருவும், கலையும், சீரிய தொழிலும்,
உள்ளொற் றுமையும், உலகொற் றுமையும்,

தெள்ளிய ஒழுக்கமும், ஒள்ளிய நினைவும்,
பயிரின் வளமும், பசுவின் வளமும்,
உயிரின் வளமும் ஓங்கிச் செழிக்கவே!
கருத்திற் கடவுளுங் கையிற் செயலும்
இருத்திமன் னுயிர்க்கெலாம் இன்பமே செய்வாய்!

௬௫. அருளும் பொருளும் ஆனதே வாழ்க்கை,
திருவும் அறிவுஞ் சேர்ந்தே செயலாம்,
அரசுந் தவமும் அமைந்ததே செங்கோல்,
பரமும் இகமும் படைத்ததே இன்பம் ;
திண்மையே சக்தி, உண்மையே வெற்றி,

௭௦. பெண்மையும் ஆண்மையும் பேணுக வுண்மை ;
மாசறு வீரா...நேசுறும் அன்பா,
நேசருக் கினியாய் நிகரிலா நிருபா,
துறவுக் கொடியைத் தூக்கிப் பிடித்தே
அறநெறி போற்றி, அறிஞரைக் கேட்டு.

௭௫. 'ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெய ராம்' எனும்
தாரக மந்திரச் சக்தியைப் பெருக்கி,
சத்திர பதியாய்ச் சத்தியச் சுடராய்,
௭௮. இத்தல மெல்லாம் இசைத்திட வாழ்கவே!'

"மராட்டிய தேசச்சுடரே, பாரதநாட்டின் வீரமணியே, சிவாஜி, வீரருக்கு அரசனே, உலகிற்கு தைரியதீபம் போன்றவனே, நீ தன்னலந் துறந்தாய் ; பொது நலத்திற்கே வாழ்ந்தாய் ; நாட்டில் சாதுக்கள் சங்கமும், வேததருமமும் விளங்க நீதிச் செங்கோல் புரி! எனது தவக்கனலை உன்னுள் வார்த்தேன். நீ துறவியாகிக் காட்டிற்கோடினால் நாடு நலியும். இந்நாடு மெலிந்து, அறங்குலைந்து வருந்துகிறது, நாற்புறமும் பகைவர் சூழ்ந்து, இடர் செய்கிறார்கள். உலகைக் கொடிய அதருமப் பகைப்புண் வருத்துகிறது. அப்புண்ணை மருத்துவன்போல் அறுத்தெறிந்து உலகன்னை இன்புற வாள் வீரர் வேண்டும். பேடிகள் போலே அஞ்சிப் பதுங்கும் பீடைகள் நமக்குத் தேவையில்லை. 'புலி' என்றதும் கிலிபிடித்தோடும் அலிப்பதர்கள் நமக்குத் தேவையில்லை. போர் முரசு கேட்டதும், துள்ளியெழுந்து சிங்கம்போலப் பாய்ந்து வந்து, தீயிற் சுட்ட தங்கம்போலத் தியாகக்கனலால் ஒளிரும் தீரர்கள் இப்போது வேண்டும். சாந்தம் சத்தியயுகத்திற் பலிக்கும் ; அசத்தியமும் அக்கிரமமும் பஞ்சமாபாதகமும் அழிநடம் புரியும் இக்காலத்தில், தருமப்போர் செய்யும் ஆண்மை வேண்டும். தீமையை அழிக்கும் திறமை வேண்டும். பெண்களின் கற்பு, பெரியாரின் தவ சாதனங்கள், பொதுநலத் தொண்டரின் புண்ணியச் செயல்கள், வாழ்விற்கு எல்லா நலமும் சுத்தமும் அளிக்கும் அறம், உலகிற்கு அன்னைபோலுதவும் பசுக்கள், இளங்குழந்தைகள் எல்லாம் பகைவர் கொடுமையில்லாமல் அமைதியாகச் செழிக்க, அரசர் தோள்வலி பெருக்கி அதருமத்தைக் களைந்தெறியவேண்டும். வீரமணியே, இந்நாடு பல காரணங்களால் சூடற்றுச்சோர்ந்து தலைகுனிந்து கிடக்கிறது. இதற்கு ஆண்மையுயிர் அளித்து, தலைநிமிர்ந்து மனிதத் தன்மையுடன் வாழச்செய்வாய். மக்கள் கருத்தில் வீரக்கனலைத் தூண்டாய். கோழைகளைத் திருத்தித் தைரியவான்களாக்குவாய் : தேர், யானை, குதிரை, காலாட்படைகள் கப்பல்களெல்லாம் ஏராளமாகச் சேர் : அறப்போர் செய்து, நாட்டின் உரிமையைக் காப்பாற்று. எல்லாரும் உடலுறுதிபெறச் செய். சொத்தையும் சோனையுமான ஆட்கள் காட்டிற்கே தீங்காவார். நாட்டு மானத்தைக் காக்கும் மாண்புடைய வீரர் நமக்கு வேண்டும். தயார்செய் ; அருச்சுனன், பீமன், அனுமான் போன்ற தீரரை உண்டுபண்ணு. நமக்கு இணங்கிவரும் உண்மையான யாரையும் உறவாகக் கருது—அவர்கள், எச்சாதி சமயத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரியே. அறிவாளர் நமது ஆதரவைப் பெறுக. மிருக பலங்கொண்டு

திமிர் பிடித்து வரும் அதரும அரக்கரே நமது பகைவர்; நேர்மையும் நன்னடையும் கூர்மதியுங்கொண்ட நல்லோர் நமது சகோதரராவர். அரசே, நாட்டில் மனஒற்றுமையும், சமுதாயவொற்றுமையும் நிலைநாட்டு. அருளும் பொருளும் விளங்கும் அரிய கல்வியறிவு, தொழிலறிவு, கலைகள், வாணிகம், நல்லொழுக்கம், தூய தெய்வசிந்தனை, இவற்றை வளர்; உயிரை வளர்க்கும் பயிரை வளர்; பசு வளம் பெருக்கு; நெஞ்சிற் கடவுளையும் கையில் செங்கோல் முயற்சியையும் கொண்டு, எல்லாருக்கும் இனியது செய். அறிவும் திருவும், அருளும் பொருளும், அரசும் தவமும், பரமும் இகமும் சேர்ந்ததே இன்ப வாழ்க்கை; நிறைவான செங்கோலாட்சி செய். மனத்திண்மைதான் சக்தி. உண்மைதான் வெற்றி தருவது. அன்பா, உனது நாட்டில் ஆணும் பெண்ணும் இத்தகைய உண்மையான வாழ்வைப் பெறுக. மாசற்ற வீரனே, ஒளிமிக்க அன்பனே, நண்பருக்கினியனே, ஒப்பற்ற நீதிமன்னனே, எனது துறவிற்கடையாளமான காஷாயக் கொடியைத் தூக்கிப் பிடித்து, அறநெறி காத்து, அறிவாளர் சொல்லைக்கேட்டு, அரசாளு. "ஸ்ரீராம் ஜயராம் ஜயஜய ராம்" என்னும் தாரக மந்திரத்தை மறவாது ஜபி; சத்தியமே ஜோதியாய், சக்கரவர்த்தியாய், இவ்வுலகெல்லாம் உன் புகழ்பாட, நீ இனிது நீடுவாழ்க! (௩௯)

சிவாஜி

௪௰. "ஆணை தாங்கி அவனியை ஆளுவேன்,
காண நின்ற கருணைக் கடவுளே!
ஆணவப் பகை யற்றது நின்கழல்
பூணப் பெற்றனன் பூரண மெய்தினேன்.

௪௧. அறிவு தந்தநின் அன்பருள் இன்றியான்
சிற கிழந்த சிறுகிளி போலுவேன்;
மறலி யஞ்சுநின் மாணடி பற்றினேன்;
இறைவ, வேறெனக் கோர்கதி யில்லையே!

௪௨. என்றி றைஞ்சி யிறைவன் அருள்வழி,
நின்று நீதி நிலவ நிருபனும்
நன்று நாட்டிடை நல்லறம் பாலித்தே
வென்றி வீர விளக்கென் றிலங்கினன்!

"குருதேவா, உன் ஆணையின்படியே இந்த உலகை ஆளுவேன். என் கண்முன் காணவந்த தெய்வமே, என் ஆணவத்தை அழித்தொழித்து அன்பு மேலிட்டு, உனது மலரடியைச் சிரத்தில் பூணப் பெற்றேன். எனக்கினி என்ன குறை? என் வாழ்வில் எல்லாநிறைவும் அடைந்துவிட்டேன்! நான் ஒரு சிறு கிளிபோன்றவன்; நீ சொல்லும் மந்திரத்தைச் சொல்லிக் கடைத்தேறப் பார்ப்பவன். 'இன்னது இப்படிச் செய்' என்று நீயே எனக்கு அறிவுறுத்துகிறாய். உன் அருளின்றேல், நான் சிறகிழந்த கிளிபோன்று செயலற்றிருப்பேன். சாவும் அஞ்சும் அமராத்ம சித்திபெற்ற உனது திருவடியைப் பற்றினேன். எனக்கு வேறு கதியில்லை, இறைவா" என்று குருவை வணங்கிச் சிவாஜி மன்னன், அவன் அருள்வழி நின்றொழுகி, நாட்டில் நீதி விளங்க அறத்தை நன்றாக நாட்டி, வெற்றி வீர விளக்கென விளங்கினான்! (௪௰—௪௨)

௪௩. என்னு மெண்ணங்கள் எண்ணலுஞ் செய்து நீள்
புண்ணி யப்புகழ் பொங்கப் புனிதனும்,
மண்ணின் வாழ்வுதன் மாதவச் சித்தியால்
விண்ணின் மிக்கு விளங்க விளங்கினான்!

இவ்வாறு தனது பெரிய தவசித்தியால் எண்ணிய எண்ணங்களெல்லாம், நினைத்ததும் நிறைவேற்றி, மண்ணுலகும் விண்ணுலகம்போல் விளங்கும், அரிய காரியங்களைச் செய்து, புண்ணியப்புகழ் பெற்று விளங்கினான், பரிசுத்தனான இராமதாஸ். (௪௩)

௪௪. அன்பு வீரன் அரனடி சேர்ந்தபின்,
தன்பு விப்பணி நாழ்வறச் செய்தபின்,
புன்பு லாற்பொறை போக்கிப் புனிதனும்
இன்ப விண்ணி லிருக்கக் கருதினான்.

தன்னை அன்பு செய்த வீரசிவாஜி சஜ்ஜனகடத்தில் கடைசிமுறை வந்து வணங்கிப் பிறகு அரனடி சேர்ந்தான். அதன் பிறகும் சுத்தனான இராமதாஸ், மஹாராஷ்டிரத்தில் பக்திமார்க்கத்தையும் அருட்பணிகளையும் பரப்பினான். உலகில் தான் செய்யவேண்டிய காரியம் குறையில்லாமல் நிறைவேறியது. அதன்பிறகு, இந்தப் புல்லிய ஊனுடற்சுமையை உதறி சுத்தானந்த சுவர்க்கத்தில் ஆன்ம வடிவாக வாழக்கருதினான். (௪௪)

௪௫. சீரடியார் புடைசூழச் சித்த னோர்நாள்,
“சிறையுடலை யுதறியான் செல்வே னின்றே;
ஆருயிருக் குயிராம் சுத்தான்மா யானே,
அழிவின்றி அடியாருள் இருப்பேன் காணீர்!
பாருலகிற் பிறந்தபயன் பரம னன்பே;
பயன்கருதாப் பொதுநலமே பயில்வீ”ரென்றான்.
ஆர்வமுடன் “ஹரஹர”வென் றனலாய், மின்னாய்,
அருட்சோதி தனிற்கூடி யதுவே யானான்!

ஒருநாள் சீரிய அடியார்கள் புடைசூழ, தவசித்தனான இராமதாஸ் இவ்வாறு பேசினான்: “அன்பர்காள், இந்த உடற்சிறையை நான் இன்றேஉதறிப் பரமபதமெய்துவேன்; ஆனால் என் அரிய உயிருக்கு உயிரான சுத்தான்மா அழியாது; அதுவே நான். அதன்வடிவாக நான் அடியார்களுள் இருந்து நல்ல பணிகளைத் தூண்டுவேன். இந்த உலகிற் பிறந்த பயன், அலைமனத்தை அடக்கித் திமை வழி விலகிப் பரம்பொருளை அன்புசெய்தல், சுயநலப் பயன் கருதாமல் தியாகபுத்தியுடன் சர்வஜன சேவை செய்தல் இவையே. ஆதலால் நீங்கள் பக்தி பரோபகாரம் ஆகிய இரண்டையும் சாதனமாகக் கொண்டு இன்புறுங்கள்” என்று உபதேசித்தான். எண்ணரிய இராமநாம ஜபத்தால் சித்திபெற்ற இராமதாஸன் இறுதியில் “ஹர ஹர” என்று இருபத்தோரு தடவை சிவநாமம் சொல்லி, “ஹரே ராம” என்ற சப்தத்துடன் ஓர் அனல்போல மின்போலக் கிளம்பி அருஞ்சோதியுடன் கலந்து அதுமயமானான். (௪௫)

௪௬. “எண்ணரிய வினையுடலம் எடுத்த மாந்தர்
இருவினைநீர் இறைவனையே யெண்ணி யன்பு
பண்ணிடுக; பாருக்கு நலமே செய்க;
பரிதியினை வான்மழையைப் பார்த்துப் பார்த்தே

புண்ணியங்கள் போற்றிடுக தீமை போக!
பூவுடனே மணம்போலும் புவியைப் பார்க்கும்
கண்ணுடனே கதிர்போலும் உயிர் கலந்த
கடவுளருள் காப்பாற்றும் கருணையாலே!"

மனிதர் கணக்கில்லாமல் எத்தனையோ வினைகளைச் செய்கிறார்கள். அவ்வினைகளால் நல்ல தீய பயன்கள் விளைகின்றன. அப்பயன்கள் சூக்ஷ்ம சரீரத்திற் குவிந்து வினைப் பிறவியைத் தருகின்றன. எத்தனையோ வினையுடலை எடுத்தெடுத்து மனிதவுடல் வருகிறது. மனிதர் பகுத்தறிவுள்ளவர்; மானிடப்பிறவி அரிது. இப்பிறவியெடுத்தவர், அறம் பாவமென்னும் இருவினையும் தீர்க்கும் இறைவனையே தியானிக்கவேண்டும். அவனையே அன்பு செய்க. ஆகாயத்தில் பற்றற்ற சாட்சியாயிருந்து சுயநலங் கருதாமல் சூரியன் உலகிற்கு ஒளியும் கனலும், மேகமும் தருகிறான். வான்மழை, தன்னையே உலகிற்கு வழங்கிப் பயன் கருதாமல் செல்கிறது. இரண்டையும் பார்த்துப் பார்த்து, மானிடர் உலகிற்குப் பொது நலஞ்செய்க. பாபங்கள் ஒழியப் புண்ணியங்கள் ஏராளமாகச் செய்க. பூவுடன் மணம் சேர்ந்திருக்கிறது. உலகத் தோற்றத்தைக் காணும் கண்ணுடன் சூரியன்கதிர் சேர்ந்து பார்வை தருகிறது. இவற்றைப் போலவே ஆன்மாவுடன் சுத்தனான இறைவன் கலந்து நமது வாழ்வை நடத்துகிறான். இந்த அத்துவித ஐக்கியத்தை, சித்தாந்த இரகசியத்தை அறிக. உயிரிற்கலந்த கடவுளருள் நம்மைக் கருணையால் காப்பாற்றி எல்லா நலங்களையும் செய்யும். (சசு)

சஎ. கனிதமி ழின்பமென்னக் கௌரி யாழ் இசைந்துக் கொஞ்ச,
முனிசொலும் பொருளும் வாக்கும் முழுமனம் உருகக் கேட்டு,
நனியினி தென்று சுத்தன், நயஞ்சொலிப் பணிந்த பின்னர்,
மனமுறு கவலை தன்னை மாதவன் அறியச் சொன்னான்.

கனிந்த தமிழ்ப்பாடலின் இன்பம்போல, கௌரியின் வீணை, கதைப்பாட்டுடன் கூடிக் குழைந்து கொஞ்சியது. முனிவன் கவிதையும் அதன் சொல் பொருள் நயமும் உள்ளத்தை உருக்கின. "மிகவும் இனிது இனிது" என்று கேட்டு, சுத்தன் கதை நயத்தைப் புகழ்ந்து வணங்கினான். பிறகு தனது மனத்தில் உள்ள கவலையை, கலி நகரில் நடக்கும் அட்டூழியங்களை, அந்த மாதவன் அறியும்படி விவரமாகச் சொன்னான். (சஎ)

சஅ. பொறிகளை வென்ற மேலோன், "புனிதவுன் கவலை முற்றும்,
அறிகுவேன்; உண்மை; நாட்டில் அதரும மோங்குங் காலம்;
வெறிகொளும் கலியன் சேனை, வேங்கையின் கூட்டம் போலே
அறநெறி முனிவர் செய்யும் அருந்தவங் கலைக்கு மையா!"

பொறிபுலன்களை வென்றடக்கி ஆத்மசித்தி பெற்ற சாந்த முனிவன், "சுத்தா உனது கவலையை முற்றிலும் அறிவேன்; நீ சொல்வது உண்மை. இந்த நாட்டில் தருமம் அழிந்து அதருமம் படரும் காலம் வந்துவிட்டது. அதனால், பெண்மண்பொன் வெறியேறிய கலியன் தோன்றினான். அவன் போற்றும் அசுரசேனை வேங்கைப்புலிக் கூட்டம்போல வந்து, அறநெறியை வளர்க்கும் இப் பஞ்சவடி முனிவரின் அரிய தவத்தை உலைக்கிறது. ......ஐயா!" (சஅ)

சகூ. "பாரத நாடு பெற்ற பலமெலாம் ஆத்ம சக்தி ;
வேரது ; கிளையும் பூவும், வீரமும் அறமு மாகும்.
சீருடன் மூன்றும் பேணும் சித்தரை யழிக்க முன்னே
போருடன் வருகின் ருனப் புல்லனை விழத்த வந்தாய்."

புண்ணிய பூமியான இந்தப் பாரததேசம் பெற்ற பலமெல்லாம் சுத்தான்மசக்தி தான். அதுவே சமுதாயத்தின் வேர் ; வீரம் அதன் கிளை; தருமம், மலர். இம்மூன்றையும் சீர்மையுடன் காக்கும் யோகசித்தி பெற்ற முனிவரை முன்னே அழித்தாலே தனது அதருமம் நிலைக்குமென்று கலியன் கிளம்புகிருன். இதோ அவன் போர்கொண்டு வருகிருன் ; அந்தப் புல்லனை அழிக்க வந்தவன் நீயே. (சகூ)

ருo. இவ்வகை முனிவன் சொல்லி, "இன்னமும்" என்ற போதே
வெவ்வெறிக் குரல்கள் கேட்டார், "வேந்த...போர், போர், போர்" என்றே
திவ்விய முனிவர் ஆர்த்தார், தீக்கொழுந் துயரக் கண்டார் !
அவ்விடம் அமைச்சன் வேண்டும் அணிபடை யெழுந்த தம்மா !

முனிவன் இப்படிச் சொல்லி, "இன்னமும் கேளாய்' என்று வாயெடுத்ததுதான் தாமதம்; எல்லாரும் பயங்கரமான வெறியர் குரல் கேட்டார்கள். அரசே "போர் போர் போர்" என்று தெய்வீக முனிவர் முறையிட்டனர். அதோ மனைகளில் தீக்கொழுந்தேறு கிறது, இக்காட்சி யூடே அச்சமயம் அந்த இடத்தில், முன்பே மந்திரி சித்திமான் வேண்டிய நேசப்படைகள் வந்துசேர்ந்தன. (ருo)

ருக. சாந்தனின் ஆசி பெற்றுச் சடிதியிற் சென்று, சுத்தன்
பாந்தளும் புலியும் போலப் படையுடன் சீறி யாங்கே,
போந்தவெம் பகைவர் கூட்டம் பொடிபடப் பொருதுவென்று
வேந்தறங் காத்த தன்மை விளங்குற விளம்பு வோமால்.

சுத்தன், சாந்தமுனிவர் ஆசியைப் பெற்ருன் ; வெகு விரைவாகச் சென்ருன் ; படையணி சேர்த்தான் ; மந்திரியுடன் கூடி நடத்தினுன் ; பாம்பும் புலியும் படைசேர்ந்து சீறியது போல அங்கே வந்த பகாசுரர்களைத் தவிடுபொடியாக்கிப் போர்செய்தான் ; வென்ருன் ; அரசனுக்குரிய அறத்தை காத்தான். அதன் தன்மையை விளக்கமாகச் சொல்லுவோம், கேளுங்கள். (ருக)

உo. இராமதாஸ் படலம் முற்றிற்று.

உக. கலி சினந்த படலம்*

க. பற்று தீக்கொரு பஞ்செனச் சித்திமான்
ஒற்றர் மூலம் அனுப்பிய ஓலையிற்
குற்றங் கண்டு கொதித்த கலியனைச்
சுற்றி நின்ற கொடியருந் தூண்டினர்.

கலிநகருக்குச் செல்வோம்: கலியன் சுத்தனையும் மந்திரியையும் தனது நகருக்கு அழைத்து ஓலையனுப்பியதை முன் பறிந்தோம். அதற்குச் சித்திமான், தன் ஒற்றர் மூலமே தந்திரமாகப் பதில் அனுப்பிக் கலிநகர் உளவையும் அறிந்தான். அப்பதிலில் கலியன் குற்றம் கண்டான். முன்னே சித்தியின்பால் சினத்தீ பற்றியது. அத்திக்கு இப்போது ஒரு பஞ்சும் கிடைத்தது போன்றது. கலியன் உளங்கொதித்தான். அவன் கொதிப்பை இன்னும் தூண்டிவிட்டனர், சுற்றியிருந்த கொடிய அரக்கர். (க)

கலியன்

உ. " ஆசை சொல்லி யழைத்தும் வரானந்த
மீசை யில்லா விடலைச் சிறுபயல்.
மோச மான முடங்க லனுப்பினன்.
மாச மர்த்தன் மதிமிகு மந்திரி.

'தான் எவ்வளவோ ஆசைகூறி ஆளனுப்பி அழைத்தேன். இன்னும் மீசை அரும்பாத அந்தச் சிறிய ஆண்பயல் வரமாட்டானும்! மகாசமர்த்தன் என்று பேர்பெற்ற அந்த மந்திரியும், மோசமான கடிதம் அனுப்பி, என்னை அவமரியாதை செய்தான். (உ)

ந. " எனை மதிக்கிலர்; என்னுடை யாட்பலந்
தனை மதிக்கிலர்; சங்கட மானபோர்
முனையி லேயிவர் மூளையைப் பேர்க்கிறேன் "
எனமு றுக்கினன் மீசை யிருபுறம்.

" என்னை இந்தச் சுத்தனும் மந்திரியும் மதிக்கவில்லை. என்னுடைய பெருந்திரளான படைவலியையும் மதிக்கவில்லை. இருக்கட்டும்; இவர்களைச் சங்கடமான போர்முனையில் மாட்டி, அடித்து மூளையைப் பெயர்த்துக் கொல்கிறேன் " என்று இரண்டுபுறமும் வாள் போல் நீண்ட மீசையை முறுக்கிவிட்டான். (மீசையில்லாத அந்தச் சிறுவனை மீசைநீண்டதான், ஓர் அடியில் வெல்லுவானும்)". (ந)

கலி-வீரர்

ச. கேட்ட வெய்யர் கிளர்ச்சிகொண் " டின்றுநம்
தோட்டி னவத் துடைத்ததுன் சீற்றமே;
காட்டை நீவிக் கலிக்கொடி விண்ணெட்ட
நாட்டு வோ "மென நாப்பறை கொட்டினர்.

கலி விருத்தம்: இராகம் மோகனம்; தாளம் ஆதி; சந்தம், தன்ன தானன தன்னன தானன.

அங்கிருந்த கொடிய கலிப்படைவிரர் இம்மொழி கேட்டனர் : "கலியரசே, சரியான சண்டையில்லாமல் நமது தோட்கள் தினவுற்றன. உனது கோபம் அதை இன்று போக்கி யது. அந்த அரசிளங்குமரனை மட்டுமனறு ; மந்திரியை மட்டுமன்று; இருவரும் இன்றிருக்கும் அந்த ரிஷிவனத்தையே அழித்துத் துடைத்து, நமது கலிக்கொடியை நாட்வோம்" என்று நாப்பறை அடித்தனர். (ச)

ரு. சேனை யில்லை......சிவசிவ வென்றுள
ஞானப் பித்தர், நமதொலி கேட்டதும்,
மோன மாக முழையிற் பதுங்குவார்
தான மாகவுந் தந்து வனத்தையே.

பஞ்சவடியில் உள்ளவர்கள் ஞானப்பைத்தியம் பிடித்த அப்பாவிகள் ; அவர்களுக் குச் சேனை கிடையாது. "சிவ சிவ" என்று கண்ணை மூடிக்கொண்டு சும்மா இருப்பதே அவர்களுக்குத் தெரிந்த வேலை. நமது முரசொலி கேட்டதுமே அவர்கள் எதிர்க்காமல் மலைக் குகைகளுள் ஓடிப் பதுங்குவர். அல்லது சாத்விகமாக, "எல்லாம் அநித்தியந்தானே ; யார் ஆண்டாலென்ன?" என்று வனத்தையே நமக்குத் தானமாகவுந் தந்துவிடுவர். (ரு)

சா. "மன மடக்குவர் ; மாதரை அஞ்சுவார்.
வன முறையும் வறட்டுத் துறவிகள்,
இனிதிங் கைம் பொறி யின்பத்தி லூன்றியே
சனம் பெருக்கிடிற் சேனைக்கு நன்றரோ?

அந்தப் பஞ்சவடி வனத்தில் இருக்கும் வறட்டுத் துறவிகள். உலகின்பமே அறியார். பெண்களை 'மாயை' என்று அஞ்சி நடுங்குவர். பெண் விழிக்குத் தோற்ற அவர்களைச் சிறைப்பிடித்து வருவோம். இங்கே தக்க பெண்களைக் கட்டுவோம். ஐம்பொறிகளுக்கும் இன்பமான பெண்ணுசையில் நன்ருக ஊன்றிக் குடும்பம் நடத்தச் செய்வோம். அதனல் நல்ல குழந்தைகள் உண்டாகும் ; சனத்தொகை பெருகும். அது நமது சேனுபலத்திற்கும் நல்லதுதானே?" (சா)

வேகன்

எ. வேக னென்றொரு வேங்கை யனையவன்,
மோக மேவடி வானவன், முன்னின்று,
"யோகப் பித்தர் ஒழிக வுலகிலே;
போக வாழ்வு பொலி"கெனக் கூவினுன்.

வேகன் என்ற ஒரு கொடிய மனங்கொண்ட அசுரன் வேங்கைப்புலி போன்றவன், பெண்மோகமே வடிவானவன், முன்னின்று, "யோகம் என்ற பெயரால் பெண்களை வெறுக் கும் பித்தர் அடியோடொழிக! உலகில் பெண் மண் பொன்னை நுகரும் போகவாழ்வு பொலிக!" என்று கூச்சலிட்டான். (எ)

அ. "நாடி வைத்துந் தவமெனக் கண்களை
மூடி நின்ற முனிவரின் மோசமே,
நீட ரசு செலுத்து நிருதரை
நாட ழித்து நலித்ததைக் கண்டனம்!

"வனங்களில் தாடி வைத்துக்கொண்டு 'தவம்' என்ற பெயரால் கண்களை மூடிக் கொண்டு, சும்மா இருந்த முனிவரே, நம்மைக் கெடுக்கச் சூழ்ச்சி செய்தனர். அவர்களே 'அவதாரம்' என்ற பேர்வழிகளைக் கிளப்பி, உலகில் நீண்டகாலம் அரசுசெய்த இரணியன், கம்ஸன் இராவணன் முதலிய அரக்கரை வீழ்த்தி, அவர் நாடுகளையும் குலத்தை யும் நலித்ததை முன் சரித்திரங்களில் கண்டோம். ஆதலால், இந்தத் தாடிவாலாக்களை நம்பக்கூடாது! இவர்கள்மூலம் சந்ததியும் பெறக்கூடாது" என்றான் வேகன். (அ)

௯. "ஆண்மை கொண்டும், அலியென வாழுமிவ்
வீண்ம னிதர் விரதக் குடில்களிற்
காணும் இன்னிய காரிகை யாரின்பம்
பூணுவோம் குலம் பொங்கித் தழைக்கவே!"

"ஆண்மையும் வீரமும் கொண்டும், போகசுகத்தை வெறுத்து, அலிகளைப்போல வாழும் வீண்மனிதர், பஞ்சவடி முனிவர். அவர்கள் குடில்களில் பிரமசரியவிரதம் விளங்கு கிறது. அங்கும் இனிய பெண்கள் காண்கின்றனர். அவர்களை நாம் கூடி, இன்பம் பூணுவோம். அதனால் கலப்பில்லாமல் நமது கலியரக்கர் குலம் பொங்கித் தழைக்கும்' என்றான் வேகன். (௯)

கலியன்

௧௦. "சரிச வாசெனத் தானவர், துள்ளினர்!
"அரிவை யாருடன் அந்தண் முனிவரைத்
துரித மாகவே தொத்தடி மைசெய்து
பெரிய மன்னரின் பிள்ளையைப் பற்றுவீர்."

"சரி, சபாஷ்! அதுவே தகுந்த யோசனை! நாமே பஞ்சவடியிலுள்ள விரதப்பெண் களை அனுபவிக்கவேண்டும்!! என்று தானவத்திலிருந்து வந்த அரக்கர் துள்ளிக்குதித்தனர். "முதலில் அந்தப் பெண்களுடன் அந்தண்மை நிரம்பிய சாது முனிவர்களைச் சிறைப்பிடித்து விரைவாகக் கொண்டுவந்து, நமது தொத்தடிமைகளாக்குவீர். அத்துடன் நாட்டிற் பெரிய மன்னனான சத்தியன் மகனையும் கைதியாகப் பற்றிக்கொண்டு வருவீர்களாக' என்று வெய்ய கலியன் சொன்னான். (௧௦)

௧௧. என்று வெங்கலி, ஏறுஞ் செருக்கினால்,
"இன்று செவ்வா யிராகுவின் காலமே
நன்று; நாத்திகச் செங்கொடி நாட்டுவீர்!
வென்றி வாளினுக்கே யென விறிட்டான்.

வெய்ய கலியன் இன்னும் செருக்கேறி, "இன்று செவ்வாய்க்கிழமை; இது நல்ல ராகுகாலம். நாள்கோள் நட்சத்திரம் பார்க்கும் மூடப்பழக்கத்தை நாம் உடைத்தெறிபவர் அன்றோ? ஆதலால், உடனே செல்லுங்கள், நன்றாக தமது நாத்திகக்கொள்கையை நாட்டும் சிவப்புக் கொடியைப் பஞ்சவடியில் நாட்டி வாருங்கள். நமது வாளுக்குத்தான் வெற்றி கிடைக்கும்" என்று விறிட்டான். (௧௧)

கஉ. "கதியி லாத கருணை முனிவரை,
மதி யமைச்சனை, மன்னவன் மைந்தனை,
எதிர் பகைவரை எற்றி யெறிந்துநம்
புதிய கொள்கை புகட்டக் கொணருவோம்.

"சேனைபலம் உடல்வலி யெவையுமின்றி கதியற்று இரக்கமும் கருணையுங் கொண்டுள்ள முனிவர்களையும், மதிமிக்க அறிவாளியான சித்தியமைச்சனையும், அரசிள மைந்தனையும் கொண்டு வருவோம். நம்மை எதிர்க்கும் எந்தப் பகைவரையும் எற்றி யெறிந்து அவர்களை இங்கே கொண்டுவந்து, நாம் பயிலும் புதிய நாத்திக ராக்ஷசக்கொள்கையைப் புகட்டி நமது வழியில் பழக்குவோம். (கஉ)

கங. "காட்டில் வாழுங் கனியுண வாளரை,
ஈட்டி யின்றி எளிதினில் வெல்லலாம்.
போட்டி போடும் புரவலன் சேனையை,
வாட்ட வேண்டும் வலிமிகு சேனையே.

"காட்டிலே காய்கனியுண்டு வாழுவோரான முனிவரை, ஈட்டி வாள் முதலிய ஆயுதங்களின்றியே ஒரு மிரட்டில் எளிதாக வெல்லலாம்; அவர்கள் பொறுமையாளர்; சாத்விகர்கள்; போருக்கு வரமாட்டார்கள்; ஆனால், அங்கே இளவரசனும் சித்திமானும் இருக்கிறார்கள். ஒருவேளை ஒற்றரால் நமது சூழ்ச்சியறிந்து, முன்பே சேனையைத் திரட்டியிருக்கலாம். அது நம்முடன் போட்டி போட்டால் மோசம்; அதை வாட்டி வீழ்த்த நாம் பலமான சேனை கொண்டு போகவேண்டும். (கங)

கச. "வேகன், வெய்யன், வெறியன், அகம்பரன்,
போக கேது, புலியன், முதலினோர்,
மேக மின்னென வாட்கணம் வீசியே,
போக வேண்டுமிப் பூமி யதிரவே."

"வேகன், வெய்யன், வெறியன், அகம்பரன், மோககேது, புலியன் முதலியோர், மேகத்தை வெட்டும் மின்னலைப்போல வாட்கணங்களை வீசி, இந்தப் பூமி அதிரப் போருக்குச் செல்லவேண்டும்" என்று கலியன் சொன்னான். (கச)

கரு. இடி முரசம் இயம்பின; செந்நிறக்
கொடி பறந்தன; கோபக் கலித்திரள்
படி நடுங்கிடப் பாய்ந்தது; பட்டிகள்
பொடிபடப் படை போகும் வழியெலாம்.

இப்பேச்சைக் கேட்டதுமே, போர்த்தினவெடுத்த கடுஞ்சினங் கொண்ட கலிக்கூட்டம் அணியாக வந்து நின்றது. இடிபோல் முரசங்கள் ஆர்த்தன. இரத்தக்கொடிகள் பறந்தன. உலகம்(படி) நடுங்கும்படி படை சென்றது. அதுபோகும் வழியெல்லாம் கிராமங்கள் தவிடுபொடியாயின. (கரு)

கசு. கலை யழித்தனர்; கற்பை யழித்தனர்;
கோலை புரிந்தனர்; கொள்ளை யடித்தனர்;
நலை நெறிக்கத் தருமம் அழித்தனர்
கலியன் ஏவிய கள்ளக் கயவரே!

கலியன் பஞ்சவடிக்குச் செல்லவிடுத்த அநாகரிக காட்டுமிராண்டி ராக்ஷஸப்படையாட்கள், செல்லும் ஊர்களிலெல்லாம் அழகான சித்திரம், காவியம், சிற்பம் ஆகிய கலை வேலைகளை அழித்தனர்; பெண்களின் கற்பை யழித்தனர்; கண்டபடி கொலை செய்தனர்; ஊர்களைக் கொள்ளையடித்தனர்; தலை தெறிக்கும் செருக்குடன் நடந்தனர்—அறத்தையே அழித்தனர். (கசுா)

கஎ. “ குருதி கக்கக் கொடுங்கொலை செய்குவோம்,
நிருதர் யாம்; எதிர் நில்லன்மின் ” என்றவர்,
அருகில் வந்த தனைத்தும் அழிவுறப்
பொருது பஞ்ச வடியிற் புகுந்தனர்.

“ நாங்கள் அரக்கர்கள்; கலிப்படைகள்; எங்கள் எதிரே நிற்காதீர்கள்; நின்றால், இரத்தம் கக்கப் படுகொலை செய்வோம் ” என்று கூச்சலிட்டு, கிட்ட எட்டியதெல்லாம் அழித்தழித்துப் போர்புரிந்துகொண்டே கலிப்படையாளர் பஞ்சவடியிற் புகுந்தனர். (கஎ)

உக. கலிசினந்த படலம் முற்றிற்று.

உஉ. பஞ்சவடிப் போர் வென்ற படலம்

க. ஈச னேதுணை யென்னு முனிவரை
ஏசி, வீட்டில் எரியினை மூட்டினர் ;
பூசை மாமலர் பொங்கும் பொழில்களை
நாசஞ் செய்தனர், நாத்திகத் தீயரே.

நாத்திகத் திமிர் பிடித்த தீயர், பஞ்சவடியிற் புகுந்ததும் முனிவர்களை வளைத்துக் கொண்டு திட்டினர்கள் ; அவர்கள் பர்ணசாலைகளில் (வீட்டில்) தீக்கொளுத்தினர் ; அவர் கடவுள் வழிபாட்டிற்காகப் பூக்கள் எடுக்கும் மரஞ்செடிகளை நாசமாக்கினர். (க)

உ. "பாப புண்ணியம் பார்த்திடு வீ''ரென்றார்.
சாப மிட்டனர் சாது முனிவரர் ;
கோப வெங்கனல் கொட்டு மரக்கரைத்
தூபம் போட்டினுந் தூண்டின மெய்யுரை.

சாதுமுனிவர்கள், நிராயுதபாணிகள் ; "பகை செய்யும் ஆன்மாக்காள், பாபம் புண்ணியம் பார்த்து நல்ல வழியில் நடங்கள்" என்றனர் ; கேட்கவில்லை. பிறகு, "நீங்கள் நாசமாவீர்'' என்று சாபமிட்டனர். கோபமான தீய நெருப்பைக் கொட்டும் கலியரக்கரை முனிவர் சொன்ன உண்மையுரையும் சாபமும் இன்னும் தூபம் போட்டு அக்கிரமத்திற்குத் தூண்டின. (உ)

ங. தாக்கினர், தகர்த்தார், தவத்தை அவம்
ஆக்கினர் ; அழித் தார் அரு ளாளரை;
வாய்க்கு வந்ததெல் லாஞ்சொல்லி வைதனர் ;
பேய்க்கு ணத்தினர் செய்கையைப் பேசவோ ?

பேய்க்குணங்கொண்ட வலுமுரடரான கலிப்படையினர், செய்த அழிசெயல்களைச் சொல்லால் வருணிக்க நம்மால் முடியாது ; அவ்வளவு கொடூரம்! அவர்கள் அருள்பெற்ற சாத்விக முனிவரை ஆயுதங்கொண்டு தாக்கினர்கள் ; அவர்கள் பர்ணசாலைகளைத் தகர்த்தனர் ; அவர்கள் தவத்தை வீணாக்கினர் ; வாய்க்குவந்ததெல்லாம் சொல்லிக் கண்டபடி திட்டினர். (ங)

ச. பெண்ணி னத்தின் பெருமை யறிகிலார் ;
கண்ணிற் காமக் கனலுற நோக்கினர்.
புண்ணியர் உயிர் போம்வரைப் போர்தர
எண்ணிக் கச்சை யிறுக்கிமுன் னின்றனர்.

முனிவர் பர்ணசாலையில் இருந்த பத்தினிகளையும் மாணவிகளையும் பெண்மையின் பெருமையை அறியாத தாமச அசுரர், கண்களில் காமக்கனல் பறக்க நோக்கினர்கள். அதைக்கண்டதும், புண்ணியசாந்த முனிவர்களுக்கும் ஆத்திரம் வந்தது. இனி உயிர்போகு மட்டும் போர்செய்வதே ஆண்மையென்று கச்சையை யிறுக்கக் கட்டிக்கொண்டு பகைவரை எதிர்க்க முன்வந்தனர். (ச)

ரு. மற மனத்தர் மதுவெறி யேறிச்செந்
நிற முகத்தர், நிலைகுலைந் தோடவே,
அற மனத்தர், அருந்தவத் தால்வருந்
திறமை காட்டினர் ; தெய்வத்தைக் கூவினர்.

அதருமம் படர்ந்த மனத்தினராய், கள்ளுண்டு வெறியேறி முகஞ்சிவத்த கலிப்படையினர், நிலைகுலைந்தோட, தரும சிந்தனையுள்ள முனிவர், தமது அரிய தவசித்திகளால் எய்தும் பலத்தையெல்லாம் காட்டினார்கள் ; இறைவனுக்கு முறையிட்டார்கள். (ரு)

சா. ஓச்சிக் காலை யுயர்த்தினர் ஆசனம்;
மூச்ச டக்கினர் ; முத்திரை வைத்தனர்,
பேச்ச டக்கிப் பெருஞ்சபஞ் செய்தனர்,
ஆச்சி யத்தை யனலெழ வார்த்தனர்.

சில தவமுனிவர் தமது ஆத்மசக்தியைப் பெருக்கிக்கொள்ள, காலை மேலே வீசி சிரசாசனமும், ஸர்வாங்காஸனமும் செய்தனர் ; பிராணயாமத்தால் மூச்சைக் கட்டினர் ; பல முத்திரைகள் வைத்து, கும்பகம் செய்தனர் ; பேச்சை அடக்கி மௌனமாக ஜபம் செய்தனர் ; ஓமத்தீ யெழுந்து சொலிக்க நெய்யை வார்த்தனர். (குண்டலித்தீ எழுந்து விளங்கப் பிராணனாகிய நெய்யை வார்த்தனர்.) (சா)

எ. கூற்று தைத்த சிவனடி கும்பிட்டார்,
போற்றி ராமனைப் பூசித் தெழுந்தனர்.
தூற்ற ரக்கருந் தூயரைக் கண்டதும்,
ஆற்றல் குன்றி அதிர்ச்சியொன் றெய்தினர்.

முனிவர், கூற்றையுதைத்த சிவபிரானைக் கும்பிட்டனர் ; அரக்கரை அழித்த இராமபிரானைப் போற்றித் தொழுதனர். நல்லவர்களைத் தூற்றி வைது, ஏளனம் செய்யும் அரக்கர், அந்தப் பரிசுத்த யோகிகளைக் கண்டனர் ; அவர் தவக்கனல்முன் தமது வலிமை குன்றினர் ; அவர்கள் உடலில் ஓர் அதிர்ச்சி, (நடுக்கம்) எய்தினர். (எ)

அ. ஊக்கி யுட்கனல், யோக முனிவரர்,
தாக்கு முன்பு தயாநிதி யாகியே,
நீக்க மற்று நினைத்திடும் அன்பரைக்
காக்குந் தெய்வக் கருணையைச் சிந்தித்தார்.

தமது உட்கனலை உற்றெழச் செய்து, அதனால் பகைவரை வெல்ல முற்பட்ட யோக முனிவர், எதிரிகளைத் தாக்குமுன், பிரியாது தியானிக்கும் அன்பரைக் காக்கும் தயாநிதியான கடவுளின் கருணையைச் சிந்தித்தனர்—அது வந்து தம்மைக் காக்குமென்றே எதிர்பார்த்தனர். (அ)

கூ. "துங்க மான துரிய முனிவரர்,
சங்க மின்று தவிக்குநித் தீயரால்,
எங்கு நீ"யென் றியம்பிடு மெல்லையில்
இங்கி தோவென் றிடிமுர சார்த்ததால்.

"இந்தத் தீய அசுரப் படைகளால், பரிசுத்தமான மகா முனிவர் சங்கம் இன்று பரிதபிக்கிறதே. இறைவா, நீ எங்கே? உன் கருணை எங்கே?" என்று முறையிட்டனர்.

அதேசமயம், "இங்கு, இதோ இறைவன் கருணை!" என்பதுபோல இடி முரசங்கள் கொட்டின. சுத்தன் படை வந்தது. (௯)

௧0. ஆனை, தேர், பரி, ஆயுதந் தாங்கிய
சேனை கொண்டுநந் தீரன் அமைச்சுடன்
சோனை யம்பு சொரிந்து கலிநகர்த்
தானை யஞ்சிடத் தாவி வளைத்தனன்.

யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, ஆயுதந்தாங்கிய காலாட்படை எல்லாங்கொண்டு நமது தீரனை சுத்தன் சித்திமானுடன் அங்கே வந்து, உடனே அம்புமாரி சொரிந்து, கலிநகரிலிருந்து வந்த அசுரப்படையை வளைத்துக்கொண்டான். (௧0)

௧௧. வாழி மெய்யறம்! வாழிய சித்திபன்!
வீழி பொய்யர், விடுதலை வாழ்கென,
சூழு மந்தணர் தூவ மலர்மழை,
ஆழி போலச் சயமுர சார்த்ததால்.

"உண்மையான தருமம் வாழ்க! சித்திமன்னனை சுத்தன் வாழ்க! பொய்யரான கலியர் வீழ்க! சுதந்தரம் வாழ்க!" என்று சுற்றிலும் அந்தண் முனிவர் மலர்மாரி சொரிந்தனர். அச்சமயம், சுத்தன் படை, கடல்போல வெற்றி முரசொலித்தது, (௧௧)

சித்திமான்

௧௨. துய்ய நீநற் றுணைசெய் முனிவரை
வெய்யர் தீண்ட விடாதிவ் விடத்திலே;
ஐய நான்சென் றமரிற் பகைவரை
நொய்ய வாட்டி நொருக்கி வருகின்றேன்.

சித்திமான் சுத்தனிடம் சொன்னான்: "சுத்த, நீ இப்போது இத்தவமுனிவரைக் கொடியவர் தொடாமல் இங்கிருந்தே நல்ல துணை செய்வாயாக! ஐய, நான் போய், போரில் பகைவரை நொய்யப் புடைத்து வாட்டி நொருக்கியெறிந்து வருகிறேன்." (௧௨)

௧௩. என்ற மைச்சன், இமைக்குமுன் னேகியே
நன்ற ரக்கர் நலியப் புடைத்தனன்;
ஒன்று கூடிய ஒன்னலர் இன்னவன்,
"கொன்று போடுவன் கூ"வென ஓடினர்.

இவ்வாறு சொல்லி, மந்திரி சித்திமான் ஓர் இமைநொடியில் படை நடத்திச்சென்று, அரக்கரை நன்றாக வளைத்து நசுங்கப் புடைத்தான். முன்னே ஒன்றுகூடி எதிர்த்த பகைவர், "இவன் நம்மைக் கொன்று போடுவான்" என்று பயந்து "கூகூ" என்று முறையிட்டுப் பிரிந்து ஓடினர்—உயிர் வெல்லம்! (௧௩)

௧௪. இடி விழுந்த மரமென் றிகலவர்
கொடி விழுந்தது...கோதுறு மேனியில்
அடி விழுந்தது...கோவென் றலறியே
படி விழுந்தப் பாதகர் சேனையே...

சித்திமான் வீரர்கள் பலமான அம்பும் குண்டும் விட்டனர். முதலில் இடிவிழுந்த மரம்போலப் பகைவர் உயர்த்திய கலிக்கொடி அடியோடு விழுந்தது. பாபமே செய்யும் அவர்கள் உடலில் பலமான அம்படி விழுந்தது. 'கோ' என்றலறி பஞ்சமாபாதகரான கலியர் படை மண்ணில் (படி) விழுந்தது. (கச)

கரு. ஆய்ந்து மீண்டும் அரக்கர் கொடும்படை
பாய்ந்து நேசப் படையினைத் தாக்கியே,
தேய்ந்து தேய்ந்து திறலற்றுப் பின்னுறச்
சாய்ந்து சாவின் விருந்தென லாயதே...

மறுபடியும் கொடிய அரக்கர் படை தனியே கூடி ஆராய்ந்து, புதிய பலத்துடன் வந்து, பாய்ந்து, நேசப்படையைத் தாக்கியது. சித்திமான் அவர்களையும் திக்கணையால் வீழ்த்தினான். பகைவர் படை வரவரத் தேய்ந்து நலிந்து சிவனற்று, பலமற்றுப் பின்புறம் புறங்காட்டி ஓடிச் சாய்ந்து தரையில் விழுந்து எமனுக்கே விருந்தாக முடிந்தது. (கரு)

கசு. எறிந்து கற்கள் எரிமலை போலவே,
செறிந்து மோதிடுந் தீயர் பெரும்படை
அறைந்து வீழ்த்தி யழுத்திய பின்னரும்,
குறைந்து மீளவுங் கூடி யெதிர்த்ததால்.

தீயர் கூட்டமான கலிப்படை, அனற்கற்களை எரிமலைபோல் எறிந்து, நெருங்கிக்கூடி மோதி முண்டிப் பொருதியது. அதை அடித்து வீழ்த்தி மண்ணில் அழுத்தினான் சித்திமான். அதன்பிறகும், குறைந்துபோன பகைப்படை மீளவும் தொகைகூடி எதிர்த்தது. (கசு)

கஎ. வெருகும் பாம்பும்வெவ் வேங்கையு மென்னவே
பெருகி வந்த பிசாசர் படையினை,
அருகு வந்ததும் ஆறென வுண்டது
செருவிற் சிங்கத்தை வென்ற செயப்படை.

வெருகுப்பூனைபோல் உருமி, பாம்புபோலச் சீறி, கொடிய வேங்கைபோலப் பாய்ந்து பெருந்திரளாக வந்த பிசாசுகள் போன்ற கலிப்படையை, போரில் சிங்கத்தையும் வெல்லும் சித்திமானின் வெற்றிப் படையானது, கிட்ட வந்ததும், கடல் ஆற்றை அள்ளியுண்பதுபோல் உண்டு தீர்த்தது. (கஎ)

கஅ. காடு மேடுங் கலங்கிச் சிலர் பின்னே
ஓடு கின்றனர், ஓய்ந்துச் சரண்புக
நாடு கின்றனர், நாமென் செருக்கினுற்
சாடு கின்றனர் தானவர் சிற்சிலர்.

கலிப்படையில் மீதியிருந்த சிலர் காடும் மேடும் கலங்கிப் புறங்காட்டி ஓடுகின்றனர். சிலர் ஓடவியலாமல் சித்திமானைச் சரண்புக விரும்பி வருகின்றனர். கலிப்படையிலிருந்த தானவர் "நாம் இவனுக்குத் தோற்பதா?" என்னும் ஆணவத்திமிரினுல் இன்னமும் நேசப் படையைச் சாடிப் பொருதுகின்றனர். (கஅ)

வேகன் முனிவரைப் பொருதுதல்

கசு. இத்தறி யிவனை விடுத் திவ்விடம்
கத்து வேதமுங் காவியுங் கொண்டுழல்
சொத்தை மாந்தர் சுவர்க்க மடைந்திட
மொத்து வோமென ஓடினன் வேகனே.

“இப்போது இவனிடம் நமது பாய்ச்சல் பலியாது. இங்கே இந்தச் சித்திமானை விட்டு, சத்தம் போடும் வேதமும், காவியாடையுங் கொண்டு திரியும், பலமில்லாத சொத்தை மக்களான தவமுனிவரைத் தாக்குவோம். அவர்கள் வேண்டுவது சுவர்க்கம், மோட்சம். அவர்களை நன்றாக மொத்தி மோட்சமடையக் கொல்லுவோம்” என்று வேகன் ஓடினான். (கசு)

உ0. கொழுத்த பாவிகள் கூடி வருமுன்பே,
வழுத்தி சுத்தன், வரைக்குகை யொன்றினில்,
பழுத்த பண்ணவ ரைப்பதுக் கிப்பகை
அழுத்து மெல்லை யணிபடை கூட்டினான்.

ஊனுங்கள்ளும் உண்டு, தசை கொழுத்த மகாபாவிகளான அரக்கர் வருமுன்னமே, அதைப்பற்றிச் சொல்லி, சுத்தன், தவம்பழுத்த நல்ல முனிவர்களைப் பத்திரமாக ஒரு மலைக் குகையில் ஒளியச்செய்து, பகைவர் வந்து அழுந்தி மோதும் எல்லைப்புறம், தனது படையணியைச் சேர்த்துப் போருக்குத் தயாராகவே நின்றான். (உ0)

சுத்தன்

உக. வருகின் றாரென ஒற்றர் வழுத்தலும்,
அருமை வீரரை யாண்டகை நோக்கியே,
“கரும வீரர்க் குரிய கடமையைப்
பெருமை யாகச்செய் வோ”மெனப் பேசினான்:

ஒற்றர்கள் ஓடிவந்து, “அரக்கர் இங்கே வருகின்றனர்” என்றதும் ஆண்களிற் சிறந்த சுத்தன், அரிய வீரரைக்கொண்ட தனது படையை உஷார்ப்படுத்தி “வீரர்காள், கருமவீரருக்குரிய கடமையைத் துணிந்து பெருமையாகச் செய்வோம்” என்று உணர்ச்சி ததும்பப் பேசினான்: (உக)

உஉ. நாட்டின் சேமமும் ஞாலத்தின் சேமமும்,
வீட்டின் சேமமும், வீரரின் சேமமே!
ஓட்டி வெம்பகை, அன்பை யுறுதியாய்
நாட்டி யின்று நலஞ்செய வம்மினே.

சூரர்காள், நமது தேசத்தின் இன்பமும், உலகின் இன்பமும், இல்லறத்தின் இன்பமும், வீரர்களின் பாதுகாப்பினாலேதான் மனிதசமுதாயத்திற்கு உண்டாகிறது. இன்று நமக்கொரு கடமையிருக்கிறது. இதோ, கொடிய பகைவர் வருகின்றனர். அவர்களை ஓட்டியடித்து, இங்கே உறுதியாக அன்புவாழ்வை நாட்டி நலம்புரிவோம், வாருங்கள். (உஉ)

வீரர்

உங. வெற்றி யோங்குக ! வெம்பகை வீழுக,
ஒற்று மைசெழித் தோங்குக மேதினி !
நற்ற வங்களு ஞானமு மோங்கிடக்
கொற்ற வன்கொடிக் காவி கொடுப்பமால் !

சுத்தன் பேச்சால் ஆவேசங்கொண்ட வீரர்கள், போரில் வெற்றி ஓங்குக ! கொடிய பகைவர் வீழ்ந்தொழிக! உலகில் ஒற்றுமை செழித்து மாந்தர் ஒரு குலமாக ஓங்குக ! நல்ல தவவினைகளும், ஞானமும் ஓங்குக ! இவற்றைக் காக்கவே நமது மன்னன் என்றனர். (கொற்றவன்). சூரியக்கொடி உயர்த்தினான். அதற்கே நமது உயிரைக் கொடுப்போமாக.

உச. வீர ரிவ்வகை விறிட் டெழுந்ததும்,
காரு மின்னுங் கடும்புயல் வேகமும்,
சேர்வ தென்னத் திரள்பெருந் தானவர்,
போர் முழக்கம் பொலியப் புகுந்தனர்.

இவ்வாறு வீரர் வீரங்கூறி அமர்க்களத்திற் கெழுந்ததுமே, கார்புயலும் நெருப்பு வெள்ளமும் சேர்ந்ததுபோல், திரளான அரக்கர் போர்முரசார்த்து அவ்வனத்திற் புகுந்தனர். (உச)

கலியரக்கர்

உரு. இவ்வு லகெலாம் எங்கள் உலகமே,
இவ்வ ரசெலாம் எங்க ளுரிமையே,
எவ்வு யிர்களும் எங்க ளடிமையே,
எவ்வ மின்றி யிணங்கிடின் உய்குவீர்.

கலியரக்கர் சுத்தன் படையைப் பார்த்து, 'இந்த உலகெல்லாம் எங்கள் உலகமே; இந்த அரசெல்லாம் எங்கள் அரசே, எங்களுக்கே உரிமை. எந்த உயிரும் எங்களுக்கே அடிமை; கவனம். தொல்லையில்லாமல் இணங்கி எம்மைச் சரண்புகுந்து பிழையுங்கள்" என்று வீருப்புக் கூறினர். (உரு)

உசா. திண்ணெ னப்பகை செப்பலு மிவ்வகை
விண்ண திர்ந்தது, மெல்லுயி ரஞ்சின ;
புண்ணியன் ஒரு புன்னகை பூத்தெதிர்
நண்ணி வேகனைக் கண்டு நவின்றனன்.

திடுக்கென்று, திண்ணென்று, பகைவர் வந்து இவ்வாறு சொல்லிக் கூச்சலிடவே, ஆகாசமும் நடுங்கியது. மெலிந்த சாதுஜீவர்கள் அஞ்சினர். புண்ணியனான சுத்தன் ஒரு புன்னகை பூத்தான். உடனே படைகொண்டு எதிரே வந்து, வேகனைக் கண்டு இவ்வாறு சொன்னான் : (உசா)

சுத்தன்

உஎ. உலக வாழ்க்கை உலகினர்க் கல்லது,
கலக வஞ்சக் கயவருக் காகுமோ ?
உலகி லுள்ள வுயிர்கள் இறைவனார்
இலகு கோயில் இதற்கெதி ரில்லையே.

உலகமெல்லாம் உலகோருக்குத்தான் உரிமை; தனியாக ஒருவருக்கும் உரிமையில்லை. எப்போதும் கலகமும், வஞ்சமும் விளைக்கும் கயவரான கலிப்படையினருக்கு அது ஒருக்காலும் உரித்தாகாது. உலகிலுள்ள உயிர்கள் யாருக்கும் அடிமையன்று. அவை இறைவன் விளங்கும் நடமாடுங் கோயில்கள். இந்த உண்மைக்கு ஆட்சேபம் இல்லை. (உஎ)

வேகன்

உஅ. கொட்டடாபறை கோயிலுஞ் சாமியும்,
எட்டுத் திக்கிலும் இல்லை ; யிப் பொய்யினை
வெட்ட டாவென வேகன் விளம்புமுன்
முட்டி மோதி முனைந்தது வன்படை.

தனக்குச் சிறிதும் பிடியாத இந்த வார்த்தைகளைக் கேட்டதுமே, "கோயிலும் சாமியும் நான்பார்க்கும் எட்டுத்திக்கிலும் இல்லை இல்லை என்று நாத்திகப்பறை கொட்டடா; இந்தப் பொய்யைப் பேசும் எதிரியை வெட்டடா" என்று வேகன் அலறினன். அவன் சொல்லி முடிக்கு முன்பே, அவனுடைய கொடிய சேனை சுத்தன் படையை முட்டிமோதிப் பொருதி முன்னே வந்தது. (உஅ)

உகூ. "வெம்மை யேயுயிர்ப் பாம்வெறி யிருமைச்
செம்மை யாக்குது" மென்றுநந் தீரனும்,
பொம்மெ னப்படை யேவிப் பொருதனன்,
விம்ம கந்தை விழுந்துமண் ணுகவே.

"உலகிற்குக் கொடுமையே நினைத்துக் கொடிய பாபஞ்செய்தலே மூச்சான வெறி மத அரக்கர்காள்! உங்களைச் செய்யவர்களாகத் திருத்துவேன் (எனது வாளால் செம்மை, செந்நிறமாக்கி யொழிப்பேன்") என்று நம் தீரன், சுத்தன் 'பொம்' எனக் கூட்டமாகத் தனது படைகளை ஏவினன். அரக்கரின் விம்மும் அகங்காரம் வலியற்று விழுந்து மண்ணுகப் போர் புரிந்தான். (உகூ)

௩௦. நீவரும் ஆணவ நெஞ்சரின் ஆவியைச்
சிவரத் தீயுமிழ் செஞ்சின வாளினுற்
கவருஞ் சுத்தன் கதியினைக் கண்டதும்
அவல மாகிக்கை யஞ்சினன் வேகனே.

நிமிர்ந்து அகங்காரம் பேசி விம்மும் மார்புடைய பகைவர் உயிரை, தீயுமிழ்ந்து செந்நகைபுரிந்து சினக்கும் வாளினுல், சுத்தன் கவர்ந்தான்—(சுத்தன் வாளால் அரக்கர் நெஞ்சைப் பிளந்து உயிரை வாங்கினுன்.) அவன் போர்புரியும் வேகத்தையும் (கதி), திறமையையும் கண்ட வேகன் அவலமாகி, துயரங்கொண்டு தளர்ந்து வாள்பிடிக்கக்கூட அஞ்சி நடுங்கினுன். (௩௦)

௩௧. விட்டி லென்ன விதிர்த்து மறைந்துபின்,
துட்டர் சேனை துணுக்கெனத் தோன்றியே,
வெட்டும் தந்திர வேகமுந் தோற்றபின்,
எட்டி நின்றிறு மாப்புகள் பேசிற்றுல்.

தீயபகைவர் படை, விட்டில்போல விருட்டென்று அஞ்சியோடிப் பதுங்கி மறைந்திருந்து, துணுக்கென்று, திடுதிப்பென்று தோன்றும்; எதிரிகளை வெட்டும். இந்தத் தந்தி

ரத்திற்கும் சுத்தன் உபாயம் செய்தான். அவனும் திடீரென மறைந்து துணுக்கெனப் பகை வரை முன்னும் பின்னும் வளைத்துப் பொருதினன். தந்திரவேகமும் பலிக்கவில்லை· அரக்கர் தோற்றனர்; அதன் பிறகு எட்டியிருந்து தம் இறுமாந்த செருக்குரைகளைப் பேசினர். (௩௧)

வேகன்

௩௨. ஊறு செய்யும் உரிமைகொள் எங்களை
ஊறு செய்தனை யின்றுனை நாளையே
கூறு செய்துன் குலத்தினை வேரற
நீறு செய்து நெடுங்கொடி நாட்டுவோம்.

இடர் செய்யும் சுதந்தரம் எங்களுக்கே உண்டு. பலாத்காரத்தால் உலகை வெல்லும் உரிமை எமக்கே. இன்று எங்கள் வெற்றிக்கு இடையூறு செய்தாய். நாளையே பெரும்படை கொண்டுவந்து, உன்னைப் பிளந்து உயிர் குடிப்போம். உனது சித்திகுலத்தையே வேருடன் சாம்பலாக எரித்து, எங்கள் நீண்ட அசுரக்கொடியை இந்த நாட்டில் நாட்டுவோம், பார். (௩௨)

சுத்தன்

௩௩. திருட்ட ரக்கர் இனையன செப்பலும்,
அருட்டு ணைபெறும் ஐயன் அமைதியாய்,
"மருட்டு மாயத்தைக் கண்டு மயங்கிலோம்,
இருட்டிற் காதவன் அஞ்சுவ தில்"லென்றான்.

பிறர் பொருளைத் திருடுவதே தொழிலான அரக்கர் இவ்வார்த்தை பேசியதும், இறைவன் அருள்துணையும் சக்தியும் பெற்ற ஐயன், சுத்தன், அமைதியாக, "எம்மை மிரட்டும் உலக மாயத்தைக்கண்டு, மயங்கி அஞ்சமாட்டோம். சூரியன் இருட்டிற்குப் பயப்படுவதில்லை. இருட்டே அவனைக்கண்டு ஓட்டமெடுக்கும்" என்று சொன்னான். (௩௩.)

வேகன் தாக்குதல்

௩௪. "எம்மை யிருட்டென் றிகழ்ந்தனை"யென் றுடன்,
அமைதி யற்றவர், ஆணவப் பேயினர்,
தமை யிழந்து சமர்செயத் தாவினர்;
நமனு மங்கு நகைத்தெதிர் தாவினான்.

"எம்மை இருட்டு என்று இகழ்ந்தாயா, இதோ உன்னைக் கொல்லுகிறோம்" என்று அமைதியற்ற பொறுமையிழந்த அகங்காரப் பேய்களான வேகன் முதலிய அரக்கர், தம்மை யிழந்து, தமது பலக்குறைவை மறந்து, போர்புரியத் தாவினர். எமனும் அவர்கள் மடமையைக்கண்டு நகைத்து, அவர்கள் உயிரைக் குடிக்க எதிர்ப்புறமிருந்து தாவினான்.

௩௫. வாவு வாசியி லேறிவந் தேஅறை
கூவு வேகன் குலைகுலைந் தோடவே,
ஏவி யம்பை யெதிர்த்தமர் செய்தனன்.
பூவி னில் இணை யற்ற புனிதனே.

வேகன் விரைவாகத் தாவும் குதிரைமேல் ஏறிவந்து, சுத்தனை அறைகூவி யழைத்தான். உலகில் ஒப்பற்ற புண்ணியனான சுத்தன், அந்த அரக்கனைத் துரத்தி, அம்புகள்

விட்டு எதிர்த்துப் போர் செய்தான். வேகன், இவ்வீரன் போர்த்திறனைக்கண்டு நடுநடுங்கி ஓட்டம் பிடித்தான். (௩௫)

௩௬. முரசு கொம்பு முரடு தடாரிகள்,
“அரசுடன் அறம் வாழி”யென் றார்த்தன!
பரசு, சூலம், பகழி பறந்தன!
சிரசுங் கைகளுஞ் சிந்தின மண்ணிலே.

போர்க்களத்தில் சித்திமுரசும், கொம்புகளும், முரடு தடாரி ஆகிய வாத்தியங்களும், “அரசன் வாழ்க, அறம் வாழ்க!”என்று ஆர்த்தன. இருபுறமும் பரசுகளும், சூலங்களும், அம்புகளும் (பகழி) பறந்தன. சிரங்களும், கைகளும் மண்ணில் சிந்தின. கடும்போர் நடந்தது. (௩௬)

௩௭. கூற்ற லைக்குங் கொடியவர் வெம்புயற்
காற்ற லைக்குங் கலமெனப் போர்முனை
தோற்று விழ்ந்து, தொகைதொகை யாகவே
ஆற்றலை புகுந் தாழி கலந்தனர்.

எமனே செருக்கைத் தந்து சிரழிக்கும் கொடிய பகைவர், வெய்ய புயலில் அகப்பட்ட படைகைப்போல, சுத்தன் படைகளுடு சிக்கி, போர்முனையில் படுதோல்வியடைந்து வீழ்ந்து, தொகை தொகையாக ஆற்றில் தள்ளப்பெற்று, சமுத்திரத்திற் போய்க் கலந்தனர்: பகைவர் உடல்கள் ஆற்றில் விழுந்து கடலில் கொண்டு தள்ளப்பெற்றன. (௩௭)

௩௮. ஆண்முன் ஆண்மை யழிந்தவெவ் வேகனும்,
நாண மற்று நகார மடுத்தினும்,
மாண மாதவத் தீவளர் பெண்ணினங்
காண வந்தனன் காமச் செருக்கினால்.

ஆண் சிங்கமான சுத்தன் முன்னே ஆண்மை யழிந்து, வலிவிழந்து தோற்ற வேகன், சற்றும் வெட்கமில்லாமல், ‘நான், நான்’ என்று இன்னும் நகாரமடித்து, இறுமாப்புப் பேசி, மாண்புமிக்க, புனிதமான மகா தவக் கனல் வளரும் கற்புள்ள பெண்களிடம் தன் கைவரிசையைக் காட்டிப்பார்க்க காமப்பித்தேறிய மண்டைக் கருவத்துடன் வந்தான். (௩௮)

வேகன் பெண்களிடம் கூறுதல்

௩௯. காய்த்திடும் பருவத்தைக் காட்டு மூலையில்,
மாய்த்திட லாகுமோ, மலர்க்கண் பாவையீர்,
சேய்த்திரள் இன்பமுஞ் சீருஞ் செல்வமும்,
வாய்த்துநல் வாழ்வினை வாழ வாருங்கள்.

மலர்விழி மாதர்காள், நீங்கள் நல்ல பருவமடைந்த அழகிகள். காய்கனிகுலுங்க வேண்டிய இப்பருவத்தைக் காட்டு மூலையில் அடைத்து கொல்லலாமா? வீணாக்கலாமா? மாதராய்ப் பிறந்தவர் நல்ல ஆடவரைக் கூடிச் சீரும் செல்வமும் பெற்றுச் சுகபோகவாழ்வு வாழவேண்டும்; ஏராளமான குழந்தைகளைப் பெறவேண்டும்; அவர்களால் இன்பமடைய வேண்டும். அப்படிப்பட்ட வாழ்வை எங்களுடன் வாழ வாருங்கள்! (௩௯)

சு0. தாடியு மீசையுந் தண்டுங் காவியும்,
வாடிய மேனியும், வாழ்வை யஞ்சியே
ஓடிடுந் துறவையும் ஒருங்கு கொண்டுழல்,
பேடியர் காதலைப் பெற்றென் பெற்றதே,

தாடியும் மீசையும், தண்டும், காஷாயமும் அணிந்து, காயக்கிலேசங்களால் வாடிய உடல்கொண்டு, வாழ்க்கையை அஞ்சிக் காட்டுக்கோடுகிற வறட்டுத் துறவையும் ஒன்ருகக் கொண்டு திரியும் பேடி முனிவரின் அன்பைப் பெற்று, நீங்கள் பெற்ற இன்பமென்ன? ஒன்றுமில்லையே. (சு0)

சுக. தேனினும் அமுதினுந் தீஞ்சொற் கிள்ளையீர்,
மானினும் மயிலினும், மணிப்பு ருவினும்,
மீனினும் அழகுடை மெல்லிளந் தளிர்
மேனியீர், மேனியின் பயனை வேண்டுவீர்.

தேன் அமுதம் இரண்டினும் இனிய சொல்லுடைய கிளிபோன்ற பெண்காள்! மானைவிட இலாகவம், மயிலைவிட வனப்பு, மணிப்புருவைவிட நேர்த்தியான கழுத்து, மீனை விட அகன்ற விழிகள்கொண்ட அழகிகாள், பூப்போல மெல்லிய தளிர்மேனிப் பாவையீர், நீங்கள் உடலின் பயனை, நுகர விரும்புங்கள். (சுக)

சுஉ. வலிவுட னிளமையும் வாய்ந்த நங்கையீர்,
அலிகளைப் போலிங்கே அழித லின்றியே,
கலிநகர் வாருங்கள், காத லின்பத்தை,
நலிவறப் பருகிட வாழு நாளெல்லாம்.

உடம்பில் தெம்பும், நல்ல இளமையும் பெற்ற யுவதிகாள், இங்கே இந்தக் காட்டில் அலிகள்போல் வாழ்ந்து அழிவது நன்ருயில்லை. வாருங்கள் எங்கள் கலிநகருக்கு. அங்கே காதலின்பத்தை ஓயாமல், நலியாமல், நீங்கள் வாழும் நாளெல்லாம் அள்ளியள்ளிப் பருகலாம். (சுஉ)

யோகினிகள் வேகனை முனிதல்

சுங. வேகனிவ் வகைசொலி வேட்கை யோடுற,
யோகமே வாழ்வெனும் யுவதி மாரெலாம்,
ஏகமாய்ச் சூலத்தை யெடுத் தெதிர்த்துடன்
"மோகமே போ"வென முனிந்து தள்ளினர்.

வேகன் இவ்வாறு ஆசைவார்த்தை சொல்லிக் காமவேட்கையுடன் நெருங்கி வந்தான். யோகமே வாழ்வென்று கடைப்பிடித்த இளந்தவப் பெண்கள் அனைவரும் தைரியமாக, ஒன்றுகூடி, சூலமெடுத்து, எதிர்த்து "உடனே போ மோகமே" என்று சினந்து குத்தித் தள்ளினர். (சுங)

சுச. தோற்றனை ஆண்டகை சுத்தனு ரிடம்;
ஆற்றலைப் பெண்டிர்முன் அரங்கி லேற்றினை.
கூற்றுனைக் கூவுது கொடிய னேபுயற்
காற்றெளிர் கதிரினைக் கலக்க லாகுமோ?

வீர ஆண்களிற் பெருமைபெற்ற சுத்தனுரிடம் தோற்றுய். அங்கே உன் ஜம்பம் பலிக்கவில்லை. உன் ஆற்றலைப் பெண்கள்முன் அரங்கேற்ற வந்துவிட்டாய். எமன் உன்னை அழைக்கிருன். இனி நீ பிழைக்கமாட்டாய். கொடிய அரக்கனே, புயற்காற்று எழுந்து, சுடர்காந்தும் சூரியனைக் கலக்கி யணைக்க முடியுமா? உனது அசுரப்புயல் எழுந்து எமது கற்புக்கதிரை, தவக்கனலை அணைக்க முடியுமா, வீணனே? (சச)

வேகன் படை

சரு. "இணங்கிடா தெம்மையும் எதிர்த்து நின்றிடும்,
அணங்குகாள், உம்மையாம் அள்ளிச் செல்லுவோம்.
கணந்தனில் உங்களைக் கலிபு ரத்திலே
மணம்புரிந் தெம்முடன் வாழக் காணுவோம்."

நாம் சொல்லுகிறேம். எமக்கு இணங்காமல் எதிர்க்கின்றீர்களா? அணங்குகாள், உங்களை ஒரு கணத்தில் அள்ளிக் கலிநகருக்குச் செல்வோம். அங்கே எங்களை நீங்கள் மணம்புரிந்து வாழக் காண்போம்." (சரு)

சசா. "தூக்குங்கள்" என்றதுந் துட்ட ராக்ஷஸர்,
மேக்குவி கையுடன் மெல்லி டையினர்,
"காக்கவா கடவுளே" யென்று கத்தினர்"
"தாக்குங்கள்" என்றெரு தானை வந்ததால்.

வேகனைத் தலைமைகொண்ட துஷ்டராக்ஷஸர் மேற்சொன்னவாறு வெறிகொண்டு பேசி 'தூக்குங்கள் பெண்களை' என்றனர். உடனே அரக்கர் அப்படிச் செய்ய முனைந்தனர். மெல்லிடை மாதர் கைகளை மேலே தூக்கிக் குவித்து, "கடவுளே, எம்மைக் காக்கவா" என்று கூவினர். உடனே "தாக்குங்கள்" அரக்கரை என்றெரு சேனை (சுத்தன் படை) வந்தது. (சசா)

சஎ. கட்டமு கரசியாங் கௌரி தேவியைத்
துட்டவெவ் வேகனே தூக்கிச் சென்றிடத்
தொட்டனன், ஆங்குநம் சுத்தன் வேலினுற்
பட்டனன் முருகன்முன் சூர பத்மன்போல்.

கட்டமுகி அருளரசி கௌரி தேவி பஞ்சவடியின் ராணி அவள். அவளையே கொடிய துஷ்டனுன வேகன் தனக்கென்று தொட்டான். உடனே நமது சுத்தன் வேல் குத்தி, முருகன் வேல்முன் சூரபதுமன் விழ்ந்ததுபோல விழ்ந்தான். ஆனுல் இறக்கவில்லை. (சஎ)

சித்திமான் வெற்றி கூறல்

சஅ. எஞ்சிய பகைவரும் இறைஞ்சிச் சுத்தனைத்
தஞ்சமென் றடைந்துயிர் தப்பி வாழ்ந்தனர்.
அஞ்சறு படையுடன் அமைச்சன் வந்து"நம்
வெஞ்சமர் முடிந்தது வெற்றி" யென்றனர்.

மீதியிருந்த பகைவரும் சுத்தனை வணங்கித் தஞ்சம் புகுந்தனர். சுத்தன் மன்னித்து, அவர்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்துத் தன்னுடன் வைத்துக்கொண்டான். எதற்கும்

அஞ்சாத வீரப்படையுடன் வாகைசூடி, சித்திமான் வந்து "நாம் செய்த வெய்ய போர் முடிந்தது ; நமக்கே வெற்றி" என்றான். (௪௮)

வேகன் இறுதி மொழிகள்

௪௯. குற்றுயிர் துடித்திடுங் கொடிய வேகனும்
முற்றிலுஞ் செருக்கற முதல்வன் பாதத்தைப்
பற்றினன் பணிந்தனன், "பகவ உன்கையாற்
செற்றிடப் பெற்றனன் சிறியன்" என்றனன்.

குற்றுயிர் துடிக்கிறான் கொடிய வேகன். அப்போது அவனுக்கு முற்றிலும் அகங்காரம் நீங்கிப் புதிய உள்ளுணர்ச்சியுண்டாகிறது. முதல்வனை சுத்தன் பாதத்தைப்பற்றிப் பணிந்து கண்ணீர் வடித்து, "பகவானே, உன் கையால் நான் இறக்கிறேன்; என்ன பேறு பெற்றேன் சிறியேன்" என்று சொன்னான். (௪௯)

௫௦. "பிழைபொறுத் தருளுவாய் பெரிய வென்மன
முழையினிற் பதுங்கிய மூட மோகங்கள்
இழைகொடுஞ் செய்கையால் இறக்கின் றேனையா,
மழையினுங் கருணைசெய் மன்ன கேட்டியால்-

உலகிற்கு மழையைப்போல உயிர்களுக்குக் கருணை செய்யும் அரசே, கேள் எனது இறுதி மொழிகளை: என் குற்றங்களையெல்லாம் பொறுத்து மன்னித்தருள்வாய். பெரியோய், எனது மனம் ஓர் இருட்குகை. அதில் எத்தனையோ மோகவிலங்குகள் பதுங்கியுள்ளன. அவை செய்யும் கொடுவினைகளால் நான் இறக்கிறேன். ஐயா, (௫௦)

௫௧. தானவத் தீவினிற் சனித்த தானவன்,
ஞானமும் பத்தியு நன்ன டக்கையும்,
ஈனமென் றிகழ்ந்தவன், எந்த நாளுமே,
நானெனுஞ் செருக்குற நடந்த பாவியான்.

ஐய, நான் தானவம் என்னும் அசுரத் தீவில் பிறந்த தானவன். ஞானம், பக்தி, நல்ல நடத்தை எல்லாம் இழிவு என்று இகழ்ந்த மூடன் நான். எக்காலமும், நான் என்ற அகம்பாவங்கொண்டு பிறரை நலித்த மகாபாவி நான். (௫௧)

௫௨. மங்கையர் கற்பினை, மனிதர் வாழ்வினை,
புங்கவர் தவத்தினைப் புவிய றத்தினைப்
பங்கஞ்செய் பணியொன்றே பணிய தாகினேன்;
இங்கதை யியற்றிடக் கலியன் ஏவினான்.

குலப்பெண்களின் கற்பையழித்தல், மனிதர் வாழ்வைக் கெடுத்தல், முனிபுங்கவர் தவத்தை யழித்தல், உலகின் தருமத்தைக் கெடுத்தல் இவையே வேலையாகச் செய்தேன். கலியன் ஏவவே இங்கே எனது வேலையைச் செய்ய முனைந்தேன். (௫௨)

௫௩. மோகியாம் அரக்கியின் மோகங் கொள்கலி,
போகமும் யோகமும் பொருந்திப் புண்ணிய
நாகரி கம்வளர் நல்ல நாட்டினை
வேகமாய்த் தனக்கென வெல்ல வேட்டனன்,

கலியன், மோகி யென்ற அரக்கியின் மோகக்கடலில் மூழ்கியவன். அவளால் மதி கெட்டு அசுரனானவன். போகமும் யோகமும் பொருந்திப் பொலியும் புண்ணிய நாகரிகமும் பெருகி வளரும் உனது நல்ல பாரதநாட்டை விரைவாகத் தனக்கென்று வென்று ஆள ஆசை கொண்டான். (ருங)

ருச. சித்தியை மரபுடன் சிதைத்துத் துன்மதி
வைத்தது சட்டமென் றுள வையகம்,
இத்தநி பெரும்படை கூட்டி எம்மையும்,
சுத்தனைக் கொல்லெனத் தூண்டி விட்டனன்,

சித்தியரசை குலத்துடன் சிதைத்தொழித்து, தனது துன்மதி வைத்தது சட்டமாக இந்த நாட்டையாள வேண்டி இப்போது ஏராளமான படைகளைச் சேர்த்திருக்கிறான். அவனே "சுத்தனைக் கொல்க" என்று எம்மை இங்கே தூண்டிவிட்டான். (ருச)

ருரு. கொடியவன், கொடுஞ்செயல் குறித்து வந்துன்றன்
அடியவ னாகியே ஆவி நீங்கினேன்.
முடிவுரை முடிந்ததென் மூச்சு நின்றதும்,
மடியினைப் பா"ரென வேகன் மாய்ந்தனன்.

நான் மகா கொடியவன். இவ்வனத்து முனிவரையும் பெண்களையும் கெடுத்து, உன்னையும் கொல்ல வந்தேன். உன் வீரமும் கருணையுங் கண்டு உனக்கே அடியானாக உயிர் விடுகிறேன். இத்துடன் என் வாழ்விற்கு முடிவுரை சொல்லி முடிந்தது. இதோ மூச்சு நின்றதும் என் மடியைப் பார் என்று வேகன் இறந்தான். (ருரு)

சுத்தன்

ருசா. வெவ்விய வாழ்வினை விட்டுச் சாகையிற்
செவ்விய சிந்தனை செய்து தப்பினாய் ;
இவ்வள வியற்றிய நிறைவனே யெனத்
திவ்விய கோமகன் செப்பி னானரோ.

கொடிய வாழ்வை விட்டுச் சாகும்போதாவது நல்ல சிந்தனை செய்து பிழைத்தாய். இவ்வளவும் செய்தது நானன்று. "என்னையாளுடைய இறைவனே" என்று தெய்வத் தன்மையுள்ள அரசகுமாரன் வேகனுக்கு ஆறுதல் சொன்னான். (ருசா)

ருஎ. மடியினைப் பார்த்திட மடக்கு வாளுடன்
கடிதமொன் றிருந்தது—கலியன் ஆணையே
படியெனச் சித்திமான் படித்து நெஞ்சகந்
துடிதுடித் ததன்பொருள் சொல்லு வானரோ-

வேகன் மடியைச் சோதித்துப் பார்த்தான் சுத்தன். அதில் ஒரு மடக்குக் கத்தியும் ஒரு கடிதமும் இருந்தன. கடிதம் கலியன் உத்தரவு. அதைச் சித்திமான் படித்து உள்ளந் துடித்து அதன் பொருளை விளக்கினான். (ருஎ)

கலியன் ஆணைக் கடிதம்

ருஅ. பஞ்ச வடியிலே, பசுப்போல் வாழும்,
துஞ்சா முனிவரை வெஞ்சிறைப் பிடிமின்,

அரிவையர் தம்மை அள்ளி வாருமின்,
உரியவர் நாமே உலகினுக் கென்றே,
ஆங்கே சுத்தனும் அமைச்சனும் உணர
ஓங்கி யுரைமின் ! ஒளிந்தொளிந் தேகிச்
சமயம் பார்த்துச் சத்தியன் மகனை
எமபுர மேற்றி, எத்தனும் அமைச்சனை
நம்புறந் திருப்ப நயமாய் முயலுமின் ;
சம்பம் பேசிற் சாகத் திட்டுமின் ;
அங்கே போர்வினை யானதும் படைகள்
இங்கே வருகவே இரண்டு நாளில் ;
சித்தியைச் சூழ்வோம், தீயினுற் செயிப்போம்.
சுத்தி முனையிற் கலியர சோங்குமே !

வெருவுரு கலியனின் விருப்பங் கண்டுளம்,
மருகினர் " பின்னந்த மடைய னுர்தலை
திருகுவம் " என்றனர் சேனை வீரர்கள்
உருகினன் சுத்தனும் உலகை யெண்ணியே !

பயங்கரமான கலியன் கடிதத்தைக் கண்டு சேனைவீரர் ஒரு நொடி கவலையால் மயங்கினர். பிறகு அந்த மடையனுர் தலையைத் திருகுவோம் என்று சபதங்கூறினர். சுத்தன் உலகியல்பை நினைத்து மனமுருகினுன். (ருஅ)

ருகூ. அத்ததி முனிவரர், ஆசி கூறியே,
பத்தினி மாருடன் பரிந்து வந்தனர்.
இத்தினம் வெற்றியி னின்பந் தந்தநம்
சுத்தனைத் துதித்ததைச் சொல்லு வாமரோ ! (ருகூ)

உஉ. பஞ்சவடிப் போர் வென்ற படலம் முற்றிற்று.

உ௩. அபயமளித்த படலம்

க. உருகிய செம்பைப் போலே, உள்ளமு முகமு மாகி,
வெருவுறு மரக்கர் தீதை வெகுண்டது செக்கர் வானம் ;
பொருவினில் வென்ற சுத்தன் புண்ணியம் புரிந்த தெண்ணித்
திருவுறு திங்கள்காட்டிச் செயநகை புரிந்த தன்றே !

அஞ்சத்தக்க (வெருவுறு) கலியரக்கர் பஞ்சவடியிற் செய்த தீமைகளைக் கண்டு சினந்து, செவ்வானம், உருக்கி வார்த்த செம்பைப்போல அகமும், முகமும் சிவந்தது. சுத்தன் அரக்கரைப் போரில் வென்று முனிதருமத்தைக் காத்துப் புண்ணியம் புரிந்ததை நினைத்து அழகான சந்திரனைக் காட்டி வெற்றித் திருநகை புரிந்தது. (க)

உ. புள்ளினம் பாடவில்லை ; பூவின மணக்க வில்லை ;
கிள்ளைகள் கொஞ்ச வில்லை ; கிளர் மறை யொலி யுமில்லை ;
தெள்ளிய நதியுங் காற்றுந் திங்களோ டுரைப்ப தொன்றே.
விள்ளரு மோனக் காடு விரிச்செனக் கிடந்த தம்மா !

பஞ்சவடிக்காடு மோனமாக விரிச்செனக் கிடந்தது. கோதாவரி நதியும், தென்றற் காற்றும், நிலாக்கதிருடன் ஏதோ இரகசியம் பேசுவதைத் தவிர வேறெச் சத்தமுமில்லை. பறவையினம் பாடவில்லை; பூவகைகள் மணக்கவில்லை. கிளிகள் கொஞ்சிப் பேசவே இல்லை. பொங்கியெழும் வேத கானமுமில்லை. (உ)

௩. புயல்,எரி மலை,பூ கம்பம் போலெழும் பொய்யர் வெம்போர்,
இயல்பெறுஞ் சாந்த வாழ்வின் இசைநரம் பறுத்துப் பொல்லாத்
துயர்பல செய்து, காட்டைச் சாம்பராய்த் தூவிச் சென்ற
பயங்கரக் காட்சி கண்டு பதைத்தது முனிவ ருள்ளம்.

கொடிய புயல்போல் மரங்களை மோதி வீழ்த்தி, எரிமலைபோல் முனிவர் குடில்களை யெல்லாம் கொளுத்தி, பூகம்பம்போலப் பஞ்சவடியை ஓர் உலுக்கு உலுக்கி எழுந்தது, பொய் வினையாளரான கலியரக்கரின் கொடிய போர். அது, முதலில் இயற்கையோடிணைந்த அமைதியான வாழ்வென்னும் வீணையின் இசைத் தந்திகளை அறுத்தெறிந்தது ; பொல்லாத் துயர்கள் பல செய்தது. காட்டை எரித்துச் சாம்பலாகத் தூவிவிட்டது, அந்தப் பயங்கரக் காட்சியைக் கண்டு தவமுனிவர் உள்ளம் பதைபதைத்தது. (௩)

ச. சோலையை யழித்துத் தூய தவச்சுடர் துலங்கும் பர்ண
சாலையை அழித்துச் சென்ற சண்டமா ருதத்தை யெண்ணி,
மாலையுந் திகைத்த தந்த மலைகளுந் திகைத்து நின்ற
காலையில், வேத கானம் பாழினைக் கலைத்த தம்மா !

கலிப்போராகிய சண்டமாருதம், சோலைகளையழித்தது, பரிசுத்தமான தவச்சுடர் விளங்கும் பர்ணசாலைகளை அழித்தது. அதையெண்ணி, அந்திமாலையும் மலைகளுந் திகைத்து நின்றன. எங்கும் படுபாழ், சூனியம். இப்படி யிருக்குங்காலையில் முனிவர் வேதகானம் பாடினர். அது அந்தச் சூனியத்தைக் கலைத்தது. (ச)

முனிவர்

ரு. இவ்வுல கெல்லாம் இறைவவுன் உறையுள்,
எங்கெங்கும் உயிர்க்குயிர் நீயே !
எவ்வகைப் பொருளும், இறைவநின் பொருளே,
ஈந்துதுய்த் தருட்பணி புரிந்தே,
வவ்விடா தொருவர் பொருளைமற் றெருவர்
வழங்கிநா ளுண்டுகள் வாழ்க !
திவ்விய வுண்மைப் பொன்முகங் காட்டித்
திருவருள் புரி யருட் சுடரே !

இறைவா, அருட்சுடரே, இந்த உலகெல்லாம் உன்மயம்; நீ இருக்கும் கோயில். எங்கெங்கும் நீயே உயிர்க்குயிராக நிறைந்திருக்கிருய். உலகில் உள்ள எவ்வகையான பொருளும் உனக்குரியதே. நீயின்றி அதற்குப் பொருளில்லை, இருக்கையில்லை. ஆதலால் எல்லாம் உன் அருள் உடைமையே யொழிய எவருக்கும் தனியுரிமையில்லை. தனது என்று எவன் எதைச் சேர்த்துவைத்தாலும் அது உனதே. நீ யாவும் ஆதலின், எல்லாருக்கும் அது உரியதே. ஆதலால் பொருளுடையவர் இயன்றமட்டும் பிறருக்கு ஈந்தே அனுபவிக்க வேண்டும். தமக்குரிய பணம் மட்டுமன்று. தானியம், நிலம், பலம், அறிவு, ஆற்றல், தொழில் திறமை எல்லாம் அருட்பொதுவாகும். அவற்றைக்கொண்டு எல்லாரும் அருட்பணி செய்க. பிறர் பொருளைப் பொருமைகொண்டு திருடாமல், பிறநாட்டையோ சமுதாயத்தையோ, தனிமனிதனையோ தந்திரத்தாலும் பலாத்காரத்தாலும் கொள்ளையடிக்காமல், அவரவர் உழைத்தே தம்மையும் காத்துப் பிறருக்கும் தந்து நூறுண்டு வாழ்க! அருட்சுடரே, நீ எங்கும் யாவுமாயிருக்கும் உண்மை தெரியாமல், மனிதன் அகம்பாவங்கொண்டு தனக்கே எல்லாம் உரிமை, தானே உயர்வு என்று மமதைகொண்டு உலகை உன்னிடமிருந்து பிரித்தாளுகிருன். உனக்கும் உன்மயமான ஆன்மாவிற்குமிடையே அகம்பாவச் சுவராக நிற்கிருன். சுத்தசமரச உண்மையான உன் பொன்முகம், மாசற்ற ஞானமுகம், காட்டி எங்களுக்கு அருள் புரிவாயாக ! (ரு)

சா. இருந்தவா றிருந்தே, இயங்கிடும் பொருளே,
ஏகம், அநேகமாய் வளர்ந்தாய் ;
அருந்துணை நீயே, அகந்தொறும் கனல்சுத்
தாத்துமத் தெய்வமே, உன்னைத்
திருந்துநல் லறிஞர், யாவுமாய்த் தெளிந்தே
திகைத்திடார் பகைத்திடார் ; அன்பே
பொருந்தியெந் நாளும் சுதந்தர ராகப்
பொலிகுவர் பூரண வொளியே !

பூரண ஜோதியே, நீ இருந்தபடி யிருக்கிருய் ; நீ அசலன், உனது இச்சா ஞான கிரியாசக்தியால் எங்கும் இயங்கி எல்லாம் இயற்றுகிருய். நீ ஏகம், ஒன்று. இரண்டற்ற ஒப்புயர்வற்ற பரம்பொருள், தற்பரம். உனது சிற்பராசக்தியால் நீ பலபல உயிர்களாகவும், இயற்கைப் பொருள்களாகவும் வளர்ந்தாய். எல்லாம் உன் விரிவே. எங்களுக்கு அரிய துணைசெய்து, பாதுகாக்கும் சக்தி நீயே. எங்கள் உள்ளந்தோறும் கனல் வடிவாகச் சொலிக்கும் சுத்தான்மத் தெய்வமே, ஆணவம், மாயை, கர்மம் ஆகிய வினைகள் திருந்தி, இருவினையொப்பும், மலபரிபாகமும் அடைந்த நல்ல ஞானிகள், உன்னையே எல்லாம் என்று

தெளிந்து, உன்னையே சர்வாந்தர்யாமியாகக் கண்டு, எதற்கும் திகைக்கமாட்டார்கள். எவரையும் பகைக்கமாட்டார்கள், உள்ளத்தில் எல்லாவுயிர்களுக்கும் அன்பே கொண்டு, எதற்கும் அஞ்சாமல், கட்டுப்படாமல், சுத்த சுதந்தரராக நித்திய முத்தராக விளங்கு வார்கள். (சு)

எ. எப்பொருள் அறிந்தார் அறிந்தவர் ஆவார்,
எப்பொரு ளாளர் இன் புறுவார்,
எப்பொருள் இரவு பகலென்ப தின்றி,
இறப்பையும் பிறப்பையும் வென்றே,
சிற்பர வொளியாய், அமரவாழ் வருளுந்
தேன்விளை ஞானவூற் ருமோ
அப்பொருள் உண்மை யறிவினுக் கென்னை
அக்கினிக் கடவுளே நடத்தாய்.

சக்தித் தியாகிய கடவுளே, நீயே பொருள். எந்தப் பொருளையறிந்தால் மனிதர் எல்லாம் அறிந்தவராவாரோ, எந்தப் பொருளை உடையவர் என்றும் இன்புறுவாரோ, எந்தப்பொருள் இரவு பகல் என்பதின்றி என்றும் சுயஞ்சோதியாயிருக்கிறதோ, எது பிறப்பையும் சாவையும் வென்ற நித்தியப்பொருளோ, எது எல்லையற்ற சிற்சக்தி நிறைந்த பரவெளியாய்ப் பரந்ததோ, எது நரருக்கு அமரவாழ்வளிக்கும் சாகாப்பொருளோ, எது பேரின்பத்தேன் பொங்கும் ஞானவூற்ருே, அந்தச் சுத்தசக்திப்பொருளின் உண்மையறிவிற்கு எம்மை வழி நடத்துவாயாக! (எ)

முனிவர்

அ. என்று வேத மிசைத்து முனிவரர்,
இன்று தங்கள் இடர்களைப் போக்கியே
நன்று செய்த நலம்பெறு நம்பியின்
வென்றி தன்னை வியந்துளம் பூரித்தார்.

இவ்வாறு வேதகானம் செய்து, முனிபுங்கவர்கள், இன்று கலியரால் தங்களுக்கு வந்த இடர்களைப் போக்கி, நன்மை செய்து, நலங்களெல்லாம் பெற்ற நம்பியான சுத்தனின் வெற்றியை வியந்து போற்றி மகிழ்ந்தனர். (அ)

கூ. பார திரப் பலம்வளர்த் தெங்குமே
போர திரப் புரிந்து மதங்கொண்ட
சூர பத்மனைச் சுட்ட முருகனே,
வீர சுத்தனுய் வேகனை வீழ்த்தினன்.

உலகம் அதிரும்படி சேனுபலத்தை வளர்த்து, எங்குமே போர்அதிரச்செய்து, உலகை வருத்திய அகம்பாவங்கொண்ட அசுரன் சூரபத்மன். அவனைச் சுட்டெரித்த முருகக்கடவுளே, நமது வீரமிக்க சுத்தன்வடிவாக வந்து இன்று பொல்லாத வேகனை வீழ்த்தி நம்மைக் காத்தான். (கூ)

க0. செருக்கு மிஞ்சித் திமிர்கொண்ட பாவிகள்,
உருக்கு போன்ற வுளத்தர் கலிநமர்
பெருக்கு சேனை யினும் பெரும் பேயென
நெருக்கி நம்மை நலிக்க நினைக்குமால்.

ஆனல் போர் இத்துடன் போகவில்லே. கலிஙகர் வளர்க்கும் சேனுபலம் மகா அகங்காரம் பிடித்த தசைத்திமிர்கொண்ட பாவிகளின் கூட்டம். அப்பாவிகளின் உள்ளம் வாள் (உருக்கு) போன்றே கொடியது; இரக்கமற்றது. அவர் இன்று போரில் தோற்றெழிந்தார்களென்று நாம் நிம்மதியாயிருக்க முடியாது. பெரும்பேய்க் கூட்டம்போல் இன்னும் நெருங்கி நம்மை நலிக்கவே அவர் படை நினேக்கும். (௧0)

௧௧. தருமந் தாங்குந் தவமுனி வோர்களே
கருமந் தாங்கும் உலகினர் காப்பென்ற
மருமங் கண்டுநம் வாழ்வை யொடுக்கவே
வருமத் தீயரின் வாட்படை நாளேயே.

கரும மார்க்கத்தில் சென்று பல செயல்களேத் தாங்கும் உலகினருக்கு, மனமடக்கித் தவஞ்செய்யும் அருட்பெரியார்களே வழி காட்டுகிருர்கள். அவர்களே அறத்தைத் தாங்கி, இப்படி நடக்கவேண்டும் என்று காட்டுகிருர்கள். அவர்கள் இருக்குமட்டும் கலியர் அதருமம் பலிக்காது. அந்த இரகசியத்தை (மருமம்) அறிந்து, நமது வாழ்வை ஒடுக்கியழிக்க நாளேயே அந்தத் தீய கலியரின் வாட்படை வந்து நம்மைத் தாக்கும். (௧௧)

௧௨. தன்ன லஞ்சுய சாதி மதத்திமிர்,
பொன்மண் ணுசை, புவியெம தென்கிற
மன்னர் செய்யு மதிகெடு போர்வினே,
இன்னல் செய்யு மினியுல கெங்குமே.

இனி உலகில் அசுரத் தீமைகள் அட்டூழியஞ் செய்யும். சுயநலம், தனது ஜாதி, மதம், நிறம், தன்னவர் கூட்டமே பெரிது என்னும் தலேக்கொழுப்பு, பொன்னுசை, பெண்ணுசை, 'உலகம் எம்மதே' என்னும் மண்வெறி பிடித்த மன்னர் செய்யும் புத்தி கெட்ட கொடிய போர்வினேகள்—எல்லாம் சேர்ந்து உலகில் பல துயர்களேச் செய்யும். (௧௨)

௧௩. எல்லே யற்ற துயர்செய் யிகற்படை
சொல்லே மீறித் தொகை தொகை யாகவே,
தொல்லே செய்யத் தொடருமுன் ஓர்வழி,
ஒல்லே காண உளங்குவிந் தெண் ணுவோம்.

அளவற்ற துன்பஞ் செய்யும் பகைவர் சேனே, நமது சமாதானச் சொல்லே மீறி, தொகைக் கணக்காக வந்து, இங்கே தொல்லே செய்யப்போகிறது. அது வருமுன்பே அதைத் தப்ப ஒரு வழி விரைவாகக் காணவேண்டும், அதற்காக நாம் உள்ளங் குவிந்து தியானிப்போம். (௧௩)

௧௪. அலேகள் மோதி யலேக்குங் கலமென
நிலே குலேந்திடு நீதி தருமத்தை
உலேவி லாவழி யுய்த்தருள் பாலிப்பாய்
தலேவ, *சுத்த தயாபர மூர்த்தியே.

---

* இக்காவியத்தில் வரும் சுத்தன், இறைவன் அருள்பெற்ற யோகதீரனே; தில்லே நடராஜன் பெயரை நம் மக்களுக்கிடுவதுபோல சுத்த பரமாத்மனை இறைவன் பெயரை சத்தியன் மைந்தனுக்கு இட்டனர். ஆதலால் கதையில் வரும் சுத்தன் கடவுளன்று; கடவுட் பெயர் தாங்கி, அவன் அருளால் உலகிற்குதவும் அதிமனிதன் அல்லது தெய்வ மனிதத்துவமாய்,

புயல் அலைகள் மோதுகின்றன; அதில் அகப்பட்ட கப்பல் இங்குமங்கும் ஆடி யலைந்து சுழன்று தத்தளிக்கிறது. அதுபோல் இன்று நீதிதருமமுங் கலியர் போர்ப்புயலிற் சிக்கி நிலைகுலைந்து தவிக்கிறது. அதைக் கேடில்லாமல் நல்லவழி நடத்தி, அருள் செய்யும் தலைவன் நமது அந்தர்யாமி, தயாபர மூர்த்தி சுத்த பரமாத்மனே. (கச)

கரு. சுத்த முக்த சுதந்தர சக்தியால்,
சத்தி யச்சுடர் நந்தெமை யாண்டிட
இத்த நியிங் கெழுந்தருள் செய்கநாம்
நித்தியந் தொழு நின்மல தேவனே.

நாம் தினந்தொழும் நின்மலனாகிய சுத்ததேவன், சித்த சுத்தி, ஜீவன்முக்தி, ஆத்ம சமரசம் ஆகிய மூன்றுந் தரும் யோக சக்தியால், சத்திய ஜோதி வாழ்வையளித்து, சாதுக்களான எங்களை ஆண்டுகொள்ள இங்கே நம் உள்ளத்தில் எழுந்து விளங்குக. (கரு)

கசு. அன்று சூரனை வேல்கொண் டழித்தவன்,
என்று மன்பர்க் கிதஞ்செய் சிவக்கனல்,
ஒன்று பட்டநம் உள்ளத்திற் கூடியே
இன்று நல்கும் இனிதின் அபயமே.

அன்று வேலாயுதத்தால் சூரபத்மாசுரனை அழித்தவன் முருகன். அவன் அன்பருக்கு என்றும் அருளும் சிவக்கனல். அக்காலம் சூரபதுமனால் உலகம் பட்ட துயரையே இன்று காண்கிறோம். இன்று நமது நெஞ்சில் முருகன் புகுந்து கலந்து அச்சமொழித்து அபயந் தருக! (கசு)

கஎ. அந்தன் மாதவர் அன்புள நன்றியால்,
அந்தி வண்ணன் அனல் வடிவாகிய
செந்தி லாண்டவன் சீர்வடி வைக்குக
மந்திரஞ் சொலி வாழ்த்தி வணங்கினர்.

அந்தண்மை மிக்க மகாமுனிவர்கள் அனைவரும், அன்பு மேலிட்டு, அந்திபோலத் தீநிறங்கொண்ட சிவபெருமானின் யோகக்கனலே உருவான சுப்பிரமணியக் கடவுளின் திவ்வியரூபத்தை, குகமந்திரஞ் சொல்லி வாழ்த்தி வணங்கினர். (கஎ)

குக மந்திரம்

கஅ. கதிநீ, மதிநீ, கதிர்வேல் முருகா,
துதிசெய் யடியார் துணை நீ யரசே,
விதிசெய் வினையும் விலகப் புரிவாய்,
புதிதா கியவாழ் வருள்புங் கவனே!

கதிர்வேல் முருகா, எங்களுக்குப் புதிய சுத்த சன்மார்க்க வாழ்வைத்தரும் ஞான குருவே, நாங்கள் உன் அடியார். நீயே எங்கள் கதி, புகல்; நீயே எங்கள் மதி, அறிவு; துதிக்கும் அடியவர் துணைவன் நீயே. எம் அரசே, விதியினால் வரும் தீவினைகளை விலக்குவாய் முருகா. (கஅ)

கக. சக்திக் கனலே, சமர்செய் பகையைக்
குத்திக் குமுறும் கொதிவேற் கரனே,
தொத்தித் துயர்செய் பிணியைக் களைவாய்
பத்தர்க் கருளும் பரமன் மகனே.

சத்திமயமான அருட்கனலே, அதருமப் போர்செய்யும்கொடிய பகைவரை மார்பிற் குத்தி, வீராவேசங் குமுற எழுந்து கொதிக்கும் வேல்பிடித்த கையனே, எம்மைப்பற்றித் துயர்செய்யும் காமக்குரோத லோபமோகாதி நோய்களை அழித்தொழிப்பாய்—அன்பருக் கன்பனாக அருள்புரியும் பரம்பொருளின் மகனே! (கக)

உ0. பவபந் தனைசிந் துக!பற் றறுக!
தவசா தனைசித் திதழைத் தொளிர்க!
கவலை, கதிர்முன் பனிபோல் ஒழிக!
சிவஷண் முகஓம் செறுவேல் முருகா!

எங்கள் பிறவிப்பிணி நலிக! ஆணவம் மாயை, கன்மம் ஆகிய பற்றுக்கள் அறுந்து வீழ்க. எங்கள் தவயோக சாதனம் சித்தி பழுத்துச் செழித்துப் பொலிக! எமது மனக்கவலை சூரியன்முன் பனிபோல் மறைக—சிவஷண்முகா, ஓம் வணக்கம். பகைவரை ஒறுக்கும் வெற்றிவேல் முருகா வணக்கம்! (உ0)

உக. அருளார் முகமும், அடியார்க் கபயம்
தருபொற் கரமும், தணலார் விழியும்,
கருணைப் பொலிவும், கனிவாய் நகையும்,
திருமார் பழகுந் திகழும் முருகா!

அருள் பொங்கும் திருமுகம், சரண்புகுந்த அடியாரைக் காத்து அபயமளிக்கும் பொற்கை, ஞானத்தீ வீசும் கண்கள், கனிந்த நகை குலுங்கும் திருவாய், வெற்றி யோங்கும் மார்பின் அழகு, இவற்றுடன் கருணைக்கதிர் பொலியும் அழகா, குழகா, எம்முன் என்றும் விளங்கும் முருகா, சரணம். (உக)

உஉ. சிதையா துதியா னம்நிலைத் திடவே,
பதையா துமனம் பணிவா கிடவே,
இதயத்தி லெழுந்து பொலிந் திடுவாய்,
உதயக் கிரிபோல் ஒளியார் முருகா!

எங்கள் தியானம் எவ்விதமான தடைகளாலும் சிதையாமல் தைலதாரைபோல் நடக்கட்டும். மனம் விஷய சுகங்களை நினைத்துத் துள்ளிக் குதிக்காமல், உனக்குப் பணிந்து அடங்கி, உள்ளொடுங்கி யிருக்கட்டும். இவ்விரண்டுமே யோகசித்தியின் முக்கியமான சாதனங்கள். இவை நிறைவேறி நாங்கள் பரிபூரணம் பெற, எங்கள் இதயத்தில் ஞான சூரியன்போல் உதித்து விளங்குவாய், சோதிமயமான முருகா, சரணம். (உஉ)

உங. தாயிற் பெரி தான தயாபரனே,
நேயர்க் குபசாந் தநிகே தனனே,
காயத் திரியின் கருவே குகஓம்,
தேயச் சுடரே, சிவஷண் முகனே.

தாயைவிட அரியபெரிய கருணைகொண்ட தயாபரனே! நேசிக்கும் அன்பருக்கு உபசாந்தமளிக்கும் ஞான நிலயமே, காயத்திரியின் கருப்பொருளாகிய ஓங்காரஸ்வரூபனே, குகனே, எங்கள் தேசத்திற்கு வீரச்சுடரே, சிவஷண்முகனே, ஓம் வணக்கம்.

[உலகம் அந்தரம், சுவர்க்கம் எல்லாம் பரம்பொருள் நிறைவு. அவன் பரமாத்ம சூரியன். அவனே அனைத்தினும் மேலோன், பெரியோன். அவனது சிற்பிரகாசத்தைத் தியானிப்போம். அது நம்மை அவன்பால் உயர்த்தி, சுத்தான்ம சித்தி தரும் என்பதே காயத்திரியின் பொருள். இருளரக்கனை ஆசை, மோகம் ஆணவாதிகளை ஞானச் சுடர் வேலால் அழித்து, சிற்கனலான தன்னைத் துலக்கிப் பரம்பொருளை அடையத் துணை செய்கிறான் முருகன்.] (உங)

உச. அன்பர்க் கெளிதாய் வருவாய், அபயம்!
நம்பன் அருளும் நலமார் கனலே,
உன்பொற் பதமென் னுளமூன் றிடவே
எம்பால் வருவாய் குருவா யிறைவா.

அன்பருக்கு எளிதாய் தரிசனமளிக்க முன்வருவாய், உமாபதியின் அருட்கனலே! உன் பாதம் எப்போதும் எனது நெஞ்சில் ஊன்றி யோகம் விலக்க என்பால் குருவாக வந்து உபதேசம் அருள்வாய் இறைவா, முருகா. (உச)

உரு. இரவும் பகலும் இதயத் துனையே
பரவும் அறிவும் பணியுந் தருவாய்,
புரியுந் தொழில் பூசனையா கிடவே
பரிவுற் றருள்வாய் பரிபூ ரணனே.

இரவும் பகலும் உள்ளத்தில் உன்னையே வழிபடும் அன்பறிவைத் தருவாய். நாங்கள் செய்யுந் தொழில் அனைத்தும் உனக்கே வழிபாடாகச் செய்ய அருள்வாய், பரிபூரணமேயான முருகா! (உரு)

உசா. பண்ணின் ஒலியே, பரிதிக் கொளியே,
கண்ணின் மணியே, கனியின் சுவையே,
மண்ணின் வளமே, மலரின் மணமே,
விண்ணின் விரிவே, அறிவின் விளைவே.

சிற்கனலான சக்தி நீ! நீயே பாட்டில் ஓமொலி, சூரியனில் உள்ளொளி, கண்ணில் ஒளிரும் கண்மணி; கனிகளில் தீஞ்சுவை, மண்ணிலத்தில் பயிர்—உயிர் வளமை மலர்களில் நன்மணம்; நீயே வானாக விரிந்திருக்கிறாய். அருளறிவால் விளையும் பரம்பொருளே, சரணம்.

உஎ. *பழிசெய் யசுரர் பயபந்த மிலா
வழிகாட் டியநின் வடிவேல் முருகா,
அழியா தொளிரும் அமரக் கனலைப்
பொழியேன் உயிரிற் பொலிவும் குகனே.

வடிவேல் முருகா, உலகில் ஆயுத பலத்தாலும் தசை வலியாலும் கொடிய பழி பாவங்களைச் செய்யும் அசுரரின் பயமில்லாமல், அவர்களுக்கு நாங்கள் ஆளாகும் அடிமைக்

* இசைக் குறிப்பு: இராகம்—காபி—தாளம்—ஆதி; தனனா தனனா தனனா தனனகளி; விருத்தம்

கட்டில்லாமல், சுதந்தர வழி காட்டி யருள்வாய். எங்களுக்குள் எதனுலும் மனம் அழியாத, தவம் கலேயாத அமரக் கனலான சுத்தான்ம சக்தியைப் பொழிந்தருள்—எங்கள் உயிரிற் கலந்து விளங்கும் இதயக்குகனே, சரணம். (உஎ)

உஅ. நேய மூன்றி நினைத்துத் துதித்துளே
கோயில் கொண்ட. குகைக்கன லொன்றியே,
தூயர் தூயனைச் சுற்றித் தியானித்தார்,
வாய கந்தைக் கடந்த மவுனராய்.

இவ்வாறு பரிசுத்தரான தவமுனிவர்கள், சுத்தனைச் சுற்றி யமர்ந்து அன்பூன்றி நினைத்துத் துதித்து, உடலுள்ளே கோயில்கொண்ட இதயக் குகையில் எழுந்தொளிரும் சிவக்கனலான முருகனை உட்குவிந்து கூடிக்கலந்து, வாய்மனங்கடந்த மௌனிகளாகி, வேறு சிந்தனையின்றித் தியானித்தனர். (உஅ)

உகூ. செய்ய மாதவச் சித்தருள் ளேவளர்
தெய்வ குண்டலித் தீயெழுந் திப்புவி
உய்ய வந்த ஒருவனுள் ளேவளர்
துய்ய சோதிச் சுடரிற் கலந்ததே.

ஆகாயத்திற் சுழலும் மின்சார அணுக்கள், யந்திரங்களில் வந்திறங்கிச் சக்தி பரப்புகின்றன. அதைவிட வேகமாக சித்திபெற்ற யோக முனிவரின் குண்டலி சக்தி சுற்றிலும் பரவும்; பரிசுத்தமான அந்தக்கரணங்களில் அது இறங்கி அற்புதஞ்செய்யும். இன்று பஞ்சவடியில் நீண்டகாலம் நன்ருகத் தவம் புரிந்த மகா சித்தர்கள் ஏராளமாகக் கூடித் தியானிக்கிருர்கள். அனைவருக்கும் சுத்தனே உலகை அசுரபயத்தினின்றும் காப்பான் என்ற நம்பிக்கையுண்டு. ஆதலால் அவனுக்குச் சக்தியளிக்கவே விரும்பினர். அந்த மாதவருள்ளே எழுந்து சுழலும் தெய்வத் தன்மைபெற்ற மகாகுண்டலிக்கனல் உலகம் உய்ய வந்த ஒரு மகாபுருஷனை சுத்தனுள் இயல்பாக வளரும் சுத்தான்ம சோதிச் சுடரிற் கலந்தது. (உகூ)

௩௦. பொறிய டங்கி மனத்திற் பொருந்நிட,
நெறிநின் றம்மனம் நெஞ்சி லடங்கிட,
அறிவி லேயஃ தடங்கச்சுத் தானந்தச்
செறிவி லேயொரு சித்தி மலர்ந்ததால்,

ஐம்பொறிகளும் புறஞ்செல்லாமல் அடக்கி மனத்திற் பொருந்தி நின்றன. மனம் அலேயாமல் சன்மார்க்கமான சுத்தான்ம நெறிநின்று, இதயத்தில் அடங்கியது. இதயம் அறிவான ஆத்மாவில் அடங்கியது. அதனுல் எழுந்த தூய இன்பத்திரளில் ஒரு புதிய சித்தி மலர்ந்தது. சுத்தன் மனம் பழுத்து, தன்னறிவுமுற்றி, சக்தியும், சுத்தான்ம சித்தியும் பெற்ருன். (௩௦)

௩௧. காந்த மின்பொறி காட்டுங் கனலென
ஏந்து மாதவர் இன்பக் கனலிலே,
நீந்தி யுள்ள நிலேயினே யோதினர் ;
சாந்த மாமுனி சாற்றிய சாற்றுவாம்.

காந்தத்துடன் சேர்ந்த மின்சாரம் (Electro-Magnet) சக்திக் கனல் விளக்கும். அது போன்று யோகத்தை ஏந்திய (யோகாரூடரான) மாதவர்கள் தம்மிடம் விளங்கும் இன்பக்

கனலில் (குண்டலி சக்தியில்) நீந்தி சமாதியிலிருந்தனர்; அப்போது தத்தம் உள்ளத்துள்ளே சில காட்சிகள் கண்டனர். அக்காட்சி நிலைகளை தியானமானபிறகு சொன்னார்கள். சாந்த மாமுனிவர் கண்ட காட்சியே அரிது பெரிது; ஆதலால் அவர் சொன்னவற்றை இங்கே சொல்லுவோம்: (௩௧)

சாந்த முனிவன் இனிவரும் உலக நிகழ்ச்சிகளைக் கூறுதல்:

௩௨. இலங்கு மாதவ மேந்திடுஞ் சித்தர்காள்,
கலங்கி டாது கடமை புரிகுவோம்;
நலங் கிளர்ந்திடும்; தீமை நலிந்திடும்;
துலங்கு மின்பம்; தொலைந்திடுந் துன்பமே.

சக்தி பொலியும் மகாதபஸை மேற்கொண்ட யோகசித்தர்காள், நாம் எதற்கும் கலங்காமல் நமக்குரிய கடமையைப் புரிவோம். முடிவில் நன்மையே கிளர்ந்து விளங்கும். தீமை நலிந்தொழியும். துன்பம் தொலையும். எங்கும் இன்பமே துலங்கும். (௩௨)

௩௩. தொத்துறு மனத்தின் பாசந் துடைத்தொரு கவலை யின்றி,
முத்தியில் உலவி யிந்த முதுவனம் வசித்து வந்தோம்;
இத்தறி யுலகுக் கெல்லாம் இடரென முளைத்த தியர்
கத்தியைச் சுழற்றி வந்து நம்மையுங் கலக்கி விட்டார்.

ஆசையாணவங்களைக் கிளப்பிப் பந்தப்படுத்தும் மனமாயப் பிணியை அறவே நீக்கி, ஒரு கவலையும் இல்லாமல், இந்த முதுவனத்தில் நாம் முக்தியின்பத்தில் உலாவிச் சுதந்தரமாக வாழ்ந்தோம். இக்காலம், உலகிற்கே தீங்குசெய்யத் தோன்றிய அசுரப்பாதகர், வாள் சுழற்றி வந்து நம்மையும் ஒரு கலக்குக் கலக்கி விட்டார்கள். (௩௩)

௩௪, அத்தகை அரக்கர் வாழ்வை யழித்தொழித் தமர வாழ்வை
இத்தல மாந்தர்க் கெல்லாம் இயன்றிடச் செய்ய வந்த
சித்தனிங் கொருவன் உள்ளான், செருவிலு மிணையி லாதான்,
சுத்தனென் றறியத் தக்க சுடரொளிக் குமரன் வாழ்க!

அப்படி சாதுக்களான நம்மையும் தொல்லை செய்த அரக்கர் வாழ்வை அடியோடழித்து, இவ்வுலக மாந்தர் அமரவாழ்வைப் பெறச் செய்யவே பிறந்த ஒரு பூரண சித்தன் இங்கே இருக்கிறான். அவன் போரிலும் இணையற்றவன். அவனே சுத்தன் என்று நாம் அறிந்து பணியத்தக்கவன். அருட்சுடர் பொலியும் அக்குமரன் வாழ்க! (௩௪)

௩௫. தந்திர மெல்லாம் வல்ல சதுரனும் அறிஞன், சித்தி
மந்திரி யுடனே யின்று மாதவர் குலத்தைக் காத்தான்;
இந்தவாள் வீர னுள்ளே இன்றுநந் தவத்தை வார்த்தோம்.
சந்ததம் அறமும் அன்புந் தழைத்திட வுலக மெல்லாம்!

அரசியல் தந்திரமெல்லாம் வல்ல நிபுணனும், கல்விகேள்வி யனுபவங்களிற் சிறந்த அறிஞனுமான மந்திரி சித்திமானுடன் இந்த வாள்வீரனான சுத்தன் வந்து, நமது மாதவ குலத்தைக் கலி அரக்கர் அழிக்காமல் இன்று காத்தான். இனி உலகமெல்லாம் அறமும் இன்பும் தழைத்தோங்க, இவனுள் நமது தவசக்தியை வார்த்தோம். அதுவே நாம் அளிக்கத் தக்க பரிசு. (௩௫)

௩௬. கதந்தரும் அரக்கர் சேனை, கடலெனச் சூழ்ந்து நாட்டின்
சுதந்தர வாழ்வைச் சின்னுள் சிதைத்திடும் ; துயர்கள் ஓங்கும் ;
பதந்தருங் கரும ஞான பக்தியோ கங்கள் போற்றி
இதந்தரும் பெரியோர் வாழ்க்கை இடர்ப்படும் பகைவர் போரால்.

இனி நடக்கப்போவதைச் சொல்லுகிறேன்: அரக்கர் சேனை சினங்கொதித்துப் புயற்கடல்போல உலகைச் சூழும்; இந்த நாட்டின் அமைதியைக் கெடுக்கும்; சுதந்தர வாழ்வைச் சிதைக்கும். சிலகாலம் இங்கே சொல்லொணுத் துயர்களே பெருகும். மனிதருக்கு உயர்ந்த நிலைதரும் கர்ம பக்தி ஞான யோகமார்க்கங்களைப் போற்றி உலகிற்கு நன்மையே செய்யும் மகான்கள் வாழ்க்கையும் (பகைவர் செய்யும் போர்களால்) இடர்ப்படும். (௩௬)

௩௭. தானமுந் தவமுங் குன்றும் ; தருமமுந் தயவும், பெண்கள்
மானமுங் கற்புங் குன்றும் ; மானிடர் விலங்கு போலே,
ஞானசூ னியராய் வாழ்வார் ; நல்லதைச் சொல்லிக் கேளார் ;
வானமும் பொய்க்கும் ; எங்கும் வறுமையு மிருளுஞ் சேரும்.

இப்புண்ணிய நாட்டிலும் உலகிலும், ஈகை, தவம், தருமம், தயவு, இரக்கம், கருணை, அருள் இவை குறையும். பெண்கள் மானமும் கற்பும் குறையும்; மனிதர்கள் காமக்குரோதாதிகளிற் சிக்கி விலங்குகள் போல அறிவிலிகளாய், புலன்வழியே திரிவர்; நல்லது சொன்னுலும் கேளார்; எதிர்ப்பர். இத்தீமைகளால் வான்மழையும் வற்றும். எங்கும் வறுமையும் மடமையிருளும் சேர்ந்து துன்பம் விளைக்கும். (௩௭)

௩௮. பொறுமையிற் கழுதை யாகிப் பொருமையிற் பாம்பே யாகிச்
சிறுமையிற் புழுப்போ லாகித் தீமையிற் புலிக ளாகி,
வறுமையிற் பாலையாகி, வஞ்சத்தில் நரிக ளாகி
வெறுமையுற் றீன வாழ்வை விரும்புவோர் பலரு மாவார் :

இந்த நாட்டில் மனிதருக்குரிய வீரப்பெருமை, பகுத்தறிவு உரிமையுணர்ச்சி எல்லாம் இழந்து, வயிற்றுப்பிழைப்பே பெரிதெனக்கருதி அடிமைவாழ்வு வாழ்பவர் பலரும் இருப்பார். அவர்கள் எவ்வளவு பொதி சுமத்தினுலும் வேகாத வெய்யிலில் முட்டிக்கால் தட்டி நடக்கும் கழுதைபோலப் பொறுமையாக, ரோஷமின்றி கலியரக்கர் ஊழியஞ் செய்வர் ; தம்முள் ஒருவருக்கொருவர் பொருமை கொண்டு பாம்புகள் போல விஷங்கக்கிப் பொதுவாழ்வைக் கெடுப்பர்; அற்பத்தனத்தில் ஆபாசப் புழுவைப் போல்வர்; பெரிய காரியங்களை முயலாமல், சேவகம் அடிமைத்தனம் இவற்றையே விரும்பிக் கலியரக்கர் காலின்கீழ் நலிவர்; நாட்டிற்குப் பொய்கோள்பொருமை, குட்டிக்கலகம், கட்சிச்சண்டை, பிளவு வேற்றுமைகளால் தீமைசெய்வதில் புலிபோலாவார்; நல்ல கல்வி தொழிலின்றி, உடலில் வேலைசெய்துண்ணப் பலமுமின்றி, வற்றி வறியராகிப் பசுமையற்ற பாலைவனம் போல் வறண்டு காண்பர்; ஆனுல் ஒருவரையொருவர் ஏமாற்றிப் பறிப்பதிலோ, நரிகளைப் போல் வஞ்சகராவார். (௩௮)

௩௯. பாருயிர்க் குயிர தாகிப் பலப்பல பான்மையான
ஒருயர் பொருளை யென்னுர் ; உள்ளதும் உடலே யென்பார்,
ஆருயிர் ஆண்பெண் சேர்க்கை யளிப்பதென் றறிவு சொல்வார்,
காருரு மழையுஞ் செய்வோம் கதிரையும் படைப்போ மென்பார்.

இந்த உலகில் எத்தனையோ உயிர்க்குலங்கள் உள்ளன. அனைத்துயிர்க்கும் உயிரானது ஒரு பரம்பொருளே. அதுவே பெயர்வடிவான பல பான்மையாகி, பல உடல்களைப் போர்த்து உலாவுகிறது. அதுவே உயர்பொருள், பரம்பொருள். அதை இனிவரும் கலியடியார் கருதார்; கடவுளை மறுப்பர். இருப்பது உடலே உலகே என்பர்; 'உடலுக்குள் உயிர் இருக்கிறதே' என்றால், "அந்த உயிர் ஆணும் பெண்ணும் கூடிப்பெற்றது. கடவுள் விவகாரம் அங்கில்லை" என்பார். "பௌதிக மூளையால், "மேகம் பொழியும் மழையையும் நாங்கள் உண்டாக்குவோம், இன்னொரு சூரியனையும் படைப்போம்" என்பார். (௩௯)

௪௦. ஆத்திக வேத மெல்லாம் அனலிட்டுப் பொசுக்கு மென்பார்,
நாத்திக வாதம் பேசி, நாத்தடிப் பேறக் கற்றோர்,
சாத்திரச் சண்டை கோடி சாதியு மதமுஞ் செய்யும்
ஆத்திரச் சண்டை கோடி அடிமைநா டெங்கு மாமே.

தெய்வ நம்பிக்கை, சுத்தாத்ம தத்துவம், சர்வாத்ம இரகசியம் இவற்றைப் புகட்டும் வேதம், உபநிஷத்து, குறள், திருவாசகம், தேவாரம், தாயுமானர், பைபிள், குரான் போன்ற ஆஸ்திக வேதங்களையெல்லாம் தீயிலிட்டுக் கொளுத்திச் சாம்பலாக்கச் சொல்வார். ஏனெனில் அவர்கள் கற்ற கல்வி இகபர சுகமறியாப் போலிக்கல்வி, அனாத்மக்கல்வி. அதைக் கற்றவர் நாஸ்திக வாதமே பேசி நாத்தடிப்பேறியவர். நாட்டில் பழைய சாத்திரங்களைப் பலவிதமாகக் கசக்கிப்பிழிந்து தர்க்கமாடுவர். சாதி சமயம் என்று பல பிரிவாகி, ஆத்திரச் சண்டைகள் கோடி கோடியாகக் கிளம்பும். அடிமை நாட்டில் இந்த மோசமான காட்சிகளே காணும். (௪௦)

௪௧. குருவினைத் தூற்று வார்கள்; கோயிலை யிடிப்பார்; மாதர்
கருவினைக் கரைப்பார், தீய காமத்தாற் கண்ணி ழப்பார்,
பொருவினை செய்ய வெய்ய பொறிகளைக் குவிப்பார், நாட்டுத்
திருவினைக் கொள்ளை கொள்வார் தீவினை யரக்கர் மாதோ!

தீவினை செய்வதே தொழிலான கலியரக்கர் தமக்கு அறிவு புகட்டிய ஆசிரியனையே வைது தூற்றுவர். அன்பர் வழிபடும் ஆலயங்களை யிடிப்பர்; காமத்தால் கண்ணிழந்த கொடியோர் பெண்களின் கருவைக் கரைப்பர். அவர்களுக்குப் பலமான போர் செய்து, பிறரைக் கொன்று, தாமே உலகையாளவேண்டுமென்பதே குறிப்பு. அவர்கள் அதற்காக இரும்பு, நிலக்கரி, மண்ணெண்ணெய், மின்சாரம் முதலியவைகளைக் கொண்டு பல யந்திரங்களைச் செய்து குவிப்பார்கள். நாட்டிலுள்ள பொன், பசும்பொருள் எல்லாம் கொள்ளையடித்துச் செல்வார். (௪௧)

௪௨. தன்னலப் புலிக ளாகித் தம்மவர் கொழுக்க வேண்டி,
இன்னொரு நாட ழிப்பார், இகல்வெறி மதமே பூண்பார்;
சொன்னதைக் காவார்; மற்றோர் சுதந்தர ராகப் பாரார்;
மன்னர சில்லார் நல்ல மக்களி னரசி லாரே.

கலியரக்கர் நீதிமன்னன் ஆட்சியை வீழ்த்துவார்; மக்களை மக்கள் ஆளவேண்டுமென்று குடியரசு காண்பார்; ஆனால் நன்மையும் நல்லறிவுங்கொண்ட பெரியாரைத் துணைக்கொள்ளமாட்டார்; நல்ல மக்களின் அரசையும் வேண்டார். தன்னரசு நாட்டாராயிருப்பார்; எல்லாரும் தானே தனக்கே யென்ற சுயநலப்புலிகளாய், தம்மைச் சேர்ந்தவரே தின்று கொழுக்கவேண்டி வளம்பெற்ற இன்னொரு நாட்டைப் படையெடுத்து அழிப்பார்;

இரத்தப் போர்வெறி கொண்டு அலைவார்; ஒருவருக்கு உடன்படிக்கையில் வாக்களித்ததைக் காக்கமாட்டார். திடீரென்று வாக்கைமீறி அவர் நாட்டைப் படையெடுப்பார்; மற்றொரு நாடு உரிமையுடன் கைவீசித் தலைநிமிர்ந்து நடக்கச் சகியார்; அதை எப்படியாவது படைகொண்டு நலித்துத் தமக்கே அடிமையாக்குவார். (சஉ)

சஙு. பூசிய முகமும் போலிப் பற்களும் பொய்ம் மினுக்கும்,
வேசையின் நடையும், கண்ணும் வீணகங் காரப் பேச்சும்,
ஆசையைக் காட்டி யாளை அம்பல மாக்கு நட்பும்,
மோச மாய் வலுக்கு மிந்த மோகநா கரிகத் தம்மா !

மோகமே அடிப்படையாகக்கொண்ட இந்தக் கலி நாகரிகத்தில் இயல்பான முகத்தையும் நடையையும் காண்பதரிது. பலவகையான சாயங்களைப்பூசி, ஊத்தைப்பல்லைப் போலிப்பல்லால் மறைத்துப் பொய்ச்சிரிப்பு மினுக்குகளால் புலன்களைக்கவரும் வேசை நடையும், பொய்யொழுக்கமும், மனிதரை வலைபோட்டுப் பிடித்து, மடக்கிப் பொருளுறுஞ்சும் வேசைபோன்ற கண்ணடிப்புகளும், "நான் அப்படிச் செய்வேன் ; செய்தேன் ; எனக்குச் சமானம் யார் ?" என்னும் வீண் அகம்பாவ ஆடம்பரப் பேச்சும் அரட்டையும் வாதமும், ஆட்களை ஆசை காட்டி. வசப்படுத்தி அடிமையாக்கி, பிறகு எல்லாம் உறிஞ்சிக்கொண்டு திவாலாக்கும் வஞ்ச நட்பும் எங்கும் வலுக்கும். (சஙு)

சச. பணத்திமிர் கொண்டோ ராலே, ஏழைகள் பாடு பட்டும்
உணத்தகு சோறில்லாமல், பசியினால் உயிர் துடிப்பார்,
நிணத்திமிர் கொண்ட ரக்கர் நீள்சமர் பெருக்கி யெங்கும்
பிணத்தினைக் குவிப்பார் ; மோகப் பேய்பிடித் தாடுவாரே.

உலகில் அரசன், அடிமை, முதலாளி, ஊழியன், செல்வன் ஏழை என்ற வேறுபாடுகள் அதிகரிக்கும், பணத்திமிர் கொண்ட செல்வரால் ஏழை எளியவர் இடுப்பொடியப் பாடுபட்டும், உண்ணப்போதிய சோறில்லாமல் பசியினால் உயிர் துடிப்பார். தசைத்திமிர் கொண்ட கலியரக்கர் உலகெங்கும் நீண்டகாலம் போர் கிளப்பி, இரத்த வெள்ளமாக்கிப் பிணமலை குவிப்பார்கள். மோகப்பேய் பிடித்தாடும் கலியரக்கர் இப்படி அட்டூழியம் செய்வர். (சச)

சரு. பஞ்சமுங் களவுங் கொள்ளைப் படைகளின் ஊழிக் கூத்தும்,
வெஞ்சமர்க் கொலையும், எங்கும் விடுதலைப் புரட்சிப் போரும்,
அஞ்சிடும் அரசர் வீழ்வும், அரசியற் சூது வாதும்
செஞ்செவே லென்ன மாற்றும் பசுவளச் செகத்தை யம்மா !

இந்த அசுர மாயம் முடிவில் ஒரு பெரும் நாசத்தில் முடியும். எங்கும் பஞ்சம் திருட்டு, கொள்ளைப்படைகளின் ஊழிக்கூத்து, தீ, கொடிய போர்க் கொலைகள், இவை பயங்கரமாக நடக்கும். ஒவ்வொரு நாடும் அசுர மாயத்திலிருந்து சுதந்தரம் பெறப் புரட்சி செய்யும். புரட்சிகளை அடக்க, அரக்கர் பெரும்போர் தொடுத்து இரத்த வெள்ளஞ் சிந்துவர். அவர்களுக்கு அஞ்சிப் பணியும் அரசர் அதோகதியாவார்; அடிமையாவார். துணிந்து எதிர்த்தவர் பலவகையான புதிய புதிய அரசுகளை நாட்டுவார். முடியரசு போய் குடியரசு, தன்னரசு, பொதுவரசு, இராணுவ அரசு, ஜனநாயகம், ஏகாதிபத்தியம் முதலிய எத்தனை விதமாக அரசுகள் நாட்டினாலும் எல்லாம் போர்முரசிற்கே தாளம் போடும். அரசியல் உலகில் பெருஞ்சூதாட்டம் நடக்கும். பலத்த வாதங்கள் நடக்கும். எல்லாம் முடிவில்

பசுவளம் நிரம்பிய இந்த அழகான இயற்கையுலகை இரத்தத்தால் செக்கச் செவேலென் ருக்கும். (சரு)

சசு. நெறியுடன் நெறிகள் மோதி, நிலத்துடன் நிலங்கள் மோதி,
வெறியுடன் வெறிகள் மோதி, வெடியுடன் வெடிகள் மோதி,
பொறியுடன் பொறிகள் மோதிப் புயலுடன் புயல்கள் மோதி,
அறிவிழந் தவலமாகி அழியுமிவ் வரக்கர் ஆட்சி.

உலகில் இவ்வாறு ஒரு பெரிய பிரளயம் உண்டாகும். அசுர பலங்களே ஒன்றுக் கொன்று போராடும். ஒருவர் செல்லும் நெறியில் பலவழிகள் வந்து மோதி வழிமறிக்கும். ஒருவர் நிலத்தைப் பறிக்க மற்ற நிலத்தவர் மோதிப் போராடுவர். மனத்திற் கொண்ட இரத்தவெறி, மண்வெறி, மற்றவர் கொண்ட பல வெறிகளுடன் போராடி மண்டையுடை யும். இவர்கள் தரை, கடல் வானத்திலிருந்து வீசும் வெடிகுண்டுகள், மற்றவர்கள் வீசும் குண்டுகளுடன் பொருதி, மக்களைச் சாம்பலாக்கும். அசுரர் செய்த பலவகை இயந்திரங் களும் ஆயுதங்களும் ஒன்றோடொன்று பொருதி உடைந்து தவிடு பொடியாகும். ஒருவர் ஆத்திரப்புயல் மற்றவர் ஆத்திரத்துடன் மோதி உலக வாழ்வென்னும் கப்பலைக் கவிழ்க்கும். இவ்வாறு இந்த ஊழிக்கூத்தில் அசுரரின் அதர்மராஜ்யம் அறிவுகெட்டு இன்னவழி செல்வதென்றியாமல், அவலமாகி மயங்கி மடிந்தழியும். (சசு)

சஎ. அத்தநி அமைதி யென்றே அலறுவார் உலக மாந்தர்,
தத்தம தாற்ற லாலே தருமத்தை நாட்ட மாட்டார்,
புத்திவந் திறைவா நீயே புகலெனப் புலம்பு வார்கள் ;
இத்தறி சுத்த னென்னும் இரவிவந் தருளு மம்மா.

அச்சமயம் உலக மக்கள் "அமைதி! அமைதி! ஐயோ, யார் அமைதியளிப்பார்!' என்று அலறுவர். பல தலைவர்கள் 'நான் நான்!' என்று கிளம்பி, தாமே உலகைத் தாங்கப் போவதுபோலப் பலவழிகளில் தொண்டு செய்வர் ; அவர்களால் தருமத்தை நிலைநாட்ட முடியாது. மீண்டும் ஜனசமுதாயம் புத்திவந்து, "மனிதனால் ஆகக்கூடியதன்று;" இறைவா நீயே வந்து காக்கவேண்டும் ; நீயே புகல்" என்று சரண்புகுவர். இச்சமயமே சுத்தன் என்னும் சூரியன் கிளம்பி இருள்போக்கி, கவலை தீர்த்து உலகிற்கு அருள் புரியும். (சஎ)

சஅ. வெறிபிடித் தலையும் கால வினைகளை மறந்தே, யோக
நெறிபிடித் தொழுகிச் சுத்த ஞாயிறு நிலவுகின்ற
குறிகொண்டு சுத்த சங்கங்கூட்டி நாம் வாழ வேண்டும்
அறிவரு ளாற்ற லெல்லாம் அதற்கென வழங்கி நாளும்.

இவ்வாறு பல வெறிகள் பிடித்தலையும் இக்கால நடப்புகளுடன், செயல்களுடன் நமக்கு எச்சம்பந்தமும் இல்லை. இவற்றை மறந்துவிடுவோம். வெறி ஆடி ஓயட்டும். நமக்கு இங்கே வேலையில்லை; நாம் யோக மார்க்கத்தைத் தீவிரமாகப்பற்றி ஒழுகி, சுத்தனாகிய சூரியன் எழுந்து விளங்குவதே நம் குறிக்கோளாக வாழ்வோம். அவன் அருட் பணிக்கே சுத்த சங்கம் கூட்டுவோம். நமது ஞானம், அருட்சுடர், யோகபலம் அனைத்தையும் அந்தச் சங்கத்திற்கே நாடோறும் வழங்குவோம். (சஅ)

சக. இங்கினித் தவயோ கங்கள் இயற்றிட வசதி யில்லை;
வெங்குலக் கலியர் நாளை விரைந்துவந் திடும்பை செய்வார்.
நங்குலம் இமய மீது நலமுறக் கூடி வாழ்ந்து,
மங்கல மைந்த னுக்கே மாண்புறத் தொண்டு செய்க!

இங்கே நாம் இனி அமைதியாகத் தவவினை செய்ய வசதி இல்லை. இதோ நாளையே கொடிய குலத்தைச் சேர்ந்த கலியரக்கர் வேகமாக வந்து துன்புறுத்தி நம்மைக் கொல்லுவர். நமது ரிஷிகுலத்திற்கு இக்காலம் உலகில் வேலையில்லை. இங்கே நமது மூச்சை வீணுக்கு வதிற் பயனில்லை. நாம் உடனே கைலாச யாத்திரை செய்வோம். இமாசலத்தில் தவம் புரிந்து நலமோங்க வாழ்வோம். உலகிற்கு மங்கலமளிக்கும் தெய்வ மைந்தனை சுத்த னுக்கே பெருமையுடன் நமது ஆத்மசக்தியால் தொண்டு செய்வோம். நமது குலம் அவ னுக்கே ஆளாகிப் பணி செய்க. (சகூ)

ரு௦. சாந்தனிவ் வாறு பேசச் சரியது சரி'யென் றுத்ம
வேந்தர்கள் ஆமோதித்து, விமலனை நோக்கி னுர்கள்.
ஏந்தலும் வணக்கஞ் சொல்லி, முனிவரின் இதயந் தன்னைக்
காந்தமின் சாரம் போலக் கவர்ந்திடும் வார்த்தை சொன்னுன்:

இவ்வாறு சாந்தன் வருங்கால நடப்பெல்லாம் பேசி முடித்து அமர்ந்ததும், தம்மை வென்றுளும் அத்யாத்ம வேந்தரான முனிவர்கள் "சரி, சாந்த பகவான் சொல்வதே சரி" யென்று ஆமோதித்தனர். உடனே சுத்தனை நோக்கி, அவன் குறிப்பறிய விரும்பினுர்கள். சுத்தன், இன்று முனிவர் தவக்கனல் பற்றிப் புது வாழ்வடைந்தான். அவனுள் புதிய ஆவேசம் எழுந்தது. காந்தமின்சாரம் கவர்ச்சியாயிருக்கும். அதற்கு எவ்வளவோ சக்தி யுண்டு. அதுபோல், முனிவர் மனத்தைக் கவர்ந்து செயல் பெறச்செய்யும் ஆவேச மொழி களைச் சுத்தன் பேசினுன். (ரு௦)

சுத்தன் திருவாக்கு

ருக. ஓம் என வேதம் ஓதிடும் பொருளைத்
தாம் எனத் தெளிந்த தவமுனி வோர்காள்,
மனத்தை வென்ற மாசிலா வீரர்காள்,
சினத்தை வென்ற தீரர்காள், வணக்கம்!

ரு. காமம் வெகுளி கலக்க மின்றி,
தாமதம் ராசதம் சத்துவ மாகிய
முக்குணங் கடந்த முத்தர்காள் வணக்கம்!
சிக்கற வாழும் சித்தர்காள் வணக்கம்!
மின்விளக் கணியில் விளங்கொரு சுடர்போல்,

க௦. பன்மதத் துள்ளும் பரம்பொருள் ஒன்றெனத்
தேர்ந்து சமரசந் தெளிந்த காட்சியீர்,
சேர்ந்து வாழுந் திறமை யறிவீர்,
அருணச் சாந்தமும் ஆத்தும சக்தியும்,
கருணை யுள்ளமுங் காட்டி யுலகெலாம்,

† இந்த அகவல் எளிய நடையிலேயே யிருப்பதால் கருத்துரை தேவையில்லை. இதைத் தோடி ராகத்தில் பாடலாம்.

இன்புற நோற்கும் அன்புச் சுடர்காள் !
பன்மையில் ஒருமையே பார்க்கும் யோகிகாள்,
இருவினைக் கட்டை யெற்றி யெறிந்து,
செருவினை யில்லாக் குருமர புடையீர் !
சூரியன் போலத் துலங்குஞ் சாட்சியாய்ப்

பார்வினை யாட்டைப் பார்க்கும் புலவீர்,
இயற்கை யுலகில் இறைவனைக் கண்டு
மயக்கற வுள்ளே வாழுந் துறவீர்,
நீண்ட தவக்கனல் ஈண்டெனுள் ஊற்றி
ஆண்டுகொண் டருளிய மாண்டகு பெரியீர்,

இன்றே யென்னை நன்றுநான் அறிந்தேன் ;
இன்றே யென்கடன் இன்னதென் றறிந்தேன்,
இன்றே யிறைவன் என்னுள் எழுந்து,
நன்றே செய்திறல் ஒன்றை யளித்தான்.
இனியென் பேச்செலாம் இறைவன் பேச்சே,

இனியென் செயலெலாம் இறைவன் செயலே.
நானென் பதுவும், நாடென் பதுவும்,
ஊனென் பதுவும், உயிரென் பதுவும்,
எல்லாம் அவனே, என்னையா ளுடைய
வல்லா னுனக்கே வணக்கம் வணக்கம் !

அவனே புகலென் றடைந்த முனிவர்காள்,
அவனே நமக்கினி அருள்வழி காட்டுவான்.
எப்படி இறைவன் எங்கே யுய்ப்பான்,
அப்படி யவன்வழி அடியேன் செல்வேன்.
அவ்வழி நீவிர் அஞ்சா தடைமின்,

செவ்வழி யதுவே, தீதறு நல்லீர் !
சாதுவா யிருந்து தவம்வளர் உமக்கும்,
தீது செய்யச் செருபடை கொண்டு,
செற்ற கயவரைத் தெய்வமே யின்று
நிற்கு நிலையற நீக்கிய தறிவீர்.

கொன்றுயிர் குடிக்குங் கொடியரை யெதிர்த்து,
நின்றது நாமே ; வென்றது தெய்வம்.
நடந்தது நடந்தது ; நடப்பதைப் பேசுவோம்.
கடந்திட வேண்டுங் கர்டுகள் பலவாம்;
சுயநலக் கலியர் தொடங்கிய நாடகம்,

பயங்கரப் படலமாய்ப் படரும் உலகெலாம்.
இரத்தச் சுருள்கள் இறுமாந் தவிழும்;
உரத்த படைவலி உலகை நடுக்கும்.
மண்ணிலுங் கடலிலும், விண்ணிலும் அரக்கர்
எண்ணவும் அஞ்சும் இகல்வினைப் பார்கள்.

சத்திய மறிந்த சாந்த முனிவர்,
இத்தினஞ் சொன்னவை யெல்லாம் நிகழும் ;
நமது புண்ணிய நாட்டு மக்களும்
தமது தருமந் தவிர்ந்து வீழ்வார்.
சாதி சமய சாத்திர கோத்திர

வாதமும் புத்தி பேதமும் பொறாமையும்
புயலெனக் கிளம்பும் போர்முர சடித்தே ;
அயலவர் நாட்டை அபக்கென விழுங்குவர்.
நிறத்திமிர், நிலத்திமிர், மறத்திமிர் வலுத்தே,
அறத்தினைப் பழிக்கும் அழிவினை புரியும்.

ஒற்றுமை ஒருமையென்(று) உதடுகள் சும்மா
வெற்றுரை பேசும், வேற்றுமை பெருகும் ;
உட்சினம் வைத்தே உறவுகள் பகட்டும்.
கட்சிகள் பெருகிக் கலகக் காடாம்.
பயிற்றா துள்ளம் பாழ்படு மாந்தர்

வயிற்றுப் பலியாய் வாழ்வை வழங்குவார்.
ஒருவர் சோற்றை ஒருவர் கெடுப்பார் ;
ஒருவர் சொத்தை ஒருவர் திருடுவார் ;
ஒருவர் உரிமையை ஒருவர் அடைவார்,
ஒருவர் வாழ்வை ஒருவர் கெடுப்பார்.

காயிதப் போரும், கருணையில் லாமல்
ஆயுதப் போரும், அரசியற் சூதும்,
சாதிப் போரும், சமயப் போரும்,
வேதப் போரும், வேலைப் போரும்,
வீட்டுப் போரும், வீதிப் போரும்,

நாட்டுப் போரும், ஞாலப் போரும்,
இரக்கமில் லாமல், உறக்கமில் லாமல்,
அரக்கர் செய்யும் அசுரப் போராம்.
எங்கும் புரட்சி, எங்கும் போர்ப்புயல்,
எங்கும் வறுமை, எங்கும் கொள்ளை,

எங்கும் கொலைகள், எங்கும் பயங்கரம்,
எங்கும் புண்ணீர், எங்கும் கண்ணீர்,
நினைக்க நினைக்க நெஞ்சம் நடுங்கும்,
அனைத்தும் அரக்கர் அழிச்சாட் டியங்களே.
இத்தகைத் துன்பம் ஏனெனக் கேண்மின் :—

பித்துப் பிடித்த பேய்மனத் தாலே,
புத்தி கெட்டுச் சுத்தான் மாதரும்
சக்தி கெட்டுச் சமரஸங் கெட்டு,
நாசஞ் செய்யும் நானென தென்றும்
பாசஞ் சுற்றிப் பண்பினை யிழந்து,

கட்டுக் கடங்காக் காட்டு மிராண்டிகள்,
கொட்ட மடிப்பார் குவலய மெங்குமே.
உயிர்வதை யாலே யுண்டு கொழுப்பார்,
உயிர்க்கொலை யாலே யுலகை யெல்லாம்
கொலைக்கள மாக்கிக் கொற்றவர் யாமெனத்

தலைதலை கிளம்பித் தடியர சியற்றுவார்.
வேகப் படைகள், விண்வெறி பிடித்த
மோகப் படைகள் முன்முன் சென்று
முடியர சுகளைக் குடியர சாக்கும்;
குடியர சுகளைக் கொலையர சாக்கும்.

ஆழிப் புயல்போல் ஆட்சிகள் கிளம்பி
ஊழிப் புயலாய்ச் சூழுமிவ் வுலகை!
மனத்தைப் பிடித்த தினவுந் தனித்தனி
இனத்தைப் பிடித்த கனத்த செருக்கும்,
படர்தரும் பஞ்சமா பாதகக் கூத்தும்

இடர்தரும் போரும் இயற்கை பொருமல்,
ஆண்டவ னிடத்தில் அலறிய பயனாய்,
ஈண்டவன் புரியும் இரண சிகிச்சையே.
புன்மை வரினும், புகழே வரினும்,
நன்மைக் கென்றே நடப்பார் மேலோர்.

குண்டுபி ரங்கி கொண்டுபோர் புரிவோர்
குண்டுபி ரங்கி கொண்டே யழிவார்.
வாள்வீச் சினையோர் வாள்வீச் செதிர்க்கும்,
தோள்வரை தனையோர் தோள்வரை தாக்கும்.
தாக்கித் தாக்கித் தகர்த்துத் தகர்ந்தே

ஊக்கமாய் இடர்கள் ஒழிந்து போகும்.
புயலும் இடியும் பூகம் பங்களும்,
இயற்கையி னெழுந்தே யியங்குதல் போல,
நகார மடித்து நானெனக் கிளம்பும்,
விகார மனத்தில் விளைவன போர்கள்,

மனிதனைப் பிடித்த மமதை நோயை
இனிதுறக் கெடுக்கவே இவையெலாங் கிளரும்.
பண்டைக் கசண்டுகள் பாழ்பட் டொழியும்;
சண்டைக் கப்புறம் சகத்திற் கெல்லாம்
புதிய வாழ்வைப் பொலிவுற நாட்டவே

அதிமனி தர்கள் அருளுடன் வருவார்.
இருள்வழி யேகி யிடர்ப்படும் உலகம்,
அருள்வழிச் சென்றே அமைதி பெறுமே;
அறிவுந் திருவும், அன்பும், வீரமும்,
அறமுந் தவமும், ஆத்தும சக்தியும்,

உள்ளொற் றுமையும், உலகொற் றுமையும்,
கள்ள மற்ற கருணை யொழுக்கமும்,
இறைவனோ டிணையும் இயற்கை யின்பமும்,
குறைகளை வென்ற நிறைகுணப் பண்பும்,
தாக சோக மோகங் கடந்தே,

யோகமும் சுத்த போகமும் பொலியும்.
தெய்வ வாழ்வைத் திருவரு ளாலே
வையக மீது வளமுற நாட்டலே
கடமை நமக்காம் ; கால சக்தி,
நடத்து கின்ற நாடகந் தன்னில்,

வரையிலாக் காட்சிகள் வளர்ந்து செல்லும் ;
நிரையை யுயர்த்தித் திருவரு ளிச்சை
மணி யடித்ததும், மாதவக் கன லுடன்
அணியணி யாகப் பணிசெய வருவோம்.
அப்போ திறைவன் அன்பரை நடத்துவான் ;

இப்போ ததனை யியம்புதல் அரிதாம்.
கால சக்கரம் கடவுளை நோக்கும்
காலமே நமது காலம தாகும்.
அதுவரை நாமெலாம் அடக்க மாகப்
பொதுநலம் புரியப் பூரண சக்தியை

வளர்ப்போம் ; இமாலய வரைமிசை யிருந்தே.
உளப்போர் வென்ற உண்மை வீரர்காள் !
அவம்புரி யரக்கர் ஆற்றலை வீழ்த்தத்
தவம்புரி நெறியே சக்தி யளிப்பதாம்.
செல்வீர் முனிவர்காள், சிவகை லைக்கு.

வெல்வீர் உங்கள் விருப்ப மெல்லாம்
புரியத் தக்கன புரிந்தபின், யானும்
உரியகா லத்தில் உம்மிடம் வருவேன்.
சித்தி நகரைச் சிரழித் திடவே
இத்ததிக் கலியன் இறுமாந் தெழுந்தான்.

என்னைக் கொல்லவும், எந்தையைக் கொல்லவும்,
அன்னையை யழிக்கவும் ஆத்திரங் கொண்டான்.
வெறிமிகு படையால் வெஞ்சமர் தொடுப்பான்.
முறியடித் தவனை, முன்னே யெனது
நாட்டையும் வீட்டையும் நலமுற நாட்டிச்

சேட்டை செய்யும் தீயரை யொடுக்கி,
என்னிடம் உயிர்வைத் திருக்கும் தந்தையை,
இன்னிய பணியால் இன்ப முறுத்தியே
எந்தாய் இந்திரை இசைந்தெனக் காணை
தந்ததும் இமாலயஞ் சார்வேன், முனிவீர்.

கடமை பெரிது ; காலமோ சிறிது.
கடவுள் அளித்த காலந் தன்னை
அவனை யறியவும், அருட்பணி புரியவும்,
தவக்கள னாக்கித் தழைப்போம் ; பெரியீர்,
கத்தியைத் தீட்டும் கலியொழிந் தினிய

சத்திய யுகமே தழைக்கத் தழைப்போம்.
சுத்தன் சித்தன், சுதந்தரப் பெருமான்,
அத்தன், எம்மை யாண்டவன் அருளால்,
அவன்பெயர் தாங்கும் அடியேன் கொண்ட
நவம்பெறு கொள்கை நலம்பெற நாளும்

சிவம்பெறு நல்லீர், தெய்வப் புலவீர்,
தவம்பெறு சித்தி தந்தருள் வீரே.
அக்கா லத்தின் அரக்கரைக் காட்டிலும்
இக்கா லத்தின் அரக்கர் வலியரே;
கல்வியும், கணக்கும், கலையும் தொழிலும்

செல்வச் செழிப்பும் தீரமும் வேண்டும்.
†உடையணி வேண்டும், உலகம் மதிக்கும்
படையணி வேண்டும், பயன்பெறு தவத்தால்
ஆத்தும சக்தி யடைந்திட வேண்டும்.
தீத்திரள் போலே சித்சக்தி வேண்டும்.

இராமனும் சிவாஜியும் இராம தாஸனும்,
ஒரேதிரு மேனியில் ஒன்றிட வேண்டும்.
பத்தியுங் கருமமும் பரம ஞானமும்,
முத்தியும் வீர முயற்சியும் சேர்ந்த
புதிய வாழ்வு பொலிந்திட வேண்டும்.

முதிய ஞானமும், முன்னேற்ற வீறும்,
சாந்தமும், சிவமும், சச்சிதா னந்தமும்,
சேர்ந்த வாழ்வே தெய்விக வாழ்வாம்.
பக்குவ மறிந்து பரமன் அருளால்
இக்கருத் தென்னுள் இலகிய தின்றே.

நாட்டி னியல்பை நயமுற வெனக்குக்
காட்டியின் றெழுந்த கலியர் போரில்
முன்சென் றிகலை முடித்த சித்திமான்
என்குல மந்திரி யிசைபெற வாழ்க!
சாரமாங் கதைகளும் சாத்திர நுட்பமும்,

பாரி னியல்பும் பரிந்தெனக் கருளி,
தீரமும், பக்தியும் திருவுறத் தூண்டிய
பூரண சாந்தன் பொன்னடி போற்றி!
என்னைப் பயிற்றுவ தினியவன் கடனே.
முன் இனிச் செல்வோம் முனிவர்காள்; காலை

† உடையணி = (Equipments)

உகடு. சித்தியி லிருப்போம், சேமமா யாங்கே
சுத்த சங்கந் தொடங்கிய பின்னர்,
சிவகை லாயம் சேர்ந்துநிம் மதியாய்த்
தவவினை தொடர்வீர் ; சகமெலாம் வாழவே,
அறம்பொரு ளின்பம் அறிவருட் சக்தி

உ௨௦. நிரம்பிநாம் வாழப் பரம்பொருள் துணையே!
'சுத்தமும் சக்தியும் சுத்த சக்தியும். (ருக)

முனிவர் போற்றல்

ருஉ. கேட்டனர் முனிவர் சுத்தன் கிளத்திய உண்மை யெல்லாம்.
" வாட்டமொன் றில்லை யிந்த வரம்பெற்ற வேந்த னாலே;
நாட்டிடர் நீங்கு" மென்றார். நாமினி இந்த வீரன்
காட்டிய வழியைப் பற்றிக் காணுவோம் இன்ப மென்றார்.

சுத்தன் பேசிய ஆவேச உண்மையைக் கேட்டு முனிவர் பரமானந்தமெய்தினர். "இனி நமக்குக் கவலையில்லை, விசனமில்லை. இந்த வரம்பெற்ற தெய்விக மன்னனான சுத்தனாலே நம் நாட்டிற்கு வந்த இடர்கள் தீரும்; நமக்கு இந்த வீரர் காட்டிய வழியைப் பின்பற்றுதலே இனிக்கடமை; அதனால் இன்பமெய்துவோம்" என்றனர். (ருஉ)

சுத்தன் தண்டகாரண்யத்தை இராணுவ நிலயமாக்கிப் புறப்படல்

ருந. கொண்டநங் கொள்கை வென்றே குருகுலங் காண்போ மிங்கே ;
தண்டக வனத்தி லின்றெந் தானைகள் பயில்க வென்றே,
அண்டிய முனிவரோடும் அமைச்சொடுந் தேரி லேறிப்
பண்டிசை முழங்கச் சுத்தன் சித்தியைப் பார்க்கப் போனான்.

சுத்தன் இனிவரும் நிகழ்ச்சிகளைச் சிந்தித்தான்: இனிப் பஞ்சவடியிலோ தண்டகாரண்யத்திலோ தவம் நடக்காது. கலியன் தொல்லையே அதிகமாகும். இங்கே கலியனை எதிர்க்கப் பெரியசேனாபலம் நிறுத்தி, இராணுவப்பயிற்சிச்சாலை யமைக்கலாம். நம் கொள்கையெல்லாம் நிறைவேறிய பிறகு, இங்கே நல்லமுறையில் குருகுலம் அமைத்து, பிரமசாரிகளுக்குத் தவமும் கல்வியும் தரலாம் என்று சொன்னான். சித்திமான் அவ்வாறே தண்டகாரண்யத்தை இராணுவ நிலயமாக்கினான். சுத்தன் தன்னைச் சார்ந்த முனிவருடனும் அமைச்சனுடனும் தேரில் ஏறி, பழமையான வேதகோஷங்கள் முழங்க, சித்திமாநகரை நோக்கிச் சென்றான். (ருந)

ருச. துயரிடர்க் காட்டை யெல்லாந் தூள்பட நூறி, வாழ்வின்
உயர் நல மோங்க, நாளை யுலகினில் யோகசித்திப்
பயிர்செழித் தோங்கத் தீயர் பந்தனை நீங்க வேண்டி,
அயர்வறத் தொண்டு செய்யும் அருந்தவ முனிவர் வாழ்க!

துயரும் இடரும் தரும் பகைக்காட்டையெல்லாம் தூள்பட அழித்து, மனித வாழ்க்கையின் உயர்ந்த சுத்தான்ம சித்தியான நன்மை ஓங்க, நாளைவரும் உலகில் யோக சித்தியாகிற பயிர் செழித்தோங்க, தீயபகைவர் பூட்டிய அடிமைத்தளைகள் நீங்கவேண்டி, அயர்வில்லாமல் தபோபலத்தால் பொதுநலப் பணிபுரியும் அரிய தவமுனிவர் வாழ்க! (ருச)

ருரு. ஆழிசூழ் உலக மெல்லாம் அறநெறி யோங்கி நன்மை
சூழுக! சுத்த ஜோதி, துலங்குக! மாந்த ரெல்லாம்
தோழமை பூண்டு வீர சுதந்தர ராக நீடு
வாழிய வென்றெல் லாரும் வளநக ரடைந்தார் மாதோ!

"கடல் சூழ்ந்த இவ்வுலகமெல்லாம் அறவழி ஓங்கிச் செழிக்கட்டும். எங்கும் தீமை ஒழிந்து, நன்மைகளே சூழட்டும். சுத்தஜோதி உள்ளந்தோறும் பாய்ந்து உலகவாழ்வில் விளங்கட்டும். மனித ஜாதியெல்லாம் ஆன்மநேயம் பூண்டு வீரசுதந்தரராகத் தலை நிமிர்ந்து நடந்து நீடூழி வாழட்டும்" என்று இந்தப் பிரயாணக் கூட்டத்தார் அனைவரும் இசைத்து வளம்பெறும் சித்திமாநகரை அடைந்தனர். (ருரு)

உக. அபயமளித்த படலம் முற்றிற்று.

உச. அரசவைப் படலம்

௧. தங்க மாமலை தவழ்ந்திடுந் தரளவெண் மதிபோல்,
துங்க வெண்குடை துலங்கரி யணைமிசை யரசன்,
இங்கி லங்கிடும் இந்திரன் எனக்கொலு விருந்தான் ;
மங்க லத்திரு வரசியும் இருந்திட மருங்கே!

பொன்மலை மேல் முத்துப்போன்ற வெண்மதி தவழ்ந்தால் எப்படியிருக்கும்? அது போல், பொன்னுலான உயர்ந்த அரியணைமேல் சந்திரவட்டக்குடை விளங்குகிறது. அதன் கீழ், இங்கே இவ்வுலகில் வந்துவிளங்கும் இந்திரன்போல, சத்தியராஜன், தனது மங்கலத் திருவான அரசி இந்திரையும் பக்கத்தில் இருக்க, சிறப்பாகக் கொலுவீற்றிருந்தான். (௧)

௨. சித்தி மாநகர்ச் செல்வரும் புலவருஞ் செறிய
முத்தர் போற்றிடும் பாரத முனியரு கிருக்க,
வித்தகர் புகழ் அமைச்சுடன் வேந்தவை யிருந்தான்,
சத்தியன், புவி தாங்கிடுந் தருமமே யன்னான்.

உலகைத் தாங்கும் தருமதேவதையே போன்ற சத்தியராஜன், அறிவாளிகள் போற்றும் தனது மந்திரிகளுடன் அரசவையில் கொலுவீற்றிருந்தான். அவனருகே ஜீவன் முக்தர் போற்றும் பாரத முனிவன் விளங்கினான். சித்திமாநகரச் செல்வரும் புலவர்களும் சுற்றிலும் அவையிருந்தனர். (௨)

கடவுள் வணக்கம்

௩. மகர யாழ்குழல் மத்தளந் தழுவிடக் கலையின்
சிகர மேறிய திருவருட் சிந்தைகொள் புலவர்,
அகர மென்னவே அகிலத்திற் காதியாம் பொருளை,
'பகவ னேசுப மருளெ'னப் பரவினர் பணிந்தே.

சபை, கடவுள் வணக்கத்துடன் தொடங்குகிறது. எழுத்துக்களுக்கெல்லாம் முதலானது, உயிர்போன்றது அகரம். அதுபோல் எல்லா உலகங்களுக்கும் உயிர்களுக்கும் ஆதிப்பரம்பொருள், சுத்தபரமாத்மன். அவனை, கலையின் சிகரமேறிய திருவருட் சிந்தை கொண்ட புண்ணியப் புலவர்மணிகள், மகரயாழும் புல்லாங்குழலும் மத்தளத்தைத் தழுவி இசைக்க, "பகவானே, எங்கள் மன்னனுக்கும் மக்களுக்கும் சுபமங்கள வாழ்வருள்" என்று வணங்கிப் பணிந்தனர். (௩)

௪. ஆதி சக்தியை, அகண்டசிற் சக்தியை, ஞான
ஜோதி சக்தியைச் சுதந்தர சக்தியை, ஐந்து
பூத சக்தியைப் பரப்பிநீள் புவியினில் ஆடும்
வேத வுட்பொரு ளாகிய விமலனே போற்றி!

விமலனே, சுத்தபரமாத்மனே, நீயே வேதங்களின் உட்பொருள். நீ இருந்தபடி நிர்விகாரியாயிருக்கிறாய். உனது ஆதி பராசக்தியான அகண்ட சிற்சக்தியை, ஞான ஜோதி சக்தியை, எதிலும் கட்டுப்படாமல் நித்திய முத்திபெற்ற சுதந்தர சக்தியை, பஞ்சபூத

சக்தியைப் பரப்பி, பரந்துவிரிந்த உலகில் ஐந்தொழில்புரிந்து விளையாடுகிறாய். உன்னருள் போற்றி! (ச)

ரு. பொங்கு நல்லறப் புகழுடன் புனிதமெய் வாழ்வும்,
சிங்க நெஞ்சமும், வீரமும், சிரமுயர் நடையும்,
துங்க மாதவர் ஆசியும், தொல்புவி வாழ்த்தும்,
எங்க ளுக்கினி ஈந்தருள் இறைவனே போற்றி!

இறைவனே, எங்களுக்கெல்லாம் மேன்மேலும் பொங்கிவளரும் நல்ல அறத்தை நாட்டும் புகழும், பரிசுத்தமான யோகபோக வாழ்வும் சிங்கம்போன்ற தைரியமான உள்ளமும், வீரமும், உலகின் முன் சிரத்தை உயர்த்தி நடக்கும் மாண்புள்ள ஒழுக்கமும், உன்னதமான சித்திபெற்ற தவமுனிவர் ஆசியும், தொல்புவி மக்கள் வாழ்த்தும்தந் தருளுவாயாக. (ரு)

சா. பல்லி யங்களு முழங்கின, பலகலைப் புலவர்
வல்ல பங்களை வளமுற விளக்கியே தக்க
செல்வ மெய்தினர், செய்வன செய்திட வாங்கே,
சொல்லி லாச்சுறு சுறுப்புணர் வெழுந்தது துடித்தே.

பலவாத்தியங்கள் முழங்கின. பல கலைவாணர்கள் தங்கள் திறமைகளை நன்றாக விளக்கித் தகுந்த செல்வப் பரிசில்களைப் பெற்றனர். பிறகு, அச்சபையில் அன்று செய்ய வேண்டிய காரியங்களை நிறைவேற்ற, வீண்பேச்சில்லாத ஒரு சுறுசுறுப்பான காரியவுணர்ச்சி இயல்பாக எழுந்தது. (சா)

எ. கால் அமர்ந்தது. கண்ணிய மன்னவை அனைத்தும்,
சீல வாணகை திகழுறச் செங்கண்ணால் அளந்தே,
கோல மாமுகம் குலந்தரும் பெருமையாற் குலுங்க,
ஞால மன்னனும் அமைச்சரை விளித்தனன் நயந்தே.

காற்றும் அடங்கியது; எங்கும் நிச்சப்தம். அந்தக் கண்ணியமான, மாண்புள்ள ராஜசபை முழுதும், அரசன் திருமுகத்தையே நோக்கியது. மன்னன் திருமுகம் தனது குலத்திற்குரிய பெருமையால் கம்பீரமாயிருந்தது. அதில் ஒரு புனிதமான புன்னகை மின்னிட்டது. புவியரசனான சத்தியன், தனது செந்தாமரைக்கண்ணை நாற்புறமும் ஓட்டிச் சபையை ஒரு பார்வைபார்த்து அளந்து, மந்திரிகளை நோக்கி நயமாகப் பேசினான் :— (எ)

அ. மன்னுயிர்க் குயி ராகிய மன்னவன் அருளால்,
அன்னவன் பணி யாகவே அறச்செங்கோல் பிடித்தேன்.
என்னை என்னர சாட்சியை யினிதுற மதிக்கும்
நன்மையிர், பொது நன்மையைத் தாங்கிடுந் தகையிர்!

உலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் உயிராயிருக்கும் மன்னவன், ஆண்டவன்; அவன் அடியான் யான். அவன் அருளாலேதான் அவன் சேவையாக அறங்காக்க இச்செங்கோலைப் பிடித்தேன். என்னையும் எனது அரசாட்சியையும் இனிதுற ஏற்று மதிக்கும், நல்ல தன்மையுடைய குடிகாள், நான் செய்யும் பொதுநலத்தைத் தாங்கித் தாமும் பொதுநலம் செய்யும் துணைவர்காள், அமைச்சர்காள்! (அ)

௯. தக்க கல்வியும், ஒழுக்கமும், தகுந்தநற் றொழிலும்,
பக்குவப் பயிர் வளமையும், பண்புள திருவும்,
சிக்க லற்றவொற் றுமையுடன் செறிந்துநம் அருமை
மக்கள் யாவரும் வாழ்வகை வாழுவ தறிவோம்.

எனது மக்கள், குடிகள் அனைவரும், தகுந்த கல்வியும், கலையும், அவரவர் குடும்பத்திற்கும் சமுதாய நலத்திற்கும் ஏற்ற தொழிலும், பருவத்திற்கேற்ற பயிர்வளமும், நல்ல வழியில் பண்புடன் ஈட்டிய செல்வமும், இல்லறத்திருவும், சாதிசமயச் சிக்கலில்லாமல் உள்ளத்தில் ஊன்றிய ஒற்றுமையும் கொண்டு, எல்லாரும் மனமொன்றி வாழும் முறைப்படி வாழ்கின்றாரா என்பதை மந்திரியால் அறிவோம். (௯)

மந்திரி

௰. வணக்கம் வேந்தநல் வளமையும், வீரமும் அன்பும்,
குணக்க மற்றநற் கொள்கையுங் கல்வியுந் தொழிலும்,
பிணக்க மற்றுள ஒருமையும், பிரிவறு திருவும்,
இணக்க முற்றுன தின்னுயிர்க் குடிகளங் கிருப்பார்.

பொதுநல மந்திரி பதிற்சொல்லுகிறான் :—மன்னவா, வணக்கம். உனது இனிய உயிரைப்போன்ற குடிகள், எல்லாவிதத்திலும் சீர்செழித்துவாழ்கின்றனர். அவர்களுக்கு நல்ல பயிர் வளங்கள் உள்ளன. பகைவரை எதிர்க்க வீரம் உள்ளது; தியாகம் உள்ளது. உன்னிடமும், நாட்டிடமும் அன்புள்ளது. கோடாத நல்ல கொள்கையுள்ளது. உயர்ந்த இலட்சியத்திற்காக ஒவ்வொருவரும் வாழுகின்றனர். எல்லாருக்கும் கல்வியறிவும், பிழைப்பிற்கேற்ற தொழிலும் உள்ளன. ஒருவருடன் ஒருவர் மனங்கசக்காமல், யாரையும் வெறுக்காமல், உள்ளத்தில் நல்ல ஒற்றுமையும் ஏகாக்கிரமும் உள்ளன. தம்மை என்றும் பிரியாத செல்வத்திருவுள்ளது. வறுமையின்றி எல்லாரும் வாழுகிறார்கள். மேற்சொன்ன நலங்களெல்லாம் அவர்களுடன் இணக்கமுற்றிருக்கின்றன. (௰)

௧௧. தாயுந் தந்தையுந் தமயனு நீயென மதிப்பார் ;
கோயி லாகவுன் குடைநிழ லரசையே குறிப்பார் ;
நேய ராகவுன் னிசையொளி நிலவிட வாழுந்
தூயரே யுனைத் துதித்திடுந் தொண்டராங் குடிகள்.

அரசே, குடிகள் உன்னைத் துதிக்கின்றனர். உனது பணிசெய்யும் தொண்டராயிருக்கின்றனர் ; தாய் தந்தை, அண்ணன் அனைவரும் நீயே யெனக்கருதுகின்றனர் ; உன் குடைநிழலில் ஓங்கும் அரசைத்தமது திருப்பணிக்கும் ஈடேற்றத்திற்கும் கர்மஞானபக்தி சாதனத்திற்கும் ஏற்ற கோயிலாகக் கருதுகின்றனர்; மாசற்ற நண்பராக அன்புரிமையுடன் உனது புகழொளி எங்கும் நிலவவே தியாகபுத்தியுடன் வாழ்கின்றனர். (௧௧)

சத்தியன்

௧௨. இனிது நும்முரை. என்னருங் குடிகளின் சேமம்,
எனது சேமமென் றியன்றதை இயற்றினன் இயல்பாய்.
தனது நோயினைத் தவிர்ப்பது போலவே, மக்கள்
மனது ளேமறை குறையையு மாற்றிட முயன்றேன்.

நீங்கள் குடிகளின் மகிழ்வைப்பற்றிச் சொன்ன சொற்கள் எனக்கு மிகவும் இனிதாயிருந்தன. எனது அருமைக் குடிகளின் சேமமே, நலமே, எனது நலம், என் பாதுகாப்பு, என்று கருதி எனக்கு முடிந்ததை இயல்பாக, எவ்விதமான ஆடம்பரமும் இல்லாமற் செய்தேன். ஒருவன் தனக்கு வந்த பிணியைத் தகுந்த மருந்துண்டு நீக்கிக்கொள்வதுபோலவே, குடிகளின் மனத்தில் மறைந்த குறைகளையும் துயர்களையும் கண்டு பிடித்து மாற்ற முயன்றேன். (கஉ)

கங. உண்ணும் போதிலும், உறங்கிடும் போதிலும், பூசை
பண்ணும் போதிலும், பாரத நாட்டுடை நலமே
எண்ணு கின்றனன்; இறைவனை யிறைஞ்சிநிற் கின்றேன்.
கண்ணுங் காவலு மாயிதை காக்கின்றேன்......அறிவீர்.

நான் உண்ணும்போதும், உறங்கும்போதும், தேவாராதனம் செய்யும்போதும் இந்தப் பாரதநாட்டின் நன்மையே எண்ணுகிறேன். இது இன்புறவே இறைவனை வணங்குகிறேன். இந்த நாட்டைப் பகைவர் அணுகாமல் கண்ணுங் காவலுமாயிருந்து அமைதியைக் காக்கின்றேன். (கங)

கச. இவ்வகை யிமை யிரண்டென நாட்டினைக் காத்தும்,
ஒவ்வறுஞ் சிலர் உட்பகை யெழுந்ததின் றுண்மை,
அவ்வியந் தரும் அரக்கரின் றகங்கரித் தாங்கே
தெவ்வி னைதொடர்ந் தாரதைத் தெரிகிலார் யாரே ?

இவ்வாறு நானும் என் அரசியும் இரண்டு இமைகள்போலே இந்த நாட்டைக் காக்கிறோம். அப்படியிருந்தும், நமது நலத்திற்கும் நாட்டு மானத்திற்கும் ஒவ்வாத சில துட்டரின் உட்பகை எழுந்து, இன்று தலைவிரித்தாடுவது உண்மை. பொருமை (அவ்வியம்) என்ற அசுரன் அகம்பாவங்கொண்டு அங்கே, கலிநகரில் போர்வினை (தெவ்வினை) தொடுத்தான். அதை அறியாதவர் இங்கே யார் ? யாருமில்லை. (கச)

கரு. கற்ற கல்வியோ டனுபவங் கண்டிட வேண்டி,
இற்றை நாளினில் இளவர சிப்பெரு நாட்டைச்
சுற்றித் தண்டகம் வந்ததும், சூழ்ந்தவெம் போரைப்
பற்றி யொற்றர்கள் பகர்ந்ததைப் பழுதற வறிந்தோம்.

கற்ற கல்வியுடன் உலகானுபவமும் கண்டு அரசியல் அறிவுபெறவேண்டியே இந்நாளில் நம் இளவரசனுன சுத்தன் நாட்டைச் சுற்றித் தண்டகாரண்ய முனிவரைக் காண வந்தான். அங்கே கலியரக்கர் சூழ்ந்து தொடுத்த கொடியபோரைப்பற்றி ஒற்றர் சொன்னதைப் பழுதில்லாமல் உண்மையாக நாம் அறிந்தோம். (கரு)

கசு. ஒரு மகன், என துயிரினும் அரியவன், என்பின்
வரு மகன், இந்த வையத்திற் கினியன வெல்லாந்
தரு மகன், இன்று தருமப்போர் தருவதை யெண்ணிப்
பெருமை கொண்டனன் பெற்றதன் பயனையும் பெற்றேன்.

என் ஒரே பிள்ளை. என் உயிரினும் அவன் அரியவன். எனக்குப் பிறகு இந்த நாட்டையாள வரும் உங்கள் மன்னன். இந்த உலகிற்கு இனிய நன்மைகளையெல்லாம் தரக் கூடியவன். அப்படிப்பட்ட என் மகனை அக்கலியரக்கர் சூழ்ந்தனர். அவன் தங்கிய பஞ்ச

வடியில் இருந்த முனிவரைக் கொல்ல முயன்றனர். என் மகன் தன் உயிருக்கஞ்சாமல், தருமங்காக்க, முனிவரைக்காக்க இன்று போர்தந்து எதிரிகளை நடுக்குகிறுன். அவன் உயிருக்கெங்கு ஆபத்துவருமோ என்று நான் அஞ்சவில்லை. உயிரினும் பெரிதாக அவன் தனக்குரிய வீரக்கடமையைச் செய்கிருன். அதிற் பெருமை கொண்டேன். ஒரு மகனைப் பெற்ற பயனை இன்றே பெற்றேன். (கசு)

கஎ. புத்திமான், புவி போற்றிடும் புலமையிற் சிறந்த
சித்தி மானுடன் சென்றதே வென்றதாம் ; எனினும்,
இத்தினம் இகல் வலுத்ததென் றியம்பினர் ஒற்றர் ;
சுத்த னுக்கொரு படையணி துரிதமாய் விடுவோம் !

மகா புத்திமான், உலகைத் தக்க முறையில் அமைதியாகக் காத்திடும் திறமையுள்ள சித்திமானுடன் சென்றதே, சுத்தன் எல்லா இடர்களையும் வென்றதாகும். என்ருலும், இன்று ஒற்றர் பஞ்சவடியில் போர் பலமாயிருக்கிறது என்றனர். ஆதலால் சுத்தனுக்கு ஒரு சேனையை அணிவகுத்து விரைவாக அனுப்புவோம். (கஎ)

விஜயன்

கஅ. போரெப் போதெனப் புயத்தின வெடுத்தநம் படைகள்,
நேரிப் போதவன் சென்றிட நின்றுள தென்றே,
வீரப் போர்வர விம்மிடும் விஜயனு மாங்கே
நேரப் பேசுழி நீண்முர சார்த்ததைக் கேட்டார்.

வீரப்போர் வந்தது என்ருல், தோள் விம்மிக்களிகூத்தாடும் சேனுபதியான விஜயன், 'போர் எப்போது வரும், எப்போது வரும்' என்று தோள்கள் தினவெடுத்தலையும் நமது சேனைகள் இப்போது நேராக அங்கே பஞ்சவடிக்குச் செல்ல, இதோ தயாராக நிற்கின்றன' என்று மன்னனைத் தாங்கி நேராகப்பேசினுன். அச்சமயம் ஒரு நீண்ட முரசொலி ஆர்த்ததைச் சபையினர் கேட்டனர். (கஅ)

கக. என்ன வென்னுமுன், வெற்றியென் றெதிர்ந்தநற் றூதர்
"மன்ன வுன்மகன் மந்திரி யுடன்வரு கின்ருன்.
அன்ன வன்முனி கணங்களின் ஆசிசூழ்ந் துற்ருன்.
முன்ன ருன்னடி பணிந்திட முந்துவா" னென்ருர்.

"அஃது என்ன என்ன" என்று அரசன் வியப்புடன் கேட்குமுன்பே, நல்ல தூதர்கள் எதிர்ந்து, "அரசே வெற்றிச் செய்தி கொண்டுவந்தோம். உன் மகன், எம் இளவரசன், மந்திரி சித்திமானுடன் ஜயம்பெற்று வருகிருன். அவனை முனிகணங்களின் ஆசிவெள்ளம் சூழ்ந்து வருகிறது—முனிவரும் அவனுடன் வருகிருர்கள். முன்னே தந்தையாகிய உன்னடி பணியவே இங்கே முந்துகிருன் சுத்தன்" என்றனர். (கக)

உ0. வந்த னன்மகன் வாகைகள் சுமந்தென, மன்னன்
கொந்த ளித்திடும் உவகையாற் குதித்தெழுந் தோடி,
முந்தி ஞன்வர வேற்றிட முனிகணத் துடனே;
அந்த வேளையிற் சித்திமான் அரசன்முன் வந்தான்.

தன் அருமை மகன் கலியரக்கரைப் போரில் வென்று தவமுனிவரைக் காத்து வாகைகள் சுமந்து, வந்தான் என்று கேட்டதுமே, கொந்தளித்துப் பொங்கும் மனக்களிப்பால் துள்ளிக்குதித்தெழுந்து, முனிகணத்துடன் சுத்தனை வரவேற்க முன்னே மன்னன் ஓடினுன்; அச்சமயம் சித்திமான் அரசன்முன் வந்தான். (உ0)

உக. "வருக" வென்றுதன் மந்திரிக் கிழவனை ஏற்க,
உருகு மன்புடன் வந்தனம் உரைத்துநல் லமைச்சன்,
பெருமை பெற்றநிவ் வுலகமுன் பிள்ளையால்; அவனை
இருவ ரும்அர சவையினில் ஏற்பமென் றுரைத்தான்.

"வருக வருக" என்று அரசன் மந்திரிக்கிழவனை ஏற்றுபசரித்தான். உள்ளுருகும் அன்புடன், "வந்தனம்" என்றுரைத்து அமைச்சன், "அரசே, உன் பிள்ளை சுத்தனால் இந்த உலகமே பெருமை பெற்றது. அவனை இருவரும் சேர்ந்து, இராஜசபையில் சிறப்பாக வரவேற்போம்" என்று கூறினான். (உக)

உஉ. "அதுவென் பாக்கிய" மென்றதும் அரச னு மாங்கே,
பொது சனக்கடல் "சயசய புனித"வென் றார்க்க,
சதும றைமுனி வர்துதி சாற்றிடச் சுத்தன்
புதிய வேளென முதியபொற் கோயிலுட் புகுந்தான்.

"அது எனது பாக்கியம்" என்று மன்னன் சந்தோஷமாகச்சொல்லி, அரசவையில் வரவேற்க எல்லா ஏற்பாடுகளும் செய்தான். அப்போது பொதுஜனசமுத்திரம் "ஜய ஜய சுத்த" என்று ஆர்கலித்தது. நான்கு வேதமும் அறிந்த முனிவர் கடவுள் துதிபாடினர். சுத்தன் தேவர்களாற் சூழப்பட்ட புதிய முருகவேள் போல, எத்தனையோ மன்னர் ஆண்ட அந்த முதிய அரண்மனைக்குட் புகுந்தான். (உஉ)

உச. அரசவைப் படலம் முற்றிற்று.

உரு. வரவேற்புப் படலம்

க. கரை புரண்ட கடலென் றரசவை,
உரை யுயர்த்தி, "யுலகினைக் காத்திடுந்
துரை வருக,நம் சுத்தன் வரு கென்"றே,
நிரை யுடன்வர வேற்றிட நின்றதால்.

சுத்தன் நுழைந்ததும், அரசவை முழுதும் கரையுடைந்த கடல்போல் புகழுரை மேலோங்க, குரலை உயர்த்தி, "உலகினைக் காக்கும் துரையே, நமது இளவரச, சுத்த வருக" என்று அவனை வரவேற்க எழுந்து நின்றது. (க)

மந்திரிகள் வரவேற்பு

உ. "வருக சக்தி குலந்தரு மாணிக்கம்,
வருக எங்கள் வரம்பெறு கோமகன்,
பொருந ராழிப் புறங்கண்ட புண்ணியன்
வருக" வென்றனர் மந்திரி மாரெல்லாம்.

"சக்திகுல மாணிக்கம், எங்கள் வரம் பெற்ற இளவரசன், பகைவீரரான கடலைப் புறஞ்செல்ல அடக்கி வென்ற புண்ணியன் வருக" என்று மந்திரிமார்கள் ஏற்றனர். (உ)

சத்தியன், இந்திரை

ங. "அரிய வெற்றி யடைந்தனை அன்பநீ
பெரிய ராசிகள் பெற்றனை ; பேசுதற்
குரிய உன்புகழ் ஓங்குக மைந்தனே
விரிக திரென மேதினி யெங்குமே !

ச. சக்தியின் குலம் சந்ததம் வாழ்ந்திடச்
சித்தி யின்புகழ் சீர் பெற வந்தனை
சுத்த வீரச் சுடர்மணி வா வென்றே
முத்த மிட்டனர் பெற்றவர் முன்வந்தே.

"எங்கள் அன்பிற்குரிய சுத்தா, நீ அரிய வெற்றி பெற்று வந்தாய். பெரிய முனிவர் ஆசிகளைப் பெற்றாய். உலகமெல்லாம் போற்றற்குரிய உன்புகழ் கதிர் விரிந்த சூரியன் போல் மேன்மேலும் ஓங்கட்டும். செல்வ, சக்திகுலம் எக்காலும் வாழ, சித்தியரசின் கீர்த்தி சீரோங்க, நீ தோன்றினாய். சுத்தவீரச் சுடர்மணியே, வருக வருக !" என்று பெற்றோர் அருமை மகனை முன் வந்து ஆவலாக முத்தமிட்டு ஏற்றனர். (ங-ச)

பாரத முனிவன்

ரு. மங்கல மைந்தநீ வருக, மாண்புடன்
உங்குல மோங்கிட ஒளிர்க பானுபோல்,
பொங்குக உன்புகழ் பூவு லகெலாம்,
தங்கிநன் றோங்கிடுந் தரும தீபம்போல்.

"மங்கலந்தரும் அரசிளமைந்த வருக. சூரியனைப்போன்ற பொன்ருப்பெருமையுடன், பொலிவுடன் உன் சக்திகுலம் சீரோங்க விளங்குவாயாக! என்றும் நிலைத்துச் சுடரோங்கும் தருமதீபம்போல்,உன்னிசை உலகெங்கும் ஓங்கிப் பரவுக!" (ரு)

சு. இவ்வகை குமரனை யேற்றுப் பாரதன்,
செவ்விய முனிவரைச் சேவித் "தெம்பதி,
துவ்விய தானதுந் தூய சங்கத்தால்;
திவ்விய சித்தர்காள் சேர்க" வென்றனன்.

இவ்வாறு பாரதமுனிவன், குமரனை சுத்தனை வரவேற்று வாழ்த்தி, அவனுடன் வந்த தவமுனிவரைச் சேவித்து, "தங்கள் தூய சங்கம் இங்கே எழுந்ததால், எங்கள் சித்திபுரி பரிசுத்தமானது. தெய்வத்தன்மை பொருந்திய சித்தர்காள், எம்முடன் வந்து சேர்ந்தமர்க" என்றனன். (சு)

எ. அவரவர் அவரவர் இடத்த மர்ந்ததும்,
தவமுனிக் கணத்தினை வணங்கிச் சத்தியன்
அவைநிகழ் மணியினை யடிக்கச் சொல்வித்தன்
தவிசினில் அமர்ந்தனன் தருமம் போலவே!

சபையோர், ஆரவாரம் அடங்கி அவரவர் அவரவருக்குரிய இடங்களில் அமைதியாக உட்கார்ந்தனர். சத்தியராஜன் தவமுனிவர் கூட்டத்தைத் தாள் பணிந்து வணங்கி, ஆசி பெற்று, "இனி வரவேற்புச்சபை நடக்கட்டும்" என்று அதற்கடையாளமான மணி யடிக்கச் சொல்லித் தனது அரியணைமேல் தருமமேபோல் வீற்றிருந்தான். (எ)

அ. படையணி வீரர் போற்றப் பண்புள வமைச்சர் போற்ற
நடையணி குலுங்கு மாதர் நல்லிசை யுடனே போற்றக்
கொடையணி செல்வர் போற்றக் கொற்றவை போற்ற வெற்றிச்
சுடர்மணிச் சியம் போலச் சுத்தனும் எழுந்தான் மாதோ!

வெற்றிச்சுடர்மணிச் சிங்கம்போன்ற வீறு பெற்ற பொலிவுடன் சுத்தன் எழுந்தான்; அப்போது அணிவகுத்து நின்ற படைவீரரும் பண்புள்ள மந்திரிகளும் போற்றினர். சிலம்பணி குலுங்கும் நடைகொண்ட மாதர் மங்கலம் பாடிப் போற்றினர். செல்வர் பல நன்கொடைகளைத் தந்து போற்றினர். அரசசபை முழுதும் சுத்தனை மனதாரப் போற்றியது. (அ)

சுத்தனை உபசரித்தல்

கூ. நண்ணிய மகனைத் தங்க நவமணித் தவிசில் ஏற்றிப்
பண்மலர் சொரிய, வேதப் பாடல்க ளாலே போற்றி,
"உண்மையில் உதித்த தூய ஒளிமணி வாழ்க!" வென்றே
நன்மலர் சொரிந்தார் அந்தச் சத்தியச் சபையி லுள்ளோர்.

சத்தியன் நீதிசெய்யும் அந்தப் பெரிய சபையிலிருந்தவர், பஞ்சவடியிலிருந்து வெற்றியுடன் வந்த அரசகுமாரனை, தங்கத்தாலாகி நவமணிகளும் பதித்த அரியணையில் ஏற்றினர்கள். பண்மலர்களைச் சொரிந்தனர். வேதகானத்தால் ஆசிகூறினர்கள். "உண்மையே வடிவான சத்தியன், அன்பில் உதித்த சுத்தச் சுடர்மணியே நீ நீடூழிவாழ்க!" என்று பனிமலர் சொரிந்து வாழ்த்தினர்கள். (கூ)

எல்லாரும்

௧0. ஆவியாய் உலகைத் தாங்கும் அறத்தினைக் காத்தாய் வாழ்க!
பாவியர் போரைப் போராற் பாழ்படப் படுத்தாய் வாழ்க!
தீவினை தீர வந்த திவ்விய வீர வாழ்க!
நாவினுக் கினிய சுத்த நாமவுன் சீர்த்தி வாழ்க!

பிறகு சபையோரெல்லாரும் சுத்தனை இவ்வாறு வாழ்த்தினர். உலகவாழ்வை உயிர் போலிருந்து தாங்கும் தருமத்தைக் காத்த வள்ளலே வாழ்க! படுபாவிக் கலியர் தொடுத்த அதர்மப்போரை அறப்போரினால் பாழ்பட முடித்து, வெற்றிகண்ட வீரனே வாழ்க! உலகைப் பிடித்த தீவினைகளெல்லாம் தீர்ந்து, புண்ணியவாழ்வோங்க வந்த தெய்வீகவீரனே வாழ்க! எங்கள் நாவிற்கினிமையான சுத்தன் என்னும் பெயர்கொண்டோய் உன் சீர்மை வாழ்க! (௧0)

சுத்தன்

௧௧. புன்னகை பூத்த பொன்முகங் காட்டி
புனிதனுங் கனிமொழி நேர்ந்தே,
" அன்னையே வணக்கம் தந்தையே வணக்கம்,
அருட்பெருஞ் சித்தரே வணக்கம்,
மன்னுயிர் வடிவாய் உலகினில் ஆடும்
மங்கல சக்தியே வணக்கம்,
என்னுயிர் வாழ்வும் செயல்களும் உமது
கருணையால் இயன்றதென் றுரைத்தான்.

இவ்வாறு தனக்குச் சிறப்புச் செய்யும் மன்னவையை நோக்கி சுத்தன் புன்னகை தவழும் பொன் முகங்காட்டி, கனிந்த இனிய மொழிகளைத் தேர்ந்து, "என்னைப் பெற்ற தாயே வணக்கம். தந்தையே வணக்கம், அருளிற் பெரிய சித்தர்களான பாரதமுனிவர் சாந்த முனிவர் முதலியோருக்கு வணக்கம். மன்னுயிர்வடிவாக உலகில் ஆடி மங்கலம்புரியும் பரமாத்மசக்திக்கு வணக்கம். என் உயிர்வாழ்க்கையும், நான் புரியும் செயல்களும் என் ஆற்றலால் அன்று; உங்கள் கருணையால் இயன்றன" என்றுரைத்தான். (௧௧)

௧௨. கனிப்பொறை வணக்குங் கற்பகக் கிளைபோல்,
கற்றநல் வணக்கமே காட்டித்
தனிச்செருக் கின்றிச் சாற்றினன் கேளீர்:
தகைபெருஞ் சித்திமா னுடனே,
வனத்துறை முனிவர் ஆசியின் றுணையால்
வலிபடை யரக்கரை நலித்தேன்.
எனக்கென வாழ்க்கை யில்லையிங் கினிமேல்
என்னையே யிறைவனுக் கீந்தேன்.

கனிச்சுமை வளைத்து வணக்கும் கற்பகக்கொம்புபோல், சுத்தன் நன்றாகக் கற்றடங்கிய பணிவையே விநயமுடன் காட்டி, "நான் வென்றேன்" என்ற தனிச் செருக்கில்லாமல் சுத்தன் சொன்னதைக் கேளுங்கள்: மாண்புள்ள நமது மந்திரி சித்திமான் துணையாலும், பஞ்சவடி வனத்தில் வாழ்ந்த இந்தத் தவமுனிவர் ஆசியின் துணையாலும் கொடிய பலசாலி

களான அசுரர்களை நேற்று அழித்தேன். இன்றுமுதல் என்வாழ்க்கை என்னதன்று. என்னையே இறைவனிடம் தந்தொழித்தேன். (கஉ)

கங. இன்றுல கியல்பைக் கண்டனன் சுற்றி,
இனிவரு நாளையுங் கண்டேன் ;
தென்றிசைக் கோமான் செய் விளையாட்டைத்
திசைதிசை காணுவ தல்லால்,
நன்றுறு வினைகள் எவற்றையுங் காணேன் ;
ஞாலத்திற் கிது சுபவேளை
அன்றெனத் தெரிந்தேன் ; கலிதரும் அரக்கர்
ஆட்டமே காட்டிடு முலகே !

நான் நாடெங்கும் சுற்றி இன்றுலகின் இயல்பை அறிந்துகொண்டேன். இனிவரும் நாட்களில் உலகம் எப்படியிருக்கும் என்பதையும் அறிந்தேன். தென்றிசை மன்னனை எமனுடைய திருவிளையாடலே எட்டுத்திசையிலும் பயங்கரமாக நடக்கும். வேறு நல்ல சுபகாரியங்கள் எவற்றையும் நான் காண முடியவில்லை. உலகிற்கு இது நல்லகால மில்லை, தீக்காலம். கலியரக்கர் கூத்துகளையே உலகம் இனிச்சிலகாலம் நமக்குக் காட்டும்.(கங)

கச. கஞ்சியே தேடிக் காரிகை யாரின்
கலவியே சுகமென நாடி,
வஞ்சமே புரிந்து, வாய்மையை யிழந்து,
வறுமையே வரவரச் சுமந்து,
நஞ்சமே யுண்ட பஞ்சரக் கிளிபோல்
நாளுமே நலிகின்றார் உலகோர் ;
அஞ்சினேன் இவரை. ஆண்டவா வுன்றன்
அருளுற வேயெனக் கருளாய்.

நான் இறைவனை இவ்வாறே வேண்டுகிறேன்: இந்த உலகோர் வயிற்றுக்குக் கஞ்சியே தேடுகின்றனர். பெண்ணின்பத்தையே நாடுகின்றனர். அதற்காக வஞ்சனை செய்து, சத்தியந்தவறி, வரவர வறியராகின்றனர். நஞ்சுண்ட கூட்டுக்கிளிபோல், அடிமைக் கூட்டிலகப்பட்டு, தீய வாழ்வால் நலிகின்றனர். இவர்களை நான் அஞ்சினேன். ஆண்டவா, உன் அருளுறவே எனக்கருள். (கச)

கரு. உயிர்க்கொலை புரிவார், கொலையுண வுண்பார்.
உலகினை யுலைத்திடக் கொதிப்பார் ;
அயர்விலாப் பொன்பெண் ஆசைக ளாலே,
அதர்மமே கடனெனப் புரிவார்,
பயிர்களை யரிக்கும் விடப்புழுப் போன்றார்,
பாரினில் எளியரை நலிப்பார்.
கயவரின் உறவைக் கனவிலுங் கருதேன்,
கடவுளே யுன்னுற வருளாய் !

இக்கொடிய கலியரக்கர் உயிர்க்கொலை செய்து கொலையுணவுண்டு ஊனைப்பெருக்கிக் கொலையாளிகளாவர். கொலைவெறியால் உலகை நலிக்கக் கோபங்கொதித்தெழுவார். அவர்கள் கொண்ட மண்ணாசையும் பொன்னாசையும் பெண்ணாசையும் தளர்வில்லாமல்

மேன்மேலும் வளரும்; அவற்றால் பஞ்சமாபாதகமான அதர்மங்கள் செய்வதே தமது கடமையாகக்கொள்வார். செழித்து வளரும் பயிர்களை அரித்துத்தின்னும் விஷப்புழுப்போன்றே இவர்கள் உலகில் எளியவர்களை நலிப்பர். இந்தக் கயவர் உறவை நான் அஞ்சினேன். இறைவா எனக்கு உன் அருளுறவையே தருவாயாக! (கரு)

கசு. பட்சிக ளிடையே கூட்டுற வுண்டு!
பாரினர் ஓரினம் பேசிக்
கட்சிவேற் றுமையாற் கலகங்கள் செய்வார்;
காக்கைபோற் கூடியே கலைவார்.
உட்சினம் வைத்தே உதட்டினிற் சிரிப்பார்;
ஊரினுக் குழைப்பது போலே
குட்சியை நிரப்புங் கும்பலைக் கூடேன்
குலவுக நின்னரு ளுறவே.

நாட்டில் ஒற்றுமையில்லாதிருக்கிறது. பறவைகள் ஒரு மரத்தில் இன்பமாக வாழுகின்றன. அவற்றிடையே ஓர் ஒற்றுமையிருக்கிறது. இந்த உலகோர், 'நாம் ஓர் குலம், ஓர் இனம்' என்று பேசுவார்கள். ஆனால் கட்சிவேற்றுமையால் கலகங்கள் செய்வார்கள். காக்காய்க் கூட்டம்போல், மாநாடுகள் கூடிப்பேசிக் கலைவர். உள்ளே சினம் வைத்து, பொறாமையை மூடி, உதட்டில் புன்னகை காட்டுவர். ஊருக்குப்பாடுபடுவதேபோலத் தமது வயிற்றை நிரப்புங் கும்பலை இனி நான் கூடமாட்டேன். இறைவா, உன் உள்ளுறவே தந்தருள்! (கசு)

கஎ. கொள்ளிபோல் விழியார்; பிறர்குடி கெடுப்பார்;
குத்திரங் கோள்பொய்யே யுரைப்பார்.
கள்ளினைக் குடிப்பார், கற்பினை யழிப்பார்;
காலத்தைச் சூதினில் இழப்பார்,
வெள்ளியின் வலையில் விழ்ந்(து) அநஞ் செய்வார்;
விதவிதக் கொடுமைகள் இழைப்பார்;
உள்ளினும் உள்ளம் சுடும் உற வணுகேன்;
உள்ளவா வுன்னுற வருளாய்.

இப்போது எழுந்துள்ள கலியரக்கர் கொள்ளித்தீபோலப் பார்வையுள்ளவர்கள், பிறர்குடி கெடுப்பதே அவர்கள் வேலை. பிறர்மேல் குரூரமான கோள்களையும் பொய்களையும் சொல்லி, நாட்டைப் பிரித்துச் சமுதாயத்தைக் கெடுப்பர். பிறரைக் கொள்ளையடித்த பொருள்களைக்கொண்டு கள்ளுண்பர்; மாதர் கற்பையழிப்பர். விலையுயர்ந்த காலத்தைச் சூதாட்டத்தில் தோற்பர். வெள்ளிப்பணத்தின் மாயவலையில் விழுவர். அதற்காகச் செல்வர்களையெல்லாம் கொன்று கொள்ளையடிப்பர். விதவிதமான கொடுமைகளைச் செய்வார்கள். அவற்றை நினைத்தாலும் உள்ளம் சுடும். இவர்கள் உறவை அணுகேன்; எப்போதும் என்னுள்ளும், எங்கும் உள்ள இறைவா, உன்னுறவே அருளாய்! (கஎ)

கஅ. இவ்வகை யிறைவனை யிறைஞ்சி நாடினேன்.
உய்வகை யவனரு ளன்றி யுள்ளதோ,
எவ்வகை யவனுளம் ஏவு கின்றதோ,
அவ்வகை நடப்பதென் அறம தாகுமே.

நான் இப்படி உலகில் படர்ந்த அரக்கர் இயல்பைச் சொல்லி முறையிட்டு, இறைவனையே நாடினேன். அவனருளின்றி, நமக்கு உய்யும் வழி யில்லவே யில்லை. திருவுள்ளம் நம்மை எப்படி ஏவுகின்றதோ, அப்படியே நடப்பதுதான் எனது தருமமாகும். (கஅ)

கக. என்னுயிர் வீணையை யிறைவன் மீட்டிட,
மன்னுயிர்க் கதனிசை மகிழ்வு கூடுமால்,
இன்னிய நண்பர்காள், இசைந்து நம்புங்கள் ;
அன்னவன் அருளுமை ஆத ரிப்பதே.

என் உயிராகிய வீணையை இறைவன் கையில் தந்துவிட்டேன். வீணைக்குத் தன்னைத் தானே மீட்டும் ஆற்றலில்லை. ஒரு பாடகன் மீட்டினாலே அதனுள் பாட்டொலிக்கும் ; அந்தப் பாட்டைப் பலரும் அனுபவிக்கலாம். அதுபோல் இனிய நண்பர்காள், என் கொள்கையுடன் இணங்கி ஆண்டவனை நம்புங்கள். அவனருளால் எனக்கு வரும் நன்மைகளெல்லாம் உலகிற்கே நன்மையாகும். அருள் உங்களைத் தாங்கி நடத்தும். (கக)

உ0. முதற்சமர் முடிந்ததென் றுவகை கொள்ளலீர் ;
அதர்மமே தொழிலெனும் அரக்கர் நாளையே,
கொதிசினப் படைகளைக் கொண்டு, சித்தியின்
மதிலினை வளைத்திட வருவ தாகுமே.

பஞ்சவடியிற் செய்த முதல்போர் முடிந்தது. இனிச்சண்டை வராது என்று மகிழாதீர்கள். அதர்மமே தொழிலாகக்கொண்ட அசுரக்கலியர் நாளையே கொதிக்கும் சினவெறி கொண்ட படைகளை ஏவி, சித்திநகரின் கோட்டையை வளைக்கப்போகிறார்கள். உண்மையைக் காண்பீர்கள். (உ0)

உக. ஆயினும் அஞ்சலிர் அன்பு நேயர்காள்,
பேயினுங் கொடியவர் பிறகிட் டோடவே
போயினும் படையுடன் போர்செய் யென்றுளே
நாயகன் கட்டளை நாட்டி விட்டனன்.

கலியரக்கர் சித்தியை வளைத்தாலும், அன்புள்ள நண்பர்காள், பயப்படாதீர்கள் ! ஆண்டவன் இருக்கிறான். நீ இன்னும் முன்னேசென்று, பேயினும் கொடிய அரக்கர் முதுகு காட்டியோடவே பலமான படைகளைக்கொண்டு போர்செய் என்று அவன் எனக்குக் கட்டளை யிட்டுவிட்டான். (உக)

உஉ. ஆதலால் இனிவரும் அமர்க்க ளத்திலும்
கோதறு வீரரைக் கூட்டிச் சித்தியைத்
தீதறக் காப்பதென் செய்ய நற்கடன்
மேதகு கேள்வியிர் விருப்ப மோதுமின் !

இறைவன் ஆணை அப்படியிருப்பதால், இனிவரும் போர்க்களத்திலும் மாசற்ற படை வீரர்களைக்கூட்டி, தீதில்லாமல் பகைவர்கையில் சிக்காமல் சித்திமாநகரை நான் காப்பாற்றுவேன். அதுவே என் உத்தமக் கடமை. மேன்மையான ஆலோசனை சொல்லும் மந்திரிகாள், கல்விகேள்விகளிற் சிறந்தவர்காள், உங்கள் விருப்பத்தையும் சொல்லுவீர்களாக ! (உஉ)

உங. மறந்தரு பகைவரை மாற்றி வெற்றிகொள்
அறந்தரு தூயவன் ஆர்த்த வாசகம்,
சிறந்தவுள் ளுணர்ச்சியைத் தூண்டச் சீரவை
பிறந்தது பரந்தது பெரிய மோனமே.

போர்தரும் பகைவரைப் புறங்கண்டு, அவர்கள் உள்ளத்தை மாற்றி, வெற்றி கொள்ளும் சுத்தன், உலகிற்கு அறந்தரும் முதல்வன், ஆவேசமாகப் பொழிந்த திருவாசகத்தைக் கேட்டதும், அச்சபையினர் உள்ளத்தில் ஒரு சிறந்த உணர்ச்சியெழுந்தது. அந்த மன்றத்தில் செப்பொணுத ஒரு பெரிய மௌனம் பரந்தது. (உங)

சத்தியன்

உச. போர்த்த மோன வியப்பினைப் போக்கியே,
சீர்த்தி யோங்கிய செல்வன் முகத்தினைப்
பார்த்துப் பார்த்துப் பரவச மாகிய,
கீர்த்தி வேந்தன் எழுந்து கிளத்தினன் :

சத்தியதருமத்தைக் காத்து, எங்கும் புகழ்பெற்ற தந்தை, வேந்தன், வீரப்புகழ் பெற்றுச் சிறந்த தனது திருக்குமாரன் முகத்தைப் பார்த்துப் பார்த்துப் பரவசமானுன். அவன் பேச்சு மன்னனுக்கும் வியப்பாயிருந்தது. தன்னையும் சபையையும் மூடிய மௌனமான ஆச்சரியத்தைப்போக்கி, எழுந்து நின்று, இவ்வாறு பேசினுன் :— (உச)

உரு. வேந்த வையில் விளங்கும் அறிஞர்காள்,
மாந்த ருக்கினி மாறிய காலமே
போந்த தென்று புனித னுரைத்தது,
நாந் தடையற நம்பிடும் உண்மையே.

இந்த அரசவையில் விளங்கும் அறிவாளிகாள், நமது சுத்தன், "இனி மனிதவுலகிற்கு மாறுபட்ட தீக்காலம் வந்தது" என்று சொன்னது, நாம் தடையில்லாமல் நம்பும் உண்மைதான். (உரு)

உசா. உடன் பிறந்துடன் உண்டு வளர்ந்தவன்,
கடன் மறந்த கலியனும், மோகியால்,
விடங் கலந்த விரோதியென் ருயினன்,
மடங்க லந்த மனத்திமி ரென்னையே !

என்னுடன் பிறந்து என்னுடன் உண்டு வளர்ந்தவன் கலியன்; அவன் தனக்குரிய அறக்கடனை மறந்து, மோகியென்னும் ஒரு அரக்கி கையிற் சிக்குண்டு, விடங்கலந்த விரோதியானுன். மடமை கலந்த மனத்தின், திமிர் எவ்வளவு விநோதமாயிருக்கிறது! (உசா)

உஎ. கண்ண யர்ந்துங் கடமை மறக்கிலார்
புண்ணி யப்புவி போற்றும் புரவலர்;
எண்ணி நன்மை யியற்றிட லேயவர்
மண் ணு டல்பெறு மாண்பெனக் கொண்டனர்.

இந்தப் புண்ணிய பூமியான பாரததேசத்தைக் காத்த மன்னர், கண்ணயர்ந்து உறங்கும்போதுகூடத் தாம் மன்னுயிருக்குச் செய்யுங் கடமையை மறவார். "இன்னும் குடி

களுக்கு நன்மை எது, எது நலம்" என்று நினைத்துப் பார்த்து, அதைச் செய்வதே இந்த மண்ணுடல் எடுத்த பயன், அதன் பெருமை, என்று அவர்கள் நம்பி நடந்தார்கள். (உஎ)

உஅ. மிக்க மேலவர் செஞ்சொலை மேற்கொண்டே,
தக்க தாற்றித் தருமஞ் செலுத்தினேன்,
இக்கொ டியவன் இன்றென நாட்கியும்
பக்கு விட்டிடப் பாதகஞ் செய்கிருன்.

சிறந்த பெரியார் சொல்லும் நன்மொழிகளைத் துடுப்பாகக் கொண்டே, தகுந்த காரியங்களைத் தக்ககாலத்திற் செய்து, நான் தருமக்கப்பலைச் செலுத்துகிறேன். இன்று இந்தக் கலிக்கொடியன், என் அரசான கப்பல் பக்குவிட்டு, பிளந்து கவிழப் பகையான காரியங்கள் செய்கிருன். (உஅ)

உகூ ஒற்றர் மூலம் உளவறிந் தன்னவன்
பற்றுந் தீய வழிகளைப் பார்த்தனன் ;
மற்றுஞ் சொல்லை வளர்ப்பதி லென்பயன்,
சிற்றிற் பாம்பினைச் செற்றிட லேகடன்.

நெடுநாளாக, என் ஒற்றர் வாயிலாக, கலிநகரில் நடப்பதை உளவறிந்து, கலியன் பின்பற்றும் தீய வழிகளைப் பார்க்கிறேன். நேற்றும் பார்த்தேன். இன்னும் வார்த்தையை வளர்ப்பதில் பயனென்ன? பேச்சன்று; செயலே வேண்டும். ஒரு சிறிய வீட்டிற் புகுந்த விஷப்பாம்பைக் கொன்ருலன்றி வீட்டுக்குச் சேமமில்லை. (உகூ)

௩௦. குடிக ளின்பமே கொள்கையென் ருடுமென்
கொடியின் மீதக் கொடியவன் ஏவிடும்
இடி விழுமுன் எதிர்த்து நொருக்கிடக்
கடிய வேகப் படையெழக் காண்பமால்.

எனது சூரியக்கொடி, 'குடிகளின் இன்பமே கொற்றவன் இன்பம்" என்ற கொள்கையுடன் உயரப்பறக்கிறது. அதன்மேல் கலிக்கொடியன் தன் சூழ்ச்சிகளால் இடியை ஏவி விழச்செய்வான். அந்த இடி விழுமுன்பே, வந்ததும் அவனை எதிர்த்துத் தவிடுபொடி யாக்க, அதிவேகமான ஆயுதப்படைகளை இங்கே காண்போம். (௩௦)

௩௧. உருகும் ஈயத்தை ஊற்றிய தென்னவே,
குரு முனிவர் குடில்களைத் தாக்கிய,
வெருவு செய்தி விழுந்ததும், சுத்தனே
செருவெல் வானெனச் சிந்தித் திருந்தனன்.

பஞ்சவடியில் குருமுனிவர் பர்ணசாலைகளை, அக்கலியரக்கர் தாக்கிய செய்தி; உருகிய ஈயம்போல் என்செவியில் விழுந்தது. அப்போதே படைகளை யனுப்பத் தயாரானேன். பிறகு நமது சுத்தன் ஒருவனே போரைவெல்வான் என்று நினைத்திருந்தேன். (௩௧)

௩௨. புலி நகரெனப் புல்லர்கள் கூடிய
கலி நகரக் கடும்பகை செய் படை
கிலி பிடித்துரங் கெட்டுப் பின் னேடிட
வலிய சேனை வளைகநங் கோட்டையே.

புல்லர் கூடிப் புலிநகரான கலிநகரிலிருந்து கொடிய பகைசெய்யும் படைகள் இங்கே வந்ததும் கிலிபிடித்துப் புறங்காட்டி ஓடவேண்டும். அப்படிப்பட்ட பலமான சேனைகளைக்கொண்டு நமது கோட்டையை வளைந்து நிற்கவும். (௩௨)

௩௩. படைத் தலைவன் விசயன் பணியிது ;
கடையர் கூடுங் கலிநகர் ஏகியே,
நடை முறைகளை ஒற்றர் நவிலுக ;
இடையி லின்னென் றியம்பிடக் கேண்மினே.

இப்படிப் பலமான சேனைகளைக்கூட்டுவது நமது சேனுபதியான விஜயன் பணியாகும். கடையர் கும்பல் கூடிக் கும்மாளமடிக்கும் கலிநகருக்கு மாறுவேடந்தாங்கிச் சென்று அங்கே நிகழும் நடைமுறைகளைத் தினந்தோறும் ஒற்றர் அறிந்து எனக்குச் சொல்லவேண்டும் இதனிடையே இன்னெரு காரியம் உள்ளது; சொல்லுகிறேன் கேளுங்கள்: (௩௩

௩௪. சிற்ற ரசர் சிலரின் உதவியைப்
பெற்ற னன்கலிப் பேயென் றறிகிறேன்;
ஒற்றர் சென்றவ் வுளவையுங் காணுமின் ;
கற்ற மந்திரி யின்கருத் தோதுக.

சில சிற்றரசர் உதவியையும் பேய்போன்ற கலியன் பெற்றே இப்படிக் கேடுசெய் கிருன் என்றறிகிறேன். ஒற்றர் சென்று, அந்த உளவையும் அறிந்து வருக. உலகியல்பை நன்குகக் கற்ற நமது முதலமைச்சன் சித்திமான் கருத்தைச் சொல்லுக. (௩௪)

௩௫. நாடு சுற்றி யறிந்து நலமுற
வீடு வந்தநம் வித்தகச் சித்திமான்,
நீடு வாழுறு நீதி யரசினை
நாடு மாந்தர் நிலையை நவில்கவே.

அறிவிற் சிறந்த நமது சித்திமான், சுத்தனுடன் நாடெல்லாம் சுற்றிப்பார்த்து வீட்டிற்கு நலமுறவந்தான். அவன் எல்லாம் அறிந்திருப்பான். நீண்டகாலமாக நீதி செய்து வாழும் நமது அரசாட்சியை விரும்பிச் சேரும் மக்கள், என் குடிகள் நிலைமை, யென்ன என்ன சொல்லுகிருர்கள் என்பதை அவன் சொல்லுக. (௩௫)

சித்திமான்

௩௬. சாதி பேதமி லாது சகலரும்,
மேதி னிக்கு விளக்கெனத் தோன்றியே,
நீதி காக்கு நிருபனென் றுன்னையே
ஓதி யுள்ளங் குளிருவர் உண்மையே.

மன்ன, நான் நாடெங்கும் சுற்றிக் குடிகளின் உள்ளத்தைத் தொட்டுப் பார்த்தேன். சாதிபேதமில்லாமல் நமது நாட்டினர் அனைவரும். “உலகிற்கு இருளைப்போக்கும் தருமதீபம் போலத் தோன்றி நீதியைக் காக்கும் ஓர் அரசன் உண்டானல், அவன் நீயே” என்று உன் புகழைச் சொல்லி உள்ளங்குளிருவர். (௩௬)

௩௭. தந்தை நீயவர் தாயுன் னரசியே.
பந்து வர்க்கமிப் பாரத நாடெலாம் ;
இந்த நல்லுணர் வெங்கும் இருந்தமை
வந்த னத்துட னேவர வேற்றதால்.

அரச, நாடெங்கும் பார்த்தோம். பொதுஜனங்களிடையே நீயே தமது தந்தை, உன்னரசி இந்திரையே தமது தாய், இந்தப் பாரதநாடெல்லாம் தமது பந்துவர்க்கம் என்ற உணர்ச்சியே எங்கும் இருக்கக்கண்டோம். இத்தகைய ஐக்கிய அன்புணர்ச்சியாலேதான் அவர்கள் எங்கள் இருவரையும் வரவேற்றுபசரித்தனர். (௩௭)

௩௮. நிறை மனத்தின ரான நிருபர்கள்,
இறைவனு முனை யெண்ணிப் பணிந்தனர் ;
பொறை மனத்தர் பொதுசன நேயரும்,
குறை மனத்தன் கொடிய கலியனே.

உன்னிடம் மிகவும் மகிழ்வுற்று நிறைந்த மனத்தரான சிற்றரசர்கள், தங்கள் தலைவனான உன்னை அன்புடன் எண்ணிப் பணிந்தனர். பொதுஜன நேயர்கள் அனைவரும் பொறுமையுடன் மனமூன்றி உனக்கே பாடுபடுகிறார்கள். நன்றி குறைந்து தேய்ந்த பொறாமை மனத்தன், கலியன் ஒருவனே. (௩௮)

௩௯. சாத சோகனும் சந்திர குப்தனும்,
ஆதி பாண்டி யரசரும் போலவே,
நீதி செய்யு நிருபவுன் னாட்டிலே
பேதஞ் செய்யப் பிறந்தனன் பேயனே.

சாதுவான அசோகனும், சந்திரகுப்தனும், முற்காலப் பாண்டி மன்னரும் ஒப்ப நீதிசெய்திடும் அரசே, ஒற்றுமையே குடிகொண்ட உன் வளநாட்டில், பேதபுத்தியைத் தூண்டிப் பிரிவினை செய்பவன் அந்தப்பேய்போன்ற கலியனே. (௩௯)

௪௦. ஆருக்கும் பய மற்ற துரோகியிப்
பாருக் கேயிடர் செய்யும் படைகொண்டான் ;
சீருக் கெல்லாஞ் சிறந்த நம் சித்தியின்
வேருக்கே விடம் வார்க்க விழைந்தனன்.

யாருக்கும் அஞ்சாத வஞ்சநெஞ்சுடைய அத்துரோகி, உலகிற்கே கேடுசூழும் படைவலிகொண்டு, எல்லாச் சீருக்கும் சிறந்த நிலயமான இந்தச் சித்தியரசின் வேருக்கே விஷம் வார்க்கப் பேராசை கொண்டான். (௪௦)

௪௧. நற்ற வரை நலிக்கச் செயலிலான்.
ஒற்று மையை உலைக்க வுழைக்கின்றான்.
இற்றை நாட்டில் இவன்யம தூதர்கள்,
புற்ற ரவெனப் பூந்து கரந்துளார்.

பஞ்சவடியில் நல்ல தவஞ்செய்யும் முனிவரை நலிக்கப் பார்த்தான் கலியன் ; சுத்தன் அவன் படையை வேரோடழித்தான். அச்செயலில் தோற்றுப்போய், இப்போது நாட்டின் ஒற்றுமையைக் கலைக்க அவன் இரகசியமாக உழைக்கிறான். (தனக்குச் சொந்த இடமின்றி) கரையான் புற்றில் குடிகொண்ட பாம்புபோல், அவன் ஆதரிக்கும் அரக்கரான எமதூதர்

கள், நாடெங்கும் வஞ்சச்சூழ்ச்சியுடன் மறைந்திருக்கிருக்கிறுர்கள். அங்கங்கே விஷம் கக்குகிறுர்கள். (சுக)

சுஉ. சூத்தன் சொன்ன சுடர்மொழி யுண்மையே,
சத்தியன் சொல் சமர்வினை தக்கதே.
ஒத்த நெஞ்சுடன் ஓங்கிய வீறுடன்,
சத்து ருவைத் தகர்த்திட நிற்பமால்.

சத்தியன் இப்போது சொன்ன மொழிகளெல்லாம் உண்மை. கலியரக்கர் உலகை அவ்வளவுபாடு படுத்துவர். சத்தியராஜன் சொன்ன போர்வினை சமயத்திற்கேற்றதே. நாம் ஒன்றுபட்ட மனத்துடனும், ஓங்கிக்கனலும் திரமுடனும் பகைவனைத் தகர்த்தெறியத் தயாராக நிற்போம். (சுஉ)

சுங. அமைச்ச னிம்மொழி பேசி யமர்ந்ததும்,
இமைத்த லின்றி யிருந்த சபைக்குநல்
அமைதி வாக்கை யருள்கென மன்னவன்,
சமதை கொண்ட முனிவரர் சாற்றினர்.

மந்திரி இப்படிப் பேசியதும் சபைமுழுதும் இமைகொட்டாமல் பின்வரும் சம்பவங்களை யெண்ணிக் கவலைகொண்டிருந்தது. அரசன் சுற்றியிருந்த சாதுமுனிவர்களை, ஒரு சாந்தி வசனம் சொல்லும்படி வேண்ட அவர்கள் அவ்வாறே சாற்றினர்கள். (சுங)

முனிவர்

சுச. வீரர்கள் பெருக ; நாடு விடுதலை பெறுக ; ஞான
தீரர்கள் பெருக ; தெய்வ ஜீவனம் பெருக ; நாளும்
போர்மத வெறிக ளின்றிப் புதுயுகம் பொலிக வெற்றி.
பாரத சக்தி ஜோதி பரவுக வுலக மெல்லாம்!

தற்சமயம் கலியர்கொடுமையை எதிர்த்து வீழ்த்தும் வீரர்கள் எழுந்து விளங்குக ; நமது நாடு இக்கொடியருக்கு அடிமைப்படாமல் விடுதலைபெற்றுத் தலைநிமிர்ந்து நிற்கட்டும். நாட்டில் பஞ்சமாபாதகங்களையும் மடமையிருளையும் போக்கித் தொண்டுசெய்ய ஞான தீரர்கள் பெருகட்டும். அசுரமாயம் ஒழிந்து, இப்புண்ணிய பூமியில் உள்ளே கடவுளுடன் கூடி அவன்மயமாகவே உலகைக் கண்டு வாழும் தெய்வஜீவனம் பொலியட்டும். எந்நாளும் அசுரத்தன்மையால் வரும் சினப்போர், இனப்போர், சாதிமதப்போர், வீட்டுப்போர், நாட்டுப் போர் இன்றி, எல்லாரும் ஒற்றுமையாக, ஆன்மநேயராகப் பொதுநலத்திற்கே வாழும் புதுயுகம் எழுந்து வெற்றிபெறட்டும். இந்தப்பெரிய காரியங்களைச் செய்து முடிக்கவல்லது பரமயோகிகளின் அருட்சக்தி ; அதுதான் பாரதசக்தி யென்பது. இந்தப் பாரதநாட்டின் தனிப் பெருஞ் செல்வம் அதுவே. அந்தப் பாரதசக்தியின் அருட்சோதி உலகெல்லாம் பரவி எங்கும் சுத்த முக்த சமத்துவ சத்திய தெய்வஜீவனத்தை நாட்டி விளங்குக ! (சுச)

சுரு. முனிவ ராசி முடிந்ததுஞ் சத்தியன்
இனிவி னைகள் இயற்ற வெழுந்தனன் ;
புனிதன் பொன்முகப் புன்னகை கண்டுநன்
மனவு றுதிகொள் மன்ற மெழுந்ததால் !

முனிவர் ஆசிமொழிகள் முடிந்தன. சத்தியராஜன், இனி நடக்கவேண்டும் காரியங்களைச் செய்ய எழுந்தான். சுத்தனுடைய பொன்முகப் புன்னகையைக் கண்டு மனத்தில் நல்லுறுதிகொண்டு சபையும் எழுந்து சென்றது. (சுரு)

உடு, வரவேற்புப் படலம் முற்றிற்று.

பாரத சக்தி,

முதலாவது சித்தி காண்டம்

முற்றிற்று.

ஓம்

Commercial Printing & Publishing House, G.T., Madras